ஸ்ரீ

பேரருளாளன் பெருந்தேவித் தாயார் திருவடிகளே சரணம்



ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ப்ரபந்ந ஜநகூடஸ்தரான நம்மாழ்வார் அருளிச்செய்த

திருவாய்மொழிக்கு வ்யாக்கியானங்களான

ஒன்பதினாயிரப்படி, இருபத்துநாலாயிரப்படி, ஈடுமுப்பத்தாறாயிரப்படிகளைக் கொண்ட

ஒன்பது, பத்து பத்துக்கள்

ஸ்ரீகாஞ்சி ப்ரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர் ஸ்வாமி பதிப்பு

அச்சுத்தாள் திருத்தினவர்கள் :

திருமலை அனந்தான்பிள்ளை, குன்றபாக்கம், நியாய வேதாந்த வித்வச்சிரோமணி

கிருஷ்ணமாசாரியர், திருப்பதி.

M. A. வேங்கடகிருஷ்ணன், திருவல்லிக்கேணி.

கிடைக்குமிடங்கள் :

பி. அ. அக்காரக்கனி அனந்தாழ்வான், காஞ்சிபுரம்-3.

M. A. வேங்கடகிருஷ்ணன், 20, தெற்குமாட வீதி, திருவல்லிக்கேணி.

V. N. தேவநாதன், 213, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை-1.

திருவல்லிக்கேணி குரு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

நள ௵ வைகாசி விசாக வெளியீடு

1976

ஸ்ரீ:
ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி

பத்தாம் பத்து

முதல் திருவாய்மொழி—தாளதாமரை : ப்ரவேசம்

நஞ்சீயர் அருளிச்செய்த ஒன்பதினாயிரப்படி வ்யாக்யானம்

பத்தாம்பத்தில் முதல் திருவாய்மொழியில், சரீராவஸாந ஸமநந்தரத்தில் எம்பெருமானைப் பெறக்கடவதான நிர்ணயம்பெற்ற ஆழ்வார், தானாக அபிமானித்துப் போந்த சரீரத்தையும் முகம் பழகின மனிசரையும் இழந்து, முகமறிவார்ஒருத்தரையும் காணாதே, செல்லக்கடவ இடமெல்லாம் கண்டறியாத நிலமாயிருக்கும்படியையும், போகக்கடவ வழியின் நெடுமையையும், போகைக்கு விக்நமான ஸம்ஸார துரிதத்தையும் அநுஸந்தித்து,- "இவ்விக்நங்கள் தட்டாமே இந்நெடுந்தூரம் துர்ப்பலரான நம்மால் போய்முடிக்கை அரிது: பந்துவுமாய் ஆப்தனுமாய், ஆந்ருசம்ஸ்யத்தையுடையனுமாய், ப்ரபல விரோதிகளுண்டாகிலும் அவற்றைப் போக்கிக்கொண்டுபோக வல்லனுமா யிருப்பானொருதுணை, சரீர வியோககாலத்திலே அவச்யம் வேணும்" என்று அத்யவஸித்து,- சொன்ன குணங்களையெல்லாம் உடையனாய், ச்ரமஹரமான வடிவையுமுடையனாய், ஸர்வருடைய ரக்ஷணத்திலும் தீக்ஷிதனாயிருக்கிற காளமேகத்தைத் திருமோகூரிலே கண்டு, அவன்பக்கலிலே தம்மை நிக்ஷேபித்து, அவனை இத்தசைக்குத் துணையாகப் பற்றுகிறார்.

பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த இருபத்துநாலாயிரப்படி

பத்தாம்பத்தில் முதல் திருவாய்மொழியில், கீழே "நாளேலறியேன் எனக்குள்ளன" என்றார்; "மரணமானால்" என்று ஈச்வரன் நாளிட்டுக் கொடுத்தான். அவன் ஒன்றைச்சொன்னால் அது கைப்பட்டதென்று மேலே போகலாம்படியிறே இருப்பது: ஆகையாலே, காலாவதி பெற்றாராய்ப் போக்கிலே ஒருப்பட்டார் போமிடத்து, முகம்பழகின சரீரத்தைவிட்டு நெடுநாள் வாஸநை பண்ணின பந்துக்களை விட்டுத் தான் தனியனாய்ப் போகிறவிடமும் முகமறியாதநிலமாய் நெடுங்கை நீட்டுமா யிருக்கிறபடியையும் போகைக்கு விக்நமாய்த் தான்சூழ்த்துக்கொண்ட அவித்யா கர்ம வாஸநா ருசிகளான ஸம்ஸார துரிதத்தையும் அநுஸந்தித்து; "இவ்விக்நங்கள் தட்டாதபடி நெடுந்தூரத்தை துர்ப்பலரான நம்மால் போய் முடிக்கை யரிது; இனிப்போமிடத்து ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தியாயிருப்பானொருவன் வழித்துணையாக வேண்டியிருந்தது." "யஸ் ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித்" "பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே" என்று வழி கொடுபோக விரகறியுமவனுமாய் சக்தனுமாய், "பதிம்விச்வஸ்ய" என்கிறபடியே ப்ராப்தனுமாய், "மாதா பிதா ப்ராதா" என்கிறபடியே ஸர்வவித பந்துவுமாய், "மயர்வறமதிநலமருளினன்" என்கிறபடியே பரமதயாவானுமாய், ச்ரமஹரமான வடிவையுடையனுமாய், ஸர்வரக்ஷணத்திலும் தீக்ஷிதனுமாயிருக்கிற காளமேகத்தைத் திருமோகூரிலே கண்டு அவன்பக்கலிலே ஆத்ம ஸமர்ப்பணத்தைப் பண்ணி, வழித்துணையாகப் பற்றுகிறார். அவன் கொடுபோமிடத்தில் வடிவழகை அநுபவித்துக்கொண்டு பின்னே போகலாம்படியிறே இருப்பது. "பரிஹர மதுஸூதநப்ரபந்நாந்" என்னும்

''உன்தமர்க்கென்றும் நமன்தமர் கள்ளர்போல்'' என்றும் அத்தசையில் விரோதிகள் பீதராயொளிக்கும்படியிறே இருப்பது.

நம்பிள்ளை திருவாய்மலர்ந்தருளி வடக்குத்திருவீதிப்பிள்ளை பட்டோலை கொண்டருளின ஈடு முப்பத்தாறாயிரப்படி

ஈடு.—''நாளேலறியேனெனக்குள்ளன'' என்றார்; ''மரணமானால்'' என்று அறுதியிட்டுக் கொடுத்தான் ஈச்வரன். அவன் ''செய்கின்றோம்'' என்று தலைதுலுக்கினால், அதுபெற்றதாய் மேல் நடக்கலாம்படியாயிருக்குமிறே கார்யம். ஆகையாலே, (காலவதிபெற்றாராய்) போக்கிலேயொருப்பட்டார்; போமிடத்தில், முகம்பழகின தேஹத்தையும்விட்டு நெடுநாள் வாஸநைபண்ணின பந்துக்களையும் விட்டுத் தனியேயாய்ப் போகிறவிடந்தான் கண்டறியாத நிலமாய், நெடுங்கைநீட்டாய், வழியிலே ப்ரதிபந்தகங்களும் குவாலாய்-அவித்யா கர்ம வாஸநாருசிகள் என்றாப்போலே சொல்லுகிறவற்றுக்கும் ஓர் அவதியில்லையிறே; இவற்றையடையப் போக்கி வழித்துணையாய்க் கொண்டுபோம்போது ஸர்வேச்வரன்தன்னையே பற்றவேணும். அதுவென்? இவன்தானே தனக்குத் துணையானாலோ வென்றால்,—இன்றளவும் வர ஸம்ஸரிக்கைக்குக் காரியம்பார்த்துப் போந்தவனிறே இவன்; இச்சரீரத்தோடே யிருக்கிற நாளிலே ஹிதசிந்தை பண்ணினானேயாகிலும் இவனுடைய பூர்வவ்ருத்தத்தைப் பார்த்தால் இவன்தான் தனக்குத் துணையாகமாட்டானே. வழி கொடுபோமிடத்தில் இவர்க்கு வரும் விரோதிகளை யறிகைக்கு ஸர்வஜ்ஞனாகவேணும்; அறிந்தால் அவற்றைப் போக்கிக் கொடுபோகைக்கு ஸர்வசக்தியாகவேணும்; *யஸ் ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித்* இத்யாதி ப்ரமாணங்களாலே - ஸர்வேச்வரனை ''ஸர்வஜ்ஞன், ஸர்வசக்தி'' என்னாநின்றதிறே. சக்தியுண்டானாலும் ப்ரயோஜநமில்லையே, ப்ராப்தனாகவேணும். *மாதா பிதா ப்ராதா* இத்யாதியாலே-அவனே ஸர்வவிதபந்துவுமாகச் சொல்லாநின்றதே; (''எம்மானுமெம்மனையும்'' இத்யாதி) ராகாந்தராய் ப்ரஜையைப் பெற்று ''யௌவநவிரோதி'' என்று பொகட்டுப்போவர்கள்; இவன்தான் வாஸநைபண்ணின முகத்தாலே ''அம்மே!'' என்றபோதாக, பெண்குரலாலே ''ஏன்?'' என்றும், ''அப்பா!'' என்றபோதாக ஆண்குரலாலே 'ஏன்?' என்றும், இப்படி முகங்கொடுத்துக்கொண்டு போகக்கடவனாயிருக்குமிறே அவன். சரீரமானது கட்டுக்குலைந்து ப்ராப்யபூமியிலே போய்ப் புகுமளவும் செல்ல நடுவுண்டான விரோதிகளைப் போக்கிக் கொடுபோகைக்கு ஈடான விருத்தியறியுமவனாக வேணும்; விரோதிதன்னை இருதுண்டமாக விட்டுக் கொடுபோகவல்ல சக்திமானாகவேணும்; தான் தனக்குத் தஞ்சமல்லாதவன்று இவன் தனக்குத் தஞ்சமென்று தன்னை இவன் கையிலே காட்டிக் கொடுக்கும்படி ஆப்தனாகவேணும். ''ஸர்வஜ்ஞன், ஸர்வசக்தி'' என்று தானே ப்ரமாணப்ரஸித்தன்; ''தஞ்சமாகிய தந்தை தாயொடுதானுமாய்'' என்று இவர்தாமே ''தஞ்சம்'' என்றாரே. ''மயர்வறமதிநலமருளினன்'' என்று - தயாவானென்னுமிடம் தாமே கை கண்டார். இனி சேஷியாயிருக்கையாலே தானே ப்ராப்தனாயிருக்குமிறே. ஆக, ''நம் விரோதிகளைப் போக்கி ப்ராப்யபூமியளவும் கொண்டுபோய் வழிநடத்துவான் காளமேகம்'', என்று அத்யவஸித்து,—அருநிலங்களிலே வழிபோவார் ''அகப்படை'' என்று மிடுக்கராயிருப்பாரைக் கூட்டிக்கொண்டு தம் கைப்பொருளை அவர்கள்கையிலே கொடுத்து அமர்ந்தநிலத்திலே சென்றவாறே வாங்கிக் கொள்ளுவாரைப்போலே, சரீரவிச்லேஷ ஸமயத்தில் காளமேகத்தின் பக்கலிலே ஆத்மநிக்ஷேபத்தைப் பண்ணி, ''ப்ராப்யபூமியிலேபுக்கால் பின்னை நமக்கு ஆக்கிக் கொள்ளக்கடவோம்'' என்று வழித்துணையாகப் பற்றுகிறார். இஸ்ஸ்வபாவங்கள் ஒன்றுமில்லையேயாகிலும்'' அவன்முன்னேபோகப் பின்னேபோகாநின்றால் அவ்வடிவழகு தன்னை யநுபவித்துக்கொண்டு போமதுவே ப்ரயோஜநமாகப் போரும்படியாய்த்து இருப்பது. ''வன்னவே! உன்றமர்க்கென்றும் நமன்றமர் கள்ளர்போல்'' என்கிறபடியே, எதிரிகள் கூசிப்போம்படி மதிப்பனாயிருப்பானொருவனைப் பற்றவேணுமிறே. *பரிஹர மதுஸூதந ப்ரபந்நாந்* என்று அவனும் சொல்லிவைத்தானிறே.

தாளதாமரைத் தடமணிவயல்திருமோகூர்*
நாளும்மேவிநன்கமர்ந்துநின்று அசுரரைத்தகர்க்கும்*
தோளுநான்குடைச் சுரிகுழல்கமலக்கண்கனிவாய்*
காளமேகத்தையன்றி மற்றென்றிலம்கதியே. (1)

ஒ.—முதற்பாட்டில், ப்ரதிகூல நிரஸநஸ்பாவனான காளமேகத்தையொழிய வேறு நமக்கு ரக்ஷகரில்லை யென்கிறார். [தாளதாமரையென்று தொடங்கி] - பூவின்பெருமையைப் பொறுக்கவல்ல தாளையுடைய தாமரைத் தடமெல்லாம் பூக்கும் வயலையுடைய திருமோகூரிலே நாள்தோறும் அத்யாதரத்தைப்பண்ணி அநந்யப்ரயோஜநனுய்ச் சேர்ந்துநின்று.

இ.—முதற்பாட்டில், ப்ரதிகூல நிரஸநஸ்வபாவனான காளமேகத்தை யொழிய வேறு நமக்கு ரக்ஷகரில்லை யென்கிறார். [தாளதாமரை] - தாளையுடைய தாமரை. மலையைச்சுமந்தாற்போலே பூவின் பெருமையைப் பொறுக்கவல்ல தாளையுடைய தாமரை. சேற்றின் நன்மையாலே உரத்ததாளையுடைய தாமரை. "உரம்பெற்ற மலர்க்கமலம் உலகு அளந்த சேவடிபோல் உயர்ந்துகாட்ட" என்னக்கடவதிறே. [தடமணிவயல்] - பூவாலே அலங்கரிக்கப்பட்ட தடாகங்களையுடைய வயல். [திருமோகூர்] - ஊரில் போக்யதை வயலின் நலத்திலே காணுமித்தனை. [நாளுமேவி] - நாள்தோறும் அத்யாதரத்தைப்பண்ணி. இவ்வூரில் விடிவுதோறும் அவனுக்கு "ஸுப்ரபாதாச மே நிசா" என்னும்படியாய்த்து இருப்பது. [நன்கமர்ந்து நின்று] - அநந்யப்ரயோஜநனுய்ச் சேர்ந்து நின்று. அவ்வூரில்வாஸம் ஒன்றுக்காக வன்றிக்கே ஸ்வயம்ப்ரயோஜநமாயிருக்கை. [அசுரரை இத்யாதி] - அஸுரரை அழியச்செய்யுமா போலே, என்விரோதிகளைத் துணிக்கவல்ல தோள்களையுடையவன். 'கஜம்வா வீக்ஷ்ய ஸிம்ஹம்வா வ்யாக்ரம்வா வநமாச்ரிதா, நாஹாரயதிஸந்த்ராஸம் பாஹூ ராமஸ்ய ஸம்ச்ரிதா" என்னக்கடவதிறே. விடுகாதாய்க் கிடந்தாலும் தோடிட்டகாதென்று தெரியுமாபோலே, தோள்களைக் கண்டபோதே விரோதிநிரஸநசீலமென்று தோற்றியிருக்குமென்கை. இவன்பின்பே வழியேபோமிடத்துத் திருக்குழலை ஒருகால் பேண, நெடுநாள் ஸம்ஸாரத்தில்பட்ட க்லேசமெல்லாம் தீரும்படியாய்த்திருப்பது. "கேசவ: க்லேசநாசந:". [கமலக்கண்கனிவாய்] - பந்தமெல்லாம் தோற்றும்படியான நோக்கும் ஸ்மிதமுமிருக்கிறபடி. ஸம்ஸாரத்தில் பொய்யருடைய நோக்கிலும் ஸ்மிதத்திலும்பட்ட நோவெல்லாம் ஆறும்படியிறே இருப்பது. "கச்சதாம் தூரமத்வாநம் த்ருஷ்ணாமூர்ச்சித சேதஸாம், பாதேயம் புண்டரீகாக்ஷ நாமஸங்கீர்த்தநாம்ருதம்" [காளமேகத்தை] - வழி போம் போது முன்னே ஒரு காளமேகம் வர்ஷித்துக்கொண்டுபோகப் பின்னே போமா போலே ச்ரமஹரமாயிறே இருப்பது. "ஸர்வகந்த:" என்கிற விஷயமாகையாலே, அவ்வாசநாற்றத்தை யநுபவித்துக்கொண்டுபோமித்தனை. [அன்றிமற்றென்றிலம்கதியே] - அவனையொழிய வேறுகதி உடையோமல்லோம் - வேறொருவரை ரக்ஷகமாக உடையோமல்லோம்.

ஈடு.—முதற்பாட்டு. மரணமான மஹாபயத்துக்கு விரோதிநிரஸநசீலனான காளமேகமல்லது துணையில்லையென்று அவனைப்பற்றுகிறார்.

[தாளதாமரை] - மலையைச் சுமந்தாற்போலே பூவின்பெருமையைப் பொறுக்கவல்ல தாளையுடைய தாமரையென்கை. "உரம்பெற்றமலர்க்கமலம் உலகளந்தசேவடிபோலுயர்ந்து காட்ட" என்னக்கடவதிறே. சேற்றின்நன்மையாலே உரத்த தாளையுடைய தாமரையென்கை. [தடமணி]-இப்படிப்பட்ட பூக்களாலே யலங்கரித்தாற்போலே யிருக்குமாய்த்துத் தடம்; "உரம்பெற்றமலர்க்கமலம் உலகளந்தசேவடிபோலுயர்ந்து காட்ட" சேற்றுவாய்ப்பாலே உரம்பெற்றிருக்கிற கமலமானது ஓங்கிஅலர்ந்தபோது, திருவுலகளந்தபோதெடுத்த திருவடிகளுக்குப் போலியாயிருந்தது. "வரம்புற்ற இத்யாதி"; — அப்போது, "ஸங்கைஸ் ஸுராணும்" என்கிறபடியே தேவர்கள் திரண்டு காலைகட்டித் தலையைவணங்கித் தண்டனிட்டாப்போலே யிராநின்றதாய்த்து, செந்நெல்களானவை விழுந்து தலைசாய்ந்து கிடக்கிறபோது; இப்படிப்பட்ட தடங்களையும் வயல்களையுமுடைத்தான திருமோகூர். ஊரில் போக்யதையுடைய வயலிலே காணுமித்தனை. [நாளுமேவி] - நாள்தோறும் அத்யாதரத்தைப்

பஸ்ஸணி. அவ்வூரில் விடிந்த விடிவுதோறும், அவனுக்கு *ஸுப்ரபாதாச மே நிசா* என்னும்படி யாய்த்திருப்பது. [ஙன்கமர்ந்து நின்று] இவ்வூரில் வாஸமொழிய வேறொரு ப்ரயோஜநத்தைக் கணிசியாதே இதுதானே ப்ரயோஜநமாக நின்று. [அசுரர் இத்யாதி] - அஸுரஸங்கத்தைத் துணித்தடுக்கி விரோதியைப் போக்கிக்கொண்டு போகவல்லனென்று தோற்றும்படியான திருத் தோள்கள் நாலையுமுடைய. "இவர் இப்போதறிந்தபடி யெங்ஙனே ?" என்று கேட்க, "விடுகாதா றும் நோடிட்டுவளர்ந்த காடென்றுதெரியுங்காண்" என்றருளிச்செய்தருளின வார்த்தை. [எரிகுழல்] - நெடுநாள்பட ஸம்ஸாரத்திற்பட்ட ஸகலதாபங்களும் ஆறும்படியிருக்குமாய்த்து, பின்னே போகிறவனுக்கு முன்னே போகிறவன் ஒருகால் திருக்குழலைக் குலைத்து முடிக்க; *கேசவ: க்லேசநாசந:* [கமலமித்யாதி] - க்ஷுத்ரவிஷயங்களினுடைய பொய்யான நோக்கிலும் பொய்யான முறுவலிலும் அகப்பட்ட நெஞ்சாறலெல்லாம் தீரும்படி மெய்யான நோக்கும் மெய்யான முறுவலுமிருக்கும்படி சொல்லுகிறது. [காளமேகத்தை] - ராஜாக்கள்போம் போது முன்னே மேகர் நீர்விடுமாபோலே முன்னுய்க் காளமேகம் ஸௌந்தர்யாம்ருதத்தை வர்ஷித்துக்கொண்டு போக, பின்னே அக்குளிர்வாசத்தையநுபவித்துப் போகலாயிருக்கு மாய்த்து. [அன்றி மற்றொன்றிலம் கதியே] - காளமேகத்தை யொழிய வேறு வழித்துணை யுடையோமல்லோம்.

இலங்கதிமற்றொன்றுஎம்மைக்கும் ஈன்தண்துழாயின்*
அலங்கலங்கண்ணி ஆயிரம்பேருடையம்மான்*
நலங்கொள்நான்மறைவாணர்கள்வாழ் திருமோகூர்*
நலங்கழலவனடிநிழல் தடமன்றியாமே. (2)

ஒ.—இரண்டாம்பாட்டில், ஆச்ரிதர்க்கு ச்ரமஹரமானபோக்யதையையும் அவர்களுக்கு உஜ்ஜீவந ஹேதுவான திருநாமங்களையு முடையனானவனுடைய ச்ரமஹரமான திருவடிகளல்லது காலதத்த்வ முள்ளதனையும் வேறு புகலுடையோ மல்லோம் என்கிறார். [எம்மைக்கும்] - எப்பிறப்புக்கும். [ஈன் தண்துழாயின் என்று தொடங்கி] - செவ்வியையும் குளிர்த்தியையுமுடைய திருத்துழாயினுடைய ஒளியையுடைத்தான அழகிய மாலையையும், குணசேஷ்டிதாதிகளுக்கு வாசகமான அபர்யந்தமான திரு நாமங்களையுமுடைய ஸர்வேச்வரனுமாய், ஆந்ருசம்ஸ்யாதிகளை யுடையராய் எம்பெருமானுக்குங்கூட "ஆச்ரிதஸம்ரக்ஷணமே பரமதர்மம்" என்று ஓதுவிக்கும்படியாக வேதார்த்தம் கைவந்திருக்குமவர்கள் நிரந்தரமாக அநுபவிக்கிற திருமோகூரிலே ஆச்ரிதருடைய குணதோஷநிரூபணம் பண்ணாத திருவடிகளை யுடையவனுடைய பாதச்சாயையாகிற பொய்கையை யொழிய.

இ.—இரண்டாம்பாட்டில், போக்யமான ஒப்பனையையும் உஜ்ஜீவநஹேதுவான திருநாமங்களையு முடையவனுடைய திருவடிகளல்லது வேறுகாலதத்த்வமுள்ளதனையும் புகலுடையோ மல்லோம் என்கிறார். [எம்மைக்கும் - மற்றொன்று - இலங்கதி] - இவ்வார்த்தை ஒரு ஜந்மத்துக் கன்றிக்கே, எல்லா ஜந்மத்துக்கும் இதுவேவார்த்தை என்கை. [எம்மைக்கும்] - எப்பிறப்புக்கும்; எல்லாக்காலங்களிலுமென்றபடி. [ஈன்தண்துழாய் இத்யாதி] - தாரையும் குளிர்த்தியையுமுடைய திருத்துழாயின் ஒளியையுடைத்தான அழகிய மாலை. [அலங்கல்] - ஒளியென்னுதல், அசைவென்னுதல்; பின்னே போகாநின்றால் அடிமாறி யிடும்போது வளையமசைந்து வருகிறபடி என்னுதல், திருமேனியிலே சேருகையால் வந்த புகரைச் சொல்லுதல். [ஆயிரம்பேருடை] - ஒப்பனைக்குத்தோற்று ஏத்துகைக்கு அஸங்க்யாதமான திருநாமங்களை யுடையவன். [அம்மான்] - அழகின்றிக்கே யொழிந்தாலும் ஏத்துகைக்கு ப்ராப்தமான விஷயம். [நலங்கொள் இத்யாதி] - "ஆந்ருசம்ஸ்யமே வேதார்த்தம்" என்று வேததாத்பர்யம் கைவந்திருக்குமவர் களாய் வேதநிர்வாஹகரானவர்கள் நித்யாநுபவம்பண்ணுகிற தேசம். அத்தேசவாஸத்தாலே, "ஆச்ரித ஸம்ரக்ஷணமே பரமதர்மம்" என்று ஈச்வரனுக்கும் அதிலே நிஷ்டனாவேண்டியிருக்கும் தேசம். அவ்வூரிலே ஆச்ரயிக்கச்சென்றாரை, "அஸ்மாபிஸ் துல்யோ பவது" என்னுமவர்கள். [நலங்கழல்] - ஆச்ரிதருடைய குணதோஷநிரூபணம் பண்ணாத திருவடிகள். அவர்கள் ப்ரேமாந்தராய், "வத்யதாம்"

என்றாலும் ''நத்யஜெயம்'' என்னுமவன். [அவனடிநிழல் தடமன்றியாமே] - அவனுடைய பாதச்சாயை யாகிற பொய்கையொழிய. [யாம் - இலங்கதி மற்றொன்று எம்மைக்கும்] - அவன்தானே, ''வத்யதாம்' என்றாலும் புறம்பு புகலற்றிருக்கிறபடி.

ஈடு. —இரண்டாம்பாட்டு. போகஹேதுவான ஒப்பனையையும் உஜ்ஜீவநஹேதுவான திருநாமங்களையு முடையவனுடைய திருவடிகளல்லது வேறு, காலதத்த்வ முள்ளதனையும் புக லுடையோமல்லோம் என்கிறார்.

[இலங்கதிமற்றொன்று எம்மைக்கும்] (எம்மைக்கும் - மற்றொன்று - இலங்கதி) இவ் வார்த்தை ஒருஜந்மத்துக்கன்றியே, எல்லாஜந்மத்துக்கும் இதுவேவார்த்தை. எல்லாக் காலத் துக்கும் இதுஒழிய வேறு துணையுடையோமல்லோம். [சன் இத்யாதி] - தாரையும் குளிர்த்தி யையு முடைய திருத்துழாயின் ஒளியையுடைத்தான அழகியமாலை. [அலங்கல்] - ஒளியென்று தல், அசையென்னுதல்; பின்னே போகாநின்றால் அடிமாறியிடும்போது வளையம் அசைந்து வருகிறபடியென்னுதல்: திருமேனியிலே சேருகையாலே வந்த புகரைச் சொல்லுதல். [ஆயிரம் பேருடை] - தோளும் தோள்மாலையுமான அழகைக்கண்டு இவன் ஏத்தப்புக்கால், இழிந்தவிட மெல்லாம் துறையாம்படி அஸங்க்யாதமான திருநாமங்களையுடையவன் [அம்மான்]-வடிவழகு கண்டு அப்ராப்த ஸ்த்தலத்திலே ஏத்திற்றாகவேண்டாதே, "ஆழியங்கையம்மானை யேத்தா தயர்த்து - வாளாவிருந்தொழிந்தேன் கீழ்நாள்களெல்லாம்'' என்று ஏத்தாதநாளைக்கும் வயிறு பிடிக்கவேண்டும்படியான விஷயம். [நலங்கொள் இத்யாதி]-"ஆந்ருசம்ஸ்யமே வேதார்த்தம்'' என்று வேததாத்பர்யம் கைவந்திருக்குமவர்களாய், வேதத்துக்கு வ்யாஸபதம் செலுத்தவல்ல ரானவர்கள் நித்யவாஸம்பண்ணுகிற தேசம். அவ்வூரில் வர்த்தனந்தானேயிறே வாழ்ச்சி. அத்தேசவாஸத்தாலே, "ஆச்ரிதஸம்ரக்ஷணமே பரமதர்மம்'' என்று ஈச்வரனுக்கும் அதிலே நிஷ்டனாகவேண்டும் தேசம். அவ்வூரிலே ஆச்ரயிக்கச் சென்றாரை, *அஸ் மாபிஸ் துல்யோபவது* என்னுமவர்கள். [நலங்கழலவன்] - ஆச்ரிதருடைய குணதோஷநிரூபணம்பண்ணாத திருவடிகள். அவர்கள் தாங்கள் ப்ரேமாந்தராய், *வத்யதாம்* என்றாலும் *ந த்யஜேயம்* என்னுமவன். அவ னடிநிழல்தடமன்றியாமே] - அவனென்கிற பதம் இரண்டிடத்திலும் அந்வயிக்கிறது அவன் பாதச்சாயையாகிற பொய்கையை யொழிய நாம் வேறொரு கதியுடையோ மல்லோம்.

அன்றியாமொருபுகலிடம்இலம் என்றென்றலற்றி*
நின்றுநான்முகன் அரனொடுதேவர்கள் நாட*
வென்றுஇம்மூவுலகளித்து உழல்வான்திருமோகூர்*
நன்றுநாம்இனிநணுகுதும் நமதிடர்கெடவே. (3)

ஒ.—மூன்றாம்பாட்டில், ஸர்வரக்ஷணசீலனான ஸர்வேச்வரன் வர்த்திக்கிற திருமோகூரை நம முடைய ஸமஸ்த து:க்கங்களுங்கெடச்சென்று ப்ராபிப்போம்; இது உசிதம் என்கிறார். [அன்றியென்று தொடங்கி] - வேறு நாங்கள் ஒருபுகலிடம் உடையோமல்லோம் என்று நிரந்தரமாகக் கூப்பிட்டு ப்ரஹ்ம ருத்ர ப்ரமுகரான தேவர்கள் ஆச்ரயிக்க, ப்ரதிபக்ஷத்தை வென்று, இந்த மூன்றுலோகத்தையும் ரக்ஷித்து அதுவே தனக்குப் போதுபோக்கானவனுடைய திருமோகூரை. [நன்று - நணுகுதும்] - நன் றாகக் கூடுவோம்.

இ.—மூன்றாம்பாட்டில், ஸர்வரக்ஷகன் வர்த்திக்கிற திருமோகூரை, நம்முடைய ஸகலது:க்கங்களும் கெடச்சென்று ப்ராபிப்போம் என்கிறார். [அன்றி இத்யாதி] - "வேறு நாங்கள் ஒருபுகலிடமுடையோ மல்லோம்'' என்றாய்த்து ப்ரஹ்மாதிகள்வார்த்தை. அநந்யப்ரயோஜநர் சொல்லும் வார்த்தையைச் சொல்லுவர்களாய்த்து இவன் முகங்காட்டுகைக்காக. [என்றென்று அலற்றி] - நிரந்தரமாகக் கூப்பிட்டு. [நின்று] - தங்கள் ப்ரயோஜநம் பெற்றாலல்லது மீளமாட்டாதே நின்று, ப்ரஹ்மருத்ரர்களோடே

தேவர்கள் ஆச்ரயிக்க, அவர்கள்ப்ரதிபக்ஷத்தை வென்று, இந்தஸகலலோகங்களையும் ரக்ஷித்து அதுவே யாத்ரையாயிருக்கிறவன் வர்த்திக்கிற தேசம். [இனி - நாம் - நன்று - நணுகுதும்] - அவன் ஸர்வரக்ஷகனானபின்பு, ரக்ஷகாபேக்ஷையுடைய நாம் நன்றாகக்கூடுவோம். ஸ்ரீமதுரையைக் காலயவந ஜராஸந்தாதிகள் கிட்டினாப்போலன்றியே, ப்ரஹ்மாதிகள் க்ஷீராப்தியைக் கிட்டினாப்போலுமன்றியே, அநந்ய ப்ரயோஜநராய்க் கிட்டுவோம். [நமதிடர் கெடவே] - வழித்துணை தேடி க்லேசிக்கிற நம்முடைய து:க்கங்கெட.

ஈடு.—மூன்றாம்பாட்டு. ஸர்வரக்ஷகனானவன் வர்த்திக்கிற திருமோகூரை, நம்முடைய ஸகலது:க்கமும் கெடச்சென்று ப்ராபிப்போமென்கிறார்.

[அன்றி இத்யாதி] - ப்ரயோஜநாந்தரபரரும் அநந்யப்ரயோஜநருடைய பாசுரத்தைச் சொல்லுவர்களாய்த்து அவன் முகங்காட்டுகைக்காக. "தேவரையொழிய நாங்கள் ஒருபுகலுடையோமல்லோம்" என்று நிரந்தரமாக அடைவுகெடச்சொல்லிக் கூப்பிட்டு. [நின்று] அநந்யப்ரயோஜநரைப்போலே தங்கள் ப்ரயோஜநம் கைபுகுருமளவும் நின்று. [நான்முகன் இத்யாதி] - சதுர்முகன், ருத்ரன், இவர்களோடேகூட தேவஜாதியடைய ஆச்ரயிக்க. [வென்று இத்யாதி] - அவர்கள்ப்ரதிபக்ஷத்தை வென்று, அவர்களுக்கு விஷயமான இத்த்ரைலோக்யத்தையும் ரக்ஷித்து, அதுவே யாத்ரையாயிருக்குமவன் வந்து வர்த்திக்கிற தேசமாய்த்து. [நன்று நாமினி நணுகுதும்] (இனி - நாம் - நன்று - நணுகுதும்) - அவன் ஸர்வரக்ஷகனானபின்பு, ரக்ஷகாபேக்ஷையுடைய நாம் நன்றாகக்கிட்டுவோம். ஸ்ரீமதுரையிலே காலயவந ஜராஸந்தாதிகள் கிட்டினாப்போலேயன்றிக்கே, "நீணகர்நீளெரிவைத்தருளாய்" என்று ப்ரஹ்மாதிகள் க்ஷீராப்தியைக் கிட்டினாப்போலுமன்றிக்கே, அநந்யப்ரயோஜநராய்க் கிட்டுவோம். [நமதுஇடர்கெடவே] "ஆவாரார்துணை" என்றிருக்கிற நம்முடைய க்லேசம்கெட.

இடர்கெடஎம்மைப்போந்தளியாய் என்றென்றேத்தி*
சுடர்கொள்சோதியைத் தேவரும்முனிவருந்தொடர*
படர்கொள்பாம்பணைப் பள்ளிகொள்வான்திருமோகூர்*
இடர்கெடஅடிபரவுதுந் தொண்டீர்!வம்மினே. (4)

ஒ.—நாலாம்பாட்டில், நம்முடைய ஸமஸ்த து:க்கங்களும்போக திருமோகூரில் எம்பெருமானை ஆச்ரயிப்போம், வாருங்கோள் என்று ஸ்ரீவைஷ்ணவர்களை அழைக்கிறார். [இடரென்று தொடங்கி] - எங்களுடைய ஸமஸ்தது:க்கங்களும் போம்படிபோந்து ரக்ஷித்தருளாய் என்று பலகாலும் ஆச்ரயிக்கலாம்படி, தன்னுடைய ஸ்பர்சத்தாலே விலக்ஷணமான அழகையுடையவனை, தேவர்களும், முனிவர்களும், வளராநின்றுள்ள திருவநந்தாழ்வான்மேலே பள்ளிகொள்ளுமவன் அப்படியே நமக்கு ஸுலபனாகைக்காக நின்றருளின திருமோகூரிலே.

இ.—நாலாம்பாட்டில், நம்முடைய ஸமஸ்தது:க்கங்களும்போக, திருமோகூரிலேவந்து ஸுலபனாய் நிற்கிறவனை ஆச்ரயிக்கப்போருங்கோள் என்று ஸ்ரீவைஷ்ணவர்களை அழைக்கிறார். [இடர்கெட இத்யாதி] "எம்மை - இடர்கெட-போந்தளியாய்" என்றாய்த்து ஈச்வராபிமாநிகளுக்கும் சாபாநுக்ரஹ ஸமர்த்தர்க்கும் வார்த்தை. வேதாபஹாராதி து:க்கங்கள்போக. [எம்மை] - முன்பு "ஈச்வரோऽஹம்" என்றிருந்தவர்கள், ஆபத்து மிக்கவாறே, "ஏஹி பச்ய சரீராணி". என்னுமாபோலே தங்கள் வெறுமையை முன்னிடுமத்தனை. [போந்தளியாய்] - அவதரித்து ரக்ஷிக்கவேணுமென்பர்கள். [என்றென்றேத்தி - தொடர] - தங்கள் ஆபத்தாலே இடைவிடாதே புகழ்ந்து வடிம்பிட்டு ஆச்ரயிக்கைக்காக. [சுடர்கொள் சோதியை] - "ஆபத்தாலேயாகிலும் நம்பாடே வரப்பெற்றோமே!" என்று உஜ்ஜ்வலனாயிருக்குமவனையென்னுதல், விலக்ஷணமான அழகையுடையவனாகையாலே ஸ்வயம்ப்ரயோஜநமானவனைக் கிடீர் து:க்கநிவர்த்தகனாக நினைத்தது என்னுதல். [தேவரும் முனிவரும் தொடர] - தேவதைகளும், சாபாநுக்ரஹஸமர்த்தரான ருஷிகளும்; "ஈச்வரோऽஹம்"என்றிருப்பாரும், ஐச்வர்யார்த்தமாக யத்நம்பண்ணுவாரும் என்றுமாம்.

[படர்கொள் பாம்பணைப் பள்ளி கொள்வான்] - ஸ்வஸ்பர்சத்தாலே விக்ருதனானவனைச் சொல்லுகிறது. அநந்யப்ரயோஜநரை அடிமை கொள்ளுகிறவன்கிடீர் ப்ரயோஜநாந்தரபரர்க்கு முகங்கொடுக்க க்ஷீராப்தியிலே கண்வளர்ந்தருளுகிறான். [படர்கொள் பாம்பு] - ஸ்வஸ்பர்சத்தாலே வளராநின்றுள்ள திருவநந்தாழ்வான். [பள்ளிகொள்வான் திருமோகூர்] - தேவாதிகளுக்கு ஸுலபனானாப்போலே நமக்கும் ஸுலபனாகைக்காகத் திருமோகூரிலே நின்றருளினான். [இடர்கெட அடி பரவுதும்] - நம்முடைய ஸகல து:க்கங்களும் போம்படி அவனுடைய திருவடிகளை ஆச்ரயிப்போம். [தொண்டீர் வம்மினே] - என்னோடு ஸகோத்ரிகளாயிருப்பார் திரளுங்கோள்.

ஈடு.—நாலாம்பாட்டு. நம்முடைய ஸமஸ்த து:க்கங்களும் கெட, திருமோகூரிலேவந்து ஸுலபனாய் நிற்கிறவனை யாச்ரயிக்கவாருங்கோளென்று ஸ்ரீவைஷ்ணவர்களை யழைக்கிறார்.

[இடர்கெடவித்யாதி] - "எம்மை-இடர்கெட - போக்தனியாய்" என்றுப்த்து ஈச்வராபிமாநிகளுக்கும், சாபாநுக்ரஹஸமர்த்தர்க்கும் வார்த்தை. வேதாபஹாராதி து:க்கங்கள் போக. [எம்மை]-முன்பு "ஈச்வரோஹம்" என்றிருந்தவர்கள், ஆபத்து மிக்கவாறே "ஏஹி பச்ய சரீராணி" என்னுமாபோலே தங்கள்வெறுமையை முன்னிடுமத்தனை. [போக்தனியாய்]-அவதரித்து ரக்ஷிக்கவேணும் என்பர்கள். முன்பெல்லாம் உபேக்ஷித்திருந்தவர்கள், ஒன்று கெட்டவாறே படிகாப்பாரைப் பிடிக்குமாபோலே, நாங்கள் ஆபந்நராய்வர நீ கிடக்கிறதென்? என்பர்கள். [என்றென்றேத்தி - தொடர] - தங்கள் ஆபத்தாலே இடைவிடாதே புகழ்ந்து வடிம்பிட்டு ஆச்ரயிக்கைக்காக. [சுடர்கொள்சோதியை] - "ஆபத்காலத்திலேயாகிலும் நம்பாடே வரப்பெற்றோமே!" என்று உஜ்ஜ்வலனாயிருக்குமவனை யென்னுதல், விலக்ஷணமான அழகையுடையனாகையாலே ஸ்வயம் ப்ரயோஜநமானவனைக்கிடீர் து:க்கநிவர்த்தகனாக நினைத்ததென்னுதல். [தேவரும்முனிவரும் தொடர] - தேவர்களும், ருஷிகளும், "ஈச்வரோஹம்" என்றிருப்பாரும், ஐச்வர்யார்த்தமாக யத்நம்பண்ணுவாரும். [படர்கொள்பாம்பணைப் பள்ளி கொள்வான்] - அநந்யப்ரயோஜநரை யடிமைகொள்ளுகிறவன்கிடீர், ப்ரயோஜநாந்தரபரர்க்கு முகங்கொடுக்கைக்காக க்ஷீராப்தியிலே கண்வளர்ந்தருளுகிறான்! [படர்கொள்பாம்பு]-ஸ்வஸ்பர்சத்தாலே வளராநின்றுள்ள திருவநந்தாழ்வான். [பள்ளிகொள்வான்] - தன்னோட்டை ஸ்பர்சத்தாலே ஸர்வஜ்ஞனானவனை அஜ்ஞரோபாதி நித்ரைக்கு இடங்கொடுக்கும்படி பண்ணவல்லனாய்த்துத் திருவநந்தாழ்வான். [திருமோகூர்] - தேவாதிகளுக்கு ஸுலபனானாப்போலே நமக்கும் ஸுலபனாகைக்காகத் திருமோகூரிலே நின்றருளினான். [இடர்கெடஅடிபரவுதும்] - அவனுடைய திருவடிகளை நம்முடைய ஸகலது:க்கங்களும் கெடும்படி யாச்ரயிப்போம். [தொண்டீர் வம்மினே] - நம்மோடு ஸகோத்ரிகளா யிருப்பாரடங்கத் திரளுங்கோள்.

தொண்டீர்!வம்மின் நம்சுடரொளியொருதனிமுதல்வன்*
அண்டமூவுலகளந்தவன் அணிதிருமோகூர்*
எண்திசையும்ஈன்கரும்பொடு பெருஞ்செந்நெல்விளைய*
கொண்டகோயிலைவலஞ்செய்து இங்குஆடுதும்கூத்தே. (5)

ஒ.—அஞ்சாம்பாட்டில், அவன் எழுந்தருளி நின்றருளின திருமோகூரை ஆச்ரயிக்க வாருங்கோள் என்கிறார். [நம் சுடர் ஒளியென்று தொடங்கி] - ஜகத்துக்கு த்ரிவிதகாரணமும் தானேயாய் அப்ராக்ருதமான அழகையுடையவனுமாய் மஹாபலியாலே அபஹ்ருதமானஅண்டோதரத்திலே மூன்று லோகத்தையும் அளந்து கொண்டவனுடைய ச்லாக்யமான திருமோகூர் எட்டுத்திக்கும் ஈன்ற கரும்பொடு பெருஞ்செந்நெல் விளையும்படி பரிக்ரஹித்தகோயில்.

இ.—அஞ்சாம்பாட்டில், அவன் எழுந்தருளி நின்றருளின திருமோகூரை ஆச்ரயித்து அநுபவிக்க வாருங்கோள்! என்கிறார். [தொண்டீர் வம்மின்] - பகவத்விஷயத்தில் சபலரானார் வாருங்கோள். [நம் சுடரொளி ஒருதனிமுதல்வன்] - நிரவதிகதேஜோரூபியாய் த்ரிவிதகாரணமும்

தானேயானவன். 'நம்' - என்று ப்ரமாணப்ரஸித்தியைச் சொல்லுதல்; தன்வடிவழகையும் ஜகத்துனை தன்னோட்டை ப்ராப்தியையும் நமக்கு அறிவித்தவன் என்னுதல். [அண்டம் மூவுலகளந்தவன் - அணி திருமோகூர்] - அவன்தனக்கு ஆபரணமான தேசமென்னுதல்; ஸம்ஸாரத்துக்கு ஆபரணமான தேசமென்னுதல். [எண்திசையும் இத்யாதி] - எட்டுத்திக்கிலும் ஈன்ற கரும்போடே பெருஞ்செந்நெல் விளையும்படி பரிக்ரஹித்த கோயில். கரும்புக்கு நிழல் செய்தாப்போலே இருக்கும் செந்நெல்; "அவன் ஸந்நிதியிலே ஊரும், "அகாலபலிநோ வ்ருக்ஷா:" என்கிறபடியேயாய்த்து என்கை. [வலஞ் செய்து] - ப்ரதக்ஷிணாதிகளைப்பண்ணி. [இங்கு ஆடுதும்கூத்தே] - பந்தம்இது, வடிவழகு அது; ஆனபின்பு, ஆடாதே இருக்கப்போமோ? அங்குப்போனால், "அஹமந்நமஹமந்நம்" என்று களிக்குமத்தை இங்கே களிப்போம்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. அவன் எழுந்தருளிநின்ற திருமோகூரை யாச்ரயித்து அநுபவிக்கவாருங்கோ ளென்கிறார்.

[தொண்டீர்வம்மின்] - பகவத்விஷயத்தில்சபலராயிருப்பார் வாருங்கோள். [நம்சுடரொளி யொருதனிமுதல்வன்] - நிரவதிகதேஜோரூபியாய் த்ரிவிதகாரணமும் தானேயானவன். 'நம்' என்று - ப்ரமாணப்ரஸித்தியைச் சொல்லுதல், தன்வடிவழகையும் ஜகத்துனை தன்னோட்டை ப்ராப்தியையும் நமக்கறிவித்தவனென்னுதல். [அண்டம் மூவுலகளந்தவன்] - அண்டத்துக்குப் புறம்பேயிருக்கிறவன். மஹாபலியாலே யபஹ்ருதமான அண்டோதரத்தில் மூன்றுவகைப் பட்ட லோகங்களையும் அளந்துகொண்டவன். ஸ்ருஷ்டித்துவிடுகையன்றிக்கே, ஸ்ருஷ்டமான ஜகத்தை ப்ரபலர்அபஹரித்தால் எல்லைநடந்து கொண்டு ரக்ஷிக்குமவனென்கை. [அணிதிருமோகூர்] - அவன்தனக்கு ஆபரணமான தேசமென்னுதல், ஸம்ஸாரத்துக்குஆபரணமான தேசமென்னுதல். [எண்திசையும் இத்யாதி] - எட்டுத்திக்கிலும் ஈன்ற கரும்போடே பெருஞ்செந்நெல் விளையும்படி. [கொண்ட கோயில்]-திருவுள்ளத்தாலே பரிக்ரஹித்த கோயில். கரும்புக்கு நிழல்செய்தாப்போலேயிருக்கும் செந்நெல். அவன் ஸந்நிதியாலே ஊரும் ,"அகாலபலிநோ வ்ருக்ஷா:" என்றபடியேயாய்த்து. [வலஞ்செய்து] - ப்ரதக்ஷிணாதிகளைப்பண்ணி. [இங்கு ஆடுதும்கூத்தே] - அங்குப்போனால் "அஹமந்நமஹ மந்நம் என்று களிக்குமத்தை. இங்கே களிப்போம்.

கூத்தன்கோவலன் குதற்றுவல்லசுரர்கள்கூற்றம்*
ஏத்தும்நங்கட்கும் அமரர்க்கும்முனிவர்க்கும்இன்பன்*
வாய்த்ததண்பணைவளவயல்சூழ் திருமோகூர்
ஆத்தன்*தாமரையடியன்றி மற்றிலம்அரணே. (6)

ஒ.—ஆறும்பாட்டில், திருமோகூரில் நின்றருளின பரமாப்ததமனானவனுடைய திருவடிகளல்லது வேறு நமக்கு அரணில்லை என்கிறார். [கூத்தன் என்று தொடங்கி] - கோபாலனும், மநோஹாரியான சேஷ்டிதங்களையுடையனும், மிறுக்குச்செய்யும் வலியரான அஸுரர்க்கு ம்ருத்யுவாய், நித்யஸித்தர்க்கும் இன்றுஆச்ரயிக்கிற நமக்கும் ஒக்க இனியனானவன். [வாய்த்த தண்பணை வளவயல்சூழ் திருமோகூர்] - மிகவும் அழகிதான நீர்நிலங்களையுடைய வளவிதான வயல்சூழ்ந்த திருமோகூரிலே.

இ.—ஆறும்பாட்டில், திருமோகூரிலே நின்றருளின பரமாப்ததமன்திருவடிகளல்லது வேறு நமக்கு அரணில்லை என்கிறார். [கூத்தன்] - நடக்கப்புக்கால் வல்லாராடினாப்போலே இருக்கை. "புத்ர ப்ராதரிகச்சதி" - வழித்துணையாய் அவன் முன்னேபோக பின்னே போமிடத்து நடையழகு தானே ப்ரயோஜநமாயிருக்கை. "ஆடல்பாடலவை மாறினர்தாமே" என்னக்கடவதிறே. இவன் திருக்குழல் வாய்வைத்தபோது அப்ஸரஸ்ஸுக்கள் குழலோசையைக் கேட்டுப் பாட்டுத் தவிர்ந்தார்கள், இவன்நடைகண்டு ஆடல்தவிர்ந்தார்கள். [கோவலன்] - ஆச்ரயித்தாரை ரக்ஷிக்குமிடத்துத் தாழவந்து அவதரித்து ரக்ஷிக்குமவன். பிசாசத்துக்கு மோக்ஷப்ரதனாய் வழிநடத்தினவனிறே. ஆச்ரிதர்சிறுமை பாராதவனிறே. [குதற்றுவல்லசுரர்கள் கூற்றம்] - மிறுக்கைப்பண்ணும் ப்ரபலரான அஸுரர்களுக்கு

ம்ருத்யுவானவன். குதற்றுதல் - நெறிதவிர்தல். இன்று ஆச்ரயிக்கிற நமக்கும், ''வைகுந்தத்தமரரும் முனிவரும்'' என்கிற நித்யாச்ரிதர்க்கும் ஒக்க இனியனானவன். [வாய்த்த இத்யாதி] - அழகிதான நீர் நிலங்களும் வளவிதான வயலும் சூழ்ந்த திருமோகூரிலே நின்றருளின பரமபந்து. தான் தனக்கில்லாத மரணஸமயத்திலே, ''அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி'' என்னும் பரமாப்ததமன். தன்னை அஞ்சினபோது அவன்பக்கலிலே ந்யஸ்தபரனும்படியான ஆப்ததமன். [தாமரை அடியன்றி] - அநாப்தனாகிலும் விடவொண்ணாதபடியாய்த்துத் திருவடிகளில்போக்யதை. [மற்றிலம் அரணே] - வேறு சிலரை ரக்ஷகமாக உடையோமல்லோம். போக்யதை இல்லையாகிலும் அநாப்தனாகிலும் புறம்பு புகலில்லையென்கை.

௬.—ஆறும்பாட்டு. திருமோகூரிலே நின்றருளின பரமாப்ததமன் திருவடிகளல்லது வேறு நமக்கு ரக்ஷையில்லையென்கிறார்.

[கூத்தன்] - நடக்கப்புக்கால் வல்லாராடினாப்போலேயிருக்கை. *அக்ரத:ப்ரயயௌ ராம:* என்கிறபடியே நடைச்சக்ரவத்துப்பிடிக்கலாயிருக்குமாய்த்து. அவன் முன்னேபோகப் பின்னே போகையாவது—கூத்துக்கண்டு போகையாய்த்து. ''ஆடல்பாடலவைமாறினார்தாமே'' என்னக் கடவதிறே - அவன் திருக்குழலை வாய்வைத்தபோது அப்ஸரஸ்ஸுக்கள் குழலோசையைக் கேட்டுப் பாடல்தவிர்ந்தார்கள்; அவன் நடையழகைக்கண்டு ஆடல்தவிர்ந்தார்கள். [கோவலன்] தன்னைத் தாழவிட்டு ஆச்ரிதரை ரக்ஷிக்குமவன். பிசாசத்துக்கு மோக்ஷப்ரதனாய் வழி நடத்தினவனிறே. [குதற்றுவல்லசுரர்கள் கூற்றம்] - மிறுக்குகளைப்பண்ணாநிற்பாராய், பெருமிடுக்கரான அஸுரர்களுக்கு ம்ருத்யுவாயுள்ளவன். [ஏத்துமித்யாதி] - இன்றுஆச்ரயிக்கிற நமக்கும், ''வைகுந்தத்தமரரும் முனிவரும்'' என்கிற நித்யாச்ரிதர்க்கும்ஒக்க இனியனானவன். [வாய்த்த இத்யாதி] - அழகிதான நீர்நிலங்களையும் வளவிதான வயலையுமுடைய திருமோகூரிலே நின்றருளின பரமபந்து. தான் தனக்கில்லாத மரணஸமயத்தில் *அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி* என்னும் பரமாப்ததமன், தன்னை யஞ்சினபோது அவன்பக்கலிலே ந்யஸ்தபரனும் நிர்ப்பரனும் படியான ஆப்ததமன். [தாமரையடியன்றி] - அநாப்தனாகிலும் விடவொண்ணாதாய்த்துத் திருவடிகளில் போக்யதை. [மற்றிலம்அரணே] - வேறுசிலரை ரக்ஷகராக வுடையோமல்லோம். போக்யதையில்லையாகிலும் விடவொண்ணாதபடி புறம்பு புகலில்லையென்கை.

மற்றிலம்அரண் வான்பெரும்பாழ்தனிமுதலா*
சுற்றும்நீர்படைத்து அதன்வழித்தொல்முனிமுதலா*
முற்றுந்தேவரோடு உலகுசெய்வான்திருமோகூர்*
சுற்றிநாம்வலம்செய்ய நம்துயர்கெடும்கடிதே. (7)

௭.—ஏழாம்பாட்டில், ஸர்வகாரணமாகையாலே நம்முடைய ரக்ஷணம் தனக்கு அவர்ஜநீயமாம் படியானவனுடைய திருமோகூரை ஆச்ரயிக்கவே நம்முடைய ஸமஸ்தது:க்கங்களும் அப்போதே கெடும் என்கிறார். [மற்றிலம் அரண்] - வேறு அரணை யுடையோமல்லோம். [வானொன்று தொடங்கி] - பரிச்சேதிக்க வொண்ணாதபடி பெரியதாய் ஒப்பின்றிக்கேயிருக்கிற ப்ரக்ருதியைக் காரணமாகக்கொண்டு ஆவரணஜலத்தைப் படைத்து, அவ்வழியாலே ப்ரஹ்மா முதலான தேவர்களோடுகூடின எல்லாலோகத்தையும் உண்டாக்கினவனுடைய திருமோகூரை.

இ.—ஏழாம்பாட்டில், நம்முடைய ரக்ஷணம் தனக்கு அவர்ஜநீயமான உத்பாதகன் வர்த்திக்கிற திருமோகூரை ஆச்ரயிக்கவே நம்முடைய து:க்கங்கள் அப்போதே போம் என்கிறார். [மற்றிலம் அரண்] - இவனையொழிய வேறுரக்ஷகரில்லை. [வான்பெரும்பாழ் தனிமுதலா] - கார்யஜாதமழிந்தாலும் அழியாமையாலே வலிதாய், அபரிச்சின்னமாய், போகமோக்ஷங்களை விளைப்பதாய், அத்விதீயமான மூலப்ரக்ருதி தொடக்கமாக. [சுற்றுநீர் படைத்து] - ''அப ஏவ ஸஸர்ஜாதௌ'' என்கிறபடியே, ஆவரணஜலத்தை ஸ்ருஷ்டித்து. [அதன்வழித் தொல்முனிமுதலா] - அவ்வழியாலே தேவாதிகளைப்பற்றப் பழையனாய் ம்ருத

சிலனை சதுர்முகன் தொடக்கமாக. [முற்றும் தேவரோடு உலகுசெய்வான் திருமோகூர்] - எல்லா தேவ ஜாதியோடுங்கூட எல்லா லோகங்களையும் உண்டாக்குமவன் வர்த்திக்கிற திருமோகூர். [சுற்றி நாம் வலஞ்செய்ய] - நாம் சென்று விடாதே ப்ரதக்ஷிணாதிகளைப்பண்ண - [நம்துயர் கெடும்கடிதே] - "வழித் துணையில்லை" என்று நாம்படுகிற துக்கங்கள் சடக்கெனப்போம். "அதஸோऽபயங்கதோ பவதி" என்னக் கடவதிறே. ஆனபின்பு, மற்றிலம் அரண்.

ஈடு.—ஏழாம்பாட்டு. நம்முடையரக்ஷணம் தனக்கு அவர்ஜ்ஜநீயமான உத்பாதகன் வர்த்திக்கிற திருமோகூரை யாச்ரயிக்கவே, நம்முடைய துக்கங்கள் அப்போதேபோமென்கிறார்.

[மற்றிலம் அரண்] - வேறோர் அரணையுடையோமல்லோம். அவன்தான் ரக்ஷகனாக வல்லவனோவென்னில்; இதுவன்றோ அவன்படியென்கிறது, மேல். [வான் இத்யாதி] - இவ்வரு குண்டான கார்யவர்க்கமடங்கலும் அழிந்தவன்றும் தானழியாமையாலேவலிதாய், அபரிச்சின்னமாய், போகமோக்ஷங்களை விளைப்பதானஅத்விதீயமான மூலப்ரக்ருதிதொடக்கமாக. [சுற்றுநீர்படைத்து] - *அபஏவ ஸஸர்ஜ்ஜாதௌ* என்கிறபடியே ஆவரணஜலத்தை ஸ்ருஷ்டித்து. [அதன்வழித் தொல்முனிமுதலா] - அவ்வழியாலே, தேவாதிகளைப்பற்றப் பழையனாய மகா சிலனை சதுர்முகன்தொடக்கமாக. [முற்றுந்தேவரோடுஉலகுசெய்வான் திருமோகூர்] - எல்லா தேவஜாதியோடுங்கூட எல்லா லோகங்களையும் உண்டாக்குமவன் வர்த்திக்கிற திருமோகூர். [சுற்றிநாம்வலம்செய்ய] - நாம்சென்றுவிடாதே ப்ரதக்ஷிணாதிகளைப்பண்ண. [நம்துயர்கெடும்கடிதே] -"வழித்துணையில்லை" என்று நாம் படுகிற துக்கம் சடக்கெனப்போம். *அத ஸோऽபயங்கதோ பவதி* என்னக்கடவதிறே; ஆனபின்பு, மற்றிலம் அரண்.

துயர்கெடும்கடிது அடைந்துவந்து அடியவர்! தொழுமின்*
உயர்கொள்சோலை ஒண்தடமணியொளி திருமோகூர்*
பெயர்களாயிரமுடைய வல்லரக்கர்புக்கழுந்த*
தயரதன்பெற்ற மரதகமணித்தடத்தினையே. (8)

ஒ.—எட்டாம்பாட்டில், திருமோகூரில் நின்றருளின ஆண்பிள்ளையான தசரதாத்மஜனை ஆச்ரயிக்க நம்முடைய துக்கங்களெல்லாம்போம் என்கிறார், [அடைந்து] - கிட்டி. [உயர் என்று தொடங்கி] உயர்ந்த சோலையாலும் அழகிய தடாகங்களாலும் அலங்க்ருதமான ஒளியையுடைய திருமோகூரிலே. [பெயர்கள் ஆயிரம் என்று மேலுக்கு] - சௌர்யவீர்யாதிகளுக்கு வாசகமான பல பெயர்களையுடைய வலியராக்ஷஸர்கள் புக்கழுந்தும்படி தயரதன் பெற்ற மரகதமணிபோலேயிருக்கிற தடாகத்தினை.

இ.—எட்டாம்பாட்டில், திருமோகூரிலே நின்றருளின ஆண்பிள்ளையான தசரதாத்மஜனை ஆச்ரயிக்க நம்முடைய துக்கமெல்லாம்போம் என்கிறார். [துயர்கெடும்கடிது] - நாம் அபேக்ஷியாதிருக்க துக்கமானது சடக்கெனத் தானே போம். [அடைந்துவந்து] - வந்தடைந்து; வந்துகிட்டி. [அடியவர் தொழுமின்] - "வழித்துணையில்லை" என்று க்லேசப்படுகிற நீங்கள் ஆச்ரயியுங்கோள். [உயர் கொள் இத்யாதி] - உயர்ந்த சோலைகளாலும் அழகிய தடாகங்களாலும் அலங்க்ருதமான ஒளியையுடைய திருமோகூர். ஒளி - ஸமுதாயசோபை. சோலையைக் கண்டால் வடிவை ஸ்மரிக்கலாயிருக்கும். தடாகங்களைக்கண்டால் வடிவில் ச்ரமஹரதையை நினைக்கலாயிருக்கும். [பெயர்கள் ஆயிரமுடைய] - ஈச்வரனுக்கு ரக்ஷணத்தாலே ஆயிரம் திருநாமம் உண்டாயிருக்குமாபோலே, இவர்களும் பாதகத்வத்தாலே அநேகம் பெயரையுடையராயிருப்பர்கள். "யஜ்ஞசத்ரு, ப்ரஹ்மசத்ரு" என்றிறே பெயர்கள். [வல்லரக்கர் புக்கழுந்த] - பெருமிடுக்கரான அஸுரர்கள் புக்கழுந்தும்படி, சக்ரவர்த்திபெற்ற நீலமணிபோலேயிருக்கிற தடாகத்தினை - அடைந்துவந்து - அடியவர் தொழுமின். "பதிதரு மருவாபீ வாரிவத் ஸர்வ போக்யம்" என்கிறபடியே அநுகூலர்க்கு ரக்ஷகமாய், "காகுத்ஸ்த்தபாதாலமுகேபதந்ஸ:" என்கிறபடியே

உகவாதார்க்கு நாசகமாயிறேயிருப்பது "மயா த்வம் ஸமநுஜ்ஞாதோ கச்ச லோகாநநுத்தமாந்" என்று பக்ஷியைப் போகவிட்டாரிறே.

ஈடு.—எட்டாம்பாட்டு. திருமோகூரிலே நின்றருளின ஆண்பிள்ளையான தசரதாத்மஜனை ஆச்ரயிக்க நம்முடைய துக்கமெல்லாம் போம் என்கிறார்.

துயர்கெடும்கடிது] - நாம் அபேக்ஷியாதிருக்கத் தன்னடையே சடக்கெனப்போம் நம்முடைய துக்கங்கள். [அடைந்துவந்து] - வந்தடைந்து; வந்துகிட்டி. [அடியவர்தொழுமின்] "வழித்துணையில்லை" என்று க்லேசப்படுகிற நீங்கள் ஆச்ரயியுங்கோள். [உயர் இத்யாதி] - உயர்ந்தசோலைகளாலும் அழகிய தடாகங்களாலும் அலங்க்ருதமான ஒளியையுடைய திருமோகூர். (ஒளி ஸமுதாயசோபை) சோலையைக்கண்டால் அவன்வடிவுக்கு ஸ்மாரகமாயிருக்கும் தடாகங்களைக்கண்டால் அவன்வடிவில் ச்ரமஹரதைக்கு ஸ்மாரகமாயிருக்கும் "வாசத்தடம்போல் வருவா"னிறே அவன்தான். [பெயர்களாயிரமுடைய] - ஈச்வரன் ரக்ஷித்துப் படைத்த பெயர்களோபாதி போருமாய்த்து இவர்கள் பரஹிம்ஸைபண்ணிப்படைத்த பெயர்; "யஜ்ஞசத்ரு, ப்ரஹ்மசத்ரு" என்றாப்போலேயிறே இவர்கள்பெயர். [வல்லரக்கர்புக்கழுந்த] - பெருமிடுக்கரான அஸுரர்கள் புக்கழுந்தும்படி. [தயரதன் இத்யாதி] - சக்ரவர்த்திபெற்ற நீலமணிபோலேயிருக்கிற தடத்தை - அடைந்துவந்து அடியவர் தொழுமின். *பதிதருமருவாபீ வாரிவத் ஸர்வபோக்யம்* என்கிறபடியே அநுகூலர்க்கு ரக்ஷகமாய், "காகுத்ஸ்த்தபாதால முகே பதந் ஸ;* என்கிறபடியே உகவாதார்க்கு நாசகமாயிறேயிருப்பது. *மயாத்வம் ஸமநுஜ்ஞாதோ கச்சலோகா நநுத்தமாந்* என்று பக்ஷியையும் வழிநடத்துமவனிறே.

மணித்தடத்தடிமலர்க்கண்கள் பவளச்செவ்வாய்*
அணிக்கொள்நால்தடந்தோள்தெய்வம் அசுரரையென்றும்*
துணிக்கும்வல்லரட்டன் உறைபொழில்திருமோகூர்*
நணித்துநம்முடைநல்லரண் நாம்அடைந்தனமே. (9)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், நமக்கு அரணான திருமோகூரை நாம் ப்ராபிக்கப் பெற்றோமென்று ஸ்வலாபத்தைப்பேசுகிறார். [மணித்தடத்து என்று தொடங்கி] - ச்ரமஹரமான திருவடிகளையும், மலர்போலேயிருக்கிற திருக்கண்களையும், பவளம்போலே சிவந்த வாயையுமுடையனும், தனக்குத்தானே ஆபரணமாய்ப் பெரிய நாலுதிருத்தோள்களையுமுடைய தைவமாய், ப்ரதிகூலரை என்றும் மாய்க்கும் ஸ்வபாவனும், மிகவும் மிடுக்கனுமானவன் நிரந்தரவாஸம்பண்ணுவதுஞ்செய்த பொழிலையுடைய திருமோகூர் ப்ரத்யாஸந்நமாய்த்து.

இ.—ஒன்பதாம்பாட்டில், நமக்கு அரணான திருமோகூரை நாம் ப்ராபிக்கப் பெற்றோமென்று ஸ்வலாபத்தைப்பேசுகிறார். [மணித்தடத்தடி] - தெளிந்ததொரு தடாகம்போலேயாய்த்துத் திருவடிகளிருப்பது. ச்ரமஹரமான திருவடிகளென்கை. [மலர்க்கண்கள்]-அந்தத் தடாகம் பூத்தாப்போலேயாய்த்துத் திருக்கண்கள் இருப்பது. [பவளச்செவ்வாய்] - பவளம் போலே சிவந்த திருவதரத்தையுடையனும். [அணிக்கொள் இத்யாதி] - தனக்குத்தானே ஆபரணமாய்ப் பெரிய நாலுதிருத்தோள்களையுமுடைய தைவம். அவன் வழித்துணையாம்போது ச்ரமஹரமான வடிவும் தன் உகப்புத்தோற்றின ஸ்மிதவீக்ஷணமுமுடையனாய், ஒரு கல்மதிளுக்குள்ளேபோமாபோலே அச்சங்கெடும்படியாய்த்துக் கொடுபோவது. [தெய்வம்] - விஜிகீஷையோடேயாய்த்துக் கொடுபோவது. இவனுக்கு எங்கே என்ன தீங்குவருகிறது என்னும் அதிசங்கையிலேலே, ஆசிலேவைத்த கையும் தானுமாய்ப்போகை. [அசுரரை என்றும் துணிக்கும் வல்லரட்டன்] - அஸுரவர்க்கத்தை என்றும் துணித்தொடுக்கும் பெருமிடுக்கன் நித்யவாஸம்பண்ணுகிற பொழிலையுடைய திருமோகூர். "ஸிம்ஹம்வர்த்திக்கும் முழைஞ்சு" என்னுமாபோலே. [நணித்து] - கிட்டிற்று. ப்ரத்யாஸந்நம். [நம்முடை நல்லரண்]-நமக்கு ரக்ஷகமான தேசத்தை. [நாம் அடைந்தனம்]- ரக்ஷாபேக்ஷையுடைய நாம் கிட்டப்பெற்றோம்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. நமக்கு அரணான திருமோகூரை நாம் ப்ராபிக்கப் பெற்றோமென்று ஸ்வலாபத்தைப் பேசுகிறார்.

[மணித்தடத்தடி] - தெளிந்த தடாகம்போலேயாய்த்துத் திருவடிகளிருப்பது. ச்ரமஹரமான திருவடிகளென்கை. [மலர்க்கண்கள்] - அத்தடாகம் பூத்தாப்போலேயாய்த்துத் திருக்கண்கள் இருப்பது. [பவளச்செவ்வாய்] - ப்ரவாளம்போலே சிவந்த திருவதரத்தையுடையனாய், தனக்குத் தானே ஆபரணமாயிருக்கும் பெரிய நாலுதிருத்தோள்களையுமுடைய தெய்வம். அவன் வழித்துணையாகப் போம்போது, ச்ரமஹரமான வடிவும் தன்னுகப்புத் தோற்றின ஸ்மிதவீக்ஷணாதிகளையும் உடையனாய், ஒரு கல்மதிளுக்குள்ளே போமாபோலே அச்சங்கெட்டுப் போம்படியாய்த்துத் தோள்நிழலிலே யொதுங்கினவிருக்கும்படி. விஜிகீஷையோடேயாய்த்துப் போவது; "வழியிலே யெங்கே யென்னப்ரதிபந்தகம் வருகிறதோ?" என்று ஆகிலேவைத்தகையுந் தானுமாயாய்த்துப்போவது. [அசுரரையென்றும் துணிக்கும் வல்லரட்டன்] - அஸுரவர்க்கத்தை யென்றும் துணிக்கும் பெருமிடுக்கன். [உறைபொழில் திருமோகூர்]-நித்யவாஸம்பண்ணுகிற பொழிலையுடைய திருமோகூர். "ஸிம்ஹம் வாத்திக்கும் முழைஞ்சு" என்னுமாபோலே. [நணித்து] - கிட்டிற்று - ப்ரத்யாஸந்நம். [நம்முடைநல்லரண்] - நமக்கு ரக்ஷகமான தேசத்தை. [நாம் அடைந்தனமே] - ரக்ஷகாபேக்ஷையுடைய நாம் கிட்டப் பெற்றோம்.

நாமடைந்தநல்லரண் நமக்கென்றுநல்லமரர்*
தீமைசெய்யும்வல்லசுரரை அஞ்சிச்சென்றடைந்தால்*
காமருபங்கொண்டு எழுந்தளிப்பான்திருமோகூர்*
நாமமேநவின்றுஎண்ணுமின் ஏத்துமின்நமர்காள்! (10)

ஆ.—பத்தாம்பாட்டில், ஸர்வரக்ஷகனுமிருக்கிறவன் எழுந்தருளியிருக்கிற திருமோகூரை ஆதரித்துநினைத்துவேத்துங்கோள், நமக்குபந்துக்களாயுள்ளார் என்கிறார். [நாமடைந்த என்று தொடங்கி] - நமக்கு நாம் பற்றின நல்லரண் என்று உபாயஜ்ஞரான அமரர், பாதகரான அஸுரரை அஞ்சிச் சென்று ஆச்ரயித்தால் அவர்களுடைய ரக்ஷணத்துக்கு வேண்டும் வடிவைக்கொண்டு புறப்பட்டு ரக்ஷிக்குமவனுடைய திருமோகூரினுடைய.

இ.—பத்தாம்பாட்டில், ரக்ஷகனானவன்வர்த்திக்கிற திருமோகூரை, நமக்கு பந்துக்களானுர் ஆதரித்து நினைத்து ஏத்துங்கோள் என்கிறார். [நாம் அடைந்த இத்யாதி] - நமக்கு நாம் ரக்ஷகமென்று அடைந்த நல்ல அரண் என்று. [நல்லமரர்] - தங்கள் ஆபத்துக்கு இவனே உபாயம் என்றிருக்கையாலே 'நல்லமரர்' என்கிறார். இதிறே அஸுரர்களிற்காட்டில் வ்யாவ்ருத்தி, பரஹிம்ஸையே யாத்ரையாயிருக்கிற அஸுரர்களுக்கு அஞ்சிவந்து சரணம்புக்கால். [காமருபங்கொண்டு இத்யாதி] - ரக்ஷணாநுருபமான வடிவைக்கொண்டு புறப்பட்டு ரக்ஷிக்குமவன் வர்த்திக்கிற திருமோகூரினுடைய. [காமரூபம்] - "நரஸ்யார்த்ததநூம் க்ருத்வா ஸிம்ஹஸ்யார்த்ததநூம் ததா" என்கிறபடியே. ஊரின்பேரை வாயாலே சொல்லி அத்தை அநுஸந்தித்து ப்ரீதிப்ரகர்ஷத்தாலே ஏத்துங்கோள் நம்முடையவர்கள்.

ஈடு—பத்தாம்பாட்டு, ஸர்வரக்ஷகன் வர்த்திக்கிற திருமோகூரை, நமக்குபந்துக்களானுர், ஆதரித்து நினைந்தேத்துங்கோள் என்கிறார்.

[நாம் அடைந்தவித்யாதி]-" நமக்கு ரக்ஷையாக நாம் கிட்டின நல்லரண்" என்று அவர்கள் பாகராயிருக்கும்படி. [நல்லமரர்] - தங்கள் ஆபத்துக்கு இவனே யுபாயமென்றறிகையாலே 'நல்லமரர்' என்கிறார். அசுரர்களிற்காட்டில் வ்யாவ்ருத்தியித்தனையுமிறே. [தீமைசெய்யும் இத்யாதி] -பரஹிம்ஸையேயாத்ரையாயிருக்கிற அஸுரர்களுக்கு அஞ்சி வந்து சரணம் புக்கால். [காமம் இத்யாதி]-ரக்ஷணாநுருபமான வடிவைக்கொண்டு புறப்பட்டு ரக்ஷிக்கிறவன் வர்த்திக்கிற

திருமோகூர். [நாமமே நவின்று] - ஊரின் பேரை வாயாலே சொல்லி யநுஸந்தித்து, ப்ரீதிப்ரகர்ஷத்தாலே ஏத்துங்கோள் நம்முடையவர்கள்.

ஏத்துமின் நமர்காள்! என்றுதான் குடமாடு
கூத்தனை*குருகூர்ச்சடகோபன் குற்றேவல்கள்*
வாய்ந்த ஆயிரத்துள் இவை வண்திருமோகூர்க்கு*
ஈந்தபத்திவை ஏத்தவல்லார்க்கு இடர்கெடுமே. (11)

ஒ.—நிகமத்தில், திருமோகூர்க்குக் கொடுத்த இத்திருவாய்மொழியை விரும்புவார்க்கு ஸகல துக்கங்களும் போமென்கிறார். [ஏத்துமின் என்று தொடங்கி] - தன்னுடைய திவ்யசேஷ்டிதங்களை உகந்திருப்பார் எல்லாரும்கண்டு வாழுங்கோளென்று தான் குடமாடுகையாகிற மநோஹாரி சேஷ்டிதங்களையுடையனானவனைக் குறித்து அந்தரங்கவ்ருத்திகளாய்க்கொண்டு நேர்பட்ட ஆயிரம் திருவாய்மொழியிலும்.

இ.—நிகமத்தில், திருமோகூர்க்குக் கொடுத்த இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லார்க்கு து:க்கநிவ்ருத்தி உண்டாம் என்கிறார். [ஏத்துமின்] - நம்சேஷ்டிதங்களை உகப்பார் எல்லாரும்கண்டு வாய்படைத்த ப்ரயோஜநம் பெறும்படி ஏத்துங்கோளென்று தானேசொல்லிக் குடக்கூத்தாடினவனை. [குருகூர்ச்சடகோபன் குற்றேவல்கள்] - ஆழ்வாருடைய அந்தரங்க வ்ருத்திகள். அவன் குடக்கூத்தை அநுஸந்தித்து இவர் வாசிகமான அடிமையிலே அதிகரித்தார். [வாய்த்த ஆயிரத்துள் இவை] - ஸர்வேச்வரனுக்கு நேர்பட்ட ஆயிரத்துக்குள்ளேயுள்ள இவை. [வண் திருமோகூர்க்கு ஈத்தபத்து] - விலக்ஷணமான திருமோகூர்க்குக்கொடுத்த பத்து. 'ரத்நஹாரீச பார்த்திவ:'' என்னுமாபோலே இப்பத்தின்நன்மையாலே இவை திருமோகூர்க்காயிருந்ததென்று கொடுத்தார். [இவை ஏத்தவல்லார்க்கு இடர்கெடுமே] - இப்பத்தை அப்யஸிக்கவல்லார்க்கு, சரீராவஸாநத்திலே ''வழித்துணையில்லை'' என்று க்லேசப்பட வேண்டாதபடி காளமேகம் வழித்துணையாம்.

ஈடு.—நிகமத்தில், பரமோதாரமான திருமோகூர்க்குக் கொடுத்த இத்திருவாய்மொழியை யப்யஸிக்கவல்லார்க்கு து:க்கநிவ்ருத்தியுண்டாம் என்கிறார்.

[ஏத்துமின்]-நம்சேஷ்டிதங்களை புகப்பார் எல்லாரும் கண்டு வாய்படைத்த ப்ரயோஜநம் பெறும்படி யேத்துங்கோளென்று, தான் சொல்லி, அதுக்கு விஷயமாகத் தான் குடக்கூத்தாடினவனை. [குருகூர்ச்சடகோபன் குற்றேவல்கள்] - ஆழ்வாருடைய அந்தரங்க வ்ருத்திகள். அவன் குடக்கூத்தை யநுஸந்தித்து இவர் வாசிகமான அடிமையிலே யதிகரித்தார். [வாய்த்த வாயிரத்துள்ளிவை] - ஸர்வேச்வரனுக்கு நேர்பட்ட ஆயிரத்துக்குள்ளே வாய்த்தவையாய்த்து இவை. [வண் திருமோகூர்க்கு ஈத்தபத்து] பரமோதாரமான திருமோகூர்க்குக் கொடுத்த பத்து. ''ரத்நஹாரீச பார்த்திவ:'' என்னுமாபோலே, இத்திருவாய்மொழியில் இனிமையாலே திருமோகூர்க்காயிருக்தைவென்று கொடுத்தார். [இவையேத்தவல்லார்க்கு இடர்கெடும்] - இப்பத்தை யப்யஸிக்க வல்லார்க்கு, சரீராவஸாநத்தில், ''வழித்துணையில்லை'' என்று க்லேசப்படவேண்டாதபடி காளமேகம் வழித்துணையாம்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

இரண்டாந் திருவாய்மொழி—கெடுமிடர் : ப்ரவேசம்

ஒ.—இரண்டாம் திருவாய்மொழியில், கீழில் திருவாய்மொழியிலே தமக்கு வழிகொடுபோகைக்கு நல்லதுணையைப் பெற்ற ஆழ்வார், "தமக்கு ப்ராப்யதேசம் ஏதோ?" என்று ஆராய்ந்து ஸாம்ஸாரிக ஸகலது:க்கங்களுமின்றிக்கே நிரதிசயபோக்யமாய், நித்யஸூரிகளுக்குங்கூட ஸ்ப்ருஹணீயமாய், தாமக்கு எல்லா அடிமையும் செய்கைக்கு யோக்யமாயிருந்துள்ள திருவனந்தபுரத்தை ப்ராப்யதேசமாக அத்ய வஸித்து, அங்கேபோய் ஸர்வசேஷவ்ருத்தியும் பண்ணவேணுமென்று அநுகூலஜநங்களோடேகூடப் போகையிலே உத்யோகிக்கிறார்.

இ.—இரண்டாம் திருவாய்மொழியில், கீழில் திருவாய்மொழியிலே தமக்கு வழிகொடு போகைக்குத் துணைபெற்ற ஆழ்வார், "தமக்கு ப்ராப்யதேசம்ஏதோ?" என்று ஆராய்ந்து, "திருவனந்த புரமே ப்ராப்யம்" என்று அறுதியிட்டாராய், ஸர்வேச்வரன் தான் வந்து விரும்பி வர்த்திக்கும்படியான போக்யதையாலும், அவன் நித்யவாஸம் பண்ணுகையாலே ஸாம்ஸாரிக துரிதம் தட்டாமையாலும், நித்யஸூரிகளும் இங்கே வருகையாலே அடியார்கள்குழாங்களும் இங்கே உண்டாய் அத்திரளிலே சென்று புகலாம்படியிருக்கையாலும், அவ்வருகே போக்குண்டானும் அவர்களோடே போகலாயிருக்கையாலும், வழிபோமிடத்தில் "ஹார்த்தாநுக்ருஹீத:" என்னும்படியாலே ஆதிவாஹிகரில் தலைவனாய்த் தன்பேறாகக் கொண்டுபோவான் ஒருவனாகையாலும், அங்குப்போனால் பெறக்கடவ அடிமையை "கடைத்தலை சீய்க்கப்பெற்றால் கடுவினை களையலாம்" என்று இங்கே பெறலாயிருக்கையாலும் திருவனந்தபுரமே ப்ராப்யமென்று அறுதியிட்டு, அங்கேபோய்ப் புகுகைக்கு அநுகூலஜனங்களோடே கூடப்போகைக்கு உத்யோகிக்கிறார். உகந்தருளின நிலங்களிற்காட்டில் திருவனந்தபுரத்தை ப்ராப்யமென்கைக்கு அடி, "கடைத்தலை சீய்க்கப்பெற்றால்" என்று அடிமைசெய்யலாயிருக்கையாலும், "அமரர்கோனர்ச்சிக்கின்று அங்ககப்பணி செய்வர் விண்ணோர்" என்று நித்யஸூரிகளும் இங்கே வருகையாலும்: இவர் ஒன்றை ஆதரித்தால் அதுக்குத் தக்க பாசுரமிட்டுச் சொல்லுமித்தனையிறே.

ஈடு.—"'ஒருகுற்சுற்றம்' என்கிற திருமொழியிலே பலதிருப்பதிகளையும் அருளிச்செய்த இதுக்குக் கருத்தென்?" என்று சீயர் பட்டரைக்கேட்க, "பிறந்தகத்தில்நின்றும் புக்ககத்துக்குப்போம் பெண்பிள்ளைகள் பந்துக்களிருந்தவிடமெங்கும் கண்டு வினவப்போமாபோலே, ப்ராப்யபூமியணித்தானவாறே திருப்பதிகள்தோறும் புகுகிறார்" என்றருளிச்செய்தார். இவரும் அப்படியே திருப்புளிங்குடியிலேபுகுவது, திருக்காட்கரையிலே புகுவது, திருமூழிக் களத்திலேபுகுவது, திருநாவாயிலேபுகுவது, திருக்கண்ணபுரத்திலேபுகுவது, திருமோகூரிலே புகுவது. திருவனந்தபுரத்திலே புகுவதாகிறார். ப்ராப்யபூமியேறப் போவதாக ஒருப்பட்டு, நடுவுண்டான ப்ரதிபந்தகங்களைப்போக்கி வழிகொடுபோய்விடுகைக்குக் காளமேகத்தைத் துணையாகப்பற்றினாராய் நின்றது - கீழ்; "அவ்வளவுதான் நமக்குப்போகவேணுமோ, இங்கே (நமக்கு) திருவனந்தபுரம் ப்ராப்யமாகவுண்டாயிருக்க?" என்று திருவனந்தபுரத்தை ப்ராப்யமாக அத்யவஸித்து; அத்தேசமாகிற இதுதான், "வாசமே கமழுஞ்சோலை வயலணி யனந்தபுர" மாகையாலே, அவன் தனக்குவிரும்பிவர்த்திக்கவேண்டும்படி நிரதிசய போக்யமுமாய், அவன்வந்து வர்த்திக்கையாலே ஸம்ஸார துரிதமும் தட்டாதவிடமு மாய், இச்சரீரஸம்பந்தமற்று அவ்வருகுபோனால் செய்யுமடிமையை ருசி பிறந்தபோதே இங்கேசெய்யலாம்படியுமாய், இனித்தான் 'அமரர்கோனர்ச்சிக்கின்றங்ககப்பணிசெய்வர் விண்ணோர்" என்கிறபடியே நித்யஸூரிகளும் வந்தடிமைசெய்கிற தேசமாகையாலே "அடியார்கள்குழாங்களை - உடன்கூடுவதென்றுகொலோ?" என்று ஆசைப்பட்டபடியே அவர்களோடேகூடவுமாய், அவ்வருகுபோக வேண்டிற்றாகிலும் "பெரியோரை யொருகாலும் பிரிகிலேன்" என்கிறபடியே அவர்களோடேபோகவுமாயிருக்குமிறே. உகந்தருளின நிலங் களில் நிலைதான் - முதலிலே பகவத்விஷயத்தில் ருசியைப்பிறப்பிக்கைக்கு உடலுமாய், ருசி பிறந்தால் *யே யதா மாம்ப்ரபத்யந்தே* என்கிறபடியே ஸௌலப்யத்துக்கு எல்லைநிலமுமாகையாலே

உபாயபாவமும் பூர்ணமாய், ப்ராப்யபூமியில் கொடுபோமிடத்தில், ஆதிவாஹிககணத்தில் ப்ரதாநனுன தானே *ஹார்த்தாநுக்ருஹீத:* என்கிறபடியே வழியில் ப்ரதிபந்தகங்களைப்போக்கிக் கொடுபோகைக்கும் முற்பாடனாகைக்கும் உடலாய், ஸம்ஸாரபந்தமற்று அவ்வருகேபோனால் செய்யும்அடிமையை விரோதிகிடக்கச்செய்தே காதாசித்கமாகச்செய்கைக்கும் உடலாயிருக்கு மிறே. ஆக, "ருசியைப்பிறப்பிக்கைக்கும் உடலாய், ருசிபிறந்தபோதே யுபாயமாகைக்கும் உடலாய், ஜ்ஞாநபக்திவர்த்தகங்களுமாய், விரோதியும்கிடக்கச்செய்தே யடிமைசெய்கைக்கும் உடலாயிருக்கையாலே, திருவனந்தபுரமே பரமப்ராப்யம்" என்றறுதியிட்டு, நம்மோடு ஸம்பந்தமுடைய அநுகூலஜநங்களடங்க அங்கேபோய்த் திரளுங்கோளென்கிருர். இதுதான் அல்லாததிருப்பதிகளுக்கும் ஒவ்வாதோ? "யாவரும் வந்துவணங்கும்பொழில் திருவாறன் விளையதனை மேவிவலஞ் செய்து கைதொழக்கூடுங்கொலென்று மென்சிந்தனையே" என்று இத்யாதிகளுமுண்டேயென்னில்? - எல்லாவற்றுக்கும் எல்லாமுண்டாயிருந்தாலும் ஒரோ விடங்களிலே ஓரநுஸந்தாநவிசேஷங்களோடிறல் அதுக்குச்சேர வார்த்தைசொல்லு மித்தனை யிறே.

கெடும்இடராயவெல்லாம் கேசவாவென்ன* நாளும்
கொடுவினைசெய்யுங் கூற்றின்தமர்களுங்குறுககில்லார்*
விடமுடையரவில் பள்ளிவிரும்பினன் சுரும்பலற்றும்*
தடமுடைவயல் அனந்தபுரநகர்புகுதும்இன்றே. (1)

ஒ.—முதற்பாட்டில், ப்ராப்யமான திருவநந்தபுரத்துக்குப் போகைக்குப் ப்ரதிபந்தக கர்மங்களெல்லாம் போம்: நமக்கு இனிதாக "கேசவா" என்னும் இத்திருநாமத்தைச் சொல்லிக்கொண்டு அங்கே போய்ப் புகுருவோம் வாருங்கோள் என்று, ஸ்ரீவைஷ்ணவர்களை அழைக்கிருர். [கேசவன்] - கேசிஹந்தா. [நாளும் கொடுவினைசெய்யும் கூற்றின்தமர்களும் குறுககில்லார்] - என்றும் கொடிய ப்ரவ்ருத்திகளைப்பண்ணி நலியக்கடவ யமபடரும் கிட்டமாட்டார். [விடமுடையரவு என்றுமேலுக்கு] - "படர்கொள்பாம்பணைப் பள்ளிக்கொள்வான்" என்று ஆசைப்பட்டாப்போலே ப்ரதிகூலர்க்கு வந்து அணுகவொண்ணுதபடி விஷத்தையுடைய திருவநந்தாழ்வான்மேலே ஆதரித்துக் கண்வளர்ந்தருளு கிறவனதாய், "ப்ராப்யதேசம்" என்று தெரியும்படி மதுபாநமத்தமான வண்டுகளாலே அலற்றவும் பட்டுத் தாபத்ரயத்தைப் போக்கவல்ல பொய்கைகளோடு கூடின வயலாலே அணைந்திருந்துள்ள திருவநந்தபுரத்திலே இச்சை பிறந்த இன்றே போய்ப்புகுவோம்.

இ.—முதற்பாட்டில், ப்ரீதியாலே திருநாமத்தைச்சொல்ல, திருவநந்தபுரத்துக்குப் போவார்க்கு ப்ரதிபந்தகங்களெல்லாம் கெடும்: அங்கேபோய்ப் புக வாருங்கோள் என்று அநுகூலரை அழைக்கிருர். [கெடும் இடராயவெல்லாம்] - இடர் என்று பேர்பெற்றவை யடங்கப்போம். "பாபேகுருணி குருணி" என்று பாபாநுருபமாக ப்ராயச்சித்தம் பேதித்திருக்கும்; திருநாமத்துக்கு அங்ஙன் ஒருநியதி இல்லை. "மேருமந்தரமாத்ரே஽பி - நச்யதி" என்கிறபடியே ஸகலபாபங்களும் போம். திருநாமங்கள்தான் பல வேணுமோ? என்னில்,—[கேசவாவென்ன] - ஒருவிரோதியைப் போக்கினபடியைச்சொல்ல விரோதி வர்க்கமாகப் போமென்னுதல். ப்ரசஸ்தகேசனென்றால், "கேசவ:க்லேசநாசந:" என்கிறபடியே ஸாம்ஸாரிக துரிதங்களெல்லாம் போமென்னுதல். "பாபேந்தநாக்நி:" என்னக்கடவதிறே. [என்ன] - அர்த்தாநுஸந்தாநம் வேண்டா; உக்திமாத்ரமே அமையும் பாபவிமோசனத்துக்கு, என்கிறது. [நாளும் இத்யாதி]- நாள்தோறும் க்ரூரமான வ்ருத்தியைப்பண்ணும் யமபடரும் கிட்டமாட்டார். "ஸ்வபுருஷம்" இத்யாதி, "தஸ்யஜ்ஞவராஹஸ்ய" இத்யாதி. [கில்லார்] - சக்தரல்லர். எரிகிறநெருப்பிலே ஏறச் சக்தருண்டோ? [விடமுடை இத்யாதி] - இனிமேல் ப்ராப்யத்தைச்சொல்லுகிறது. [விடமுடை] - விரோதிவர்க்கத்துக்குக் கிட்டவொண்ணுதபடியிருக்கை. [அரவு] - ஜாதிப்ரயுக்தமான மென்மை குளிர்த்தி நாற்றங்களை யுடைத்தாயிருக்கை [பள்ளிவிரும்பினன்] - பர்யங்கவித்யையிற் சொல்லுகிறபடியேயாய்த்து அங்குக் கண்வளருவது. "பாதேநாத்யாரோஹதி" என்னலாம்படி யாய்த்திருப்பது. [சுரும்பலற்றும்] "ஏதத் ஸாம

காயங்காஸ்தே" என்று முக்தர் களித்து வர்த்திக்குமாபோலேயாய்த்து, அவ்வூரில் திர்யக்குக்களும் வர்த்திக்கிறபடி. [தடமுடை வயல்] - ஸாம்ஸாரிகமான தாபத்தைப் போக்கும் விரஜாதிகளைப்போலே ச்ரமஹரமாயாய்த்துத் தடாகங்களிருப்பது. [அனந்தபுரநகர்] - கலங்காப் பெருநகரம் போலன்றியே, இவ்வுடம்போடேகிட்டி அநுபவிக்கலாம் தேசம். [புகுதும் இன்றே] - "க்ராமத்தே புகுகிறோம்" என்று ஆறியிருக்குமதன்று; இச்சைபிறந்த இன்றே போய்ப்புக வாருங்கோள்.

௫.—முதற்பாட்டு. ப்ரீதியாலே திருநாமத்தைச்சொல்ல, திருவனந்தபுரத்துக்குப் போகைக்கு விரோதியானவையெல்லாம்போம்; அங்கே புகவாருங்கோள் என்று அநுகூலரை யழைக்கிறார்.

[கெடுமிடராயவெல்லாம்] - இடரென்று பேர்பெற்றவையெல்லாம் கெடும். ப்ரஹ்மஹத்யைக்கு ப்ராயச்சித்தமாக த்வாதசவார்ஷிகம் சரித்தால் மற்றொருபாபத்துக்கு மற்றொருப்ராயச்சித்தம்பண்ணவேண்டியிருக்குமிறே; இங்கு அதுவேண்டா; *பாபேந்தநாக்நி:* என்கிறபடியே, ப்ராயச்சித்தமும் பலவாயிருக்குமோவென்னில்?—[கேசவாவென்ன] - அவன் ஒருவிரோதியை போக்கினபடிசொல்ல, விரோதியென்று பேர்பெற்றவையெல்லாம் நசிக்கும்; ராவணனொருவனும் ப்ராதிகூல்யம்பண்ண ராக்ஷஸஜாதியாக நசித்தாப்போலே, [எல்லாம்] - அநுபவிக்கக்கடவையும் முன்பேதொடங்கி அநுபவிக்கிறவையும் நசிக்கும்; "போயபிழையும் புகுதருவானின்றனவும்." [என்ன] - உக்திமாத்ரமே இதுக்கு வேண்டுவது; கார்யத்தில்வந்தால் ஆர்த்தக்ரியாகாரியாயே தலைக்கட்டும்; அன்றிக்கே, ப்ரசஸ்தகேசனாயிருக்கும் இருப்பைச்சொல்ல ஸம்ஸாரதுரிதங்கள் அடங்கலும்போம் என்னுதல், *கேசவ: க்லேசநாசந:* என்கிறபடியே; அன்றியே, ப்ரஹ்மருத்ரர்களுக்கு நிர்வாஹகனென்னுதல்; ஆனாலும் சொல்லிப்போருமது முதற்பொருளே. [நாளும் இத்யாதி] - நாள்தோறும் கொடிய செயலைச் செய்யக்கடவ ம்ருத்யுவுக்கு அந்தரங்கராயிருப்பாரும் வந்துகிட்டப்பெறார்கள். யமனுக்கு அந்தரங்கரென்று ஸர்வேச்வரனுடையார்பக்கலிலேவந்துகிட்டவோ? *ஸ்வபுருஷம்* இத்யாதி; *தஸ்யஜ்ஞவராஹஸ்ய* இத்யாதி - *ப்ரணமம்யேபிகுர்வந்தி* என்றிறே அவன்வார்த்தையும். "இறைஞ்சியும் சாதுவராய்ப்போதுமின்களென்றான்"- அவர்களைக்கண்டால் "நாம் கடவோமல்லோம்" என்றுபோராதே, கிட்டியநுவர்த்தித்துப் போரும்படிகோள்! *ஸ்வதருஷம்*-யமன், தன்பரிகரம் கையும்பாசமும்முமாய்ப்போருகிறபடியைப்பார்த்து, பாகவதர்களும் அல்லாதாரும் கலந்திருப்பர்கள்; 'பாகவதர்கள்முன்னே இவன்கிட்டிச்செய்வதென்?" என்று துணுக்கென்று சொல்லுகிறான். *ஸ்வபுருஷம்* - தனக்கு அந்தரங்கனாயிருக்கையாலே, தன்மேன்மை சொல்லவேண்டுமிடத்திலே தாழ்வுசொல்லுகிறானாய்த்துத் தவிரவொண்ணாமையாலே. *அபி விக்ஷ்ய* இவன்தான் காலிரண்டோலைமறுக்கத் தரமுடையனாயிருக்குமாய்த்து; சொற்செல்லுகைக்காக இப்படியிருக்கிறவனைப் பார்க்கிறபார்வையிலே கார்யகௌரவமெல்லாம் தோற்றும்படி பார்த்தானாய்த்து. *மதுஸூதப்ரபந்நாந்*- "இவர்களை நலிந்தால்அவனுக்கென்?" என்ன; இவர்கள் அவன்பக்கலிலே ந்யஸ்தபரராயிருப்பர்கள்; இவர்களுக்கு வந்ததொன்றுக்கு அவன் மார்வுதட்டிக்கொண்டு வரும். உன்னுடையோமாய்ப்போகிற எங்களுக்கு வேறுசிலர்க்கு அஞ்சவேண்டும்படி இருந்ததாகில் நீ பின்னை யாராய் இவ்விருப்பிருந்துவைகிறது? என்ன,— *ப்ரபுரஹ மந்யந்ருணாம்* - எனக்குஅடைத்தவிஷயத்தில் சொற்செல்லாதாகிலன்றோ எனக்குக் குறையாவது? நாம் கடவோமல்லாதவிஷயத்திலே நாம் ஆராயாநிற்கவோ? இதுதன்னைத் திருமழிசைப்பிரானும் அருளிச்செய்தாரிறே - "திறம்பேன்மின்" இத்யாதி. "அவன் றமரெவ்வினையர்" இத்யாதி. அவர்கள் தங்களிலே சொல்லிருக்கும் வார்த்தையிறே இது. "மாறுசெய்த" இத்யாதி - சக்ரவர்த்திதிருமகனார் பேரை இவன்ஆராயவோ? ஒருதிருவேட்டையிலே பட்டர் திருவூற்றங் கரையிலே பேரோலக்கமாகவிருக்க, "ஸந்த்யையானது" என்று சிலர் விண்ணப்பஞ்செய்ய, "நாம் பெருமாளுழலிலே துவக்குண்டு இன்றொருநாளும் கர்த்தவ்யத்திலே அல்பம் தாழ்கின்றோமென்றால் இது குற்றமாக யமன் கேட்கவோ? ஒருராஜா இருந்து நாட்டுக் கணக்குக் கேட்டுக்கொடு வாராநின்றால் ராஜாவுக்கு அந்தரங்கனாயிருப்பானொருவன்பேரை வாசித்தால், 'ஓங்காண்! அதுகிடக்க; மேற்சொல் என்றால் பின்னையொருகாலமும் அப்பே

ரெடுத்து வாசிக்கப்பெறுதுகாண்'' என்றாராம்; இந்தப்ரஸங்கத்திலே, ''உனக்காகித் தொண்டுபட்டநல்லேனை வினைகள்நலியாமைநம்பு நம்பீ'' என்றருளிச்செய்தார். ''வள்ளலே உன்தமர்க்கென்றும் நமன்றமர்கள்ளர்போல்'' இருவர் ஒருவழிப் போகப்பெறார்கள். ''கொடுமைசெய்யும்'' இத்யாதி-விழுக்காடறியாதே வந்துகிட்டில் செய்வதென்னென்னில், - ''தடவரை'' யித்யாதி - திருவாழியையிட்டுத் தோளைக்கழித்தல், ஓர் அப்பாலே தலையையுருட்டுதல் செய்யுமத்தனை. வாணன்பட்டது படுதல், ராவணன்பட்டது படுதல் செய்யுமத்தனை. ''வேண்டாமை நமன்றமர் என்தமரை வினவப்பெறுவாரலரென்று உவகேமாண்டான்'' - யமபடர் நம்முடையாரை வினவப்பெறார்கள். அதுக்கடியென்? ''வேண்டாமை''. ஊர்க்கணக்கரோ கோயிற்கட்டணத்திலேபுக்குப் படுக்கைப்பற்று ஆராய்வான்? ''செய்தாரேல் நன்றுசெய்தார்'' என்கிறவன் இவர்கள்கையில் காட்டிக்கொடானே. ''நின்னுமம்கற்ற வாவலிப்புடைமை - நமன்றமர்தலைகள்மீதே-நாவலிட்டுழிதருகின்றோம்.'' *ப்ரபவதி ஸம்யமநே*-உங்களைநியமிக்கப்போந்த என்னைப்போலல்லகாண் என்னை நியமிக்குமவன்; இவ்வோலக்கத்திலே வந்தாலிறே நான் ஆராய்வது? அவன்எங்குமுளனிறே. [நாளும்கொடுவினை செய்யுங்கூற்றின் தமர்களுங்குறுககில்லார்] - பழையதாக நலிந்துபோந்த வாஸநைகொண்டு பகவத் விஷயத்திலே முதலடியிட்ட இன்றும் கிட்டவோ? [குறுககில்லார்] - ''*நிர்த்தோஷம் வித்தி*-சாவதுபிறப்பதாய்ப் போந்தவனுவது, பரிஹாரமில்லாத தோஷங்களையுடையனுவது: ஆனாலும் அவனை நிர்த்தோஷனாகவே புத்திபண்ணுவது. தோஷங்களுண்டாயிருக்க இப்படி நினைக்கவேண்டுவானென்னென்ன? *ப்ரபாவாத்* - இவனையோ பார்ப்பது? இவன்பற்றினவனைப் பார்க்கவேண்டாவோ? இவனையாராய்கையாவது - பகவத் ப்ரபாவத்தைப் பரிச்சேதிக்கையாமிறே. [கில்லார்] - எரிகிற நெருப்பிலே கிட்டுவாருண்டோ? நியாமகனுடைய நியமநவாக்யங்கொண்டு கிட்டாமையல்லவிறே; தந்தாமை வேண்டாதாருண்டோ? [விடமுடையித்யாதி] - இனிமேல் ப்ராப்யத்தைச் சொல்லுகிறது. [விடமுடை] - செந்தெங்குக்கு முட்கட்டினாப்போலே ஒருவர்க்கும் முகங்கொள்ளவொண்ணாதிருக்கை; ''வாய்ந்தமதுகைடபரும் வயிறுருகிமாண்டார்'' - விரோதிகளாய்க்கிட்டினார் முடிந்துபோம்படியா யிருக்கும். [அரவு] - ஜாதிப்ரயுக்தமான மென்மை குளிர்த்தி நாற்றங்களையுடைத்தாயிருக்குமிறே. [பள்ளிவிரும்பினான்] - பர்யங்கவித்யையிற் சொல்லுகிறபடியேபாய்த்து அங்குக் கண்வளர்ந்தருளுகிறது. *பாதேநாத்யாரோஹதி* என்று துகைத்தேறலாயாய்த்து இருப்பது. [சுரும்பலற்றும்] - *ஏதத் ஸாம காயந்நாஸ்தே* என்று முக்தர்செய்யுமவற்றை வண்டுகள்செய்யாநிற்கும். [தடமுடைவயல்] விரஜை மற்றையவற்றுக்குப் போலியா யிருக்குமாய்த்துத் தடாகங்கள். [அனந்தபுரநகர்] - கலங்காப்பெருநகரத்துக்குப் போலியாயிருக்கும்- [புகுதுமின்றே] - ''க்ரமத்திலேபுகுகிறோம்'' என்றுஆறியிருக்குமதன்று; இச்சைபிறந்தஇன்றே போய்ப்புகுவோம்.

இன்றுபோய்ப்புகுதிராகில் எழுமையுமேதஞ்சாரா*
குன்றுநேர்மாடமாடே குருந்துசேர்செருந்திபுன்னை*
மன்றலர்பொழில் அனந்தபுரநகர்மாயன்நாமம்*
ஒன்றுமோராயிரமாம் உள்ளுவார்க்குஉம்பரூரே. (2)

ஒ.—இரண்டாம்பாட்டில், ப்ரதிபந்தகங்கள் போகைக்கு ஒருதிருநாமம் சொல்ல அமையும்; அது ஒன்றுமே ஆயிரம் ப்ரகாரத்தாலே ரக்ஷகமாம் என்கிறார். [இன்று என்றுதொடங்கி] - போவோமென்று இச்சைபிறந்த இன்றேபோய்ப் புகுவுதிகோளாகில் ஒருநாளும் ஒருதுக்கமும் ஸ்பர்சியா. [குன்று என்றுதொடங்கி] - குன்றையொத்த மாடங்களையும், அவற்றினருகே பரஸ்பரம் சேர்ந்த குருந்து முதலான வ்ருக்ஷங்களையும் மன்றிலே அலராநின்றுள்ள பொழிலையுமுடைய திருவநந்தபுரமாகிற நகரத்தில் ஆச்சர்யபூதனை எம்பெருமானுடைய திருநாமம். [உள்ளுவார்க்கு உம்பரூரே] - ஆராய்வார்க்குத் திருவநந்தபுரமே ப்ராப்யபூமி.

இ.—இரண்டாம்பாட்டில், ப்ரதிபந்தகங்கள் போகைக்குச்சொன்ன திருநாமங்கள்தானே ஒரோவொன்றே ஆயிரம் ப்ரகாரத்தாலே ரக்ஷகமா மென்கிறார். [இன்றுபோய்ப் புகுதிராகில்] - போவோமென்று இச்சைபிறந்த இன்றே போய்த் திருவனந்தபுரத்தே சென்று புகுவீராகில். இதரவிஷய விரக்தி வேண்டாவோ ? இச்சாமாத்ரமே அமையுமோ ? என்னில்,—"யதஹரேவ விரஜேத் ததஹரேவ ப்ரவ்ரஜேத்" என்னவேண்டுவது, அதிக்ருதாதிகாரமானவற்றுக்கு; ஸர்வாதிகாரமுமாய், ப்ராப்தமுமாய், முன்பே இவனையிச்சித்து இவன்இச்சை பார்த்திருக்கும் விஷயத்துக்கு, இச்சாமாத்ரமே வேண்டுவது. அப்ராப்த விஷயத்துக்கிறே அதிகாரிஸம்பத்தி வேண்டுவது ? [எழுமையும் ஏதம்சாரா] - காலதத்த்வமுள்ளதனையும் ஒருவ்யஸநம் வாராது. [சாரா] - அவன் திருமுகங்கொண்டு தவிர்க்கவேண்டா ; இவ்வாச்ரயம் நமக்கு இருப்பன்று என்று, ஸர்வது:க்கமும் கழலும். ஏதத்தைவிளைத்தாலும் விடவொண்ணாதபோக்யதையைச் சொல்லுகிறது:—[குன்றுநேர் இத்யாதி] - குன்றேயொத்த மாடங்கள். மலைகளைச் சேரவைத்தாற்போலே யாய்த்து மாடங்கள் இருப்பது. அதினருகே அம்மாடங்களுக்கு நிழலாம்படியாய்த்துக் குருந்தமிருப்பது. அதனோடே சேர்ந்த செருந்தி புன்னை என்னுதல்; அங்யோந்யம் சேர்ந்தவையென்னுதல். ஊர்ச்சுற்றிலே அலர்ந்துகிடக்கும்படியான பொழிலையுடைய ஊர். இத்தால் - உகந்தருளின நிலங்களில் ஸ்தாவரங்களும் ஜ்ஞாநாதிகரோபாதி உத்தேச்யமென்கை. [அனந்தபுரநகர்மாயன்] - நித்யஸூரிகள் ஓலக்கங்கொடுக்க மேன்மையோடேயிருக்கும் வைகுந்தமாநகர்போலன்றியே தாழ்ந்தார்க்கு முகங்கொடுக்கும் சீலாதிகள் வர்த்திக்கிற ஊர். [மாயன்] - தன்மேன்மை பாராதே, ஸம்ஸாரிகள் சிறுமைபாராதே முகங்கொடுக்கும் ஆச்சர்யபூதன். [நாமம் ஒன்றும் ஓராயிரமாம்]-ஒருநாமமே அநேகமாம்படி ரக்ஷகமாம்; "உலகேழளிக்கும் பேராயிரம் கொண்டதோர் பீடுடையன்" என்கிறபடியே. [உள்ளுவார்க்கு உம்பருரே] - இந்நீர்மையையும் ப்ரயோஜநத்தையும் அநுஸந்திப்பார்க்கு இதுதானே பரமபதமென்னுதல், அவர்களுக்கு அநந்தரம் ப்ராப்யம் பரமபதமென்னுதல். அவன் நித்யவாஸம் பண்ணுகையாலேயிறே பரமபதம் உத்தேச்யமென்கிறது.

ஈடு.—இரண்டாம்பாட்டு, ப்ரதிபந்தகங்கள் போகைக்குச் சொன்ன திருநாமந்தானே ஆயிரம்ப்ரகாரத்தாலே ரக்ஷகமாமென்கிறார்.

[இன்றுபோய்ப்புகுதிராகில்] -போவோமென்று இச்சைபிறந்த இன்றே போய்ப் புகுவுதி கோளாகில். இதரவிஷய விரக்திதொடக்கமான அதிகாரிஸம்பத்திவேண்டாவோ? இச்சமாத்ரமே யமையுமோ? வென்னில் *யதஹரேவ விரஜேத் ததஹரேவ ப்ரவ்ரஜேத்* என்கிற படியே அவை வேண்டுவது, அதிக்ருதாதிகாரமான விஷயங்களுக்கு; ஸர்வாதிகாரமுமாய் ப்ராப்தமுமாய் முன்பே இவனையிச்சித்து இச்சைபார்த்திருக்கும் விஷயத்துக்கு இச்சாமாத்ரமே வேண்டுவது: விஷயாநுரூபமாக அதிகாரிஸம்பத்தி இவனால் ஸம்பாதிக்க முடியாமையாலும் ஆட்பார்த்துழிதருமவனாகையாலும் வேண்டா. *யதி வா ராவணஸ் ஸ்வயம்* என்னுமவனிறே; விபீஷணனென்று பேராய், ராவணனாயிருந்தானென்று மீளாதேயிடீர். அதுவென்? அங்குநின்றும் வந்தானொருவனைக் கைக்கொண்டதாகவமையாதோ வென்ன வேண்டா; குறைவாளர்க்கிறே நம்மால் அபேக்ஷையுள்ளது; அதுள்ளது ராவணனுக்கிறே. *விபீஷணஸ்து தர்மாத்மா* என்று தனக்கென்ன ஒருகைம்முதலுண்டாகையாலே நாளைவரவுமாம்: அரைக்ஷணம் கிட்டாவிடில் நாசமாயிருக்கிறது அவனுக்கேயன்றோ? ஆனபின்பு, அவனையன்றோ முற்படக் கைக்கொள்ளவேண்டுவது? இனித்தான் இவனைக் கைக்கொண்டால், இவனும் இவன்தன்னோடே நால்வருமாய்ப்போம்; ராவணனைக் கைக்கொண்டால், துறைப்புக் கூடாகக் கைக்கொண்டதாகலாம்; மஹாராஜரொருவரையும் அங்கீகரிக்க வாநரஜாதியாக வாழ்ந்துபோனாப்போலே. [எழுமையுமேதஞ்சாரா] - ஒருகாலமும் பொல்லாங்குவந்து கிட்டாது. [சாரா] - அதுக்கு அவன்தான் நினைப்பிடவும் வேண்டா. "நம்மெனாதே கைவிட்டோடித் தூறுகள்பாயந்தன" என்கிறபடியே "நமக்கு இவ்விடம் ஆச்ரயமல்ல" என்று தன்னடையேயஞ்சு கிட்டாது: ராஜகுலஸம்பந்தத்தாலே விட்டோடிப்போம்; "வானோ மறிகடலோ" இத்யாதி. [குன்றுஇத்யாதி] - ஏதம் சார்ந்தாலும் சென்று புகவேண்டும்படி காணும் ஊரின்ஐச்வர்யமும் போக்யதையும். மலைகளைப் பிடைபடத்தொடுத்து நெருங்க வைத்தாற்போலேயிருக்கிற மாடங்களும், அதினருகே அம்மாடங்களுக்கு நிழல்செய்தாப்போலேயிருக்கிற குருந்து, அத்தோடே சேர்ந்த செருந்தி, புன்னையென்னுதல்; அந்யோந்யம் சேர்ந்

தவையென்னுதல். [மன்றலர்பொழில்] ஊர்ச்சுற்றிலே யலர்ந்துகிடக்குமாய்த்துப் பொழில்கள். அன்றியே, மன்றென்று - மன்றலாய் மன்றலென்று-பரிமளமாய், அலருகையாவது - பரம்புகையுமாய், பரிமளம் பரம்பாநின்றுள்ள பொழிலென்றுமாம். மன்றலை-மன்று என்று குறைத்துக்கிடக்கிறது. [குன்றுநேர்மாடம்] - "பின்னை திருக்கண்ணமங்கையாண்டானும் பட்டரும் உள்ளேபுக்கு ப்ரதக்ஷிணம்பண்ணாநிற்க நான் ஸேவித்துப் போனேன்: அல்லாதாரெல்லாம் விரைந்து சடக்கென வாராநிற்க, இவர்கள் திருமாளிகைகளையும் திருக்கோபுரங்களையும் கண்ணாலே பருகுவாரைப்போலே பார்த்துக்கொண்டு வருகிறபடியைக் கண்டு, "அல்லாதார்க்கும் இவர்களுக்கும் செயல்ஒத்திருக்கச்செய்தே இவர்களான வாசியிருந்தபடியென்!' என்றிருந்தேன்" என்றருளிச் செய்வர். [சேர் செருந்தி]-*ராகவோர்ஹதி வைதேஹீம்* போலேயாய்த்து. மேல் நித்யஸூரிகளைச் சொல்லக்கடவதாயிருக்க, இங்கே ஸ்தாவரங்களைச் சொல்லுகிறது - உகந்தருளின நிலங்களில் விலக்ஷணரோடு ஸ்தாவரங்களோடு வாசியில்லையென்றிருக்கும் உத்தேச்ய புத்தியாலே: நித்யஸூரிகளுக்கானால் அவ்வருகேபோக நினைவுண்டாகைக்கு யோக்யதையுண்டு; இவையார்கள் இத்தனை, சைதந்யத்தில் உறைப்பாலே; நினைக்கைக்கும் யோக்யதையுண்டிறே; வேறிடத்தில் போக நினைக்கைக்கு ப்ராப்தியில்லையிறே இவற்றுக்கு. பின்னை ஜநநாதப்ரம்மராயர் திருமுடிக்குறையிலே மரம்வெட்டுவியாநிற்க எம்பார் அருளிச்செய்த வார்த்தையை நினைப்பது. ஆச்சான் திருவாலிநாடுதாஸர் நல்லன சில கூரவன்பாக்குக்களை பட்டருக்குக் கொடுவந்துகொடுத்தாராய், அவற்றைக்கண்டு "இவையிருந்தபடியென்? திருவருள் கமுகினின்றும்வந்தவையோ ?" என்றருளிச் செய்தாராம். நீராலே வளர்ந்தவையன்றே, அவனுடைய கடாக்ஷத்தாலே வளர்ந்தவையிறே. [அனந்தபுரநகர் மாயன்] - ஸ்ரீவைகுண்டத்தைவிட்டு "தாழ்ந்தார்க்கு முகங்கொடுக்கலாம்" என்னுமத்தாலே திருவனந்தபுரத்தை விடமாட்டாதே நிற்கிற சீலகுணாதிக்யத்தைச் சொல்லுகிறது. [நாமமொன்றுமோராயிரமாம்]- ஒருதிருநாமந்தானே விரோதிகளைப்போக்கி ரக்ஷிக்குமென்னுமிடஞ் சொல்லிற்றிறே; அப்படியே ஆயிரம்படி ரக்ஷகமான ஆயிரந்திரு நாமத்தையுடையவன். [உள்ளுவார்க்கு] - உத்தேச்யதை குறைவற்றிருந்தது, இனி அநுஸந்திப்பாரேயிறே தேட்டம். [உள்ளுவார்க்கு] ஸ்ரீவைகுண்டத்திலே நித்யஸூரிகளோலக்கங்கொடுக்க அவர்கள்நடுவே யிருக்கக்கடவ ஸர்வேச்வரன், "தாழ்ந்தார்க்கு முகங்கொடுக்கலாம்" என்று இத்தேசத்தை விரும்பிவர்த்திக்கிற நீர்மையிலேற்றத்தை அநுஸந்திக்கவல்லார்க்கு. [உம்பரூரே] - திருநாமங்களை யநுஸந்திப்பார்க்கு, அவ்விடந்தானே யும்பரூரென்றுமாம்; அன்றியே, உள்ளுவார்பெறுமிடம் உம்பரூரென்னவுமாம். அவ்விடந்தானுமுத்தேச்யமாகிறதும் அவன்விடாதே வர்த்திக்கையிறே. இனி தர்மைக்யமுடையவன் தான் இவ்விடத்தே வர்த்தியாநின்றால் பின்னை இவ்விடமேஉத்தேச்யமாகத் தட்டில்லையிறே.

ஊரும்புட்கொடியும் அஃதே உலகெல்லாம்உண்டுமிழ்ந்தான்*
சேரும்தண்ணனந்தபுரம் சிக்கெனப்புகுதிராகில்*
தீரும்நோய்வினைகளெல்லாந் திண்ணம்நாம் அறியச்சொன்னோம்*
பேருமோராயிரத்துள் ஒன்றுநீர்பேசுமினே. (3)

ஒ.—மூன்றும்பாட்டில், ப்ரதிபந்தகங்கள் போகைக்கு இன்ன திருநாமமென்று இல்லை, ஆயிரத்திலும் ஏதேனுமொன்றைச் சொல்லவமையுமென்கிறார். [ஊரும்புள்என்றுமேலுக்கு] - ஸர்வவிதசேஷவ்ருத்தியும் பெரிய திருவடியைக் கொள்ளுவதுஞ்செய்து ஜகத்துக்கு ஸர்வவிதரக்ஷகனுமானவன் கண்வளர்ந்தருளுகிற நிரதிசயபோக்யமான திருவநந்தபுரத்தைப் பரமப்ராப்யமென்று அங்கேபுகுவீகோளாகில், து:க்கங்களும் து:க்கஹேதுவான பாபங்களுமெல்லாம் போம்; ஒருவர்க்கும் தெரியாத ரஹஸ்யத்தை வ்யக்தமாம்படி நாங்கள் சொன்னோம்.

இ.—மூன்றாம்பாட்டில், ப்ரதிபந்தகங்கள் போகைக்கு தேசப்ராப்தியே அமையும், ஆயிரம் திருநாமத்திலும் ஏதேனுமொன்றைச் சொல்லுங்கோள் என்கிறார். [ஊரும்புள்] - வாஹனமானது பெரியதிருவடி. [கொடியும் அஃதே] - இது நித்யஸூரிகளுக்கும் உபலக்ஷணம், இது, நித்யஸூரிகளுக்குக் கொடுத்துவைக்கும் நாநாரஸாநுபவத்தை இன்றுசெல்லுமவனுக்கும் கொடுக்குமென்னுமிதுக்காகச் சொல்லுகிறது. [உலகெல்லாம் உண்டுமிழ்ந்தான்] - ப்ரளயாபத்தில் ஆபத்தேமுதலாக வரையாதே திருவயிற்றிலேவைத்து, உள்ளிருந்து நோவுபடாதபடி வெளிநாடுகாண உமிழ்ந்தான். [சேரும்] - இப்படி உபயவிபூதியையும் நிர்வஹிக்கிறவன் ஸ்ருஷ்டமான ஜகத்தினுடைய ரக்ஷணார்த்தமாகத் தம்செல்லாமையாலே வந்து கண்வளர்ந்தருளுகிற நிரதிசயபோக்யமான திருவனந்தபுரத்தை. [சிக்கெனப் புகுதிராகில்] -''நச புநராவர்த்ததே'' என்கிறபடியே மீட்சியில்லாத ருசியோடேபோய்ப் புகுவுதிகோளாகில், து:க்கங்களும் து:க்கஹேதுக்களான பாபங்களும் போம். [திண்ணம் நாம் அறியச் சொன்னோம்] - அநுபவித்துக் கைவந்த நாங்கள், ஒருத்தர்க்கும் தெரியாத ரஹஸ்யத்தை வ்யக்தமாக அறியும்படி சொன்னோம். இதுண்டாய்க் கழிந்தார்வார்த்தை யாகையாலே ஆப்தமென்கை. ப்ரதிபத்தி பண்ணாதார் இழக்குமித்தனை. து:க்கநிவ்ருத்திக்கு தேசப்ராப்தியே அமையும்: குணசேஷ்டிதங்களுக்கு வாசகமான திருநாமங்கள் ஆயிரத்திலும் ஒரு திருநாமத்தைச் சொல்லி அநுபவியுங்கோள்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. ப்ரதிபந்தகங்கள்போகைக்கு தேசப்ராப்தியேயமையும்; ஆயிரந்திருநாமத்திலும் ஏதேனுமொன்றைச்சொல்லி யநுபவியுங்கோளென்றார்.

[ஊரும்புள்] - பெரியதிருவடியை வாஹநமாகக்கொண்டு நடத்தும். [கொடியுமஃதே] - இது நித்யஸூரிகளுக்கும் உபலக்ஷணம். அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தர்க்கு ''சென்றால்குடையாம்'' என்கிறபடியே உண்டாகச் சொல்லுகிற நாநாபாவம், இன்று போய்க்கிட்டினவனுக்கும் வாசியறக் கொடுக்குமென்கைக்காகச் சொல்லுகிறது. இவன் ''அஹம் ஸர்வம்கரிஷ்யாமி'' என்றிருந்தாலும் ப்லமில்லையிறே, *குருஷ்வ* என்று அவன் அப்படி கொள்ளாதவன்று. இவனுக்கு, கிஞ்சித்கரியாதவன்று ஸ்வரூபலாபமில்லை. நிரபேக்ஷனான்தான் குறையன்று இவ்னுடைய குறையைத் தீர்க்குமாய்த்து. தான் ஸாபேக்ஷனாய்நின்று இவனை நிரபேக்ஷனாக்கும். இவனுக்கு ஸ்வரூபஸித்தியுண்டாம்படி பண்ணிக்கொண்டு நிரபேக்ஷனாகவேணுமிறே அவனுக்கு. இவனுடைய ஸ்வரூபஸித்த்யர்த்தமாக அவன் தன்னைத் தாழவிட்டானென்றால், அதுதானே நைரபேக்ஷ்யத்துக்கு உடலாயிருக்குமிறே அவனுக்கு. ''இன்னார் தூதனென நின்றான்'' என்றபின்பிறே அவனுக்கு ஸ்வரூபஸித்தியுண்டாய்த்து. [உலகு இத்யாதி] - ஸம்ஸாரஸ்பர்சமில்லாதாரை எல்லாவடிமைகளும் கொள்ளுகையன்றிக்கே, ப்ரளயாபத்தில் லோகத்தை யெடுத்து வயிற்றிலேவைத்து நோக்கி, பின்னை யுள்ளேயிடந்து தளரவொண்ணாதென்று வெளிநாடுகாண வுமிழ்ந்தவன். [சேரும்தண்ணனந்தபுரம்] - ப்ரளயாபத்தில் ஜகத்துக்கு அவன்வயிற்றில் புகாதபோது உண்டான செல்லாமையோபாதியும் போருமாய்த்து, அவனுக்கு இத்தேசத்தில் புகுராதபோது உண்டான தரிப்பறுதி; ப்ரளயாபத்தினின்றும் ஜகத்தையடைய ரக்ஷித்தவன். (ஸ்ருஷ்டமான ஜகத்தினுடைய ரக்ஷணார்த்தமாக) வந்துசேருகிற விடமென்னுதல், அவன் நிர்ப்பரனாய்க்கொண்டு சாய்ந்தருளுகிற விடமென்னுதல். [தண்ணனந்தபுரம்] ப்ராப்தியாலே அவன் இப்படி விரும்புகிறானல்லன். போக்யதையாலே விடமாட்டாமையாய்த்து. உகந்தருளினவிலமாயில் இப்படி யிருக்கவேண்டாவோ? ''தானுகந்தவூர்'' என்னக்கடவதிறே. தானுமுகந்து நித்யஸூரிகளும் உகக்குமிடமிறே பரமபதம்; இங்குத் தன்னுகப்பேயிறே; இவர்கள் வைமுக்யம்பண்ணாநிற்கச்செய்தேயும் தான் விடமாட்டாதே அவஸரப்ரதீக்ஷனாய் நிற்கிறவிடமிறே [சிக்கென] - *நச புநராவர்த்ததே* என்கிறபடியே மீளாத ருசியையுடையீர்களாய்க்கொண்டு கிட்டுவுதிர்களாகில். [தீரும் இத்யாதி] - து:க்கங்களும் து:க்கஹேதுக்களுமெல்லாம் நசிக்கும். [திண்ணம்] - *ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம்* என்னுமாபோலே. [நாம்அறியச்சொன்னோம்] - சரதமாக அநுபவத்தாலே கைகண்ட நாம், இதில் வாசியறியாத நீங்களும் இழக்கவொண்ணாதென்று உங்கள் நெஞ்சிலே படும்படி சொன்னோம். [நாம்] - நெடுநாள் க்லேசப்பட்டுக் கரைகண்டவரிறே. [சொன்னோம்] - இனிக் கர்மவச்யராய்ப்படுமவர்கள், சொன்ன வார்த்தை

ப்ரதிபத்திபண்ணுகையாலே படுகிறார்களத்தனை, நம்மேல் குறையற நாம் சொன்னோம். செயலுக்கு தேசப்ராப்திஅமையுமென்றீர், இனிச்சொல்லவிருக்க வடுப்பதென் என்ன? - [பேரும்ஓர் இத்யாதி]- ஒருதிருநாமந்தானே ஆயிரம்படி ரஸமான ஆயிரந்திருநாமத்தையுடைய வனென்று சொன்னோமிறே முன்பே; அதில் வாய்க்குத்தோற்றிற்று ஒரு திருநாமத்தைச் சொல்லுங்கோள். [பேசுமினே] - மநஸ்ஸஹகாரமும் வேண்டா.

பேசுமின்கூசமின்றிப்பெரியநீர்வேலைசூழ்ந்து*
வாசமேகமழுஞ்சோலை வயலணியனந்தபுரம்*
நேசஞ்செய்துறைகின்றானை நெறிமையால்மலர்கள்தூவி*
பூசனைசெய்கின்றார்கள் புண்ணியஞ்செய்தவாறே. (4)

ஒ.—நாலாம்பாட்டில், ஆச்ரயிப்பார்க்கு ருசிபிறக்கைக்காக, திருவநந்தபுரத்தில் எம்பெருமானுக்கு அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு அடிமை செய்கிறவர்கள் என்னபுண்யம் செய்தார்களோ? என்கிறார்; அவர்கள் பாக்யம்பண்ணினபடியைப் பேசுங்கோள். என்றுமாம். [பேசுமின் கூசமின்றி] - அயோக்யரென்று கூசாதே திருநாமத்தைச்சொல்லுங்கோள். [பெரியநீர் என்றுதொடங்கி] - பெரிய நீரையுடைய கடல்சூழ்ந்து நிரந்தரமான பரிமளத்தையுடைய சோலையோடுகூடினவயலாலே அணியப்பட்ட திருவனந்தபுரத்தை விரும்பி அங்கே கண்வளர்ந்தருளுகிறவனை.

இ.—நாலாம்பாட்டில், ஆச்ரயிப்பார்க்கு ருசிபிறக்கைக்காக, 'திருவனந்தபுரத்திலேபுக்கு அடிமை செய்கிறவர்கள் என்ன பாக்யவான்கள்! என்கிறார்; அவர்கள் பாக்யம் பண்ணினபடியைப் பேசுங் கோள் என்றுமாம். [பேசுமின் கூசமின்றி] - உங்கள் அயோக்யதையைப்பார்த்துக் கூசாதே, அத்தலையில் நீர்மையையும் ப்ராப்தியையும் பார்த்துப் பேசுங்கோள். வளவேழுலகில் தமக்குப்பிறந்த இறாய்ப்பு இவர் களுக்கும் ஒக்குமென்றிருப்பரிறே. [பெரியநீர் இத்யாதி] - பெரியநீரையுடைத்தான கடல்சூழ்ந்திருப்பதாய் நிரந்தரமான பரிமளத்தையுடைய சோலையோடுகூடின வயலாலே அலங்க்ருதமான திருவனந்தபுரம். சோலையின் பரிமளம் புறப்படாதபடி மதிளிட்டாப்போலேயாய்த்துக் கடலிருப்பது. கடலில் நாற்றம் மேலிடாதபடியாய்த்துப் பரிமளமும் விஞ்சியிருப்பது. [நேசஞ்செய்து உறைகின்றானை] - பரமபதத்திற் காட்டில் வ்யாவ்ருத்தி; "அதிகம் புரவாஸாச்ச" என்கிறபடியே. ஆர்த்தரக்ஷணத்துக்கு உடலான தேசமென்று ஸ்நேஹித்து நித்யவாஸம்பண்ணுகிறவனை. அத்தேசத்துக்கு ஆர்த்தரில்லாக் குறையுண்டிறே. "ஆர்த்தரில்லாதவிடமும் ஒருவாஸஸ்தாநமோ?" என்று அத்தேசத்தை வசைபாடியாய்த்திருப்பது. 'நேசஞ்செய்து உறைகின்றானை-பேசுமின் கூசமின்றி' என்னுதல்; 'புண்ணியஞ்செய்தவாற்றை - பேசுமின் கூசமின்றி' என்னுதல். [நெறிமையால் இத்யாதி] - அநந்யப்ரயோஜநராய், சூட்டுநன்மாலைப்படியே புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டு அக்ரமமாக ப்ரயோகித்து அடிமைசெய்யுமவர்கள் நித்யஸூரிகளிற்காட்டில் பாக்யாதிகர்! ஸம்ஸாரத்திலே நித்யஸூரிகள் பரிமாற்றத்தையுடையவர்கள் பாக்யாதிகரன்றோ? அப்போது, புண்ணியஞ் செய்தவாறே! என்று ஆச்சர்யம். இவர்கள்படியைப் பேசும்போது ஸர்வேச்வரனைப் பேசுமதிற்காட்டில் கூச்சமறப் பேசலாமிறே.

ஈடு.—நாலாம்பாட்டு. ஆச்ரயிப்பார்க்கு ருசிபிறக்கைக்காக, 'திருவனந்தபுரத்திலே புக்கு அடிமை செய்கிறவர்கள் என்ன பாக்யவான்கள்!' என்கிறார்; அவர்கள் பாக்யம் பண்ணினபடியைப் பேசுங்கோளென்றுமாம்.

[பேசுமின்கூசமின்றி] - உங்கள் அயோக்யதையைப்பார்த்துக் கூசாதே பேசுங்கோள். தாம் மயர்வறமதிநலம்அருளப்பெறச்செய்தேயும், அநாதிகாலம் ஸம்ஸரித்துப் போந்தவாஸனையாலே "அருவினையேன்" என்று போகுகைக்குக் கூசினவிது, இவர்களுக்கும் உண்டென்றிருக்கிறார். பகவத்விஷயத்தைப் பேசும்போது கூசத்தான்வேண்டாவிறே: அப்ரதிபத்தியாலேயிறே பேசாதிருந்தது; ப்ராப்தவிஷயமென்றறியவே கூசாதே பேசலாமிறே. [பெரியநீர் இத்யாதி] - மிக்கஜலத்தையுடைத்தான கடலாலேசூழப்பட்டு, வாசமேகமழாநிற்குமாய்த்துச் சோலை,

சூழப்போந்தசோலையில் பரிமளம் புறம்புபோகாதபடி மதிளிட்டாற்போலேயாய்த் திருப்பது கடல். [வாசமே கமழும்] - கடலில் நாற்றம் மேலிடாதபடி சோலையில் பரிமளமே விஞ்சியிருக்குமாய்த்து; இப்படிப்பட்ட சோலையையுடைத்தான வயலாலே யலங்க்ருதமான திருவனந்தபுரத்தை. 'நேசஞ்செய் துறைகின்றானை - பேசுமின் கூசமின்றி' என்று கீழோடேகூட்டவுமாம்; அப்போது, "நேசஞ்செய் துறைகின்றானை - பூசனை செய்கின்றார்கள் புண்ணியம் செய்தவாறே?" என்றது - ஆச்சர்யத்திலே யாகிறது. அன்றிக்கே, பெரியசீர் தொடங்கி 'பூசனைசெய்கின்றார்கள் புண்ணியஞ் செய்தவாற்றை - பேசுமின் கூசமின்றி' என்னவுமாம்; அப்போது, கூசமின்றிப் பேசுகையாவதென்? என்னில், பகவத்விஷயம்போலே வாய்வந்தபடி சொல்லவொண்ணாதிறே பாகவத விஷயம். [நேசஞ்செய் துறைகின்றானை] - பரமபதத்தில் தவிரவொண்ணாமையாலே யிருக்குமத்தனை. அவ்விடத்தை வசைசொல்லியாய்த்து இங்கு வர்த்திப்பது: "ஆர்த்தரக்ஷணத்துக்கு உடலல்லாதவிடமும் ஒரு வாஸஸ்தாநமாயற்றதோ!" என்று, ஆர்த்தரக்ஷணத்துக்குப் பாங்கானதேசமென்று விரும்பிவர்த்திப்பது இங்கேயாய்த்து. *அதிகம் புரவாஸாச்ச*. [நெறிமையால் மலர்கள் தூவி] - "ஸர்வேச்வரன் சேஷி; இவ்வாத்மவஸ்து அவனுக்குசேஷம்" என்கிற முறைமையாலே, புஷ்பாத் யுபகரணங்களை அவன் திருவடிகளிலே பணிமாறி; அன்றிக்கே, அவன்தான் இத்தேசத்தை ஸ்நேஹித்து வர்த்திக்கிறாப்போலே தாங்களும் ஸ்நேஹத்தையுடையராய் மலர்கள் தூவியென்னுதல்; இவர்கள் வர்த்திக்கிறவிடமென்று அவன் விரும்பி வந்தவோபாதி தாங்களும் ஒருப்ரயோஜநத்தைக் கணிசியாதே யாச்ரயித்தென்னவுமாம். [புண்ணியஞ்செய்தவாறே] - சூட்டுநன்மாலைகள் தூயனவேந்தி அடிமைசெய்கிறவர்களதும் ஓரடிமையாயற்றதோ! ஸ்ரீபரதாழ்வானைப்போலேயாய்த்து அவர்கள் இளையபெருமாளைப்போலேயாய்த்து இவர்கள். அவன் விட்டுப்போரச்செய்தேயும், பாரதந்த்ர்யத்தாலே விடமாட்டாதே கிடக்கிறார்களித்தனையிறே.

புண்ணியஞ்செய்து நல்லபுனலொடுமலர்கள்தூவி*
எண்ணுமின்எந்தைநாமம் இப்பிறப்பறுக்கும்அப்பால்*
திண்ணம்நாம்அறியச்சொன்னோம் செறிபொழில்அனந்தபுரத்து*
அண்ணலார்கமலபாதம் அணுகுவாரமரராவார்.* (5)

ஒ.—அஞ்சாம்பாட்டில், திருவநந்தபுரத்தில் ஆச்ரயிக்குமவர்கள் அயர்வறுமமரர்களோடு ஒப்பர் என்றுகொண்டாடி, அப்படியே நீங்களும் ஆச்ரயியுங்கோள் என்கிறார். [புண்ணியம் என்று தொடங்கி] ஸ்நேஹத்தைப்பண்ணி நல்லபுனலோடு கூடின மலர்களை ப்ரேமபரவசராய்க்கொண்டு திருவடிகளிலே பணிமாறி என்ஸ்வாமியுடைய திருநாமத்தை அநுஸந்தியுங்கோள்; அடிமைக்கு விரோதியான இஸ்ஸம்ஸாரத்தை அறுக்கும். [அப்பால் என்றுமேலுக்கு] - வேறு அயர்வறுமமரர்கள் என்று சொல்லப்படுகிறவர்களும் செறிந்த பொழிலையுடைய திருவநந்தபுரத்திற் கண்வளர்ந்தருளுகிற ஸர்வேச்வரனுடைய நிரதிசய போக்யமான திருவடிகளை ஆச்ரயிக்குமவர்கள்; இப்பொருள் நிச்சிதம்; இது வ்யக்தமாகச் சொன்னோம்.

இ.—அஞ்சாம்பாட்டில், திருவனந்தபுரத்தில் ஆச்ரயிருக்குமவர்கள் நித்யஸூரிகளாவர்கள்; ஆகையாலே நீங்களும் ஆச்ரயியுங்கோள் என்கிறார். [புண்ணியம் செய்து] - ஸ்நேஹத்தைப்பண்ணி; வர்ணாச்ரமதர்மேதிகர்த்தவ்யதாகமான பக்திரூபாபந்நஜ்ஞாநத்தை நினைக்கிறது. "மத்பக்தோ மந்மநாபவ" என்னக்கடவதிறே. [நல்புனல் இத்யாதி] - நல்லபுனலோடேகூடின மலர்களைப்பரிமாறி: அர்ச்சநாதிகளைச் சொல்லுகிறது. "மத்யாஜீ மாம்நமஸ்குரு" என்னக்கடவதிறே. [எண்ணுமின் எந்தைநாமம்] - என்ஸ்வாமியுடைய திருநாமத்தை அநுஸந்தியுங்கோள். இடறினவன் "அம்மே!" என்னுமாபோலே வகுத்தவனுடைய திருநாமத்தை அநுஸந்தியுங்கோள்; "ஸததம் கீர்த்தயந்த:" என்னக்கடவதிறே. [இப்பிறப்பறுக்கும்] - பிறவியினுடைய தோஷப்ராசுர்யம் ப்ரத்யக்ஷஸித்தமிறே. [அப்பால் - அமரராவார் - செறிபொழிலனந்தபுரத்து அண்ணலார் கமலபாதம் அணுகுவார்] - செறிந்தபொழிலையுடைய திருவனந்த

புரத்திலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வேச்வரனுடைய நிரதிசய போக்யமான திருவடிகளை ஆச்ரயிக்கு மவர்கள், "இப்பிறப்பறுக்கவேணும்" என்ன வேண்டாத நித்யஸூரிகளாவர்கள். இத்தால் - விரோதியைப் போக்குமளவன்றியே உத்தேச்யத்தைப் பெறுகைக்கும் திருவனந்தபுரமே ஆச்ரயணீயஸ்த்தல மென்கிறது. [திண்ணம் நாம் அறியச்சொன்னோம்] - வ்யக்தமாக, மயர்வறமதிநலமருளப்பெற்ற நாம் தேஹாத்மாபிமானிகளான நீங்கள் அறியும்படி உங்கள் அனர்த்தத்தைப் பார்த்துச் சொன்னோம்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு திருவனந்தபுரத்தில் ஆச்ரயிக்குமவர்கள் நித்யஸூரிகளாவர் கள்; ஆகையாலே, அங்கே நீங்களும் ஆச்ரயியுங்கோளென்கிறார்.

[புண்ணியஞ்செய்து] - ஸ்நேஹத்தைப்பண்ணி. த்யாகம் வர்ணாச்ரம தர்மங்களை இதிகர்த்தவ்யதையாக வுடைத்தா யிருக்குமிறே; ஆக, ஸத்கர்மபலமான பக்திரூபாபந்ந ஜ்ஞாநத்தை நினைக்கிறது. *மத்பக்தோ மந்மநாபவ* என்னக்கடவதிறே. [நல்லபுனலொடு மலர்கள் தூவி] - நல்ல புனலோடே கூடின மலர்களை ப்ரேமபரவசராய்க்கொண்டு பணிமாறி. இத்தால் - அர்ச்சநாதிகளைச் சொல்லுகிறது. *மத்யாஜீ மாம்நமஸ்குரு* என்னக்கடவதிறே, [எண்ணுமின்] - *ஸததம் கீர்த்தயந்த:* என்னுமின்றிறே. [எந்தைநாமம்] - இடறினவன் "அம்மே" என்னுமாபோலே திருநாமம்சொல்லும்போது ஒரு அதிகாரிஸம்பத்தி தேட வேண்டா; சீயர் பட்டரை "திருநாமம் சொல்லும்போது ப்ரயதனாய்க்கொண்டுசொல்ல வேணுமோ?" என்றுகேட்க, "கங்கையிலேமுழுகப்போமவனுக்கு வேறொரு உவர்க்குழியிலே முழுகிப் போகவேணுமோ? மேலுண்டான நன்மையைத் தருகிற இது அதிகாரிஸம்பத் தியையும் தரமாட்டாதோ?" என்றருளிச்செய்தாராம். திருநாமம் சொல்லுகைக்கு ருசியே யாய்த்து வேண்டுவது; அவர்களே அதிகாரிகள். [இப்பிறப்பறுக்கும்] - கண்டிறே யிதினுடைய இறைபீடு கவிழ்ந்துபார்க்கவமையுமே இதினுடைய அகவாயை; தன்னடையே விரக்தி பிறக்குமே. இப்படி ப்ரத்யக்ஷிக்கச் செய்தேயும் கார்யகரமாகாதிருக்கிறதிறே வாஸனையின் கனம். ஒருசெட்டியை "இவன் தமிழுக்குத் தேசிகனாயிருக்கும்" என்று பட்டருக்குக்காட்டினார்களாய், "உனக்குஏதேனும் அபேக்ஷையுண்டாகில் கேட்கலாகாதோ?" என்ன, "சிலர் 'காண்கிறதேஹத்துக்கு அவ்வருகு ஆத்மாவுமில்லை, தர்மாதர்மங்களுமில்லை, ஈச்வரனுமில்லை' என்றிராநின்றார்கள்; சிலர் 'இத்தேஹந்தான் அஸ்த்திரம்' என்று இதின் தோஷத்தை தர்சித்து 'அவ்வருகே ஸ்த்திரமாயிருப்பதொன்றைப் பற்றவேணும்' என்றிரா நின்றார்கள்; விஷயமொன்றாயிருக்க இவ்விரண்டு பரிமாற்றமும் நடக்கிறபடியெங்ஙனே?" என்ன; *மமமாயா துரத்யயா* என்றும் *மாயாமேதாம் தரந்தி தே* என்றும் சொல்லுகிறபடியே பாக்யவான்களுக்கு இதினுடைய தோஷதர்சநத்தைப் பண்ணிக் கழித்துக்கொள்ளுகைக்கும், பாக்யஹீநர்க்கு இதிலே போக்யதாபுத்திபண்ணி அனர்த்தப்படுகைக்கும் உடலாம்படி கர்மா நுகுணமாக இத்தை இடையெடுத்துக்காணும் ஈச்வரன் பண்ணிற்று" என்றருளிச்செய்தார். "இதுகண்டாய்" என்னும்படியா யிருக்குமிறே; நாம் நன்றாக நினைத்திருக்குமதல்ல இதுக்கு ஆகாரம்; ஈச்வரன், வெளிச்சிறப்பைப் பிறப்பிக்க "இது அல்பம், அஸ்த்திரம்" என்று அறிந்தவிடுவேகிடாய் இதுக்கு நிலைநின்ற ஸ்வபாவம். [இப்பிறப்பறுக்கும்] - இப்படி ஹேயதயா ஜ்ஞாதவ்யமான இத்தேஹஸம்பந்தத்தை யறுக்கும். [செறிபொழில்சூழ் அநந்தபுரத்து (?)] - செறிந்த சோலையை யுடைத்தான திருவனந்தபுரத்திலேவந்து கண்வளர்ந்தருளுகிற ஸர்வஸ்வாமியுடைய நிரதிசயபோக்யமான திருவடிகளைக் கிட்டுமவர்கள், [அப்பால் - அமரராவார்] - "இப்பிறப்பறுக்கும்" என்ன வேண்டாத தேஹத்தைப் பரிக்ரஹித்து அடிமை செய்கிறவர்களும், திருவனந்தபுரத்துக் கண்வளர்ந்தருளுகிறவன் திருவடிகளை யாச்ரயித்த வர்கள். ஆக, இத்தால் விரோதியைப் போக்குமளவே யன்றியே உத்தேச்யத்தைப் பெறுகைக்கும் திருவனந்தபுரமே ஆச்ரயணீயஸ்த்தலமென்கிறது. [திண்ணம்] - நிச்சிதம். [நாம்அறியச்சொன்னோம்] - அவனாலே மயர்வறமதிநலமருளப்பெற்ற நாம், தேஹாத்மாபிமானி களான நீங்களும் அறியும்படி உங்கள்அனர்த்தத்தைப் பார்த்துச் சொன்னோம்.

அமரராய்த்திரிகின்றார்கட்கு ஆதிசேரனந்தபுரத்து*
அமரர்கோன் அர்ச்சிக்கின்று அங்ககப்பணிசெய்வர்விண்ணோர்*
நமர்களோ!சொல்லக்கேண்மின் நாமும்போய்நணுகவேண்டும்*
குமரனார்தாதைதுன்பம் துடைத்தகோவிந்தனாரே (6)

ஒ.—ஆறும்பாட்டில், அயர்வறுமமரர்களும்வந்து அடிமைசெய்கிறது திருவனந்தபுரத்திலேயாதலால் திருநாட்டிற்காட்டில் பரமப்ராப்யம் திருவனந்தபுரம்; நாமும் இங்கே அடிமைசெய்யவேணும் என்கிறார். [அமரரென்று தொடங்கி]-தேவர்களாய்த்திரிகிற ப்ரஹ்மாதிகளுக்கும் காரணபூதனானவன் கண்வளர்ந்தருளுகிற திருவனந்தபுரத்திலே அயர்வறுமமரர்களுக்கு ப்ரதானனான ஸ்ரீஸேனாபதியாழ்வான் அடிமைசெய்யுமிடத்தில் எடுத்துக் கைநீட்டுவார் அயர்வறுமமரர்கள். [நமர்கள் என்று மேலுக்கு]-பந்துக்களாயுள்ள நீங்கள் சொல்லக்கேளுங்கோள்; தேவஸேனாபதியாய்ப் பெருமிடுக்கனான ஸுப்ரஹ்மண்யனுக்குங்கூட ஜநகனானவனுக்குப் பாதகத்தால்வந்த து:க்கத்தைப்போக்கின க்ருஷ்ணனை நாமும் போய்க்கிட்டவேணும்.

இ—ஆறும்பாட்டில், நித்யஸூரிகளும் வந்து அடிமைசெய்கையாலே திருவனந்தபுரமே ப்ராப்யம்; அங்கே நாம் அடிமைசெய்யவேணும் என்கிறார். [அமரராய்த் திரிகின்றார்கட்கு] - மநுஷ்யாதிகளிற்காட்டில் சிலநாள் ஏறவிருக்கிற இத்தைக்கொண்டு தங்களை நித்யரென்று அபிமாநித்திருக்கிறவர்களுக்கு [திரிகின்றார்கட்கு] - மநுஷ்யாதிகளிற்காட்டில் பந்தகம் கனத்திருக்கச்செய்தேயும், நிர்ப்பயராய்த் திரியாநிற்பர்கள் மநுஷ்யர்களுடைய விரக்திக்கு அவர்கள் பரிக்ரஹித்தவளவிறே த்யஜிக்கவேண்டுவது? ப்ரஹ்மாவுக்கு சதுர்த்தசபுவநமும் த்யஜிக்கவேணும். [ஆதிசேர் அனந்தபுரத்து] - காரணபூதன் வர்த்திக்கிற தேசத்திலே. [அமரர்கோனர்ச்சிக்கின்று இத்யாதி] ஸ்ரீஸேனாபதியாழ்வான் அடிமைசெய்யுமிடத்தில்எடுத்துக் கைநீட்டுவார் நித்யஸூரிகள். [நமர்களோ சொல்லக்கேண்மின்] -நம்மோடு குடல்துடக்குள்ள நீங்கள் சொல்லக்கேளுங்கோள்; "வழுவிலா அடிமைசெய்யவேண்டும்நாம்" என்கிற நம்மினைவே நினைவாயுள்ளார் கேளுங்கோள். [நாமும்போய் நணுகவேண்டும்] - அந்த நித்யஸூரிகள் திரளிலே அடிமையிலே ருசியையுடைய நாமும் சென்று கிட்டவேணும். இங்கேயிருந்து மநோரதிக்குமளவு போராது; அத்திரளிலே சடக்கெனப் புகவேணும். அவர்கள்நடுவே ஸம்ஸாரிகளான நமக்கு கிட்டவொண்ணுமோ? என்னில்,—[குமரனார் இத்யாதி] - தேவஸேனாபதியாய் ப்ரபலனான ஸுப்ரஹ்மண்யனுக்குங்கூட ஜநகனானவனுக்குப் பாதகத்தால்வந்த து:க்கத்தைப்போக்கின க்ருஷ்ணனை; வாணனுக்குத் துணையாயிருக்கிற ருத்ராதிகள் து:க்கநிவ்ருத்திக்கு ஹேதுவாயிருக்கிறவன் நம் து:க்கத்தைப்போக்கச் சொல்லவேணுமோ? ருத்ராதிகளுக்கு து:க்கநிவர்த்தகனாயிருக்கும்; பசுக்களுக்கும் இடையர்க்கும் எளியனாயிருக்குமென்கை.

ஈடு.—ஆறும்பாட்டு. நித்யஸூரிகளும் வந்து அடிமைசெய்கிறது இங்கேயாகையாலே திருவனந்தபுரமே பரமப்ராப்யம்; அங்கே நாம் அடிமைசெய்யவேணுமென்கிறார்.

[அமரராய்த்திரிகின்றார்கட்கு] - மாம்பழத்தோடு ஒருஸம்பந்தமில்லாத தொன்றுக்கு மாம்பழவுண்ணியென்று பேராயிருக்குமாபோலே, இக்கரையராய் இவ்வருகுள்ளாரிற்காட்டில் நாலுநாளும ஜீவித்திருந்து சாகிற இவ்வளவையேகொண்டு தங்களுடைய ஆயுஸ்ஸுக்கு ஓரவஸாநமுண்டாயிருக்கச்செய்தே அதில்லாதாரைப்போலே அமரராகப் பண்ணிக்கொண்டு திரிவர்களாய்த்து. [திரிகின்றார்] - பந்தகம் கனத்திருக்கச்செய்தேயும், நிர்ப்பயராய்த் திரிவர்களாய்த்து. இவனையல்லவிறே பயவர்களுக்கு. விடும்போது ஒரு தேஹமாத்ரமாதல், ஒரு ஸ்த்ரீயாதலாயிருக்கும் இவனுக்கு; ப்ரஹ்மாவுக்கு அண்டமித்தனையும் விடவேண்டிவருமிறே. [ஆதிசேரனந்தபுரத்து] - இவர்களுக்கும் அவர்களுக்கும் அவன்பக்கல் ஸாம்யம் காரணத்வத்திலேயாய்த்து. அவர்களுக்கு, ஸத்தையை நிர்வஹித்துக்கொடுக்கும்; இவர்களுக்கு, தேஹத்தையும் ஆத்மாவையும்சேர்த்து இத்தேஹம் க்ஷணந்தோறும் நசிக்க உண்டாக்கி

நடத்திக்கொடுக்கும். ஜகத்காரணபூதனானவன் வந்து நித்யவாஸம்பண்ணுகிற திருவனந்தபுரத்து. [அமரர்கோன் இத்யாதி] - ஸ்ரீஸேநாபதி யாழ்வான் நித்யகைங்கர்யம் பண்ணுகிறான்; நித்யஸூரிகளொடுத்துக் கைகூட்டுவார். [நமர்களோ சொல்லக் கேண்மின்] - "வழுவிலா வடிமைசெய்யவேண்டுநாம்" என்று சொன்னதுக்குள்ளே யடங்கும்படி என்னோடே நிருபாதிக ஸம்பந்தமுடையாரடங்க நான்சொல்லுகிற வார்த்தையைக் கேளுங்கோள். பந்துக்களாயிருப்பார்க்கு நல்வார்த்தை சொல்லவேணுமிறே. [நாமும்] - அடிமையிலே ருசியுடையநாமும், நித்யஸூரிகளோடு ஒருகோவையாய்ச் சென்றுகிட்டி அடிமைசெய்யவேணும். [போய் நணுக வேண்டும்] - இங்கேயிருந்து மநோரதிக்குமளவு போராது, போய்ப்புகவேணும். அவர்கள் நடுவே ஸம்ஸாரிகளான நமக்குக் கிட்டவொண்ணுமோவென்னில் - [குமரனார் இத்யாதி] - (தேவஸேநாபதியாய் ப்ரபலனான ஸுப்ரஹ்மண்யனுக்குங்கூட ஜநகனானவனுக்குப் பாதகத்தால்வந்த து:க்கத்தைப் போக்கினக்ருஷ்ணனை) தேவர்களும் அஸுரர்களும் கூட்டுப்படையாய் எதிரிட்டுவருமன்றும், அவர்கள் ஆபந்நரானால் அவர்கள்ஆபத்தைப்போக்கி ரக்ஷிக்குமவனுய்த்து அவன்; ஆனபின்பு, நமக்கு அத்தேசத்தை ப்ராபிக்கைக்கு ஓரருமைப்படவேணுமோ? தூர்மாநிகளுக்கும் து:க்கநிவ்ருத்தியைப் பண்ணிக்கொடுக்குமவன், அபிமாநசூந்யரான நமக்குத் தன்னைக் கிட்டுகையில் அருமைப்படுத்துமோ? ருத்ராதிகளுக்கு து:க்க நிவர்த்தகனாயிருக்கும்; பசுக்களுக்கும் இடையர்க்கும் கையாளாயிருக்கும். 'கோவிந்தனுரை - நாமும் போய் நணுகவேண்டும்.'

துடைத்தகோவிந்தனரே உலகுயிர்தேவும்மற்றும்*
படைத்தஎம்பரமமூர்த்தி பாம்பணைப்பள்ளிகொண்டான்*
மடைத்தலைவாளைபாயும் வயலணியனந்தபுரம்*
கடைத்தலைசீய்க்கப்பெற்றால் கடுவினைகளையலாமே. (7)

ஒ.—ஏழாம்பாட்டில், ஸர்வேச்வரன் கண்வளர்ந்தருளுகிற திருவனந்தபுரத்திலே சென்று அடிமைசெய்ய, இதுக்குமுன்பெல்லாம் அடிமைசெய்யப் பெற்றிலோமென்னும் து:க்கம் இப்போதே போமென்கிறார். [உலகுயிர் என்று தொடங்கி] - லோகத்தையும் தேவர்களையும் மற்றுமுண்டான ஆத்மாக்களையும் உண்டாக்கின ஆச்ரிதர்க்கு பவ்யனான ஸர்வேச்வரனுமாய், திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுவதுஞ்செய்தவனுடைய, ஜலஸம்ருத்தியாலே களித்து மடைத்தலையிலே வாளை பாயாநின்றுள்ள வயலாலே அலங்க்ருதமானதிருவநந்தபுரத்தில் திருவாசலிலே திருவலகுதிருப்பணி செய்யப்பெற்றால்.

இ.—ஏழாம்பாட்டில், ஸர்வேச்வரன் கண்வளர்ந்தருளுகிற திருவனந்தபுரத்திலேசென்று அடிமை செய்யப்பெறில், ஒருதேசவிசேஷத்திலே சென்று அடிமை செய்யப் பெற்றிலோமென்னும் து:க்கம் போமென்கிறார். [துடைத்த கோவிந்தனார் இத்யாதி] - துடைக்கை - ஸம்ஹரிக்கை. அப்யயபூர்விகையாயிறே ஸ்ருஷ்டியிருப்பது. "க்ருஷ்ண ஏவ ஹி லோகாநாம்". [உலகுயிர் இத்யாதி] - லோகத்தையும் தேவஜாதியையும் மற்றுமுண்டான ஆத்மாக்களையும் உண்டாக்கினவன். இவை, அதிப்ரவ்ருத்தமானவன்று ஸம்ஹரித்து, பின்பு, புருஷார்த்தோபயோகியான கரணங்களைக் கொடுத்து ரக்ஷித்த. [எம் பரமமூர்த்தி] - ஆச்ரிதபவ்யனான ஸர்வேச்வரன். [பாம்பணைப் பள்ளிகொண்டான்] - ஸ்ருஷ்டமான ஜகத்திலே ரக்ஷணார்த்தமாகத் திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளினவனுடைய. [மடைத்தலை இத்யாதி] - ஜலஸம்ருத்தியாலே மடைத்தலைகளிலே களித்து வாளை பாயாநின்றுள்ள வயலாலே யலங்க்ருதமான தேசத்திலே. ஸாமகாநத்தாலே முக்தர் களித்து வர்த்திக்குமாபோலேயாய்த்து அந்தேசத்தில் திர்யக்குக்களும் களித்து வர்த்திக்கும்படி. [கடைத்தலை சீய்க்கப்பெற்றால்] - திருவாசலிலே திருவலகுதிருப்பணி செய்யப்பெற்றால். [கடுவினை களையலாமே] - அடிமைசெய்யப் பெறுமை பாலுண்டான க்லேசமெல்லாம் போம். சேஷத்வஜ்ஞாநம்பிறந்தால், ஸ்வரூபாநுரூபமானவ்ருத்தி பெறாமையால்வரும் க்லேசம் ப்ராயச்சித்தத்தால் போக்குமதன்றிறே.

ரு.—ஏழாம்பாட்டு. ஸர்வேச்வரன் கண்வளர்ந்தருளுகிற திருவனந்தபுரத்திலே சென்று அடிமைசெய்யப்பெறில், ஒருதேசவிசேஷத்தே சென்று அடிமைசெய்யப் பெற்றிலோமென்னும் து:க்கம் போமென்கிறார்.

[துடைத்தகோவிந்தனாரே இத்யாதி] - துடைக்கை - ஸம்ஹரிக்கை. அப்யபூர்விகை யாயிறே ஸ்ருஷ்டியிருப்பது. *க்ருஷ்ணஏவஹி லோகாநாம்* ''வையமேழும்கண்டாள் பிள்ளை வாயுளே.'' [உலகுயிர்த்யாதி] - லோகத்தையும் தேவஜாதியையும் மற்றுமுண்டான ஆத்மாக்களையும் உண்டாக்கின. இவை அதிப்ரவ்ருத்தமான வன்று ஸம்ஹரித்து, பின்னை புருஷார்த்தோபயோகியான கரணங்களைக் கொடுத்து ரக்ஷித்த. [எம் பரமமூர்த்தி] ஆச்ரிதபவ்யனான ஸர்வேச்வரன். [பாம்பணைப் பள்ளிகொண்டான்] - ஸ்ருஷ்டமான ஜகத்திலே ரக்ஷணார்த்தமாகத் திருவனந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகிறவனுடைய. [மடைத்தலை இத்யாதி] - ஜலஸம்ருத்தியாலே மடைத்தலைகளிலே களித்து வாளைகள் பாயாநின்றுள்ள வயலாலே அலங்க்ருதமான தேசத்திலே; முக்தர் ஸாமகாநம்பண்ணிக் களித்து வர்த்திக்குமாபோலே பாய்த்து, அத்தேசத்தில் திர்யக்குக்களும் களித்து வர்த்திப்பது. [கடைத்தலைசீய்க்கப்பெற்றால்] - திருவாசலிலே திருவலகுதிருப்பணி செய்யப்பெற்றால். [கடுவினைகளையலாமே] - அடிமை செய்யப் பெறுமையாலுண்டான க்லேசமெல்லாம் போம். சேஷத்வஜ்ஞானம் பிறந்தால், ஸ்வரூபாநுரூபமான வ்ருத்திபெறுமையால் வரும் க்லேசம் ப்ராயச்சித்தத்தால் போக்குமதன்றே.

கடுவினைகளையலாகுங் காமனைப்பயந்தகாளை*
இடவகைகொண்டதென்பர் எழிலணியனந்தபுரம்*
படமுடையரவிற் பள்ளிபயின்றவன்பாதங்காண*
நடமினோநமர்களுள்ளீர்! நாமுமக்கறியச்சொன்னோம். (8)

ஒ.—எட்டாம்பாட்டில், 'திருவநந்தபுரத்தில் கண்வளர்ந்தருளுகிற ஸர்வேச்வரனுடைய திருவடிகளைக் காணப்போருங்கோள்!' என்று ஸ்ரீவைஷ்ணவர்களை அழைக்கிறார். [கடுவினை] - மிக்கவினை. [காமனை என்றுதொடங்கி]-விலக்ஷணமான திருவநந்தபுரத்தை, லோகத்தையெல்லாம் தன்னழகாலே பிச்சேற்றக்கடவனான காமனுக்கு ஜநகனாய், அவனிலும் முக்தனான க்ருஷ்ணன், ஸ்தாநமாகக் கொண்டதென்பர். தன்னுடைய ஸ்பர்சஸுகத்தாலே விரித்தபணங்களையுடைய திருவனந்தாழ்வான் மேலே நிரந்தரமாகப் பள்ளிகொண்டருளுகிறவனுடைய திருவடிகளைக் காண நடவுங்கோள். எனக்கு பந்துக்களாயுள்ள நீங்கள் இஸ்ஸம்ருத்தியை யறியாதே இழக்கலாகாதென்று சொன்னோம்.

இ.—எட்டாம்பாட்டில், திருவனந்தபுரத்திலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வேச்வரனுடைய திருவடிகளைக் காணப்போருங்கோள் என்று அநுகூலரை அழைக்கிறார். [கடுவினை களையலாகும்] - அநுபவவிரோதியாய்ப் போக்கவரிதான பாபம் போம். [காமனைப் பயந்தகாளை] - இது நானுபதேசிக்க வேண்டுவது அவனை ப்ரத்யக்ஷிக்குந்தனையுமிறே. காட்டையடங்கத் தன்னழகாலே பிச்சேற்றித்திரியும் காமனுக்கும் உத்பாதகனானவன். [காளை] - யௌவநம் ப்ரஸவாந்தமாயிருக்க, பருவத்தால் அவனிலும் இளகிப்பதித்திருக்கும். [இடவகை இத்யாதி] - அழகாலே அலங்க்ருதமான திருவனந்தபுரத்தை வாஸஸ்தாநமாகக் கொண்டதென்று விசேஷஜ்ஞர். வாய்புலற்றுகிற்பர்; ''பத்மநாபம் விதுர்ப்புதா:''. [படமுடை இத்யாதி] - ஸ்வஸ்பர்சத்தாலே விஸ்த்ருதபணனான திருவனந்தாழ்வான்மேலே நிரந்தரமாகக் கண்வளர்ந்தருளுகிறவனுடைய திருவடிகளைக் காண. பயின்றவென்று - வீசி விட்டுவிட்டெழுப்பிலும் எழுப்பவொண்ணாதபடியிறே படுக்கைவாய்ப்பிருப்பது. [நடமினோ நமர்களுள்ளீர்]-என்னோடு குடற்றுடக்குடையாரடைய நடவுங்கோள். [நாம் உமக்கு அறியச் சொன்னோம்] - 'வரிவாளரவினணைப் பள்ளிகொள்கின்ற கரியான்கழல்காணக் கருதும்கருத்தே'' என்று சபலரான நாம், ''ஏகம்து:க்கம் ஸுகஞ்ச நௌ'' என்னும்படியிருக்கிற உங்களுக்கு நெஞ்சிலேபடச் சொன்னோம்.

ஈடு.—எட்டாம்பாட்டு. திருவனந்தபுரத்திலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வேச்வரனுடைய திருவடிகளைக்காணப் போருங்கோளென்று, அநுகூலரை யழைக்கிறார்.

[கடுவினைகளைபலாகும்]-நம்மால்போக்கவரிதான பாபங்களையும் போக்கலாம். [காமனைப் பயந்தகாளை] - உங்களுக்கு நான் உபதேசிக்கவேண்டுவது அவ்வஸ்துவை ஸாக்ஷாத்கரிக்குமளவுமே! நாட்டைத் தன்னழகாலேவெருட்டித் திரிகிற காமனுக்கும் உத்பாதகனாயிருக்கும். இருவரையும் கூடக்கண்டால் "முறைகெடச்சொன்னார்களே" என்றிருக்கும். *ப்ரஸவாந்தஞ்ச யௌவநம்* என்கிறதும், இவ்விஷயத்திலே மற்றைப்படியாயிருக்கிறது காணும். [இடவகை கொண்டதென்பர்]-இவ்விடத்தை வாஸஸ்தாநமாகக்கொண்டதென்று, அறிவுடையாரடங்கச் செவிசீப்பாய்ந்துகிடப்பர்கள்; *பத்மநாபம் விதுர்ப்புதா:* [எழிலணியனந்தபுரம்] - பரமபதத்தில் ஒருபுதுமை செய்யவொண்ணாதிறே; அங்குத்தையிற் காட்டில் இங்குத்தைக்குத் தன்னேற்றமிருக்கிறபடி. [படமுடையரவில்] - ஸர்வேச்வரன் சாய்ந்தருளினால் அவனுக்குப் பிறக்கும் விகாஸம்சொல்லுகிறது - படமுடையரவென்று. [பள்ளிபயின்றவன்] - ஸ்வதஸ் ஸர்வஜ்ஞமான வஸ்துவும் உணர்த்திபறும்படியாய்த்துப் படுக்கைவாய்ப்பு. [பாதம் இத்யாதி] திருவடிகளைக்காணும்படியாக, "வரிவாளரவினணைப்பள்ளிகொள்கின்ற கரியான்கழல்காணக் கருதும்கருத்து" என்றிருக்கும் என்னொடு ஒருகூட்டருடைக்குடையாரடங்கலும் போகப் பாருங்கோள். திருவத்யயநம் பாடாநிற்க, இத்தைக் கேட்டருளி, ஆளவந்தார் "நமக்குஆழ்வாரோடே ஒருஸம்பந்தமுண்டாக வேணும்" என்று, அப்போதே ஸ்ரீபாதத்தையுடையாரைக் கூட்டிக்கொண்டெழுந்தருளினார். [நாம்] - கண்வளர்ந்தருளுகிறவழகில் ஈடுபட்டிருந்து, "யவரே ஆமவர் - எம்மையாளும் பரமர்" என்னக்கடவ நாம். [உமக்குஅறியச்சொன்னோம்] - அவ்வடிவைக் காணவேணுமென்கிற அபேக்ஷையுடைய உங்களுக்கு அறியும்படிசொன்னோம்.

நாம்உமக்கறியச்சொன்ன நாள்களும்நணியவான*
சேமம்நன்குடைத்துக்கண்டீர் செறிபொழிலனந்தபுரம்*
தூமநல்விரைமலர்கள் துவளறவாய்ந்துகொண்டு*
வாமனனடிக்கென்றேத்த மாய்ந்தறும்வினைகள்தாமே. (9)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், "நாளேலறியேன்" என்றும், "மரணமானால்" என்றும் சொன்ன காலம் அணித்தாய்த்து; சடக்கெனத் திருவனந்தபுரத்திலேபுக்கு அடிமைசெய்ய, அடிமைக்கு விரோதியான கர்மங்களெல்லாம் நசிக்குமென்கிறார். [நன்குடைத்து] - மிக உடைத்து. [தூமநல்விரைமலர் என்று மேலுக்கு] - வாமநனுடைய திருவடிகளுக்கென்று நல்ல ஸமாராதநோபகரணங்களை ஸம்பாதித்து அவனை ஆச்ரயிக்க, அடிமைக்கு ப்ரதிபந்தகங்களெல்லாம் தானே நசிக்கும்.

இ.—ஒன்பதாம்பாட்டில், சரீராவஸாநமணித்தாய்த்து; சடக்கெனத் திருவனந்தபுரத்திலேபுக்கு அடிமைசெய்ய, தாஸ்யவிரோதியான கர்மம் போமென்கிறார். [நாம் உமக்கு இத்யாதி] - "நாளேலறியேன்" என்றும், "மரணமானால்" என்றும் நாம் உங்களுக்குச்சொன்ன காலம்அணித்தாய்த்து. "தஸ்மிந்நஸ்தமிதே பீஷ்மே" என்று அவன்தான் சொன்ன வார்த்தையை இவர் சொல்லுகிறார். [சேமம் நன்குடைத்துக்கண்டீர் செறிபொழில் அனந்தபுரம்] - ஸம்ஸாரபயத்துக்கு மிகவும் ரக்ஷகமாய் போக்யமுமான தேசம். போக்யமான தேசந்தானே பயசாந்திக்கு ஹேதுவாகப் பெற்றது. [நன்குடைத்து] - மிகவுமுடைத்து. [தூம நல்விரைமலர் இத்யாதி] - புஷ்பாத்யுபகரணங்களை விலக்ஷணமாக்கிக்கொண்டு [வாமனன் இத்யாதி] தன்னுடைமை பெறுகைக்குத் தான் இரப்பாளனுமவனை, அநந்யப்ரயோஜநராய் ஆச்ரயிக்க, அடிமைக்கு ப்ரதிபந்தகங்கள் தானே நசிக்கும்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. சரீராவஸாநம் அணித்தாய்த்து; சடக்கெனத் திருவனந்தபுரத்திலேபுக்கு அடிமைசெய்ய, தாஸ்யவிரோதிகர்மங்கள் தானே நசிக்குமென்கிறார்.

23

[நாட்டைமக்கு இத்யாதி]-"நானேலறியேன்" என்றும் "மரணமானல்" என்றும் சொல்லிப் போந்த நாள்களும் கிட்டியவாய்த்தின. பிறர்க்கு அப்படித் தாம்சொன்னுரோ வென்னில்,— மாலைநண்ணியிலே "மரணமானல்" என்று ஈச்வராபிப்ராயத்தைத் தாம் அறிந்து, அத்தைப் பிறர்க்கு உபதேசித்தாரிறே. இதிலும் பரோபதேசமிறே. *தஸ்மிந்நஸ்தமிதே* இத்யாதி - பீஷ்மன் முடியாநின்றான், பின்னை இவ்வர்த்தம் கேட்கலாவார் இல்லையென்று அவன் அருளிச் செய்தவார்த்தையை, இப்போது இவர்தாம் அருளிச்செய்கிறார். *அஸ்தமிதே* - கண்ணுக்கு வெளிச்சிறப்பைப் பண்ணுவாரும், நெஞ்சுக்கு வெளிச்சிறப்பைப் பண்ணுவாருமாக, ஆதித்யர் கனிருவராய்த்து; "ஞானமாகி ஞாயிறாகி." *ஜ்ஞாநாந்யல்பீபவிஷ்யந்தி* ஸ்வரூபத்தோபாதி நித்யமாயிருக்குமிறே தர்மபூதஜ்ஞாநமும்; இனி இதுக்கு உதயாஸ்தமய வ்யவஹாரம் ஜ்ஞாநப்ரஸர த்வாரத்தை யபேக்ஷித்தாயிருக்குமிறே. அவன்போனால் பின்னைக் கொள்வாரும் கொடுப்பாருமின்றிக்கே பரிமாற்ற மறும். இதுக்கு பட்டர் அருளிச் செய்ததாக, பிள்ளைஅப்பர் - 'ஒரு மந்திரி ஸ்ன் தலையில் இடவாதவன்று கொள்வார் கொடுப்பாரின்றியே எளிவிலையனாய்ப் போம்" *தஸ்மாத் த்வாம் சோதயாம்யஹம்* - ஆகையாலேகாண் உன்னை த்வரிப்பித்து "அவன்பக்கலிலே போய்க்கேள்" என்று சொல்லுகிறது. [சேமம் நன்குடைத்துக்கண்டீர் செறிபொழிலனந்தபுரம்] - நிரதிசயபோக்யமான தேசந்தானே மரணதசைக்கு ரக்ஷகமாம். [நாமநல்விரைமலர்கள்]-நன்றான நாமம், பரிமளத்தையுடைத்தான நல்புஷ்பங்கள் இவற்றை. [துவளறஇத்யாதி] தனக்கும் அவனுக்கும் ஸத்ருசமாம்படி விலக்ஷணமாக்கிக்கொண்டு. [வாமனன் இத்யாதி] - தன்னுடைமை பெறுகைக்குத் தான் இரப்பாளனாயிருக்குமவன் திருவடிகளுக்கு என்றேத்த. [மாய்ந்தரும்வினைகள்தானே] - இவன் தன் ஸ்வரூபத்துக்கு அநுரூபமான பரிமாற்றத்திலே யந்வயிக்க விரோதிகளடைய நசித்துப்போம்.

மாய்ந்தறும்வினைகள்தானே மாதவா!என்ன*நாளும்
ஏய்ந்தபொன்மதிள் அனந்தபுரநகர்எந்தைக்கென்று*
சாந்தொடுவிளக்கந்தூபந் தாமரைமலர்கள்நல்ல*
ஆய்ந்துகொண்டேத்தவல்லார் அந்தமில்புகழினரே.* (10)

ஒ.—பத்தாம்பாட்டில், திருவநந்தபுரத்தில் எம்பெருமானுக்கு அடிமைசெய்யுமவர்களுடைய மாஹாத்ம்யம் பேசநிலமன்று என்கிறார். [ஏய்ந்தபொன் மதிள்] - சேர்ந்திருந்துள்ள பொன்மதிள்.

இ.—பத்தாம்பாட்டில், திருவனந்தபுரத்திலேபுக்கு அடிமைசெய்யுமவர்கள்பெருமை பேசநிலமன்று என்கிறார். [மாய்ந்தறும் இத்யாதி] - மாதாபிதாக்கள்சேர்த்தியைச் சொல்ல அநாதி காலார்ஜ்ஜிதமான துக்கங்கள் தானே போம். [ஏய்ந்த இத்யாதி] - அங்குத்தைக்குத் தகுதியான மதிளையுடைய திருவனந்தபுரத்திலேவர்த்திக்கிற என்ஸ்வாமிக்கென்று புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டு ஆச்ரயிக்கவல்லார் [அந்தமில் புகழினரே] - "அமரராவார்" என்கிறவனவன்றிக்கே, விண்ணுளாரிலும் சீரியராவர்.

ஈடு.—பத்தாம்பாட்டு. திருவனந்தபுரத்திலேபுக்கு அடிமை செய்கிறவர்கள் பெருமை பேசநிலமன்றென்கிறார்.

[மாய்ந்தறும் வினைகள்தானே மாதவாவென்ன]-மாதாபிதாக்கள் பேரைச்சொல்ல அநாதி காலார்ஜ்ஜிதமான துக்கங்கள் தானேபோம். (மாதவாவென்ன - மாய்ந்தறும்வினைகள்;-அப்பா வென்ன உச்சி குளிருங்காணும். [ஏய்ந்தஇத்யாதி] - அங்குத்தைக்கு ஈடான பொன்மதிளையுடைய திருவனந்தபுரத்திலே வர்த்திக்கிற என் ஸ்வாமிக்கென்று புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டு ஆச்ரயிக்கவல்லார். [அந்தமில்புகழினரே] - "அமரரர்வார்" என்கிறவனவன்றிக்கே விண்ணுளாரிலும் சீரியராவர்.

அந்தமில்புகழ் அனந்தபுரநகராதிதன்னை*
கொந்தலர்பொழிற் குருகூர்மாறன்சொல்லாயிரத்துள்*
ஐந்தினோடைந்தும்வல்லார் அணைவர்போய் அமருலகில்*
பைந்தொடிமடந்தையர்தம்வேய்மருதோளிணையே. (11)

ஆறா.—நிகமத்தில், இத்திருவாய்மொழிவல்லார் திருநாட்டிலுள்ளார்க்கு போக்யராவரென்கிறார்.
[அந்தமில் என்று தொடங்கி] - முடிவில்லாத புகழையுடையனாய்த் திருவனந்தபுரத்திலே ஸந்நிஹித
னான ஜகத்காரணபூத புருஷனை, ஸம்ருத்தமான திருநகரியையுடைய ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரந்
திருவாய்மொழியிலும்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழிவல்லார் திருநாட்டிலுள்ளார்க்கு போக்யராவர் என்கிறார்.
[அந்தமில்புகழ் அனந்தபுரநகராதிதன்னை] திருவனந்தபுரத்திலே நிரவதிக குணகனும் ஜகத்காரண
பூதனுமானவனை. பரமபதத்தில் குணம் ஸாவதிபோலேகாணும். நித்யவஸந்தமான திருநகரியையுடைய
ஆழ்வார் அருளிச்செய்த. [ஐந்தினோடைந்தும் வல்லார்] - ரத்நங்களை முகமறிந்துசேர்த்துச் சேர்த்தி
களைக் கொண்டாடுமாபோலே, ஐயைந்தாகவாய்த்து அநுபவிக்கிறது. [அணைவர் இத்யாதி] - பரம
பதத்திலே, "சதம் மாலாஹஸ்தா:" இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே, அப்ஸரஸ்ஸுக்களுடைய கொண்
டாட்டத்துக்கு விஷயபூதராவர். "முடியுடைவானவர் முறைமுறை எதிர்கொள்ள" என்றத்தோடு
"வேய்மருதோளிணையை - அணைவர்" என்கிற இத்தோடு வாசியில்லை. "மதிமுகமடந்தைய ரேந்தினர்
வந்தே" என்னக்கடவதிறே.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழிவல்லார் திருநாட்டிலுள்ளார்க்கு போக்யராவ
ரென்கிறார்.

[அந்தமில்இத்யாதி] - திருவனந்தபுரத்திலே நிரவதிக குணனாய், ஜகத்காரணபூதனான
வனை; ஆச்ரயிக்கிறவர்களும் அந்தமில்புகழினர்: ஆச்ரயணீயனும் அந்தமில்புகழினன்காணும்.
பரமபதத்தை விட்டுத் திருவனந்தபுரத்திலேவந்து ஆச்ரிதர்க்காகக் கண்வளர்ந்தருளுகையாலே
புகழுக்குஒருமுடிவில்லையாய்த்து அவனுக்கு; ஸம்ஸாரத்தைவிட்டு உகந்தருளினநிலத்திலே
அடிமைசெய்கையாலே புகழுக்கு அந்தமில்லையாய்த்து இவர்களுக்கு. இவனை அடிமைகொள்ளு
கையாலே புகழுக்குஎல்லையில்லையாய்த்து அவனுக்கு; அவனுக்குஅடிமைசெய்கையாலே
புகழுக்கு அந்தமில்லையாய்த்து இவர்களுக்கு. இஸ்ஸம்ஸாரத்திலேயிருந்தால் இவனுக்குப்
புகழுண்டாகிலாய்த்துப் பரமபதத்திலிருந்தால் அவனுக்குப் புகழுண்டாவது. இந்நிலத்தை
விடவிட இவனுக்குப் புகழுண்டாமாபோலே, அந்நிலத்தைவிடவிட அவனுக்குப்புகழுண்டாம்.
இருவர்க்கும் இரண்டும் அலப்யலாபமிறே. [கொந்தலர்பொழில்குருகூர் இத்யாதி] - நித்யவஸந்த
மான திருநகரியையுடைய ஆழ்வார்அருளிச்செய்த. [ஐந்தினோடைந்தும்வல்லார்] - ரத்நங்களை
முகமறிந்துகோத்துச் சேர்த்திகளைக் கொண்டாடுமாபோலே ஐயைந்தாகவாய்த்து அநுபவிக்
கிறது. [அணைவர்இத்யாதி] - ஸ்ரீவைகுண்டத்தேறப்போய், "சதம் மாலாஹஸ்தா:" இத்யாதி
களிற்சொல்லுகிறபடியே, அங்குத்தை யப்ஸரஸ்ஸுக்களுடைய ஆதரத்துக்கு விஷயபூதராவ
ரென்றபடி. "முடியுடைவானவர் முறைமுறையெதிர்கொள்ள" என்றத்தோடு "வேய்மரு
தோளிணை - அணைவர்" என்கிற இத்தோடு வாசியில்லை. "மதிமுகமடந்தையரேந்தினர்வந்தே"
என்னக்கடவதிறே.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

மூன்றாந் திருவாய்மொழி—வேய்மருதோள் - ப்ரவேசம்

ஒ.—மூன்றாந்திருவாய்மொழியில், ப்ராப்யபூமியில் போக்யதையையும், அங்குப்போனால் அடிமைசெய்யும்படியையும் அநுஸந்தித்து ப்ரீதராய், அப்போதே ப்ராப்யபூமியில் செல்லப்பெறாமையாலும் பண்டு பலகால்பிரிந்த வாஸனையாலும் ப்ரக்ருதியிலே யிருக்கிறமையை அநுஸந்தித்தும், தான் நினைத்ததே செய்யக்கடவதான ஈச்வரனுடைய ஸ்வாதந்த்ர்யத்தை அநுஸந்தித்தும் அவனுக்குத் நம்மை விஷயீகரித்தல்லது நிற்கவொண்ணாத பரமபக்தி நமக்கில்லையாகவும் பார்த்தும், "இப்ப்ரக்ருதியிலே இன்னமும் நம்மை வைத்தருளில் செய்வதென்?" என்னும் பயத்தாலே மிகவும் அவஸந்நரான ஆழ்வார், தம்முடைய தசையை அந்யாபதேசத்தாலே பேசுகிறார். இரவெல்லாம் எம்பெருமானோடே ஸம்ச்லேஷித்து விடிந்தாலும் பிரியக்கடவதாக அவனுக்கு நினைவின்றிக்கே யிருக்கச் செய்தே, ஸகலஸத்த்வங்களும் உணர்ந்து கிளம்புவதுஞ்செய்து, குயில்கள் கூவுவது, மயில்களாலிப்பது, இளங்காற்று வந்துநடையாடாநிற்பது, கன்றுகளும் பசுக்களும் காடெல்லாம் பரவாநிற்பதுமாய்க் கொண்டு போதுவிடிந்தவாறே பண்டென்றும் இக்காலத்திலே பிரியக்கண்ட பழக்கத்தாலே வெருவி, அவன் பசுமேய்க்கப்போகிறானாக அதிசங்கைபண்ணி, அவனெதிரே அவனைப்பிரிந்தால் படும் வ்யஸநத்தைப் படுகிறாளொரு பிராட்டி, அவனைப்பிரிந்து இன்றுயிர்ச்சேவலிலும் மல்லிகைகமழ்தென்றலிலும் படும் வ்யஸநத்தை அவன்முன்பே படாநின்றுகொண்டு நாம் தம்மைக்கொண்டகல்தல் தகவன்றென்று நோவுபடும் ப்ரக்ருதியுமாய், அவன்பக்கல் பரிவுடையாரெல்லாருடைய பரிவையுடையாளான இவள், வ்யஸநத்தின் மிகுதியாலே, "பசுநிரைமேய்க்கப் போகவேண்டா என்று வாயாற்சொல்லவும் க்ஷமையாகிறிலேன்; நான் நினைத்தன சொல்லவல்லேனும்படி உன்னுடைய அணிமிகு தாமரைக் கையை என்தலைமேலே வைத்தருளி உன்னுடைய திருக்கண்களாலே நோக்கியருளி என்னைத் தரிப்பித்தருளவேணும்" என்றும், "ஸப்ரமாதமான காட்டில் பசுமேய்க்கப்போகாதொழியவேணும்" என்றும் சொல்லி மிகவும்ஆர்த்தையாய்க் கூப்பிடுகிறாள். எம்மா வீட்டில், தம்முடைய தாதர்த்த்யத்தை ஆசைப்பட்டார்; இத்திருவாய்மொழியில் நான் ததர்த்தமாகவுமாம், தவிரவுமாம்; எம்பெருமானுக்கு ஸம்ருத்திகளுண்டாம் இத்தனை வேண்டுவதென்கிறார்.

இ.—மூன்றாந்திருவாய்மொழியில், திருவநந்தபுரத்தில் போக்யதையையும் அங்குப்போனால் அடிமைசெய்யும்படியையும் அநுஸந்தித்து, அந்த ப்ராப்யபூமியிலே புகவேணுமென்று ப்ரார்த்தித்தார்; அப்போதே செல்லப்பெறாமையாலே அஸ்த்தாநேபயசங்கையாய் விழுந்தது. ப்ராப்யபூமியில் அப்போதே செல்லப்பெறாமையாலும், ப்ரார்த்தித்தபடியே அடிமைசெய்யப் பெறாமையாலும், முன்பு பலகாலும் பிரிந்த வாஸனையாலும், அநாதிகாலம் வாஸிதமான அசித்ஸம்ஸர்தகத்தாலும், ஈச்வரனுடைய ஸ்வாதந்த்ர்யத்தாலும், - அதாகிறது - சிசுபாலனுக்குத் தன்னைக்கொடுத்தும் ஸ்ரீபரதாழ்வான் வனைப்புக்கிடக்க மறுத்து மீண்டுபோரும்படியுமிறே ஸ்வாதந்த்ர்யமிருப்பது: அத்தாலும், - அவன்தான் வந்து மேல்விழும்படியான பரமபக்தி நமக்கில்லையென்றிருக்கையாலும், "இன்னம் ப்ரக்ருதியிலே தம்மைவைக்கில் செய்வதென் ?" என்னும் பயத்தாலே அவஸந்நரானவர், தம்தசையை அந்யாபதேசத்தாலே பேசுகிறார். இவை தான் பயநிவ்ருத்திக்கு உடலாயிருக்க, கலக்கத்தாலே பயப்படுகிறார். அத்தேசத்தில் புகப்பெற்றிலோம் என்ன வேண்டா; "காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" என்று உபக்ரமத்திலே சிதிலராம்படியான ப்ரேமபாரவச்யத்தாலே இப்போது போகமாட்டாதொழிகிறாராகையாலே. அங்கேசென்று அடிமைசெய்யப் பெற்றிலோமென்ன வேண்டா; புகழும்நல்லொருவனிற்படியே இவர்சொல்முதலாக த்ரிவிதகரணவ்யாபாரங்களையும் அவன் தனக்கெல்லாவடிமையுமாக நினைத்திருக்கையாலே. அசித்வாஸனைக்கு அஞ்சவேண்டா; விலக்ஷணவாஸனையாலே துர்வாஸனையைப் பரிஹரிக்க இருக்கிறவரல்லாமையாலே, ஸர்வசக்தியைக்கொண்டு பரிஹரிக்குமவரிறே; இன்னம் முடியானேயிற்கரணங்களையுடையவர்க்கு பயமில்லையிறே. அவன்ஸ்வாதந்த்ர்யத்துக்கு அஞ்சவேண்டா; விரோதியை இடையிலே துணித்துக் கொண்டு போகைக்கு உடலாகையாலே; "அஹம்த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்றானிறே. பக்தியில்லையென்று அஞ்சவேண்டா; அது உபாயமல்ல. இங்ஙனேயிருக்க, ப்ரேமத்தாலேவந்த இருட்சியாலே அஸ்த்தாநேபீதராய் தம்தசையை அந்யாபதேசத்தாலே சொல்லுகிறார். ராத்ரியெல்லாம்

க்ருஷ்ணனோடே ஸம்ச்லேஷித்து, ப்ரபாதஸமயத்திலே ஸகலஸத்த்வங்களும் உணர்ந்து, குயில்கூவுவது, மயில்களாலிப்பது, இளங்காற்று ஸஞ்சரிப்பது, கன்றுகள் பசுக்கள் காடேகும் பரம்புவதாகிறவற்றைக் கண்டு, அவனுக்குப் பிரியக்கடவதாக நினைவின்றிக்கேயிருக்கப் பண்டுஎன்றும் இக்காலந்தன்னிலே, பிரிந்து போந்த வாஸனையாலே அவன் பசுமேய்க்கப் போகிறானாக அதிசங்கைப்பண்ணி, போனானாக அத்யவஸித்து, "நீயும்பிரிந்தாய்; நீ பிரிந்தால் நலியக்கடவ பதார்த்தங்களும் நலியாநின்றன: பசுமேய்க்கப் போமது எனக்கு அநபிமதம். நீபோகவேண்டா என்றுசொல்லவொண்ணாதபடி என்னுடையநாக்கு நீரற்றுவாராநின்றது. நான் நினைத்தது சொல்ல வல்லேனும்படி உன்னுடைய அணிமிகு தாமரைக் கையை என்தலையிலே வைத்தருளி உன்திருக்கண்களாலே நோக்கியருளவேணும்; அஸுரராக்ஷஸ ஸஞ்சாரத்தாலே ஸப்ரமாதமானகாட்டில் பசுமேய்க்கப் போகாதொழியவேணும்."—"மாதா பிதா ப்ராதா" என்று இவ்வாத்மாவுக்கு ஸர்வவிதபந்துவுமென்று உணர்ந்தால் தன்னிழலிற்காட்டில் இவனுக்குப் பரியவேண்டும்படியாயிறே யிருப்பது; ஆனபின்பு,- "நீபோகில் நானுளனாகமாட்டேன்" என்று இன்னுயிர்ச்சேவலிலும் மல்லிகைகமழ்தென்றலிலும் அவனைப் பிரிந்து பட்ட வ்யஸநத்தை அவன் ஸந்நிதியிலேபட, அத்தைப்பார்த்து, "நாம் போகக் கடவோமல்லோம்; நாம்போக நினைப்பதும் செய்தி லோம்" என்று தான் போகாமையை இவள்நெஞ்சிலே படுத்த, அத்தாலே தரித்தாளொரு பிராட்டி பேச்சாலே தம் தசையை யருளிச்செய்கிறார். எம்மாவீட்டில், தம்முடைய தாதர்த்த்யத்தை ஆசைப்பட்டார்; இதில் அவன்ஸம்ருத்தியை ஆசாஸிக்குமிதுவே புருஷார்த்தமென்கிறார்.

ஈடு.—திருவனந்தபுரத்திலேபுக்குப் பாரித்தபடியே அடிமைசெய்யப் பெறாமையாலே, அதிசங்கைபண்ணவேண்டும்படியாய் வந்து விழுந்தது.

ஸ்ரீவைஷ்ணவர்களும் தாமுமாய் அடிமைசெய்யவேணுமென்று பாரித்தார்; பாரித்த படியே அத்தேசத்திலே போய்ப் புக்கு அடிமைசெய்யப் பெற்றிலர். அத்தேசத்திலே அப்போதேபோய்ப் புகப்பெறாமையாலும், பாரித்தபடி அடிமைசெய்யப்பெறாமையாலும், நெடுநாள் பிரிந்துபோந்த வாஸனையாலும் - அநாதியாய்வருகிற அசித்ஸம்ஸர்க்கத்தை அநுஸந்தித்து அஞ்சினவர்சத்தாலும், ஈச்வர ஸ்வாதந்த்ர்யத்தை அநுஸந்தித்து அஞ்சின படியாலும், - அதாவது - சிசுபாலனுக்குத் தன்னைக்கொடுத்து ஸ்ரீபரதாழ்வானுக்கு மறுத்துப் போன ஸ்வாதந்த்ர்யமிறே,—இனி ஸர்வேச்வரன் தானேவந்து விஷயீகரிக்கைக் கீடான பக்தி தமக்கு இல்லையென்றிருக்கையாலும், (இன்னமும் ப்ரக்ருதியிலே வைக்கில் செய்வதென்? என்னும் பயத்தாலே அவஸந்நராய்) தமக்குப்பிறந்த தசாவிசேஷத்தை ஒருபிராட்டிபாசுரத் தாலே அருளிச்செய்கிறார். பயநிவ்ருத்திக்கு உடலான இதுதானேயிறே இப்போது இவர்க்கு பயஹேதுவாகிறது. இப்போதே அத்தேசத்திலே போய்ப் புகப்பெற்றிலோம் என்றிருக்க வேண்டா: அவனை அநுஸந்தித்தால் "காலாழும் நெஞ்சழியும்" என்று பக்திபாரவச்யத்தாலே இப்போது அடியிடமாட்டாது ஒழிகிறாராகையாலே, அடிமைசெய்யப்பெற்றிலோமென்று அஞ்சவேண்டா; புகழுநல்லொருவனிற்படியே இருந்தவிடத்தேயிருந்து ஏதேனுமாகச்சொன்ன வற்றையே தனக்கு அடிமையாகக்கொள்ளும் ஸ்வபாவத்தாலே. இன்று நினைத்தவற்றையும் செய்தவற்றையுமெல்லாம் தனக்கு அடிமையாக நினைத்திருக்குமவனிறேயவன். இனித் தமப்பன் பகையாக அவனிலும் இவன் அனன்யனென்று வராநின்ற ப்ரஹ்லாதனிறே முடிவிலே வந்து எதிரிட்டான். ஆக, ப்ராக்தனுக்குப்பிறந்த தெளிவுபோலலே அசித்ஸம்ஸ்ருஷ்டனுக்குப் பிறக்கும் ஜ்ஞாநத்தை விச்வஸிக்கவொண்ணாது என்றிறே இவர்தாம் ப்ரக்ருதி ஸம்பந்தத்தை நினைத்து "தேறேன்என்னை" என்று அஞ்சிற்றும்; அங்ஙனஞ்சவேண்டா, மூடியானையிற் கரணங்களை யுடையவராகையாலே; அவன்ஸ்வாதந்த்ர்யத்தை நினைத் தஞ்சவேண்டா; *ஸர்வ பாபேப்யோமோக்ஷயிஷ்யாமி* என்று விரோதியைத் துண்டித்துக்கொண்டு போகைக்கும் உடலாயிருக்கையாலே. பக்தி தமக்கு இல்லையென்றிருக்கவேண்டா; ப்ரபத்தியை யுபாயமாகப் பற்றினவராகையாலே. இனி, *நோபஜநம் ஸ்மரந்* என்கிறபடியே இத்தை ஸ்மரியாதபடியான ஸாக்ஷாத்காரமில்லாமல் படுத்துகிறபாடிறே இது. ப்ரத்யக்ஷமும் அகிஞ்சித்கரமாய், கூட விருக்கச்செய்தே "பிரிந்தான்" என்று ப்ரமிக்கும்படி பிரிவால்வந்த வாஸனை மேற்கொள்ளு கிறதிறே. யோக்யதையிடந்து, படுத்துகிறபாடிறே. "மயர்வறமதிநலமருளினன்" என்று -

பகவத்ப்ரஸாதலப்தமாய், பரபக்திரூபமாய், ருசிகார்யமாயிருக்கிற இருட்சி யிருக்கிறபடியிறே இது. இனி, ஈச்வரனுக்குக் கால்நடையாடாததொரு தேசத்திலே இவரை வைத்துப் பரிஹரிக்கலாமத்தனை. கலந்து கொடுகாள் பிரிந்து போந்தாள் ஒருபிராட்டியாய், அவ்வாஸனை யாலே, க்ருஷ்ணன் கூடவிருக்கச்செய்தேயும், இவன் பண்டுபிரிந்துபோந்த ப்ராதகாலமும் வந்து அக்காலத்துக்கு அடைத்த காற்றுக்கள் அடிக்கையாலும், குயில்கள்கூவுகையாலும், மயில்கள் ஆலிக்கையாலும், காடெங்கும் ஒக்கக் கன்றுகளும் பசுக்களும் பரக்கையாலும், "இக்காலத்தில் அவன் போகைதவிரான்; பசுக்களினுடைய ரக்ஷணம் ஒருதலையானால் அவற்றைவிட்டு நம்மோடிருப்பான் ஒருவனல்லன்; ஆனபின்பு, அவன் போனான்" என்று கூட விருக்கச்செய்தேயும் அவன்பிரிவை நிச்சயித்து, ஒரு "இன்னுயிர்ச்சேவல்" "மல்லிகைகமழ் தென்றல்" தொடக்கமானவற்றில் அவன் அஸந்நிதியிற் பட்ட க்லேசத்தையடைய அவன்கண் முகப்பேபட்டு, ஸர்வசக்தியான அவன் தனக்கும் பரிஹரிக்கவொண்ணாதபடியாய்த்து இவ்வா பத்து. அதாவது - போனானாய் வருகிறானல்லன், போகநினைத்தானாய்த் தவிருகிறானல்லனே. இப்படிநோவுபட்டு, "நீ ஸர்வதா பசுமேய்க்கப்போகை தவிராய்; உன்போக்கு எனக்கு அநபிமதம்; ஆகையாலே உன்னுடையபோக்கை விலக்கவேணுமென்று நினையாநின்றேன்; இதுக்கு நாநீர் வருகிறதில்லை; அதுக்குப் பரிஹாரமாக உன்கையை என்தலையிலேவைக்க வேணும்; நீ பசுமேய்க்கப்போகாதொழியவேணும்; 'ஸப்ரமாதமானகாட்டில் நீ பசுமேய்க்கப் போனால் அங்குள்ள அஸுரராக்ஷஸாதிகளாலே என்புகுருகிறதோ?' என்று அஞ்சாநின்றேன்". இனி, *மாதா பிதா ப்ராதா நிவாஸ: சரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயண:*என்றுஅவன் ஸர்வவிதபந்து வுமாயிருக்குமாபோலே, இத்தலைக்கும் ஸம்பந்தஜ்ஞாநம்பிறந்தால் எல்லாபிரிவுகளும் உண்டா யிருக்குமிறே: *யதாயதாஹி* என்கிறபடியே. ஆனபின்பு. நீ போகில் நான் உளனாகமாட்டே னென்று இப்படி நோவுபட, அவனும் இத்தையடைய அநுஸந்தித்து, "நான் போகிறேனல் லேன்" என்று, 'தான்போகாமையை இவள்நெஞ்சிலேபடுத்தித் தரிப்பிக்கத் தரித்ததாய்த்தலைக் கட்டுகிறது இத்திருவாய்மொழியில். இத்தால்- தாதர்த்த்யத்தினுடைய எல்லையிருக்கிறபடி யிறே. எம்மாவீட்டிலே "தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே" என்று விஷகர்ஷித்ததொன்று உண்டிறே; அத்தைஅழிக்கிறதாய்த்து இங்கு. என்னைக்கொள்ளவேணுமென்றிறே அங்குச் சொல்லிற்று; என்னோடு கலக்கவுமாம், வேறே சிலரோடே கலக்கவுமாம், அங்குத்தைக் குறை நிருமத்தனை வேண்டுவதென்கிறது இங்கு. அதுதன்னில் எனக்கு என்றவிடம், புருஷார்த்த மாகைக்காகச் சொன்னவித்தனையிறே. அது அசித்வ்யாவ்ருத்திக்கு உடலாமித்தனை. இவன் தான் எனக்கு என்னுதவன்று புருஷார்த்தமாகாது, அவன்தான் விரும்பி ப்ரவர்த்திப்பதும் செய்யான்.

வேய்மருதோளிணைமெலியுமாலோ! மெலிவும்என் தனிமையும்யாதும் நோக்கா*

காமருகுயில்களுங்கூவுமாலோ! கணமயிலவைகலந்தாலுமாலோ!*

ஆமருவினநிரைமேய்க்கநீபோக்கு ஒருபகலாயிரமூழியாலோ!*

தாமரைக்கண்கள்கொண்டீசர்தியாலோ! தகவிலைதகவிலையேநீகண்ணா! (1)

ஈ.—முதற்பாட்டில், எம்பெருமான் பிரிகிறானென்று வ்யஸநப்படாநிற்கச் செய்தே அதுக்கு மேலே குயில்தொடக்கமான பதார்த்தங்களுடைய த்வநிகளாலும் அவனுடைய நோக்காலும் தனக்குப் பிறந்த அவஸாதத்தை வாயாலே தோழிமார்க்குச் சொல்லுமாபோலே அவனுக்கு அறிவிக்கிறாள். [வேய்மரு தோள்] - உனக்கு ஸ்ப்ருஹணீயமான தோள். [மெலியும் என்று தொடங்கி] - உன்னைப் பிரிந்திருக்கிற என்னுடைய அவஸாதமும் இவ்வவஸாதத்திலே எனக்கு ஒருதுணையின்றிக்கே யிருக் கிறமையையும் ஒன்றும்பாராதே பரஸ்பரம் விருப்பமுடைய குயில்களும் கூவாநின்றன; அதுக்குமேலே மயில்கள் திரண்டு கலந்து ஆலாநின்றன. கண்டு தரிக்கமாட்டாமையாலே முகத்தைத் திரியவைத்து 'அவை' என்கிறாள். [ஆமருவென்று தொடங்கி] - உன்னோடும் மருவித் தன்னிலொத்த பசு நிரைகளை

மேய்க்கைக்கு நீபோகிற ஒருபகல் ஆயிரம்ஊழி யாகாநின்றது என்று இவள் சொல்ல; "இதொரு ஸ்வபாவமிருக்கும்படியே?" என்று ப்ரீதனாய் அவன் நோக்க; நீ பசு மேய்க்கப்போமதிலுங்காட்டிலும் அழகிய திருக்கண்களாலே நோக்கி நோவுபடுத்தா நின்றாய்; க்ருஷ்ணனே! நீயிருக்கிற லோகத்தில் க்ருபாதத்த்வமில்லை, அங்குண்டாகிலும் உன்பக்கல் கருணையில்லை என்கிறாள்.

இ.—முதற்பாட்டில், அவன்பிரிகிறா னென்கிற வ்யஸநம் செல்லாநிற்க, அதுக்குமேலே குயில் தொடக்கமான பதார்த்தங்களின் த்வநிகளாலும் அவன்நோக்காலும் தனக்குப்பிறந்த அவஸாதத்தை, தோழிமார்க்குச் சொல்லும் பாசுரத்தாலே அவன்தனக்குச் சொல்லுகிறாள். [வேய்மருதோளிணை] - பசுமைக்கும் சுற்றுடைமைக்கும் செவ்வைக்கும் வேயைப் போலியாகச்சொல்லலாம் தோள்கள்இரண்டும். [இணைமெலியுமாலோ] - நீ சேர்த்தியழகு கொண்டாடும் தோள்களிரண்டும் பட்டபாடு பாராய்! தன்தோளழகைத் தான்சொல்லுமவளல்லள்; அவன் கொண்டாடக் கேட்டுப்போந்தவளாகையாலே சொல்லுகிறாள். ராஜபுத்ரனுக்கு "பூந்தோட்டமழியாநின்றது" என்பாரைப்போலே, உன்போகோப கரணங்கள் அழிகிறபடி பாராய்! என்கிறாள். கிண்ணகத்திலே அடிச்சுடுமாபோலே, அவன் கூடி யிருக்கச்செய்தே ப்ராந்திஜ்ஞாநத்தை யநுவர்த்தித்துத் தோளிணை மெலியாநின்றன. இவள்ஸந்நிதி யிலும் அகவாயிற் பிரிவுகிடக்கையாலே அதின்கார்யம் உடம்பிலும் உண்டாகாநின்றது. [மெலியு மாலோ] - இனி நீவந்தாலும் அஸத்ஸமமென்கை. [ஆலோ] - விஷாதாதிசயஸூசகமாய்க் கிடக்கிறது. [மெலிவும் என்தனிமையும்] - நாட்டாருடைய மெலிவும் தனிமையும்போலல்ல, என்மெலிவும் தனிமையும். உன்தனிமையும் உன்மெலிவும்போலல்ல. "மிக மேனி மெலிவெய்தி" என்றும் "தமியமாலோ" என்றும் பிரிவிற்சொன்னவையுமன்று; அவன்கூட விருக்கச்செய்தே வந்த மெலிவும் தனிமையுமிறே இது, இங்ஙன்கூடுமோவென்னில்: "தாம் தம்மைக்கொண்டகல்தல் தகவன்று" என்னுமவள் கூடவிருக்கச் செய்தே பிரிந்தானாகச் சொல்லவும் தட்டில்லையிறே; இவள்தன்னாலும் ஸமாதேயமன்று; போனானுமிட்டு வருகிறானல்லன்; போககினைத்தானும் தவிருகிறானல்லன். அவனும் இவள்தோளில் மெலிவில் மெய்ப்பாட்டைக்கண்டு "நாம் பிரிந்தோமோ" என்று ப்ரமிக்குமத்தனை; அதுதான் இவள்தன்னுடைய ஸௌபாக்யபலமிறே. முன்பு பிரிந்தால் இவளுடைய ஆற்றாமை தோழிமார் சொல்லக் கேட்டுப்போரு மித்தனை: இப்போது, தானேயிருந்து காணப்பெற்றான். தோழிமாரோடே பண்ணும் வ்ருத்தகீர்த்தனத்தை இவள்தன்னோடே பண்ணுகிறாள். [யாதும் நோக்கா] - ஒன்றும் நோக்கா. என்மெலிவாதல், என்தனிமை யாதல், ஒன்றும் பார்க்கிறனவில்லை. [காமருகுயில்களும்] - காமருதல் - விரும்புதல். பரஸ்பரம் விருப்பத்தை யுடைத்தாயிருக்கை. பிரிவுக்குடலான கலவியன்றிக்கே நித்யஸம்ஶ்லேஷத்துக்கடியான ப்ரீதியோடே கலவாநின்றன. நீ கலிகிறதுக்குமேலே குயில்களும் நலியாநின்றன. நீ கலியவிட்ட பதார்த்தங்களிலும் நீயேநல்லை. [கூவுமாலோ] - தனியிருப்பில் என்நோவைக்கண்டால், கலவிக்குப் போக்குவிடுகிற தங்கள் வாயைப் புதைக்க வேண்டாவோ? [மணமயில்லை] - ஒரு திரளாக பாதகமாகா நின்றன. [அவை] - த்ருஷ்டிவிஷம்போலே யிருக்கையாலே, முகத்தைத் திரியவைத்து 'அவை' என்கிறாள். [கலந்தாலுமாலோ] - "இத்தனியிருப்பிலே கலக்கையாவது ஸ்த்ரீவதம்" என்றிருக்கவேண்டாவோ? இவற்றுக்குக் கலவியால் உண்டான ஹர்ஷம் உள்ளடங்காமையாலே ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணுகின்றன. "பஶ்ய லக்ஷ்மண ந்ருத்யந்தம் மயூரமுபந்ருத்யதி, மயூரஸ்ய வநே நூநம் ரக்ஷஸா ந ஹ்ருதா ப்ரியா". இம்மயிலினுடைய பேடை அவனாலே அபஹ்ருதசித்தையாய்த்தில்லை யாகாதே! "புண்டரீகவிஶாலாக்ஷீ கதமேஷா பவிஷ்யதி" என்னவேண்டியிருக்கிற தசையிலே, நீயும் உன்னுடைய ரக்ஷ்யவர்க்கத்தினுடைய ரக்ஷணத்தே போகாநின்றாய். [ஆமருவினநிரைமேய்க்க] - உன்னோடு மருவித் தன்னிலொத்த பசு நிரைகளை மேய்க்கைக்கு. [மருவினநிரை] - "மேய்ந்தபுல்லும் கடைவாய்வழிசோர" என்கிறபடியே, அவனை யொழியில் தரியாதவையிறே. ரக்ஷிக்கும்போதும் திரளாகவேணுமோ? [நீ போக்கு ஒருபகல்] - நீ போகிற ஒருபகலென்னுதல், உன்னுடைய போக்கான ஒருபகலென்னுதல்; இவை சப்தத்திலே யிறுக் குண்டு. போகவிடுகிற ஒருபகல், நீ கழிக்கிற ஒருபகலென்னுதல்; இது சப்தத்துக்குச்சேரும், சொல்லிப் போருமதன்று. "ஒருபகலன்றோ?" என்ன,—உன்னைப்போலே என்றிராதே கொள்ளாய்; உனக்கிறே ஒருபகலாயிருக்கிறது; அதுதானே எனக்கு அநேககல்பமாயிராநின்றது; "யதாயுதகோடி ப்ரதிம; க்ஷணஸ்தேநவிநாऽபவத்". [தாமரைக்கண்கள் கொண்டுஈர்தியாலோ] - "நாம் பிரிந்திலோம், பிரியநினைத்திலோம்; இப்படி யிருக்க, போனோமுமாய், போனால் நலியக்கடவ பதார்த்தங்களும் நலிந்ததா

யிருக்கிற இது. ஒரு ப்ரேமஸ்வபாவமிருக்கும்படியே !'' என்று ஸாதரமாகப்பார்க்க, அழகிய திருக்கண்களாலேநோக்கி நோவுபடுத்தாநின்றாய் என்கிறாள். இந்நோக்கிற்காட்டில் நீ பசுமேய்க்கப்போக அமையுமென்கை. "முன்புத்தை நோக்கு ஸ்ம்ருதிவிஷயமாகச் சொல்லுகிறாள்'' என்பாருமுண்டு 'ஈர்தி' - என்கையாலே இப்போது பார்த்தானாகவேணும். இப்படி சொன்னவிடத்திலும் நோக்கை மாறவைத்திலன். [நகவிலை தகவிலேபோகிகண்ணா] - [தகவிலை] - நீஇருந்த லோகத்தில் க்ருபையில்லை. [கண்ணா - நீ - தகவிலை] - ஜகத்திலுண்டாகிலும், க்ருஷ்ணனே ! உன்பக்கல் க்ருபையில்லை என்னுதல்; வீப்ஸையாலே உனக்கு க்ருபையில்லை என்று நான் கொடியெடுக்கிறேனென்னுதல். "ஸீதாவிலாஸநபடோ: கருணா குதஸ்தே'' 'ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம் உத்த்ருத்ய புஜமுச்யதே'. விலக்காதவளைவைக்கொண்டு பிறரையின்னாதாகிறதென் ? உன்பக்கல் க்ருபையில்லை; "ஏவமார்த்தாஸுயோஷித்ஸு க்ருபா கஸ்யகஜாயதே''.

சு.—முதற்பாட்டு. அவன்பிரிகிறானென்கிற வ்யஸநம் செல்லாநிற்க, அதுக்குமேலே நூயில்தொடக்கமான பாதகபதார்த்தங்களின் த்வநியாலும் அவன்நோக்காலும் தனக்குப் பிறந்த அவஸாதத்தைத் தோழிமார்க்குச் சொல்லுமாபோலே அவன்தனக்குச் சொல்லுகிறாள்.

[வேயிந்பாடு]-சுற்றுடைமையாலும் பசுமையாலும் வேயை ஒருவகைக்குப் போலியாகச் சொல்லலாயிருக்கிற தோள்களிரண்டும் மெலியாநின்றனவென்கிறாள்; செருக்கனாயிருக்கும் ராஜபுத்ரனுக்கு "உன்பூந்தோட்டம்அழிகிறது" என்பாரைப்போலே. தன்பிரிவில் இவளாற்றாமை கேட்டார்வாய் கேட்கையன்றிக்கே கைம்மேலே காணலாயிருக்கிறதுகாணும் இவள்மெலிவு. இவளுடைய ப்ராப்தியை யநுவர்த்தித்து, விண்ணகத்திலே ஈடிச்சுடுவாரைப்போலே அவன் கூடவிருக்கச் செய்தேயும் மெலியாநின்றனவாய்த்துத் தோள்கள். கூடவிருந்தாலும் ப்ரயோஜநமில்லையிறே அகவாயிலே பிரிவுண்டானால்; அதின்கார்யமான மெலிவு பிறந்தன்றியிலையிறே. தன்தோள்கள் மெலிகிறவித்தை "உன்னுடையதோள்கள்மெலியாநின்றன'' என்பாரைப்போலே சொல்லுகிறாள் காணும்! தேவதத்தனென்றத்தோடு வாஸுதேவசப்தத்தோடு வாசியறும்படி அவனுக்கு ப்ரகாரமாயிறே இவ்வாத்மவஸ்து இருப்பது. நீ கலக்கப்புக்கால் விடாயாறுவதெங்கே? மெல்லியல் தோள்தோய்ந்திறே விடாயாறுவது. [இணை] - நீ சேர்த்தியழகுசொல்லி வாய்வெருவும் தோள்கள் படுகிறபாடு பாராய் ! தன்னழகைத் தான் கொண்டாடுமவளல்லளே; அவன்சொல்லக் கேட்ட செவியேற்றாலே சொல்லுகிறாளிறே. இனி நீ வந்தாலும் அஸத்ஸமங்கிடாய். [ஆலோ !] - விஷாதாதிசய ஸூசகமிருக்கிறபடி. [மெலிவும் என்தனிமையும்] - நாட்டார்மெலிவும் தனிமையும்போலல்லவிறே என்மெலிவும் என் தனிமையும். உன்மெலிவும் உன்தனிமையும்போலல்ல; கூடவிருக்கச்செய்தே வருகிற தனிமையும், பிரியாதிருக்கச்செய்தே வருகிற மெலிவுமிறே இது. "பொன்செய்பூண்மென்முலைக்கென்றுமெலியுமே'' என்றும், "மிகமேனிமெலிவெய்தி'' என்றும், "தமியமாலோ'' என்றும் சொன்னவற்றி னளவல்லவிறே. அவன்அஸந்நிதியில் பட்டவையிறே அவை; கூடவிருக்கச்செய்தே வருகிறதிறே இது. "தாந்தம்மைக்கொண்டகல்தல் தகவன்று'' என்று தாம்போவார் தம்மை வைத்தன்றோ போகக்கடவது என்னக்கடவ அவளுக்கு, கூடவிருக்கச் செய்தே போனானென்று நினைக்கவுமாமிறே ப்ரேமஸ்வபாவத்தாலே. அவன்தான் போனானும் வருகிறானல்லன், போகவினைத்தானாய்த் தவிருகிறானல்லன்; அவனாலும் அப்ரதிக்ரியமிறே இது. அவன்தானும், இவள்மெலிவில் மெய்ப்பாட்டைக்கண்டு "நாம்பிரிந்தோமோ? என்று ப்ரமிக்கும்படியிறே யிருக்கிறது. இருவரும் இருவர்க்கும் ஸமத்தங்காயானால் தெளியவிரகில்லை. இதுதான் அவனுடைய ஸௌபாக்யபல மிருந்தபடியிறே. முன்பு இவள்பிரிவாற்றாமையால் பட்டவையெல்லாம் தான் கண்டறியானே; தோழிமார் மற்றையார்சொல்லக் கேட்டார்வாய் கேட்குமித்தனையிறே; "வாஹி வாத" இத்யாதிவத்; இப்போது, தன் கண்ணாலே காணப்பெற்றானே. இவள்தான் தோழிமாரோடு சொல்லுமத்தை, இப்போது அவன் தன்னோடே சொல்லுகிறாளிறே. [யாதும்நோக்கா] - தன்னையும் பார்க்கிறதில்லை. தோளின் மெலிவும் தனிமையும் இவையொன்றும் பார்க்கிறானில்லை. [காமறுகுயில்களும்] - காமறுதலாவது விருப்பம். இவற்றினுடைய கலவி பிரிவுக்கு உடலாயிராமையாலே மேன்மேலென விருப்பத்தை யுடைத்தாயிருக்குமிறே. கலவி பிரிவோடே வ்யாப்தமென்னும்

பயமில்லை இவற்றுக்கு. [குயில்களும்] - நீயேயன்றிக்கே, இவையும் பாதகமாகாநின்றன. நீ பாதிக்க வரவிட்ட பரிகரத்திற்காட்டில் இன்னமும் நீதானே நல்லை. [கூவுமாலோ] - என் தசையைக்கண்டால் இவற்றுக்கு வாயைப்புதைக்க வேண்டாவோ? பிரிந்து நோவுபடுகிற என்படியைக் கண்டால் "நஞ்சுபோலே நம்முடைய த்வநி இவளுக்கு பாதகமாம்" என்று தவிரவேண்டாவோ? *கஸ்யாந ராத்யதே சித்தம்* - உருவினவாள் உறையிலேயிடவேண்டும்படி காணும் இவளுடைய தசை. [கணமயில்] - எதிர்த்தலையையும் தனியேவைத்து நோவுபடுத்தித் தானும் தனியேயிருந்து நோவுபடுவாரைப்போலே யன்றிக்கே, சேர்த்தியையுடையவா யிரா நின்றதாய்த்து இவை. [அவை] - த்ருஷ்டிவிஷம்போலே யிருக்கையாலே முகத்தை மாறவைத்து 'அவை' என்கிறாள்; கண்கொண்டு காணப்போகாமையாலே ஒரு திரளாக பாதகமாகாநின்றதாய்த்து. [கலந்து] - "இவ்வளவில் நாம் கலக்கை ஸ்த்ரீவதம்" என்றறிந்து மீளுகிறதில்லை. [ஆலுமாலோ] - கலந்த கலவியால் வந்த ஹர்ஷத்துக்குப் போக்குவிட்டு ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணுகின்றனவென்று ப்ரத்யக்ஷித்துவைத்து, 'அவை' என்னும்போது முகத்தை மாறிச்சொல்லுகிறாளாய் இருந்ததிறே. *மயூரஸ்ய* - இருவராயிருப்பார் எல்லாரையும் பிரித்தானென்றேயிருக்கிறாள். மயிலினுடைய பெண்டாட்டியை ராவணன் கொண்டுபோய்த்திலனே? *வநே* - திருவயோத்யையிலேவந்து பிரித்தானல்லனே! போகத்துக்கு ஏகாந்தமானகாட்டிலேயிறே. *ரக்ஷஸா ஹ்ருதா ப்ரியா* - நீர்மைகேடனான அப்படுகொலைக்காரனால் பிரிக்கப்படாதது இதொன்றுமேயாகாதே! [ஆமருவுஇத்யாதி] - இவ்வளவில் *கதமேஷா பவிஷ்யதி* என்னவேண்டியிருக்க, அதுசெய்யாதே, அவன் தன்னுடைய ரக்ஷ்யவர்க்கத்தினுடைய ரக்ஷணத்திலே ஒருப்படாநின்றான். உன்னோடே மருவித் திரளாயிருக்கிற ஆநிரையுண்டு-பசுநிரை; அத்தைமேய்க்க. "மேய்ந்தபுல்லும் கடைவாய்வழி சோர" விறே நிற்பது; வேறொன்றின்றிக்கே இவனோட்டைச் சேர்த்தியேயிறே இவற்றுக்கு தாரகம். [இனம்] - அவனுடைய ரக்ஷ்யகோடியிலே யன்வயித்தாலும் தனியராயிருப்பாரை ரக்ஷிக்க நினையான்; திரளாயிருப்பாரையாய்த்து அவன் ரக்ஷிக்க நினைப்பது. [நீபோக்கொருபகல்] - நீபோகிற ஒருபகலென்னுதல்; உன்னுடைய போக்கான ஒருபகலென்னுதல்; அன்றிக்கே, பசுக்களை மேய்க்கைக்காக நீபோகவிடுகிற பகல் என்னவுமாம். "இதெல்லாம் ஒருபகலனவேயன்றோ?" என்றான். [ஆயிரம் இத்யாதி] - உன்னைப் போலேயென்று இராதேகொள்ளாய் எங்களையும். இரவொன்றும் பகலொன்றும் உத்தேச்யமாயிருப்பார்படியா யிராதுகாண், எல்லாக்காலத்திலும் ஒன்றேபோதுபோக்காக இருப்பார்க்கு. *யதாஉப்தகோடிப்ரதிம: க்ஷணஸ் தேநவிநாஉபவத்*. 'போனோமல்லோம், போகநினைத்தோமல்லோம்; நாம் கூடவிருக்கச் செய்தே பிரிந்தோமாகக்கொண்டு நோவுபட்டுப் பதார்த்தங்களுமடைய பாதகமாயிருப்பதே! இதொரு ப்ரேமஸ்வபாவம் இருக்கும்படியென்?' என்று கண்ணாலே குளிரநோக்கினான்:— [தாமரைக்கண்கள்கொண்டீர்தியாலோ] - நீ நோக்காலே நலிவதில் இன்னம் பசுமேய்க்கப் போகையே நன்று. "முன்புத்தைநோக்கு ஸ்ம்ருதிவிஷயமாய்ச் சொல்லுகிறாள்" என்பாருமுண்டு; "ஈர்தி" என்கையாலே இப்போது நலியாநின்றாய் என்றே சொல்ல அமையுமிறே. இப்படி சொல்லச்செய்தேயும் நோக்கை மாறவைத்திலன். [தகவிலை] - ஜகத்தில் க்ருபையில்லைகிடீர் என்கிறாள்; அவனை விலக்குவார் இல்லையாகாதே. நம்மோடு விரோதித்தாரை இன்னதாகிறதென், இவன் நம்மை நலியாநிற்க? ஒன்றுக்கு அங்கதோஷமுண்டு, ஒன்றுக்கு ஸம்ஸர்க்க தோஷமுண்டு: ஆனபின்பு, இவை நம்மோடே விரோதிக்கை ப்ராப்தமன்றோ? மயில், ஸுப்ரஹ்மண்யனுடைய வாஹநமாகையாலே ஸம்ஸர்க்க தோஷமுண்டு; குயில், பரபுக்கினுடைய அங்கத்தை புஜிக்கையாலே அங்கதோஷமுண்டு. [நீ - தகவிலை] - உனக்குந் தகவில்லை. "தகவுடையவனே" என்று கூப்பிடுமவன்கிடீர், அவன்ஸந்நிதியிலே இப்போது 'தகவிலை' என்கிறாள், நீ தகவுடையையல்லை. மேலில் "தகவிலை" என்கிறதுபோலன்றிறே, முற்பட்டதுக்குத் தகவில்லையென்று பொருளாய், காட்டில் க்ருபையில்லையென்னவுமாம்; அன்றியே இரண்டும் தகவிலை என்றேயாம், அப்போது இரட்டிப்புக்குக் கருத்து - நீ தகவுடையையல்லையென்னுமிடந்துக்குக் கோடியெடுக்கிறேன் என்கிறாள். *ஏவமார்த்தஸ்ய யோஷித்ஸ்ய க்ருபா கஸ்ய நஜாயதே* என்கிறபடியே.

தகவிலைதகவிலையே நீகண்ணா! தடமுலைபுணர்தோறும்புணர்ச்சிக்கூரா*
சுகவெள்ளம்விசும்பிறந்து அறிவைமூழ்க்கச்சூழ்ந்து அதுகனவென
நீங்கியாங்கே*
அகவுயிரகமகந்தோறும்உள்புக்கு ஆவியின்பரமல்லவேட்கை அந்தோ!*
மிகமிகஇனிஉன்னைப்பிரிவையாமால் வீவநின்பசுநிரைமேய்க்கப்
போக்கே. (2)

ஒ.—இரண்டாம்பாட்டில், இங்ஙனே இப்பிராட்டி சொல்லாநிற்கச்செய்தே இவள் தரிக்கைக்காகப் பலகாலும் அணைத்தருள, நீ இங்ஙனே ஸம்ச்லேஷித்து நிரதிசயஸுகம் பிறக்கச்செய்தே அந்த ஸுகமெல்லாம் நீ போகக்கடவையென்னுமதிஞலே ஸ்வப்நங்கண்டு விழித்தாப்போலே பொய்யாய் நோவுபடாநின்றேனென்கிருள். பூர்வவ்ருத்தமான ஸம்ச்லேஷந்தன்னையே சொல்லிற்றாகவுமாம். [தடமுலையென்று தொடங்கி] - தடமுலைபுணர்தோறும் புணர்ச்சியின் அளவல்லாத ஸுகவெள்ளம் அபரிச்சேத்யமான ஆகாசத்தையும் கடந்து என்னுடைய அறிவுகெடும்படி பெருகினது, ஸ்வப்நம்போலேயாய்; போய். [ஆங்கே என்று மேலுக்கு] - அத்தசையிலே ஸம்ச்லேஷவிச்லேஷங்களால் இடமுடைத்தான ஹ்ருதயத்திலுள்ளுண்டான அவகாசங்கள் தோறும் உள்ளே சென்றுபுக்கு அபிநிவேசம் பொறுக்குமளவன்றிக்கே யிராநின்றது; பலகாலும் உன்னைப்பிரிகையுண்டாம்படி நீ பசுநிரை மேய்க்கப் போம் போக்கெல்லாம் வீவனவாகவேணும்.

இ.—இரண்டாம்பாட்டில், இவள் தரிக்கைக்காகப் பலகால் அணைத்தருள, இஸ்ஸம்ச்லேஷமெல்லாம் நீபோகக்கடவை என்னுமதிஞலே ஸ்வப்நங்கண்டு விழித்தாப்போலே பொய்யாய், நோவுபடாநின்றேனேன்கிருள். பூர்வ வ்ருத்தமான ஸம்ச்லேஷத்தைச் சொல்லிற்றாகவுமாம். [தகவிலைதகவிலை இத்யாதி] - [நீகண்ணா - தகவிலையே] - பெண்பிறந்தார்க்கு ஸ்வம்மான நீ நிர்த்தயனே யாகாநின்றாய். க்ருஷ்ணனென்றால் பெண்களுக்கேயாயிருக்குமென்னுமிடம் ப்ரஸித்தமிறே. "நாம் பிரிய நினையாதிருக்க நிர்த்தயன் என்கிறது தன் ஆற்றாமையாலேயிறே" என்று அதுக்குப்பரிஹாரமாக அணைத்தான். [தடமுலைபுணர்தோறும்] - "அணைக்கிறது பிரிகைக்கிறே" என்று கைநெகிழ்ந்தவிடத்திலே உடம்பு வெளுக்கும்; அதுக்குப் பரிஹாரார்த்தமாகத் திரியவணைக்கும்; ஆக, இப்படி அதிசங்கையும் பரிஹாரமுமாய்ச் செல்லுமித்தனை யாய்த்து. தடமுலையென்றது - போக்தாவா லுண்டறுக்கவொண்ணாத போக்யதா ப்ரகர்ஷம்; "மலராள்தனத்துள்ளான்" இத்யாதி. [புணர்ச்சிக்கூராச் சுகவெள்ளம்] - கலவியினளவல்லாத ஸுகஸாகரம்; கலக்குமிடத்தில் இருவர்க்கும் அநுரூபமாயிறே ஸுகமிருப்பது. அவன் ஸ்வரூபம் இயத்தாரஹிதமாயிருக்குமாபோலேயாய்த்து போக்யதாப்ரகர்ஷமும்: அதனிற்பெரிய அவாவிறே இவளது. [விசும்பிறந்து இத்யாதி] - அந்த ஸுகம் அபரிச்ச்சிந்நமான ஆகாசத்தைக்கடந்து மயர்வற மதிநல மருளப்பெற்ற அறிவையும் மூழ்த்தும்படி பெருகிற்றென்னுதல்: விசும்பென்று - பரமபதம். அறிவாகிறது உபயவிபூதியையும் விளாக்குலைகொள்ளும் தன்னறிவென்னுதல். [கனவென நீங்கி] - ஸ்வப்நகல்பமென்னலாம்படி வற்றிப்போய். இந்த்ரஜாலங்களென்றும் கனவென்றும் அஸ்திரங்களைச் சொல்லக்கடவதிறே. கலந்தபோது ஸுகம் அபரிச்ச்சிந்நமாயிருக்கும், பிரிவைக்கண்டவாறே பெருக்காறு அடிசுடுமாபோலே து:க்கமும் அபரிச்ச்சிந்நமாயிருக்கும். [ஆங்கே] - அத்தசையிலே. [அகவுயிர்] - ப்ராணஸ்த்தாநமான ஹ்ருதயம். [அகமகந்தோறும்] - ஹ்ருதயத்திலுள்ளுண்டான அவகாசந்தோறும். முன்புள்ள ஸம்ச்லேஷவிச்லேஷங்களாலே ஹ்ருதயம் புடைபட்டிறே யிருப்பது; அவ்வவகாசங்களிலுள்ளே சென்றுபுக்கு, ஆச்ரயத்தினளவன்றிக்கே அபிநிவேசம் பெருகிவாராநின்றது. ஸம்ச்லேஷஸுகம் புக்கவிடமெங்கும் ஆற்றாமையாய்த்து. அணுபரிமாணமான ஆத்மாவால் பொறுக்குமளவன்று ஆசை. ஸுகமும், து:க்கமும், ஸ்வரூபேணுவஸ்த்திதியும் என்றுமூன்று; ஸ்வரூபேணுவஸ்த்திதியில் நிற்கிறதில்லை. [அந்தோ!] - இது உனக்கு உபதேசிக்கவேண்டுவதே! கலவியில் இருவரும் கூடக் கலந்து பிரிவாற்றாமை உனக்கு உபதேசகம்யமாவதே! கலவிக்கு இருவராய், நோவு ஒருதலைக்கேயாவதே! இனிமேற் செய்யவடுப்பதென்னென்ன? — [பசுநிரைமேய்க்கப் போக்கு - வீவ] - போக்கு - போக்குக்களானவை, "புசுவந்தன" என்னுமாபோலே, [வீவ] - தவிர்வனவாகவேணும். அதுவேண்டுகிறதென்னென்ன -

[மிகமிகஇனி உன்னைப்பிரிவையாமால்] - போகில் மேன்மேலெனப் பிரிவுண்டாம். பிரிவையென்று - செய்யுட்பாடாய், பிரிவாமென்றபடி. உன்னைப்பிரிகையுண்டாம். [இனி] - முன்புத்தைப் பிரிவுகளுக்கு ஜீவித்திருந்தேனாகிலும் இனி ஜீவித்திருக்கமாட்டேன்.

ஈடு.—இரண்டாம்பாட்டு. இவள் தரிக்கைக்காகப் பலகால் அணைத்தருள, இஸ்ஸம்ச்லேச ஸுகமெல்லாம் நீ போகக்கடவையென்னுமதிலே ஸ்வப்நங்கண்டு விழித்தாப்போலேயாய் நோவுபடாநின்றேனென்கிறாள். பூர்வவ்ருத்தமான ஸம்ச்லேஷத்தையே சொல்லிற்றாகவுமாம்.

[தகவிலை இத்யாதி] - (நீ - கண்ணா - தகவிலையே) - க்ருஷ்ணனென்றால் பெண்களுக்கு ஸ்வம்மாயிருக்குமென்று ப்ரஸித்தமிறே. பெண்களுக்கு ஸ்வம்மான நீ நிர்த்தயனேயாகாநின்றாய். 'நம்மை நிர்த்தயனென்பதே! பிரியலினைத்தோமல்லோம்: பிரிந்தோமல்லோம்'' என்று இவள் தரிக்கைக்காக நெருக்கி யணைத்தான். [தடமுலைஇத்யாதி] - நாலாயிரந்தரம் அணைபார நிற்கச்செய்தேயும் ''அணைக்கிறது பிரிகைக்கிறே'' என்று அணைத்த கை நெகிழ்த்தவிட நெங்கும் இவளுடம்பு வெளுக்கப்புக்கவாறே, அத்தைக்கண்டு இதினுடைய ஸமாதாநார்த்தமாக அணைக்க, இங்ஙனே அதிசங்கையும் ஸமாதாநமுமாய்ச் செல்லுமத்தனை. இதுதான் பூர்வஸம்ச்லேஷத்தைச் சொல்லிற்றாகவுமாம். இப்போதை ஸம்ச்லேஷந்தன்னையே சொல்லுகிறது. [தடமுலை] - தன்னைபநியப்புக்கார் படுவத்தையாய்த்து இவற்றை அநுபவிக்கப்புக்க தானும், படுவது: துலைப அநுபவித்து முடிக்கப்போகாதாய்த்து; போக்தாவாலும் உண்டாறுக்கவொண்ணாத போக்யதாதிசயத்தைச் சொன்னபடி. [புணர்ச்சிக்காராச்சுகவெள்ளம்] - ஸம்ச்லேஷத்துக்கு அடங்காத ஸுகஸாகரம். கலக்கிற இருவர்க்கும் சடாயிறே ஸுகமிருப்பது. அவன்ஸ்வரூபம் இயந்தாரஹிதமாய் இருக்குமாபோலேயாய்த்து போக்யதாப்ரகர்ஷமும்: ''அதனிற்பெரிய என் அவா''விறே இவளது. அன்றியே, [புணர்தொறும் புணர்ச்சிக்காராச்சுகவெள்ளம்] - அதாவது - ஸம்ச்லேஷம் காதாசித்கமாய், ஸுகம் நிரதிசயமாயிருக்கை. ''நிலத்தினும்பெரிதே வானிலும் உயர்ந்தன்று, நீரினு மாரளவன்றே சாரல், கருங்கோற் குறிஞ்சிப்பூக்கொண்டு பெருந்தேனிழைக்கும் நாடனொடுநட்பே'' என்னக்கடவதிறே. குறிஞ்சிப்பூக்கொண்டு பெருந்தேனிழைக்கை. இஸ்ஸுகந்தான் எவ்வளவுபோருமென்னில்? [விசும்பு இத்யாதி] - ஸர்வபதார்த்தங்களையும் தன்னுள்ளே வைத்துக்கொண்டிருக்குமதிறே ஆகாசமாகிறது; அதுதன்னைக் குளப்படியாக்கி, மயர்வறமதிநலமருளப்பெற்ற அறிவையும்விளாக்குலைகொள்ளாநின்றதாய்த்து. அன்றிக்கே, விசும்பென்று - பரமபதமாய், - ''தாமரைக்கண்ணனுலகு'' என்னக்கடவதிறே ஸுகாதிசயத்துக்கு. ஆக,—த்ரிபாத்விபூதியையும் விஞ்சி, உபயவிபூதியையும் தன்னுள்ளேயாம்படியிருக்கிற அறிவையும் மேலிடும்படியாய்த் திருக்கிறது. [அது கனவெனநீங்கி] - அது ஸ்வப்நகல்ப மென்னலாம்படி கழிந்தாய்த்து. அதின்பரப்பைக் கண்டவாறே அதுக்கு ஓர் அவதியில்லை யென்னும்படியாய்த்திருந்தது; அதுவும் வற்றினபடியைக் கண்டவாறே, இது பெருக்காறுவற்றி அடிசுட்டாப்போலேயாய்த்து. அப்படி கலந்தவனிறே பிரிந்தானும். கனவென்றும் இந்த்ரஜாலமென்றும் - அபர்யாப்தமான கலவியைச் சொல்லக்கடவது; இதுவும் அநந்தரம் காணவொண்ணாதபடியாயிருக்குமே. [ஆங்கே] - அத்தசையிலே. [அகவுயிர்] - ப்ராணஸ்தாநமான ஹ்ருதயம். [அகமகந்தோறும்] - ஹ்ருதயத்தில் உண்டான அவகாசந்தோறும். முன்புள்ள ஸம்ச்லேஷவிச்லேஷங்களாலே ஹ்ருதயம் புடைபட்டிறேயிருப்பது ஸம்ச்லேஷவிச்லேஷம் அவகாசத்தையுண்டாக்கும்; அந்த அவகாசமுள்ளவிடமெங்கும் ஆற்றாமை புகுந்தது. [ஆவியின்பரமல்லவேட்கை] - அணுபரிமாணமான ஆத்மவஸ்துவின் அளவல்ல அபிநிவேசம்; ''என்றனளவன்றால் யானுடையவன்பு'' என்றாரே அவரும்; ஆச்ரயத்தின் அளவல்லவாய்த்து அபிநிவேசம். ஸுகது:க்கங்களும், அவைபொழிந்த ஸ்வரூபேணாவஸ்த்தியும் என்று மூன்றுஉண்டிறே; அதில் ஸ்வரூபேணாவஸ்த்தியிலேதான் நிற்கப்பெற்றதோ! [அந்தோ!] - இதுதனக்கு உபதேசங்கொண்டறிய வேண்டுவதே! கலக்கிற போது இருவரும்வேண்டிப் பிரிவில்வந்த ஆற்றாமைக்கு நான் சொல்லவேண்டும்படியாவதே! கலவிக்கு இருவராய் ஆற்றாமை பொறுத்தலையிலேயாவதே! ஆனால் செய்யவேண்டுவதென்

னென்னில்?—[நின் பசுநிரைமேய்க்கப்போக்கு - வீவ] - அதுதான் தவிரவேண்டுகிறது என் னென்னில், - [மிகமிகவிலியுன்னைப் பிரிவையாமால்] - மேன்மேலெனஉன்னைப்பிரிவாம். [பிரிவை] - என்கிறவிது-செய்யுட்பாடாய், பிரிவுண்டாம்படி வருகிற பசுநிரைமேய்க்கப்போக்கு வீவ. "பசுவந்தன" என்னுமாபோலே போக்குக்கள் தவிரப்படுவனவாக [இனி - வீவ] - இதுக்கு முன்புள்ளகாலமெல்லாம் பிரிந்துபோந்தாயேயாகிலும், இனிமேலுள்ள காலமாகிலும் தவிரவேணும்.

வீவன் நின்பசு நிரைமேய்க்கப்போக்கு வெவ்வுயிர்கொண்டு எனதாவிவேமால்*
யாவருந்துணையில்லையானிருந்து உன்னஞ்சனமேனியையாட்டங்காணேன்*
போவதன்றுஒருபகல்நீயகன்றால் பொருகயற்கண்ணிணை நீரும்நில்லா*
சாவதிவ்வாய்க்குலத்தாய்ச்சியோமாய்ப்பிறந்த இத்தொழுத்தையோம்
தனிமைதானே. (3)

ஒ.—மூன்ரும்பாட்டில், நீ உபேக்ஷித்திருக்க இடைப்பெண்களான நாங்களே ஸ்நேஹித்திருக் கிற இவ்வொருதலைக்காமம் நசிக்கவேணு மென்கிறுள். [வெவ்வுயிர்கொண்டு என்று தொடங்கி] - வெவ்விதாக நெடுமூச்செறிந்து என்னுடைய ஹ்ருதயம் தக்தமாகாநின்றது; நீ போனவாறே ஸர் வமும் ப்ரதிகூலமாம்; இவ்வவஸாநத்தோடே நான் ஜீவித்திருப்பதுஞ்செய்து ச்ரமஹரமான வடிவை யுடைய உன்னுடைய ஸஞ்சாரமும் காணேன்; நீ போனுல் பகல் குறைந்து காட்டாது; வ்யஸநம் பொறுக் கமாட்டாமையாலே அலமந்துபோருகிற கயல்போலேயிருக்கிற கண்களும் நீர் மாறுகிறனவில்லை. [சாவது இவ்வாய்க்குலத்து என்று தொடங்கி மேலுக்கு] - எங்களுடைய விச்லேஷம் நசிப்பதென்றுமாம் முடிந்து பிழைக்க வேணுமென்று கருத்து. எங்களுக்கு விநாசமாவது தனிமையென்றுமாம்.

இ.—மூன்ரும்பாட்டில், நீ உபேக்ஷித்திருக்க நாங்கள் ஸ்நேஹித்திருக்கிற இவ்வொருதலைக்காமம் நசிக்கவேணுமென்கிறுள். [வீவன் இத்யாதி] - "பசுமேய்க்கை ஸ்வதர்மமாகையாலே அதுக்காகப் போக்கைத் தவிரலாமோ?" என்ன; உன்போக்கிலே நான்முடிவன்; ஸ்த்ரீவதம் ப்பலிக்கவரும் தர்மம் தர்மமல்ல காண்! இது உனக்கு முடிவாகிறபடி எங்ஙனே? என்ன,—[வெவ்வுயிர் இத்யாதி] - உன் போக்கை நினைத்து வெவ்விதாக நெடுமூச்செறிந்து, அத்தாலே ஹ்ருதயம் உலர்ந்து, விரஹாக் நியாலே வேவாநின்றது. நான் போனுல் வ்ருத்தகீர்த்தநத்தாலே தரித்தாலோவென்ன?—[யாவரும் துணையில்லை]- நீபோனுல் உதவக்கடவ தோழியரும் துணையல்லர்; குயில்முதலான பதார்த்தங்களும் ப்ரதிகூலமாம். துணையான உன்ஸந்நிதியில் எல்லாரும் துணையாம், நீபோனுலொரு துணையில்லை. [யான் இருந்து] - அவ்வவஸாதத்திலும் நூறே பிராயமாயிருப்பன். விலக்ஷணவிஷயமாகையாலே முடியவுமொட்டாது, தரிக்கவுமொட்டாது. நசையாலே முடியவுமொண்ணுது, ஆற்ருமை தரிக்கவுமொட்டாது. [உன் அஞ்சனமேனியை யாட்டம்காணேன்] - இருந்தால் ஜீவிக்கும் ஜீவநமும் பெறேன். ச்ரமஹரமான வடிவைக்கொண்டு என்முன்னே ஸஞ்சரிக்கக் காணேன். உன்னைக் கண்ணுடிப்புறத்திலும் கண்டறி யாயோ? இவ்வடிவைப் பிரிந்தார் பிழையா ரென்றிருக்க வேண்டாவோ? காமினியாகையாலே ஸ்வரூபத் திலும் குணத்திலும் இழியாளிறே; வடிவையிறே ஆசைப்படுவது. [ஆட்டம்] - நடையாட்டம். இதெல்லாம் ஒரு பகலளவுக்கேயென்ன - [நீயகன்ருல் - போவதன்று ஒருபகல்] - நீ பிரிகையாலே ஒரு பகலாவது போகிறதில்லை. முப்பது நாழிகை சென்ருல் ஒரு க்ஷணமும் குறைந்து காட்டுகிறதில்லை. உனக்குப்போலே யென்றிருந்தாயோ எனக்கும்? காலத்தினுடைய குறைவும் நிறைவும் விஷயாதீநமா யிறே யிருப்பது. கலவியில் கல்பம் க்ஷணமாய், வ்யதிரேகத்தில் ஒருக்ஷணம் கல்பமாயிறே யிருப்பது. [பொருகயல் இத்யாதி] - வ்யஸநத்தாலே அலமந்து பொருகிறகயல்போலே யிருக்கிற கண்களும் நீர்மாறுகிறதில்லை. கண்ணீர் என்னுல் தகையப்போகிறதில்லை. [நீரும்நில்லா] - உன்னைத்தகையிலும் என்னுல் அத்தைத் தகையப்போகிறதில்லை. பின்னைச் செய்யவடுப்பதென்? என்ன, — [சாவது இத்யாதி] - இவ்வாய்க்குலத்திலே இடைச்சியோமாய்ப்பிறந்த இத்தண்ணியோமான எங்கள் தனிமை. [சாவது] - நசிப்பது. அதாவது - முடிந்து பிழைக்கவேணு மென்கை. [தனிமைதானே - சாவது] -

எங்களுக்குத் தனிமைதானேயிறே மரணமாவது? தனிமையென்றும் விநாசமென்றுமிரண்டில்லை யென்றுமாம். நாங்கள் ஜீவிக்கவுமாம், தவிரவுமாம்; இந்த ஒருதலைக்காமம் நசிக்கவேணும்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. நீ உபேக்ஷித்திருக்க நாங்கள் ஸ்நேஹித்திருக்கிற ஒருதலைக் காமம் நசிக்கவேணுமென்கிறாள்.

[வீவன் இத்யாதி] - உன் பசுமேய்க்கப் போக்குநிமித்தமாக, நான்வீவன் - நான் முடிவன். "அதுஎனக்கு தர்மமன்றோ?" என்றிராதே, உனக்கு ஸ்த்ரீவதமாய்ப்பலிக்கக் கிடாய் புகுகிறது. இப்போது முடியும்படி வந்ததென்னென்னில், - [வெவ்வுயிர் இத்யாதி] - என்னைப்பார்க்கமாட்டாயோ? உன்னுடைய போக்குநிமித்தமாக நெடுமூச்செறிந்து அதுவே ஹேதுவாக உலர்ந்த என்னுடைய ஹ்ருதயமானது, விரஹாக்நிகொளுந்தி எரியாநின்றது; இதிலே நீரைச்சொரியவல்லையே யென்கிறாள். [எனதாவி] - உன்னைப்போலேயென்றிராதே கொள்ளாய் அல்லாதாரையும். [யாவருந்துணையில்லை]-துணையான நீதானே போனாய்; நீபோனால் துணையான தோழிமார்தானே யில்லை; குயில் மயில் தொடக்கமானவைதானே பகைப்பகை யாய்த்து. [யானிருந்து] - நீபோனால் படுவதற்றைத்தான் படப் பெற்றேனோ? எல்லாம் பட்டும் நாதேபிராயமாயிருந்தது; இன்னம் ஒருகால் காணலாமென்னும் நசை முடியவொட்டாதிறே. பிரிந்த விஷயந்தான் முடியவுமொட்டாது, தரித்திருக்கவுமொட்டாது; அர்ஜ்ஜுநன் பின்பிருந்து எளிவரவுபட்டாப்போலே. [உன்னஞ்சனமேனியை யாட்டங்காணேன்] - இருந்தார் ஜீவிக்கும் ஜீவநத்தைத்தான் ஜீவிக்கப் பெற்றேனோ? ஏழையராவி தேட்டமாயிருக்கிறதுகாணும் இவளுக்கு இப்போது [உன்] - உன்னை நீதான் கண்ணாடிப்புறத்திலே கண்டறிதியே. கண்டாயாகில் "நம்மைப் பிரிந்தவர்கள்பிழையார்கள்" என்றிருக்கவேண்டாவோ? [மேனியை] - ஸ்வரூபத்திலாதல் குணத்திலாதல் இழியுமவளன்றே; காமிநி உடம்பை ஆசைப்படுமவளிறே! [ஆட்டங்காணேன்] - அவ்வடிவோடே என்முன்னே ஸஞ்சரிக்கக் காணப் பெறுகிறிலேன். 'இதெல்லாம் ஒருபகலைக்கே' என்றான் - [போவதன்று இத்யாதி] - உனக்குப்போலே என்றிராதே கொள்ளாய் எங்களுக்கும். நீ போகின்றால், நாழிகைமுப்பது சென்றாலும் மலையாளர் வளைப்புப்போலே ஓரடிபோராதாய்த்து; அது பகலின் ஸ்வபாவமல்ல;—[நீயகன்றால்] - உன் ஸ்வ பாவத்தாலே. பகலின் ஸ்வபாவமாகில் கூடவிருந்தபோதும் போகாதொழியவேணுமிறே. கூடவிருந்தால் இரவுகாணவொண்ணாதாற்போலே யாய்த்து, நீயகன்றால் பகல் போகாதபடி. அவன் கூடவிருந்தால் இரவுகாணவொண்ணாதே; "நாரணனைக்கண்டேன், பகற்கண்டேனிறே" "போவதன்றொருபகல்" என்று இதுதானும் சொல்லமாட்டாதே காணும் அவனிருக்கிறது; "கலவி செல்லாநிற்கச்செய்தே பிரிவைநினைக்கையாவதென்?" என்றிறே அவனிருப்பது! "பிரியேன்" என்னவல்லன் றன்றானே பண்டே. [பொருகயல் இத்யாதி] - உன்போக்கை நினைத்துப் பாய்கிற கண்ணநீர் என்றால் தகையப்போகிறதில்லை. [நீரும்இல்லா] - உன்னைத் தகையிலும் நீரைத் தகையப் போகிறதில்லை. பொருகிற கயல்போலேயாய்த்துப் பிரிவை நினைத்துக் குடிமாறுகிறபடி. அதுக்குச் செய்யவேண்டுவதென்? என்ன-[சாவது இத்யாதி] - இவ்விடைக்குலத்தில் இடைச்சிகளாய்ப் பிறந்த தண்ணியோமான எங்களுடைய தனிமை சாவது. நீ போகிலும் போகிறாய், இருக்கிலும் இருக்கிறாய்; இத்தனிமை நசிப்பது. "இவனுக்கு நான் நூறுபிள்ளை பெறவேணும்" என்ற ஸாவித்ரியைப்போலே சொல்லுகிறாள். அன்றிக்கே, [தனிமைதானே-சாவது]-எங்களுக்குத் தனிமையென்றும் விநாசமென்றும் இரண்டில்லைகாண்! தனிமைதானே விநாசமென்னவுமாம். "பின்னலாளியேன்" என்னும வரிறே; "இறப்பதற்கேயெண்ணாது" என்றாரே யவரும். அன்றிக்கே, [தனிமை - சாவது] - இத்தனிமை சாலப்பொல்லாதென்னவுமாம். இவ்வொருதலைக்காமம் போவது. கைக்கிளைத் தலைவி பொறையழிதல் எல்லாம் சொல்லப்பெறுமிறே,

தொழுத்தையோந்தனிமையுந்துணைபிரிந்தார்துயரமும் நினைகிலை
கோவிந்தா*நின்
தொழுத்தனிற்பசுக்களையேவிரும்பித் துறந்தெம்மையிட்டுஅவை
மேய்க்கப்போதி*
பழுத்தநல்லமுதின் இன்சாற்றுவெள்ளம் பாவியேன்மனமகந்தோறும்
உள்புக்கு
அழுத்த*நின்செங்கனிவாயின்கள்வப்பணிமொழி நினைதொறும்
ஆவிவேமால். (4)

ஒ.—நாலாம்பாட்டில், இவன் போகிறானென்று இப்பிராட்டி, நோவுபடப்புக்கவாறே, "உன்னைப் பிரிய ஸம்பாவனையுண்டோ?" என்று மற்றும் ஸவிநயமாகச் சிலவார்த்தைகளை யருளிச்செய்ய, இவை யிறே என்னைமாய்க்கின்றன என்கிறாள். [தொழுத்தையோம் என்று தொடங்கி] - கோவிந்தா! அபி மதரைப்பிரிந்தார்படும் விச்லேஷமும், உன்னைப்பிரிந்து நாங்கள்படும் வ்யஸநமும் நினைக்கிறிலை; உன் தொழுவில்நிற்கும் பசுக்களையே ஆதரித்து அசேதநபதார்த்தங்களைப் பொகடுமாபோலே எங்களைப்பொகட்டு அவை மேய்க்கப் போகக்கடவை. [பழுத்த நல்லமுது என்று தொடங்கி] - பக்வமாய் விலக்ஷண மான அம்ருதத்தினுடைய இனிய சாற்றுவெள்ளம்போலே போக்யமாயிருக்கிற உன்னுடைய பணி மொழிகளை ஹ்ருதயாவகாசந்தோறும் மறக்கவொண்ணாதபடி ஸ்திரமாக்க, உன்னுடைய சிவந்த கனி போலேயிருக்கிற வாயில் ஸர்வஸ்வாபஹாரகக்ஷமமான பணிமொழிகளை நினைதோறும் ஆவி வேவா நின்றது.

இ.—நாலாம்பாட்டில், இவன்போக்கை நினைத்து நோவுபடப்புக்கவாறே, "உன்னைப்பிரிய ஸம்பாவனையுண்டோ?" என்று இப்புடைகளிலே ஸவிநயமாகச் சில வார்த்தைகளைச் சொல்லப்புக, இவையிறே என்னை யழிக்கிறதென்கிறாள். [தொழுத்தையோம் தனிமையும்] - பஞ்சலக்ஷங்குடியிற்பெண்கள் திரண்ட திரளிலே படுகிற தனிமையிறே. தொழுத்தையோமென்றும் அடிச்சியோமென்றும் தங்கள்தோல்வியைச் சொல்லுகிறார்கள். [துணைபிரிந்தார் துயரமும்] - துணைபிரிந்தாரென்று - உன்னைப்பிரிந்தாரென்றபடி. "துணையென்றால் த்விஷ்டமாயன்றாகா ணிருப்பது" என்னும் ஆச்சான். அவனே துணை; அல்லாதா ரெல்லாம் கழுத்துக்கட்டி. தொழுத்தையோம்தனிமையும் அறிகிறிலை, துணைபிரிந்தார் துயரமும் அறிகிறிலை. பிரிகிறோம் நாங்களென்றும் அறிகிறிலை; பிரிகிறது உன்னையென்றும் அறிகிறிலை. [கோவிந்தா] - பசுக்களையும் இடையரையும் ரக்ஷிக்கவன்றோ கோவிந்தாபிஷேகம் பண்ணிற்று [உன்தொழுத்தனில் பசுக்களையே விரும்பி] - உனக்கு ரக்ஷ்யமிரண்டானால் ஒருதலையை விரும்பவேண்டு கிறதென்? உன்தொழுவிலே வளைத்துவைத்த பசுக்களையோ விரும்பலாவது? உன்கைக்குள் அகப்பட்டாரை விரும்பலாகாதோ? பிரிந்தால்வரும் ஆற்றாமையறியாதார் வேணுமோ ரக்ஷிக்கைக்கு? [பசுக்களையே விரும்பி] - இவர்களை யணைத்துக்கொண்டிருக்கும் தசையிலும் நினைவுஅங்கேயாய், கண்ணியென்பது பசுவென்பதாகாநிற்கும்: மித்த்யாபரிரம்பணமே யாய்த்துள்ளது. அமுதனார் "பசுவின் காலிலே முட்பாய்ந்தால் இடையன்தலைகாண் சீக்கொள்ளுமது" என்பர். உடம்பில் முட்பாய்ந்தால் து:க்காநுபவம் ஆத்மாவதிறே. [துறந்து] - அவற்றை விரும்பித் தங்களை ஸந்ந்யஸித்தான் என்றிருக்கிறார்கள். [எம்மை விட்டு] - அசேதநபதார்த்தங்களைப் பொகடுமாபோலே எங்களைப்பொகட்டு. [அவை மேய்க்கப்போதி] - கூடவிருக்கும் போதும் அவற்றை ஸ்மரிக்கும். அவற்றின்பின்பு போனால் நம்மை நினைப்பதும் செய்யான். அவற்றினுடைய ரக்ஷணத்திலே ஆயாஸமுண்டு; எங்களுடைய ரக்ஷணத்திற்கு ஸந்நிதியேயமையும். [பழுத்த இத்யாதி] - "நாம் போகையாவதென்? போனாற்றான் உங்களை மறப்பதுண்டோ? என் ஆற்றாமை உங்களுக்குண்டோ, மாதாபிதாக்கள் சொல்லிற்றுச் செய்யவேண்டுகையாலே பசுமேய்க்கப்போகிறோம் இத்தனையன்றோ?" என்று சிலநீசபாஷணத்தைப் பண்ணினான்; இவைகிடாய் உன்மறத்தை எங்கள்பக்கல் வரவொட்டாதவை. பக்வமாய் விலக்ஷணமான அம்ருதத்தினுடைய இனிய சாற்றுவெள்ளம்போலே போக்யமாயிருக்கிற உன்னுடைய பணிமொழியுண்டு - சொல்லுகிறவார்த்தையென்னுதல்; கலவியிலே ஒருவகையான வாகம்ருதத்தைச் சொல்லுதல். [பாவியேன்] - அம்ருதம் நஞ்சாம்படியான பாபத்தைப்

பண்ணினேன். பிரிவை நினைத்து, ''பிரியேன்'' என்னுமது விஷமமிறே. ஹ்ருதயாவகாசந்தோறும் பிரிக்கவொண்ணாதபடி யழுத்த, உன்னுடைய சிவந்தகனிபோலேயிருக்கிற வாயில். [கள்வப்பணிமொழி]- எழுதிக்கொள்ளுகிற தாழ்ந்தபேச்சுக்கள். பிரிவைநினைத்துச் சொல்லுகிற வார்த்தை யாகையாலே நெஞ்சையழிக்கக் கடவதாயிறேயிருப்பது. [கள்வம்] - நினைவொன்றும் செயலொன்றுமாயிருக்கை. [நினைதொறும்] - ''தரிக்கலாமோ?'' என்று நினைக்கப்புகும்: அதுதான் பாதகமாம்! பின்னையும் விடமாட்டாள்; இப்படி யுருவச்செல்லாநிற்கை. [ஆவி வேமால்] - தனக்கு ஆச்ரயமான ப்ராணனானது வேவாநின்றது. க்ஷணிக பதார்த்தம்போலே உத்பத்தியும் விநாசமுமாய்ச் செல்லாநிற்கை. அக்நி ஆச்ரயாசியாயிறே யிருப்பது?

௪௫.—நாலாம்பாட்டு. இவன்போக்கை நினைத்து நோவுபடப்புக்கவாறே ''உன்னைப் பிரிகைக்கு ஸம்பாவனையுண்டோ?'' என்று இப்புடையிலே ஸவிநயமாகச் சில வார்த்தை சொல்ல, இவையிறே பென்னை யழிக்கிறதென்கிறாள்.

[தொழுத்தையோம்தனிமையும்] - பஞ்சலக்ஷங்குடியிற் பெண்களும் கூடிப்படுகிற தனிமையிறே. தொழுத்தையோமென்றும் அடிச்சியோமென்றும் தாங்கள்தோற்ற தோல்வி தோற்றச் சொல்லுகிறார்கள். [துணைபிரிந்தார் துயரமும்]- துணைபிரிந்தாரென்று-உன்னைப்பிரிந்தாரென்றபடி. ''துணையென்றால் த்விஷ்டமாயன்றாகா ணிருப்பது'' என்னுமாச்சான். இவர்களும் அவனுக்குத்துணையாய், அவனும் இவர்களுக்குத் துணையாயன்றிருப்பது; துணையாகை ஒருதலையிலே வ்யவஸ்திதமாய்த்து; துணையாவானவனொருவனுமேயாய்த்து; அல்லாதாரடங்கலும் கழுத்துக்கட்டியாயாய்த்திருப்பது: ''வன் துணை'' யிறே. தொழுத்தையோம்தனிமையும் நினைகிறிலை, துணைபிரிந்தார் துயரமும் நினைகிறிலை பிரிகிறோம் நாங்களென்றும் பிரிகிறது உன்னையென்றும் பார்க்கிறிலை. [கோவிந்தா] - பசுக்களையும் இடையரையும் ரக்ஷிக்கைக்கன்றோ கோவிந்தாபிஷேகம் பண்ணிற்று. பிறவிப்பாடும் பின்தொட்டு பிறே. அதாவது - தன்ஸத்தா ஆர்த்தையாயிருந்தாலும் பசுக்களை விரும்பி அவற்றுக்குப் புல்லும் நீருமுள்ள இடந்தேடுமித்தனையிறே. [நின் இத்யாதி] - உனக்கு ரக்ஷ்யகோடி இரண்டானால் ஒருதலையை விரும்பவேண்டுகிறதென்? இரண்டு தலையையும் ஒக்கவிரும் பினுலாகாதோ? [நின்தொழுத்தனில்] - ஓரிடத்தே வளைத்துவைத்த பசுக்களையேயோ ரக்ஷிக்கலாவது? உன்னைக்குள் அகப்பட்டாரை ரக்ஷிக்கலாகாதோ? இவர்களையணைத்துவிட்டுப் பின்னையிறே பசுமேய்க்கப்போவது. [பசுக்களையே] - நீ போனால் பிரிவுக்குஆற்றுமைப்பட அறியாதாரையேயோ நீ ஆதரிப்பது? [விரும்பி] - இவர்களைபணைத்துக் கட்டிக்கொடு கிடந்தாலும், கண்ணியென்பது, கன்றுகள்விட்டுக் கொடுபோகாநின்றதென்பதாய் வாய் வெருவுவது அவற்றையேயாய்த்து. இங்கிருக்கும்போதும் நெஞ்சு அங்கேயாய்த்து. இங்குள்ளது மித்யா பரிரம்பணமே. பின்னையரும்கனார், ''ஒருபசுவின் காலிலே முள்பாய்ந்தால் இடையன் தலைகாண் நீக்கொள்ளுவது'' என்பராம் சரித்திலேயொன்று வந்தால் ஸாகதுக்கங்கள் அனுபவிப்பான் ஆத்மாவிறே. [துறந்து எம்மை] - அவற்றை விரும்பவிரும்பத் தங்களை ஸங்கல்ப ஸித்ததென்றிருக்கிறார்கள். [எம்மைஇட்டு] - அசேதநபதார்த்தங்களைப் போகடுமாபோலே எங்களைப்போகட்டு. இவர்களுடனிருக்கும்போதும் அவற்றை ஸ்மரிக்கும்; அவற்றின் பின்னே போனால் இவர்களை நினையான். [அவைமேய்க்கப்போதி] - அவற்றினுடைய ரக்ஷார்த்தமாகப் போகக்கடவை. அவற்றினுடைய ரக்ஷணத்தில் ஆயாஸமுண்டு, எங்களுடைய ரக்ஷணத்துக்கு ஸந்நிதியேயமையும்; ''இடறவென்பிள்ளையைப் போக்கினேன்'' ''எற்றுக்கென் பிள்ளையைப் போக்கினேன்'' என்று வயிறுபிடிக்கவேண்டும்படியா யிருக்குமது; எங்களுடைய ரக்ஷணத்தில் ஆயாஸம் வேண்டா, கூடவிருக்கவமையும். [பழுத்த இத்யாதி] - ''நான் போகையாவதென்? ஆனால் உங்களை மறப்பதுண்டோ? என்னுற்றுமை உங்களுக்குண்டோ? நான் மாதா போனால்தான் உங்களை மறப்பதுண்டோ? என்னுற்றுமை உங்களுக்குண்டோ? நான் மாதா பிதாக்களுக்குப் பரதந்த்ரனானால் அவர்கள் சொல்லிற்றுச் செய்யவேண்டுகையாலே போகிறேன் நித்தனையன்றோ? போனாலும் நெஞ்சு இங்கேயன்றோ?'' என்றாப்போலே சில நீசபாஷணங் களைப் பண்ணினான்; இவைகிடாய் எங்களை மறக்கவொண்ணாதபடி பண்ணுகிறது. பக்வமாய் அதிவிலக்ஷணமான அம்ருதத்தினுடைய இனிய சாற்றுவெள்ளம்போலே போக்யமாம்படி

சொல்லுகிற வார்த்தையென்னுதல்; அன்றிக்கே, கலவியிலே ஒருவகையைச் சொல்லிற்று ஆகவுமாம். அதாவது வாகம்ருதமென்றபடி; "வாயமுதம் தந்தென்னைத் தளிர்ப்பிக்கின்றான்" என்னக்கடவதிறே. [பாவியேன்] - அம்ருதமே நஞ்சாம்படியான பாபத்தைப் பண்ணினேன். பிரிவை நினைந்து "பிரியேன்" என்னும் இது விஷமமிறே. [மனமகத்தோறும் இத்யாதி] அம்ருதபானாவகாசந்தோறும் மறக்க வொண்ணாதபடி யழுத்த, உன்னுடைய சிவந்தகனிபோலே யிருக்கிற வாயினுடைய [கள்வப்பணிமொழி] - இச்சாற்றுவெள்ளத்துக்குணற்றுவாய் காணும்; எழுதிக்கொள்ளுகிற தாழ்ந்த பேச்சுக்கள். பிரிவைநினைத்துச் சொல்லுகிற வார்த்தை யாகையாலே, நெஞ்சை யழிக்கக்கடவதாயிறே யிருப்பது. நினைவுஒன்றும் சொலவுஒன்றுமா யிருக்கை. [நினைதொறும்] - "இவை தாரகமாமோ?" என்னும்நினைவாலே நினைக்கப்புகுமே: அநுபாதகமாமே; பின்னையும் விடமாட்டாளே; இங்ஙனே யுருவச் செல்லுமித்தனை. [ஆவி வேமால்] - தனக்கு ஆச்ரயமான ப்ராணனானது வேவாநின்றது. அக்நி ஆச்ரயாசியாயிறே யிருப்பது. 'பழுத்தநல்லமுதின்சாற்றுவெள்ளமான - நின்செங்கனிவாயின் கள்வப்பணி மொழி - பாவியேன் மனமகந்தோறும், உள்புக்கழுத்த - நீ மறக்கவொண்ணாதபடி யழுந்தப் பண்ண, அவற்றை நினைக்கநினைக்க ஆவி வேவாநின்றது.

பணிமொழிநினைதொறும்ஆவிவேமால் பகல்நிரைமேய்க்கியபோயகண்ணா*
பிணியவிழ்மல்லிகைவாடைதூவப் பெருமதமாலையும்வந்தன்றாலோ*
மணிமிகுமார்வினின்முல்லைப்போது என்வனமுலைகமழ்வித்துன்வாயமுதந்
அணிமிகுதாமரைக்கையை அந்தோ அடிச்சியோந்தலைமிசை [தந்து*
நீயணியாய்!, (5)

ஒ.—அஞ்சாம்பாட்டில், "நான் உன்னுடைய ஸந்நிதியிலே வர்த்தியாநிற்க, நீ இப்படி படுகிற தென்?" என்று எம்பெருமான் இப்பிராட்டிக்கு அருளிச்செய்ய; இப்பிராட்டியும், "நீ பசுமேய்க்கப் போகக் கடவையான பின்பு, நீயும்போனாய்; நீபோனால் நலியக்கடவ ஸந்த்யை தொடக்கமான பதார்த்தங்களாலே நலிவுபடுகிற என்னை ஆலிங்கநாதிகளைப்பண்ணி உஜ்ஜீவிப்பித்தருளவேணும்" என்கிறாள். [மேய்க்கிய] - மேய்க்க. [பிணியவிழ் மல்லிகைவாடை தூவப்பெருமதமாலையும் வந்தன்றாலோ]-அலரா நின்றுள்ள மல்லிகையினுடைய மணத்தை வாடையானது தூவ; பெருங்கிளர்த்தியான ஸந்த்யையும் வந்தது. [மணிமிகுமார்வினில்என்றுமேலுக்கு]-கௌஸ்துபாதிகள் நிறம்பெறும்படியான உன்னுடைய திருமார்பில் முல்லைமாலையாலே என்னுடைய அழகியமுலையைக் கமழப்பண்ணி, உன்னுடைய வாய அமுதத்தைத்தந்து அணி மிக்கிருந்துள்ள அழகிய திருக்கையை எங்கள் தலைமேலே ஐயோ! வைத்தருளாய்.

இ.—அஞ்சாம்பாட்டில், "நான் ஸந்நிஹிதனாயிருக்க நீ இப்படிப்படுகிறது என்?" என்ன; "நீ பசுமேய்க்கப் போகக்கடவையானபின்பு, நீயும்போனாயே; நீ போனால் நலியக்கடவ ஸந்த்யாதிபதார்த்தங்களாலே நலிவுபடுகிற என்னை ஆச்வஸிப்பித்தருளவேணும்" என்கிறாள். [பணிமொழி இத்யாதி] - பிரிவைநினைத்து "பிரியேன்" என்று சொல்லுகிற உன்வார்த்தைபோலே, உன்னைப் பிரியாமைக்குச் சொல்லுகிற வார்த்தையல்ல. உன்னது கள்வப்பணிமொழியாகையாலே பொய்; இது அநுபவத்துக்குப் பாசுரமிட்டுச் சொல்லுகிற வார்த்தையாகையாலே மெய். நான் போனேனோவென்ன? [பகல்நிரை இத்யாதி] - பகலெல்லாம் பசுமேய்க்கப் போனாய். [கண்ணா] - என்று ஸம்போதித்து, அவன்தனக்கே "நீபோனாய்" என்கிறாளிறே. [மேய்க்கிய] - மேய்க்க. [பிணிஇத்யாதி] - நீபோனால் நலியக்கடவ பதார்த்தங்கள் நலிகையாலே, போனமை நிச்சிதம் என்கிறாள். மல்லிகை கமழ்தென்றல் ஆகாராந்தரத்தாலே நலியாநின்றது. கட்டவிழ்கிற மல்லிகையினுடைய மணத்தை வாடையானது தூவாநின்றது. ராவணன் ஸந்ந்யாஸிவேஷத்தைக் கொண்டுவந்து தோற்றினாப்போலே வாடையானது குளிர்காற்றாய் வந்து நலியாநின்றது. [தூவ] - தன்மேல் வெக்காயந்தட்டாமே கடக்கநின்று வீசாநின்றது. "பத்மகேஸரஸம்ஸ்ருஷ்ட:". மத்தகஜமானது முன்னே தலைப்பறை கொட்ட வருமாபோலே வாடையை முன்னேயிட்டுக்கொண்டு பெரிய கிளர்த்தியோடே ஸந்த்யையும் வந்தது. இவளை முடிக்க

வேணுமென்று ஸந்த்யையானது கூட்டுத் தேடிக்கொண்டு வாராநின்றது. [வந்தன்றுலோ] - வந்தால் பரிஹரிக்கவொண்ணாது. அர்ஜுநனைக்குறித்து பகதத்தன் விட்ட சக்திக்கு மார்வையேற்றாப்போலே, நடுவேபுகுந்து நோக்காய். ஸந்நிஹிதனாயிருந்த என்னை, நீ செய்யச்சொல்லுகிறதென் ? என்ன, - [மணிமிகு மார்வினில்] - ஸ்ரீகௌஸ்துபம் நிறம்பெறும்படியான மார்வென்னுதல், திருமார்வடங்க ஸ்ரீகௌஸ்துபத்திற்புகரே யாம்படி யிருக்குமென்னுதல். கலவியிலும் கழற்றவொண்ணாதபடியிறே ஸ்ரீகௌஸ்துபமிருப்பது. ஸ்த்ரீக்கு ஸ்தநம்போலே, ஸ்ரீகௌஸ்துபம் புருஷோத்தமசிஹ்நமிறே. அம்மார்வில் முல்லைமாலையாலே என்னுடைய அழகிய முலையைப்பரிமளிதமாக்கி. ஸ்ரீகௌஸ்துபத்தோடு தோளில் மாலையோடு வாசியற போகோபகரணமாயிருக்கிறபடி. தோளில் முல்லைமாலையின் பரிமளத்தை முலைக்கு ஆக்கவேணுமென்கையாலே, கலவியை அக்ராம்யமாகச் சொல்லுகிறது. [உன்வாயமுதம் தந்து] - கலவியில் உன்மஸ்தகரஸமானவளவில் தடுமாற்றத்திற்குப் பரிஹாரமான தாழ்ந்தபேச்சுக்களைச் சொல்லுதல், வாகம்ருதத்தைச் சொல்லுதல்; பேச்சென்றேயாய்த்துச் சொல்லிப் போருவது. "உன் போக்கு எனக்குஅநபிமதம், அத்தைத்தவிர்" என்று சொல்லப்புக்கு, அதொண்ணாதபடி 'நாகீர் வருகிற தில்லை; அதுக்குப் பரிஹாரமாக உன்கையை என்தலைமேலே வைகிடாய்" என்கிறாள். ஆபரண ப்ரசுரமாய் அதுதான் மிகையாம்படி தனக்குத்தானே ஆபரணமான கையை. [அந்தோ] - சேர்ந்து குளிர்ந்து விடாயர்க்குச்சமைத்துவைத்த தண்ணீரை வார்க்கச் சொல்லவேண்டுவதே! என் ஆற்றாமையை நான் உனக்கு அறிவிக்கவேண்டும்படியாவதே ! [அடிச்சியோம்] - கலவியில் தோற்ற தோல்வியாலே சொல்லுகிறாள். [தலைமிசை நீஅணியாய்] - எங்கள் சிரஸ்தோதத்துக்குப் பரிகாரமாக உன்கையை வையாய். "வேணுமாகில் எடுத்துவைத்துக் கொள்ளுங்கோள்" என்ன, "எங்கள் பேற்றுக்கு நாங்கள் யத்நம்பண்ணுமவர்களோ ? நாங்கள், நீவிரும்பி மேல்விழப் பெறுமவர்களன்றோ ?" [அணியாய்] - ஆபரணங்களுக்கு அவன்கைபோலேயாய்த்து இவர்கள்தலைக்கு அவன்கை. ஆற்றாமை மிக்கவளவிலும் அவனாலே பெறவிருக்குமவர்களிறே. "நின்பாதபங்கயமே தலைக்கணியாய்." "மதீயமூர்த்தாநமலங்கரிஷ்யதி" என்னக்கடவதிறே

ஈடு.—அஞ்சாம்பாட்டு. "நான் ஸந்நிஹிதனாயிருக்க நீஇப்படிப்படுகிறதென் ?" என்ன,—"நீ பசுமேய்க்கக்கடவையான பின்பு, நீயும்போனாய்;நீபோனால் நலியக்கடவ ஸந்த்யாதிபதார்த்தங்களால் நலிவுபடுகிற என்னை ஆச்வஸிப்பித்தருளவேணும்" என்கிறார்.

[பணிமொழி நினைதொறும்ஆவிவேமால்] - பிரிவைநினைத்து "பிரியேன்" என்று சொல்லுகிறஉன்வார்த்தைபோலே உன்னைப் பிரியாமைக்காகச் சொல்லுகிற வார்த்தையல்ல; உன்னது கள்வப்பணிமொழியாகையாலே பொய், இது அநுபவத்துக்குப் பாசுரமிட்டுச் சொல்லுகிறதாகையாலே மெய். "நான்போனேனோ ?" என்ன,—[பகல்இத்யாதி] - பகலெல்லாம் பசுமேய்க்கப்போனாய். [கண்ணா] - என்று ஸம்போதித்து, அவன்தனக்கே "நீ போனாய்" என்கிறாளிறே!. [மேய்க்கிய] - மேய்க்க. [பிணிஇத்யாதி] - நீபோனால் பாதகமாகக்கடவ மல்லிகைகமழ்தென்றல் தொடக்கமானவை மறுவலிடுகையாலே நீபோனமை நிச்சிதமென்கிறாள். கட்டவிழ்கிற மல்லிகையினுடைய மணத்தை வாடையானது தூவாநின்றது. ராவணன் ஸந்யாஸிவேஷத்தைக் கொண்டு வந்து தோற்றினாப்போலே, வாடையானது குளிர்காற்றாய்வந்து நலியாநின்றது. [தூவ] - வெக்காயம் தட்டாமே கடக்கநின்று வீசாநின்றது;' "பத்மகேஸர ஸம்ஸ்ருஷ்ட:" மதகஜமானது முன்னே தலைப்பாறைக்கொண்டு வருமாபோலே வாடையை முன் நடக்கவிட்டுக்கொண்டாய்த்து மாலை வருகிறது. இவனை மதித்தபடியாலே கூட்டுப்படையாய் வாராநின்றதாய்த்து. [வந்தன்றுலோ] - வந்தது கிடாய்; உடம்பிலே பட்டொழிந்ததுகிடாய். பகதத்தன் விட்ட அஸ்த்ரத்துக்கு அர்ஜுநனைப் பின்னேயிட்டு உன்மார்வையேற்றாப்போலே. நடுவேபுகுந்து கட்டிக்கொள்ளிடாய். பெரிய விளைத்திரையுடைய மாலையானது வரும் என்றஞ்சுகிறதல்ல, வந்தது. ஆனால் செய்யவடுப்பதென்னென்ன - [மணிமிகுமார்வினில்] - ஸ்ரீகௌஸ்துபம் நிறம்பெறும்படியான மார்வு என்னுதல்; திருமார்வடங்க ஸ்ரீகௌஸ்துபத்திற் புகரேயாம்படி யிருக்குமென்னுதல். கலவியிலும் கழற்றவேண்டாதபடியிறே ஸ்ரீகௌஸ்துபமிருப்பது; "நிரதிசயஸுகஸ்பர்ச" என்னக்

கடவதிறே. இவளுடைய ஸ்த்ரீத்வத்துக்கு ஸ்தநம்போலேயாய்த்து, அவனுடைய பும்ஸ்த்வத்துக்கு ஸ்ரீகௌஸ்துபம். புருஷோத்தமத்வ லக்ஷணமிறே. அம்மார்வில் முல்லைமாலையாலே என்னுடைய அழகியமுலையைப் பரிமளிதமாக்கி ஸ்ரீகௌஸ்துபத்தோடு தோளில்மாலையோடு வாசியின்றிக்கே போகோபகரணமாயிருக்கிறதாய்த்து. தோளில்முல்லைமாலையின் பரிமளத்தை என்முலைக்கு ஆக்கவேணும் என்கையாலே, அக்ராம்யமாகக் கலவியைச் சொன்னபடி. குளித்துப் பூச்சூட விருப்பாளரைப் போலேயாய்த்து இம்முலைகள். இவை ப்ரஹ்மசாரி முலையாகாமே, இம்மாலையில் பரிமளத்தாலே இவற்றை வாஸிதமாக்காய்; அம்மாலையில் பரிமளம் இங்கும் கோது அங்குமாகப் பண்ணவேணும். அம்மாலையில் பரிமளம் முலையிலே யாம்போது கலவியையொழியக்கூடாதிறே; *கிம்முகம் வநமாலாஸங்க்ரமஸ்ய* என்றுப்போலே. [வாயமுதம்தந்து] - ஸம்ச்லேஷரஸம் உந்மஸ்தகமாக மிக்கவாறே தாரணார்த்தமாகச் சில பேச்சுண்டிறே பேசுவது. அப்பேச்சாதல்; அன்றிக்கே, வாகம்ருதத்தைச் சொல்லவுமாம். பேச்சு என்று நிர்வஹித்துப்போருவது. [அணி இத்யாதி]. உன்போக்கை நினைத்து நாசீர் வருகிறதில்லை. அதுக்குப் பரிஹாரமாக உன்கையை என் தலைமேலே வைக்கவல்லையே? நாசீர்வருகைக்கு இவர்களுடைய மூர்திர்கைப்பழம் இருக்கிறபடி. [அணிமிகுதாமரைக் கை] - ஆபரணப்ரசுரமாய் அதுதான் மிகையாம்படி *ஸர்வபூஷணபூஷார்ஹா:* என்கிறபடியே தனக்குத் தானே ஆபரணமென்கிற கையை. "பசுமேய்க்கப்போனால் வருமளவும் எனக்கு தாரகமாக உன்கையில் ஆபரணத்தைத் தா; உன்கையில் ஆபரணத்தைத்தா" என்று அவர்களுக்கு அற்றுக்காட்டி வாங்கியிட்டுவைக்குமே; பசுமேய்க்கப்போகைக்குத் தான் ஒப்பித்தபடியைச் சொன்னானாகவுமாம். அத்தைச்செய்து அவன் போகப்புக்கவாறே சிறுகையாகிறாளிறே. [தாமரைக்கையை] - ஆபரணங்கள் மிகையாம்படியான கையை. [அந்தோ] - சேர்ந்து குளிர்ந்த தண்ணீரை விடாயர்க்கு வாராயென்று சொல்லவேண்டுவதே யுனக்கு! [அடிச்சியோம்] - அழகுக்குத் தோற்ற தோல்வி சொல்லுகிறாள். [தலைமிசை நீயணியாய்] - ஆபரணத்துக்கு அக்கைபோலேயாய்த்து அக்கைக்கு இவள்தலை. "பாதபங்கயமே தலைக்கணியாய்" என்பது, "அடிச்சியோம்தலைமிசையணியாய்" என்பதாய், காலைக்கையைப்பிடித்துக் காரியம் மூற்றுவிக்கப் பார்க்கிறார்கள். *மதீயமூர்த்தாநமலங்கரிஷ்யதி* என்றிறே இவர்களிருப்பது. இந்நீர்ப் பந்தங்களெல்லாம் அறிவாரார்? வேணுமாகில் எடுத்துவைத்துக் கொள்ளாய்!" என்றான்; காலன்கொண்டு மோதிரமிடுவாரைப் போலே என்பேற்றுக்கு நான் யத்நம்பண்ணுமவளோ? நீயே மேல்விழுந்துதரக் கொள்ளுமவனன்றோ நான்? என்றும் அத்தலையாலே பெறவிருக்குமவர்களிறே இவர்கள்தான். [அணியாய்] - ஆற்றாமை மீச்சுதென்று அல்வழக்குச் செய்யோங்காண்! நீ செய்வுற்றை நாங்கள் செய்யவோ?

அடிச்சியோந்தலைமிசை நீயணியாய் ஆழியங்கண்ணா!உன்கோலப்பாதம்*
பிடித்தது நடுவுனக்கரிவையரும்பலர் அதுநிற்கஎம்பெண்மையாற்றோம்*
வடித்தடங்கண்ணிணை நீரும்நில்லா மனமும்நில்லாஎமக்கதுதன்னாலே*
வெடிப்புநின்பசுநிரைமேய்க்கப்போக்கு வேமெமதுயிரழல்மெழுகிலுக்கே (6)

ஒ.— ஆறும்பாட்டில், போனபோன விடங்களெல்லாம் உனக்கு அபிமதைகளான பெண்கள் அநேகர் உளர்; உனக்கு ஒருகுறையில்லை; நாங்கள் உன்னைப்பிரிந்து தரிக்கமாட்டுகிறிலோம்; உன்போக்கானது, எங்களுக்கு அஸஹ்யமென்கிறாள். [அடிச்சியோம் தலைமிசை நீ அணியாய் ஆழியங்கண்ணா] - கடல்போலேயிருக்கிற அழகியகண்களாலே என்னைக் குளிரநோக்கி என்தலைமேலே கையை வைத்தருளவேணும். [உன்கோலப்பாதம் பிடித்தது நடு வுனக்கு அரிவையரும்பலர்] - 'நான்போகிறேனாகக்கொண்டே இங்ஙன்படுகிறது; போனால்தான் உன்னைப்பிரிந்து தரிப்பனோ?' என்ன,—நீபோனவிடத்திலே நடுவே உன் திருவடிகளைப்பிடிப்பார் உனக்கு அபிமதைகளும் பலர். [அதுநிற்க எம்பெண்மையாற்றோம்] - அவர்கள் இடையாட்டம் நிற்க, நாங்கள் எங்கள் பெண்மைகொண்டு செலுத்தமாட்டோம், ஜீவிக்கமாட்டோம் என்று கருத்து. [வடித்தடங்கண் என்றுமேலுக்கு] - கூர்த்துப் பெருத்திருந்துள்ள கண்கள்

நீர்மாறுகிறதில்லை. நமஸ்ஸு சிதிலமாகாநின்றது. ஆகையாலே எங்களுக்கு உன்னுடைய பசுநிரை மேய்க்கப்போக்காகிறது அஸஹ்யம், நீபோகிறுயென்று எங்கள் ஆத்மா நெருப்பிலிட்ட மெழுகுபோலே சிதிலமாய் வேவா நின்றது.

இ.—ஆறும்பாட்டில், உனக்குப் போனவிடமெங்கும் அபிமதைகள் பலர் உளர்; உனக்கு ஒரு குறையில்லை, நாங்கள் உன்னைப்பிரிந்து தரிக்கமாட்டுகிறிலோம்; உன்போக்கானது எங்களுக்கு அஸஹ்யமென்கிறுள். [ஆழியங்கண்ணு - அடிச்சியோம் தலைமிசை நீ அணியாய்] - கண்ணாலே குளிரநோக்கவும் வேணும், தலையிலே கையை வைக்கவும் வேணுமென்கிறுள். உனக்குத் தோற்றாரை "ஐயோ!" என்று குளிரநோக்கி ஈரக்கையாலே தடவவேண்டாவோ? [ஆழியங்கண்ணு] - கடல்போலே ச்ரமஹரமாய், தர்சநீயமான கண். [தலைமிசை நீ அணியாய்] - என்கிற அதினருகேயாகையாலே, 'ஆழியங்கண்ணு' - என்கிற ஸம்போதநத்துக்கு - குளிரநோக்கியருள வேணுமென்று கருத்து. நான் போகிறேனுகக் கொண்டோ நீங்கள் படுகிறது? இது உங்களைக்குறித்து நான் சொல்லும் வார்த்தையன்றோ? எனக்குப் போக்குண்டோ? போனுல் விஷயாந்தரமுண்டோ? என்ன,—[உன்கோலம் இத்யாதி] - அதாகில் உன் திருவடிகளையேபற்றி வர்த்திப்பாரும் அநேகரில்லையோ? உனக்குப் போனவிடமெங்கும் பெரிய திருநாளன்றோ? [நடுவு] - போகிறகார்யமொழிய நடுவே. [அரிவையர்] - தங்கள் பருவத்தாலே துவக்க வல்லவர்கள். [பலர்] - ஒருவரிருவரோ? "ஷோடச ஸ்த்ரீஸஹஸ்ராணி" அன்றோ. [அதுநிற்க] - அதுகிடக்கிடாய். ஆனைக்கூட்டத்துக்குக் கதவிட்டு உன்னை நியமிக்கப்போகிறேமோ? [எம்பெண்மை யாற்றேம்] - எங்களுடைய ஸ்த்ரீத்வம்கொண்டு ஆற்றமாட்டோமென்கை. ஜீவிக்கமாட்டுகிறிலோமென்கை. ஸ்த்ரீத்வம் ஸ்வரூபமானுல் வருந்தித் தரிக்கவேண்டாவோ? என்ன,—[வடித்தடங்கண்ணிணை நீரும் நில்லா] - எங்களைப் பார்க்கமாட்டாயோ? ஜீவிப்பார்க்குள்ள லக்ஷணமுண்டாயிருந்ததோ? கூர்த்துப் பெருத்தகண்கள் நீர்மாறுகிறதில்லை. 'ஓராளும்ஒருநோக்கும் நேராம்படி இதொரு கூர்மையே! போக்யதை மிற்பரப்பு போக்தாக்களளவன்றிக்கே யிருப்பதே!' என்று நீ வாய்வெருவும் கண்கள் படுகிறபாடு பாராய்! [நீரும்நில்லா] - உன்னைத்தகையிலும் கண்ணநீர் தகையப்போகிறதில்லை. [மனமும்நில்லா] - "நெஞ்சில் தைர்யத்தாலே கண்ணநீரைத்தகைவோம்" என்னவொண்ணுதபடி மநஸ்ஸில் தைர்யமும் போய்த்து. [எமக்கு] - பிரிவிலும் நெஞ்சு நெகிழாதொழிகைக்கு நீயன்றே நாங்கள். [அதுதன்னுலே] - மநஸ்ஸு சிதிலமாகையாலே. [வெடிப்புநின்பசுநிரைமேய்க்கப்போக்கு] - உன்னுடைய பசுநிரை மேய்க்கப் போக்காகிறது எங்களுக்கு வெடிப்பு - வெடிப்பாவதென்? என்ன - [வேம் எமதுயிர் அழல்மெழுகிலுக்கே] - எங்கள் ஆத்மா நெருப்பிலிட்ட மெழுகுபோலே சிதிலமாய் தஹியாநின்றது.

ஈடு.—ஆறும்பாட்டு. உனக்குப் போனவிடமெங்கும் அபிமதைகள் பலருளர்; உனக்கு ஒருகுறையில்லை, நாங்கள் உன்னைப் பிரிந்து தரிக்கமாட்டுகிறிலோம்: உன்போக்கானது எங்களுக்கு அஸஹ்யமென்கிறுள்.

[அடிச்சியோந்தலைமிசை நீயணியாய் ஆழியங்கண்ணு] - தோற்றாரை ஈரக்கையாலே தடவவேண்டாவோ? [ஆழியங்கண்ணு] - கடல்போலே ச்ரமஹரமாய் தர்சநீயமான கண். 'நீயணியாய்' - என்கிறவதினருகே 'ஆழியங்கண்ணு' என்கையாலே - திருக்கண்களாலே குளிர நோக்கவேணும். 'உங்கள்கையாலே ஸ்பர்சிக்கவேணும்' என்றன்றோ நானிருப்பது? எனக்குப் போக்குண்டோ? போனுல் உங்களையொழியப் புறம்பு விஷயந்தானெனக்குண்டோ வென்ன? - ஓங்காண்! இதுகிடக்கிடாய்! [உன்கோலம் இத்யாதி] - உன் திருவடிகளைப் பற்றி யிருப்பார் அநேகர்; உனக்குப் போனபோனவிடமெங்கும் பெரியதிருநாளன்றோ? [நடுவு] - போகிறகார்ய மொழிய நடுவே. [அரிவையர்] - தங்கள் பருவத்தாலே துவக்கவல்லவர். [பலர்] - ஒருவரிருவரோ? "ஷோடசஸ்த்ரீஸஹஸ்ராணி" "பதினாறுமாயிரவர் தேவிமார்." [அதுநிற்க] - அதுகிடக்க. ஆனைக்கூட்டத்துக்குக் கதவிடப் புகுகிறேமோ? [எம்பெண்மை யாற்றேம்] - எங்கள் ஸ்த்ரீத்வங்கொண்டு ஆற்றமாட்டுகிறிலோம். நீ போனுல் நாங்கள் ஜீவிக்கமாட்டோம். ஸ்த்ரீத்வம் ஸ்வரூபமானுல் வருமளவும் வருந்தி தரிக்கவேண்டாவோ வென்ன - [வடித்தடங்கண்ணிணை நீரும்நில்லா] - எங்களைப்பார்க்கமாட்டாயோ? ஜீவிப்பாருடைய லக்ஷணமுண்டோ எங்களுடம்பில்? கூர்த்துப் பெருத்திருந்துள்ள கண்கள்

நீர்மாறுகிறதில்லை. "ஓராளும்ஒருநோக்கும் நேராம்படி இதொருகூர்மையே! போக்யதையில் பரப்பு போக்தாக்கள் அளவன்றியே இருக்கும்படியே!" என்று நீ வாய்வெருவும் கண்கள் படுகிறபாடு பாராய்! [நீரும்நில்லா] - நீ நிற்கிலும் நீர் நிற்கிறதில்லை. உன்னைத் தகையிலும் நீரைத் தகையப்போகிறதில்லை. 'நில்லாவாவதென்? வருந்தித் தகையவேண்டாவோ' என்ன,—அதற்றைத் தகையவேணுமோ இது நிற்கும்போது? என்கிறாள். ஆனால், அதற்றான நெஞ்சைத் தகையுமித்தனையன்றோ வென்ன? [மனமும் நில்லா] - தைர்யபங்கம் பிறந்து நாங்கள் படுகிறபாடு பாராயோ? வருந்தி நெஞ்சைப் பிடித்து தரிக்கவேண்டாவோ? என்ன,—[எமக்கு] - நீயாகவேணுமே யதுக்கு; பிரிகைக்கும் பிரிவில் நெஞ்சிளையாமைக்கும்; "யாமுடையாயன் றன்மனம்கல்"லிறே. [அதுதன்னாலே] - இப்படி மநஸ்ஸு சிதிலமாகையாலே, [வெடிப்புநின்பசுநிரைமேய்க்கப் போக்கு] - நீ பசுமேய்க்கப் போகிற இது - வெடிப்பு. வெடிப்பாவதென்னென்ன? [வேமித்யாதி] - எங்களுடைய ப்ராணனானது அக்நிஸகாசத்தில் மெழுகிலுங்காட்டில் உருகி வெந்துபோகாநின்றது. உன் பசுநிரைமேய்க்கப் போக்கானது வெடிப்பு - விநாசம்.

வேமெமதுயிர்அழல்மெழுகிலுக்கு வெள்வளைமேகலைகழன்றுவீழ*
தூமலர்க்கண்ணிணைமுத்தஞ்சோரத் துணைமுலைபயந்தெனதோள்கள்வாட*
மாமணிவண்ணா!உன்செங்கமலவண்ணமென்மலரடி நோவநீபோய்*
ஆமகிழ்ந்துகந்தவைமேய்க்கின்று உன்னோடசுரர்கள்தலைப்பெய்யில்
யவன்கொல்ஆங்கே? (7)

ஒ.—ஏழாம்பாட்டில், நாங்கள் நோவுபட உன்னுடைய ஸுகுமாரமான திருவடிகள்நோவ நீபசு மேய்க்கப்போனால் அங்கே அஸுரர்வந்துகிட்டில் என்ன ப்ரமாதம் புகுரக்கடவதென்கிறாள். [வெள்வளை என்று மேலுக்கு] - விரஹகார்ச்யத்தாலே வெள்வளைகளும் மேகலைகளும் கழன்று விழும்படியாகவும், அழகிய கண்கள் நீர்சோரும்படியாகவும், முலைகளும் விவர்ணமாய்த் தோள்களும் வாடும்படியாகவும். [மாமணி வண்ணா] - பெருவிலையனான நீலமணிபோன்ற திருநிறத்தையுடையவனே!

இ.—ஏழாம்பாட்டில், நாங்கள் நோவுபட உன்ஸுகுமாரமான திருவடிகள் நோவப் பசுமேய்க்கப் போனால், அங்கே அஸுரர்கள்கிட்டில் என்னாய் விளையுமென்கிறாள். [வேம்எமதுயிர் இத்யாதி] - உனக்கு பாவபந்தமில்லையாகில் எங்கள் உபதேசங்கொண்டாகிலும் அறியாய். [எமதுயிர்] - உனக்கில்லையென்னுமிடம் கண்டோமிறே. [வெள்வளை இத்யாதி] - சங்குவளை. விரஹகார்ச்யத்தாலே வெள்வளைகளும் மேகலைகளும் கழன்று விழும்படியாகவும். பிறரறியாமைக்காகப் பலகாலுமெடுத்திடுவது பேணுவதானாலும் அவை நிராச்ரயமாக நில்லாவிறே. அழகிய தாமரைப்பூப்போலே யிருக்கிறகண்கள் சோகாச்ரு விழும்படியாகவும். ஆநந்தாச்ருவுக்கு யோக்யமான கண்களை சோகாச்ருவுக்கு இலக்காக்கப் புகுகிறாயே. ஸம்ச்லேஷதசையில் ஆநந்தாச்ருவைக்கண்டு, தாமரையிலே முத்துப்பட்டாப்போலே "இதொரு கண்ணழகே!" என்று கொண்டாடும் நாயகஸமாதியாலே தன்கண்ணழகைச் சொல்லுகிறாளிறே. [துணைமுலைபயந்து] - நீசேர்த்தியழகு கொண்டாடும் முலை விவர்ணமாய், எனதோள்கள் ஆச்ரயமிழந்த தளிர்போலே வாடும்படியாகவும். [மாமணிவண்ணா] - முன்பு அவனழகைச்சொன்னாள்! இப்போது தன்னழகைச்சொல்லுகிறாள். பெருவிலையனான நீலமணிபோன்ற வடிவையுடையவனே! இவ்வடிவைக் கொண்டே போகப்புகுகிறது? [உன் செங்கமல வண்ணமென்மலரடி நோவ] - விகாஸம் செவ்வி குளிர்த்தி நாற்றந்துக்கு தாமரையை ஒப்பாகச்சொல்லும், ஸௌகுமார்யத்துக்குச் சொல்லலாவதில்லை. [நீபோய்] - புக்கவிடத்திலே ஊர்ப்பூசல் விளைக்கும் நீ போகக்கடவையோ? குணாதிகனான சக்கரவர்த்தி திருமகனாய் வழிகொடு வழிபோகிறாயன்றே. போகத் தவிராதானால் "அக்ரதஸ்தே கமிஷ்யாமி" என்று முன்னேபோய் நான் வழிபண்ணினாலன்றோபோவது. [ஆமகிழ்ந்து இத்யாதி] - எங்களைப்போலன்றியே பசுக்களைவிரும்பி. [உகந்தவை] - நீ அவற்றுக்கு உகந்துகொண்டு மேய்க்கிறவிடத்திலே. நீ அந்யபரனான சித்ரத்திலே, [உன்னோடு அசுரர்கள் தலைப்பெய்யில்] - உன்னோடே துஷ்ப்ரக்ருதிகள் கிட்டில்.

கருமுகைமாலையை நெருப்புக்கிட்டினாப்போலே. [யவன்கொல்ஆங்கே] - அங்கு என் ஆய் விளையுமென்ற படி. நாம் புக்கவிடத்தில் வெற்றியல்லதுண்டோவென்ன; ''ஹதோவா ப்ராப்ஸ்யஸே ஸ்வர்க்கம்'' என்று சொல்லுகிறபடியே யுத்தத்தில் ஜயாபஜயங்கள் வ்யவஸ்த்திதமாயிருக்குமோ? அங்குப்பிறக்கும்ப்ரமாதத்தைத் தன்வாயாற்சொல்லமாட்டாமையாலே, என்னாய் விளையுமென்கிறாள்.

௭.—ஏழாம்பாட்டு. 'நாங்கள்நோவுபட, உன்ஸௌகுமாரமான திருவடிகள் நோவப் பசுமேய்க்கப்போனால், அங்கே அஸுரர்கள் கிட்டினால் என்னாய்விளையும்?' என்கிறாள்.

[வேம் இத்யாதி]-உனக்கு பாவபந்தமில்லாமையாலே தெரியாவிட்டால் எங்கள் உபதேசங் கொண்டு அறிந்தாலாகாதோ? 'எமதுயிர் வேம்' என்கையாலே, உனக்கு அதில்லையென்றதா மிறே. [வெள்வளை இத்யாதி]-சங்குவளை. விரஹகார்ச்யத்தாலே வெள்வளைகளும் மேகலைகளும் கழன்றுவிழும்படியாகவும், பிறர் அறியாதபடி பலகாலும் எடுத்திடுவது பேணுவதானதும், அவை நிராச்ரயமாக நில்லாவிறே; ஆகாசத்தில் தொங்காதே; அப்படிகாணும் உடம்பு க்ருசமானபடி. [தாமலர் இத்யாதி] - நாயகஸமாதியாலே சொன்னபடி. என்? தன்கண்ணைத் தானே நாயகன் இப்படி சொன்னானேயென்னில், ''கண்கனாய துணைமலர் - காவியும் நீலமும் வேலும் கயலும் பலபலவென்றிருக்கும்'' என்றானிறே. [தாமலர்க்கண்ணிணைமுத்தஞ்சோர] - உனக்கு ஓர் அபூர்வம் காணலாம்; போகாதேகிடாயென்கிறாள். தாமரைப்பூவிலே முத்துப் பட்டது; நேத்ரபூதமான முத்திறே. அவனுக்குத் தோழிசொல்லச் செவியேறுகேட்டுச் சொல்லுகிறாள். 'ஞாலமெய்தற்குரியன வொண்முத்தும் பைம்பொன்னுமேந்தினீர்' என்று (கருத்தறிந்தபடியைத் தான்) சொன்னானே. [துணைமுலைபயந்து] - நீ சேர்த்தியழகு சொல்லிக் கொண்டாடும் முலைகளானவை வைவர்ண்யத்தை பஜியாநின்றன; 'அவனுடைய கோயிற் கட்டணமழிகிறது' என்கிறாள். [எனதோள்கள்வாட] - அவயவிபோனால் தோளிணை பின்னை வாடுமித்தனையிறே. அப்போஜகத்திலேநின்று பரக்கிறதென்? இதுக்குமுன்பு அவனிழவு சொன்னாள்; மேல் தனனிழவு சொல்லுகிறாள். [மாமணிவண்ணா]-நீலரத்நம்போன்ற வடிவை யுடையனே! மா என்று - கறுப்பு. இவ்வடிவைக் கொண்டோ நீபோகிறது? வெய்யில் கானல் பொறுக்குமோ இவ்வடிவு? உன்னைநீ பிரிந்தறியாயே! [உன் இத்யாதி] - விகாஸாதிகளால் தாமரையை ஒருபோலியாகச் சொல்லலாயிருக்கும், மார்த்தவத்துக்கு ஒப்பில்லை. [நீபோய்] - தன்காலாலே போகவேணும் அவன் என்றிருக்கிறாள் காணும். *அக்ரதஸ்தே கமிஷ்யாமி ம்ருத்நந்தீ குசகண்டகாந்* என்னுமவளிறே. போக்குத்தவிராவிட்டால் பின்னை வழிக்குக்கடவார் வழி திருத்தினால் போகவேண்டாவோ? [நீபோய்] - குறைநிகளுன சக்ரவர்த்திதிருமகனே வழிபோய் வழிவருகைக்கு; போனபோனவிடமெங்கும் பூசல்விளைக்குமவனிறே. [ஆமகிழ்ந்து] - எங்களைப் போலே உபேக்ஷித்திருக்கிறாயல்லையே பசுக்களை. [உகந்தவை மேய்க்கின்று] - அவற்றின் பக்க லுண்டான விருப்பத்தாலே அவற்றையுகந்து மேயாநிற்புதி. [மேய்க்கின்று]-மேயாநின்றவிடத் தில் அங்ஙனான அந்த சரித்ரத்திலே. [உன்னோடசுரர்கள்தலைப்பெய்யில்]-கருமுகைமாலையும் காலாக்நியும் கூடினாப்போலேயிறே. [யவன்கொலாங்கே] - ஆங்கு - யவன்கொல்? எவன் கொலென்றபடி. அங்கென்னாய்விளையுமோ? நாம் எங்கேனும்போகிலும் ஆரேனும்கிட்டிலும் வெற்றிநம்மதன்றோ என்னுமே அவன். ''*அவ்யவஸ்த்தௌ ஹி த்ருச்யேதே யுத்தே ஜயபராஜயௌ* என்கிறபடியே - யுத்தத்திலே ஜயாபஜயங்கள் அவ்யவஸ்த்திதமன்றோ? அதுமறந்தப்படி யாகில்செய்வதென்?'' என்றுஅஞ்சாநின்றேன். அவர்கள்கிட்டில் அங்கென்னாய்விளையுமோ? அது தன்வாயால் சொல்லமாட்டாமையாலே, என்னாய்விளையு மென்கிறாள்.

அசுரர்கள்தலைப்பெய்யில்யவன்கொல்? ஆங்குஎன்று ஆழுமென்
னாருயிர் ஆன்பின்போகேல்* கசிகையும்வேட்கையும்உள்கலந்து கலவியும்
நலியும்என்கைகழியேல்* வசிசெயுன்தாமரைக்கண்ணும்வாயும் கைகளும்
பிசகவுடையும்காட்டி* ஒசிசெய்நுண்ணிடையிளவாய்ச்சியர் நீயுகக்கும்
நல்லவரோடும்உழிதராயே. (8)

ஒ.—எட்டாம்பாட்டில், நீ பசுமேய்க்கப்போனால் என்னப்ரமாதம்புகுகிறதோ? என்று அஞ்சா நின்றேன். உன்னை விச்லேஷிக்கவும் க்ஷமையாகிறிலேன்; ஆனபின்பு, உன்னுடைய ஸௌந்தர்யத்தாலே உனக்கு அபிமதைகளாயிருப்பாரை வசீகரித்து அவர்களும் நீயுங்கூட என்கண்வட்டத்திலே உலாவித்திரியவேணுமென்கிறாள். [ஆழும்] - அழுந்தும். [கசிகையும் என்று தொடங்கி] - உன்னோட்டை ஸங்கமும் உன்னோடு ஸம்ச்லேஷிக்கவேணுமென்னும் அபிநிவேசமும் இப்போதை உன்னோட்டை ஸம்ச்லேஷமும் நீபோனால் ஸ்ம்ருதமாய் பாதிக்கும்; ஆனபின்பு, என்னைக் கழியப்போகாதொழியவேணும். [வசீ] - வச்யம். ஏசிகை - துணைநகை.

இ.—எட்டாம்பாட்டில், நீபோனால் ஸப்ரமாதமென்று அஞ்சாநின்றேன்; உன்னைப்பிரியவும் மாட்டேன்; பசுமேய்க்கை வ்யாஜமாகக்கொண்டு அபிமதவிஷயங்களை நினைத்துப்போகிறாயாகில் என்கண்வட்டத்திலே உனக்கு அபிமதைகளோடே ஸஞ்சரிக்கவேணுமென்கிறாள். [அசுரர்கள் இத்யாதி] - யதாஸங்கல்பம் நீ வெற்றியோடே மீண்டாலும் அதுக்குமுன்னே நான் தரைப்படுவன்? நான் உனக்கு வேண்டாவோ! என்கிறாள். [ஆழும்] - அழுந்தும். அதுக்கு நம்மால் செய்யலாவதென்? என்ன-[ஆன்பின் போகேல்] - பசுக்கள்பின்பு போகாதேகொள். 'ஜாத்யுசிதமான தர்மத்தை விடப்போமோ? அவ்வளவும் தரித்திருக்குமத்தனை யன்றோ?' என்ன,—பிரிவில் தரிக்கலாம்படியோ நீ கலவியிற் பரிமாறிற்றென்கிறாள்; அபிமதவிஷயத்தோடே யிருக்கச்செய்தே ஸந்த்யாவந்தநம்பண்ண நினைப்பாருண்டோ? ஸ்வஜநத்தை விட்டோ ஸ்வதர்மத்தை ரக்ஷிப்பது? [கசிகையும்] - ஸ்நேஹமும். [வேட்கையும்] - மேன்மேலும் உன்னோட்டைக் கலவியிலுண்டான அபிநிவேசமும்; அருகேயிருக்க, பிரிந்தால் பிறக்கும் அஸாம்யு உண்டாம்படியிறே அபிநிவேசம். [கலவியும்] - கலக்கும்போது தலைதடுமாறாகப் பரிமாறும் பரிமாற்றமும், [உள்கலந்து நலியும்] - என்னுடைய ஹ்ருதயத்திலே ஸ்ம்ருதமாய் பாதிக்கும். அதுக்கு நம்மால் பரிஹாரமென்னென்ன ? — [என்கைகழியேல்] - நான் அணைத்த கைக்குள்ளேயிருக்கப் பார். 'இவர்கள் சொல்லுவது கேட்கைக்காக ஏகதாரவ்ரதனேநான் ?' என்ன,—'உனக்கு அபிமதைகளானாரோடு கலக்க வேண்டா வென்கிறேனல்லேன்; அவர்களோடே என்முன்னே ஸஞ்சரியாய்' என்ன,—அவர்களை அழைத்துத் தருவார் வேண்டாவோவென்ன; உனக்குக் குறையுண்டோ தூதுசெய் கண்களிருக்க என்கிறாள்:—[வசிசெய் உன் தாமரைக்கண்ணும்] - இனிப் பொருந்தோமென்று பெண்கள்நெஞ்சிற் பிறந்த மறமெல்லாம் தீரும்படி வசீகரிக்கவல்ல கண்ணும். [வாயும்] - கண்ணாலே நினைத்தத்தை ஆவிஷ்கரிக்கிற வாயும். [கைகளும்] -அந்நோக்குக்கும் ஸ்மிதத்துக்கும் தோற்றவளவில் அநுவர்த்தித் தணைக்கும் கைகளும். [பீதகவுடையும்] - அவற்றுக்குத் தோற்றுவிழும்போது நடுவே தகையும் திருப்பீதாம்பரமும். ''பீதாம்பரதர: ஸ்ரக்வீ''. [காட்டி] - உனக்கு அவர்களை அழைக்கைக்குப் பணியுண்டோ? வடிவைக் காட்ட அமையாதோ? [ஏசிசெய் நுண்ணிடை] - பண்டே தொட்டாரோடே தோஷமாம்படியான இடை. இதுக்குமேலே கலவியாலே துவண்ட இடையை யுடையவர்கள். [இளவாய்ச்சியர்] - உன்னோடொத்த பருவத்தையுடையவர்கள். வடிவழகாலும் பருவத்தாலும் உன்னைத் துவக்கவல்லார் எத்தனைவர் கிடக்கிறது? [நீயுகக்கும் நல்லவர்] - வடிவழகும் பருவமுமொழியவே நீ உகந்த நன்மையை யுடையவர்கள்; அவர்களோடே கூட என்கண்வட்டத்திலே ஸஞ்சரிக்க அமையும்.

ஈடு.—எட்டாம்பாட்டு. நீபோனால் ஸப்ரமாதமென்றஞ்சாநின்றேன்; உன்னைப் பிரியவும்மாட்டேன். பசுமேய்க்கை வ்யாஜமாக அபிமதவிஷயங்களை நினைத்துப்போகிறாயாகில் என் கண்வட்டத்திலே உனக்கு அபிமதைகளோடே ஸஞ்சரிக்கவேணுமென்கிறாள்.

[அசுரரித்யாதி] - நீவெற்றியோடே மீண்டாலும் அதுக்கு முன்னே நான் தரைப்படுவன்? நான்உனக்குவேண்டாவோ? என்கிறாள். [ஆழும்] - அழுந்தும். அதுக்கு நம்மால் செய்யலாவதென்? என்ன,—[ஆன்பின்போகேல்] - பசுக்களின்பின்பு போகாதே கொள்; என்வழியே போகப்பார்ப்பது. காமிநியருகேயிருந்து ஸந்த்யாவந்தநம்பண்ணப்போக என்னக்கடவதோ? ஸ்வதர்மாநுஷ்டாநம் பண்ணுவது ஸ்வஜநத்தைவிட்டோ? 'ஜாத்யுசிததர்மத்தைத் தவிரப் போமோ? வருந்தி தரிக்கவேண்டாவோ?' என்ன,—பிரிவில் தரிக்கலாம்படியோ நீ கலவியில் பரிமாறிற்றென்கிறாள்:—[கசிகையும்] - ஸ்நேஹமும். [வேட்கையும்] - மேன்மேலுமுன்னோட்டைக் கலவியிலுண்டான அபிநிவேசமும். [கலவியும்] - ஸம்ச்லேஷமும். [கசிகை

இத்யாதி] - நீ பண்ணும் ஸ்நேஹமும், அருகேயிருக்கச்செய்தே பகலவிருந்தாரைப்போலே மேன்மேலெனப் பண்ணும் அபிநிவேசமும், தலைதடுமாறாகக் கலப்பதான இவையும், நீ பேர நின்றவாறே ஹ்ருதயத்திலே புகுந்துநலியும். ஆனால் செய்ய வேண்டுவதென்? என்ன,-[என்கை கழியேல்] - நான் அணைந்த கைக்குள்ளில்நின்று நகலா தொழியவேணும். ஜாத்யுசிததர்ம மநுஷ்டிப்பது என்னைமுடித்தோ? "போகாதொழியப்போமோ? புறம்பேயும் நமக்கு அபிமத விஷயங்களுண்டாயிராதோ ? அவர்களுடனும் பரிமாற வேண்டியிராதோ?" என்றான் மேல் இவன் சொல்லுமது கேட்கைக்காக. எங்களுக்கு அநிர்ப்பந்தமுண்டோ? நீ கைகழியப் போகாதொழியுமத்தனையன்றோ வேண்டுவது? நீ விரும்பியிருக்குமவர்களோடே என் கண் வட்டத்தே பரிமாறப்பார் என்ன, —ஆனால், அவர்களை யழைத்துத்தருவாரார்? என்ன, [வசிசெயுன்தாமரைக்கண்ணும்] -உனக்கு தூதுசெய்கண்களுண்டாயிருக்கப் புறம்பேபரிகரம் தேடி அழைக்கவேண்டியிருந்ததோ? இனிப்பொருந்தோம் என்றிருப்பார்நெஞ்சுகளில் மறத்தைமாற்றி அவர்களை வசீகரித்துத்தரும் கண்களும், அந்நோக்கில் கருத்தைஆவிஷ்கரிக்கும் வாயும், அந்நோக்கிலும் முறுவலிலும் நேர்நிற்கமாட்டாதே வ்ரீளையாலே கவிழ்ந்தவர்களை எடுத்துக்கொள்ளும் கைகளும். ஸ்பர்சத்துக்குத் தோற்றவர்களைக் கீழ்ப்போகாதபடியாகத் தன் செல்லாமையாலே எறட்டுக்கொள்ளுகிற திருப்பீதாம்பரமும். *பீதாம்பரதர:ஸ்ரக்வீ* என்னக் கடவதிறே. [காட்டி] - உனக்குப் புறம்பே யழைத்துத்தருவார் வேண்டியிருந்ததோ? பீடாத்தைவிழவிட்டு வடிவைக்காட்டவமையாதோ? [ஒளிசெய்இத்யாதி] - பண்டே தொட்டாரோடே தோஷமான இடை. அதுக்குமேலே கலவியாலே துவண்ட இடையை யுடையவர்கள். [இளவாய்ச்சியர்] - உன்னோடொத்த பருவத்தையுடையவர்கள். வடிவழகாலும் பருவத்தாலும் உன்னைத் துவக்கவல்லார் எத்தனைவர் கிடக்கிறது! நீ போகாநிற்க, இடையிலே தங்கள் பருவத்தாலே துவக்கவல்லார் அநேகர். [நீயுகக்கும் நல்லவர்] - வடிவழகு உண்டானாலும் ப்ரயோஜநமில்லையே; எங்களைப்போலே யிருக்கவொண்ணாதே, நீயுகக்குமவர்களாகவும் வேணுமே. நீயுகக்கும்படி விலக்ஷணைகளான அவர்களோடே என்கண்வட்டத்திலே ஸஞ்சரிக்கவமையும்.

உகக்குநல்லவரொடும்உழிதந்து உன்தன்திருவுள்ளம்இடர்கெடுந்தோறும்* நாங்கள்
வியக்கஇன்புறுதும்எம்பெண்மையாற்றோம் எம்பெருமான்! பசுமேய்க்கப் போகேல்*
மிகப்பலஅசுரர்கள்வேண்டுருவங்கொண்டு நின்றுஉழிதருவர்கஞ்சனேவ*
அகப்படில்அவரொடும்நின்னொடு ஆங்கே அவத்தங்கள்விளையும் என்சொற் கொள் அந்தோ! (9)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், "உங்கள் ஸந்நிதியிலே நான் வேறே சிலரோடே பரிமாறுகை உங்களுக்கு ப்ரியமாகக்கூடுமோ?" என்றருளிச்செய்ய; "எங்களோடே ஸம்ச்லேஷிப்பதிற்காட்டிலும் நீ வேறேசிலரோடே ஸம்ச்லேஷித்து உன்னுடைய திருவுள்ளத்தில் இடர்கெடுகை எங்களுக்கு மிகவும் இனிது; ஆனபின்பு, ஸப்ரமாதமான தேசத்திலே பசுநிரைமேய்க்கப் போகாதொழியவேணும்" என்கிறாள். [உகக்கும் என்று தொடங்கி] - உனக்கு அபிமதைகளாய் விலக்ஷணைகளாயுள்ள அவர்களோடே திரிந்து, உன்னுடைய திருவுள்ளத்தில் இடர்கெடுந்தோறும் நாங்கள் எங்களோடே ஸம்ச்லேஷித்ததிற்காட்டிலும் மிகவும் இனியோமாவுதோம்; நீ வேறுசிலரோடே ஸம்ச்லேஷிக்க தரியாதிருக்கும் பெண்மையோமல்லோம்- [மிக என்று தொடங்கி] - பல அஸுரர் கம்ஸன் ஏவ வேண்டினவடிவுகளைக் கொண்டு மிகவும் ஸஞ்சரியாநிற்பர்; அவர்கள்கையிலே அகப்படில் அவர்களோடு உன்னோடு அவ்விடத்தில் பொல்லாங்குகள் விளையும்; ஐயோ! என்சொல் கொள்ளாய்.

இ.—ஒன்பதாம்பாட்டில், 'உங்கள் ஸந்நிதியிலே சிலரோடேகூடப் பரிமாறுகை இஷ்டமாகக் கூடுமோ?' என்ன; எங்களோட்டை ஸம்ச்லேஷத்திற்காட்டிலும் உன்திருவுள்ளத்தில் ப்ரியமே எங்களுக்கு

இஷ்டம்; ஆனபின்பு, ஸப்ரமாதமானதேசத்திலே போகாதொழியவேணும் என்கிறாள். [உகக்கு நல்லவர் இத்யாதி] - எங்களைப்போலன்றிக்கே, நீ உகக்கும்படியான விலக்ஷணைகளோடேகூட ஸஞ்சரித்து, அவர்களோடே பரிமாறப்பெற்றிலோமென்று திருவுள்ளத்திலுண்டான விடாயால் வந்த துக்கம் கெடுந்தோறும். [நாங்கள் வியக்க இன்புறுதும்] - புறம்புள்ளாரைப்போலன்றியே உன்னுகப்பே ப்ரயோஜநமான நாங்கள் மிகவும் உகப்புதோம். மிகுதி எதிற்காட்டில் என்னில்; எங்களோடே கலக்குமதிற் காட்டிலென்னுதல், உன்னிற்காட்டில் நீ உகந்தவர்களை உகப்புதோம் என்னுதல். [எம்பெண்மையாற்றோம்] - உன் உகப்புக்குப் புறம்பாய்வரும் ஸ்த்ரீத்வம் எங்களுக்கு அஸஹ்யம்: அதுவேண்டா. [எம்பெருமான் பசுமேய்க்கப்போகேல்] – உனக்கு எழுத்து வாங்குகிறோம்: நீபசுமேய்க்கப் போகாதொழியவல்லையே! நீங்கள் இங்ஙனே நிர்ப்பந்திக்க நான் போகாநின்றேனோ? ஸ்வதர்மத்தைச் செய்யப்போனால்தான் வருவதென்? என்ன,—[மிகப்பல அசுரர் இத்யாதி] - பலஅஸுரர்கள் வேண்டின வடிவுகொண்டு மிகவும் ஸஞ்சரியாநிற்பர்கள். [வேண்டு] - நீ உகக்கும்வடிவுகள் என்னுதல், காமரூபிகளாகையாலே நலிகைக்கீடான வடிவென்னுதல்- கன்றாய் வருவாரும் விளவாய் வருவாருமாவர்கள். ஸ்ரீப்ருந்தாவநத்திலெழும் பூண்டுகளும் அஸுராவிஷ்டமாயிறேயிருப்பது. [கஞ்சனேவ] - “தோற்றாலும் அவன் பக்கல் கொலைதப்பாது” என்றுபோகார், மேல்விழுவர்கள். மேல்விழுந்தாலும் வெற்றியோடல்லது மீளுவுதோமோ என்ன ? [அகப்படில்] - யுத்தத்திலே ஜயாபஜய வ்யவஸ்தையுண்டோ ? அவர்கள்கையிலே அகப்படில் அவர்களும் நீயுமானவிடத்திலே பொல்லாங்கு விளையும். இப்படிச் சொல்லச் செய்தேயும் தன்வீரத்தைநினைத்து, ஆனைக்குப்பு ஆடுவாரைப்போலே பேசாதிருக்க, [என்சொற்கொள்]-அநாதரியாதே நான்சொல்லுகிற வார்த்தையை புத்திபண்ணாய். [அந்தோ] - எங்களை அறியாவிட்டால் உன்னையும் அறியாதொழியவேணுமோ ?

ஈடு.—ஒன்பதாம்பாட்டு, “உகக்குநல்லவரோடும் உழிதராய்” என்று நான் போகாமைக்காகச் சொன்னவார்த்தை இத்தனைபொழிய, உங்கள் ஸந்நிதியிலே நான் சிலரோடே பரிமாறுகை உங்களுக்கு அநிஷ்டமன்றோவென்ன; எங்களோட்டைக் கலவியிற் காட்டில் திருவுள்ளத்தில் ப்ரியமே எங்களுக்கு மிகவும் ஸுகம்; ஆனபின்பு, ஸப்ரமாதமான தேசத்திற் போகாதொழியவேணும் என்கிறாள்.

[உகக்கும்இத்யாதி]-எங்களைப்போலன்றிக்கே நீயுகக்கும் வைலக்ஷண்யத்தை உடையவர்களோடே எங்கள் கண்வட்டத்திலே ஸஞ்சரித்து. [உன்தன் இத்யாதி] - நாம் இன்னாரோடு கலக்கப்பெற்றிலோமென்று உன் திருஉள்ளத்தில் வரும்இடர்கெடுந்தோறும். [நாங்கள் இத்யாதி] விஸ்மயத்திலேயாதல், மிகுதியிலேயாதல் கிடக்கிறது வியப்பு புறம்புள்ளாரைப்போலன்றியே உன்னுகப்பே ப்ரயோஜநமான நாங்கள் மிகவும் உகப்புதோம். எதிற்காட்டிலென்னில்;— எங்களுடன் கலக்குமதிற்காட்டில் என்னுதல்; அன்றிக்கே, நீயவர்களோடே கலந்தால் உனக்குப்பிறக்கும் ஆநந்தத்திற்காட்டில்என்னுதல். நான் இப்படிச்செய்தால் நீங்கள் மிகவும் இன்புறுவதாகச்சொன்ன இது கூடுமோ ? என்ன,—[எம்பெண்மையாற்றோம்] - உன்னுகப்புக்குப் புறம்பாய்வரும் ஸ்த்ரீத்வம் நாங்கள் வேண்டோம். நீயுகந்தாரையொழிய உன்னை உகக்குமவர்களல்லோங்காண் நாங்கள்; உன்னைத் தனித்துஉகப்பான் க்ஷுத்ரமைச்சியன்றோ ? [எம்பெருமான் இத்யாதி] - உனக்கெழுத்துவாங்குகிறோம்; நீபசுமேய்க்கப் போகாதொழிய வல்லையே ? நான்தான் போகாநின்றேனோ ? ஸ்வதர்மாநுஷ்டானத்துக்காகப் போனால்தான் வருவதென் ? என்ன, — வருவது சொல்லுகிறாள். [மிக இத்யாதி] - மிகவும் பலஅசுரர்கள் வேண்டின வடிவுகொண்டு மிகவும் ஸஞ்சரியாநிற்பர்கள். ஸ்ரீப்ருந்தாவநத்தில் எழும்பூண்டுகளடங்க அஸுரமயமாயன்றோவிருப்பது [வேண்டுருவங்கொண்டு] - நீயுகக்கும்வடிவைக் கொண்டென்னுதல், “காமரூபிகளாகையாலே” உன்னை நலிகைக்கீடான வடிவைக்கொண்டென்னுதல். [கஞ்சனேவ] - கம்ஸப்ரேரிதராய் வருகையாலே “தோற்றுப்போகிலும் அங்குக் கொலைதப்பாது” என்று மேல்விழுவர்கள். ஆர் ஏவில்லென் ? ஆர் மேல்விழில்என் ? நாம புக்க போரிலே வெற்றி கொண்டன்றோ மீளுவதுஎன்ன, - [அகப்படில்] - அது மற்றைப்படியாகிற் செய்வதென் ? யுத்தத்தில் ஜயாபஜயங்கள் அவ்யவஸ்திதமன்றோ ? ஆனால்தான் வருவதென்னென்ன, - [அவர் இத்யாதி] - அவர்களும் நீயுமானவிடத்திலே பொல்லாங்குகள்

விளையும். இப்படிச் சொன்னவிடத்திலும் ஆனைக்குப்பு ஆடுவாரைப்போலே அநாதரித்திருந்தான். [என்சொற்கொள்] - அநாதரியாதே, நான்சொல்லுகிற வார்த்தையை புத்திபண்ணாய். [அந்தோ] - எங்களையறியாவிட்டால் உன்னையும் அறியாதொழியவேணுமோ ?

அவத்தங்கள் விளையும்என்சொற்கொள் அந்தோ! அசுரர்கள்வன்கையர் கஞ்சனேவ*
தவத்தவர்மறுகநின்றுழிதருவர் தனிமையும்பெரிதுஉனக்குஇராமனையு*
முவர்த்தலை* உடன்திரிகிலையும்என்றென்று ஊடுறஎன்னுடையாவிவேமால்*
திவத்திலும்பசுநிரைமேய்ப்புஉவத்தி செங்கனிவாய் எங்களாயர்தேவே. (10)

ஒ.—பத்தாம்பாட்டில், கம்ஸப்ரேரிதரான அஸுரர் ஸஞ்சரிக்கும் காட்டிலே, நம்பிமூத்தபிரானையுமொழியத் தனியே திரியாநிற்றியென்று மிகவும் நோவுபடாநின்றேன் என்கிறாள். [அசுரர்கள் என்று தொடங்கி] - பலவான்களான அஸுரரைக் கம்ஸனேவ, தபஸ்ஸுபண்ணும் ருஷிகள் கலங்கும்படி ஸஞ்சரியாநிற்பர்; "உனக்கென் வருகிறதோ? என்று தவத்தவர் தாங்கள் மறுக என்றுமாம். [தனிமை என்று தொடங்கி] - "அவன்ஸந்நிதியில் தீமைசெய்ய வொண்ணாது" என்று ராமனோடும் ஹ்ருதயம் சேர்கிறிலை; ஹ்ருதயம் சேராவிட்டால் கூடத்திரிவதும் செய்கிறிலை என்று மிகவும் என்னுடைய ஆத்மா வேவாநின்றது. [திவத்திலும் என்று மேலுக்கு] - "இதொருஸ்நேஹப்ரக்ரியை யிருக்கும்படியே! நான் போகிலன்றோ நீங்கள் பயப்படவேண்டுவது?" என்று அவர்கள் ஈடுபடும்படி முறுவல்செய்ய, "செங்கனிவா யெங்களாயர்தேவே! திருநாட்டிற்காட்டிலும் பசுநிரைமேய்ப்பு உவத்தி; ஆனபின்பு, போகுமேயல்லையோ?" என்கிறாள்.

இ.—பத்தாம்பாட்டில், "கம்ஸப்ரேரிதர் ஸஞ்சரிக்கும் காட்டிலே நம்பி மூத்தபிரானையொழியத் தனியே திரியாகிற்றி என்று மிகவும் நோவுபடாநின்றேன்" என்கிறாள். [அவத்தங்கள் இத்யாதி] - அதிசங்கைபோக்கி அர்த்தக்ரியாகாரியன்று என்றிருக்கவேண்டா; நான் சொல்லுகிற வார்த்தையை ப்ரதிபத்திபண்ணாய். [அந்தோ] - ஹிதமேயாகிலும் நான் சொன்னவார்த்தையாக அமையுமே நீ கேளாதொழிகைக்கு. [அசுரர்கள்வன்கையர் கஞ்சனேவ] - ஜந்மமே தண்ணியர்; அநேகர்; முன்கையுரவியர்; மூர்க்கனான கம்ஸன் ப்ரேரிக்கிறான்; இவர்கள் ஸஞ்சரிக்கிற காடன்றோ ? [தவத்தவர் மறுகநின்று உழிதருவர்] - என்னையிறே விடலாவது. நீநல்லவர்கள் கலங்கும்படி ஸஞ்சரியாநிற்பர்கள்; தபோநிஷ்டரான ருஷிகள் ஸ்வரக்ஷணத்துக்கு உன்கை பார்த்திருக்குமவர்கள், தபோவிக்நத்தாலே கலங்கும்படி ஸஞ்சரிப்பர்கள்; "கர்ப்பபூதா!" என்றும் "ஏஹி பச்யசரீராணி" என்றுமிருப்பர்கள். "அவர்களால் உனக்கு என் வருகிறதோ" என்று கலங்க என்றுமாம். [தனிமையும் பெரிது உனக்கு] - "ஏகதா து விநாராமம் க்ருஷ்ணோ ப்ருந்தாவநம்யயௌ" என்று நம்பிமூத்தபிரானையொழிய ஸஞ்சரிக்கும் காலம் பெரிது உனக்கு. [இராமனையும் உவர்த்தலை] - "அவன்ஸந்நிதியிலே தீம்புசெய்ய வொண்ணாது" என்று அவனோடும் நெஞ்சுபொருந்தி வர்த்திக்கிறிலை. [உவர்த்தலை] - உவர்த்தலைப்புடையை. [உடன் திரிகிலையும்] - நெஞ்சில் பொருத்தமில்லாவிட்டால், எதிரிகள் அஞ்சும்படி கூடத்திரிந்தாலாகாதோ ? [என்றென்று ஊடுற என்னுடைய ஆவி வேமால்] - உன் போக்கன்றே என்னை நலிகிறது; அவனையொழியத் திரிகிற இதுவே என் நெஞ்சை மறுபாடுருவச் சுடாநின்றது. [ஊடுற] - உள்ளுற. உங்களோடிருக்கிற இருப்பைக்குலைத்து நீங்கக்கொண்டுபோவதேனோவென்ன—[திவத்திலும் பசுநிரை மேய்ப்பு உவத்தி]. பரமபதத்தில் இருப்பைக்குலைத்தன்றோ பசுமேய்க்கப் போந்தது ? அவ்விருப்புக் குலைந்துவந்திருந்ததும் இப்போது பொல்லாதென்றிருக்கிறார்கள். அவ்விருப்பிலேயிருந்தாளுகில் இப்போது வயிறெரிய வேண்டாவிறே. நம் பேறிழவுகொண்டு கார்யமில்லை. வஸ்து ஸுரக்ஷிதமாயிருக்குமென்றிறே இவர்களிருப்பது. பரமபதத்தில் இருப்பைவிட்டுப் பசுமேய்க்கப்போகக்கடவ உன்னை, "எங்களை உபேக்ஷித்தாய்" என்று இன்னாதாகப் புகுகிறோமோ ? அவ்விருப்பிலும் பசுமேய்க்க என்றுலுகப்புதி யென்றுமாம். [செங்கனிவாய் இத்யாதி] - "இதொரு ப்ரேமஸ்வபாவமே!" என்று ஸ்மிதம்

பண்ணினான்; அதிலே ஈடுபடுகிறார்கள். "அவ்விருப்புக்குலைந்து போந்தமையுண்டு; உங்களைவிட்டுப் போவனோ?" என்று ஸ்மிதம்பண்ண; ஓரிருப்பைக்குலைந்து போரக்கடவையானபின்பு, எங்களையும் பிரிந்து போனாயல்லையோ? என்கிறாள்.

ஈடு.—பத்தாம்பாட்டு. முன்கைமிடுக்கரான அஸுரர்கள் கம்ஸப்ரேரிதராய் ஸஞ்சரிக்கிறகாட்டிலே, நம்பிமூத்தபிரானையுமொழியத் தனியே திரியாநிற்றியென்று மிகவும் நோவுபடாநின்றேனென்கிறாள்.

[அவத்தங்கள் இத்யாதி] - அநுஷ்டாநபர்யந்தமாகவேணுமென்றிருக்கவேண்டா; சொன்னவார்த்தையை ப்ரதிபத்திபண்ணவமையும். [அந்தோ] - அநுஷ்டாநகௌரவத்தால் இழியாதொழிகையன்றிக்கே வன்வார்த்தையாகஅமைவதே சொன்னாமைக்கு! [அசுரர் இத்யாதி] - ஜந்மத்தால் தண்ணியருமாய், தாங்கள் பலருமாய், முன்கை மிடுக்கருமாயிருப்பர்கள்; அதுக்குமேலே, துஷ்ப்ரக்ருதியான கம்ஸனேவவாய்த்து வருவது. [தவத்தவர் மறுகநின்றுழிதருவர்] - என்னைப்போலே புணர்க்குவிடலாவது; நீசல்லவர்கள் குடல்மறுகும்படி ஸஞ்சரியாநிற்பர்கள்; தபோநிஷ்டரான ருஷிகள்; ஸ்வரக்ஷணத்துக்கு உன்கைபார்த்திருக்குமவர்கள்; தபோவிக்நத்தாலே கலங்கும்படி ஸஞ்சரியாநிற்பர்கள்; *கர்ப்பபூதாஸ்தபோதநா:* என்றும் *ஏஹி பச்ய சரீராணி* என்றுமிருக்குமவர்கள்; "அவர்களால் உனக்குஎன்வருகிறதோ?" என்றுகலங்க வேண்டாம். அன்றிக்கே, ஸ்ரீநாரதபகவான், ஸ்ரீஸுக்ரீவமஹாராஜர், பெரியாழ்வார், பிள்ளையுறங்காவில்லிதாஸர் தொடக்கமானாரைச் சொல்லிற்றாதல். ஆனால் ஸ்நேஹிகளானவர்களுடைய விரோதியைப் பின்னைப்போக்கவேண்டாவோவென்ன, [தனிமையும் பெரிதுனக்கு] - உன்கால் நெடுகநெடுகத் தனிமையே மிக்குவிட்டதே யுனக்கு! *ஏகதா து விநாராமம் க்ருஷ்ணோ ப்ருந்தாவநம்யயௌ* என்று நம்பிமூத்தபிரானையொழியவே ஸஞ்சரிக்கும் காலம் பெரிது உனக்கு. [இராமனையுமுவர்த்தலை] - "நம்பிமூத்தபிரான்ஸந்நிதியில் தீம்பு செய்யவொண்ணாது" என்று அவனுடனும் நெஞ்சுபொருந்தி வர்த்திக்கிறிலை. [உவர்த்தலை]- உவர்த்தலையுடையை. [உடன் திரிகிலையும்] - நெஞ்சில் பொருத்தமில்லாவிட்டால், தூரத்திலேகண்ட எதிரிகளுக்கு "இவர்களிருவரும் கூடித்திரியாநின்றார்கள்" என்று அஞ்சும்படி ஒக்கத்திரியவும் செய்கிறிலை. [என்று இத்யாதி]-நீபோகிறாயென்றல்ல, நம்பிமூத்தபிரானுடன் கூடித்திரிகிறிலையென்றாய்த்து என்னுடைய ஹ்ருதயம் வேகிறது. [ஊடுற] - உள்ளுறவென்றபடி. என்னுடைய ஹ்ருதயமானது வேவாநின்றது. இப்படி நிர்ப்பந்திக்கைக்கு நான் இவ்விருப்பைக்குலைந்து போகாநின்றேனோவென்ன—[நிலத்திலும் பசுநிரை மேய்ப்பு அவத்தி] - ஆமாம்; நீ ஓரோ விருப்புக்கள் குலைத்துக்கொண்டு போந்தறியாயிறே. பரமபதத்திலிருப்பைக் குலைத்தன்றோ பசுநிரைமேய்க்கப் போந்தது. அங்கேயிருக்கவும் பெற்றதில்லை. அங்குநின்றும்போந்தது பொல்லாதாகச்செய்ததென்றிருக்கிறாள். அங்கேயிருந்தானாகில் இங்கு என்வயிறுஎரியவேண்டாவே. நாம் பெறுவோம் இழப்போம்; இவ்வஸ்து தானழியாதொழியலாய்த்தே. அவர்களைவிட்டும் பசுக்களை விரும்பக்கடவ நீ எங்களையுபேக்ஷிக்கச் சொல்லவேணுமோ? அங்குநின்றும்போந்திலோம் என்னவொண்ணாதே அவனால். "இதொரு ப்ரேமஸ்வபாவமிருந்தபடியேன்!" என்று ஸ்மிதம்பண்ணினான். [செங்கனிவா யெங்களாயர் தேவே] - அதிலே ஈடுபடுகிறார்கள். "அவ்விருப்புக் குலைந்து போந்தமையுண்டு, உங்களை விட்டுப்போவேனோ?" என்று ஸ்மிதம்பண்ண; இவர்களும் வாய்க்கரையிலே யழுந்துகிறார்கள்

செங்கனிவாயெங்களாயர்தேவு அத்திருவடிதிருவடிமேல்*பொருநல்
சங்கணிதுறைவன்வண்தென்குருகூர் வண்சடகோபன்சொல்லாயிரத்துள்*
மங்கையராய்ச்சியராய்ந்தமாலை அவனொடும்பிரிவதற்கிரங்கி* தையல்
அங்கவன்பசுநிரைமேய்ப்பொழிப்பான் உரைத்தன இவையும்பத்தவற்றின்
சார்வே. (11)

ஒ.—நிகமத்தில் ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரந்திருவாய்மொழியிலும், எம்பெருமானை "பசுநிரைமேய்க்கவேண்டா" என்று பிராட்டி நிஷேதித்த பாசுரமான இதுவும் அல்லாதவற்றோடொக்க ஒரு திருவாய்மொழியே! என்று விஸ்மிதராகிறார். [செங்கனிவாய் என்று தொடங்கி] - தான் பசுநிரை மேய்க்கப் போகாமை தோற்றும்படி முறுவல் செய்கையாலே சிவந்த கனிபோலேயிருக்கிற திருப்பவளத்தையுடையனும் ஆச்ரிதபவ்யனும் ஆயர்தேவான ஸ்வாமியுடைய திருவடிகளிலே, சங்குகளாலே அணியப்பட்ட திருப்பொருநலாகிற ஆற்றையுடையராய் ஸம்ருத்தமான திருநகரியையுடையரான பரமோதாரரான ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரந்திருவாய்மொழியிலும். [மங்கையர் என்று தொடங்கி] - இடைப்பெண்கள் அவனோடு பிரிகிறோமென்று நோவுபட்டுச் சொன்ன பாசுரத்தை அவர்களிலே ஒருத்தி பசுநிரைமேய்க்கப் போகவேண்டாவென்று சொன்ன.

இ.—நிகமத்தில், அவனை, "பசுநிரை மேய்க்கவேண்டா" என்று நிஷேதித்தபாசுரமான இத்திருவாய்மொழியும் அல்லாதவற்றோடொக்க ஒருதிருவாய்மொழியே! என்று விஸ்மிதராகிறார். [செங்கனிவாய் இத்யாதி] - தன்முறுவலாலே எங்களைத் தோற்பித்தாப்போலே, தன்பருவத்திற் பிள்ளைகளையும் தோற்பித்த ஸர்வஸ்வாமியுடைய திருவடிகளிலே சொல்லிற்று. "பும்ஸா ம்த்ருஷ்டிசித்தாபஹாரிணம்" என்னக்கடவதிறே. [பொருநல் இத்யாதி] - இவர் இருந்தவிடத்தே ஸத்துக்கள் சேருமாபோலே, சங்குகளாலே அணியப்பட்ட திருப்பொருநலையுடையராய், ஸம்ருத்தமான திருநகரியையுடையராய், பரமோதாரரான ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரத்திலும். [மங்கையராய்ச்சியர் இத்யாதி] - அவனோட்டைப் பிரிவு பொறுக்கமாட்டாதபடியாலே ஒருபருவத்தில் இடைப்பெண்கள் அநுஸந்தித்த தொடையாய், அவர்களிலே ஒருத்தி "பசுநிரை மேய்க்கவேண்டா" என்றுரைத்தாள்; "எல்லாரும் திரளச் சொன்னால் அவன் செவிப்படாது" என்னுமத்தாலே நப்பின்னைப் பிராட்டியைப்போலே அவனுக்கு மறுக்கவொண்ணாத தரமுடையாளொருத்தியை வார்த்தை சொல்லவிட்டார்கள்; இப்படியாகில்றே, "அடிச்சியோம்" என்றும், "தொழுத்தையோம்" என்றும் "ஆழுமென்னாருயிர்" என்றும், "என்சொற்கொள்" என்றும் சொன்ன பன்மைகளும் ஒருமைகளும் சேரக்கிடப்பது. [இவையும்பத்து அவற்றின் சார்வே] - கீழ்ச்சொன்ன திருவாய்மொழிகளருகே இதுவும் ஒரு திருவாய்மொழியே! என்றுய்த்து நிர்வஹித்துப் போருவது. அங்ஙனன்றிக்கே, கீழில் திருவாய்மொழிகளுக்குச் சொன்ன ப்பலமே இதுக்கும் ப்பலமென்னுதல்; மங்கையராய்ச்சியர் ஆய்ந்த மாலையாற் ப்பலித்த ப்பலமே இதுக்கும் ப்பலமென்னுதல். அவர்களுக்கு அவன் போகாமல்மீண்டானாகில் இவர்களுக்கும் அதுவே ப்பலமாய், அவனோடே நித்யஸம்ச்லேஷம் பண்ணப்பெறுவர் என்கிறார்.

ஈடு.—நிகமத்தில், அவனை "பசுநிரைமேய்க்கப் போகவேண்டா" என்று நிஷேதித்த பாசுரமான இத்திருவாய்மொழியும் அல்லாதவற்றோடொக்க ஒருதிருவாய்மொழியே! என்று விஸ்மிதராகிறார்.

[செங்கனிவாய்இத்யாதி] - அவ்வயிரவுருக்கான முறுவலாலே எங்களைத் தோற்பித்தாப்போலே, தன்பருவத்திற் பிள்ளைகளையும் தோற்பித்த ஸர்வஸ்வாமி திருவடிகளிலே சொல்லிற்று 'செங்கனிவாய்' என்கையாலே தங்களைத்தோற்பித்தபடி சொல்லிற்று; 'ஆயர்தேவு' என்கையாலே தன்பருவத்திலுள்ளாரைத் தோற்பித்தபடி சொல்லிற்று; "பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்". [அத்திருவடி திருவடிமேல்] - அந்த ஸர்வஸ்வாமியானவன் திருவடிகளிலே. அவன் சேஷித்வத்தைக் காட்டிக்கொடுத்தான்; திருவடிமேலென்கையாலே இவரும் சேஷத்வத்திலே நின்றார். [பொருநற்சங்கணிதுறைவன்] - தாமிருந்தவிடத்திலே ஸத்துக்களடங்கலும் வந்துசேருமாபோலே யாய்த்து, திருப்பொருநலில் சங்குகள் வந்துசேரும்படி. [மங்கையர் இத்யாதி] - அவனோட்டைப்பிரிவு பொறுக்கமாட்டாமையாலே ஒருபருவத்திலிடைப் பெண்கள் அநுஸந்தித்த தொடையாய். [தையல்இத்யாதி] - "ஸபைபோலே யெல்லாரும் திரண்டு வார்த்தை சொன்னால் செவிப்படாது" என்றுபார்த்து, அவனுக்கு மறுக்கவொண்ணாதபடி நப்பின்னைப்பிராட்டியுடைய தரமுடையாளொருத்தி பசுமேய்க்கப்போகாமே மீட்கைக்காகச் சொன்னவையாய்த்து. "அடிச்சியோம்" என்றும் "தொழுத்தையோம்" என்றும் "ஆழுமென்னாருயிர்" என்றும் "என்சொற்கொள்" என்றும்சொன்ன பன்மைக்கும்

ஒருமைக்கு மெல்லாம் சேருமிறே. [இவையும்பத்து அவற்றின்சார்வே] - 'அவை' என்கிறது கீழ்த்திருவாய்மொழிகளையாய், "அவற்றினருகே இதுவுமொரு திருவாய்மொழியே !" என்று ஆச்சர்யத்திலேயாக்கியாய்த்து சீயர் அருளிச்செய்ததும் வ்யாக்யாநம் பண்ணிற்றும். அன்றிக்கே, [இவையும்பத்து அவற்றின்சார்வே] - கீழ்த்திருவாய்மொழிகளுக்குச் சொன்ன ப்பலம் இதுக்கும் ப்பலமென்றதாகவுமாம். அன்றிக்கே, அவையென்கிறது-"மங்கையராய்ச்சிய ராய்ந்தமாலை" என்கிறவற்றையாய், இவையும் அவற்றோடொக்கும். அதிலுடைய ப்பலமே இதுக்கும் ப்பலம். அது வர்த்தகமாகில் இதுக்கும் பேறுண்டாம். அவர்கள் "நீபோகாதே கொள்" என்ன அவன் தவிர்ந்து அவர்களுடனே கலந்தாப்போலே, இது கற்றாரும் அவனோடே நித்யஸம்ச்லேஷம் பண்ணப்பெறுவர். 'செங்கனிவா யெங்களாயர்தேவு-அவனொடும் பிரிவதற்கிரங்கி - மங்கையராய்ச்சிய ராய்ந்தமாலை - தையல் அங்கவன்பக்கலிரை மேய்ப்பொழிப்பானுரைத்தன - அத்திருவடி திருவடிமேல் பொருநல்சங்கணி துறையன்-வண் தென்குருகூர் வண்சடகோபன் சொல்லாயிரத்துள் - இவையும்பத்து அவற்றின்சார்வே, என்றந்வயம்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

நான்காந் திருவாய்மொழி—சார்வே : ப்ரவேசம்

ஒ.—நாலாந்திருவாய்மொழியில், எம்பெருமான், "உம்மை ஒருநாளும்பிரியேன்" என்று இவரை ஆச்வஸிப்பிக்க அத்தாலே தரித்து மிகவும்ப்ரீதரான ஆழ்வார், வீடுமுன்முற்றத்திலும் பத்துடையடியவரிலுமாக ப்ரஸ்துதமான பக்தியோகமாகிற உபாயம் ஸ்வஸாத்யத்தோடே சேர்ந்தபடியை ஸாக்ஷாத்கரித்து அத்திருவாய்மொழிகளில் பக்திவர்த்தகமாகச்சொன்ன குணங்களைப்பராமர்சியாநின்று கொண்டு, பக்தியோகத்தை நிகமிக்கிறார். எம்பெருமானை, "பசுமேய்க்கப்போகாதொழியவேணும்" என்று அபேக்ஷிக்க, அவனும் அப்படியே தவிருகையாலே ப்ரீதரான ஆழ்வார், அவன் பக்திலப்யனென்னுமிடம் நிச்சிதமென்கிறாரென்றுமாம்.

இ.—நாலாந் திருவாய்மொழியில், பிரியகில்லாமையின்றிக்கேயிருக்க அதிசங்கையாலே பிரிந்தார் படும்வ்யஸநத்தைப்பட்டு அத்தாலே அவஸந்நரான இவரை, 'உம்மை ஒருநாளும் பிரியேன்' என்று ஆச்வஸிப்பிக்க அத்தாலே தரித்து மிகவும்ப்ரீதரானவர், வீடுமின்முற்றத்திலும் பத்துடையடியவரிலுமாக ப்ரஸ்துதமான பக்தியானது ஸ்வஸாத்யத்தோடே சேர்ந்தபடியை ஸாக்ஷாத்கரித்து, அந்திருவாய்மொழிகளில் பக்திவர்த்தகமாகச்சொன்ன குணங்களைப்பராமர்சியாநின்றுகொண்டு, தமக்குப்பேற்றுக்குஉடலாக முதல்திருவாய்மொழியிற் சொன்ன ப்ரபத்தியைச் சொல்லித் தலைக்கட்டுகிறார். "மயர்வறமதிநல மருளினன்" என்று முதல் திருவாய்மொழியிலே ப்ரபத்தியைச் சொல்லிற்றிறே. இவருடைய பக்திதான் "உபயபரிகர்மிதஸ்வாந்தஸ்ய ஐகாந்திகாத்யந்திகபக்தியோகைகலப்ய:" என்று ஜ்ஞாநகர்மாநுக்ருஹீத வேதாந்தவிஹித பக்தியன்று. அதுவாகில் அபசூத்ராதிகரணந்யாயம் ப்ரஸங்கிக்கும். அந்த ஜ்ஞாநகர்மங்களினுடைய ஸ்த்தாநத்திலே பகவத்ப்ரஸாதத்தாலே பரபக்திதொடக்கமான ப்ராப்யாந்தர்க்கதமான அவஸ்த்தைகளிறே இவரது: அப்படி வீடுமின்முற்றத்திலும், பத்துடையடியவரிலும் பிறர்க்கு உபதேசித்த பக்தி ஸ்வஸாத்யத்தோடே பொருந்தினபடியை நிகமிக்கிறார்: ஸாத்யத்தோடே பொருந்துகையாவது-ஸாத்யத்தை லபிக்கை. அதாகிறது: — ஸாக்ஷாத்காரம். கீழ், இவர்க்கு அநுஸந்தாநமில்லையோ வென்னில்; அவையெல்லாம் ஒருரஸவிசேஷங்களைப் பற்றச்சொல்லிற்று. இதில், உபக்ரமத்திலே தாம் விதித்த பக்தியை நிகமிக்கிறார்- "பசுமேய்க்கப் போகாதொழிய வேணும் என்று அபேக்ஷிக்க அவனும் 'தவிர்ந்தோம்' என்று சொல்லுகையாலே ப்ரீதராய், அவன் பக்திலப்யனென்னுமிடம் நிச்சிதமென்கிறார்" என்று,பிள்ளான்நிர்வாஹம்.

ஈடு.—தம்மைப்பிரிய நினைவின்றிக்கேயிருக்க அதிசங்கையாலே பிரிந்தார் படும் வ்யஸநத்தைப்பட்டு, அத்தாலே வ்யஸநரானவரை, "உம்மையொருநாளும் பிரியேன்" என்று அவன் ஆச்வஸிப்பிக்க அத்தாலே தரித்து மிகவும் ப்ரீதரானார்-கீழ். முதல் திருவாய்மொழியிலே, தத்த்வவிஷயமாகச் சொல்லவேண்டுவதெல்லாம் சொல்லிற்றது; இனி அந்த தத்த்வந்தானே ப்ராப்யமாயிருக்குமிறே. அந்த ப்ராப்யவேஷத்தையும், ப்ராப்தி பலமான கைங்கர்யத்தையும், "படமுடையரவிற் பள்ளிபயின்றவன்" என்றும் "கடைத்தலைசீய்க்கப்பெற்றால்" என்றும் அநுஸந்தித்தார் - கெடுமிடரிலே; அந்தப்ராப்யம் அப்போதே கைபுகுராப்பெருமையாலும் நெடுகாள்படப் பிரிந்துபோந்த வாஸனையாலும் வெருவி இவர் அவஸந்நராக, இவர்க்கு ப்ராஸங்கிகமாகப் பிறந்த அவஸாதத்தை அநுஸந்தித்து அவனும் ஆச்வஸிப்பிக்க ஆச்வஸ்தராய் நின்றார் - வேய்மருதோளிணையிலே. ஆக, முதல்திருவாய்மொழியிலே - தத்த்வவிஷயமாகச் சொல்லவேண்டுவதெல்லாம் சொல்லி, அவ்வஸ்துதானே ப்ராப்யமாயிருக்கையாலே அந்தப்ராப்யத்தைப் பெறுகைக்கு உபாயமான பக்தியோகத்தை வீடுமின் முற்றத்தாலே சொல்லி, அந்த பக்திமான்களுக்கு அவன் ஸுலபனாயிருக்கும் என்று அவன்ஸௌலப்யத்தை பத்துடையடிவராலே சொல்லி, ஆக, வீடுமின் முற்றத்திலும் பத்துடையடியவரிலும் சொன்ன பக்தியானது ஸ்வஸாத்யத்தோடே பொருந்தினபடியைச் சொல்லி, அத்திருவாய்மொழிகளில் பக்திவர்த்தகமாகச் சொன்ன குணங்களைப் பராமர்சியாநின்றுகொண்டு, தாம் தம்முடைய பேற்றுக்கு உபாயமாக முதல்திருவாய்மொழியிற் சொன்ன ப்ரபத்தியோடே தலைக்கட்டுகிறார். இதில்.

இவ்விரண்டுகோடியும் இவர்க்கு உண்டாயிருக்கச் செய்தேயும், தம்முடைய பேற்றுக்கு உடலாக இவர்நினைத்திருப்பது ப்ரபத்தியையிறே. முதல்திருவாய்மொழியிலே ப்ரபத்திக்கு ஸூசகமான சப்தமுண்டோ வென்னில்,—"அருளினன்" என்றாரிறே. இனித்தான் இவருடைய பக்தி வேதாந்தவிஹிதையான பக்தியல்ல; அதுதன்னையே பார்க்குமன்று அபசூத்ராதிகரண ந்யாயம் ப்ரஸங்கிக்கும். அதுதான் இவ்வாழ்வாருடையப்ரபாவத்தாலே கூடாதோவென்னில்; அது இவருடைய உக்திகளோடு விரோதிக்கும். "அருளினன்" என்றெ இப்புடைகளிலே யிறே இவருடைய உக்திகள். *உபயபரிகர்மிதஸ்வாந்தஸ்ய ஐகாந்திகாத்யந்திகபக்தியோகைகலப்ய:* என்று ஜ்ஞாநகர்மங்களாலே ஸம்ஸ்க்ருதாந்த:கரணனுக்குப்பிறக்குமதிறே பக்தியாகிறது; அந்த ஜ்ஞாநகர்மங்களினுடைய ஸ்த்தாநே பகவத்ப்ரஸாதமாய், அதுக்கு அநந்தரமான பரபக்தி தொடங்கிப் பிறந்ததாயிருக்கும் இவர்க்கு. இனித்தான், இவர்வழியேபோய் இவருடைய பேறே பேறாக நினைத்திருந்த பாஷ்யகாரரும், ப்ரபத்தியைப்பண்ணி, பின்னை பக்திதொடங்கி ப்ரார்த்தித்தாரிறே. அவன்உபாயமானாலும் இவனுக்கு ருசியுண்டாய் ப்ராப்யஸித்தியுண்டாக வேணுமே; இல்லையாகில் புருஷார்த்தமாகாதே; ப்ராப்யம் இன்னதென்று நிஷ்கர்ஷித்து அந்த ப்ராப்யருசி கண்ணழிவற உடையவனுக்கிறே அவன் ப்ராபகனாவது; ஆகையாலே, இவருடைய பக்திப்ரபத்திகள் விகல்பிக்கலாம்படியிறே இருப்பது. ஆக, வீடுமின் முற்றத்திலும் பத்துடையடியவரிலும் பிறர்க்கு உபதேசித்த பக்தி தம்முடையபேற்றுக்கு உடலாயிருந்தபடியைச் சொல்லி, இதுதான் ஸ்வஸாத்யத்தோடே சேர்ந்தபடியைச் சொல்லி நிகமிக்கிறார் இதில். இது ஸாத்யத்தோடே சேர்ந்திருப்பது ப்ராப்தியுண்டானாலன்றோ வென்னில்? - ஸாக்ஷாத்காரரூபமான அநுஸந்தாநமுண்டாக வமையுமிறே இப்போது; குணம் அநுபாவ்யமானால் அத்தகுணவிசிஷ்டமாக இங்கேயிருந்து உபாஸியாநின்றானிறே. ஆக, உபாஸந வேளையிலும் அதிருக்கும்படியை அநுஸந்திக்கத் தட்டில்லையிறே. ஆனால் பின்னைக் கீழெல்லாம் இந்த ப்ராப்யாநுஸந்தாநமே யன்றோ பண்ணிப் போந்ததென்னில்; அவற்றைப் பற்றிப் பிறந்தன சில ரஸவிசேஷங்களைச் சொன்ன இத்தனையிறே அவ்விடங்களில்; உபக்ரமித்த அர்த்தத்தை யுபஸம்ஹரிக்கையென்றுமொன்று உண்டே; அத்தைச்சொல்லுகிறது - இங்கு. இங்ஙனன்றிக்கே, பிள்ளான் ஒருருவிலே "பேசுமேய்க்கப்போகவேண்டா" என்றான்; 'ஆகில் தவிர்ந்தேன்' என்றான்; இவன்தன்னை ஸௌலப்யனில்லைகிமர், இவன் பக்திலப்யனென்னுமிடம் நிச்சிதமென்கிறார்" என்று பணித்தான். இன்னமும் முதல்திருவாய்மொழியில் ப்ராப்யத்தை அருளிச்செய்தார்; அந்த ப்ராப்யத்துக்கு ப்ராபகமாக, வேதாந்தங்களில் பக்தியென்றும்

ப்ரபத்தியென்றும் இரண்டு உபாயங்களை விதித்தது; அவை யிரண்டிலும், பக்தி த்ரைவர்ணிகாதிகாரம்; ப்ரபத்தி ஸர்வாதிகாரம். அதில் ஸர்வாதிகாரமுமாய் தாம் திருவுள்ளத்தாலே தமக்கு உபாயமாக அங்கீகரித்த ப்ரபத்தியை வீடுமின்முற்றத்திலே அருளிச்செய்தார்; த்ரைவர்ணிகாதிகாரமான பக்தியை, பத்துடையடியவரிலே அருளிச்செய்தார். ஆக, இரண்டு திருவாய்மொழியிலும் அருளிச்செய்த பக்திப்ரபத்திகள் ஸ்வஸாத்யத்தோடே பொருந்தினபடியை அருளிச் செய்கிறார் சார்வே தவநெறி, கண்ணன்கழலிணை, இரண்டாலும். அதில், சார்வே தவநெறியாலே-ப்ரபத்தி ஸ்வஸாத்யத்தோடே பொருந்தினபடியை அருளிச்செய்கிறார். "சார்வே தவநெறிக்குத் தாமோதரன் தாள்கள்" என்று-தபச்சப்தத்தாலே ப்ரபத்தியைச் சொல்லுகிறது. *தஸ்மாத் ந்யாஸமேஷாம்தபஸா மதிரிக்தமாஹு:* என்று தபஸ்ஸுக்களில் மிக்க தபஸ்ஸாகச் சொல்லிற்றிறே ப்ரபத்தியை. "பண்டே பரமன்பணித்த பணி வகையே - கண்டேன் - கமலமலர்ப்பாதம், காண்டலுமே விண்டேயொழிந்த வினையாயினவெல்லாம்" என்றும், "இருமைவினைகடிந்திங்கென்னையாள்கின்றான்" என்றும், *மாமேகம் சரணம்வ்ரஜ அஹம் த்வா ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி* என்ற அர்த்தத்தை அருளிச்செய்தார். ஆளவந்தார் அருளிச்செய்ததாகத் திருமாலையாண்டான்பணிப்பது; - "ப்ரபத்திவிஷயமாகவாய்த்து வீடுமின்முற்றம்". உடையவரும் அப்படியே ப்ரபத்திவிஷயமாக அருளிச்செய்து கொடுபோந்து, பாஷ்யம் அருளிச்செய்தபின்பு, 'ரஹஸ்யோபாயத்தை வெளியிடவொண்ணாது என்று வீடுமின்முற்றத்தையும் பக்திவிஷயமாக்கி அருளிச்செய்தார். ஆக, முதல்திருவாய்மொழியில் சொன்ன ப்ராப்யஸ்வரூபத்தையும் ப்ராப்திபலமான கைங்கர்யத்தையும், கெடுமிடரிலே 'படமுடையரவிற்பள்ளிபயின்றவன்' என்றும் 'கடைத்தலை சீய்க்கப்பெற்றால்' என்றும் அருளிச்செய்து, அக்கைங்கர்யத்தில் களைபறித்து, 'உன் தன் திருவுள்ளம் இடர்கெடுந்தோறும் நாங்கள் வியக்கவின்புறுதும்' என்று உத்தரகண்டத்தில் நமச்சப்தார்த்தத்தை அருளிச்செய்து, கெடுமிடராலும் வேய்மருதோளிணையாலும் - முதல்திருவாய்மொழியை நிகமித்து, சார்வே தவநெறியாலும் கண்ணன் கழலிணையாலும் - வீடுமின்முற்றத்திலும் பத்துடையடியவரிலும் சொன்ன பக்தி ப்ரபத்திகள் ஸ்வஸாத்யத்தோடே பொருந்தினபடியை அருளிச்செய்தார்" என்று ஆளவந்தார் அருளிச்செய்ததாகத் திருமாலையாண்டான் பணிப்பது.

சார்வேதவநெறிக்குத் தாமோதரன்தாள்கள்*
கார்மேகவண்ணன் கமலநயனத்தன்*
நீர்வானம்மண்ணெரிகாலாய் நின்றநேமியான்*
பேர்வானவர்கள் பிதற்றும்பெருமையனே. (1)

ஒ.—முதற்பாட்டில், உபயவிபூதியுக்தனுமிருந்துவைத்து ஆச்ரிதஸுலபனான எம்பெருமானுடைய திருவடிகள் பக்தியோகலப்ய மென்கிறார் [சார்வே என்று தொடங்கி] - ஆச்ரிதபவ்யனான க்ருஷ்ணனுடைய திருவடிகள் பக்தியோகத்துக்கு ப்ராப்ய மென்னுமிடம் நிச்சிதம். "வணக்குடைத் தவநெறி" என்றுசொல்லுகிற அத்தை, இங்கு 'தவநெறி' என்கிறது. "தாமோதரன்தாள்" என்று உரலினோடிணைந்திருந்த ஸௌலப்யத்தை ப்ரத்யபிஜ்ஞை பண்ணுகிறது. [கார்மேகவண்ணன் என்று மேலுக்கு]-கறுத்தமேகம்போலே ச்ரமஹரமான திருநிறத்தையும் அழகியதிருக்கண்களையு முடையனும், ஸர்வத்துக்கும் ஈச்வரனும், ஜகத்ரக்ஷணத்துக்கு உறுப்பான திருவாழியை யுடையனும், அயர்வறுமமரர்கள் தோற்றுப்பேசும் பெருமையை யுடையனுன தாமோதரன் என்றந்வயம்.

இ—முதற்பாட்டில், உபயவிபூதியுக்தனுய்வைத்து ஆச்ரிதஸுலபனானவனுடைய திருவடிகள் பத்தியோகலப்ய மென்கிறார். [தவநெறிக்குத் தாமோதரன்தாள்கள் - சார்வே] - தவநெறிக்கு - பக்திமார்க்கத்துக்கு. "வணக்குடைத் தவநெறி" என்றத்தைச் சொல்லுகிறது. "மாம் நமஸ்குரு" என்ற வணக்கத்தைக் கரணசரீரமாக உடைத்தாயிருக்குமிறே பக்தி. அன்றிக்கே, "யஸ்ய ஜ்ஞாநமயம் தப:" என்று ஜ்ஞாநவிசேஷமான பக்தியைத் தபஸ்ஸென்று சொல்லுகிறது. இவன் ஒருகால் தலை வணங்க, பெருவருத்தமான காயக்லேசமாக நினைத்திருக்கும் ஈச்வராபிப்ராயத்தாலே சொல்லவுமாம்.

[தாமோதரன்] - ''உரவிநோ டிணைந்திருந்து'' என்றத்தைச் சொல்லுகிறது. ஸர்வாதிகனுய்வைத்து, ஓரிடைச்சி கட்டவும் அடிக்கவும் தன்னைக்கொடுத்து, அத்தால்வந்த தழும்பாலே அதுதானே தனக்குத் திருநாமமாம்படி யிருக்கிறவன். [தாள்கள்] - தன்னை உகப்பார்க்கு அவன் இப்படி எளியனானால் அவனை உகப்பார் அல்லெளவப்யத்துக்குத் தோற்று அவன்திருவடிகளைப் பெறு மித்தனையிறே. சார்வு - ப்ராப்யம். ''பத்துடையடியவர்க்கெளியன்'' என்றும் ''எளிவருமியல்வினன்'' என்றும் 'அவன் சார்வு' என்றார்; இங்கு, சார்வேயென்று அவதரிக்கிறார். எப்படிப்பட்டவன் இங்கு ஸுலபனாகிறா னென்னில், - விலக்ஷண விக்ரஹத்தை யுடையனுய் உபயவிபூதியுக்தனானவன் என்கிறார்;—[கார்மேகவண்ணன்] - நீர்கொண் டெழுந்த காளமேகம்போலே ச்ரமஹரமான வடிவையுடையவன். அடியிலே இவனுக்கு ருசியைப் பிறப்பித்து பக்திபர்யந்தமாக வளர்த்து அதுபக்வமானால் பின்னைத் தானேப்ராப்யமாம்படி யிருக்கிற வடிவு. கறுத்தமேகமென்னுதல்: கார்காலத்து மேகமென்னுதல். ''புயற்கருநிறத்தனன்'' என்றத்தை நினைக்கிறது. [கமலநயனத்தன்] - அவ்வடிவுக்குப் பரபாகமாய் அகவாயில் தண்ணளிக்கு ப்ரகாசகமான திருக்கண்களை யுடையவன். [நீர்வானம் இத்யாதி] - விக்ரஹ வைலக்ஷண்யமே யன்றியிலே ஸ்வரூப வைலக்ஷண்யத்தைச் சொல்லுகிறது. பஞ்சபூதங்கள், தத்கார்யமான தேவாதிபூதங்களுக்கும் உபலக்ஷணம். [நேமியான்] - ஜகத்ரக்ஷணத்துக்கு உறுப்பான திருவாழியை யுடையவன். நித்ய விபூதியிலும் கையுந்திருவாழியுமா யிறே யிருப்பது. [பேர்வானவர்கள்] - அமரரான ப்ரஹ்மாதிகளை வ்யாவர்த்திக்கிற தென்னுதல், வானவர்கள் பேர்பிதற்று மென்னுதல். [பிதற்றும் பெருமையனே] - அளவுடையாரும் அடைவுகெடப் பேசும்படியான பெருமையை யுடையவன். ''யாவையும் யாவரும்தானும் அமைவுடை நாரணன்'' என்றத்தை நினைக்கிறது. இப்படி உபயவிபூதிநாதனுய்வைத்து, தன் விபூதியிலே ஒரு பதார்த்தத்துக்கு சேஷமாய் வந்து அவதரித்து, கட்டவும் அடிக்கவுமாம்படி யிருக்கிற - தாமோதரன் - தவநெறிக்கு - சார்வே,

ஈடு.—முதற்பாட்டு. உபயவிபூதியுக்தனா யிருக்குமவைத்து ஆச்ரிதஸுலபனானவனுடைய திருவடிகள் பக்தியோகலப்ய மென்கிறார்.

[சார்வேதவநெறிக்குத் தாமோதரன்தாள்கள்] - 'தவநெறிக்கு - சார்வே' - ''பத்துடையடியவர்க்கெளியவன்'' என்றும் ''எளிவரும் இயல்வினன்'' என்றும் சொன்ன அவன் திருவடிகள் சார்வென்கிறார். சார்வு - ப்ராப்யம். [தவநெறிக்கு] - பக்திமார்க்கத்துக்கு (தபோமார்க்கமென்றபடி) - ''வணக்குடைத்தவநெறி'' என்றாரே அங்கே; அத்தைச்சொல்லுகிறார்; ''தவநெறி'' என்னுங்காட்டில் பக்தியைச்சொல்லிற்றாமோவென்னில்; - "நமஸ்யந்தச்ச மாம்" என்று நமஸ்ஸைக் கரணசரீரமாக உடைத்தாயிருக்குமிறே பக்தி; இவன்ஒருப்ரணாமத்தைப் பண்ணினால் ''இவன் நம்மை நோக்கித் துவாலாக வருந்தினான்'' என்று இதுதன்னைப் பெரிய காயக்லேசமாக நினைத்திருக்குமவன்கருத்தால் சொல்லுகிறது. அன்றிக்கே. "யஸ்ய ஜ்ஞாநமயம் தப:" என்று ஜ்ஞாந விசேஷமான பக்தியைத் தபஸ்ஸென்று சொல்லிற்றாகவுமாம். [தாமோதரன்தாள்கள்] - ''உரவிநோடிணைந்திருந்தேங்கியவெளிவு'' என்றத்தைச் சொல்லுகிறார் இங்கு. யசோதாதிகள்கையிலே கட்டுண்டு தழும்புசுமந்ததுவே திருநாமமாயிருக்குமவனிறே; யசோதாதிகள்கையிலே கட்டுண்பானொருவனானபின்பு, அவனையுகப்பார் அவன் காலைக் கட்டிக்கொள்ளுமித்தனையிறே. எப்படிப்பட்டவன் ஸுலபனானானென்னில், விலக்ஷண விக்ரஹயுக்தனுய் உபயவிபூதியுக்தனானவன்கிடீர்! என்கிறார். [கார்மேகவண்ணன்] - நீர்கொண்டெழுந்த காளமேகம்போலே ச்ரமஹரமான வடிவையுடையவன். பக்திதனக்கு இவன்தான் க்ருஷிபண்ணவேண்டா, ருசிக்கு உத்பாதகமுமாய், பின்பு அத்தைவளர்த்து அது பக்வமானால் தானே ப்ராப்யமாம் வடிவையுடையவன். ''காதல் கடல்புரைய விளைவித்தகாரமர் மேனி''யிறே. கார்காலத்தில் மேகம்போலேயென்னுதல், கறுத்தமேகமென்னுதல். ''புயற்கருநிறத்தனன்'' என்றத்தைச் சொல்லுகிறார். [கமலநயனத்தன்] - அகவாயில் குணங்களுக்கு ப்ரகாசகமாயிருக்குமிறே திருக்கண்கள். அநுக்ரஹமடையத் தோற்றுவது கண்வழியே யிறே. வாத்ஸல்யப்ரகாசகமான திருக்கண்களையுடையவன். வடிவழகு கண்டு மேல்விழுகை யன்றிக்கே, மேன்மையாலும் மேலேவிழவேண்டுமவனுய்த்து. [நீர் வானம்இத்யாதி] - விக்ரஹவைலக்ஷண்யமேயன்றிக்கே ஸ்வரூபவைலக்ஷண்யத்தைச் சொல்லுகிறது. ''யாவை

யும்யாவரும் தானுமமைவுடை நாரணன்'' என்றத்தை நிகமிக்கிறார். ப்ருதிவ்யாதி பஞ்ச பூதங்களையும் சொன்னவித்தால் - அவற்றின் கார்யமான தேவாதி விசேஷங்களையும் நினைக்கிறது; இத்தால் - லீலாவிபூதியைச் சொல்லுகிறது- [நேமியான்] - கையுந்திருவாழியுமாய் நித்யவிபூதியிலே யிருக்கும் இருப்பைச் சொல்லுகிறது [பேர்வானவர்கள்] இவ்வருகில் ஆக்கனை தேவர்களன்றிக்கே அவ்வருகில் பெருமக்கள் ஏத்தும்படியான பெருமையை யுடையவன். அன்றிக்கே, ''வானவர்கள் - பேர் - பிதற்றும் பெருமையன்'' என்னுமாம். இங்கு ருசியுடையாரும் பிதற்றுமித்தனை: ப்ராப்யம்கைபுகுர் தவ்வருகுபட்டாராயிருக்கிறவர் களும் பிதற்றுமத்தனை, கார்மேகவண்ணனாய், காலாயனந்தனாய், நீர் வானம் மண் னெரி காலாய்கின்ற நேமியானாய், பேர்வானவர்கள் பிதற்றும் பெருமையனாயிருந்துவைத்து - தாமோதரனானவன்திருவடிகள் - தவநெறிக்கு - சார்வே: இது நிச்சிதம்.

பெருமையனே வானத்திமையோர்க்கும்* காண்டற்
கருமையனே ஆகத்தணையாதார்க்கு* என்றும்
திருமெய்யுறைகின்ற செங்கண்மால்* நாளும்
இருமைவினைகடிந்து இங்கென்னையாள்கின்றானே. (2)

ஒ.—இரண்டாம்பாட்டில், ச்ரிய:பதியான ஸர்வேச்வரன் என்னுடைய ப்ரதிபந்தகங்களைப் போக்கி நாள்தோறும் என்னை இஹலோகத்திலே அடிமைகொள்ளாநின்றா னென்று, தம்முடைய லாபத்தைப் பேசுகிறார். [பெருமையனே வானத்திமையோர்க்கும்] - ப்ரஹ்மாதிகளுக்கும் ஈச்வரன். [காண்டற்கரு மையனே ஆகத்தணையாதார்க்கு] - ''பிறர்களுக்கரிய வித்தகன்'' என்கிறது. [என்றும் திருமெய் என்று மேலுக்கு] - என்றும் பெரியபிராட்டியார் திருவுடம்பிலே உறைவதுஞ்செய்து, அத்தாலே, மது பானமத்தரைப்போலே சிவந்ததிருக்கண்களை யுடையனான ஸர்வேச்வரன். இத்தால் - ''மலர்மகள் விரும்பும் நமரும்பெறலடிகள்'' என்கிறவிடத்தை ப்ரத்யபிஜ்ஞை பண்ணுகிறது.

இ.—இரண்டாம்பாட்டில், ஸர்வேச்வரனாய் ச்ரிய:பதியாய்வைத்து என் விரோதியைப் போக்கி இங்கே அடிமைகொள்ளாநின்றா னென்று, தாமோதரத்வம் தமக்கு ப்பலித்தபடியைப் பேசுகிறார். [பெருமையனே இத்யாதி] - ஊர்த்வலோகஸ்த்தராய் ''ஸ்ருஷ்ட்யாதிகளுக்குத் தங்களுக்குமேலில்லை'' என்றிருக்கிற ப்ரஹ்மாதிகளுக்கும் ஈச்வரன். ''அமைவுடைமுதல்கெடல்ஒடிவிடை யறநிலமதுவாம் அமைவுடை அமரர்'' என்றத்தை நினைக்கிறது. துர்மாநம் கனத்திருக்கையும் விடுமிடத்துக் காற்கட்டுக் குவாளாயிருக்கையுமிறே நம்மிற்காட்டில் வ்யாவ்ருத்தி. [காண்டற்கு இத்யாதி] - தானே மேல்விழா நின்றால் இசைவின்றியே யிருப்பார்க்குச் கிட்டவொண்ணாதபடியா யிருக்கும். ''பிறர்களுக்கரிய வித்தகன்'' என்றத்தை நினைக்கிறது. என்றுமொக்கப் பிராட்டி திருமேனியிலே உறைகிற. [என்றும்] - ''அகலகில்லேனிறையும்'' என்கிற நித்யவாஸத்தைச் சொல்லுகிறது. ''மலர்மகள் விரும்பும்'' என்றத்தை நினைக்கிறது. [செங்கண்] - அவளோட்டை ஸஹவாஸத்தாலே, மதமுதிதரைப்போலே சிவந்த திருக்கண்களை யுடையவன். [மால்] அவளோட்டைச்சேர்த்தியால்வந்த பெருமையையுடையவன். ''அப்ரமேயம் ஹி தத்தேஜ:'' ''அரும்பெறலடிகள்'' என்றத்தை நினைக்கிறது. [இருமைவினைகடிந்து - நாளும்-இங்கு என்னையாள்கின்றானே] - புண்யபாபரூபகர்மங்களைப் போக்கி, ஒருதேசவிசேஷத்தி லன்றிக்கே இஹலோகத்திலே நாள்தோறும் என்னை அடிமைகொள்ளாநின்றான்; அங்கு-குணாநுபவம்; இங்கு - குணஜ்ஞாநத்தாலே தரிக்கை.

ஈடு.—இரண்டாம்பாட்டு. ஸர்வேச்வரனாய் ச்ரிய:பதியாயிருந்துவைத்து என் விரோதியைப் போக்கி என்னை இங்கே அடிமைகொள்ளா நின்றானென்று, கீழ்ச்சொன்ன ஸௌலப்யம் தமக்கு ப்பலித்தபடியை யருளிச்செய்கிறார்.

[பெருமையனே வானத்திமையோர்க்கும்] - ''அமைவுடை முதல்கெடலொடி விடை யற நிலமதுவா மமைவுடையமரர்'' 'என்றத்தைச் சொல்லுகிறது. அல்லாதார் மேயிருக்க

தாங்கள் விலக்ஷணமான தேசங்களிலே இருக்கிறார்களாய், ஸ்ருஷ்ட்யாதிகளுக்கும் தாங்களே கடவர்களாக நினைத்துத் தங்களைக் குவாலாக நினைத்திருக்கும் ப்ரஹ்மாதிகளுக்கும் தன்னை யாச்ரயித்து ஸ்வரூபம் பெறவேண்டும்படியான பெருமையையுடையவன். [வானத்து] - அவ்வாசியே அவர்களுக்குஉள்ளது. அவனைப்பார்த்தால் நம்மோடு அவர்களோடு வாசியில்லை. ஸம்ஸாரத்தில் நம்மிலும் கனவியராயிருப்பர்கள். நமக்குப் பற்றினவளவேயிறே விடவேண்டு வது, அவர்களுக்கு த்ரைலோக்யமும் விடவேணுமே. [காண்டற்குஇத்யாதி] - தானேவந்து மேல்விழாவின்றால் விலக்காமையின்றிக்கே யிருப்பார்க்குக் காண அரியனாயிருக்கும். ஸம்பந் தம் இன்று ,தேடவேண்டா: பெறவேணுமென்கையும் வேண்டாவென்கையுமிறே யுள்ளது. "பிறர்களுக்கரியவித்தகன்" என்றத்தைச் சொல்லுகிறது. [என்றும்திருமெய்யுறைகின்ற] - ரஹஸ்யத்தில்நித்யயோகத்தைச் சொல்லுகிறதிறே. "அகலகில்லேன்" னிறே. "மலர்மகள்விரும் பும் நமரும்பெறலடிகள்" என்றத்தைச் சொல்லுகிறது. என்றுமொக்கப் பெரிய பிராட்டியார் வர்த்திக்கிற திருமேனியையுடையவன். [செங்கண்] - அவளோட்டை நித்யஸம்ச்லேஷத் தாலே, நீர்பாய்ந்த பயிர்போலே செவ்வி பெற்ற திருக்கண்களையுடையவன். [மால்] - யஸ்ய ஸா ஜநகாத்மஜா* என்றவளையுடையனுகையால் வந்த பெருமையைச் சொல்லுகிறது: "அரும்பெற லடிகள்" என்றத்தைச்;சொல்லுகிறது. [நாளும் இத்யாதி] - (இருமைவினைகடிந்து - நாளும் - இங்கு என்னையாள்கின்றானே) - புண்யபாபரூப கர்மங்களைப் போக்கி, இத்தைவிட்டு ஒரு தேச விசேஷத்திலே போனால் கொள்ளக்கடவ அடிமையை இஹலோகத்திலே நாள்தோறும் கொள்ளாநின்றான். அங்குப்போனால் குணநுபவத்தாலே ஸத்தையை நிர்வஹிக்கும்; இங்கு குணஜ்ஞாநத்தாலே தரிப்பியாநிற்கும்.

ஆள்கின்றானாழியான் ஆரால்குறைவுடையம்*
மீள்கின்றதில்லைப் பிறவித்துயர்கடிந்தோம்*
வாள்கெண்டையொண்கண் மடப்பின்னைதன்கேள்வன்*
தாள்கண்டுகொண்டு என்தலைமேல்புனைந்தேனே. (3)

ஒ.—மூன்றாம்பாட்டில், மறுவலிடாதபடி ஸம்ஸாரத்தைப்போக்கி நப்பின்னைப்பிராட்டிக்கு நாதனானவனுடைய திருவடிகளைக் கண்டுகொண்டு என்தலைமேலே புனையப்பெற்றேனென்கிறார். [ஆள் கின்றான் ஆழியான் ஆரால்குறைவுடையம்]-ஸர்வேச்வரன் என்னை அடிமைகொள்ளாநின்றான். இனி, ஆரைக்கொண்டு கார்யமுடையோம் ? [வாள்கெண்டை யொண்கண்] - ஒளியையுடைய கெண்டைபோலே யிருக்கிற அழகிய கண்.

இ.—மூன்றாம்பாட்டில், மறுவலிடாதபடி ஸம்ஸாரத்தைப்போக்கி நப்பின்னைப்பிராட்டிக்கு வல்லப னானவனுடைய திருவடிகளை சிரோபூஷணமாகப் பெற்றேன் என்கிறார். [ஆள்கின்றான் ஆழியான்] - வகுத்த ஸர்வேச்வரன் அடிமைகொள்ளாநின்றானென்னுதல்; ஆசிலேவைத்த கையுந்தானுமாய் விரோதியைப் போக்கி அடிமைகொள்ளாநின்றான் என்னுதல். அசக்தனானதன்னாலே ஸாத்யமான அசேதநக்ரியாகலா பங்கள் கொண்டு விரோதியைப் போக்குமவரன்றே இவர்? ஸர்வசக்திகையில் திருவாழியின் கூர்மை யாலே போக்குமவரிறே. [ஆரால் குறைவுடையம்] - என்னால் வருமதொரு குறையுமில்லை; யமாதிகளால் வருமவையுமில்லை. [மீள்கின்றதில்லை] - இனி மறுவலிடுகிறதில்லை. [பிறவித்துயர் கடிந்தோம்] - து:க்கஹேதுவான ப்ரக்ருதிஸம்ஸர்க்கத்தையும் ஓட்டினோம். பரமபதத்திலே புகச்செய்தேயும் ருசிமுன்னாகப் போகாத வைதிகபுத்ரர்களுக்கு மீளவேண்டிற்றிறே. "மயர்வறமதிநலமருளினன்" என்று: ருசிஜநகனும் அவனேயாய்ப் பேறும்அவனாலேயாயிருக்கிற எனக்குப் புநராவ்ருத்திப்ரஸங்க மில்லை யென்கை. இதுக்கு ஹேதுவென்னென்னில்? [வாள்கெண்டை இத்யாதி] - ஒளியையுடைத்தாய்க் கெண்டைபோலே முக்த மாய் தர்சநீயமான திருக்கண்களையுடையவளாய், ஆத்மகுணோபேதையான நப்பின்னைப்பிராட்டிக்கு வல்லபனானவனுடைய. அவனடியாகவந்த பின்பு, என்னுடைய கர்மவச்யதையாலேயாதல், அவன்

ஸ்வாதந்த்ர்யத்தாலேயாதல் இழக்கவேணுமோ? அவன் என்னைக் கடாக்ஷியாவிட்டால், அவன்கடாக்ஷத்துக்கு இலக்கன்றிப்போகிறான். அவன் ஸ்வாதந்த்ர்யங்கொண்டாடினால் அவள்நோக்கு இழக்குமிறே. என்ஜீவநத்தைப் பறித்தானாகில் தன்ஜீவநத்தை யிழக்கிறான். [தான்கண்டுகொண்டு]-தானாலே அவனைக் கண்டுகொண்டேனென்னுதல், தானைக் கண்டுகொண்டேனென்னுதல். "நின் செம்மாபாதபற்புத் தலைசேர்த்து" என்றும், 'கோலமா மென்சென்னிக்கு' என்றும் ஆசைப்பட்டபடியே, என்தலைமேலே சூடப்பெற்றேன் என்கிறார்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. மறுவலிடாதபடி ஸம்ஸாரத்தைப் போக்கி நப்பின்னைப்பிராட்டிக்கு வல்லபனானவனுடைய திருவடிகள் சிரோபூஷணமாகப் பெற்றேன் என்கிறார்.

[ஆன்கின்றான் ஆழியான்] - ஆழியிலேவைத்த கையும் தானுமாய் விரோதியைப்போக்கி அடிமைகொள்ளாநின்றானென்னுதல்; வகுத்த ஸர்வேச்வரன் அடிமைகொள்ளாநின்றான் என்னுதல். பின்னையும் அவன்கை பார்த்திருக்கவேண்டும் அசேதந க்ரியாகலாபங்களைப் பூண்கட்டாகிற்பார்கள் சிலர்; "கூரம்பனல்லால்" என்று அம்பின் கூர்மையையும் "சுடர்வட்டவாய் நுதி நேமியீர்" என்று திருவாழியில் கூர்மையையுங்கொண்டு பெறவிருப்பார்கள் சிலர். அசக்தனான தன்னாலே ஸாத்யமான க்ரியாஜாதத்தைப்பற்றிப் பெறவிருப்பார்கள் சிலர்; ஸித்தஸ்வரூபனான ஸர்வசக்தியைப்பற்றிப் பெறவிருப்பார்கள் சிலர். க்ரியாஜாதத்தை நெகிழச்சொல்லி, "கெடுவாய், என்னையன்றே பற்றுகிறது" என்றானிறே. [ஆரால்குறைவுடையம்] - என்னாலே இழக்கவேண்டுதல், ஆராயக்கடவ யமாதிகளுக்கும் வந்துவிட்டவாதல், அவன்தன்னளவும் சென்றால் பின்னையும் ஒன்றைப் பார்த்திருத்தல் செய்யவேண்டும்படியாய் இருப்பதொன்றை யோ நான்பற்றிற்று? 'ஆரால்' - என்கிறார்காணும்; என்றும் ஒருசேதநனாலே பேறென்றிருக்குமவராகையாலே. [மீள்வின்றுநில்லை] - இனி மறுவலிடுகிறதில்லை. [பிறவித்துயர்கடிந்தோம்] - ஸம்ஸாரதுரிதத்தை யோட்டினோம். பரமபதத்தில் புகச்செய்தேயும் ருசிமுன்னாகப் பெறாமையாலே கடலில்புக்க துரும்புபோலே மீளப்போந்தார்களிறே வைதிக புத்ரர்கள். "மயர்வறமதிநலமருளினன்" என்று ருசிமுன்னாக அவன்தரப் பெறவிருக்கிற நமக்குப் புநராவ்ருத்தி ப்ரஸங்கமுண்டோ? "கடிந்தோம்" என்கிறாரிறே; அவன் செய்வானாக ஏறட்டுக்கொண்ட கார்யத்துக்கு "ஸ்த்திதோஸ்மி" என்னலாம்படியிருக்குமிறே; [வாள் இத்யாதி] - அவன் ஸ்வாதந்த்ர்யம் தலையெடுத்ததாகில் அடிருவளம் தடைப்படும்போலேகாணும். இனி என்னாலேதான் விடப்போமோ? அவனாலேதான் விடப்போமோ? என்னுடைய பாரதந்த்ர்யம்போலே அவனுடைய ஆச்ரிதபாரதந்த்ர்யத்துக்கும் ஏதேனும் கண்ணழிவுண்டோ? அவன்ஸ்வாதந்த்ர்யம் தலையெடுத்ததோ தன்னானையிழக்கிறான். "மணநோக்கமுண்டான்" இறே ஒளியையுடைத்தான கெண்டைபோலே முக்தமாய், வைத்தகண் வாங்காதே கண்டுகொண்டு இருக்கவேண்டும்படியான அழகிய கண்களையுடையளாய் ஆத்மகுணோபேதையான நப்பின்னைப்பிராட்டிக்கு வல்லபன். [தான்கண்டுகொண்டு] - காட்சிக்கு ஹேதுசொல்லிற்றிறே. [என்தலைமேல்புனைந்தேனே] - "துயரறுசுடரடி தொழுதெழு" என்றும் "பாதபங்கயமே தலைக்கணியாய்" என்றும், "கோலமாமென்சென்னிக்கு" என்றும் சொல்லுகிறபடியே, மயிர்கழுவிப் பூச்சூடவிருப்பாரைப் போலேயிருக்கிற போக்யதைசொல்லுகிறது. "நின் செம்மாபாதபற்புத் தலைசேர்த்து" என்று ப்ரார்த்தித்தவத்தைத் தலையாகப்பெற்று க்ருதக்ருத்யனானேன்.

தலைமேல்புனைந்தேன் சரணங்கள்* ஆலின்
இலைமேல்துயின்றான் இமையோர்வணங்க*
மலைமேல்தான்நின்று என்மனத்துளிருந்தானை*
நிலைபேர்க்கலாகாமை நிச்சித்திருந்தேனே. (4)

ஒ.—நாலாம்பாட்டில், என்னுடைய ஹ்ருதயத்திலேயிருக்கிற ஸர்வேச்வரனை ஒருவராலும் விச்லேஷிக்கப்பண்ணவொண்ணாமையை நிச்சயித்து, அத்தாலே க்ருதார்த்தனாயிருந்தேன் என்கிறார்.

[ஆலினிலைமேல் என்று தொடங்கி] - என்பாடு வருகைக்காக ஆலினிலைமேலே வந்து கண்வளர்ந்தருளி அயர்வறுமமரர்கள் அடிமைசெய்யத் திருமலையிலே நின்றருளி என்னையிசைவித்து என் ஹ்ருதயத்திலே புகுந்திருந்தவனை,

இ.—நாலாம்பாட்டில், என்மனஸ்ஸிலே யிருக்கிற ஸர்வேச்வரனை ஒருவராலும் விச்லேஷிப்பிக்க வொண்ணாதென்று நிச்சயித்து, அத்தாலே க்ருதார்த்தனாயிருந்தேன் என்கிறார். [தலைமேல் இத்யாதி] - அமரர்சென்னிப்பூவான திருவடிகளைச் சூடப்பெற்றேன். ப்ரார்த்தித்துப் போகையன்றிக்கே கிட்டப் பெற்றேன். [ஆலினிலைமேல் துயின்றான்] - இவர்க்கு ருசிபிறக்கைக்குப் பண்ணின க்ருஷியைச் சொல்லுகிறது. ப்ரளயாபத்தில் ஸகலலோகங்களையும் தன்திருவயிற்றிலேவைத்து ஒரு பவனுமிருப்ப தொரு ஆலின்தளிரிலே கண்வளர்ந்தான்; அதுதனக்குமேலே, நித்யஸூரிகள் அடிமைசெய்யத் திருமலையிலே வந்துநின்றான். தன்னுடைய ஆபத்ஸகத்வத்தையும், ஸர்வசக்தித்வத்தையும், மேன்மை யோடேகூடின ஸௌலப்யத்தையுங் காட்டி என்னையிசைவித்து என்மனஸ்ஸிலேபுகுந்து ஸ்தாவர ப்ரதிஷ்டையா யிருந்தவனை. [நிலைபேர்க்கலாகாமை நிச்சித்து] - அவ்விருப்பை என்றும் போக்க வொண்ணாமையை நிச்சயித்து. அவன்போகைக்கு உறுப்பாக என்னும் செய்யலாவது ப்ராதிகூல்யமிறே; நெஞ்சைக் கொண்டிருக்கையாலே அதுசெய்ய வொண்ணாதிறே. [இருந்தேனே] - இனி ஒருபயமில்லையென்று நிர்ப்பயனாயிருந்தேன். "ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந் ந பிபேதி" என்று அவனுடைய ரக்ஷகத்வத்தையறிந்தாலும், போக்யதையையறிந்தாலும், ஒன்றாலும் சலியானிறே.

ஈடு.—நாலாம்பாட்டு. என்மனஸ்ஸிலேயிருக்கிற ஸர்வேச்வரனை ஒருவராலும் விச்லேஷிப்பிக்கவொண்ணாதென்று நிச்சயித்து அத்தாலே க்ருதக்ருத்யனாயிருந்தேனென்கிறார்.

[தலைமேல்புனைந்தேன் சரணங்கள்] - அமரர்சென்னிப்பூச் சூடப்பெற்றேன். ப்ரார்த்தித்துப்போகையன்றிக்கே அத்திருவடிகளை என்தலைமேலே வைத்துக்கொள்ளப் பெற்றேன். இப்பேறு இவர்பெறுகைக்கு அவன்க்ருஷிபண்ணினபடி சொல்லுகிறது மேல்; அவன் வண்டடத்திலுட்கிடந்து தபஸ்ஸுபண்ணிற்று, இவர் இப்பேறுபெறுகைக்கு. [ஆலினிலைமேல்துயின்றான்] - தன்னைக்கொண்டு கார்யமுடையார் சிலரைக் கண்டிலன்; எல்லார்க்கும் ஆராய்ச்சிப்படும்படியான செயலைச்செய்வோமென்று பார்த்தான்; வேண்டாவென்பாரைக் கண்டதில்லை. அது ஸாத்மித்தவாறே நித்யஸூரிகளும் தானுமாகவந்து திருமலையிலே நின்றான்; அதுவும் ஸாத்மித்தவாறே இவருடைய ஹ்ருதயத்திலே வந்துபுகுந்தான்; இங்கு விலக்குவாரில்லாமையாலே ஸ்தாவரப்ரதிஷ்டையாக விருந்தான். பொருப்பிடையே நின்றும் புனல்குளித்தும்காணும் இவர்நெஞ்சிலே புகுந்திருந்தது. பனிக்கடலிற் பள்ளிகோளைப் பழகவிட்டோடிவந்து இவருடைய மனக்கடலிலே வாழப்புக்கான்; இப்படியிருந்தவனை. [நிலைபேர்க்கலாகாமை] - இவன்போகைக்கு உறுப்பாக என்னாலாவதெல்லாம் செய்தேன், அதுக்கும் கேட்பானாயிருந்திலன். [நிச்சித்திருந்தேன்] - *ந பிபேதி* என்றிருந்தேன். அவன்படியையறிந்தால் இவனுக்கு நிர்ப்பயனாயிருக்கத் தட்டில்லையிறே. *ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந் ந பிபேதி குதச்சந* - தன்சோகம் மறுநனையும்படியான ஆனந்தம் இவன்பக்கலிலே உண்டென்றறிந்தால், பின்னை இவன்சோகம் போகைக்குக் குறையில்லையிறே. *குதச்சந* பின்னை புத்திபூர்வகமாகப் பண்ணின ப்ராதிகூல்யத்துக்கும் அஞ்சவேண்டா.

நிச்சித்திருந்தேன் என்நெஞ்சம்கழியாமை*
கைச்சக்கரத்தண்ணல் கள்வம்பெரிதுடையன்*
மெய்ச்சப்படான்பிறர்க்கு மெய்போலும்பொய்வல்லன்*
நச்சப்படும்நமக்கு நாகத்தணையானே. (5)

ஒ.—அஞ்சாம்பாட்டில், எம்பெருமான் என்திறத்தில் செய்தருள நினைக்கிறவை ஒருவர்க்கும் அறிய நிலமல்ல என்கிறார். [கைச்சக்கரத்தண்ணல்] - கையிலே திருவாழியையுடைய ஸர்வேச்வரன்

[மெய்ச்சப்படான் என்று தொடங்கி] - அநாச்ரிதர்க்கு குணங்களால் கொண்டாடப்படான்; அவர்களுக்கு மெய்செய்வாரைப்போலே பொய்செய்யவல்லவன்; ஆச்ரிதஸம்ச்லேஷைக போக்யனானவன் ஆச்ரிதரான நமக்கு நச்சப்படும்.

இ.—அஞ்சாம்பாட்டில், அவன் என்திறத்திற்செய்தருள நினைந்திருக்கிறவை ஒருவர்க்கும் அறிய நிலமன்று என்கிறார். [நிச்சித்திருந்தேன் இத்யாதி] - தானே க்ருஷிபண்ணித் தன்பேறாகவந்து என் நெஞ்சிலே யிருக்கையாலே, இனி ஒருகாலமும் விட்டுப்போகான் என்னுமிடத்தை நிச்சயித்திருந்தேன். [கைச்சக்கரத்தண்ணல்] - கையிலே திருவாழியையுடைய ஸர்வஸ்வாமி. கைப்பற்றினாரை ஒருகாலமும் விடானென்கை. [கள்வம் பெரிதுடையன்] - நெஞ்சைவிட்டுப் போகாமையே யன்றிக்கே இங்கே யிருந்தே ஒருவர்க்கு அறியவொண்ணாதே தான் அறிந்ததாக அநேகத்தைப் பாரியாகின்றான். அர்ச்சிராதிகதியே கொடுபோக நினைப்பது அமாநவகரத்தாலே ஸ்பர்சிப்பிக்கத் தேடுவது, அப்ஸரஸ்ஸுக்களையிட்டு எதிர்கொள்ளத் தேடுவதாகாநின்றான். [மெய்ச்சப்படான் பிறர்க்கு] - நான் தன்குணங்களைச் சொல்லி ஏத்தினாப் போலே, அநாச்ரிதர் கிட்டிக்கொண்டாடப்படான். இரண்டும் இவர்க்குப் பேறாயிறேயிருப்பது. [மெய்போலும் பொய்வல்லன்] - பாண்டவர்களுக்கு மெய்யனாயிருக்குமா போலே, துர்யோதனாதிகளுக்குச் செவ்வை செய்வாரைப் போலே யிருந்து பொய்யாய்த்தலைக்கட்டும்படி செய்ய வல்லன். [நச்சப்படும் நமக்கு] - தன்னை யொழியச்செல்லாத நமக்குக் கிட்டி ஆச்ரயிக்கலாம்படி யிருக்கும் [நாகத்தணையானே] - சிலர்க்கு அரியனாயிருக்க நமக்குக் கிட்டலாயிருக்கிறது எத்தாலே? என்னில், - ஆச்ரிதஸம்ச்லேஷைகபோகனாயிருக்கையாலே. அவனுக்கு அபிமதனுமாய் நமக்குக் கிட்டுகைக்கு அடியுமாயிறே திருவனந்தாழ்வான் இருப்பது.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. அவன் என்திறத்தில் செய்யநினைக்கிறவை ஒருவர்க்கும் அறிய நிலமன்றென்கிறார்.

[நிச்சித்து இத்யாதி] - நீரிலே கிடக்கும் பர்வதாக்ரத்திலே நின்றும் தன் பேறாகத் தபஸ்ஸுபண்ணி வந்து என்னெஞ்சிலே இருக்கையாலே, இனி ஒருகாலமும் விட்டுப்போகானென்று நிச்சயித்திருந்தேன். [கைச்சக்கரத்தண்ணல்] - கையிலே திருவாழியையுடைய ஸர்வேச்வரன். ஆச்ரிதரை ஒருகாலும் கைவிடாதவன்; "எப்போதும் கைகழலாநேமியான்" என்னக்கடவதிறே. [கள்வம்பெரிதுடையன்] - நெஞ்சைக் கைவிடாமையே யன்றிக்கே, இங்கேயிருந்து நாம் அறியாதிருக்கத் தான் அறிந்ததாகக்கொண்டு அவ்வருகே குவாலைப் பாரியாநின்றான். பரமபதத்தேறக் கொடுபோக ஒருப்படுவது, அமாநவனை இடுவித்து ஸ்பர்சிக்க நினைப்பது, மதிமுக மடந்தையரை வரக்காட்டி எதிர்கொள்ளப் பார்ப்பதாய்க் குவாலைப் பாரியாநின்றான். "இதுதான் ஸர்வஸாதாரணமாகிச் செய்வதென்" என்று அஞ்சவேண்டா; [மெய்ச்சப்படான் பிறர்க்கு] - நான் தன்குணங்களைச்சொல்லிப் புகழ்கிறாப்போலே, பிறர் தன்குணங்களைச் சொல்லிப் புகழலாம்படியிரான்; அவர்களுக்கு துஷ்ப்ராபனாயிருக்கும். [மெய்போலும் பொய் வல்லன்] - அர்ஜுநாதிகள்பக்கல் இருக்குமாபோலேயிறே துர்யோதநாதிகள் பக்கலிலும் இருப்பது; கார்யத்தில்வந்தால் மெய்செய்வாரைப்போலே பொய்செய்து தலைக்கட்டும். "இதுதான் நம்மளவிலும் ஏறிற்செய்வதென்?" என்றஞ்சவேண்டா. [நச்சப்படும் நமக்கு] - உகவாதார்பக்கலில் செய்யுமதை நம்பக்கல் செய்யான். அதுக்கு விச்வாஸமென்னென்னில், - [நாகத்தணையானே] - நம்மோடு விஜாதீயர்பக்கல் செய்வதுகொண்டு கார்யமென்? நம்மோடு ஸஜாதீயர்பக்கல் பரிமாறினதன்றோ நமக்குப் படிமா. நம்முடைய பேற்றுக்கு அடியுமாய் நமக்கு ஸஜாதீயருமானாரோடு பரிமாறும்படி இதுவன்றோ?

நாகத்தணையானை நாடோறும்ஞானத்தால்,*
ஆகத்தணைப்பார்க்கு அருள்செய்யுமம்மானை,*
மாகத்திளமதியம் சேருஞ்சடையானை*
பாகத்துவைத்தான்தன் பாதம்பணிந்தேனே. (6)

ஒ.—ஆறாம்பாட்டில், இன்றுபுகுந்து ஆச்ரயிப்பாரையும் குணதோஷம் பாராதே நித்யாச்ரிதரைப் போலே விஷயீகரிக்கும் ஸ்வபாவனான ஸர்வேச்வரன்திருவடிகளைப் பணியப்பெற்றேனென்கிறார். [ஞானம்] - பக்தி. நாள்தோறும் அருள்செய்யும் என்றந்வயம். [மாகத்திளமதியம் என்று தொடங்கி மேலுக்கு] - ஐச்வர்யத்துக்கு ஸூசகமான பிறையைச் சூடி ப்ரயோஜநாந்தரபரதைக்கு உறுப்பான ஸாதகத்வம் தோற்றும்படியான ஜடையையுடையவனைத் திருமேனியில் ஒருபார்ச்வத்தில் வைத்தவனுடைய திருவடிகளைப் பணியப்பெற்றேன்.

இ.—ஆறாம்பாட்டில், இன்றுபுகுந்து ஆச்ரயித்தாரையும் நித்யாச்ரிதரைப்போலே விஷயீகரிக்குமவன்திருவடிகளிலே நிர்மமனாய் விழப்பெற்றேனென்கிறார். திருவநந்தாழ்வானுக்கும் ப்ரயோஜநாந்தரபார்க்கும் வாசிவையாதே உடம்புகொடுக்குமவனை வணங்கப்பெற்றேனென்கிறார் என்றுமாம். [நாகத்தணையானை] - தன்னை உகந்தாரைப் படுக்கையாகக் கொள்ளுமவனை. [ஞானத்தால் ஆகத்தணைப்பார்க்கு - நாள்தோறும் அருள்செய்யும்] - ஞானம் - பக்தி, பக்தியாலே நெஞ்சிலே யணைக்கநினைப்பார்க்கு, அவர்களுடைய ஹ்ருதயத்தை ஒரு நாளும் விடான். [அம்மானை] - ஆசாலேசமுடையார்க்குத் தன்பேறாக விடாமைக்கு ப்ராப்தி சொல்லுகிறது. [மாகம் இத்யாதி] - ஸூகப்ரதானன் என்று தோற்றும்படி சந்த்ரனைச்சூடி ஸாதகத்வஸூசகமான ஜடையையுடையனுமான ருத்ரனுக்குத் திருமேனியில் ஒரு பார்ச்வத்திலே இடங்கொடுத்தவனுடைய திருவடிகளை ஆச்ரயிக்கப்பெற்றேன்.

ஈடு.—ஆறாம்பாட்டு. இன்று ஆச்ரயிப்பாரையும் நித்யாச்ரிதரைப்போலே விஷயீகரிக்குமவன்திருவடிகளிலே நிர்மமனாய் விழப்பெற்றேன் என்கிறார். (திருவநந்தாழ்வானுக்கும் ப்ரயோஜநாந்தரபரர்க்கும் வாசிவையாதே உடம்பு கொடுக்குமவனை வணங்கப்பெற்றேனென்கிறாரென்றுமாம்)

[நாகத்தணையானை] - உகந்தாரைப் படுக்கையாகக் கொள்ளுமவனாய்த்து- [நாடோறும் இத்யாதி] - ஜ்ஞாநத்தால்ஆகத்தணைப்பார்க்கு நாள்தோறும் அருள்செய்யுமவனாய்த்து. (இப்போது, ஞானமென்று - ஜ்ஞாநவிசேஷமான பக்தியைச் சொல்லுகிறது. பக்தியாலே ஹ்ருதயத்திலே கொடுபுகுந்து சேர்ப்பார்க்கு நாள்தோறும் அருள்செய்யுமவனாய்த்து.) இவனால் எப்போதும் நினைக்கப்போகாதே! அக்குறைதீர ஏகரூபனாய் தான் நாள்தோறும் அருள்செய்யுமாய்த்து. [மாகம் இத்யாதி] - ஸூகப்ரதாநனென்று தோற்றும்படி சந்த்ரனைச்சூடி ஸாதகத்வஸூசகமான ஜடையையுமுடையனான ருத்ரனுக்குத் திருமேனியிலே ஒருபார்ச்வத்தில் இடங்கொடுத்தவனுடைய திருவடிகளை ஆச்ரயிக்கப் பெற்றேன்; இனி எனக்கொருகுறையுண்டோ?

பணிநெஞ்சே நாளும் பரமபரம்பரனை*
பிணியொன்றும்சாரா பிறவிகெடுத்தாளும்*
மணிநின்றசோதி மதுசூதனென்னம்மான்*
அணிநின்றசெம்பொன் அடலாழியானே* (7)

ஒ.—ஏழாம்பாட்டில், ஸர்வேச்வரனை, நெஞ்சே! நாள்தோறும் அநுபவி; அவன்தானே ப்ரதிபந்தகங்களையெல்லாம் நீக்கி அடிமைகொள்ளும் என்கிறார். [பிணி என்று தொடங்கி] - ஸர்வாதிகனான ஈச்வரனை, நெஞ்சே! நாள்தோறும் பணி; ஒருதுக்கங்களும் ஸ்பர்சியா. துக்கஹேதுவான ஸம்ஸாரத்தைக்கெடுத்து அடிமைகொள்ளும். [மணிநின்றசோதி என்றுமேலுக்கு] - நீலமணியினுடைய ஒளியையுடையனும், ப்ரதிகூலநிரஸநஸ்வபாவனும், எனக்கு பவ்யனுமாய், தனக்கு ஆபரணமாய் நிறபதுக்குசெய்து செம்பொன்போலே யிருக்கும்நிறத்தைதயுடைத்தாய் ப்ரதிகூலரை யடர்க்கும் ஸ்வபாவமான திருவாழியையுடையவன்.

இ.—ஏழாம்பாட்டில், 'நம் ப்ரதிபந்தகங்களையெல்லாம் தானே போக்கி அடிமைகொள்ளுமவனை நாள்தோறும் அநுபவி' என்று, திருவுள்ளத்தைக்குறித்து அருளிச்செய்கிறார். [பணிநெஞ்சே இத்யாதி] -

நெஞ்சே! நாள்தோறும் அநுபவிக்கப்பார். [பரம பரம்பரனை]-ஸம்ஸாரிகளுக்கு அவ்வருகான ப்ரஹ்மாதிகளுக்கும் பரரான நித்யஸூரிகளுக்கும் நிர்வாஹகனானவனை. [பிணிஒன்றும் சாரா] - ஸகலது:க்கங்களும் நம்மை ஸ்பர்சியா. அந்தது:க்கங்களுக்கடியான ஐச்மத்தைப்போக்கி அடிமைகொள்ளும். [மணிநின்றசோதி] - நீலமணியின் ஒளியை வடிவாக வகுத்தாற்போலே யிருந்துள்ள வடிவையுடையவன். அடிமைகொள்ளும் வடிவிருக்கிறபடி. [மதுசூதன்] - அவ்வடிவை அநுபவிப்பார்க்கு விரோதியானவற்றை மதுவைப் போக்கினாற்போலே போக்குமவன். [என்னம்மான்] - அப்படியே என்விரோதியைப்போக்கி முகந் தந்தவன். [அணிநின்ற செம்பொன் அடலாழியானே] - தன்கைக்குத் தானே ஆபரணமாய் அநுபவிப்பார்க்கு ஸ்ப்ருஹணீயமான வடிவையுடைய யுத்தோந்முகமான திருவாழியைக் கையிலேயுடையவன். அநுபவத்துக்குத் தானே விஷயமாய். விரோதியைப் போக்குகைக்குத் தானே ஆபரணமான பரிகரத்தையுடையவன்.

ஈடு.—ஏழாம்பாட்டு. 'நம் ப்ரதிபந்தகங்களையெல்லாம் தானேபோக்கி அடிமை கொள்ளுமவனை நாள்தோறும் அநுபவி' என்று திருவுள்ளத்தைக்குறித் தருளிச்செய்கிறார்.

[பணிஇத்யாதி]. நெஞ்சே! நாள்தோறும் அநுபவிக்கப் பார். நல்ல வாய்ப்பாயிருந்தது. [பரமபரம்பரனை] - இதராதிகளுக்குப்பரரான ப்ரஹ்மாதிகளுக்கும் பரரான நித்யஸூரிகளுக்கும் நிர்வாஹகனானவனை. [பிணிபொன்றும்சாரா] - து:க்கங்களொன்றும் நம்மை ஸ்பர்சியாது. அந்த து:க்கங்களுக்கடியான ஐச்மத்தை அடிவேரோடே போக்கி நம்மை நித்யகைங்கர்யம் கொள்ளுமவன். [மணிநின்றசோதி] ஐச்மத்தையுண்டாக்கினாலும் விடவாவொ வடிவழகிருக்கிறபடி. நீலமணியினொளியை வடிவாக வகுத்தாற்போலேயிருக்கிற வடிவையுடையவன். [மதுசூதன்] - அவ்வடிவழகை யநுபவிப்பார்க்கு வரும் விரோதிகளை, மதுவைப் போக்கினாற்போலே தள்ளிக்கொடுக்குமவன். [என்னம்மான்] - இப்படி என்விரோதியைப் போக்கி முகந் தந்தவன். [அணிஇத்யாதி] - அநுபவிப்பார்க்கு விரோதிகளையும் போக்கி, இருக்கைக்குத் தானே ஆபரணமாய், அநுபவிப்பார்க்கு ஸ்ப்ருஹணீயமான வடிவையுடைய யுத்தோந்முகமான திருவாழியைக்கையிலேயுடையவன். அநுபவத் துக்கும் தானேயாய் விரோதிநிரஸநத்துக்கும் தானேயான பரிகரத்தையுடையவன்.

ஆழியான் ஆழியமரர்க்குமப்பாலான்*
ஊழியானூழிபடைத்தான் நிரைமேய்த்தான்*
பாழியந்தோளால் வரையெடுத்தான்பாதங்கள்*
வாழியென்நெஞ்சே மறவாதுவாழ்கண்டாய். (8)

ஒ.—எட்டாம்பாட்டில், "அவனையநுபவி" என்றவாறே ப்ரீதமான நெஞ்சைக்கொண்டாடி, 'நெஞ்சே! அவனைவிடாதே அநுபவி' என்கிறார். [ஆழியான் என்றுதொடங்கி] - திருவாழிதொடக்கமான நித்யாச்ரிதரை யுடையனும், அவர்களிற்காட்டிலும் ஸ்வரூபகுணங்களால் விஸஜாதீயனும், காலசேஷமான ப்ரளயகாலத்திலும் உளனுய்க் காலோபலக்ஷித ஸகலபதார்த்தங்களையும் படைப்பதுஞ்செய்து, தன்னாலே ஸ்ருஷ்டமான ஜகத்திலுள்ளேவந்து திருவவதாரம்பண்ணி பசுமேய்ப்பதும் செய்து, அவற்றுக்கு வந்த ஆபத்தை நீக்குகைக்காக, ஜகத்துக்கெல்லாம் ஒதுங்க இடம்போரும்படியான அழகிய தோள்களாலே கோவர்த்தநோத்தரணம் பண்ணுவதுஞ் செய்தவனுடைய திருவடிகளை.

இ.—எட்டாம்பாட்டில், "அவனை அநுபவி" என்றவாறே உகந்த நெஞ்சைக்கொண்டாடி, 'அவனை இடைவிடாதே அநுபவி' என்கிறார். [ஆழியான்] - ஸர்வேச்வரத்வ ஸூசகமான திருவாழியைக் கையிலேயுடையவன். [ஆழியமரர்க்கும் அப்பாலான்] - கம்பீரஸ்வபாவரான நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனானவன். [ஊழியான்] காலசேஷமான ப்ரளயகாலத்தில் தான் ஒருவனுமேயுளனாய். [ஊழிபடைத்தான்] - காலோபலக்ஷித ஸகலபதார்த்தங்களையும் "பஹுஸ்யாம்" என்றுசொன்ன ஸங்கல்பத்தாலே உண்டாக்குமவன். [நிரைமேய்த்தான்] - தன்னாலே ஸ்ருஷ்டமான பதார்த்தங்களிலே ஒருபதார்த்தத்துக்கு சேஷமாய் அவதரித்து, ரக்ஷகாபேக்ஷையுடைத்தான பசுக்களை ரக்ஷிக்குமவன். அப்பசுக்களுக்கும்

இடையர்க்கும் இந்த்ரனால்வந்த ஆபத்திலே மலையையெடுத்து ரக்ஷிக்குமவன். பாழி என்று - வலியாதல், இடமுடைமையாதல் தோளின்நிழலிலே ஒதுங்கினால் ஒருகலையத்துக்குள்ளே யிருப்பாரைப்போலே பயங்கெடுத்த தோளென்னுதல்; லோகமடங்க ஒதுங்கினாலும் விஞ்சியிருக்கும் தோளென்னுதல்; "பாஹுச்சாயாமவஷ்டப்த:". [அந்தோள்] - ரக்ஷகமாகையன்றிக்கே, "மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா" என்று மங்களாசாஸநம் பண்ணவேண்டியிருக்கை. [பாதங்கள்] - ஆபத்ஸகனுடைய திருவடிகளை. [வாழி] - மேற்சொல்லப்புகுகிற கார்யத்தை நினைத்து, "ஆயுஷ்மந்" என்னுமா போலே, உனக்குஇது நித்யமாய்ச் செல்லவேணுமென்கிறார். [என்நெஞ்சே] - புறம்புள்ளாரைச் சுமை யெடுத்துத் தன்வழியே கொடுபோகாநிற்க, முறையிலே நின்று என்வழியே நின்ற நெஞ்சே! நாட்டார்க்கு பந்தகமாகாநிற்க எனக்கு மோக்ஷஹேதுவான நெஞ்சே! [மறவாது] - இதரவிஷயங்களிற்போலன்றியே, விஸ்மரிக்கை ஸ்வரூபநாச மென்னும்படியான விஷயங்கிடாய். "ஸா ஹாநி:" என்னக்கடவதிறே. [வாழ்கண்டாய்] - உன்பேற்றுக்கிறே நான் கால்பிடிக்கிறது.

ஈடு.—எட்டாம்பாட்டு. "அவனை அநுபவி" என்றவாறே உகந்த நெஞ்சைக்கொண்டாடி, 'அவனை இடைவிடாதே அநுபவி' என்கிறார்.

[ஆழியான்] - ஸர்வேச்வரத்வ ஸூசகமான திருவாழியைக் கையிலேயுடையவன். [ஆழி இத்யாதி] - அத்திருவாழியாழ்வானோபாதி, கம்பீரஸ்வபாவரான நித்யஸூரிகளுடைய ஸ்வரூப ஸ்த்தித்யாதிகள் ஸ்வாதீநமாம்படி யிருக்குமவன். [ஊழியான்] - நித்யஸூரிகளும் தானுமாய்ப் பரமபதத்திலே பேரோலக்கமாக விருக்குமவன், இங்கு உண்டான கார்யவர்க்கமடங்கலும் அழிந்து காலசேஷமான காலத்திலே தான்வந்து தோற்றுமவன். [ஊழிபடைத்தான்] - காலோபலக்ஷிதமான ஸகலபதார்த்தங்களையும் *"பஹு ஸ்யாம்* என்கிற ஸங்கல்பத்தாலே யுண்டாக்கினவன். [நிரைமேய்த்தான்] - இப்படி ஸகல பதார்த்தங்களையும் தான் படைத்து, "தன்னை வேறே சிலர்படைத்தார்கள்" என்னலாம்படிவந்து அவதரித்து, பசுக்களை ரக்ஷிக்குமவன். ஸ்வரக்ஷணத்தில்அந்வயமின்றிக்கே, பண்ணும் ரக்ஷணத்தைவிலக்காத பசுக்களை ரக்ஷித்தவன். [பாழியந்தோளால்] - இவன்இப்படி இவற்றை நோக்காநிற்க, இந்த்ரன் பசிக்ராஹத்தாலே இவை நோவுபடும்படியாகக் கல்வர்ஷத்தை வர்ஷிக்க, அத்தை மலையையெடுத்து நோக்குமவன். பாழியென்று - வலியாதல், இடமுடைமையாதல். புறம்பெங்கும் வர்ஷத்திலே நோவுபடாநிற்க, இவன்தோள்நிழலிலே ஒதுங்ினவர்களுக்கு மதிளுக்குள்ளே யிருப்பாரைப் போலே பயங்கெட்டிருக்கலாம்படியான வலியைச் சொல்லுதல்; அன்றிக்கே, பஞ்சலக்ஷம் குடியிலுள்ளாரும் இத்தோள்நிழலிலே ஒதுங்கினாலும் திருவாய்ப்பாடியளவன்றிக்கே இன்னமும் பத்துத்திருவாய்ப்பாடிக்கு இடம்போருமென்னும்படியான ரக்ஷகத்வத் துடிப்புஇருக்கும்படியைச் சொல்லிற்றாதல்; *பாஹுச்சாயாமவஷ்டப்தோ யஸ்ய லோகோ மஹாத்மந:* என்கிறபடியே - ஒதுங்கினவர்கள்சுருங்கி நிழலேவிஞ்சியிருக்குமாய்த்து. [அந்தோள்] - அழகிய தோள். "திண்டோள்மணிவண்ணா உன்சேவடிசெவ்விதிருக்காப்பு" என்று மங்களாசாஸநம் பண்ணும்படியாய்த்துத் தோளழகிருப்பது; "சுந்தரத்தோ"ளிறே. [பாதங்கள்] - கோவர்த்தநகிரியையெடுத்துப் பரிஹரித்தவனுடைய திருவடிகளை. [வாழி] - நடுவே மங்களாசாஸநம்பண்ணுகிறார் நெஞ்சை; மேல் சொல்லப் புகுகிற அர்த்தத்தை புத்திபண்ணுகைக்காக. *யாமோக்ஷதிமிவாயுஷ்மந்* என்னுமாபோலே, உனக்கு இஸ்ஸம்ருத்திமாறாதே சென்றிடுக வென்கிறார். [என்னெஞ்சே] - புறம்பெங்கும் ஆத்மாவுக்கு சேஷமான மநஸ்ஸூத் தான் சுமையெடுத்தாநிற்க, என்வழியிலே போந்து முறையிலே நிற்கிற நெஞ்சே! ஆத்மாவுக்குக் கரணகோடியிலே யந்வயித்த நெஞ்சுதானே பந்தஹேதுவாகா நின்றதிறே புறம்புள்ளார்க்கு. இங்ஙனன்றிக்கே, என்வழியே போந்து எனக்கு மோக்ஷஹேதுவான நெஞ்சே! [மறவாது] - கைபுகுந்ததென்று இதரவிஷயங்களிலே செய்வுற்றைச் செய்யாதேகிடாய். [வாழ்கண்டாய்] - உன்னுடைய வாழ்ச்சிக்கு நான் கால்பிடிக்க வேண்டுகிறதென்? பால்குடிக்கக் கால்பிடிக்கிறேனிறே. மறவாது வாழ்கண்டாயென்கையாகிலுள்ளது, கீழ்ச்சொன்ன விசேஷணங்களுக்கு ப்ரயோஜநமென்னென்னில்;— புறம்புபோய் மணலைமுக்கவொண்ணாதே! ரக்ஷகனாகவல்லவனைப் பற்றவேணுமே. ரக்ஷணத்துக்குப் பரிகரமுடையவன் ரக்ஷகனாகவேணும்; நிரபேக்ஷருடைய ஸ்வரூபஸ்த்தித்யாதி

களுக்கும் நிர்வாஹகனானவன் ரக்ஷகனாகவேணும்; ஒருக்காலுமானவது இலனுவதாகாமிற்கிற வனுக்கு என்றுமுளனானவன் ரக்ஷகனாகவேணும்; இவையில்லாதவன்று உண்டாக்கினவன் ரக்ஷகனாகவேணும்; உண்டானவன்று ரக்ஷகனைக்கு ஸ்வரக்ஷணத்தில் குறைபயின்றவற்றை யும் சோக்குமவன் ரக்ஷகனாகவேணும்; இருந்தபடியாமாகில் மறந்துகாண்!

கண்டேன் கமலமலர்ப்பாதம்*காண்டலுமே
விண்டேயொழிந்த வினையாயினவெல்லாம்*
தொண்டேசெய்துஎன்றும் தொழுதுவழியொழுக*
பண்டேபரமன் பணித்தபணிவகையே. (9)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், ஜந்மாந்தர ஸஹஸ்ர க்ருத தபோஜ்ஞாநாதிகளால் ஸாத்யமான பக்தி யோகத்தாலே லப்யனான எம்பெருமானை, நான் கேவலம் அவன்ப்ரஸாதத்தாலே காணப்பெற்றே னென்று, ஸ்வலாபத்தைப் பேசுகிறார். [கண்டேன் என்றுதொடங்கி] - எம்பெருமான்திருவடிகளைக் கண்டேன்; கண்டபோதே, என்னுடைய ஸகலது:க்கங்களும் நீங்கிற்றின. [தொண்டேசெய்து என்று மேலுக்கு] - நித்யகைங்கர்யம் பண்ணும்படியாகப் பண்டே ஸர்வேச்வரன் அருளிச்செய்தபடியே. அவன் ப்ரஸாதத்தாலே, முதற்பாட்டில், பக்தியோகம் ஸ்வஸாத்யத்தோடே ஸந்தித்தபடியை ஸாக்ஷாத்கரித் தருளிச்செய்தார்; இப்பாட்டில், தம்முடைய உபாயமான ப்ரபத்தி தனக்குஸாத்யமானதிருவடிகளோடே ஸந்தித்தமையை அநுஸந்தித்தருளிச் செய்கிறார்.

இ.—ஒன்பதாம்பாட்டில், "ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு" என்கிறபடியே அநேககால ஸாத்யமான பக்தியாலே லபிக்கப்படுமவனை அவன்ப்ரஸாதத்தாலே காணப் பெற்றேன் என்கிறார். [கண்டேன்] - என்றும் கேட்டேபோம்விஷயத்தை ஸாக்ஷாத்கரிக்கப்பெற்றேன். [கமலமலர்ப்பாதம்] - ப்ராப்தியொழியவே ஜ்ஞாநலாபமே அமையும்படியான போக்யவிஷயமென்கிறது. [காண்டலும் இத்யாதி] - கண்ட போதே, வினையென்று பேர்பெற்றவையெல்லாம் விட்டுப்போய்த்து. "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்னுமவனடியாக வந்ததாகையாலே தட்டில்லையிறே. [தொண்டேசெய்து] - பரபக்த்யாதிகளையுடையனாய். [என்றும்தொழுது வழியொழுக] - நித்யகைங்கர்யத்தைப் பண்ணி அதுவே யாத்ரையாய்ச் செல்லும்படி. [பண்டே இத்யாதி] - நமக்காக இன்றன்றிக்கே ஸர்வாதிகன் ஸர்வஸாதாரணமாக அன்று அருளிச் செய்த பாசுரத்தின்படியே. "மாமேகம் சரணம் வ்ரஜ—ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்றிறே பாசுரம்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. *ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு* என்கிறபடியே அநேககால ஸாத்யமான பக்தியாலே லபிக்கப்படுமவனை கேவலம் அவன்ப்ரஸாதத்தாலே காணப்பெற்றே னென்கிறார். இப்பாட்டிற்சொல்லுகிற ப்ரபத்தியோடு விகல்பிக்கலாம்படியிருக்கிற பக்தியைச் சொல்லிக்கொண்டு போந்தார் கீழ், அதுக்கும்அடி அவனுகையாலே சொல்லுகிறாராதல், ஸ்வயம் நிரபேக்ஷமானது தன்னையே சொல்லுகிறாராதல், தாம் பெற்றவழியே சொல்லுகிறு ராதல்.

[கண்டேன்] - என்றும் கேட்டேபோகக்கடவ விஷயத்தைக் கண்ணாலே காணப் பெற்றேன். தம்முடைய ப்ரபத்தி ஸ்வஸாத்யத்தோடே பொருந்தினபடியை-ஸாக்ஷாத்கரிக்கப் பெற்றபடியைச் சொல்லுகிறார். இத்தால் - ப்ரத்யக்ஷஸமாநாகாரமான ஜ்ஞாநஸாக்ஷாத் காரத்தைச் சொன்னபடியிறே. [கமலமலர்ப்பாதம்] - ப்ராப்தியை யொழியவே ஜ்ஞாநலாபமே யமையும்படியாய்த்து போக்யதையிருக்கும்படி. [காண்டலுமே] - கண்டவளவிலே. [விண்டே யொழிந்த வினையாயினவெல்லாம்] - *ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி* என்று அவனடியாக வருகிறதிறே. வினையாயினவடங்கலும், "இவர் கேவலரல்லர், அடியுடையராயிருந்தார்" என்று விட்டுப்போய்த்தின. [தொண்டேஇத்யாதி] - அச்சலோகத்துக்கு இதுவும் கருத்தென் கிறார் இவர். ஔபாதிகமானது போகக்கடவதே; உபாயத்துக்கு ப்பலப்ரதத்வமுண்டே. "இனி

ஸ்வரூபம் நிலைநின்றதாயிருக்குமிறே, ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியும் நித்யமாயிருக்குமிறே'' என்று அங்கு அர்த்தப்ராப்தமானதுதன்னையே இங்கே வாய்விடுகிறார். [தொண்டேசெய்தென்றும் தொழுதுவழியொழுக] - ஸ்வரூபம் நித்யமானபின்பு ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியும் நித்யமாய்ச் செல்லும்படியாக. [பண்டேபரமன்பணித்த பணிவகையே - கண்டேன்கமலமலர்ப்பாதம்] - அவன் *மாமேகம் சரணம் வ்ரஜ* என்கிறபடியாலே நான் அவன்திருவடிகளைக் காணப்பெற்றேன்.

வகையால்மனமொன்றி மாதவனை*நாளும்
புகையால்விளக்கால் புதுமலரால்நீரால்*
திசைதோறமரர்கள் சென்றிறைஞ்சநின்ற*
தகையான்சரணம் தமர்கட்கோர்பற்றே. (10)

ஓ.—பத்தாம்பாட்டில், ப்ரயோஜநாந்தரபரர்க்குங்கூட ஸமாச்ரயணீயனும் அவர்களுடைய அபிலஷிதப்ரதனுமான ஸர்வேச்வரன்திருவடிகள், அநந்யப்ரயோஜநரான பக்திமான்களுக்கும் ப்ரபந்நர்க்கும் நல்ல அபாச்ரயமென்னுமிடம் நிச்சிதமென்றுகொண்டு, ப்ரஸ்துதமான பக்தியோகத்தை நிகமிக்கிறார். [வகையால் மனமொன்றி] - சாஸ்த்ரத்தில் சொல்லுகிறவழியாலே ஏகாக்ரசித்தராய். [மாதவனை என்று தொடங்கி] - ச்ரிய:பதியாகையாலே ஸ்வாராதனான தன்னை புஷ்பாதி ஸமாராதநோபகரணங்களைக் கொண்டு திக்குக்கள்தோறும் வந்து ப்ரயோஜநாந்தரபரரான தேவர்கள் நாள்தோறும் ஸமாச்ரயிக்கலாம்படி நின்ற ஸ்வபாவத்தை யுடையவனுடைய திருவடிகள்.

இ.—பத்தாம்பாட்டில், ப்ரயோஜநாந்தரபரரோடு ஸாதநாந்தரநிஷ்டரோடு ப்ரபந்நரோடு வாசியற அவனே அபாச்ரயமென்று உக்தத்தை நிகமிக்கிறார். [வகையால் இத்யாதி] - சாஸ்த்ரங்களிற் சொல்லுகிற வழிதப்பாமே ஏகாக்ரசித்தராய், ச்ரிய:பதியாகையாலே ஸ்வாராதனானவனை. இவன் செய்ததுகொண்டு த்ருப்தனும்படி பண்ணுவாருண்டென்னுதல்; இவன்செய்தது கொண்டு குறை நிரம்பவேண்டும் அபூர்ணனல்லன் என்னுதல். [நாளும்] - ஆச்ரயணத்துக்குக் காலநியதியில்லை யென்கிறது. ஆராதநோபகரணங்களுக்கும் நியதியில்லை, ஸம்பவித்தபடியே அமையுமென்கை. [திசை இத்யாதி] - ஸர்வதோதிக்கமாக ப்ரஹ்மாதிகள் கிட்டி ஆச்ரயிக்கலாம்படி நிற்கிற ஸ்வபாவத்தையுடையவனுடைய திருவடிகள். [தமர்கட்கு ஓர்பற்றே] - அநந்ய ப்ரயோஜநர்க்கு அத்விதீயமான அபாச்ரயம். பக்திமான்களுக்கு ப்பலப்ரதனாய் உபாயமாயிருக்கும்; தன்னையே பற்றினார்க்கு அவ்யவஹிதோபாயமாம்.

ஈடு.—பத்தாம்பாட்டு. ப்ரயோஜநாந்தரபரரோடு ஸாதநாந்தரபரரோடு ப்ரபந்நரோடு வாசியற அவனே உபாயமென்று உக்தத்தை நிகமிக்கிறார்.

[வகையால் மனமொன்றி] - சாஸ்த்ரங்களிற் சொல்லுகிற வழியே நெஞ்சு ஒருமைப்பட்டு. [மாதவனை]-வித்யதிக்ரமத்துக்கும் அகவுநாநத்துக்கும் அஞ்சவேண்டா; லோகாபவாத பரிஹாரார்த்தமாக இவன்செய்தவை என்னுவது, அதுக்கும் ப்பலம் இவனைவந்து விட்டாது, 'இவன் வழிபோராமையும் நெஞ்சுஒருமைப்படாமையும் இவள்தலையிலே ஏறட்டுக் கைவிடக் கடவதோ?'' என்பாரும் அருகேஉண்டு. இத்தால் - அந்தச்லோகத்திலே லக்ஷ்மீஸம்பந்தமும் சொல்லிற்றாய்த்து. ஸ்வரூபாநுபந்தி தர்மங்கள் சொல்லவுமாம், சொல்லாதொழியவுமாமிறே; ஆகையிறே, த்வயத்திலே பிரிய அநுஸந்திக்கவுமாய் திருமந்த்ரத்தில் ஒன்றாக அநுஸந்திக்கவுமாயிருக்கிறது. *அந்தர்க்கதகுணமேவ தேவதாம் பஜதே* என்று சொல்லாநின்றதிறே; அந்த தேவதாஸ்வரூபந்தன்னிலே அபஹதபாப்மத்வாதி குணங்களையும் சொல்லுகையாலே. [நாளும்இத்யாதி] - காலநியதியின்றிக்கே, ஆராதநோபகரணங்களுக்கும் நியதியின்றிக்கே, தங்களுக்குக் கைவந்த உபகரணங்களைக்கொண்டு, பெரியதிருநாளைக்கு ஸர்வதோதிக்கமாக வந்தேறுமாபோலே ப்ரஹ்மாதிகள் வந்து ஆச்ரயிக்கும்படியான ஸ்வபாவத்தை யுடையவ

னுடைய திருவடிகள்; தன் திருவடிகளைப் பற்றினார்க்கு, பின்னையும் புறம்புபோய் ஒருபற்றுத் தேடவேண்டாதபடியான பற்று. அநந்யப்ரயோஜநரான பக்திமான்களுக்கும், ஃபலப்ரதனாய் உபாயமாயிருக்கும்; தன்னையே பற்றினார்க்கு அவ்யவஹிதோபாயமாம்.

பற்றென்றுபற்றிப் பரமபரம்பரனை*
மல்திண்டோள்மாலை வழுதிவளநாடன்*
சொல்தொடையந்தாதி ஓராயிரத்துளிப்பத்தும்*
கற்றார்க்கோர்பற்றாகும் கண்ணன்கழலிணையே. (11)

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியைக் கற்றார்க்கு க்ருஷ்ணனுடைய திருவடிகள் ஸுலபமாமென்கிறார். [பற்றென்று தொடங்கி] - ஸர்வேச்வரனாய், பலத்தையுடைத்தாய்த் திண்ணியதான தோள்களையுடையனாய், ஆச்ரிதர்பக்கல் வ்யாமுக்தனானவனைப் பரமப்ராப்யமென்று பற்றி. [வழுதிவள நாடன் என்று மேலுக்கு] - ஆழ்வாருடைய சொல்லாய் அழகிய தொடையையுடைத்தாய் அந்தாதியான ஆயிரந்திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழி கற்றார்க்கு.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழிகற்றார்க்கு க்ருஷ்ணனுடைய திருவடிகள் ஸுலபமாமென்கிறார். [பரமபரம்பரனை மல்திண்தோள் மாலை - பற்றென்றுபற்றி] - ஸர்வாதிகனாய், விரோதி போக்குகைக்கு ஈடான தோள்மிடுக்கையுடையனாய், ஆச்ரிதர்பக்கல் வ்யாமுக்தனானவனை, பரமப்ராப்யமென்று பற்றி. [வழுதிவளநாடன் இத்யாதி] - ஆழ்வாருடைய சொல்லாய், அழகிய தொடையையுடைத்தாய், அந்தாதியான ஆயிரந்திருவாய்மொழியிலும் வைத்துக்கொண்டு இப்பத்தைக் கற்றார்க்கு, க்ருஷ்ணனுடைய திருவடிகள் ப்ராப்யமாம். "தாமோதரன் தாள்கள் - சார்வு" என்று ஆழ்வார் அறுதியிட்டபேற்றைக் கொடுக்கும்.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழிகற்றார்க்கு க்ருஷ்ணனுடைய திருவடிகள் ஸுலபமாமென்கிறார்.

[பற்றென்றுபற்றிப் பரமபரம்பரனை] - ஸர்வேச்வரனை ப்ராப்யப்ராபகமென்று பற்றி. [மல்திண்தோள்மாலை] - இவன் ப்ரபத்திபண்ணி அநுபவிக்குமத்தனையே வேண்டுவது; ரக்ஷணத்தில் அவன்பக்கல் ஒருகுறையுமில்லை; இவர்கள்விரோதிகளைப் போக்குகைக்கீடான மிடுக்கையும் வ்யாமோஹத்தையும் உடையவனென்கிறது. [வழுதி இத்யாதி] - *பாட்யேகேயே ச மதுரம் ப்ரமாணைஸ்த்ரிபிரந்விதம்* என்கிறபடியே, அழகியசொற்களாலே தொடுக்கப்பட்ட அந்தாதியான ஆயிரத்திலும்வைத்துக்கொண்டு இந்தப்பத்தும் கற்றார்க்கு. [கண்ணன் கழலிணை - ஓர்பற்றாகும்] - "தாமோதரன்தாள்கள் - தமெக்கு - சார்வே" என்றபடியே க்ருஷ்ணன் திருவடிகளே, இனி அவ்வருகுபோய் ஒன்று தேடிப் பற்றவேண்டாதபடியான பற்றாகும்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஐந்தாந் திருவாய்மொழி—கண்ணன்கழலிணை : ப்ரவேசம்

ஒ.—அஞ்சாந்திருவாய்மொழியில், பக்தியோகத்தை நியமித்தபின்பு, பக்தியோகப்ரகாரம் எங்ஙனே என்றறியவேணுமென்றிருப்பார் இழக்கவொண்ணாதென்று பார்த்தருளி, அதுக்கு ஆலம்பநமான திருநாமத்தை யுபதேசித்து, "இத்தை அநுஸந்தித்து அதில்சொல்லுகிறபடியே மநோவாக்காயங்களை ச்ரிய:பதிபக்கலிலே ப்ரவணமாக்கி ப்ரீதிபூர்வகமாக புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டு நிரந்தர ஸமாராதநம்பண்ண அதுக்குஉண்டான விக்நங்களெல்லாம் தானேபோக்கியருளி இவனையிட்டு ஆராதிப்பித்துக் கொள்ளும்" என்று கீழ் பலவிடத்திலும் ப்ரஸ்துதமான பக்தியோக ஸ்வரூபத்தை யருளிச்செய்து, எம்பெருமான் தம்மைத் திருநாட்டுக்குக் கொடுபோக முடுகுகிறமையை அநுஸந்தித்து, "பின்னை அவஸரமில்லை" என்று இத்தோடே பரோபதேசத்தைத் தலைக்கட்டுகிறார்.

இ.—அஞ்சாந் திருவாய்மொழியில், பக்தியானது ஸ்வஸாத்யத்தோடே பொருந்தினபடியை அருளிச்செய்தார் - கீழ்; பக்தியோகப்ரகாரம் எங்ஙனேயிருக்கும்படி என்று அறியவேணுமென்றிருப்பார் இழக்கவொண்ணாதே என்று பார்த்தருளி பக்திக்கு ஆலம்பநமான திருமந்த்ரத்தை உபதேசித்து இதினுடைய அர்த்தாநுஸந்தாநமே மோக்ஷஹேதுவென்று, "அதடியாக மநோவாக்காயங்களை ப்ரவணமாக்கி புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டு ஆராதியுங்கோள்! ச்ரியபதியாகையாலே ஸ்வாராதன், நீங்கள்இதிலே இழிய விரோதிவர்க்கம் தானேபோம், இப்படி தன்னோடு பரிமாறுவார்க்கு ஸுலபனும், அதில் இழியுமிடத்து அதிகாரம் ஸம்பாதிக்கவேண்டா, ருசியே அமையும்" என்று உபதேசிக்கையிலே ஒருப்பட்டு, ஈச்வரன் தம்மைப் பரமபதத்திலே கொடுபோகையிலே முடுகுகிறபடியாலும் உபதேசிக்கிற இவர்களுக்கு ப்ரதிபத்திவிஷயமாகவும் பாசுரம் சுருக்கக்கொண்டு உபதேசித்து, இத்தோடே பரோபதேசத்தைத் தலைக்கட்டுகிறார்.

ஈடு—பக்தியானது ஸ்வஸாத்யத்தோடே பொருந்தினபடியைச் சொன்னார்-கீழ்; அத்தனைக்ரமம் பொறுக்கமாட்டாதே ஈச்வரன் தம்மைக்கொடுபோகையிலே த்வரிக்கிறபடியைக் கண்டு; அநாதிமாநது-"மரணமானால்" என்றது அவனுக்கு நெடுநாளாய், அவ்வளவும்பொறுக்க மாட்டாதே அவன் கொடுபோகையிலே த்வரிக்க அத்தையநுஸந்தித்து; "நமக்குப்போக்குத் தவிராதபின்பு இனி இவர்கள்தங்களுக்கு பக்திமான்களுடையபரிமாற்றமிருக்கும்படியும் அறியவேண்டுவதொன்றுகையாலே அத்தையுபதேசிப்போம்" என்றுபார்த்தார். இவர்தாம் எம்பெருமானுமோபாதியும் க்ருபையுடையவர் காணும். "இதுதான் ஒன்று இவர்களுக்குக் குறைகிடந்ததாகிறதென்?" என்று அது இருக்கும்படியை யுபதேசிப்போமென்றுபார்த்துப் பரோபதேசத்திலே ஒருப்பட்டு, அவன் தம்மைப் பரமபதத்திலே கொடுபோவதாக த்வரிக்கிறபடியாலும் "கேட்கிற இவர்களுக்கு ப்ரதிபத்திக்கு விஷயமாகவேணும்" என்னுமத்தாலும் பாசுரப்பரப்பறும்படி சுருங்கக் கொண்டு; அர்த்தபக்திக்கு ஆலம்பநமான திருநாமத்தைச் சொல்லி, இதிலிழிவார்க்கு அநுஸந்திக்கப்படும் மந்த்ரம் இன்னதென்றும், அதில் அர்த்தாநுஸந்தாநமே மோக்ஷஸாதநமென்றும், அவ்வழியாலே பக்தியைப்பண்ணுங்கோளென்றும் கரணத்ரயத்தாலும் அவனை ஆச்ரயியுங்கோளென்றும், இப்படி ஆச்ரயிப்பார்க்கு அவன்தான் ஸுலபனென்றும், ச்ரிய:பதியாகையாலே ஸ்வாராதனென்றும், இவனையிடுவித்து ஆச்ரயிப்பித்து இதுதன்னையே அவன்திருவுள்ளத்திலேபடுத்திக் குவாலாக்குவாரும் அருகேயுண்டென்றும், 'ஆச்ரயிக்குமிடத்தில் அதிகாரிஸம்பத்திவேண்டா, ருசியுடையாரெல்லாரும் இதுக்கதிகாரிகள்,' என்றும், 'புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டு ஆச்ரயியுங்கோள்' என்றும் இதிலே யிழிய விரோதிகள் தன்னடையேபோமென்றும், இப்புடைகளிலேசொல்லி, நாம் இன்னமும் சிலநாள் இங்கேயிருக்கிறோமன்றிக்கே போக்குஅணித்தானபின்பு எல்லாரும் இத்தைக் கொள்ளுங்கோளென்று உபதேசித்து, அத்தோடே, தொடங்கின பரோபதேசத்தைத் தலைக்கட்டுகிறார்.

கண்ணன் கழலிணை* நண்ணும்மனமுடையீர்*
எண்ணும்திருநாமம்* திண்ணம்நாரணமே. (1)

ஒ.—முதற்பாட்டில், கண்ணன்கழலிணை - க்ருஷ்ணன் திருவடிகளிலே சேருகைக்கு இச்சையுடைய நீங்கள் அநுஸந்திக்கும் திருநாமம் நாரணன் என்னுமிதுவே; இது நிச்சிதம். மந்த்ரமென்னாதே, நாமமென்றது - நியமங்கள் வேண்டாவென்னுமிடத்தை ஸூசிக்கிறது. நாரணன் என்கிற பதத்தில் சதுர்த்தியையும் நமஸ்ஸையும்தவிர்ந்து இல்லாத மகாரத்தைக் கூட்டிக்கொள்ளுகையாலே புறம்பில் மந்த்ரங்களில் தப்பானவை இம்மந்த்ரத்தின் ப்ரபாவத்தாலே தப்பாகாது என்று கருத்து.

இ.—முதற்பாட்டில், பக்தியுக்தராய்க்கொண்டு அவனை அநுஸந்திப்பார்க்கு ஆலம்பநமான திருமந்த்ரம் இன்னதென்கிறது. [கண்ணன் கழலிணை] - விப்ரக்ருஷ்டமான பரமபதத்திலே யிருக்கையன்றியே இங்கேவந்து அவதரித்து, அதிலும் அதிகாரம் ஆராய்கைக்கு வஸிஷ்டாதிகளும் வாசல் காப்பாருமின்றிக்கேயிருக்கிற ஸர்வஸுலபனான க்ருஷ்ணன்திருவடிகளை. [கழலிணை] - தூதுபோதல் ஸாரத்யம் பண்ணுதல் செய்யும் திருவடிகளை. நண்ணுகை - கிட்டுகை. பிரிந்துபோந்து கிட்டினாரைப் போலே போக்யவஸ்துவா யிருக்கிறபடி. [நண்ணும் மனமுடையீர்] - "நிதியுடையவர்கள்" என்னுமா போலே, இச்சைதானே குவாலாயிருக்கிறபடி. இதுக்கு ஓர் அதிகாரம் ஸம்பாதிக்கவேண்டா, இச்சையே வேண்டுவது. விலக்ஷண புருஷார்த்தமாயிருக்க ருசிமாத்ரமே அமையுமாகிறது; இதுக்கு ஸத்ருசமான அதிகாரம் ஸம்பாதிக்க வொண்ணாமையாலும், ப்ராப்தவிஷயமாகையாலே அதிகாராபேக்ஷையில்லாமையாலும். 'கழலிணை' என்று "தாமோதரன் தாள்கள் - சார்வே" என்றத்தை அநுபாஷிக்கிறார். [எண்ணும் திருநாமம்] - எப்போதும் அநுஸந்திக்கும் திருநாமம். மந்த்ரமென்னாதே, திருநாமமென்கிறது - அதிகாரி நியதியாதல் அங்கநியதியாதல் வேண்டா வென்கைக்காக. மாத்ரு நாமக்ரஹணத்துக்கு அதிகாரமும் வேண்டாதே ஸரஸமுமாயிருப்பது. அதுதான் ஏதென்னில்? — [நாரணமே] - அவதாரணத்தாலே இவ்வளவே பூர்ணமென்கை. ப்ரணவத்தையும், நமஸ்ஸையும், சதுர்த்தியையுமொழியப் பூர்ணமென்கை. "அங்கம் தப்பிற்று; ஸ்வரம்தப்பிற்று; நீ ப்ரஹ்மராக்ஷஸனாய்ப் பிற" என்னுமதில் வ்யாவ்ருத்தி சொல்லிற்று. [திண்ணம்] - பெறுகிற பேற்றின் கனத்துக்குப்போருமோ என்னவேண்டா; நிச்சிதம்; "ஸத்யம் ஸத்யம்".

ஈடு.—முதற்பாட்டு. பக்தியுக்தராய்க்கொண்டு அவனை யநுஸந்திப்பார்க்கு ஆலம்பநமான திருமந்த்ர மின்னதென்கிறார்.

[கண்ணன்கழலிணை நண்ணும்மனமுடையீர்] - கீழ்ச்சொன்னதுதன்னைத் திரிய ஒருக்கால் அநுபாஷிக்கிறார். இவர்களுக்குக்கேட்கவேண்டுவத்தைச் சொல்லுகைக்கு உறுப்பாக. "சார்வேதவநெறிக்குத் தாமோதரன் தாள்கள்" என்றாரே; அதுதன்னையிங்கே 'கண்ணன் கழலிணை' என்கிறார். க்ருஷ்ணன் திருவடிகளைக் கிட்டவேணுமென்றிருப்பீர். [கண்ணன் கழலிணை] - பரமபதத்திலேசென்று காணவேண்டும்படியிருக்கையன்றிக்கே, ஸர்வஸுலபனானவன் திருவடிகளை. ஆச்ரிதர்க்காகத் தூதுபோதல் ஸாரத்யம் பண்ணுதல் செய்யும் திருவடிகள். [நண்ணும்] - பிரிந்துகூடினாரைப் போலே யிருக்கிறதுகாணும்; *ஆஜகாம* போலே. [மனமுடையீர்] - "நிதியுடையீர்" என்னுமாபோலே, இதுதன்னையே குவாலாக நினைத்திருக்கிறார். இதுக்கு அதிகாரிஸம்பத்தி தேடவேண்டா, ருசியுடையாரெல்லாரும் அதிகாரிகள். ஸ்வர்க்கபலமானதுக்கு அதிகாரிநியதியும் ப்ராயச்சித்தமும் வேண்டாநின்றது; அபுநராவ்ருத்திலக்ஷண மோக்ஷத்துக்கு அதுவேண்டாதொழிகிறது - ப்ராப்யத்துக்கநுரூபமான அதிகாரம் இவனால் ஸம்பாதிக்கமுடியாமையாலே. [எண்ணும்திருநாமம்] - அநுஸந்திக்கப்படும் திருநாமமென்னுதல், பக்திமான்களைச்சொல்லுகையாலே அதுதான் "அது, அது" என்னும்படியாயிருக்கையாலே சொல்லுதல். எண்ணும்திருமந்த்ரமென்னாதே, நாமமென்கிறது—இதுக்குஅதிகாரிநியதி, அங்கநியதிவேண்டா; ப்ரஜை தாய்பேரைச்சொல்லுமோபாதி

யமையுமென்கைக்காக. அதுதானெது? என்னில், - [நாரணம்] - இதுதான் ஸ்வாமிவாசகமா யிருக்கையாலே, 'அம்மே!' என்பாரைப்போலே யிருக்கிறதாய்த்து. இதுவும் இன்ன மெதுவும் வேணுமென்றால் [நாரணமே] - இவ்வளவேயமையும். ஊனத்தபேற்றுக்கு இவ்வளவுபோருமோ? என்னில், - [திண்ணம்] - நிச்சிதம். *ஸத்யம்ஸத்யம்புநஸ்ஸத்ய முத்த்ருத்யபுஜ முச்யதே* என்னுமாபோலே, திண்ணமென்கிறது. அவதாரணத்தாலே - ப்ரணவத்தை யொழியவும் நமஸ்ஸையொழியவும் சதுர்த்தியையொழியவும் இவ்வளவேபூர்ணமென்கை. நாரணமென்று - இல்லாதமகாரத்தையும் கூட்டி உள்ளவற்றைக் குறைத்துச்சொல்லுகை யாலே, அளந்திற்பட்டதெல்லாம் உப்பாமாபோலே இத்தோடேகூடினதெல்லாம் உத்தேச்ய மென்றும், குறைந்தாலும் "அங்கம் தப்பிற்று, ஸ்வரம் தப்பிற்று" என்று ப்ரஹ்மரக்ஷஸ்ஸாய்ப் போகவேண்டுமவற்றிற் காட்டில் இதுக்கு உண்டானவாசி சொல்லுகிறதாய்த்து.

நாரணனெம்மான்* பாரணங்காளன்*
வாரணந்தொலைத்த* காரணன்தானே. (2)

ஒ.—இரண்டாம்பாட்டில், 'நாரணன் எம்மான்' என்று இப்பாட்டுக்கு, நாராயணனானவன், எனக்கு ஸ்வாமியுமாய், ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு நாயகனுமாய், ஆச்ரிதவிரோதி நிரஸநஸ்வபாவனும், ஸர்வகாரணமான க்ருஷ்ணன். 'எம்மான்' என்கிறது - ஸம்ஸாரவிபூதிக்கு உபலக்ஷணம்; 'பாரணங் காளன்' என்கிறது - நித்யவிபூதிக்கு உபலக்ஷணம்; 'வாரணம் தொலைத்த காரணன்' என்கிறது - திருவவதாரங்களுக்கு உபலக்ஷணம்.

இ.—இரண்டாம்பாட்டிலும், மூன்றாம்பாட்டிலும் இதினுடைய அர்த்தத்தைச் சொல்லுகிறது. இது ப்ரஸ்துதமான விடங்களில் அர்த்தத்தைச் சொல்லக்கடவதாயிருப்பதொரு நியதியுண்டிறே இவர்க்கு. [நாரணன்] - சப்தோபாதாநம். [எம்மான்] - எனக்கு ஸ்வாமியானவன். [பாரணங்காளன்] பூமிக்கு அபிமாநிநியான ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு நாயகனானவன். [வாரணம் இத்யாதி] - ஆச்ரிதவிரோதிநிரஸநஸ்வ பாவனும், ஸர்வகாரணமாயிருக்கிறான் க்ருஷ்ணன்தான். 'எம்மான்' என்கிறது - லீலாவிபூதியோ கத்துக்கு உபலக்ஷணம்; 'பாரணங்காளன்' என்று - நித்யவிபூதியோகத்துக்கு உபலக்ஷணம்; 'வாரணம் தொலைத்த' என்றவிடம் - அவதாரத்துக்கு உபலக்ஷணம்.

ஈடு.—இரண்டாம்பாட்டு. இரண்டாம்பாட்டிலும் மூன்றாம்பாட்டிலும் இதினுடைய அர்த்தத்தைச் சொல்லுகிறது. ஏதேனுமாகத் திருமந்த்ரம் ப்ரஸ்துதமானவாறே, முன்னே அர்த்தத்தைச் சொல்லிப் பின்பு வாசகசப்தத்தைச் சொல்லுதல், முன்னே இதுதன்னைச் சொல்லிப் பின்னை அர்த்தத்தைச்சொல்லுதல் செய்யக்கடவதா யிருப்பதொரு நிர்ப்பந்தமுண்டு இவர்க்கு. "எண் பெருக்கந்நலத்தொண்பொருளீறில - வண்புகழ்நாரணன்" என்னுதல், "யாவையும்யாவரும் தானமமைவுடைநாரணன்" என்னுதல்; "நாரணன்முழுவேழுலகுக்கும் நாதன்"; என்னுதல். "நாராயணன் நங்கள்பிரானவனே" என்று "அவனேயகல்ஞாலம் படைத் திடந்தான்".என்னுதல் செய்வர்.

[நாரணன்] - மேல் அர்த்தோபந்யாஸம் பண்ண நினைத்து, சப்தோபாதாநம் பண்ணு கிறார். [எம்மான்] - எனக்கு ஸ்வாமியானவன். [பாரணங்காளன்] - பாரணங்கு உண்டு - ஸ்ரீபூமிப்பிராட்டி, அவளுக்குநிர்வாஹகன். பூமிக்கபிமாநிநியிறே. 'பாரணங்காளன்' - என் கையாலே - நித்யவிபூதியோகம் சொல்லுகிறது; 'எம்மான்' என்றது - லீலாவிபூதிக்கு உபலக்ஷணம்: ஆக உபயவிபூதியுக்த னென்றபடி. குற்றஞ்செய்தது பொறுக்கைக்கொரு விபூதியும், பொறுப்பிக்கைக் கொருவிபூதியுமாய்த்து. *க்ருதாகஸ:* குற்றம் தலைநிரம்பிப் புறம்பு புகலில்லாதாரை ரக்ஷிக்கும் ஈச்வரன்; குற்றம் நிரம்பி அநுதாபமில்லாதாரைப் பொறுப்பிக்கும் பிராட்டி: "தலையறுக்கச்சொல்லுகிறதென்? கொடுக்கச்சொல்லுகிறதென்? நம்முடைய நிக்ரஹமாகில் அதுக்குமூலம் நிக்ரஹம் ப்பலிக்கும்படிபண்ணிப் பின்பு அநுக்ரஹத்தைப் பண்ணவேணுமோ?" என்றிருக்கும் ஸ்ரீபூமிப்பிராட்டி. [வாரணந்தொலைத்த] - தன்னைப்

பெறவேணு மென்றிருப்பாருடைய ஆச்ரயணவிரோதிகள், குவலயாபீடம்பட்டது படும். விரோதிநிரஸநம் இதுக்கு உறுப்போவென்னில், - முதலிலே தொடங்கி அதில் சொல்லிக் கொண்டு போருகிறது ரக்ஷணமிறே; அதுக்குக் களைபிடுங்கி நோக்கவேணுமே. *அவ-ரக்ஷணே* என்னக்கடவதிறே. [காரணன் தானே] - இவற்றினுடைய ஸ்வரூபஸ்திதி யாதிகள் ஸ்வாதீநமாக வுடையனாயிருக்கையும் அதுக்கு அர்த்தமிறே.

தானேயுலகெல்லாம்* தானேபடைத்திடந்து*
தானேயுண்டுமிழ்ந்து* தானேயாள்வானே. (3)

ஒ.—மூன்றாம்பாட்டில், [தானே உலகெல்லாம்] - எல்லாலோகங்களினுடைய ஸ்ருஷ்ட்யாதிகளும் தானேபண்ணி தானே அவற்றை ஆள்கையாலே அந்த லோகங்களாகிறான் தானே. ஆக, இரண்டாம்பாட்டிலும் மூன்றாம்பாட்டிலும் திருமந்த்ரார்த்தத்தைச் சொல்லிற்று.

இ.—மூன்றாம்பாட்டில், ஸ்வாமித்வப்ரயுக்தமான ஸர்வவித ரக்ஷணங்கள் பண்ணும்படி சொல்லுகிறது. [தானே உலகெல்லாம்] - ''ஸர்வம் க்கல்விதம் ப்ரஹ்ம'' என்கிறபடியே தான் என்கிற சொல்லுக்குள்ளே ஸர்வமும். ''தஜ்ஜலாநிதி'' என்று ஸாமாநாதிகரண்யத்துக்கு நிபந்தநம் சொன்னப் போலே, இங்கு ஸாமாநாதிகரண்யத்துக்கு ஹேதுசொல்லுகிறது மேல்:—[தானே படைத்து] - ''தம:.........ஏகீபவதி'' என்கிறபடியே ஸூக்ஷ்மசிதசித்சரீரனான தானே ஸர்வலோகங்களையும் உண்டாக்கி, அசிதவிசேஷிதமான தசையாகையாலே, அபேக்ஷிப்பாருமின்றிக்கேயிருக்க தயமானனாய்த் தானேயிறே ஸ்ருஷ்டித்தான். [தானே இடந்து] - ப்ரளயங்கதையான பூமி, ''என்னை உத்தரிப்பிக்கவேணும்'' என்னவன்றிறே நஷ்டோத்தரணம் பண்ணிற்று. [தானே உண்டு] - ப்ரளயம் வரப்புகாநின்றது என்று அறிவாரில்லையே. [உமிழ்ந்து] - ''புறப்படவிடவேணும்'' என்று அர்த்தியாதிருக்க, தானே உமிழ்ந்தபடி. ஸர்வப்ரகாரங்களாலும் ரக்ஷிக்கையாலே - தானே உலகெல்லாம்.

ஈடு.—மூன்றாம்பாட்டு, ஸ்வாமித்வ ப்ரயுக்தமான ஸர்வவிதரக்ஷணங்கள் பண்ணும்படி சொல்லுகிறது.

[தானேயுலகெல்லாம்] - *ஸர்வம் க்கல்விதம் ப்ரஹ்ம* *தத் த்வமஸி* என்னக்கடவதிறே. தானே படைத்திடந்து தானேயுண்டுமிழ்ந்து தானேயாள்வானாகையாலே, தானேயுலகெல்லாமென்கிறது; *தஜ்ஜலாந்* இதிவத். இங்குச்சொல்லுகிற தாதாத்ம்யம் ஸ்வரூபேண ஐக்யம் சொல்லுகிறதல்ல; சரீராத்மபாவத்தாலே சொல்லுகிறது. காரணத்வம்சொல்லில் விகாராஸ்பதமாமென்று சங்கித்து, சரீராத்மபாவத்தாலேசொல்லுகிறது. சரீரகதமான பால்யயௌவநாதிகள் ஆத்மாவுக்குத்தட்டாதாப்போலே, இவற்றைப்பற்றிவரும் விகாராதிகள் அவனுக்கு வாராதென்று தோஷாஸ்பர்சம் சொல்லுகைக்காகச் சொல்லுகிறது. [தானேபடைத்து] - *தம:-ஏகீபவதி* என்கிறபடியே ஸூக்ஷ்ம சிதசித்சரீரியான தானே ஸகலலோகங்களையுமுண்டாக்கி. அசிதவிசேஷிதமான தசையாகையாலே, அபேக்ஷிப்பாருமின்றிக்கே தயமானனாய்த் தானேயிறே ஸ்ருஷ்டித்தான். [தானே - இடந்து] - ப்ரளயங்கதையான பூமி ''என்னையெடுக்கவேணும்'' என்று அபேக்ஷிக்கவன்றிறே நஷ்டோத்தரணம்பண்ணிற்று. [தானேயுண்டு] - ப்ரளயம்வரப்புகாநின்றதென்றறிவாரில்லையே. [உமிழ்ந்து] - உள்ளேகிடந்து நோவுபடுகிற்றனையல்லது, ''எங்களை வெளிநாடுகாணப் புறப்படவிடவேணும்'' என்றறியாதிருக்க, தானேயுமிழ்ந்து. இப்படி ஸர்வவிதரக்ஷணங்களையும் பண்ணுகையாலே [தானேயுலகெல்லாம்]- *ஸர்வம் க்கல்விதம் ப்ரஹ்ம*.

ஆள்வானாழிநீர்* கோள்வாயரவணையான்*
தாள்வாய்மலரிட்டு* நாள்வாய்நாடீரே. (4)

ஒ.—நாலாம்பாட்டில், [ஆள்வான் ஆழிநீர்]-''ஆபோ நாரா:'' என்கிற வழியாலே திருமந்த்ரார்த்தத்தை நீர்வழியாநின்றுகொண்டு எம்பெருமான்திருவடிகளிலே இத்திருமந்த்ரத்தைச் சொல்லிக்

கொண்டு நல்ல செவ்விப்பூவைப் பணிமாறி நாள்தோறும் ஆச்ரயியுங்கோள் என்கிறார். [கோள்வாய்]- ப்ரதிகூலர்க்கு ம்ருத்யுவா யிருந்துள்ள வாய்,

இ.—நாலாம்பாட்டில், ''ஆபோ நா ரா:'' என்கிற வழியாலே திருமந்த்ரத்தை நிர்வசித்து திருமந்த்ரத்தைச் சொல்லிக்கொண்டு புஷ்பாஞ்ஜலிபண்ணி ஆச்ரயியுங்கோள் என்கிறார். [ஆழிநீர் - ஆள்வான்]- காரணஜலத்திலே ஸ்ருஷ்ட்யுந்முகனாய்க் கண்வளர்ந்தருளி, அத்தசையிலே சேதநஸமஷ்டியை ரக்ஷித்தவன் [கோள்வாய்] - மிடுக்குடைய வாய் என்னுதல்; ப்ரதிகூலர்க்கு ம்ருத்யுவான வாய் என்னுதல். [அரவணையான் தாள்வாய்] - ஆச்ரிதஸௌலப்யனுகையாலே ஸ்வாராதனுடைய திருவடிகளிலே செவ்விப்பூவைப் பணிமாறி நாள்தோறும் ஆச்ரயியுங்கோள்; இப்படிசெய்ய, ஸ்வரூபாநுரூபமான பேறு நிச்சிதம் என்கிறார்.

ஈடு.—நாலாம்பாட்டு. *ஆபோ நாரா இதி ப்ரோக்தா:* என்றும் ஒரு நிர்வசனப்ரகாரமுண்டிறே இதுக்கு; அவ்வழியாலே திருமந்த்ரத்தை நிர்வசித்து, திருமந்த்ரத்தைச் சொல்லிக்கொண்டு புஷ்பாஞ்ஜலியைப்பண்ணி ஆச்ரயியுங்கோளென்கிறார்.

[ஆள்வான்] - இவற்றையுடைய அடிமைகொள்ளுமவன். [ஆழிநீர்ஆள்வான்] - அடிமை கொள்ளும் ப்ரகாரமிருக்கிறபடி. காரணஜலத்திலே ஸ்ருஷ்ட்யுந்முகனாய்க் கண்வளர்ந்தருளி, அத்தசையிலே சேதநஸமஷ்டியை ரக்ஷித்தவன். [கோள்வாய்] - மிடுக்கையுடைய வாயென்னுதல், ப்ரதிகூலர்க்கு ம்ருத்யுவான வாயென்னுதல். [அரவணையான் தாள்வாய் மலரிட்டு] - ஸ்வாராதனென்றதாய்த்து. அநந்தசாயி திருவடிகளிலே செவ்விப்பூவைப் பணிமாறி. [நாள்வாய் நாடீரே] - நாள்தோறும் ஆச்ரயியுங்கோள்; அத்திருவநந்தாழ்வானுடைய பேறு உங்களுக்குப் பெறலாம்.

நாடீர் நாடோறும்* வாடாமலர்கொண்டு*
பாடீரவன் நாமம்* வீடே பெறலாமே. (5)

ஏ.—அஞ்சாம்பாட்டில், [நாடீர் நாள்தோறும்] - நாள்தோறும் செவ்விப் பூவைக்கொண்டு அவனை ஆச்ரயித்து அவன்திருநாமத்தை ப்ரீதிபூர்வகமாகச் சொல்ல அவன்திருவடிகளைப் பெறுகை நிச்சிதம் என்கிறார்.

இ.—அஞ்சாம்பாட்டில், இப்படி செவ்விமாறாத புஷ்பத்தைக்கொண்டு அவன்திருநாமத்தை ஹர்ஷத்துக்குப் போக்குவீடாகச சொல்லுங்கோள்; அப்படி செய்யவே ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியைப் பெறலாம் என்கிறார். [நாடீர்என்று தொடங்கி] - ப்ரீதிபூர்வகமான வ்ருத்திக்குக் காலநியதியில்லை. உங்கள் அபிநிவேசத்துக்கு அநுரூபமான விலக்ஷண புஷ்பத்தைக்கொண்டு அவன்திருநாமத்தை ஹர்ஷத்துக்குப் போக்குவீடாகச் சொல்லுங்கோள். இப்படிசெய்யவே, ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியைப் பெறலாம். அங்கு, சூட்டுநன்மாலைகள் கொண்டு ஆராதிக்கையும் ''அஹமந்நமஹமந்நம்'' என்று பாட்டுமாயிறேயிருப்பது.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. இப்படி செவ்விமாறாத புஷ்பத்தைக்கொண்டு அவன் திருநாமத்தை ஹர்ஷத்துக்குப் போக்குவீடாகச் சொல்லுங்கோள்; அப்படிச்செய்யவே ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியைப் பெறலாமென்கிறார்.

[நாடீர் நாள்தோறும்] - பசித்தபோதெல்லாம் உண்ணுமாபோலே. [வாடாமலர் கொண்டு] - உங்களுடைய அபிநிவேசாநுரூபமான புஷ்பங்களைக்கொண்டு. [பாடீர்அவன் நாமம்] - *ஏதத்ஸாம காயந்நாஸ்தே* என்று முக்தர் ஸாமகாநம்பண்ணுமாபோலே, அவனுடைய திருநாமங்களை ப்ரீதிபூர்வகமாகப் பாடுங்கோள். நாடீரென்கையாலே - மாநஸவ்யாபாரத்தைச் சொல்லிற்று; வாடாமலர்கொண்டென்கையாலே - காயிகத்தைச் சொல்லிற்று. பாடீரென்கையாலே - வாசிகத்தைச்சொல்லிற்று. [வீடே பெறலாமே] - ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியைப் பண்ணவே, *ஸ்வேநரூபேணாபிநிஷ்பத்யதே* என்கிறதைப் பெறலாம். இனியதைச் செய்யப் பெரியத்தைப் பெறலாம்.

மேயான்வேங்கடம்* காயாமலர்வண்ணன்*
பேயார்முலையுண்ட* வாயான்மாதவனே. (6)

ஒ.—ஆறும்பாட்டில், [மேயான் வேங்கடம்] - ஆச்ரயணீயனாகச் சொல்லுகிற எம்பெருமானைக் கண்டாலன்றோ ஆச்ரயிக்கலாவதென்னில்: ஆச்ரிதர்க்காக க்ருஷ்ணனாய்வந்து திருவவதாரம்பண்ணி யருளி ப்ரதிகூலநிரஸநஸ்வபாவனாய் ச்ரமஹரமான திருநிறத்தையுமுடையனான ச்ரிய:பதியானவன், ஆச்ரயிப்பார்க்கு எளிதாகத் திருமலையிலேவந்து நின்றருளினான்; அவனை ஆச்ரயியுங்கோள் என்கிறார்.

இ.—ஆறும்பாட்டில், ஆச்ரயணீயனைக்கண்டு ஆச்ரயிக்கவேண்டாவோ ? என்ன; பிற்பாடரான நமக்காகத் திருமலையிலே நின்றருளினான், அவனை ஆச்ரயியுங்கோள் என்கிறார். [மேயான் இத்யாதி] - உங்களை ஆச்ரயிப்பித்துக்கொள்ளுகைக்குத் திருமலையிலே பொருந்திவர்த்திக்கிறவன், ஆச்ரயணத்திலே இழிந்தாரைக் கொண்டு முழுகும்வடிவை யுடையவன். விரோதிவர்க்கம் செய்யுமது என்னென்னில்; அது பூதனை பட்டது படுமித்தனை. நம் பூர்வவ்ருத்தம் பாராதே ரக்ஷிக்கைக்கு அருகேயிருப்பாருமுண்டு.

ஈடு.—ஆறும்பாட்டு. நீர்சொன்னபடியே செய்யலாவது ஆச்ரயணீயனைக் கண்டாலன்றோ? கண்டாச்ரயிக்க வேண்டாவோவென்ன; பிற்பாடரான நமக்காகத் திருமலையிலே நின்றருளினான், அவனை ஆச்ரயியுங்கோளென்கிறார்.

[மேயான்வேங்கடம்] - (வேங்கடம் - மேயான்) உங்களை யாச்ரயிப்பித்துக் கொள்ளுகைக்காகத் திருமலையிலே பொருந்திவர்த்திக்கிறவன். கண்டவாறே தான் பழிக்கலாயிருக்குமோவென்னில்?—[காயாமலர்வண்ணன்] - துரும்பும் எழுந்தாடி அடிமையிலே மீண்டல்லது நிற்கவொண்ணாதபடியான வடிவுபடைத்தவன். விரோதிவர்க்கம் பின்னைச் செய்வதென்னென்னில் [பேயார்முலையுண்டவாயான்] - பூதனைபட்டது படுமத்தனை. [மாதவனே] - நம் பூர்வவ்ருத்தம் பாராதே விஷயீகரிப்பிக்கைக்கு அருகேயிருப்பாருமுண்டு.

மாதவனென்றென்று* ஓதவல்லீரேல்*
தீதொன்றுமடையா* ஏதம்சாராவே. (7)

ஒ.—ஏழாம்பாட்டில், [மாதவனென்றென்று] - பக்திபோகம் பூர்ணமாக அநுஷ்டிக்கவும் இனிமையோடு திருநாமம் சொல்லவும் மாட்டிகோளாகில், பெற்றதே உடலாகக்கொண்டு அநுக்ரஹம் பண்ணும் ஸ்வபாவையான பெரியபிராட்டியாருக்கு வல்லபனானவனுடைய மாதவனென்னும் திருநாமத்தைப் பரப்ரேரிதராய்க்கொண்டாகிலும் நிரந்தரமாக உச்சரிக்கவல்லிகோளாகில், பண்டுபண்ணின பாபங்கள் நசிக்கும்; மேல் செய்யும் பாபங்கள் உங்களோடு ஸம்பந்தியாவென்கிறார்.

இ.—ஏழாம்பாட்டில், ப்ரீதிப்ரேரிதராய் ஆச்ரயிக்கவும் இனிமையோடே திருநாமம் சொல்லவும் மாட்டாதார், அந்த:புரபரிகரமானார் சொல்லும் வார்த்தையைச் சொல்லவே, பூர்ணோபாஸநத்தில் ப்பலம் ஸித்திக்கும் என்கிறார். [மாதவன் இத்யாதி] - "ஸ்ரீவல்லபன்" என்னும் திருநாமத்தை உங்களுக்கு ருசியில்லையேயாகிலும் பரப்ரேரிதராய்க் கொண்டாகிலும் நிரந்தரமாகச் சொல்ல வல்லிகோளாகில், பூர்வாகங்கள் நசிக்கும்; உத்தராகங்கள் ச்லேஷியா. முன்புள்ளவற்றை மறக்கும், பின்புள்ளவற்றில் நெஞ்சு செல்லாது. கீழ்ச்சொன்ன திருமந்த்ரமும் இப்பாட்டிற்சொன்ன ஸ்ரீமத்பதமும் தனித்தனியே பேற்றுக்குப் பர்யாப்தமானபின்பு, இரண்டையும் சேர்த்துச் சொன்னவர்களுக்குப் பேற்றுக்குச் சொல்ல வேண்டாவிறே.

ஈடு.—ஏழாம்பாட்டு. ப்ரீதிப்ரேரிதராய் ஆச்ரயிக்கவும் இனிமையோடே திருநாமம் சொல்லவும் மாட்டாதார், அந்த:புரபரிகரமானார்வார்த்தையைச்சொல்லவே, பூர்ணோபாஸநத்தில் ப்பலம் ஸித்திக்குமென்கிறார்.

[மாதவனென்றென்றோதவல்லீரேல்] - நாராயணசப்தத்தோடே இத்தைச் சேர்த்துச் சொல்லப்பாருங்கோள். "நாரணமே" என்றாரே-இறே. [ஓதவல்லீரேல்] - உங்களுக்கு ருசியில்லையாகிலும் பரப்ரேரிதராய்க்கொண்டு நிரந்தரமாகச் சொல்லவல்லிகோளாகில். [தீதொன்றும்அடையா] - பூர்வாகம் நசிக்கும். [ஏதம்சாராவே] - உத்தராகத்துக்கு அவிச்லேஷமேயாம். பூர்வாகத்தை விஸ்மரிக்கும், உத்தராகத்தில் நெஞ்சுசெல்லாது. கீழ்ச்சொன்ன திருமந்த்ரமும் இப்பாட்டிற்சொன்ன ஸ்ரீமத்பதமும் தனித்தனியே பேற்றுக்குப் பர்யாப்தமான பின்பு, இரண்டையும் சேர்த்துச்சொன்னவர்களுக்குப் பேறு சொல்லவேண்டாவிறே.

சாராவேதங்கள்* நீரார்முகில்வண்ணன்*
பேராரோதுவார்* ஆராரமரரே. (8)

ஒ.—எட்டாம்பாட்டில். [சாரா ஏதங்கள்] - நீராலேபூர்ணமான மேகம்போலே யிருந்த திருநிறத்தையுடைய எம்பெருமானுடைய திருநாமத்தை நிரந்தரமாகச் சொல்லுவார் யாவர் சிலர், அவர்கள் ஏதேனும் தண்ணியஜந்மவ்ருத்தங்களை யுடையரேயாகிலும் அயர்வறுமமரர்களோடு ஒப்பர்களென்று ஆச்ரயிப்பார்க்கு ருச்யுத்பாதநார்த்தமாக அவர்களுடைய ச்லாக்யதையை யருளிச்செய்கிறார்.

இ.—எட்டாம்பாட்டில், அதிகாரிநியதியில்லை; ஆரேனுமாகத் திருநாமத்தை நிரந்தரமாகச் சொல்லுவார் நித்யஸூரிகளோடொப்பர் என்கிறார். [சாராஏதங்கள்] - து:க்கங்கள் நம்மைவந்து கிட்டப்பெறா. [நீரார் முகில் வண்ணன்] - நீராலேபூர்ணமான மேகம்போலேயிருக்கிற நிறத்தையுடையவன். அவ்வடிவைக் காணுந்தனையுமிறே உபதேசிக்கவேண்டுவது. [பேர் ஆர் ஓதுவார்] - அவன் திருநாமத்தை நிரந்தரமாகச்சொல்லுவார் யாவர்சிலர். [ஆரார் அமரரே] - அவர்கள் ஏதேனும் ஜந்மவ்ருத்தங்களை யுடையராகிலும், அவர்களிருந்தபடியே நித்யஸூரிகளோடு ஒப்பர்கள். இத்தால் - ஆச்ரயிப்பார்க்கு ருசி பிறக்கைக்காக அவர்களேற்றம் அருளிச்செய்கிறார்.

ஈடு.—எட்டாம்பாட்டு. அதிகாரிநியதியில்லை, ஆரேனுமாகத் திருநாமத்தை நிரந்தரமாகச் சொல்லுவார் நித்யஸூரிகளோடு ஒப்பர்களென்கிறார்.

[சாரா ஏதங்கள்] - ஒரு பொல்லாங்குகளும் வந்துகிட்டாது. [நீரார்முகில்வண்ணன்]- நீராலே பூர்ணமான மேகம்போலேயிருக்கிற நிறத்தையுடையவன். (அவ்வடிவு காணுந்தனையுமிறே உபதேசிக்கவேண்டுவது.) [பேராரோதுவார்]-அவன் திருநாமத்தை நிரந்தரமாகச் சொல்லுவார் யாவர் சிலர். [ஆராரமரரே] - அவர்கள் ஏதேனும் ஜந்மவ்ருத்தங்களை யுடையரேயாகிலும், அவர்கள் இருந்தபடியே நித்யஸூரிகளோடு ஒப்பர். அவ்வோ ஜந்மஸ்திதிகளிலே நித்யஸூரிகளோடு ஒப்பர்கள். (ஆச்ரயிப்பார்க்கு ருசிபிறக்கைக்காக அவர்களேற்றம்அருளிச் செய்கிறார்.)

அமரர்க்கரியானை* தமர்கட்கெளியானை*
அமரத்தொழுவார்கட்கு* அமராவினைகளே. (9)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், [அமரர்க்கு அரியானை] - ப்ரயோஜநாந்தரபரர்க்கு துர்லபனும், அநந்ய ப்ரயோஜநர்க்கு ஸுலபனுமிருக்கிறவனை, அநந்யப்ரயோஜநராய்த்தொழ, ப்ரயோஜநாந்தர ப்ராவண்யம் தானேபோம் என்கிறார்.

இ.—ஒன்பதாம்பாட்டில், ஜந்மாதிகள் அப்ரயோஜகமானாலும் அநந்யப்ரயோஜநராகவேணுமே என்னில்; ஆப்தோபதேசத்தைப்பற்றி இழியவே ப்ரயோஜநாந்தரபரதாஹேதுவான பாபங்கள் தானே அகலும் என்கிறார். [அமரர்க்கு இத்யாதி] - ப்ரயோஜநாந்தரபரர்க்கு துர்லபனானவனை; "யந்நாயம்பக

வான் ப்ரஹ்மா ஜாநாதி''. அநந்யப்ரயோஜநர்க்கு ஸுலபனானவனை; ''ஸோऽப்யகச்சத்'' ''ஸுக்ரீவம் சரணம்கத:'' ''இமௌ ஸ்ம முநிசார்த்தூல கிங்கரௌ'' ஜ்ஞாநாதிகரான ப்ரஹ்மாதிகளேயாகிலும் ப்ரயோஜநாந்தரபரர்க்கு துர்பலன்; ஒரு வேடுவிச்சியாகவுமாம், ஒருகுரங்காகவுமாம், ருஷியாகவுமாம், அவர்களுக்குக் கையாளாயிருக்கும். [அமரத் தொழுவார்கட்கு] - அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு ஆச்ரயிக்க இழியவே, ப்ரயோஜநாந்தர ப்ராவண்யத்துக்கு அடியான கர்மங்களானவை தானேபோம்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. ஜந்மாதிகள் அப்ரயோஜகமானாலும் ப்ரயோஜநாந்தரபரதா ஹேதுவான பாபங்கள் செய்வதென்னென்னில்; ப்ரயோஜநசூந்யராய்க்கொண்டாச்ரயிக்கவே அவை தானே போமென்கிறார்.

[அமரர்க்குஅரியானை] - எத்தனையேனும் அதிசயிதஜ்ஞாநரான ப்ரஹ்மாதிகளுக்கும் ஸ்வயத்நத்தால் ப்ராபிக்கவொண்ணாதவனை; *யந்நாயம் பகவாந் ப்ரஹ்மா ஜாநாதி*. [தமர்கட்கெளியானை] - அநந்யப்ரயோஜநர்க்கு ஸுலபனானவனை. ஒரு குரங்காகவுமாம், ஒரு வேடுவிச்சியாகவுமாம், ருஷிகளாகவுமாம், அவர்களுக்கெளியனாயிருக்கும்; *ஸுக்ரீவம் சரணம்கத:*, *ஸோऽப்யகச்சன்மஹாதேஜா:* *இமௌ ஸ்ம முநிசார்த்தூல* என்று சொல்லுகிறபடியே [அமரத் தொழுவார்கட்கு] - ஒருப்ரயோஜநத்தைக் கணிசியாதே அநந்யப்ரயோஜநராய்க் கொண்டு தொழுமவர்க்கு. [அமராவினைகளே] - ப்ரயோஜநாந்தரபரதைக்கு அடியான விரோதிகள் வந்து கிட்டா.

வினைவல்லிருளென்னும்* முனைகள்வெருவிப்போம்*
சுனைநன்மலரிட்டு* நினைமின்நெடியானே. (10)

ஒ.—பத்தாம்பாட்டில், [வினைவல்லிருளென்னும்] - பகவத்கைங்கர்ய ப்ரதிபந்தகங்களாய் மிக்கிருந்துள்ள அஜ்ஞாநவாஸநாதிகள் பீதமாய், தானேபோம்; ஆச்ரிதவிஷயத்தில் எல்லா உபகாரங்களையும் பண்ணினாலும் ''ஒன்றும் செய்யப்பெற்றிலோம்'' என்றிருக்கும் ஸ்வபாவனானவனை அழகிய செவ்விப்பூக்களைத் திருவடிகளிலே பணிமாறி நினையுங்கோள் என்கிறார்.

இ.—பத்தாம்பாட்டில், அவ்வளவேயன்றிக்கே கைங்கர்யப்ரதிபந்தகங்களும் போம்; ஆனபின்பு, அவனை ஆச்ரயியுங்கோள் என்கிறார். [வினைவல்லிருளென்னும் முனைகள்] - வினை - கர்மம், வல்லிருள் - ப்ரபலமான அஜ்ஞாநம்; அதுக்கடியான தேஹஸம்பந்தம், இவற்றைப் பற்றிவரும் ருசிவாஸநைகளாகிற இத்திரள்கள். [வெருவிப்போம்] - ''நமக்கு இதுநிலமன்று'' என்று பீதமாய்ப்போம். அழகிய செவ்விப் பூவைத் திருவடிகளிலே பணிமாற நினையுங்கோள். [நெடியானே] - எல்லாம் செய்தாலும், ''ருணம் ப்ரவ்ருத்தமிவ மே'' என்றிருக்குமவன். ''ஸ்மர்த்தா'' என்கிறபடியே இவன் ஒருகால்நினைக்க ''அஹம் ஸ்மராமி'' என்று என்றுமொக்க நினைக்குமவன்.

ஈடு.—பத்தாம்பாட்டு. அவ்வளவேயன்றியே, கைங்கர்ய ப்ரதிபந்தகங்களும் போம்; ஆனபின்பு, அவனையாச்ரயியுங்கோளென்கிறார்.

[வினை இத்யாதி] - வினை - கர்மம், வல்லிருள் - ப்ரபலமான அஜ்ஞாநம்; அதுக்கடியான தேஹஸம்பந்தம், இவற்றைப் பற்றிவருகிற ருசிவாஸநைகளாகிற இத்திரள்கள். [முனை] - திரள். [வெருவிப்போம்] - ''நமக்கிது நிலமன்று'' என்று பீதமாய்ப்போம். அன்றிக்கே, முனையென்று - முகமாய், முகங்கெட்டுப் போமென்றுமாம். [சுனைநன்மலரிட்டு] - அப்ராக்ருத த்ரவ்யம் தேடியிடவேணுமென்னவேண்டா. [நினைமின்] - ''சிந்தயேயமையும்'' உங்களுக்குப் பாங்கான ஸமயத்திலே ஒருகால் நினையுங்கோள்; *ஸ்மர்த்தா* என்கிறபடியே. [நெடியானே] - நீங்கள் ஒருகால் நினைத்துவிட்டால், பின்னை அவன்தானே *அஹம் ஸ்மராமி* என்று உங்களை நினைத்தபடியே யிருக்கும்; ஒருகால் நினைத்து இவனைப்போல் கலங்கவேண்டுவதில்லையிறே அவனுக்கு. ஸர்வஜ்ஞனாய் ஸம்பந்நனுமாய் அகர்மவச்யனுமாகையாலே உருவ நினைத்தபடியே யிருக்குமிறே அவன்.

நெடியானருள்சூடும்* படியான்சடகோபன்*
நொடியாயிரத்திப்பத்து* அடியார்க்கருள்பேறே. (11)

ஒ.—நிகமத்தில், [நெடியானருள் சூடும்.] - ஸர்வேச்வரனுடைய அருளுக்கெல்லாம் பாத்ரபூதராகையே ஸ்வபாவமான ஆழ்வாருடைய உக்தியான ஆயிரந்திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழியானது, அப்யஸித்தவர்களை பகவத்விஷயீகார பாத்ரமாக்கும் என்கிறார்.

இ.—நிகமத்தில், இப்பத்தும், அப்யஸித்தவர்களை ஆழ்வார்தம்மைப்போலே பகவத்விஷயீகார பாத்ரமாக்கும் என்கிறார். [நெடியான் இத்யாதி] - ஸர்வேச்வரனுடைய ப்ரஸாதங்களுக்கெல்லாம் பாத்ரபூதராகையாலே அதுவே ஸ்வபாவமான ஆழ்வார். "ஆற்ற நல்லவகை காட்டும்" என்று ஸாத்மிக்க ஸாத்மிக்க அநுபவிக்குமளவன்றிக்கே, இப்போது அவன் கொடுத்த அருளெல்லாம்கொண்டு தரித்து நின்று அநுபவிக்கவல்லராகை. நொடிதல் - சொல்லுதல், [அடியார்க்கு] - அப்யஸிக்கவல்லார்க்கு. [அருள்பேறு] - ப்ரஸாதலாபம். "நெடியானருள் சூடும்படியான்" என்கிற இவர்பேற்றைப் பண்ணிக் கொடுக்கும்.

ஈடு.—நிகமத்தில், இப்பத்தும், அப்யஸித்தவர்களை ஆழ்வார்தம்மைப்போலே பகவத் விஷயீகாரபாத்ர மாக்கு மென்கிறார்

[நெடியான்இத்யாதி] - ஸர்வேச்வரனருளுக்குப் பாத்பூதராகையே ஸ்வபாவமான ஆழ்வார். அதாவது - "ஆற்ற நல்லவகை காட்டுமம்மான்" என்று தன் குணசேஷ்டிதங்களை ஸாத்மிக்கஸாத்மிக்க அநுபவிப்பித்துக்கொண்டு போந்தபடியை யநுஸந்தித்துவிஸ்மிதரானார் - இறே; இப்போது, அவன்கொடுத்த கொடுத்த அருளெல்லாம் உண்டறுக்கவல்லரானாராய்த்து. நொடிதல்-சொல்லுதல். [இப்பத்தடியார்க்கருள்பேறே] - இப்பத்துத்தானே, இத்தையப்யஸித் "நெடியானருள் சூடும்படியான்" என்றதுவே பேறுக்கும். (அடியார்க்கு - அப்யஸித்தார்க்கு. தார்க்கு, அருள்பேறு - ப்ரஸாதலாபம்.) ஈச்வரன்கொடுத்த ஸாதர்ம்யம் ஆழ்வார்கொடுக்க மாட்டாமையில்லையிறே.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ஆறுந் திருவாய்மொழி—அருள்பெறுவார் : ப்ரவேசம்

ஒ.—ஆறுந்திருவாய்மொழியில், பக்திஸ்வருபத்தை உபதேசித்தருளி அந்யபரதை கெட்டுத் தன்னையொழியச்செல்லாததன்மையான ஆழ்வாருடைய படியை அநுஸந்தித்து, அவரையொழிய ஒருக்ஷணமாத்ரமும் செல்லாதபடி திருவாட்டாற்றில் எம்பெருமான் தான் இவரோடே ஆத்மாவதியாக நிரந்தரஸம்ச்லேஷம் பண்ணுகைக்கு உறுப்பாகத் திருநாட்டிலே கொடுபோகையிலே பதறுநின்று வைத்து, "இவர்தாமே சொல்லக் கொடுபோகவேணும்" என்று அதுக்கு அவஸர ப்ரதீக்ஷனுமந்த தம் பக்கல் பரதந்த்ரனுமிருக்கிறவனுடைய நிர்ஹேதுக வ்யாமோஹத்தை அநுஸந்தித்து விஸ்மிதராய், திருவுள்ளத்தைக்குறித்து, "நாம் பெற்றபேறு கண்டாயே!" என்றுசொல்லி மிகவும் ஹ்ருஷ்டராகிறார்.

இ.—ஆறுந்திருவாய்மொழியில், இப்படி பக்திஸ்வருபத்தை உபதேசித்துக் கையொழிந்தவநந்தரம் அவன்பக்கலிலேயிவர்க்கு விடாய் பெருகிவருகிறபடியைக் கண்டு, இதுக்காகத் திருவாட்டாற்றிலே ஸந்நிஹிதனாய், "ந ஜீவேயம் க்ஷணமபி" என்கிறபடியே - இவரையொழிய ஒருக்ஷணமாத்ரமும் செல்லாத படியை யுடையனாய், "இவரோடே ஆத்மாந்தமாக நிரந்தராநுபவம் பண்ணவேணும், அதுசெய்யுமிடத்து

விச்சேத சங்கையில்லாதபடி பரமபதத்திலே கொடுபோவோம்'' என்று பதறுகிறசெய்தே, "இவர் பரதந்த்ரர், நம்மை நியமிக்கமாட்டார்" என்று அறியாதே "இவர்க்குத் தான்பரதந்த்ரனாய் இவர் நியமிக்கக் கொடுபோகவேணும்'' என்று அவஸரப்ரதீக்ஷனாயிருக்கிறவனுடைய வ்யாமோஹாதிசயத்தைக்கண்டு, "ஸர்வாதிகனானவன் நம்மைக்குறித்துப் பரதந்த்ரனாவதே !'' என்று விஸ்மிதராய், இதுக்கு உசாத்துணையாவார் ஆர் ? என்று பார்த்தவிடத்தில், ஸம்ஸாரிகள் சப்தாதிவிஷய ப்ரவணராகையாலும், நித்ய ஸூரிகள் விப்ரக்ருஷ்டராகையாலும், இனித் தமக்கு உடன்கேடான நெஞ்சும் தாமுமானவாறே, அத்தைக்குறித்து, "நாம் பெற்றபேறு கண்டாயே !'' என்று மிகவும் ஹ்ருஷ்டராகிறார். இதுக்கு முன்பெல்லாம், இவனுக்கு ஸ்வாதந்த்ர்யமே ஸ்வரூபமென்று போந்தார்; இப்போது, ஆச்ரித பாரதந்த்ர்யமே ஸ்வரூபமென்கிறார். இருந்தும்வியந்திற்காட்டில் இதுக்கு ஏற்றமென் ? என்னில்; — "அடியார் தம் அடியனேன்'' என்று ஹேதுவோடே அநுபவிக்கிறார்.

ஈடு.—பொய்ந்நின்றஞானந்தொடங்கி இவ்வளவும்வர, ஈச்வரனை ஆழ்வார் பின் தொடர்ந்தபடி சொல்லிற்று; இதுதொடங்கி, ஆழ்வாரை ஸர்வேச்வரன் பின்தொடருகிறபடி சொல்லுகிறது.

இப்படி பக்திஸ்வரூபத்தை உபதேசித்துக் கைபொழிந்தவநந்தரம் தன்பக்கலிலே இவர்க்கு விடாய்பெருகுகிறபடியைக் கண்டு, இவர்க்குமுன்பே விடாய்த்துத் திருவாட்டாற்றிலே தங்குவேட்டையாகவந்து நிற்கிறவனாகையாலே இவரைக் கொண்டு போகையிலே அவனுக்கு த்வரைமிக்கது. இவரளவல்லவிறே அவனுடையவிடாய்; *நஜீவேயம் க்ஷணமபி* என்னும் ஏற்றமுண்டிறே. "ஆழ்வாரும் நாமுமாய் அநுபவிக்கவேணும்'' என்று பாரித்து, "அதுசெய்யுமிடத்தில், அவ்வநுபவத்துக்கு ஒருவிச்சேதம் வாராதபடி ஏகாந்தமாயிருப்பதொரு தேசவிசேஷத்திலே கொடுபோய்வைத்து அநுபவிக்கவேணும்'' என்று பாரித்து, "அதுசெய்யுமிடத்தில், இவர்க்குப் பரதந்த்ரனாய் இவர் நியமித்தபடி செய்வோமாகவேணும்'' என்று இவர் அநுமதிபொழியச் செய்யமாட்டாதே நின்றான்; ஸர்வேச்வரனைத் தாம் நியமிக்க மாட்டாரே தம்முடைய பாரதந்த்ர்யத்தாலே; இப்படி தம்பக்கலிலே அபிநிவேசாதிசயத்தைப் பண்ணுகிறவனுடைய மேன்மையையும், அப்படிப்பட்ட மேன்மையையுடையவன் தம்பக்கல் பரதந்த்ரனாய்த் தாழநிற்கிறபடியையும் அநுஸந்தித்து, இதுதனக்கு உசாத்துணையாக ஸம்ஸாரிகளைப் பார்த்தவிடத்து, அவர்கள் சப்தாதிவிஷயங்களிலே அந்யபரராய் அவற்றோடே பணிபோந்திருந்தார்கள்; அவன்தன்னைப் பார்த்தவிடத்தில், அபிநிவேசாதிசயத்தையுடையனாய் முன்னடிதோற்றாதே யிருக்கிறவனாகையாலே அவன் இதுக்காளாகமாட்டிற்றிலன்; இனி இவ்விஷயீகாரத்துக்கு இலக்கான தாமும் தம்மோடு உடன்கேடான நெஞ்சுமேயாயிருந்தது; அந்நெஞ்சைக்குறித்து, "அவனுடைய மேன்மையிருந்தபடியும், அப்படி மேன்மையுடையவன் நம்பக்கல் தாழநின்ற நிலையும், நாம் பெற்ற பேற்றின் கனமிருந்தபடியுமெல்லாம் கண்டாயே! நம்கார்யம் விழுந்தபடி கண்டாயே !'' என்று, இத்தைத் தம் திருவுள்ளத்தோடேகூட்டி இனியராகிறார். இதுக்கு முன்பெல்லாம், ஸர்வேச்வரனாகிறான், ஸர்வநியந்தாவாய் ஸ்வதந்த்ரனாயிருப்பானொருவனென்றிருந்தார்; இப்போது அங்ஙனல்ல; ஆச்ரிதபாரதந்த்ர்யமே அவனுக்கு ஸ்வரூபமென்கிறார். முன்பெல்லாம், தம்மாலே பாரதந்த்ர்யத்தை இழந்தார்; இப்போது, அவனாலே பாரதந்த்ர்யத்தை இழக்கிறார். அதுதான், இருந்தும்வியந்திலே சொல்லிற்றில்லையோ ? என்னில்,—அதில் இதுக்கு வாசியுண்டு - "அடியார்தம் அடியனேன்'' என்று ஹேதுவோடே அநுஸந்திக்கிறார்.

அருள்பெறுவாரடியார்தம் அடியனேற்கு* ஆழியான்
அருள்தருவானமைகின்றான் அதுநமதுவிதிவகையே*
இருள்தருமாஞாலத்துள் இனிப்பிறவியான்வேண்டேன்*
மருளொழிநீமடநெஞ்சே வாட்டாற்றானடிவணங்கே. (1)

ஒ.—முதற்பாட்டில், எம்பெருமான் நம்மை விஷயீகரிக்கையிலே ஒருப்படா நின்றுகொண்டு, அதுதானும் நான் விதித்தபடியே செய்வானுமிராநின்றான் என்கிறார். [ஆழியான்] - திருவாழியாழ்வானை விஷயீகரித்தாப்போலே இனி, [இருள் என்றுதொடங்கி] - அஜ்ஞாநாவஹமான ஸம்ஸாரத்தில் பிறக்கையில் நசையற்றேன்; ஸாதுவான நெஞ்சே! நீ உகந்தருளின கோயில்களில் நசையாலே, "ஸம்ஸாரத்தைவிட்டுத் திருநாட்டுக்குப் போவேனல்லேன் நான்" என்றுபண்ணின ப்ரமத்தைத் தவிர்; அவன் தந்தருளுகிறபடியே திருவடிகளை அநுபவி.

இ.—முதற்பாட்டில், ஈச்வரன் நம்மை விஷயீகரிக்கையிலே ஒருப்படாநின்றான். அதுதானும் நாம் விதித்தபடியே செய்வானுயிராநின்றான் என்கிறார். [அருள்பெறுவார் அடியார்] - ஸர்வேச்வரன் அளவிறந்த ப்ரஸாதத்தைப் பண்ண அதுக்கு விஷயபூதராயிருப்பார் சிலருண்டு; ராஜாக்கள் மஹிஷிகளுக்கு விபூதிகளையும் தங்களையும் அவர்கள் அதீனமாக்கி வைப்பாரைப்போலே, ஈச்வரன் தன்னை முற்றூட்டாகக் கொடுத்து அநுபவிக்குமவர்கள். [அடியார்தம் அடியனேற்கு] - நீக்கமில்லா அடியார்தம் அடியார் அடியாரடியாரெங்கோக்கள்" என்றிறே தம்ஸ்வரூபத்தை நினைத்திருப்பது [ஆழியான்] - திருவாழியாழ்வானை விஷயீகரித்தாப்போலே விஷயீகரிக்க நினையாநின்றான். "விடலில் சக்கர"மிறே. ஆச்ரிதரை நிரூபகமாகவுடையவன் என்றுமாம். [அருள்தருவான் அமைகின்றான்] - ஆச்ரிதரெல்லார்பக்கலிலும் பண்ணும் அருளை என்பக்கலிலே பண்ணுமவனாகச் சமைந்துநின்றான். "அஸ்மாபிஸ்துல்யோ பவது" என்னுமவர்களிறே இவர்கள். ஸ்வதந்த்ரனாகில் தருகிறான், இனிக்குறையென்? என்னில்—[அதுநமது விதிவகையே] - அது நாம் சொல்லச்செய்வானாக நினைத்திராநின்றான். "அது நம்முடைய பாக்யாதிகுணமிறே" என்றுய்த்து பூர்வர்கள்நிர்வாஹம்; இது ப்ரகரணத்தோடு சேராது. "நாம் விதித்தபடியே செய்வானாக நினைத்திராநின்றான்" என்று அருளிச்செய்தார் எம்பெருமானார். தன்பக்கல் குறைவற்றிருந்தாலும் இத்தலையில் இச்சை பார்த்திருக்குமிறே; சொல்வகையே என்னாதே விதிவகையே என்றது - தானே தருமது வித்யதிக்ரமமென்றிருக்கையாலே. இதுக்கு நாம் செய்யப்பார்த்ததென்? என்ன, [இருள் தருமாஞாலத்துள்] நான் அவன்வழியே போகப்பார்த்தேன். இங்கு உகந்தருளின நிலங்களும் பாகவத ஸஹவாஸமும் உண்டாயிருக்க அவன்வழியே போகவேண்டுகிறதென்? என்ன: அஜ்ஞாநாவஹமான ஸம்ஸாரமாகையாலே, ஜ்ஞாநாதிகனான ப்ரஹ்லாதனையும் எதிரிடப்பண்ணிற்றிறே. [இனி] - அவன்கருத்து அறிந்த பின்பு. [பிறவி யான்வேண்டேன்] - "வானுயரின்பமெய்திலென் மற்றை நரகமே யெய்திலென்" என்கிற அது நான்வேண்டேன். இனி ஈச்வராபி ப்ராயத்தாலேயிருக்கில் இருக்குமித்தனை. [மருளொழி நீ] - நீயும் எனவழியே போரப்பார். "திருவாறன்விளையதனை மேவி வலஞ்செய்து கைதொழக் கூடுங்கொல்" என்று உகந்தருளின நிலங்களில் நசையாலே ப்ரமிப்பதொன்றுண்டு; அத்தைத்தவிர்! இங்கே உகந்தருளின இதுக்கு ப்ரயோஜநம் அங்கே கொடுபோகையன்றோ? [மடநெஞ்சே] - ஸாது நெஞ்சே! பவ்யமான நெஞ்சே! மடமை - அறிவின்மை. [வாட்டாற்றான் அடிவணங்கே] திருவாட்டாற்றிலேவந்து நிற்கிறவன் நினைவிலே போகப்பார். அடிவணங்குகையாவது - ஈரரசுதவிருகை; அவன்கருத்திலே போகை.

ஈடு.—முதற்பாட்டு. ஈச்வரன் நம்மை விஷயீகரிக்கையிலே ஒருப்படாநின்றான்; அது தானும் நாம் விதித்தபடி செய்வானுமிராநின்றானென்கிறார்.

[அருள்பெறுவாரடியார்தம் அடியனேற்கு] - வேறு தானிருக்கிறபடி. ஸர்வேச்வரன் பண்ணும் ப்ரஸாதாதிசயத்துக்கு விஷயபூதராயிருப்பார் சிலருண்டு; அவர்கள் நமக்கு ஸ்வாமிகள். அவர்கள்பக்கலிலே அவன் பண்ணின அருள் நம்மளவும் வர வென்னங்கோத்தநுகாண் என்கிறார். *தூநஹம் த்விஷத:* என்று ப்ரஜை தீம்பிலே கைவளர்த்தால் மாற்றைக்கொண்டு "வாய் வாய்" என்பாரைப்போலே, அவன்தான் சிறுவேண்டும்படி யிருப்பார் சிலருண்டு; அவர்களைப்போலன்றிபே, *ததாமி* என்று அவனுடைய அருளுக்கு விஷயபூதராயிருப்பார் சில ருண்டு; அவர்கள்பக்கல் பண்ணும்அருளை நம்பக்கலிலே பண்ணினான். ராஜாவுக்குப் புறம்பு ஒருமுறையிலே செல்லாநின்றாலும், தன் ஐச்வர்யத்தையுங் கொடுத்துத் தன் உடம்பையுங் கொடுக்குமிறே மஹிஷீவிஷயத்தில்; அப்படியே அவன் தன்னை முற்றூட்டாகக் கொடுத் தநுபவித்துத் தான் பாதந்த்ரனும்படி யிருப்பார் சிலருண்டு; அவர்கள்பக்கல் பண்ணும் அருளை என்பக்கலிலே பண்ணினான். [அருள்பெறுவாரடியார்தம் மடிய

னேற்கு] - இருவர்க்கும் நிரூபகமிருக்கிறபடி. இவர் அருள்பெறுவாரடியார்தம் மடியார்; அவன் ஆழியான்; இருவர்க்கும் நிரூபகம் ததியரேகாணும். [அடியனேற்கு] - "விடுமாறென்பதென்" என்றும் "நீக்கமில்லாவடியார்தம் மடியா ரடியா ரடியா ரெங்கோக்கள்" என்றும், "தமர்கள் தமர்கள் தமர்களாம் சதிரேவாய்க்க" என்றும் நான் சொன்ன அவ்வார்த்தையையே நினைத்திருந்தான் காண் அவன்; "அடிகளடியேநினையு மாடியவர்கள்தம் மடியான்" என்கிற படியே இத்தையேயாய்த்து இவர் தமக்கு ஸ்வரூபமாக நினைத்திருப்பது. [ஆழியானருள் தருவான் அமைகின்றான்] - ஸர்வேச்வரன் நம்பக்கலிலே பூர்ணாபேக்ஷையோடே நோக்கி ப்ரஸாதாதிசயத்தைப் பண்ணுவானாகப் பாரியாநின்றான்; திருவாழியை யொரு கண்ணாலே பார்ப்பது, இவரை யொருகண்ணாலே பார்ப்பதாகாநின்றான்; "விடலில் சக்கரத் தண்ணலைமேவல் விடலில்" என்கிறபடியே கையில் திருவாழியை விடிலன்றோ உம்மைவிடுவதென்றாநின்றான். [ஆழியான்] அவர்களையிட்டுத் தன்னை நிரூபிக்கவேண்டும்படியாய்த்திருப்பது. *அஸ்மாபிஸ்துல்யோ பவது* என்று அவர்கள் வல்லார்பக்கலிலும் பண்ணும்அருளை என்னொருவன்பக்கலிலும் பண்ணாநின்றான், அவர்கள் அருள்பெறுவாரடியாரான அடியாராய்த்து; இவனும் அருள்தருவானமைகின்றானாய்த்து. [அமைகின்றான்] - பாரிலும்வாரதும் குறையற்றது. அருளைக் குறையறத் தருவதாகப் பாரியாநின்றான். அவன் ப்ரஸாதாதிசயத்தைப் பண்ணுவதாகப் பாரியாநின்றானாகில் அவன்தான் ஸர்வேச்வரனாகில் பின்னைக் கண்ணழிவென்னென்னில். - [அதுநமது விதிவகையே] - அது செய்யுமிடத்தில் நான் சொன்னபடி செய்தானாகவேண்டி யிராநின்றான். [அதுநமது விதிவகையே] - "அது நம்முடைய பாக்யாநுகுணமாகவிறே" என்று இதுக்குப் பூர்வர்கள் நிர்வஹிக்கும்படி. இத்தை எம்பெருமானார் கேட்டருளி, "இத்திருவாய்மொழியில் மேலோடுகிற ரஸத்தோடு சேராது, நாம் விதித்தபடியே செய்வானாயிருந்தானென்கிறார்" என்றருளிச்செய்வர். *அஹம் ஸர்வம் கரிஷ்யாமி* என்று பாரித்துப்போந்தவர்தாமே *க்ரியதாமிதி மாம்வத* என்னப் பார்த்திருந்தாப்போலே, இவர் சொன்னபடி செய்வானாயிராநின்றான். 'நமது சொல்வகையே" என்னாதே, 'விதிவகையே' என்பானென்னென்னில்; வித்யதிக்ரமத்தில் ப்ரத்யவாயத்துக்கு அஞ்சுவாரைப்போலே அஞ்சாநின்றான். தான் நினைத்தபடி செய்கைக்குத் தன்பக்கல் குறைவற்றிருக்கும் இத்தலையில்இச்சையொழியக்கொடுபோகானே அவன்; புருஷோத்தமன் அபும்ஸ்த்வம் வரும்படி செய்யானே. [நமது விதி வகையே] - *ததாஜ்ஞாநுஜ்ஞாநந்தமுதாரவீக்ஷணை:* "இது பட்டர்தாமே யருளிச்செய்ய நான் கேட்டேன்" என்றருளிச்செய்தார். சேனைமுதலியார் சட்டையும் மயிர்க்கட்டும் கையும்பிரம்புமாய் வந்துபுகுரப்புக்கவாறே, நாய்ச்சிமாரும் தானுமாய் ஸ்வைரமாகவிருக்கிறவைத் தவிர்ந்து நாய்ச்சிமாரும் ஸிம்ஹாஸநத்தில் ஒருமூலைகளிலே ஒதுங்கத் தானும் ஸவிநயமாகவிருக்குமாய்த்து, வ்ருத்தஸாமந்தரைக் கண்ட ராஜாக்களைப்போலே. இவர்தாமும் "இவ்விருப்புக்குத்தண்ணீர்த்துரும்பாகவொண்ணாது" என்று ஜகந்நிர்வாஹத்துக்கு வேண்டுமவற்றைப் பாசுரப்பரப்பற விண்ணப்பஞ் செய்வராய்த்து. பிராட்டிமாரோடிருக்குமதிலும் இனிதாயிருக்குமிறே அவனுக்கு இவர்தம்மைக்காண; *ப்ரியேண* இறே. "இன்னானை ப்ரஹ்மாவாக்கவேணும், இன்னானை மாற்றவேணும்" என்று வேண்டுமவற்றைச் சுருங்கவிண்ணப்பஞ்செய்வர்; "ஐயர் யாதொன்று சொல்லிற்று அவையெல்லாமப்படியே" என்று கண்களாலே மேலெழுத்திட்டுக்கொடுக்கும். இவ்வார்த்தையருளிச் செய்தபோது கிடாம்பியாச்சானொழிந்த அல்லாதாரோடு வாசியறக் குமிழ்நீருண்டது; ஆச்சான்தான் பட்டர்க்கு ஸ்நேஹித்திருக்கும் போர. இளையாழ்வான், ஆச்சானை "பட்டர்தம்மை யாச்ரயித்தவர்களிற்காட்டிலும் நீர்தாம அநுவர்த்திப்பானென்?" என்று கேட்க, "நீ அன்று கண்டிலைகாண், எம்பெருமானார் பட்டர்கையிலே புஸ்தகத்தைக் கொடுத்துத் திருமுன்பே ஒரு ச்லோகத்தை விண்ணப்பம் செய்வித்துத் திருப்பிரம்புக்குப் புறம்பாகக்கொண்டு புறப்பட்டுச் சுற்றும் பார்த்தருளி, நம்முடையாரடங்கலும் நம்மை நினைத்திருக்குமாபோலே இவனை நினைத்திருங்கோள்" என்றருளிச்செய்தார். அருளாநின்றான் ஸர்வேச்வரனாகில் அதுதான் நாம் விதித்தபடி செய்வானாயிருந்தானாகில் இனிக் கண்ணழிவென்? என்ன - [இருள் இத்யாதி] - இனி, நீயும்இசையுமித்தலையே வேண்டுவது; இதுவே கண்ணழிவு. நான் அவன்வழியே போவதாகப்பார்த்தேன், நீயும் அவன்வழியே போகப்பாராய்! உமக்குத்தான் அவன்வழி

போகவேண்டுகிறதென்? என்ன; - இருள்தரு மாஞாலமாயிருந்ததே. ஸம்ஸாரமாகிறது, இருக்கவிருக்க அஜ்ஞாநத்தைத் தருவதொன்றாய்த்து; ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானையுமிறே எதிரிடப் பண்ணிற்று. [இனி] - "வானுயரின்பமெய்திலென் மற்றைநரகமே யெய்திலென்" என்று நினைத்திருந்ததொரு ப்ரமமுண்டுமுன்பு; இப்போது அது தவிர்ந்தேன். அது தவிரவேண்டுவானென்னென்னில்: - ஸ்ரீவைஷ்ணவ ஸஹவாஸத்துக்கு உடலாயிருக்கையாலும் உகந்தருளின நிலங்களிலுண்டான ஆதராதிசயத்தாலுமாக, "அங்கே யிருக்கிலென், இங்கேயிருக்கிலென்" என்று அவனெல்லைக்குள்ளே கிடக்குமத்தனையன்றோ வேண்டுவதென்றிருந்தோம்: அதுவேயாகப்பெறாதே, மற்றைப்படிக்கு உடலாயிருந்தது. ப்ரக்ருதிவச்யனுக்கு சப்தாதிவிஷயங்களிலே கொடுபோய் மூட்டும் ஸம்ஸார ஸ்வபாவத்தை யநுஸந்தித்தபின்பு விடுவதாகவே துணிந்தேன். [யான்வேண்டேன்] - என் புத்தியால் விட்டேன்; அவனிருத்தில் செய்யலாவதில்லை. ஆனால் செய்யவேண்டுவதென்னென்ன - [மருளொழி] - உன்னதொருநினைவுண்டு, அத்தைத்தவிரப்பார். "தீவினையுள்ளத்தின் சார்வல்லவாகித் தெளிவிசும்பேறலுற்றால் - திருவாறன்விளையதனை மேவி வலஞ்செய்து கைதொழக்கூடுங்கொலென்னுமென் சிந்தனை" என்று விரோதிகழிந்து போம்வழியெல்லாம்போய், "இது பரமபதத்துக்குப் போம்வழி, அது திருவாறன்விளைக்குப் போம்வழி" என்றால் "ப்ராப்யவஸ்துதான் இங்கேவந்து கிட்டிற்றாகில் இனி இங்கே யடிமைசெய்ய வமையாதோ?" என்று ப்ரமித்திருப்பதொன்றுண்டு, அத்தைத் தவிரப்பார். மருளென்று - அறிவின்மைக்குப்பேர். [மடநெஞ்சே] - "உத்தேச்யவஸ்து ஸந்நிஹிதமாய்த்தது" என்று இத்தையே பார்த்திருபித்தனை போக்கி, நம்மையும் பார்க்கவேண்டாவோ? [வாட்டாற்றான்அடிவணங்கே] - நமக்கு ஹிதகாமனாய் வந்திருக்கிறவனுடைய வழியே போய் அவனை யநுபவிக்கப் பாராய்: உகந்தருளின நிலங்களிலே வந்து நிற்கிறது நம்மை அவ்வருகே கொடுபோகைக்காயிருக்கும், நீயும் அவன்நினைவிலே போகப்பாராய். [அடிவணங்கே] - அடிவணங்குகையாவது - சரணம் புகுகை யிறே.

வாட்டாற்றானடிவணங்கி மாஞாலப்பிறப்பறுப்பான்*
கேட்டாயேமடநெஞ்சே கேசவனெம்பெருமானை*
பாட்டாயபலபாடிப் பழவினைகள்பற்றறுத்து*
நாட்டாரோடியல்வொழிந்து நாரணனை நண்ணினமே. (2)

ஒ.—இரண்டாம்பாட்டில், கேட்டாயே பவ்யமானநெஞ்சே! தன்னை அநுபவிக்கைக்கு விரோதியான மாஞாலப்பிறப்பு அறுக்கவேணும் என்று, கேசிஹந்தாவாய் என்னை அடிமைகொண்ட வாட்டாற்றானை அடிவணங்கி, அவன்ப்ரஸாதத்தாலே திருவாய்மொழி பாடவும்பெற்று, தன்னுடைய ப்ராப்திக்கு ப்ரதிபந்தகமான அவித்யாதிகளெல்லாம்போக்கி, இதரவிஷய ப்ரவணராய் நம்மோடு ஒரு பற்றின்றிக்கேயிருக்கிற நாட்டாரோட்டைச் சேர்த்தியையும் தவிர்ந்து, நாராயணனை ப்ராபிக்கப்பெற்றோமென்கிறார்.

இ.—இரண்டாம்பாட்டில், "விதிவகையே" என்று நம் இசைவு பார்த்திருக்கிறான் என்கிறதென்? "இன்னின்றநீர்மை இனியாமுறாமை" என்று அடியிலே அபேக்ஷித்திலோமோ? என்ன;—"அபேக்ஷித்தவளவோ நாம் பெற்றது!" என்கிறார். [மாஞாலப் பிறப்பறுப்பான் - வாட்டாற்றான் அடிவணங்கி] - "தன்னை அநுபவிக்கைக்கு விரோதியான மஹாப்ருதிவியில் ஜந்மத்தைப் போக்கவேணும்" என்றன்றோ நாம் அர்த்தித்தது. [கேசவன் எம்பெருமானை] - கேசியை நிரஸித்தாப்போலே நம் சேஷத்வவிரோதியைப் போக்கி முறையிலே நிறுத்தினபடியைக் கண்டாயே? அவ்வளவேயோ! [பாட்டாயபலபாடி] - விரோதியைப் போக்கினபடி கிடக்கச் செய்தே, வாசிகமான அடிமையைக்கொண்டபடி கண்டாயே. பாலேய் தமிழரிசைகாரர் பத்தர் பரவும்படியன்றோ கவிபாடுவித்துக் கொண்டபடி. ப்ரசஸ்தகேசனாயிருக்கிற அழகைக் காட்டித் தோற்பித்துக் கவிபாடுவித்துக்கொண்டான் என்றுமாம். [பாடிப் பழவினைகள் பற்றறுத்து] - நாம் அடிமைசெய்ய, ப்ராப்தி ப்ரதிபந்தகமாய் அநாதிகாலார்ஜிதமான அவித்யாதிகளெல்லாம் போகப்

பெற்றபடி கண்டாயே. நாம் அநாதிகாலங்கூட ஆர்ஜ்ஜித்தவற்றை, ஒரு ஸர்வசக்தி அல்பகாலத்திலே போக்கினபடிகண்டாயே. [நாட்டாரோடு இயல்வொழிந்து] - அஹங்கார மமகார வச்யரோடு தொற்றற்ற படி கண்டாயே. "இவை என்ன உலகியற்கை" "கொடுஉலகங் காட்டேலே" என்னப்பண்ணினபடி கண்டாயே. [நாரணனை நண்ணினமே] - நிருபாதிக ஸர்வரக்ஷகனைக் கிட்டப்பெற்றோம். நிருபாதிக ஸர்வவிதபந்துவைக் கிட்டப்பெற்றோம். [கேட்டாயே மடநெஞ்சே] - பவ்யமானநெஞ்சே, கேட்டாயே! என்று உபகாரஸ்ம்ருதி தோற்றக் கூறுகொள்ளுகிறார்.

௩௫.—இரண்டாம்பாட்டு. "விதிவகையே" என்று - கேவல பகவத்க்ருபையாலே வந்ததாகச் சொல்லுகிறதென்? அடியிலே "இன்னதோர்தன்மை யினியாம்உறாமை" என்றிலோமோ நாம்? என்ன,—நாம் அபேக்ஷித்தவளவோ பெற்றது? என்கிறார்.

[மாறுபாலப்பிறப்பறுப்பான் - வாட்டாற்றானடிவணங்கி - கேசவனெம்பெருமானைப் பாட்டாயபலபாடிப் பழவினைகள் பற்றறுத்து நாட்டாரோடியல்வொழிந்து நாரணனை நண்ணினம் - கேட்டாயேமடநெஞ்சே] - இதெல்லாம் அவனருளாலே வந்ததாயிருந்ததோ? நாம் இரந்துபெற்றதாயிருந்ததோ? விரோதிபோகவேணுமென்னும் இவ்வளவன்றோ நாம் அபேக்ஷித்தது; கெடுவாய், நாம் அபேக்ஷித்தவளவதியே. [மாறுபாலப்பிறப்பறுப்பான் - வாட்டாற்றானடிவணங்கி] - "ஸம்ஸாரஸம்பந்தத்தை யறுத்துத்தரவேணும்" என்றன்றோ நாம் ஸர்வேச்வரன்திருவடிகளை யாச்ரயித்தது. அதுக்குமேலே அவன் நம்மை அடிமையுங் கொண்டான் கண்டாயே. வாசிகமானவடிமையன்றோ கொண்டது. [கேசவனெம்பெருமானை] - கேசிஹந்தாவான ஸர்வேச்வரனை; கேசியைப் போக்கினாப்போலே நம் விரோதியைப்போக்கி நம்முடைய சேஷத்வத்தை நிலைநிறுத்தி நமக்கு ஸ்வாமியாயுள்ளவனை; அன்றிக்கே, ப்ரசஸ்தகேசன் தன்னழகைக்காட்டி நம்மையடிமை கொண்டவனென்றுமாம். அவ்வளவேயோ, [பாட்டாயபலபாடி] - பாலேய்தமிழ் இசைகாரர் பத்தர்பரவும்படியன்றோ நம்மையிடுவித்துக் கவிபாடுவித்துக்கொண்டபடி. "விரோதியைப்போக்கி யடிமைகொள்ள வேணும்" என்று நாம் அபேக்ஷிக்க, அதுவுங்கிடக்கச் செய்தே, அடிமைகொண்டான் கண்டாயே. [பாடிப்பழவினைகள்பற்றறுத்து] - நாம் அடிமைசெய்ய, ப்ராப்திப்ரதிபந்தகமாய் அநாதிகாலார்ஜ்ஜிதமான அவித்யாதிகளெல்லாம் போகப்பெற்றபடி கண்டாயே. இவர்வினை யறுக்கக் குடித்த வேப்பங்குடிநீர் இதுகாணும். *கேசவம் வைத்யம்* - இவன் நெடுநாள்கூட ஈட்டின இது ஸர்வசக்திபோக்கப்புக்கால் ஒருகாலே போகலாயிருக்குமிறே. [நாட்டாரோடியல் வொழிந்து] - உண்டியேயுடையேயுகந்தோடும் இம்மண்டலத்தாரோடு தொற்றறப் பெற்றபடி கண்டாயே. "யானேயென்தனதே" என்று அஹங்கார மமகார வச்யராயிருக்கிறவர் களோடே ஸம்பந்தமறப்பெற்றோம். "ஓ ஓ வுலகினதியல்வே" "இவையென்ன வுலகியற்கை" "கொடுவுலகங்காட்டேலே" என்னப்பண்ணினபடி கண்டாயே; "உங்களோடு எங்களிடை யில்லை" என்றுகழிந்தவரிறே. [நாரணனைநண்ணினம்] - ஸோபாதிகபந்துக்களை விட்ட வளவோ? நிருபாதிகபந்துவைப் பற்றவும்பெற்றோம். விட்டவர்கள்தன்னை ஆகாராந்தரத்தாலே பற்றுகிறார்காணும். முக்தனுக்கு ததீயத்வாகாரத்தாலே அநுபாவ்யமாகிறதிறே இதுதான். ஸ்வயம்பாகந்தவிர்ந்து பிதாவோடே யொன்றாக ஜீவிப்பாரைப்போலேகாணும். படுக்கைக் கீழே மஹாநிதிகிடக்கப் புறங்கால்வீங்கிச் சாவாரைப்போலேயிறே, நாராயணனுயிருக்கச் செய்தேயும் நண்ணாதிருந்தபடி. [கேட்டாயே மடநெஞ்சே] - பெற்றபேற்றின் கனத்தை யநுஸந்தித்து, வகாதது வந்ததென்று திமிர்த்திருக்கிறாயோ? இத்தை அநுபவியா நின்றாயோ! *ஸௌமித்ரே புங்க்ஷ்வ* *வைதேஹி ரமஸேகச்சித்* போலே 'மாறுபாலப்பிறப்பறுப்பான் கேச வனெம்பெருமானை வாட்டாற்றானடிவணங்கி - பாட்டாயபலபாடிப்பழவினைகள்பற்றறுத்து நாட்டாரோடியல்வொழிந்து நாரணனைநண்ணினம் - கேட்டாயே மடநெஞ்சே' என்றந்வயம்.

நண்ணினம்நாராயணனை நாமங்கள்பலசொல்லி*
மண்ணுலகில்வளம்மிக்க வாட்டாற்றான்வந்து*இன்று
விண்ணுலகம்தருவானாய் விரைகின்றான்விதிவகையே*
எண்ணினவாறாகா இக்கருமங்களென்னெஞ்சே. (3)

ஒ.—மூன்றாம்பாட்டில், எம்பெருமான் நம்மை விஷயீகரிக்கவல்லனே யென்று நாமிருக்க, அவ்வளவன்றிக்கே, அத்யபிநிவிஷ்டனாய் நாம்விதித்தபடி செய்வானாயிராநின்றான். நெஞ்சே! என்னினைவளவன்றிக்கே கருமங்கள் விழும்படிஎன்? என்கிறார். [நண்ணினம் என்றுதொடங்கி] - பல திருநாமங்களைச் சொல்லி எம்பெருமானை அநுபவிக்கப்பெற்றோம். வளம் - ஸம்பத்து [என்னெஞ்சே]- இஸ்ஸம்ருத்தியெல்லாம் உன்னுடைய ஆநுகூல்யத்தாலே வந்ததென்று கருத்து.

இ.—மூன்றாம்பாட்டில், நெஞ்சே, நம்மை விஷயீகரிக்கவல்லனே என்று நாமிருக்க, அவ்வளவன்றிக்கே ப்பலிக்கிறபடியென்? என்கிறார். [நாராயணனை நாமங்கள்பலசொல்லி-நண்ணினம்]- கிட்டி அநுபவிக்கப் பெற்றோம். ''விண்ணுலகம்'' என்கிறபேற்றுக்குச் சொல்லில், மோக்ஷத்தில் விநியோகமான திருமந்த்ரமே அமையும்; ''ஸர்வார்த்தஸாதக.'' என்கிறபடியே ப்ரயோஜநாந்தரங் களுக்கும் அதுவே அமையும்; ப்ரீதிப் ரேரிக்க அநுபவத்துக்காகச் சொல்லுகையாலே எல்லாத் திருநாமங் களும் வேணும். [மண்ணுலகில் இத்யாதி] - பரமபதத்திற்காட்டில் ஸம்ருத்தி மிக்கிருந்துள்ள திருவாட்டாற்றை நிரூபகமாக வுடையவன். [வளம்] - ஸம்பத்து. ரக்ஷ்யம் குறைவற்ற தேசமாகையாலே ரக்ஷகனுக்கு ஸம்பத்து மிக்கிருக்கும் இங்கு; கைங்கர்யத்துக்கு விச்சேதமில்லாமையாலே சேஷபூதனுக்கு ஸம்பத்து மிக்கிருக்கும் அங்கு. [வந்து] - நாம் செல்லவேண்டும் தேசமடங்கக் தானேவந்து. [இன்று] - நம்பக்கல் இதுக்கு அடியாயிருப்பதொன்று மென்னேற்றில்லை; இன்று இங்ஙனே விடியக்கண்டதித்தனை, [விண்ணுலகம் தருவானாய்] - பரமபதத்திலே செல்லப்பெறுகையன்றிக்கே, ''ஆண்மின்கள் வானகம்'' என்கிற பொதுவுமன்றிக்கே, த்ரிபாத்விபூதியையும் நமக்கே தருவானாயிராநின்றான். [விரைகின்றான்] - ஸாபேக்ஷரான நாம் ஆறியிருக்க, நிரபேக்ஷனானவன் பதறாநின்றான். முன்பு இவர் விரைந்த போது ஒரு கார்யார்த்தமாக வைத்தானாய், அதுதலைக்கட்டினவாறே, விஸத்ருசமான விபூதி இவர்க்குத்தரமன்று என்று பதறாநின்றான். தொடங்கின அப்போதே தலைக்கட்டவல்ல ஸர்வசக்திக்குப் பதறவேண்டுகிறதென் என்னில்? - [விதிவகையே] - நாம்விதிக்கத் தருவானாக வேண்டியிராநின்றான். [எண்ணினவாறாகா] - நாம் ''இவன் விரையவேணும்'' என்று எண்ணினோமோ? [இக்கருமங்கள்]-பகவத்விஷயத்தில் ப்பலிக்கும் படி, புறம்பு ஒருவனை ஒன்று அர்த்தித்தால் பேற்றளவும் இவன்தானே அர்த்திக்கவேணும்; இவ்விஷயத் தில், இவன் ஒருகால் அர்த்தித்து விட்டால் பின்பு தன்பேறாகத்தானே அர்த்தித்துக்கொடுக்கும். [என் னெஞ்சே] - இஸ்ஸம்ருத்தியெல்லாம் நீ என்வழியே போருகையாலேயிறே ஸித்தித்தது.

ஈடு.—மூன்றாம்பாட்டு. நெஞ்சே! நம்மை விஷயீகரிக்கவல்லனே என்று நாமிருக்க, அவ்வளவன்றிக்கே ப்பலிக்கிறபடியென்? என்கிறார்.

[நாராயணனை நாமங்கள்பலசொல்லி - நண்ணினம்] - ப்ராப்தனான ஸ்வாமியைக் கிட்டப் பெற்றோம். [நாமங்கள்பலசொல்லி] - *நமோ நாராயணாயேதி மந்த்ரஸ் ஸர்வார்த்தஸாதக:* என்று இதுவேயமையுமிறே ப்பலாபிஸந்திபண்ணில், ப்ரீதிப்ரேரிதராய்க்கொண்டு திருநாமங்கள் பலவற்றையும் சொல்லி. [மண்ணுலகில் இத்யாதி] - பரமபதத்திற்காட்டில் ஸம்ருத்தி மிக்கிருந் துள்ள திருவாட்டாற்றைத் தனக்கு நிரூபகமாகவுடையவன். [வளம்] - ஸம்பத்து. ரக்ஷ்ய வர்க்கம் குறைவற்ற தேசமாகையாலே ரக்ஷகனுக்கு ஸம்பத்து மிக்கிருக்கும் இங்கு; கைங் கர்யத்துக்கு விச்சேதமில்லாமையாலே சேஷபூதனுக்கு ஸம்பத்து மிக்கிருக்கும் அங்கு. [வந்து] - நாம்செல்லவேண்டும் தேசமடங்கத் தானே வந்து. [இன்று] - நம்பக்கல் இதுக்கடியா யிருப்பதொன்று மென்னேற்றில்லை; இன்றிங்ஙனே விடியக்கண்டதித்தனை. [விண்ணுலகம் தருவானாய்] - அங்கே ஒருகுடியிருப்பு மாத்ரமே கொடுத்துவிடுவானாயிருக்கிறிலன். ''வானவர் நாடு'' ''ஆண்மின்கள் வானகம்'' என்கிற பொதுவையறுத்து நமக்கே தருவானாக த்வரியா நின்றான். ஆவதறிவதாகிற விபூதி இவர்க்குத் தரமன்றென்று காணும் அவன் நினைவு. இவர்க்கே கொடுக்கையாவது - இவர் ப்ரார்த்தித்தபடியே வழுவிலாவடிமையைக் கொடுக்கை யிறே. [விரைகின்றான்] - நம்மைப்போல் ஆறியிருக்கிறிலன். ''சிறப்பில்வீடு - இறப்பு செய்துக வெய்தற்க'' என்றுஒரு ஆற்றலுண்டிறே நமக்கு. தான் முற்பாடனாய்ச்

சரக்குக்கட்டிப் புறப்பட்டு நிற்பது, இவர் தாழ்த்தாரென்று மீளாப் போய்ப்புக்கு ''ஆழ்வீர்; போசீரோபோசீரோ'' என்று பதறுகின்றான். ஒரு கார்யப்பாட்டாலே வைத்தானாய், அக்கார்யம் முடியுமளவானவாறே த்வரியாநின்றான். ஸர்வசக்தியான தனக்கும் க்ரமப்ராப்தி பற்றாதபடி யாய்த்து த்வரையிருக்கிறபடி. ஸங்கல்பித்த கார்யம் செய்யுமளவும் பொறுக்கிறிலனாய்த்து. இப்படி செய்யாநின்றானாகில் நினைக்கிறான்: தான் ஸர்வசக்தியான ஸர்வேச்வரனாகில் பின்னை அங்ஙன் விரையவேண்டுகிறதென்னென்னில்,—[விதிவகையே] - நாம் சொல்லப் பரமபதம் தந்தானாகவேணுமென்றிராநின்றான். ''எம்மாவீட்டுத்திறமும் செப்பம்'' என்றாரே, அது தவிர்ந்து ''உண்டிட்டாயினியுண்டொழியாய்'', ''திருவாணைநின்னாணை'' என்று தடுத்தும் வளைத்தும் செய்தால் பின்பு கொடுப்பதாக இராநின்றான். [விதிவகையே - விண்ணுலகந்தருவானாய் விரைகின்றான்] - இவர்க்கு ருசிபிறப்பதற்கு முன்பு தான் எதிர்சூழல்புக்கு விரைந்து திரிந்தான்; ருசிபிறந்த பின்பு இவர் விரையத்தொடங்கினார்; அதுகண்டு அவனுக்கு இவரளவல்லாதபடி விரைதல் மிக்கது; அதுகண்டு இவர் விஸ்மயப்படுகிறார். இவனுக்கு ருசிபிறக்குமளவுமிறே அவன் ஆறியிருப்பது? இவனுக்கு அதுண்டானால் பின்னை பேற்றளவுஞ்செல்ல விரைவான் அவனாய்த்து. உடையவனிறே உடைமைக்கு விரைவான்? [எண்ணினவாறாகா] - ''இக்கின்ற நீர்மை இனியாமுறாமை'' என்று இவ்வளவன்றோ நாம் எண்ணிற்று? அவனை ''விரையவேணும்'' என்றெண்ணினோமோ? [இக்கருமங்கள்] - பகவத்விஷயத்தில் தாந்தாம் எண்ணியிருந்தவளவல்லகாண் கார்யம் ப்பலிக்கும்படி. லௌகிகரிலே சிலரை ''என்கார்யத்துக்கு நீ கடவை'' என்று சொன்னாலும், பின்னையும் பேற்றளவுஞ்செல்லத் தனக்கே ப்ரவர்த்திக்க வேணுமே; அப்படியேயன்னத்திராதே கொள்ளாய் இவ்விஷயத்திலும். [என்னெஞ்சே]- அவன் முறையிலே விரைய நாம்பெற்றது, நீ முறையிலே நிற்கையன்றோ? பந்தஹேதுவானவை தவிர்ந்து மோக்ஷஹேதுவானவையன்றோ? உன்னுடைய ஸம்ருத்தியன்றோ இதெல்லாம்?

என்னெஞ்சத்துள்ளிருந்து இங்கிருந்தமிழ்நூலிவைமொழிந்து*
வன்னெஞ்சத்திரணியனை மார்விடந்தவாட்டாற்றான்*
மன்னஞ்சப்பாரதத்துப் பாண்டவர்க்காய்ப்படைதொட்டான்*
நன்னெஞ்சேநம்பெருமான் நமக்கருள்தான்செய்வானே. (4)

ஒ.—நாலாம்பாட்டில், நம்விஷயத்தில் இத்தனைபவ்யனாக ஸம்பவிக்குமோ என்னில்; ஆச்ரித விஷயத்தில் எல்லாம் செய்வானானபின்பு நாம் அபேக்ஷித்ததெல்லாம் செய்யுமென்கிறார். [என்னெஞ்சத்து என்றுதொடங்கி] - ஹ்ருதயத்திலேயிருந்து, என்னைஉபகரணமாகக்கொண்டு இஸ்ஸம்ஸாரத்திலே இப்படி விலக்ஷணமான திருவாய்மொழியை யருளிச்செய்து, ஆச்ரிதனான ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்காக வலியநெஞ்சை யுடையனான ஹிரண்யனுடைய மார்வைப்பிளந்த திருவாட்டாற்றில் எம்பெருமான். [மன்னஞ்ச என்றுமேலுக்கு] - பீஷ்மாதி ராஜாக்கள் அஞ்சும்படி பாரதஸமரத்திலே ஆயுதம் தொடேன் என்று ப்ரதிஜ்ஞை பண்ணிவைத்து ஆச்ரிதரான பாண்டவர்களுக்காக அஸத்ய ப்ரதிஜ்ஞனாய் ஆயுதத்தை எடுத்தான் எம்பெருமான் என்றால் உகக்கும்நெஞ்சே! நமக்கு நாதனான தான் நம்அபேக்ஷிதங்களெல்லாம் செய்யும்.

இ.—நாலாம்பாட்டில், ஸர்வேச்வரன் தான் நாம் விதித்த இது செய்வதாகச்சொன்ன இது ஸம்பவிக்குமோவென்னில்; அவனுடைய ஆச்ரிதவாத்ஸல்யத்தை அநுஸந்தித்தால் கூடாததில்லை என்கிறார். [என்னெஞ்சத்து] - ஸம்ஸாரத்திலே விஷயாந்தரப்ரவணமான நெஞ்சென்று இவர் இறாயாநின்றார்; இவர் ''என்னது'' என்றஇதுவே ஹேதுவாக அவன், மேல்விழாநின்றான். இவர் அயோக்யமென்று அகல அதுவே ஹேதுவாக அவன்புகுராநில்லாநின்றான். [உள்] - கார்யார்த்தமாக இருக்கையன்றிக்கே தன் விடாய்தோற்ற உள்ளே புகுந்தான். [இருந்து] - புறம்பு ஒருவிபூதியுண்டென்று நினையாதே ஸ்த்தாவர ப்ரதிஷ்டையாயிராநின்றான். [இங்கு] - பரமபதத்தில் பரிமாற்றத்தை ஸம்ஸாரத்திலே உண்டாக்கினான். [இருந்தமிழ்] - விலக்ஷணமான தமிழ். [நூல்] - பின்பு லக்ஷணங் கட்டுவார்க்கும் இதுவே கொண்டு

செய்யவேண்டும்படியிருக்கை. இவர் ஆற்றாமையாலே சொன்னஇத்தை அவன் ஸலக்ஷணோபேதமாக்கினானாய்த்து. [இவை] - தமக்கும் கொண்டாடவேண்டியிருக்குமிவை. [மொழிந்து] - பாடினானவனாய்த் தாம் கற்றுச் சொன்னாரோபாதியாக நினைத்திருக்கிறார். [வன்னெஞ்சம்] - பகவத்விஷயமென்றால் அஸஹ்யமான நெஞ்சு. [மார்விடந்த] - துர்மானங்கிடந்தவிடத்தைக் குட்டமிட்டழிக்கை. முன்பு தமப்பன் பகையாகச் சிறுக்கனுக்குஉதவினவன் நமக்கு உதவானோ என்று கருத்து. [வாட்டாற்றான்] - பிற்பாடர்க்கு உதவுகைக்காகத் திருவாட்டாற்றிலே வர்த்திக்கிறவன். [மன்னஞ்சஇத்யாதி] - ஸிம்ஹத்தைக்கண்ட நரிபோலே பீஷ்மாதி ராஜலோகங்கள் அஞ்ச, பாரதஸமரத்திலே "க்ருஷ்ணாச்ரயா: க்ருஷ்ணபலா": என்கிறவர்களுக்குக் கையாளாய் [படைதொட்டான்] படையெடுத்தான். படைவிடானென்னப் பெற்றதில்லை. ஸங்கல்பத்தைக் குலைந்தவித்தனை; கார்யங்கொள்ளப் பெற்றிலன். ஸத்யஸங்கல்பன் என்கிறது ஆச்ரிதரை யொழிந்தவிடத்திலேயிறே. விடாவிட்டதென்னென்னில்; அர்ஜுநன்தான் "நீ ஆயுதம்விடில் எனக்கு அவத்யம்" என்கையாலே. [நல்நெஞ்சே] - ஆச்ரிதபக்ஷபாதத்தைக் கேட்டால் உகக்கும் நெஞ்சே! [நம்பெருமான்] - நமக்கு ஸ்வாமியானவன், [நமக்கு அருள்தான் செய்வானே] - நமக்கு அவ்வருளைப்பண்ணியேவிடும்; "விண்ணுலகம்தருவானாய் விரைகின்றான்" என்கிறபேற்றைப் பண்ணியே விடும்; இது கிஞ்சிதம். இசைவுக்கு நீயுண்டு, இசைவைக்கொண்டு கார்யஞ் செய்கைக்கு அவனோடு ஸம்பந்தமுண்டு; நம்பேற்றுக்குக் குறைவுண்டோ ?

ஈடு.—நாலாம்பாட்டு. ஸர்வேச்வரன் நாம் விதித்தபடியே செய்வானாகச் சொன்னவிது ஸம்பவிக்குமோவென்னில்; — அவனுடைய ஆச்ரிதபாரதந்த்ர்யத்தை யநுஸந்தித்தால் கூடாததில்லைகாண் என்கிறார்.

[என்னெஞ்சத்து] - அநாதிகாலம் ஸம்ஸாரத்திலே தன்னையொழிந்த சப்தாதி விஷயங்களை புகந்துபோந்ததென்றாய்த்து இவர் 'என்னெஞ்சு' என்று இருக்கிறது. இதில் குண தோஷங்கள் கிடந்தபடி கிடக்க, இவர் "என்னது" என்றதுவே ஹேதுவாக அவன் மேல் விழாநின்றான். இவர் என்னெஞ்சென்று புறம்பே கால்வாங்காநின்றார்; அவன் அதுவே ஹேதுவாக உள்ளேபோக அடியிடாநின்றான். [உள்] - விடாயர் மேலிலீரை நீக்கி உள்ளே ஆழமுழுக்கிடக்குமாபோலே, நெஞ்சினுள்ளே புகுந்தான். [இருந்து] - தனக்குஅவ்வருகு ஒரு விபூதியுண்டாகவும், அங்கேபோவானாகவும் நினைத்திருக்கிறிலன். ஸ்த்தாவரப்ரதிஷ்டையாக விருந்து. [இங்கு] - அங்கில்லாத ஸம்பத்தையும் இங்கேயுண்டாக்கினான். [இருந்தமிழ்] - அவ்விபூதிக்கும்அடங்காதபடியாய்த்து இவற்றின்நன்மை "கேட்டாரார்" என்னக்கடவதிறே. [நூல்] - பின்புள்ளார்க்கும் இதுகொண்டு லக்ஷணம் கட்டலாம்படியாய்த்து இவையிருப்பது. இவர் ஆற்றாமையாலே சொல்லச் செய்தேயும், அது ஸர்வலக்ஷணோபேதமாம்படி சொல்லுவித்தானாய்த்து. [இவை] - "இன்னதுசெய்தான்" என்னப்புக்கு நடுவே 'இவை' என்று அநுபவிக்கிறாராய்த்து. [மொழிந்து] - ஒருவன் பாடின கவியைக் கற்றுச் சொன்னவனும், தனக்கு அதிலே குவாலாக அந்வயமுண்டாக அபிமாநித்திருக்கும்; அதுவும் நினைத்திருக்கிறிலர் காணும் இவர். "என் முன் சொல்லும்" என்றவற்றையும் ஒன்றாக நினைத்திருக்கிறிலர். [வன்னெஞ்சத்து இத்யாதி] பகவத்விஷயமென்றால் அதிர்ந்திருக்கும்படி திண்ணிதான நெஞ்சையுடைய ஹிரண்யனுடைய முரட்டுநெஞ்சை அநாயாஸேந இடந்த திருவாட்டாற்றான். முன்பு தமப்பன் பகையாகச் சிறுக்கனுக்கு உதவினவன், நமக்கு உதவானோ என்று கருத்து. துர்மானம் கிடந்த விடத்தைக் குட்டமிட்டு இடந்தான் காணும். [வாட்டாற்றான்] - பிற்பாடர்க்கு உதவுகைக்காகத் திருவாட்டாற்றிலே வர்த்திக்கிறவன். அவன்நெஞ்சிற் குறைதீர்த்தாப்போலே நம்நெஞ்சிற் குறை தீர்க்கவங்கு நிற்கிறவன். [மன்னஞ்ச] - அதிரதமஹாரதரென்று பேர்பெற்றவர்களடங்கலும், ஸிம்ஹத்தைக் கண்ட நரிபோலே குலையும்படியாக. ராஜலோக மடங்கலும் அஞ்சும்படியாக. [பாண்டவர்க்காய்] - "இன்னார்தூதன்" என்னும்படி அவர்களுக்குக் கையாளாய். [படைதொட்டான்] - படையெடுத்தான். படைவிடானென்னப் பெற்றதில்லை; ஸங்கல்பத்தைக் குலைத்தானித்தனையே; கார்யங்கொள்ளப் பெற்றதில்லை. ஸத்யஸங்கல்பன் என்றது, - ஆச்ரிதரை யொழிந்தவிடத்திலிறே; விடாவிட்டது, அர்ஜுநன் "நீ ஆயுதம்விடுகை எனக்கு அவத்யம்" என்கையாலே. ஆகில் தவிரலாகாதோ

வென்று தவிர்த்தான். (மன்னர்மறுக இத்யாதி) அர்ஜ்ஜுநன்குதிரைகளிளைத்தவளவிலே, கடிகஸ்தலத்திலே நீர்நரம்பு அறியுமவனாகையாலே வாருணாஸ்த்ரத்தைவிட்டு அங்கே நீரையுண்டாக்கிக் குதிரைகளை விட்டு நீரூட்டிப் புரட்டி எழுப்பிக்கொடுபோந்து பூட்டிக் கொண்டு வந்து முன்னேநிறுத்தின இத்தைக்கண்ட ராஜலோகமடைய, "இவனுடைய பக்ஷபாத மிருந்தபடியால் நாம் இவனைவெல்லுகையென்று ஒன்றுஉண்டோ?" என்று குடல் மறுகிற்றாய்த்து. "முன்அங்குநின்று மோழைபெழுவித்த" - எல்லாருங்காணக் குமிழி நீரெழும்படி பண்ணினான். அவனுடைய ஆச்ரிதபாரதந்த்ர்யத்தை யநுஸந்தித்தவாறே நெஞ்சு அநுகூலித்தது. [நன்னெஞ்சே இத்யாதி] - அல்லேனென்னுமைக்கு நீயுண்டு, ஆமோமென்கைக்கு அவனுண்டு, அவனை ப்ரேரிக்கைக்கு கருணையுண்டு. [நம்பெருமான்] - நமக்கு ஸ்வாமியான தான், நமக்கு அருள்பண்ணிப்போவிடும். "விண்ணுலகம் தருவானாய்விரைகின்றான்" என்கிறபேற்றைப் பண்ணிப்போவிடும்; இது நிச்சிதம். இசைகைக்கு நீயுண்டு, இசைவிப்பிக்கைக்கு அவனுண்டு, இசைவைக் கொண்டு கார்யம் செய்கைக்கு ஸம்பந்தமுண்டு; இனி நம்பேற்றுக்குக் குறையுண்டோ?

வானேறவழிதந்த வாட்டாற்றான்பணிவகையே*
நானேறப்பெறுகின்றேன் நரகத்தைநகுநெஞ்சே*
தேனேறுமலர்த்துளவம் திகழ்பாதன்*செழும்பறவை
தானேறித்திரிவான தாளிணையென்தலைமேலே. (5)

ஒ.—அஞ்சாம்பாட்டில், அவன் ப்ரஸாதத்தாலே ஆச்ரிதர்க்குத் திருநாட்டுக்குப் போகைக்கு வைத்த அர்ச்சிராதிகதியாலே போகவும்பெறுகின்றேன்; பெரிய திருவடிமேலே யிருக்குமாபோலே அவன்திருவடிகள் என்தலைமேலேயிருக்கவும் பெற்றேனென்று ப்ரீதராகிறார். வழியென்று - உபாயமாகவுமாம். [நரகத்தை நகுநெஞ்சே] - நெஞ்சே! அவனைப் பிரிந்திருக்கையாகிற நரகத்தை நகு. நரகமென்று - ஸம்ஸாரமாகவுமாம். [தேனேறு மலர்த்துளவம் திகழ்பாதன்] - தேன்மிகாநின்றுள்ள திருத்துழாயாலே அலங்க்ருதமான திருவடிகளையுடையவன்.

இ.—அஞ்சாம்பாட்டில், அவன் பரமபதத்துக்குப்போக ஆச்ரிதர்க்கு வைத்த அர்ச்சிராதிகதியாலே போகப்பெறுகின்றேன். நித்யாச்ரிதரைப்போலே என்னை விஷயீகரிக்கவும் பெற்றேன் என்கிறார். [வானேற] - அபுநராவ்ருத்தி லக்ஷணமான பரமபதத்திலே ஏறுகைக்கு அர்ச்சிராதிகதியைத்தந்த. பரமபதலாபத்திலும் அவ்வருகே ஒருலாபமென்னும்படியிறே அர்ச்சிராதிகதிஸித்தி. [வாட்டாற்றான்] - இப்பேற்றுக்கு க்ருஷிபண்ணினதேசம் [பணிவகையே] - சொன்னபடியே, "மாமேகம் சரணம் வ்ரஜ" என்றபடியே; "பண்டேபரமன் பணித்தபணிவகை" என்றாரிறே; "மரணமானால்" என்று சொன்னபடியே யென்னவுமாம். [நானேற இத்யாதி] - நான் செல்லப்பெறுகின்றேன்; ஸம்ஸாரத்தைப்பார்த்து, "உன்னை வென்றேன்" என்று சிரித்துப்போகப்பார். உன்னை நெடுநாள் குடிமைகொண்டதென்று பார்த்து உன்வெற்றி தோற்றப் போ; விச்லேஷமாகிற நரகத்தை நகுவென்றுமாம். இச்செருக்குக்கு அடியென்? என்ன,—[தேனேறு மலர்த்துளவம் திகழ்பாதன்] - நாட்செல்ல நாட்செல்லத் தேன்மிக்கு வாராநின்றுள்ள மலரையுடைய திருத்துழாய் விளங்காநின்றுள்ள திருவடிகளையுடையவன். திருத்துழாயாலே அலங்க்ருதமான திருவடிகளென்றுமாம். [செழும்பறவை] - இவனோட்டை ஸம்ச்லேஷத்தாலே தர்சநீயமான வடிவையுடையவன். [தானேறித் திரிவான தாளிணை] - அவனுக்காகவுமன்றிக்கே அவனோட்டை ஸ்பர்சத்துக்காகத் தானே ஏறி ஸஞ்சரிக்குமவனுடைய திருவடிகள். [என் தலைமேலே] - அவன்தோளிலிருக்கை தவிர்ந்து என்தலைமேலே யிராநின்றான்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. அவன் பரமபதத்துக்குப்போக ஆச்ரிதர்க்கு வைத்த அர்ச்சிராதிகதியாலே போகப்பெறுகின்றேன்; நித்யாச்ரிதரைப்போலே என்னை விஷயீகரிக்கவும் பெற்றேனென்கிறார்.

[வானேறஇத்யாதி]-பரமபதத்திலேபோய்ப் புகுகைக்கு அர்ச்சிராதிமார்க்கத்தைத் தந்து பரமபதலாபத்திலும் அவ்வருகே வொருலாபமென்னும்படியிறே அர்ச்சிராதிகதிஸிந்தி. "போம் வழியைத்தரும்" என்று ஈடுபடும்படியிறே அதினுடைய வைலக்ஷண்யம். [வாட்டாற்றான்]-இப்பேற்றுக்கு க்ருஷிபண்ணினவிடம். [பணிவகையே] - அவன் திருவுள்ளமானபடியே; அதாவது *மாமேகம் சரணம்வ்ரஜ* என்றதைச் சொல்லுகிறார்; "பண்டே பரமன்பணித்த பணிவகையே" என்றாரிறே; "மரணமானால்" என்றதைச் சொல்லிற்றாகவுமாம். [நானேறப்பெறுகின்றேன்]- "கண்ணன்னைவைதந்தனோடு என்னெஞ்சினாரைக்கண்டால்" என்று தூதுவிட்டுப்பார்த்திருக்கக்கடவ நான் உனக்குச்சொல்லவேண்டும்படியாவதே! [நான்இத்யாதி] - நான் பரமபதத்திலே ஏறப்பெறுகின்றேன். ஆனால் நான் செய்யவேண்டுவதென்னென்ன? - [நரகத்தை நகுநெஞ்சே] - ப்ராப்யபூமி கிட்டிற்றென்று கடுகக் கால்வாங்கிப் போகப்பாராதேகிடாய்! நெடுநாள் நம்மைக் குடிமக்களாக்கி எளிவரவு படுத்தின ஸம்ஸாரத்தைப் புரிந்து பார்த்துச் சிரித்துப்போருகிடாய். "உன்னைவென்றோமிறே" என்று புரிந்து பார்[illegible] சிரித்துப்போரு. பிள்ளை அழகியமணவாளப்பெருமாளரையர் க்ரந்தியைப்பார்த்துச் சிரித்துச் சொன்னவார்த்தையை நினைப்பது. *தேவ நாதேவ மஹதா நிர்ஜகாம ஹரீச்வர:* மஹாராஜர் வந்து அறைகூவ, "பூர்வக்ஷணத்திலே பரிபவப்பட்டுப்போனவன் இப்போது வந்து அறைகூவும்போது, வெறுமனல்ல; போதல்லாப்போதிலே நீ புறப்படக்கடவையல்லை" என்று தாரை காற்கட்டச் செய்தேயும், க்ஷத்ரியனாகையாலே பரிபவம் பொறுக்கமாட்டாமை புறப்பட்டு, "மிடற்றோசை யிருந்தபடியென்? பழைய கோழைத்தனமற்றுத் தெளிந்து முழங்கியிருந்தது; இதுக்கோராதிபுண்டாகவேணும்: உண்டாய்த்தாகில் நமக்குஇரைபோருமிறது" என்றானிறே. *ஹரீச்வர:* இதுக்குமுன்பு பிறரைஅறைகூவ ஜீவித்தவனல்லன். அப்படியே அவனையண்டை கொண்டபலத்தாலே, ஸம்ஸாரத்தைப் பார்த்து "உன்னைவென்றோமிறே" என்று கையைத்தட்டிச்சிரித்துக்கிடாய் போருவது. அறிவுகேடர்க்கு, நரகமென்று யமாதிகள்குடியிருப்பைச் சொல்லிற்றாகவுமாம். "மற்றைநரகம்" என்கிற ஸம்ஸாரத்தைச் சொல்லுகிறது; வானுயரின்பத்துக்கு எதிர்த்தட்டிறே. நாம் இப்படி ஸம்ஸாரத்தைக் கைதட்டிச் சிரிக்கைக்கு நமக்கு உத்தேச்ய வஸ்துதான் கைபுகுந்ததோவென்ன - [தேனேறுஇத்யாதி] - விண்ணகப்பெருக்குப்போலே நாட்செல்ல நாட்செல்லத் தேனேறிவாராநிற்பதாய் மலரையுடைத்தான திருத்துழாயானது விளங்காநின்றுள்ள திருவடிகளையுடையவன். [செழும்பறவை] - அவனோட்டை ஸம்ச்லேஷத்தாலே குளிர்ந்து தர்சநீயமான வேஷத்தையுடைய திருவடியை. இத்தால் ஸர்வேச்வரனோட்டை ஸ்பர்சம் இவனுக்கிருக்கும்படிசொல்லிற்று [தானேறித்திரிவான] - அவனுக்காகவன்றிக்கே அவன்தோளில்இருப்பு ஸாகல்யபர்சமாயிருக்கையாலே அவனை மேற்கொண்டு ஸஞ்சரியாநிற்குமாய்த்து. [தானேறித்திரிவானதாளிணையென்தலைமேலே] - திருவடிதிருத்தோளிலும் என்தலையிலுமான இது தவிர்ந்து என்தலையிலேயாய்த்து. அவன் இழவுக்கு வெறுக்கவேண்டாவிறே; அவன்தானே தொடுவந்து கொடுக்கப்பெற்றவராகையாலே. ஆகையிறே ஒருபழு ஏறப்பெற்றது.

தலைமேலதாளிணைகள் தாமரைக்கண்ணென்னம்மான்*
நிலைபேராதென்னெஞ்சத்து எப்பொழுதுமெம்பெருமான்*
மலைமாடத்தரவணைமேல் வாட்டாற்றான்*மதமிக்க
கொலையானைமருப்பொசித்தான் குரைகழல்கள்குறுகினமே. (6)

ஓ.—ஆறாம்பாட்டில், திருக்கண்களில் அழகைக் காட்டி என்னை அடிமைகொண்டு என்னுடைய ஹ்ருதயத்தில் நின்று ஒருகாலும் போகிறிலன்; அவன்திருவடிகளைக் குறுகப்பெற்றோமென்று ப்ரீதராகிறார். [கொலையானை மருப்பொசித்தான்] - தம்முடைய ப்ரதிபந்தகத்தைப் போக்கினபடி. [குரைகழல்கள்] - சிறு சதங்கைகளாலே த்வநிக்கிற திருவடிகள்.

இ.—ஆறும்பாட்டில், திருவாட்டாற்றிலே ஸந்நிதிபண்ணி என்னை ஸர்வதோமுகமாக விடமாட்டாதவனுடைய திருவடிகளைக் குறுகப்பெற்றோமென்கிறார். [தலைமேலதாளிணைகள்] - திருவடிகளாலே என்தலையை அலங்கரியாநின்றான். [தாமரைக்கண் என்னம்மான்] - என்முன்னே நின்று கண்ணழகைக் காட்டி "ஜிதம்" என்னப்பண்ணாநின்றான். [நிலைபேரான் என்னெஞ்சத்து] - ஹ்ருதயத்தினின்றும் கால் வாங்குகிறிலன். [எப்பொழுதும்] - ஸர்வகாலமும் இப்படி செய்யாநின்றான். தன்னை அநுபவிப்பார் நாநாவிதசரீரத்தாலே அநுபவிக்குமாபோலே, என்னை அநுபவிக்கைக்கு அநேக விக்ரஹங்களைக் கொள்ளாநின்றான். [எம்பெருமான்] - உடைமை யுடையவனைப்பெற்றுவிருக்குமளவன்றிறே உடைமையைப் பெற்று வுடையவனுக் கிருப்பது. [மலைமாடத்தரவணை இத்யாதி] - மலைகளைச் சேரவைத்தாற்போலேயிருக்கிற மாடங்களையுடைத்தான திருவாட்டாற்றிலே திருவனந்தாழ்வான் மேலே கண்வளர்ந்தருளுகிறவன். பர்யங்க வித்யையிற் சொல்லுகிறபடியே, உத்தேச்ய வஸ்துவுக்குக் குறைவற்றிருக்கிறபடி. அநுபவவிரோதியை, குவலயாபீடத்தைத் தள்ளினாப்போலே தள்ளிப்போகட்டான். இப்படி போக்யமான திருவடிகளைக் கிட்டப்பெற்றோம். [குரை] - ஆபரண த்வநி. "கூவிக்கொள்ளுங்கால மின்னம் குறுகாதோ" என்னும் விடாய் தீரும்படி கிட்டப்பெற்றோம்.

ஈ௬.—ஆறும்பாட்டு. திருவாட்டாற்றிலே ஸந்நிதிபண்ணி என்னை ஸர்வதோமுகமாக விடமாட்டாதவனுடைய திருவடிகளைக் கிட்டப்பெற்றோமென்கிறார்.

[தலைமேலதாளிணைகள்] - "நின் செம்மாபாதபற்புத் தலைசேர்த்து" என்றும் "பாத பங்கயமே தலைக்கணியாய்" என்றும் நான் ப்ரார்த்தித்தபடியே, அழகிய திருவடிகளாலே தலை அலங்காரமாகப்பண்ணிநான். [தாமரைக்கண்என்னம்மான்]-என்முன்னே நின்று குளிரநோக்கி *ஜிதம்* என்னப் பண்ணாநின்றான். [நிலைபேரான் என்னெஞ்சத்து] - நெஞ்சுவிட்டுப்பேராதே நின்றாய்த்து இதெல்லாம்செய்கிறது. ஸௌபரி ஐம்பது வடிவுகொண்டாப்போலே, இவன் தன்னை அநுபவிக்க நாநாபவகம்கொள்ளுமாபோலே, அவன்தான் இவரை அநுபவிக்க அநேக விக்ரஹம் கொள்ளாநின்றான். [எப்பொழுதும்] - "எப்பொழுதும்நாள்திங்களாண்டூழியூழி" என்று தன்னை அநுபவிக்கைக்கு நான் பாரித்த துறைகளடையக் கைக்கொண்டான். ஸர்வ சக்தியோகமடையக் காட்டாநின்றான். என்னெஞ்சிலேயிற்பது, அப்படியே கண்ணுக்கிலக்காம்படி முன்னேநிற்பது, திருவடிகளைத் தலைமேலே வைப்பதாகிற இதெல்லாம் ஒருகாலே செய்யாநின்றான். [எம்பெருமான்] - உடைமை உடையவனைப்பெற்று விருக்குமாபோலன்றிறே, உடையவன் உடைமையைப் பெற்றுவிருக்கும்படி. [மலைஇத்யாதி] - மலைகளைப் புடைபடத் துளைத்து நெருங்கவைத்தாற்போலேயிருக்கிற மாடங்களையுடைத்தான திருவாட்டாற்றிலே திருவனந்தாழ்வான் மேலே கண்வளர்ந்தருளினவன். இத்தால் - ப்ராப்யவஸ்துவைச் சொல்லுகிறது, பர்யங்க வித்யையிற் சொல்லுகிறபடியே. [மதம்இத்யாதி] - அநுபவ விரோதிகள் அடங்கலும் குவலயாபீடம்பட்டது படும்இத்தனை. அவன் இவன்விரோதியைப் போக்க இவனுக்கு அநுபவத்திலேயந்வயம். [குரைகழல்கள் குறுகினம்] - ஆபரணவொலி செவிப்படாநின்றது. "தடந்தாமரைகட்கே கூவிக்கொள்ளுங்காலம் இன்னம்குறுகாதோ" என்று ப்ரார்த்தித்தது பெற்றோம்.

குரைகழல்கள்குறுகினம் நங்கோவிந்தன்குடிகொண்டான்*
திரைகுழுவுகடல்புடைசூழ் தென்னாட்டுத்திலதமன்ன*
வரைகுழுவுமணிமாட வாட்டாற்றான்மலரடிமேல்*
விரைகுழுவுநறுந்துளவம் மெய்ந்நின்றுகமழுமே. (7)

ஏ.—ஏழாம்பாட்டில், எம்பெருமான் ஸபரிகரமாக வந்து என்னுள்ளே புகுந்தருளினான்; அத்தாலே என் உடம்பு நிரந்தரமாகத் திருத்துழாய் நாறாநின்றது என்கிறார். [நம் கோவிந்தன்] - ஆச்ரிதஸுலபனான க்ருஷ்ணன். [திரைகுழுவு என்று மேலுக்கு] - திரைமிக்க கடல் அருகே சூழ்வதுஞ் செய்து, தென்னாட்டுக்கு ஒரு திலதம் போலேயாய், மலைகள் திரண்டாற்போலேயிருக்கிற அழகிய மாடங்

களையுடைய திருவாட்டாற்றில் எம்பெருமானுடைய திருவடிகளில் பரிமளம்மிக்கிருந்துள்ள நல்ல செவ்வித் திருத்துழாய்.

இ.—ஏழாம்பாட்டில், அவன் ஸபரிகரமாக வந்து என்னுள்ளே புகுந்தான். அத்தாலே என் உடம்பு திருத்துழாய் நாறாநின்றது என்கிறார். [குரை இத்யாதி] - ஆபரணத்வநியோடே அவன்வந்து மேல்விழக் கிட்டப்பெற்றோம். [நம் கோவிந்தன் இத்யாதி] - ஆச்ரிதவத்ஸலனான க்ருஷ்ணன், "அகம்படி வந்து புகுந்து" என்கிறபடியே வந்து புகுந்தான். [திரை இத்யாதி] - திரை மிக்கிருந்துள்ள கடல் அருகே சூழப்பட்டிருப்பதாய், தென்னாட்டுக்குத் திலதம்போலேயாய், மலைகளை நெருங்கவைத்தாற்போலே யிருக்கிற மணிமயமான மாடங்களையுடைத்தான திருவாட்டாற்றிலே நின்றருளினவனுடைய திருவடி களின்மேற் பரிமளம் மிக்க திருத்துழாய். விரை - பரிமளம். [மெய்ந் நின்று கமழுமே] - சரீரம் நிரந்தர மாக நாறாநின்றது. "குரைகழல்கள் குறுகினம்" என்று நான் சொன்னவார்த்தை மெய்யென்னுமிடம், என் உடம்பே சொல்லாநின்றதென்கை. "அன்றி மற்றோருபாயமென் ?" என்று தோழிசொல்லியும், "வெறிகொள் துழாய்மலர் நாறும்" என்று தாயார் சொல்லியும் போந்த இத்தைத் தம் வாயாலே சொல்லும்படியுமாய்த்து.

ஈடு.—ஏழாம்பாட்டு. "குறுகினம்" என்றறிது என்கொண்டு அறிவதென்னில், 'பார்க்கலாகாதோ உடம்பு கோயிற்சாந்து நாறுகிறபடி ?' என்கிறார்.

[குரைகழல்கள் குறுகினம்] - அணித்தென்னும் இத்தைப் பற்றச் சொல்லுகிறே னல்லேன், கிட்டினோம். [நம்கோவிந்தன்] - ஆச்ரிதர்க்கு ஸ்வம்மாகப்ரஸித்தனான க்ருஷ்ணன். [கோவிந்தன் குடிகொண்டான்] - "அரவத்தமளியினோடு மழகியபாற்கடலோடும் அரவிந்தப் பாவையும் தானும் அகம்படிவந்துபுகுந்து" என்கிறபடியே - திருவாய்ப்பாடியில் பஞ்சலக்ஷம் குடியோடுங்கூடக் காணும் இவர்நெஞ்சிலே புகுந்தது. [திரை இத்யாதி] - திரைமிக்கிருந் துள்ள கடலாலே சுற்றும் சூழப்பட்டிருப்பதாய், தென்னாட்டுக்கு ஒருதிலகம்போலேயாய், மலைகளை நெருங்கவைத்தாற்போலே மணிமயமான மாடங்களையுடைத்தான திருவாட் டாற்றைக் கலவிருக்கையாகவுடைய ஸர்வேச்வரனுடைய. [மலரடிமேல்] - செவ்வி, குளிர்த்தி, பரிமளங்களையுடைத்தான திருவடிகளின்மேலே, பரிமளம் மிக்கிருந்துள்ள திருத்துழாயானது. [மெய் நின்றுகமழுமே] - என்னுடம்பு நிரந்தரமாக நாறுகின்றது. "அன்றிமற்றோருபாயம்" என்று தோழிசொல்லியும் "வெறிகொள் துழாய்மலர்நாறும்" என்று தாயார்சொல்லியும் போந்தஇது, தன்வாயாலே சொல்லும்படியாய்த்து. [மெய் நின்றுகமழுமே] - என்வார்த்தை அறியவேணுமாகில் என் உடம்பை மோந்து பார்க்கமாட்டிகோளோ ?

மெய்ந்நின்றுகமழ்துளவ விரையேறுதிருமுடியன்*
கைந்நின்றசக்கரத்தன் கருதுமிடம்பொருது* புனல்
மைந்நின்றவரைபோலும் திருவுருவவாட்டாற்றற்கு*
எந்நன்றிசெய்தேனா என்னெஞ்சில்திகழ்வதுவே. (8)

ஒ.—எட்டாம்பாட்டில், அத்யந்த விலக்ஷணனான திருவாட்டாற்றில் எம்பெருமான் என் ஹ்ருதயத்திலே புகுந்து உஜ்ஜ்வலனாகைக்கு நான் என்ன நன்மை செய்தேன்? என்கிறார். [மெய் என்று தொடங்கி] - திருமேனியெல்லாம் நின்று கமழுகிற திருத்துழாயினுடைய பரிமளம் பரம்பா நின்றுள்ள திருமுடியையுடையனும், திருவுள்ளமான விடத்திலே சென்று யுத்தம்பண்ணி மீண்டு வந்து திருக்கையிலேயிருக்கும் திருவாழியையுடையனும், புனல்போலேயும் மைந்நின்ற வரைபோலேயு மிருக்கிற திருவுருவையுடைய திருவாட்டாற்றில் எம்பெருமானுக்கு.

இ.—எட்டாம்பாட்டில், அத்யந்த விலக்ஷணனானவன் திருவாட்டாற்றிலே வந்து ஸுலபனாய், என் ஹ்ருதயத்திலே புகுந்து உஜ்ஜ்வலனாகைக்கு நான் என்ன நன்மை செய்தேன் ? என்கிறார் [மெய்ந்நின்று கமழ்துளவ விரை] - திருமேனியிலே கமழாநின்றுள்ள திருத்துழாயின் பரிமளம். [ஏறுதிருமுடியன்] -

அப்பரிமளம் மிகாநின்றுள்ள திருமுடியையுடையனும்; கடலில் நீர் ஸஹ்யத்திலே ஏறுமாபோலே திருமுடியிலே வெள்ளமிடா நின்றது. [கைந்நின்ற சக்கரத்தன்] - நினைத்தவிடத்தே சென்று யுத்தம்பண்ணி எதிரிகளையழித்து மீண்டு திருக்கையிலே வர்த்திக்கும் திருவாழியுடையனும், பாவஜ்ஞனும் அடிமை செய்து; "ஸ்வதூணீம் புநராவிசத்" என்றும், "ராமபார்ச்வம் ஜகாம" என்றும் சொல்லுகிறபடியே திருக்கையிலே வர்த்திக்குமாய்த்து. "அத ஹரிவரநாத:". [புனல்மைந்நின்றவரை இத்யாதி] - புனல்போலேயும் மைபோலேயும் நின்றவரை போலேயுமென்னுதல். [மைந்நின்றவரை] - மைமாறுத வரை; அஞ்ஜநகிரி என்னுதல். [வாட்டாற்றாற்கு] - 'வாட்டாற்றார்க்கு' என்று - பூஜாவாசியல்ல; வாட்டாற்றானுக்கு என்றபடி. [எந்நன்றிசெய்தேனா] - என்ன நன்மை செய்தேனாக. பெரியஉடையாரைப்போலே என்னை அழியமாறினேனோ? திருவடியைப்போலே தனியிடத்திலே உதவினேனோ? தன்னுடைய ஆஜ்ஞாரூபமான விஹிதங்களை அநுஷ்டித்தேனோ? என்னெஞ்சில் புகுந்த பின்பு விளங்கிறானென்னும்படி விரும்பிற்று.

௮.—எட்டாம்பாட்டு. அத்யந்தவிலக்ஷணனானவன் திருவாட்டாற்றிலே வந்து ஸுலபனாய் என்ஹ்ருதயத்திலே வந்து புகுந்து உஜ்ஜ்வலனானைக்கு நான் என்ன நன்மை செய்தேனென்கிறார்.

[மெய் இத்யாதி]- திருமேனியிலே நின்று கமழாநின்றுள்ள திருத்துழாயிற் பரிமளமானது கொழித்து ஏறடாநின்றுள்ள திருமுடியையுடையவன். கடலில் நீர் ஸஹ்யத்திலேறக் கொழித்தாப்போலே காணும் மலரடிமேல் திருத்துழாயின் பரிமளமானது மெய்யெல்லாங் கொண்டு தலைக்குமேலே போனபடி. [கை இத்யாதி] - பாவஜ்ஞனாகையாலே ஸர்வேச்வரன் திருவுள்ளத்திற் கருத்தறிந்து யுத்தத்திலேபுக்கு எதிரிகளை அழியச்செய்து வெற்றி கொண்டு, *ஸ்வதூணீம் புநராவிசத்* என்கிறபடியே கையிலேவந்திருக்குமாய்த்து: *ராமபார்ச்வம் ஜகாம* போலே. *அதஹரிவரநாத:* - ஒரு மூத்தின் குடை நீழலிலே பையல் பெருமாளுக்கெதிராக வந்து தோன்றினவாறே பொறுக்க மாட்டாமை மேல்விழுந்து, நெடும்போது பொருது இளைப்பித்து, அவன் மாயாப்ரயோகத்திலே கைவைக்குமளவானவாறே, "இனிநமக்கும் அது வேண்டிவரும்; அதுநமக்கீடல்ல; பெருமாள் பண்ணின ப்ரதிஜ்ஞையை நாம் அழிக்கவொண்ணாது" என்று மீண்டார். *ராமேணஹி ப்ரதிஜ்ஞாதம்* ஸத்யஸங்கல்பரான பெருமாள் ப்ரதிஜ்ஞைபண்ணுகிறார். *ஹர்ய்ருக்ஷகணஸந்நிதௌ* வீரர்கள்திரள்நடுவே ப்ரதிஜ்ஞைபண்ணுகிறது. ஆனபின்பு இவர்க்குநிர்விஷயமாக்க வொண்ணாதென்று பார்த்தார். *ஹரிவரநாத:* தாம்செய்த இக்கார்யம் தம்பரிகரத்தில் செய்வாரில்லாமற் செய்தாரல்லர்; பொறுமையாலே செய்தாரித்தனை. *ப்ராப்ய ஸங்க்ராமகீர்த்திம்* - பூசல்பாக்யமென்று தனியேயொன்றுண்டிறே; அத்தால்வந்த புகழைத் தாம் படைத்தார். *நிசிசரபதிம்* - களவுபூசல் செய்வார்க்கு ஒதுங்கநிழலான பையலை; ராஜபுத்ரர்களை யகற்றித் தனியிடத்திலே பிராட்டியைப் பிரித்த பையலிறே. *ஆஜௌ* - அவர்களுக்கு அபூமியான செவ்வைப்பூசலிலே. *யோஜயித்வா ச்ரமேண* - அவனை யிளைப்போடே கூட்டினார்; தாம் புகழோடே கூடினார். *ககநமதிவிசாலம்லங்கயித்வா* - நடுவிடைவெளி பெருத்திருக்கிற ஆகாசத்தை வருத்தமறக்கடந்தார். *அர்க்கஸூநு:* - அதுசெய்தபடி ஆதித்யபுத்ரனென்று தோற்றும்படியாயிருந்தது. உதயகிரியிலே தோற்றினால் பின்பு அஸ்தமித்து நிற்கக்காணும் பித்தனையிறே. *ராமபார்ச்வம் ஜகாம* - பெருமானைப்பிரிந்தபடியாலே வந்து கிட்டுவதும் செய்தோமென்று தோற்றும்படி மதிக்க வொன்றுசெய்து வாராமையாலே, நேர்கொடு நேர் முன்னிற்கமாட்டாதே பெருமானருகே போய் நின்றார். பையல் தலையைப் பிடுங்கிக்கொடுவந்து திருவடிகளிலே இடப்பெறாத நாம் என்சொல்லி முன்பே நிற்பதென்று பெருமாளருகே வந்துநின்றார். [புனல்இத்யாதி] - புனல்போலவும் மைபோலவும் நின்றவரைபோலவும் இருக்கிறவென்னுதல், மைமாறுத வரைபோலேயென்னுதல். வாட்டாற்றார்க்கென்று - பூஜாவாசியன்று. வாட்டாற்றானுக்கென்றபடி. [என்னன்றிசெய்தேனோ] - என்ன நன்மை செய்தேனாக. பெரியவுடையாரைப்போலே தடையோடே முடிந்தேனோ? திருவடியைப்போலே *த்ருஷ்டா ஸீதா* என்றுவந்தேனோ? அன்றியே, தன்னுடைய ஆஜ்ஞாநுவர்த்தநம் பண்ணினேனென்னும்படி விஹிதகர்மங்களை அநுஷ்டித்தேனோ? என்னநன்மைசெய்தேனாக

என்னெஞ்சிலே புகுந்தபின்பு பெறும்பேறுபெற்றாப்போலே விளங்காநின்றான்? ஐச்வர்யஸூச கமான தாரது, நினைத்ததுசெய்து தலைக்கட்டவல்ல பரிகரமது, வடிவழகது, இப்படி துறை தோறும் தலைமைபெறும்படி யிருக்கிறவன் என்னெஞ்சிலேபுகுந்து பெறும்பேறுபெற்றானா யிராநின்றான்.

திகழ்கின்றதிருமார்பில் திருமங்கைதன்னோடும்*
திகழ்கின்றதிருமாலார் சேர்விடம்தண்வாட்டாறு*
புகழ்நின்றபுள்ளூர்தி போரரக்கர்குலம்கெடுத்தான்*
இகழ்வின்றியென்னெஞ்சத்து எப்பொழுதும்பிரியானே. (9)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், அத்யந்த பரிபூர்ணனான தான் இகழ்வின்றிக்கே என்னெஞ்சத்து எப்பொழுதும் பிரியாதிராநின்றான்; ஒருவனுடைய வ்யாமோஹமே! என்று ப்ரீதராகிறார். [திகழ்கின்ற என்று தொடங்கி] - விளங்காநின்ற திருமார்விலே யிருக்கிற பெரிய பிராட்டியாரோடுங் கூட விளங்காநின்றுள்ள திருமாலார் சேரும் ஸ்தாநம், ச்ரமஹரமான திருவாட்டாறு. [புகழ் என்று தொடங்கி] - புகழுக்கெல்லாம் ஸ்தாநமான பெரிய திருவடியைத் தனக்கு வாஹநமாகவுடையனாய், பெருமிடுக்கரான ராக்ஷஸகுலத்தைக் கெடுத்தான்.

இ.—ஒன்பதாம்பாட்டில், அத்யந்தம் பூர்ணனான தான் இகழாதே என்மநஸ்ஸை ஸர்வகாலமும் விடுகிறிலன்; ஒருவனுடைய வ்யாமோஹமே! என்று ப்ரீதராகிறார். [திகழ்கின்ற இத்யாதி] - வெறும் புறத்திலே விளங்காநிற்கிற திருமார்விலே யிருக்கிற பிராட்டியோட்டைச் சேர்த்தியழகாலும் விளங்கா நின்றுள்ள ச்ரிய:பதியானவன் சேரும்ஸ்த்தாநம் ச்ரமஹரமான வாட்டாறு. ச்ரிய:பதியான ஏற்றத்தோபாதி போருமாய்த்து திருவாட்டாற்றைக் கலவிருக்கையாக வுடையனானகையும். [புகழ்நின்ற இத்யாதி] - புகழுக்கெல்லாம் ஸ்த்தாநமான பெரியதிருவடியை வாஹநமாகவுடையவன். புகழடங்கலும் பெரிய திருவடி பக்கலிலேயாய், அவனையுடையவ னென்னும் புகழேயாய்த்து இவனுக்கு உள்ளது. [போரரக்கர் குலம் கெடுத்தான்] - செவ்வைப்பூசலிலே ராக்ஷஸவர்க்கத்தைக் குலமாக முடித்தான். "ஸம்ஸாரி" என்று இகழாதே ஸர்வகாலமும் விடுகிறிலன்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. அத்யந்தம், பூர்ணனானதான் இகழாதே என்மநஸ்ஸை ஸர்வ காலமும் விடுகிறிலன்: ஒருவனுடைய வ்யாமோஹமே! என்று ப்ரீதராகிறார்.

[திகழ்கின்றவித்யாதி] - வெறும்புறத்திலே விளங்காநின்றுள்ள திருமார்விலே எழுந் தருளியிருக்கிற பெரிய பிராட்டியாரோட்டைச் சேர்த்தியழகாலும் விளங்காநின்றுள்ள ச்ரிய:பதியானவன் அல்லாதாரையும் ஸ்ரீமான்களென்று சொல்லுமிறே ஔபசாரிகமாக; அப்படியல்ல இங்கு; திருமங்கைதன்னோடும் திகழ்கையாலே ச்ரிய:பதியென்று பேரையுடையவன். இந்த ரேபமும் ஒரு ப்ரயோஜகமில்லை; திருமாலானவனென்றபடி; "புள்ளூர்தி" என்றவோபாதி. [சேர்விடம் தண்வாட்டாறு] - ச்ரிய:பதித்வத்தோபாதியும் போருமாய்த்து அவ்வூரை இருப் பிடமாகவுடையனாயிருக்கிறவதுவும். [புகழ்இத்யாதி] - புகழெல்லாம் தன்பக்கலிலே கிடக்கும் படியிருக்கிற பெரியதிருவடி - வாஹநம். புகழடங்கலும் கிடப்பது அவன்பக்கலிலே; அத்தை யுடையனென்கிற இதுவே இவனுக்குள்ளற்றம். [போர் இத்யாதி] - செவ்வைப்பூசலிலே ராக்ஷஸ ஜாதியைக் குலமாக முடித்தான். [இகழ்வுஇத்யாதி] - "ஸம்ஸாரி" என்று பிற்காலியாதே, ஒரு கார்யப்பாட்டாலே செய்தானாய், பின்பு விட்டுக் கைபிடிக்கையன்றிக்கே ஸர்வகாலமும் விடுகிறிலன். பித்தோபஹதர் சந்தநபங்கத்தினின்றும் கைவாங்கமாட்டாதாப்போலே, க்ஷண காலமும் பிரியமாட்டுகிறிலன்.

31

பிரியாதாட்செய்யென்று பிறப்பறுத்தாளறக்கொண்டான்*
அரியாகியிரணியனை ஆகங்கீண்டானன்று*
பெரியார்க்காட்பட்டக்கால் பெறுதபயன்பெறுமாறு*
வரிவாள்வாயரவணைமேல் வாட்டாற்றான்காட்டினனே. (10)

ஒ.—பத்தாம்பாட்டில், மஹாத்மாக்கள் சிலரை விஷயீகரிக்கப்புக்கால் ஒருவர்க்கும் கிடையாத சீரியபொருளை அவர்களளவும்பாராதே கொடுப்பர் என்னும் இவ்வர்த்தஸ்த்திதியை, வரிவாள் வாயரவணைமேல் வாட்டாற்றான் என்பக்கலிலே காட்டியருளினான் என்கிறார். [பிரியாது என்றுதொடங்கி] - எனக்காக ஹிரண்யனுடைய ஹ்ருதயத்தைப் பிளந்தான் அன்று; இன்று "எனக்கேயாட்செய்" என்று எம்மாவீட்டிலே நான் ப்ரார்த்தித்தபடியே என்னை அடிமைகொண்டான். வாள் - ஒளி. உபயவிபூதியிலும் தம்மையொழியத் திருவாய்மொழி பாடப்பெற்றாரில்லை என்று இவர்க்குக் கருத்து.

இ.—பத்தாம்பாட்டில், மஹாபுருஷர்களை யடைந்தால் எதிர்த்தலைபாராதே தங்கள்தரத்தைக் கொடுப்பர்கள் என்னும் அர்த்தத்தை, திருவாட்டாற்றில்நாயனார் என்பக்கலிலே காட்டினார் என்கிறார். [பிரியாது இத்யாதி] - 'நமக்குப்பிரியாதே அடிமைசெய்' என்று அருளிச்செய்து, விரோதியையும்போக்கி, நித்யகைங்கர்யத்தையும் கொண்டான். "எனக்கே யாட்செய்" என்னவேண்டுமென்று எம்மாவீட்டிலே நாம் ப்ரார்த்தித்தத்தையும் செய்தான்; பொய்ந்நின்ற ஞானத்திலே அபேக்ஷித்தத்தையும் செய்தான்; "தனக்கேயாக" என்றத்தையும் நமக்குச்செய்தான். [அரியாகி இத்யாதி] - தன்னையழியமாறி ஹிரண்யனுடைய முருட்டுடலை அநாயாஸேந கிழித்தான். [அன்று] - அச்செயலும் ப்ரஹ்லாதனுக்கு அன்று; எனக்காகச் செய்தான் என்கிறார்; இன்று "க்ரியதாமிதி" என்கிறபடியே என்விரோதியைப்போக்கி நித்ய கைங்கர்யத்தைக்கொண்டான். [பெரியார் இத்யாதி] - மஹாபுருஷர்களை ஆச்ரயித்தால் ஸுதுர்லபமான ப்ரயோஜநத்தைப்பெறுவர்களென்னும் அர்த்தத்தை, வரியையும் ஒளியையும் வாயையுமுடைய திருவனந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகிற திருவாட்டாற்றில்நாயனார் என்பக்கலிலே காட்டினார். என் சிறுமை பாராதே தன்தரத்திலே செய்தருளினார். உபயவிபூதியிலும் தம்மைப்போலே திருவாய்மொழி பாடப்பெற்றாரில்லை என்றிருக்கிறார்.

ஈடு.—பத்தாம்பாட்டு. மஹாபுருஷர்களையடைந்தால் எதிர்த்தலை பாராதே தங்கள் தரத்தைக் கொடுப்பர்களென்னும் இவ்வர்த்தத்தை, திருவாட்டாற்றில்நாயனார் என்பக்கலிலே காட்டினாரென்கிறார்.

[பிரியாது இத்யாதி] - 'நமக்குப்பிரியாதே அடிமைசெய்' என்றருளிச்செய்து, விரோதியையும்போக்கி, நித்யகைங்கர்யத்தையும் கொண்டான்; "எனக்கேயாட்செய்" என்னவேணுமென்று நாம் எம்மாவீட்டிலே ப்ரார்த்தித்தபடியே செய்தான். "இங்ஙின்ற நீர்மை இனியாமுறாமை" என்று பொய்ந்நின்றஞானத்தில் அபேக்ஷித்தபடியே பிறப்பறுத்தான். "தனக்கேயாக என்று எம்மாவீட்டிலே ப்ரார்த்தித்தபடியே ஆளறக்கொண்டான். [அரியாகி இத்யாதி] - இதுக்கு முன்பே தமக்குப் பண்ணிற்றொரு உபகாரத்தைச் சொல்லுகிறார். [அரியாகி] - ஸ்ரீநரஸிம்ஹமாய் ஹிரண்யனுடைய முருட்டுடலை அநாயாஸேந கிழித்தான். [அன்று] - அன்று அப்படி செய்தான்; இன்று இப்படிசெய்தான். "க்ரியதாமிதி மாம்வத" என்கிறபடியே என் விரோதியைப்போக்கி நித்யகைங்கர்யத்தைக் கொண்டான். "மூகப்பே கூவிப்பணி கொள்ளாய்" என்றிறே இவர் ப்ரார்த்தித்தது. [பெரியார் இத்யாதி] - மஹாபுருஷ ஸமாச்ரயணத்தாலே, துர்லபமான ப்ரயோஜநத்தைப் பெறுவர்களென்னும் அர்த்தத்தை, வரிவாள்வாயரவணைமேல் வாட்டாற்றான் என்பக்கலிலே காட்டினான். "மஹாத்மநாம் ஸம்ச்ரயமப்யுபேதோ நைவாவஸீதத்யதிதுர்க்கதோபி" - மஹாபுருஷஸமாச்ரயணம் பண்ணினால், பின்னை அவர்கள், கொள்ளுகிறவன் சிறுமைபார்த்தல் கொடுக்கிறதின்பெருமைபார்த்தல் செய்யாதே கொடுப்பர்களென்று இங்ஙனே நாட்டிலே ஒன்றுண்டு; அத்தை என்பக்கலிலே காட்டினான். ப்ரஹ்லாதாதிகளைக் கொண்டு கவிபாடுவித்துக்கொண்டானோ?

காட்டித்தன்கனைகழல்கள் கடுநரகம்புகலொழித்த*
வாட்டாற்றெம்பெருமானை வளங்குருகூர்ச்சடகோபன்*
பாட்டாயதமிழ்மாலை ஆயிரத்துளிப்பத்தும்
கேட்டு* ஆரார்வானவர்கள் செவிக்கினியசெஞ்சொல்லே. (11)

ஓ.—நிகமத்தில், அயர்வறுமமரர்கள் இத்திருவாய்மொழியைக் கேட்டால் வித்ருஷ்ணராவர் என்கிறார். [காட்டி என்றுதொடங்கி] - தன்திருவடிகளைக்காட்டித் தன்னைக் காணப்பெறுதே நான் பட்ட மஹாது:க்கத்தைப் போக்கின திருவாட்டாற்று எம்பெருமானை. [வளங்குருகூர் என்றுமேலுக்கு] ஸம்ருத்தமான திருநகரியையுடைய ஆழ்வாருடைய இசையோடுகூடின தமிழ்த்தொடையான ஆயிரந் திருவாய்மொழியிலும், செவிக்கு இனிதாய்ச் செவ்வியசொல்லான இத்திருவாய்மொழியை.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியை அநுபவிக்க உரியார் நித்யஸூரிகள் என்கிறார். [தன் கனைகழல்கள்காட்டி] - ஸ்வரூபகுணங்களை ப்ரகாசிப்பிக்கிற வடிவைக் காட்டி ஸம்ஸாரஸம்பந்தத்தைத் தவிர்த்த என்னுதல். தன்னைக்காணப்பெறாத து:க்கத்தைப்போக்கினவன் என்னுதல். திருவாட்டாற்றில் என் நாதனை. [வளம்] - ஸம்ருத்தி. [பாட்டாய தமிழ்மாலை] - "பாட்யே கேயேச மதுரம்" என்கிறபடியே இசையோடே புணர்ப்புண்ட தமிழ்த்தொடை. நித்யஸூரிகள் இத்தைக்கேட்டால் பர்யாப்தராகார். இப்படிபடுகிறது உள்ளீடானவன்சீலத்தாலேயோ வென்னில்;—பாசுரத்துக்காகவென்கிறது. "ஸம்ச்ரவே மதுரம்" என்கிறபடியே செவியே தொடங்கி ரஸிக்கும். [செஞ்சொல்லே] - நினைவும் சொலவும் செயலும் ஒருபடிப்பட்ட சொல்லு. "சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும்" என்று, "செந்தமிழ்ப் பத்தும்" என்றாரிறே.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழியை யநுபவிக்கவுரியார் நித்யஸூரிகளென்கிறார்.

[காட்டித்தன்கனைகழல்கள்] - நிர்ஹேதுகமாகத் தன்ஸ்வரூபரூபகுண விபூதிகளை ப்ரகாசிப்பிக்கிற வடிவைக்காட்டி. [கடுநரகம்புகலொழித்த] - "இன்னின்றநீர்மை இனியாமுறாமை" என்று அபேக்ஷித்தபடியே செய்தாறாய்த்து. அறிவுடையார்க்குப் பொறுக்கவொண்ணாத நரகம் ஸம்ஸாரமிறே. [வளம்] - அழகியதான திருநகரியைத் தம்மதாகவுடையரான ஆழ்வார். [பாட்டாய இத்யாதி] - *பாட்யே கேயேச மதுரம்* என்கிறபடியே இசையிலே புணர்ப்புண்ட திருவாய்மொழி ஆயிரத்திலும் இப்பத்தையும் கேட்டு. [ஆரார்வானவர்கள்] - இத்தைச் சொல்லக்கேளாநின்றால் "இன்னம்சொல், இன்னம்சொல்" என்னுமித்தனைபோக்கி, கேட்ட அம்சத்தாலே த்ருப்திபிறவார்களாய்த்து. பகவத்குணங்களை யநுபவித்து, அதுக்குப் போக்கு விடுகைக்குப் பாசுரமின்றிக்கே விம்மல் பொருமலாய்ப் படுகிறவர்கள், இப்பாசுரம் கேட்டால் விடார்களிறே. அதுக்கு ஹேதுவென்? அவனுடைய சீலகுணாநுபவம்பண்ணியோ வென்னில்; இப்பாசுரத்துக்குத் தோற்றென்கிறார். [செவிக்கினிய] - *ஸம்ச்ரவே மதுரம்* என்கிறபடியே செவிவழியேபுக்கு நெஞ்சுக்கு இனிதாகையன்றிக்கே, செவிபட்டபோதேபிடித்து ரஸிக்கையாலே. அதுக்கடி யென்னென்னில்,—[செஞ்சொல்லே] - நினைவும் சொலவும் செயலும் ஒருபடிப்பட்டிருக்கையாலே. "சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் தேவபிரானையே" என்று, "செந்தமிழ்ப்பத்தும்" என்றாரிறே இவர்தாமே.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஏழாந்திருவாய்மொழி—செஞ்சொல் : ப்ரவேசம்

ஒ.—ஏழாந்திருவாய்மொழியில், இப்படி எம்பெருமான், ஆழ்வார்தம்பக்கலிலே அத்யபிநிவிஷ்டனும், அவர் விதித்தபடியே செய்யக்கடவனுமிருந்துவைத்து, தன்னுடைய சாபலாதிசயத்தாலே இவரை இத்தேஹத்தோடேகூடத் திருநாட்டிலே கொடுபோகையிலே மிகவும் அபிநிவிஷ்டனும், இத்தையறியில் இவர் இசையார் என்று பார்த்து, இவரைக்கொண்டு திருவாய்மொழி பாடுவிப்பாரைப்போலே புகுந்து, இவருடைய திருமேனியிலும் இவர்தம்மோடுகலந்து அத்யபிநிவேசத்தைப்பண்ணி, இவ்வுடம்போடேகூடத் திருநாட்டேறக் கொடுபோகையிலே அவன் அபிநிவேசிக்கிற படியையறிந்து, "இவன் இப்படி அபிநிவேசிக்கில் ஒருநாளும் ப்ரக்ருதிவிச்லேஷத்துக்கு உபாயமில்லை. ஆனபின்பு, அவனுடைய அநுபவத்துக்கு விரோதியான ப்ரக்ருதிஸம்பந்தத்தை அவனையிட்டு இங்கே அறுப்பித்துக் கொள்ள வேணும்" என்று பார்த்தருளி, "சதுர்விம்சதிதத்த்வாத்மக ப்ரக்ருதிதத்த்வத்தோடுள்ள ஸம்பந்தத்தை யறுத்து என்னைக் கொடுபோகவேணும்" என்று ப்ரார்த்திக்க, "உம்முடைய உடம்பொழிய வேறு எனக்கு ப்ராப்யமுண்டோ?" என்று அவன் நிர்ப்பந்திக்க, "என்பக்கலுண்டான விஷயீகாரத்தாலேயன்றோ இவ்வுடம்பில் அபிநிவேசம் பண்ணுகிறது? ஆனபின்பு, எனக்காக இதில் நசையைவிட்டருள வேணும்" என்று இவர் சரணம் புக்கிரக்க, அவனும் "அப்படியேசெய்கிறோம்" என்றுஇசைய, அத்யந்தஹ்ருஷ்டராய், அவனுடைய ஸௌசீல்யாதிகுணங்களிலே அழுந்தி, "அவனுக்கு அடிமைசெய்யப்புகில் அவனுடைய ஸௌசீல்யாதிசயத்தாலே பிழைக்கவொண்ணாது; ஆனபின்பு, தந்தாமை வேண்டியிருப்பார் அவனுடைய குணத்திலே அகப்படாதே பரிஹரித்து அடிமைசெய்யுங்கோள்" என்று ப்ரீத்யதிசயத்தாலே அருளிச்செய்கிறார்.

இ.—ஏழாந்திருவாய்மொழியில், "விதிவகையே" என்கிறபடியே ஆழ்வார் விதித்தபடியே செய்வானும்படி இவர்க்குப் பரதந்த்ரனாய்வைத்து, தன்னுடைய சாபலாதிசயத்தாலே "தலைமேலதாளிணைகள்" என்றும், "நறுந்துளவம் மெய்ந்நின்று கமழும்" என்றும் சொல்லுகிறபடியே இவருடைய திருமேனியை மிகவும் விரும்பி, இத்தேஹத்தோடேகூடப் பரமபதத்தில் கூடக்கொண்டு போகையிலே அபிநிவேசிக்கிறபடியைக் கண்டு, நாம் பொய்ந்நின்ற ஞானத்திலே 'கழித்துத் தரவேணும்' என்று அபேக்ஷித்தபோதே செய்யாதொழிந்தது நம்மைக்கொண்டு ப்ரபந்தம் தலைக்கட்டுகைக்காக என்றிருந்தோம். அது ஒருவ்யாஜமாய் சரீரத்தையே விரும்புகிறானாயிருந்தது. இதுக்குஅடி நம்முடைய சரீரமென்று நம் பக்கல் விருப்பத்தாலே விரும்புகிறானித்தனை; இது தோஷப்ரசுரமென்றும் அறிகிறிலன்; இது நமக்கு அநபிமதமென்றும் அறிகிறிலன். உபசயாத்மகமாகையாலே அஸ்த்திரத்வாதி தோஷப்ரசுரமென்றும் த்வதநுபவ விரோதியாகையாலே அநபிமதமென்றும் அறிவித்து: 'இத்தைக்கழித்துத்தரவேணும்' என்று ப்ரார்த்திக்க, "உம்முடைய உடம்பொழிய நமக்கு ப்ராப்யமுண்டோ ? உம்முடைய உத்தேச்யத்தை நீர் விடாநின்றீரோ ?" என்று அவன் நிர்ப்பந்திக்க, "நீ என்பக்கலுண்டான விருப்பமிறே என்சரீரத்தை விரும்புகிறது; இதுஎனக்கு அத்யந்தம் அநபிமதம்; எனக்காக இதில் நசையைவிடருளவேணும்" என்று சரணம்புக்கிரக்க, தனக்கு இத்தைவிடுகை ப்ரியமன்றிக்கேயிருக்கச்செய்தேயும், இவரைக் குறித்துப் பரதந்த்ரனாகையாலே "அப்படிசெய்கிறோம்" என்றுஇசைய, "தனக்கு அபிமதமாயிருக்க நாம் சொன்னபடி செய்வதே !" என்று அத்யந்தம் ஹ்ருஷ்டராய், "இவனுடைய சீலாதிகுணங்களிலே அழுந்தி இவ்விஷயத்திலே அநுபவிக்க இழிவார் ஐச்வர்யத்திலே இழியப்பாருங்கோள்; தந்தாமை வேண்டியிருப்பார் அவனுடைய சீலாதிகுணங்களிலே அகப்படாதே கொள்ளுங்கோள்" என்று ப்ரீத்யதிசயத்தாலே உபதேசித்துத் தலைக்கட்டுகிறார்.

ஈடு.—"விதிவகையே" என்கிறபடியே அவன் தம்மைக்குறித்துப் பரதந்த்ரனாய் நிற்கிற படியை யநுஸந்தித்தார். அவ்வழியாலே "விரைகுழுவு நறுந் துளவம் மெய்ந்நின்று கமழுமே" என்றும் "தலைமேலதாளிணைகள்" என்றும் அவன் தன் திருமேனியோடே புகுந்து கலந்த படியைப் பேசினார்.

தம்மோடேவந்து கலந்து தம்மைக்குறித்துப்பாரதந்த்ரனாய் திருமேனியை விட
மாட்டாதே அவன் பண்ணுகிற அபிநிவேசத்தைக்கண்டு; "இன்னின்ற நீர்மை இனியாமுறாமை"
என்று நாம் அடியிலேயர்த்திக்கச்செய்தேயும் இங்கு நம்மைவைத்தது ஒருகார்ய புத்த்யா
வாகாதே என்றிருந்தோம்; அதாவது • இப்ப்ரபந்தம் தலைக்கட்டுவித்துக் கொள்ளுகையிறே;
அது அவ்வளவிலன்றிக்கே நம்முடம்பு விரும்பி விடமாட்டாமையாலேயாயிருந்தது; இவன்
வெறுமுடம்பனாயிருந்தான். "கவிபாடுவித்துக் கொள்ளுகையென்று வ்யாஜமாத்ரம்;
ஆநுஷங்கிகபலமாய்வந்ததத்தனை; இதுவே இவனுக்குமினைவு" என்றுபார்த்தார்; "இவன்
இவ்வுடம்பை விரும்புகிறது நம்பக்கல் ஆதரத்தாலேயிறே; இப்படி. நம்மை விரும்பின
இவ்வளவிலே நம் அபேக்ஷிதம் செய்வித்துக்கொள்ளுவோம்" என்று பார்த்து, "தேவர்
திருவுள்ளத்திலோடுகிறதென்?" என்றார்; "நான்உடம்பனுயே வேறொன்றறியாமல் படுகிற
பாடன்றோ, மற்றுண்டோ?" என்றான்; "அங்ஙனெண்ணாது; தேவர் இதில் பண்ணியருளுகிற
விருப்பத்தைத் தவிரவேணும்" என்று விண்ணப்பஞ் செய்ய; இவர் விலக்கினது மிகவும்
அவனுக்கு அபிநிவேசத்துக்கு உடலாய்த்து; தந்தாமைக் கொண்டு அருமைப்படுத்துவர்
களிறே மேல்விழுகைக்காக; அதுபோலேயாய்த்து. இப்படி இவன் இதிலே பண்ணுகிற
ஆதரத்தைக்கண்டு, "இவனுடைய அபிநிவேசமிருந்தபடியால் இவ்வுடம்போடே நம்மைக்
கொடுபோக நினைத்திருக்கிறான்போலேயிருந்தது; அப்படிச்செய்தபோது இஸ்ஸம்ஸாரம்
நமக்கு நித்யமாய்விடும்; இங்கேயிருந்து இதுக்கொரு முடிவுகண்டதாமத்தை யிழந்தோ
மாவோமித்தனை; இத்தைக் கழித்துக்கொள்ளவேணும்" என்றுபார்த்தார்; "என்பக்கல்
பண்ணின அபிநிவேசமாகில் இத்தை விரும்புகைக்கு அடி. எனக்கு இது அபிமதம்; தேவரும்
இதில்பண்ணுகிற விருப்பத்தைத் தவிரவேணும்" என்ன; "நீர் உம்முடைய உத்தேச்யத்தை
விடாதவோபாதி நாமும் நம்முத்தேச்யத்தை விடுவுதோமோ?" என்ன; "இவன் இப்படி
விரும்புகிறது இதினுடைய தோஷதர்சநம்பண்ணாமையிறே. இவனை இதில் தோஷதர்ச
நத்தைப் பண்ணுவிப்போம்" என்று பார்த்து, "இதாகிறது உபசயாத்மகமாய் ஹேயமா
யிருப்பதொன்று; விரும்பப்படும் ஆத்மாவைப்போலே ஏகரூபமாய் விலக்ஷணமாயிருப்ப
தொன்றல்ல; இத்தையுபேக்ஷித்தருளவேணும்" என்றார்; அதுதானே இவனுக்கு விருப்பத்
துக்கு உடலாய்த்து; அபிமதவிஷயத்திலழுக்கு உகப்பாரைப்போலே. "ஸர்வதா இவன்
விடமாட்டானாயிருந்தான்; இவன்றன்னைக் காற்கட்டியாகிலும் இக்காற்கட்டை அவிழ்த்துக்
கொள்ளுவோம்" என்று பார்த்து, "இதில் பண்ணுகிற விருப்பத்தை தேவர் தவிரவேணும்"
என்று சரணம்புக்கார்; இவர் சொன்னபடியே செய்ய இழிந்தவனுகையாலே தனக்கு இதிலே
மேன்மேல் அபேக்ஷை செல்லச்செய்தேயும் "இவர்க்கு இது இப்படி உபேக்ஷாவிஷயமான
பின்பு நாமும் இனி இத்தை வருந்தி உபேக்ஷிப்போம்" என்று பார்த்தான். இவர்பக்கல்
பாரதந்த்ர்யத்தாலே இத்தையொழிய அவன் கொடுபோவானாயிருந்தான். ஆக, இப்படியாலே
தொடங்கின பாரதந்த்ர்யத்தை நிகமித்து, "ஸர்வசக்தனாய் ஸர்வாதிகனான ஸர்வேச்வரன்,
தனக்கு இதிலே அபேக்ஷையும் செல்லாநிற்கச்செய்தே, நாம் 'இத்தைத் தவிரவேணும்' என்
னத்தவிருவதே! இதொரு சீலமிருக்கும்படியே! இவ்விஷயத்தில் ஒருவரும் இழியாதே கொள்ளுங்
கோள்; இழிந்து நான்பட்டதுவே யமையும்" என்று ப்ரீதிப்ரகர்ஷத்தாலே பிறர்க்குச்
சொல்லித் தலைக்கட்டுகிறார்.

செஞ்சொற்கவிகாளுயிர்காத்தாட்செய்ம்மின் திருமாலிருஞ்சோலை*
வஞ்சக்கள்வன்மாமாயன் மாயக்கவியாய்வந்து* என்
நெஞ்சுமுயிருமுள்கலந்து நின்றாரறியாவண்ணம்* என்
நெஞ்சுமுயிருமவையுண்டு தானேயாகி நிறைந்தானே. (1)

ஒ.—முதற்பாட்டில், "திருவாய்மொழி பாடுவித்துக்கொள்ள" என்று ஒரு பேரையிட்டுக்கொடு
வந்துபுகுந்து தம்பக்கல் எம்பெருமான் பண்ணின வ்யாமோஹத்தைச்சொல்லி, இவனுக்கு அபுனை

செய்வார் இவன்குணவெள்ளத்திலே அகப்படாதே கொள்ளுங்கோள் என்கிறுர். [செஞ்சொற்கவிகாள் உயிர்காத் தாட்செய்ம்மின்] - செவ்விய சொல்லேயுடைய கவிகாள்! கவிபாடி அடிமைசெய்யுமிடத்தில், உங்களேப் பரிஹரித்துக்கொண்டு அடிமை செய்யுங்கோள். [திருமாலிருஞ்சோலே வஞ்சக்கள்வன்] - "என்கண்ணன் கள்வம் எனக்குச் செம்மாய்நிற்கும்" என்னுமாபோலே மெய்செய்கிறுனென்று தோற்றும்படி தெரியாமே வஞ்சிக்கவல்லனும், அதுக்கடியான மஹாச்சர்ய குணசேஷ்டிதங்களேயுடையான். [மாயக்கவியாய் என்று மேலுக்கு] - "அத்யாச்சர்யாவஹமான திருவாய்மொழி பாடுவித்துக் கொள்ள" என்று ஒருபேரையிட்டுக்கொண்டு இப்பரிமாற்றத்துக்கு நில்வராணுர்க்கும் தெரியாதபடி என் நெஞ்சையும் உயிரையும் உள்ளேபுக்குக் கலந்து அவற்றை புஜித்து என் அபிமாநத்தைப்போக்கித் தானே எனக்கு அபிமாநியாய் அத்தாலே பூர்ணனுனுன்.

இ.—முதற்பாட்டில், "திருவாய்மொழி பாடுவிக்க" என்று ஒரு வ்யாஜத்தாலே புகுந்து தம்பக்கலிலே அவன் பண்ணின வ்யாமோஹத்தைக்கண்டு, இவனுக்கு அடிமைசெய்வார் சீலாதி குணங்களிலே அகப்படாதே கொள்ளுங்கோள் என்கிறுர். [செஞ்சொற் கவிகாள்] - செவ்விய சொல்லே யுடைய கவிகாள். கவிக்குச் செவ்வையாகிறது - அநந்யப்ரயோஜநமாயிருக்கை. ப்ரயோஜநத்தைக் கணிசிக்கை கவிக்குக் குடிலமாகையாவது. "இன்கவிபாடும்பரமகவிகள்" என்றும் "செந்தமிழ்பாடுவார்" என்றும் சொல்லுகிற முதலாழ்வார்களேயாய்த்து நிலேக்கிறது. "பெருந்தமிழனல்லேன்" என்னு, "வாய் அவனேயல்லது வாழ்த்தாது" என்கிறவர்களிறே அநந்ய ப்ரயோஜனர். [உயிர் காத்தாட் செய்ம்மின்] - உங்களே நோக்கிக்கொண்டு நின்று கவி பாடப் பாருங்கோள். கவிபாட்டு வாசிகமான அடிமையாகையாலே, 'ஆட்செய்ம்மின்' - என்கிறுர். "ஆட்கொள்வானொத்து என்னுமிருண்ட மாயன்" என்கிறபடியே அடிமை கொள்வாரைப்போலே புகுந்து இத்தலேயை யழிக்குமவனுய்த்து; பரிஹரித்துக்கொள்ளுங்கோள்; ஆழங்காலிலே இழிந்து அமிழுமவர்கள் அவ்விடத்திலே கொண்டைக்கோல் நாட்டுமாபோலே, "வம்மின்புலவீர்" என்று முதலிலே ருசியில்லாதாரையும் அழைக்கிற இவர் சீலாதிகுணங்களிலே அழுந்தி, இழிகிறவர்களேயும் வேண்டாவென்கிருரிறே ப்ரீதிப்ரகர்ஷத்தாலே. [திருமாலிருஞ்சோலே] - இவ்விஷயத்திலே தாம் இழிந்து அகப்பட்டபடியை அருளிச்செய்கிறுர் மேல். திருமலேயில் நிலேயும் சீலத்துக்கு உடலிறே. [வஞ்சக்கள்வன்] - களவுகாணுநிற்கச் செய்தே மெய்யென்னலாம்படி யிருக்கை. "என்கண்ணன்கள்வம் எனக்குச் செம்மாய்நிற்கும்" என்றுரிறே. களவைக் களவுகாணுநிற்கும்- [மாமாயன்] - இப்படியறிந்து ஒருவர்க்கும் தப்பவொண்ணுதபடியான ஆச்சர்ய குணசேஷ்டிதங்களே யுடையவன். நீரகப்பட்ட துறையேதென்ன:—[மாயக்கவியாய்] - "ஆச்சர்யாவஹமான கவி பாடுவித்துக் கொள்ள" என்று ஒருபேரைவிட்டுக்கொண்டாய்த்து வந்து கிட்டிற்று; "தண்ணீர்" என்றொருபேரையிட்டு, அபிமத விஷயத்தைக் கிட்டுவாரைப்போலே; கவிபாடுவித்துக் கொள்ளுகையென்றொரு வ்யாஜம், கிட்டுகையே ப்ரயோஜனம். தான் இருந்தவிடத்திலே சென்று நாம் இருக்கையன்றியே, நாம் இருந்த விடத்திலே தான் வந்து கவிபாடுவித்துக் கொள்ளுகையிறே சீலமாவது. வந்து செய்தது என்னென்ன, - [என்நெஞ்சும் உயிரும் உள்கலந்து] - நெஞ்சென்று - சரீரத்துக்கு உபலக்ஷணம்; உயிர் என்கிறது - ஆத்மாவை: சரீரத்தோடு ஆத்மாவோடு வாசியறப்புக்குத் தன்பேருக அவகாஹியாநின்றுன். முறை அத்தலேயித்தலேயாய் என்னே சிரஸா வஹியாநின்றுன். [நின்றுர் அறியாவண்ணம்] - கலவிக்கு தேசிகரான பிராட்டி, திருவனந்தாழ்வான் முதலானுர்க்கும் அபூமியாம்படியாய்த்து என்னோடு கலந்தது. "ஆருயிர்பட்டது எனதுயிர்பட்டது" என்றுரிறே. [என்நெஞ்சுமுயிருமவையுண்டு] - தேஹாத்மவிவேகம் பண்ண அறியாதேயாய்த்து புஜித்தது. சேதநனேயும் அசித்தோபாதி பரதந்த்ரனுக்கி புஜித்தான்; "உருவமும் ஆருயிரும் உடனேயுண்டான்" என்கிறபடியே எனக்கென்ன மாட்டாமைக்கு அசித்தோபாதியாய்த்து சேதநனும். [தானேயாகி] - போகத்தில் இழிகிறபோது இருவராயிழிந்து, எதிர்த்தலேயைத் தோற்பித்து, போக்தாவும் அபிமானியும் தானேயானுன். [நிறைந்தானே] - அவாப்த ஸமஸ்தகாமன் ஆழ்வாரைப் பெறுவதற்கு முன்பு குறைவாளனுய், இவரைப் பெற்றபின்பு பூர்ணனுனுன்; "க்ருதக்ருத்யஸ் ததாராம." இதுவிறே புரையற்றசீலமாவது.

ஈடு.—முதற்பாட்டு, "திருவாய்மொழிபாடுவிக்க" என்றுஒருவ்யாஜத்தாலே புகுந்து தம்பக்கல் அவன்பண்ணின வ்யாமோஹத்தைக்கண்டு, அவனுக்கு அடிமைசெய்வார் சீலாதிகளிலே அகப்படாதே கொள்ளுங்கோளென்கிறுர்.

[செஞ்சொல் இத்யாதி] - செவ்விய சொல்லையுடைய கவிகாள்! கவிக்குச்செவ்வையாவது அநந்ய ப்ரயோஜநமாயிருக்கை; ப்ரயோஜநத்தைக் கணிசிக்கை கவிக்குக் குடிலமாகையாவது. 'இன்கவிபாடும்பரமகவிகள்' என்றும் 'செந்தமிழ்பாடுவார்' என்றும்சொல்லுகிற முதலாழ்வார் களையாய்த்து நினைக்கிறது. "பெருந்தமிழனல்லேன்" என்று "வாயவனையல்லது வாழ்த் தாது" என்கிறவர்களிறே அநந்ய ப்ரயோஜநர். [உயிர்காத்தாட்செய்ம்மின்] - உங்களை நோக்கிக்கொண்டு நின்று கவிபாடப் பாருங்கோள். நீங்களுண்டாய்க் கவிபாடவேணுமே. இத்தலையுண்டானாலிறே அத்தலைக்கு மங்களாசாஸநம்பண்ணலாவது. [ஆட்செய்ம்மின்] - என்கிறார், கவிபாடுகை வாசிகமான அடிமையாகையாலே. "ஆட்கொள்வானொத்தென்னு யிருண்ட மாய"னிறே அடிமைகொள்வாரைப் போலே புகுந்து மற்றைப்படியோராயிருக்கும் ப்படிப்பது, பரிஹரித்துக்கொள்ளுங்கோள். "ஆழங்காலிலேயிழிந்து அமிழ்வார் அவ் விடத்தே கொண்டைக்கோல் நாட்டுமாபோலே, கொண்டைக்கோல் நாட்டுகிறார்" என்று சிற்றாள்கொண்டான். உடையவர், "இன்னுருயிரென்னுமையாலே அவனு யிரைக்காத்தாட்செய்யுங்கோள்" என்றருளிச்செய்வர். அதாவது - அவன் மேல் விழத் தாங்கள் இருக்கையாவது அவனை இழக்கையிறே; ஆனபின்பு அவனுயிரைக் காவுங் கோள். "இவ்விடம் பரப்புத்துறை, இவ்விடம் மடு" என்று சிலவர் எல்லை குறிக்குமாபோலே. "வம்மின்புலவீர்" என்று முதலிலே ருசியில்லாதாரையும் இரந்தழைக்கிற இவர் சிலாதிகளிலே இழிகிறவர்களையும் விலக்குகிறாரிறே, ப்ரீதிப்ரகர்ஷத்தாலே. "நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சிடிந்துகும்", "வல்வினையேனையீர்கின்ற குணங்களையுடையாய்" என்று சீலாதி குணங் களிலே புண்பட்டிறே இவரிருப்பது. உங்களை இழக்கக் கார்யம்பாராதே, அவனுடைய ஐச்வர் யத்திலே இழிந்து கவிபாடப்பாருங்கோள். சீலகுணத்தில் இழியவொண்ணாதே கொள்ளுங்கோள். [கவிகாள் உயிர்காத்தாட்செய்ம்மின்] - "கவிகாள்" என்றால் "உயிர்காத்துக்கவிபாடுங்கோள்" என்னவிறே படுப்பது: அங்ஙன் சொல்லாதே 'ஆட்செய்ம்மின்' என்கிறாராய்த்து - ஆட்செய்கையாவது கவிபாடுகை என்றிருக்கும் புகழுநல்லொருவனில் தம் வாஸனை யாலே. "இச்சீலகுணத்தி லிழியாதேகொள்ளுங்கோள்" என்று நிர்ப்பந்திக்கைக்கு ஹேது வென்னென்னில்,—ஹேது சொல்லுகிறார் மேலெல்லாம். "தானேயாகி நிறைந்தானே" என்று தம்மைக்காண்கிறிலர் காணும். [திருமாலிருஞ்சோலை] - திருமலையில் நிலையும் சீலத்துக்கு உடலிறே. [வஞ்சக்கள்வன்] - களவுதானும் மெய்யென்னக் களவுகாணு மாய்த்து. "என்கண்ணன்கள்வமெனக்குச்செம்மாய்நிற்கும்" என்னுமாபோலே - களவு காணுகிற்கச்செய்தே செவ்விதென்று தோற்றும்படியிருக்கும். களவுதன்னைக் களவு காணுமாய்த்து. இத்தலையில் சேஷத்வத்தை நிலைநிறுத்துவாரைப்போலே புகுந்து, தான் அத்தை எறட்டுக்கொண்டு, சேஷித்வத்தை இத்தலையிலேவைத்து சிரஸா வஹியாநிற்குமாய்த்து. இப்படி நீர் அவன்களவை அறிந்தீராகில் தப்பாதொழிவானென் னென்னில், - [மா மாயன்] - இப்படி அறியச்செய்தேயும் தப்பவொண்ணாதபடியான ஆச்சர்ய குணசேஷ்டிதங்களை யுடையவன்; "மையார்வேற்றிமயக்க" இத்யாதி. 'குணசேஷ்டிதங்களாலே உம்மை அவன் அகப்படுத்தின வழிதான் எது?' என்ன,-[மாயக்கவியாய்] - "ஆழ்வீர்! உம்மைக் கொண்டு லோகத்தில் நடையாடாதன சிலகவி பாடுவித்துக்கொள்ளப்பாராநின்றோம். அப்படி செய்வோம்" என்றாய்த்துப் புகுந்தது. கவியென்றுஒரு வ்யபதேசத்தையிட்டுக் கொண்டு வந்தான்; அபிமதவிஷயம் இருந்தவிடத்தே தண்ணீரென்று புகுருமாபோலே. [வந்து] - அபி ஸரித்தானும் தானேயாய்த்து. நான் தானிருந்த விடத்தேசென்று "என்னையிட்டுச் சிலகவிபாடு வித்துக் கொள்ளவேணும்" என்றுசொல்லச் செய்கையன்றிக்கே, தானே வந்தான். அபேக்ஷ யனான தனேயாய்த்து அபிஸரித்தான். இதிறே சீலமாவது! வந்தவிடத்தில் அவன் உமக்கு நலிவாகச்செய்ததென்னென்னில்,-[என்னெஞ்சம்உயிரும்]-நெஞ்சென்று தேஹத்துக்கு உபல க்ஷணம்: உயிரென்று - ஆத்மா. [உள்கலந்து] - ஒருநீராகக்கலந்து: சரீரத்தோடு ஆத்மாவோடு வாசியற அவகாஹியாநின்றான். [நின்றார் அறியாவண்ணம்] - இப்பரிமாற்றத்துக்கு தேசிகரான பிராட்டி, திருவனந்தாழ்வான், திருவடி முதலானார்க்கும் அவிஷயமாய்ப்படியாய்த்து என்னோடுகலந் தது. இப்படிப்பட்ட பரிமாற்றத்தில் நிற்பார் அவர்களிறே; அவர்களுக்கும் தெரியாதபடி;

"ஆருயிர் பட்டதெனதுயிர்பட்டது" என்னுமாபோலே. [என்னெஞ்சும் உயிருமவையுண்டு] - தேஹாத்மவிவேகம் பண்ணமாட்டுகிறிலன்; "உருவமும் ஆருயிரும் உடனேயுண்டான்" என்னுமாபோலே - தேஹத்தையும் ஆத்மாவையுமொக்க புஜித்தான். [தானேயாகி] - தம்மைக்காண்கிறிலர் காணும். இரண்டுதலையுமாய் புஜிப்பாரைப்போலே புகுந்து போக்தா தானேயானான். "என்னை முற்றப்பருகினான்" என்னுமாபோலே, இத்தலை போக்யமாயற்றதாய்த்து. இத்தலை ஒருசேதநவஸ்துவென்று தோற்றுதபடியாகவாய்த்துப் பரிமாறிற்று; பிறர்க்கு உறுப்பாயிருக்குமதொழியத் தனக்கென்ன ப்ராப்தியில்லாத அசித்வஸ்துவோபாதியாகப் பண்ணினான். "தனக்கேயாக" என்றபடியேகொண்டான். போக்யவஸ்துதன்னிலேயும் ஸ்வரூபபேதங்கள் உண்டாகாநின்றதிறே. அவ்வோபாதியாய்விட்டது சேதந வஸ்துவும். [தானேயாகி] - ஈராகத் தவிர்த்தான். இத்தலையைப் புத்கலப்பண்ணித் தானே அபிமானியாய் நின்றான். [நிறைந்தானே]. அவாப்தஸமஸ்தகாமனென்கிற பேரேயாய், இவரைப் பெற்றபின்பாய்த்து பரிபூர்ணனாய்த்து. இங்ஙனேயிருக்கையிறே சீலமாவது. அதாவது - பெரியவன் சிறியவனோடே வந்துகலக்குமிடத்தில் தன்பெருமையும் இவன்சிறுமையும் தோற்றுதபடி புரையறக் கலக்கையிறே; *க்ருதக்ருத்யஸ் ததா ராம:* என்னுமாபோலே.

தானேயாகிநிறைந்து எல்லாவுலகுமுயிரும்தானேயாய்*
தானேயானென்பானாகித் தன்னைத்தானே துதித்து* எனக்குத்
தேனேபாலேகன்னலேயமுதே திருமாலிருஞ்சோலை*
கோனேயாகிநின்றொழிந்தான் என்னைமுற்றுமுயிருண்டே. (2)

ஒ.—இரண்டாம்பாட்டில், தம்மோடு கலந்தபின் எம்பெருமானுக்குப்பிறந்த ஸம்ருத்தியைக் கண்டு இனியராய் அநுபவிக்கிறார். [எல்லா என்றுதொடங்கி] - என்னைப் பெறுகையாலே ஸர்வேச்வரனும், என்னை உபகரணமாகக்கொண்டு தன்னைத்தானே ஸ்துதித்து எனக்கு நிரதிசயபோக்யனாய், என்னைப் பெற்றபின்பு திருமலைக்கு நாதனுமானான். [என்னைமுற்றும் உயிருண்டே] - என்னுயிரை ஒன்றொழியாமே அநுபவித்து.

இ.—இரண்டாம்பாட்டில், தம்மோடு கலந்தபின்பு அவனுக்கு உண்டான ஸம்ருத்தியைக் கண்டு இனியராகிறார். [தானேயாகி நிறைந்து] - இருவர்கூடப் பரிமாறப்புகுந்து, பெற்றான் தானேயாயிரா நின்றான். [எல்லாவுலகும் - உயிரும் தானேயாய்] - ஆழ்வாரைப் பெற்றபின்பாய்த்து ஸர்வலோகங்களுக்கும் அவற்றிலுண்டான மனுஷ்யாதிகளுக்கும் நிர்வாஹகனாய்த்து. ஸாமாநாதிகரண்யத்தால் அபிமானியும் தானேயென்கை. [தானே யானென்பானாகி] - பொதுவான ரக்ஷகத்வமொழியத் தம்பக்கல் அவன் இருக்கும்படி சொல்லுகிறார்; [யானென்பான் - தானேயாகி] - விசிஷ்ட வஸ்துவாகையாலே விசேஷ்ய ப்ராதாந்யத்தைப் பற்றச் சொல்லுகிறதென்னுதல், தன் சேஷித்வத்தை எனக்குத் தந்து தான் அப்ரதானனாய் என்னை சிரஸாவஹியாநின்றான் என்னுதல். [தன்னைத் தானேதுதித்து] - ஸ்துத்யனானவோபாதி ஸ்தோதாவும் தானேயாய். [எனக்குத்தேனேபாலே இத்யாதி] - "ஸர்வரஸ:" என்கிறபடியே எனக்கு நிரதிசய போக்யனாய். அவனைப் புகழுமிடத்தில் தம்பக்கல் கர்த்ருத்வம் கண்டிலர். போகத்தில் வந்தால் போக்தாவாகத் தம்மைச் சொல்லுகிறாரிறே தன்னைத்தானே புகழ்ந்து அத்தை என் கவியாக்கிக்கேட்டு அவன்ப்ரீதனாக அவன்ப்ரியத்தைக்கண்டு ப்ரியப்படுகிறார். [திருமாலிருஞ்சோலைக் கோனே] - கீழ்ச்சொன்ன ரஸத்தோபாதியாய்த்துத் திருமலையில் நிற்கிற நிலையும். உபயவிபூதி யோகத்திற் காட்டிலும் ஓர் ஏற்றமாய்த்துத் திருமலையையுடையவன் என்கிற இதுவும். திருமலையிலே வந்து ஆழ்வாரைப் பெற்றபின்பாய்த்து சேஷித்வம் பூர்ணமாய்த்து. [நின்றொழிந்தான்] - "க்ருதக்ருத்யஸ் ததாராம:" என்கிறபடியே பரகுபரகற்று நின்றான். [என்னைமுற்றும் உயிருண்டே] - விபுவான தன்னாலும் விளாக்குலை கொள்ள வொண்ணாதபடியாய்த்து இத்தலையானபடி.

ஈடு. இரண்டாம்பாட்டு. தம்மோடு கலந்தபின்பு அவனுக்குப்பிறந்த ஸம்ருத்தியைக் கண்டு இனியராகிறார்.

[தானேயாகிநிறைந்து] - இருவருங்கூடப்பரிமாறப் புகுந்து தானே பெற்றானுமாய் நின்றான். [எல்லாமித்யாதி] - ஸகலலோகங்களும் அந்தலோகங்களுக்கு உண்டான மநுஷ்யாதிகளும் தானேயாய் நின்றான். ஸர்வேச்வரனானானென்றபடி. ஸர்வேச்வரனுச்சுதும் இப்போதோவென்னில்;—ஓம்; அப்படியே. ரக்ஷகனுக்கொண்டேயிறே அவனுக்கு ஸ்வரூபம் ரக்ஷ்யவர்க்கத்தினுடைய ரக்ஷணத்தைப்பண்ணியல்லது நிர்வாஹகனாகவொண்ணாதே. இவரைப் பெறுவதற்குமுன்பு தன்னுடைய ஐச்வரத்வமடையக் கண்ணெறிந்தாரகம்போலேகாணும் கிடந்தது. ஆத்மாதான் நித்யனாயிருக்கச்செய்தே, பகவத்ஜ்ஞாநம் பிறவாதபோது *அஸந்நேவ ஸ பவதி* என்னலாய், அது பிறந்தபோது *ஸந்தமேநம் ததோ விது:* என்னலாம்படியிருக்கிறாப் போலேகாணும் அவனுமிருப்பது. ப்ரதிஸம்பந்தியை அபேக்ஷித்துக் கொண்டிருக்கை இரண்டு தலைக்கும் ஒக்கும். "நானுன்னையன்றியிலேன் - நீயென்னையன்றியிலை" என்கிறபடியே - இவன்சேஷபூதனாய்க் கொண்டுளனாம், அவன்சேஷியாய்க்கொண்டுளனாம். [தானேயானென்பானாகி] - யானென்பான் தானேயாகி. ஸர்வவிஷயமாக நிற்கும்நிலையொழிய இந்த வ்யக்திவிசேஷத்தில் நிற்கும்நிலையைச் சொல்லுகிறது. [யானென்பான் - தானேயாகி] - நாமென்று நாமமாத்ரமான நான் தான் என்னலாம்படியானேன். தம்மைத்தடவிப்பார்த்த விடத்தில் காண்கிறிலர், அவன் தலையாலே சுமக்கக்காண்கிறவித்தனை. அவனும் தன்தலையிலே பாரதந்த்ர்யத்தை ஏறட்டுக்கொண்டு இவர்தலையிலே ப்ராதாந்யாஹங்காரத்தை வைக்கையாலே இவரையே காண்கிறவித்தனை. விசிஷ்டவஸ்துவில் விசேஷ்ய ப்ராதாந்யத்தாலே விசேஷணமாத்ரமான தம்மைக் காண்கிறிலராய்த்து. கார்யாவஸ்த்தையோடு காரணாவஸ்த்தையோடு வாசியற வஸ்து விசிஷ்டமாயிருக்கச்செய்தேயும், ப்ரஹ்மமே உபாதாநமென்னக்கடவோமிறே. தத்கதமான விகாராதிகள் வருமென்று சங்கித்து, அவற்றை விசேஷணம்சத்தே ஒதுக்குகிறதும் அவனுக்கு தோஷாஸ்பர்சத்துக்காக. ஆனாலும் வஸ்துதான் ஒன்றென்னலாயிருக்குமிறே; ஸ்வாபாவிக ஸம்பந்தம் கண்ணழிவற்றிருக்கையாலே. கடபடாதிகளைப் போலே ப்ருதக்ஸ்த்திதி உண்டாயிருக்கிறதன்றே; ப்ரகாரப்ரகாரி பாவத்தாலே சொல்லுகிறதிறே; ஜாதிகுணங்கள் த்ரவ்யத்தைப்பற்றிக் கிடக்குமோபாதியாய்த்து. இப்படி வஸ்துவிருக்கையாலே, [தன்னைத் தானே துதித்து] - *வசஸாம் வாச்யமுத்தமம்* என்கிறபடியே - அர்த்தம் அவனளவும்சென்று காட்டக்கடவதாய், அஹம்சப்தமும் அவனளவும்சென்று காட்டக்கடவதாயிறேயிருப்பது இவர்பக்கலிலே பிறக்கச் செய்தேயும் அவன்செய்தானென்று அவன்தலையிலே ஏறிடலாயிருக்குமிறே. நான் ஸ்துத்யனாகில்இறே ஸ்தோதா நானாவது? [எனக்கு இத்யாதி] - *ஸர்வரஸ:* என்கிற பொதுவான நிலையன்றிக்கே எனக்கு நிரதிசயபோக்யனானவனே! "கொடியேன்பருகின்னமுதே" என்கிறபடியே. "தன்னைத் தானே துதித்து" என்கிற விடத்தில் தம்மைக் கண்டிலர்; இங்குத் தாமுளராகவும் தமக்கு இனிதாகவும் தொடங்கிற்று. தாம் பாடின கவி கேட்டு அவன் இனியனாயிருக்கிற விருப்பு தமக்கு இனிதாயிருக்கிறபடி. [திருமாலிருஞ்சோலைக்கோனே] - மேற்சொன்ன ரஸவத்பதார்த்தங்களோபாதியாய்த்துத் திருமலையில்நிற்கிறநிலையும். "திருமாலிருஞ்சோலையங்கட்டியைக் கரும்பீன்றவின்சாற்றை" என்னக்கடவதிறே. [திருமாலிருஞ்சோலைக்கோனேயாகி]-உபயவிபூதியோகத்தால் வந்த ஏற்றத்துக்கும் அவ்வருகே ஓரேற்றம்போலே திருமலையையுடையனாகையால் வந்த ஏற்றம். [கோனேயாகி] - இவரைப்பெற்றபின்பாய்த்து ரக்ஷகத்வம் பூர்ணமாய்த்து. இல்லையாகில், ஸ்ரீவைகுண்டத்திலிருப்போடு திருமலையில்நிலையோடு வாசியற்றுப்போமிறே. [நின்றொழிந்தான்] - இங்கே நின்றபின்பாய்த்துப் பரகுபரகற்றது. க்ருதக்ருத்யனாயிராநின்றான். [என்னை முற்றும் உயிருண்டே] - என்னுயிரைமுற்றுமுண்டே. விபுவானவன் அணுத்ரவ்யத்தை புஜிக்கை தனக்கேற்றமாம்படியாகவாய்த்து இத்தலையானபடி.

என்னைமுற்றுமுயிருண்டு என்மாயவாக்கையிதனுள்புக்கு*
என்னைமுற்றும்தானேயாய் நின்றமாயவம்மான்சேர்*
தென்னன்திருமாலிருஞ்சோலைத் திசைகைகூப்பிச்சேர்ந்தயான்*
இன்னம்போவேனேகொலோ என்கொலம்மான்திருவருளே. (3)

ஆ.—மூன்றாம்பாட்டில், எம்பெருமானுக்கு மேன்மேலெனத் தன்பக்கலுண்டான அபிநிவேசா பர்யவஸாநத்தை அருளிச்செய்கிறார். [என்னை என்று தொடங்கி] - என் ஆத்மாவை புஜித்து, அதிக்ஷுத்ரமான என் சரீரத்திலே வந்துபுகுந்து, என்னையுடைய வ்யாபித்து நிற்கிற ஆச்சர்யபூதனான ஸர்வேச்வரன் சேர்வதும்செய்து தெற்கேயான திருமலைத்திக்கை பரம ப்ராப்யமென்று சேர்ந்த நாள். [இன்னம் போவேனோ என்றுமேலுக்கு] - இவ்வளவில் பர்யவஸியேன்போலே யிருந்தது, ஸர்வேச்வரனுடைய பாரிப்புக்கு அவதி என்னோ?

இ.—மூன்றாம்பாட்டில், அவனுக்குத் தம்பக்கலுண்டான அபிநிவேசத்தினுடைய எல்லையில்லாமையை அருளிச்செய்கிறார். [என்னை முற்றும்உயிருண்டு] - இத்தலையை எங்கும் புக்கு அநுபவித்தாலும் விடுகை அவனுக்கு ஏற்றமாம்படியாயிருக்கிறது; "யஸ்ய ஸா ஜநகாத்மஜா - அப்ரமேயம் ஹி தத்தேஜ:". [என்மாயவாக்கை யிதனுள்புக்கு] - அதிக்ஷுத்ரமான என் சரீரத்திலே புக்குத் தனக்கு உத்தேச்யமான ஆத்மாவளவன்றியே, "அழுக்குடம்பு" என்று தன்னைக் காற்கட்டித் தவிர்ப்பித்துக் கொள்ள வேண்டும்படி த்யாஜ்யமான சரீரத்தையே விரும்பாநின்றான். [இதனுள்புக்கு] - "இது, இது" என்று இவரிருக்க, அவன் மேல் விழாநின்றான் என்கை. புகுந்து என்னாதே, 'புக்கு' - என்கிறது அத்தோடு தமக்குத் தொற்றற்றிருக்கிறபடி தோற்றுகைக்காக. "மங்கவொட்டு" என்று அவன் அநுமதி பார்த்திருக்கிறாரிறே. என்றும் அசித்தோடு முகம்பழகினவரிருக்க, ஹேயப்ரதிபடனானவனிறே மேல்விழாநின்றான். [என்னைமுற்றும் தானேயாய்நின்ற] - ஆத்மாவோடு சரீரத்தோடு வாசியறப் புக்கு வ்யாபித்து, தானே அபிமாநியாய் நின்றான். என்னுடைய அஹங்காரமமகாரங்களுக்கும் விஷயமில்லாதபடி நின்றான். [மாயஅம்மான் இத்யாதி] - ஆச்சர்ய குணசேஷ்டிதனான ஸர்வேச்வரன் தானே விரும்பிவந்து சேருகிறதேசம். தென்னன்என்று - அத்தேசத்தில் ப்ரதாநனைச் சொல்லுதல், தெற்கில்திக்கிலேயுள்ளதாய் நன்றான திருமலை என்னுதல். [திசை கைகூப்பிச் சேர்ந்த யான்] - அந்திக்கைப் பரமப்ராப்யமென்று சேர்ந்தயான். இவர், அவனளவிலன்றிக்கே அவன் உகந்த தேசத்தோடு சேர்ந்த திக்கை விரும்பாநின்றார்; அவன் இவரளவன்றியே இவருடைய சரீரத்தை விரும்பாநின்றான், இவ்வளவில் பர்யவஸியாதாப்போலே யிருந்தது. [இன்னம் போவேனேகொலோ] - இனி எனக்கு ஒரு கந்தவ்யபூமியுண்டோ ? ஸர்வேச்வரனுடைய பாரிப்புக்கு அவதி என்னோ ? அவனை விரும்பி, அவன் உகந்த தேசத்தை விரும்பி, அத்தோடு சேர்ந்த திக்கை விரும்பும்படி சேஷத்வத்தின் எல்லையிலே நிறுத்தினவன், எனக்கு ஒன்றும்செய்திலனாய்ப் பரகுபரகென்கிற இதுக்கு அவதி என்னோ ? விஷயமின்றியே யிருக்க ப்ரமிக்கவுமாமாகாதே.

ஈடு.—மூன்றாம்பாட்டு. அவனுக்குத் தம்பக்கலுண்டான அபிநிவேசத்தினுடைய எல்லையில்லாமையை யருளிச்செய்கிறார்.

[என்னைமுற்றும்உயிருண்டு] - "யஸ்ய ஸா ஜநகாத்மஜா - அப்ரமேயம் ஹி தத்தேஜ:" என்கிற ஏற்றத்தோபாதியும் போருமாய்த்து, இவருயிரை எங்கும்புக்கு அநுபவிக்கப்பெறுகையால் வந்த ஏற்றம். [என்மாயவாக்கை] - என்னுடைய ஆத்மவஸ்துவை யநுபவித்து அவ்வளவிலே தான் தவிருவானா யிருந்தானோ? "அழுக்குடம்பு" என்றும் "பொல்லாவாக்கை" என்றும் "புண்ணைமறையவரிந்து" என்றும் சொல்லுகிறபடியே - "இது ஹேயம்" என்று இவர் தாம் அருவருத்துப் புறப்பட்டு நில்லாநின்றார்; இவர் இகழாநிற்கச்செய்தே அவன் இது உத்தேச்யமென்று மேல்விழாநின்றான். [உள்புக்கு] - தம்நெஞ்சாலே இத்தை இவர் அருவருத்துப் புறப்பட்டுநின்றார். (புகுந்தென்னாதே 'புக்கு' என்கிறது - அத்தோடு தமக்குத் தொற்றற்றிருக்கிறபடி தோற்றுகைக்காக.) அதாவது - அவன் தலைதுலுக்குப் பெறுமளவும் பார்த்தாய்த்து இவரிருக்கிறது. "மங்கவொட்டு" என்னுமளவும் அவன் இத்தை விடமாட்டாமையாலே உள்ளே புகுராநின்றான். [இதனுள் புக்கு] - அநாதிகாலம் அசித்தோடே முகம்பழகிப்போந்தவனிறேயிவன்; சேதநத்வாரா குத்தியடியிட்டுநிற்குமவனிறே யவன்; அவன் மேல்விழாநின்றான்; தனக்கு ப்ரகாரமான ஆத்மவஸ்துவுக்கு ப்ரகாரமாய்க்கொண்டு தனக்கு ப்ரகாரமாமதிறே இது. "அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிச்ய" என்னக்கடவதிறே. [என்னை முற்றும் தானேயாய்] இப்படி ஆத்மவஸ்துவோடு அசித்தோடு வாசியற எங்கும்புக்கு வ்யாபிக்கையாலே 'தானே'

என்னைக் கட்டில்லையிறே. இவர் 'நான்' என்னுமத்தையும் கொண்டான்; இவர்மமகாரவிஷயத்தையும் கொண்டான். ஈச்வரனுக்குங்கூட விளாக்குலைகொண்டு அநுபவிக்கவொண்ணுதபடியானாராய்த்து. [நின்ற] - *அந்தர்ப்பஹிச்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ்ஸ்த்தித:* என்கிற பொதுவானநிலையன்றிக்கே. [மாயம்இத்யாதி] - ஆச்சர்யமான குணசேஷ்டிதங்களையுடைய ஸர்வேச்வரனுங்கூட "தண்ணீர், தண்ணீர்" என்று கிட்டும்படியான தேசமாய்த்து. [தென்னன் திருமாலிருஞ்சோலை] - தென்னனென்று - அங்குத்தைக்கு ப்ரதானனைச் சொல்லி அவனுடைய திருமலையென்னுதல்; அன்றிக்கே, தெற்கில்திக்கிலேயாய் நன்றானவென்னுதல். [திசைகைகூப்பிச் சேர்ந்தயான்] - அவன்விரும்பின திக்கை விரும்பினாராய்த்து இவரும். ஒருதிக்குப் படவிறே இவர் விரும்புவது. அதாவது - அவனையுகந்து, அவ்வழியாலே அவன் விரும்பின தேசத்தையுகந்து, அத்தோடு ஸம்பந்தமுடைய திக்கையுகந்து, இப்படி அவனோடு ஸம்பந்த ஸம்பந்திகளளவும்வர உகக்கும்படி கைகழியப்போந்த நான். அவன் தான் இவரையுகந்து இவரோடு ஸம்பந்தமுடைய தேஹத்தை விரும்புகிறுப் போலேயாய்த்து, "என்னொண்டானுன்" என்றாரிறே அடியிலே. [இன்னம்போவேனேகொலோ]-எனக்கு இத்திக்குக்குஅவ்வருகு கந்தவ்யபூமியுண்டோ? ஒருதிக்குப்பட்ட நான் இனி அவ்வருகு போவேனே, இவன் இப்படி கிடந்து படுகைக்கு இனியவ்வருகு போகையாவது- திருமலையில் ஸம்பந்தத்தை யறுத்துக் கொள்ளுகையிறே. [என்கொல் அம்மான் திருவருளே] ஸர்வேச்வரனைப்பற்றிவரும்போது நிர்விஷயப்ரமாணமுண்டாமாகாதே? என்செய்யாதானைத்தான் இவன் இங்ஙன்கிடந்து படுகிறது? என்றபடி. இவர்திறத்தில் எல்லாம்செய்தும், ஒன்றுஞ் செய்யாதாரைப்போலே "எத்தைச் செய்வோம்?" என்கிறானென்றாய்த்து.

என்கொலம்மான்திருவருள்கள்? உலகுமுயிரும்தானேயாய்*
நன்கென்னுடலம்கைவிடான் ஞாலத்தூடே நடந்துழக்கி*
தென்கொள்திசைக்குத்திலதமாய்நின்ற திருமாலிருஞ்சோலை*
நங்கள்குன்றம்கைவிடான் நண்ணாவசுரர்நலியவே. (4)

ஒ.—நாலாம்பாட்டில், தம்முடைய திருமேனியிலும் தம்மோடே பரிமாறலாம் நிலமென்று திருமலையிலும் எம்பெருமானுக்குஉண்டான வ்யாமோஹத்தை அருளிச்செய்கிறார். [உலகும் என்று தொடங்கி] - ஸர்வேச்வரனுயிருந்து வைத்து என் ஆத்மாவை விடாத மாத்ரமன்றிக்கே மிகவும் என் உடம்பை விடுகிறிலன். [ஞாலத்தூடே நடந்து என்று மேலுக்கு] - பூமியெங்கும் உலாவித் திரிந்து என்னை விஷயீகரிக்கைக்கு ஈடான நிலமாகத் திருமலையைப்பார்த்து ப்ரதிகூலர் மண் உண்ணும்படி அதிலே அத்யபிநிவேசத்தைப்பண்ணி அத்தை ஒருகாலும் கைவிடுகிறிலன்.

இ.—நாலாம்பாட்டில், தம்முடைய திருமேனியிற்காட்டிலும் தம்மோடே பரிமாறலாம் நிலமென்று அவனுக்குத் திருமலையிலுண்டான வ்யாமோஹத்தை அருளிச் செய்கிறார். [என்கொல் அம்மான் திருவருள்கள்] - ஸர்வேச்வரனுக்கு என்பக்க லுண்டாயிருந்துள்ள ப்ரஸாதாதிசயத்துக்கு அவதி என்னோ? [உலகும் உயிரும் இத்யாதி] - ஸகல லோகங்களும் ஸகல ஆத்மாக்களும் தானிட்ட வழக்காயிருக்கிறவன் தனக்கு ஒரு குறையுண்டாய் இப்படிபடுகிறுனே? [நன்கு என்னுடலம்கைவிடான்] - செருக்கர் நீசஸ்த்ரீகள்காற்கடையிலே துவளுமாபோலே என்னுடம்பை விரும்பி விடுகிறிலன். எனக்கு மமதாவிஷயம் என்னுமதுவே ஹேதுவாக விடுகிறிலன். பூமியெங்கும் உலாவி எல்லார்தலைகளிலும் திருவடிகளைவைத்துத் திருவுலகளந்தருளிற்று, தம்மைப் பெறுகைக்கு க்ருஷிபண்ணி யென்கிறுக்கிறார். ஸர்வஸாதாரணவ்யாபாரமாகையாலே ஸம்பந்தம் அறிந்தால் எனக்கென்னலாமிறே. இந்த்ரன் ராஜ்யம் பெற்றுனைப்போனான். மஹாபலி கொடுத்தானைப் போனான். இவர் அந்தைத் தமக்கு என்கிறுக்கிறார். [தென்கொள் இத்யாதி] - திருவுலகளந்தருளுகை ஒரு வ்யாஜமாய், "ஆழ்வாரை அநுபவிக்கைக்கு ஏகாந்தஸ்த்தலமேதோ?" என்று ஆராய்ந்து திருமலையிலே நின்றருளினான். ஆரியர்கள் இகழ்ந்த தெற்கில் திக்குக்கு ஓர் ஆபரணம்போலே யிருந்துள்ள திருமலையிலே வந்துநின்றான். [நங்கள் குன்றம்] - ஆச்ரித

ருடைய ஸங்கேத ஸ்தலம். [நங்கள்குன்றம் கைவிடான் - நன்கு என்னுடலம் கைவிடான்] - திருமலையில் நிலை ஸாதநமாக ஆழ்வார்திருமேனியை ப்ராப்யமாக நினைத்திருக்கிறானாய்த்து. [நண்ணா அசுரர் நலியவே] - திருமலையில் நிலையாலே அஸுரவர்க்கம் தானே முடிந்துபோய்த்து. உலகும் உயிரும் தானேயாய் - ஞாலத்தூடே நடந்துழக்கி, தென்கொள் திசைக்குத் திலதமாய்நின்ற திருமாலிருஞ்சோலை - நங்கள்குன்றம் - நண்ணா அசுரர் நலிய - கைவிடான். நன்கு என்னுடலம் கைவிடான் - என்கொல் அம்மான் திருவருள்கள் ?

ஈடு.—நாலாம்பாட்டு. தம்முடைய திருமேனியிற்காட்டிலும் தம்மோடே பரிமாறலாம் நிலமென்று அவனுக்குத்திருமலையில் உண்டான வ்யாமோஹத்தை யருளிச்செய்கிறார்.

[என்கொல்அம்மான் திருவருள்கள்] - ஸர்வேச்வரனுக்கு நிரதிசய்டாப்ரமமுண்டாமா காதே! [உலகுஇத்யாதி] - என்னகுறையுண்டாய்த்தான் இப்படி படுகிறான் ? [நன்கென்னுடலம்கைவிடான்] - செருக்கனாயிருக்கும் ராஜபுத்ரன் நீசஸ்த்ரீகாற்கடையிலே துவளுமாபோலே. [நன்கென்னுடலம்] - ஸர்வேச்வரன் தன்னைக் கேட்டார்க்குச் சொல்லுகிற வார்த்தையிருக்கிறபடி. "ஆழ்வாரை நமக்குத்தக்க திருமேனியன்றோ" என்னாநின்றானாய்த்து. [நன்கு] - நன்றாக. மிகவுமென்றபடி. [என்னுடலம்] - "இவருடைய மமகாரவிஷயமான தன்றோ நமக்கு உத்தேச்யம்" என்றிராநின்றான். என்னுடைய அடங்கெழிற்சம்பத்தில் ஏதேனும் பாம்புசெத்ததோ என்னாநின்றான். [ஞாலத்துஇத்யாதி] - எத்தனைகாலமுண்டு அவன் இப்பேறுபெறுகைக்கு உழன்றுதிரிகிறது. ஸர்வஸாதாரணனான ஸ்வாமியுடைய வ்யாபாரமெல்லாம் எனக்கெனக்கென்னலாமிறே சேஷபூதர்க்கு. இந்த்ரனுக்கு "ராஜ்யம் பெற்றேன்" என்னவுமாய், மஹாபலிக்கு "ஔதார்யம்பெற்றேன்" என்னவுமாய், சிலர்க்கு "பொன்பயந்தேன்" என்னவுமாய், இவர்க்கு "எனக்காகச்செய்தான்" என்னவுமாயிருக்கிறது காணும். [தென்கொள்இத்யாதி] - தெற்கில்திக்குக்கு ஓர் ஆபரணமான திருமாலிருஞ்சோலை. [நங்கள்குன்றம்] - ஆச்ரிதருடைய ஸங்கேத ஸ்தலம். [நங்கள்குன்றம்கைவிடான்] - நன்கென்னுடலம்கை விடான்] - திருமலையை ப்ராபகமாகவும் ஆழ்வார்திருமேனியை ப்ராப்யமாகவும் நினைத்திராநின்றான். ஆழ்வார் திருமேனியாயுத்தேச்யம், அதுபெறுகைக் காய்த்துத் திருமலையில் நிலை. [நண்ணாவசுரர் நலியவே] - "கெடும்பகை தற்செய்பத்தானே கெடும்" என்னுமாபோலே, இவன் இவ்விடத்தை விடாதே வர்த்திக்க ஆஸுரவர்க்கம் முடிந்து போய்த்து. 'உலகுமுயிரும் தானேயாய் - ஞாலத்தூடே நடந்துழக்கி, தென்கொள் திசைக்குத் திலதமாய்நின்ற திருமாலிருஞ்சோலை நங்கள் குன்றம் - நண்ணாவசுரர்நலிய - கைவிடான் - நன்கென்னுடலம் கைவிடான் - என்கொலம்மான் திருவருள்கள்.'

நண்ணாவசுரர் நலிவெய்த நல்லவமரர்பொலிவெய்த*
எண்ணாதனகளெண்ணும் நன்முனிவரின்பம்தலைச்சிறப்ப*
பண்ணார்பாடலின்கவிகள் யானாய்த்தன்னைத்தான்பாடி*
தென்னாவென்னுமென்னம்மான் திருமாலிருஞ்சோலையானே. (5)

ஒ.—அஞ்சாம்பாட்டில், எம்பெருமான் தம்மோடேகலந்து தம்வாயிலே திருவாய்மொழி கேட்ட ப்ரீதியுள்ளடங்காமை, தென்னா தென்னாவென்று நித்யமுக்தரைப்போலே பாடாநின்றான் என்கிறார். [நண்ணா என்றுதொடங்கி] - உகவாத அஸுரர் இவ்ஸம்ருத்தி பொறுக்க மாட்டாதே முடியும்படியாகவும், அநுகூலர் இத்தைக்கண்டு ஸம்ருத்தராம்படியாகவும், உபயவிபூதியும் கூடினாலும் எம்பெருமானுக்கு ஸம்பத்துபோராது, இன்னம் மேன்மேல் நன்மைகளை வேணுமென்று எண்ணாநிற்கும் நன்முனிவர், "இதுவே அமையும், மற்றொரு ஸம்பத்துவேண்டா" என்று மிகவும் ஹ்ருஷ்டராம்படியாகவும். [பண்ணார் பாடல் என்றுதொடங்கி] - பண்சேர்ந்திருந்துள்ள பாடலையுடைய இனியகவிகளை என்னைப் பேரையிட்டுக்கொண்டு தான் தன்னைப்பாடி. [என்னம்மான் - திருமாலிருஞ்சோலையானே] - என் நாதனானவன் திருமாலிருஞ்சோலையான்.

இ.—அஞ்சாம்பாட்டில். அவன் தம்மோடேகலந்து தம்வாயாலே திருவாய்மொழிகேட்ட ப்ரீதியுள்ளடங்காமை ஆளத்திவையாநின்றான் என்கிறார். "நன்கு என்னுடலம் கைவிடான்" என்கிறவளவன்றியே என் உக்திமாத்ரத்திலே களியாகின்றான் என்றுமாம். [நண்ணா இத்யாதி] - "விபரீதஸ்ததாஸுர:" என்கிறபடியே - விபரீதரான அஸுரர்கள் இஸ்ஸம்ருத்தி பொறுக்கமாட்டாமையாலே முடியவும். "கிட்டக்கூடவோமல்லோம்" என்றிருக்கும் அஸுரவர்க்கம். "விஷ்ணுபக்திபரோ தேவ:" என்கிறபடியே-அநந்யப்ரயோஜநரான வைஷ்ணவர்கள் இதுவே ஜீவனமாக ஸம்ருத்தமாகவும். 'தொண்டர்க்கு அமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்றாரிறே. [எண்ணாதனக ளெண்ணும்] - உபய விபூதியுக்தனுக்கு இன்னம் விபூதி வேணுமென்றும், அஸங்க்யாதகுணகனுக்கு இன்னம் குணம் வேணுமென்றும் மேன்மேலென எண்ணா நிற்குமவர்கள். [நன்முனிவர்] - ஈச்வரன் அடியாகத் தங்கள் ஸம்ருத்தியை எண்ணுமவர்கள் முனிவர்; அத்தலைக்கு ஸம்ருத்தியை எண்ணுமவர்கள் நன்முனிவர். [இன்பம் தலை சிறப்ப] - "திருவாய்மொழியொழிய வேறொரு ஸம்பத்துவேண்டா" என்று மிகவும் ஹ்ருஷ்டராம்படியாகவும், [பண்ணார் பாடல்] - பண்மிக்கிருந்துள்ள பாடல். புஷ்பம் பரிமளத்தோடே அலருமாபோலே, திருவாய்மொழி அவதரிக்கிறபோதே பண் மிறுங்கியாய்த்திருப்பது. [இன்கவிகள்] - பண்ணுக்கு ஆச்ரயமான கவிதானே இனிதாயிருக்கை. [யானாய்த் தன்னைத் தான்பாடி] - என்னைப்பேரை விட்டுத் தன்னைத் தான்பாடி; புத்ரனை வார்த்தையைக் கற்பித்து அவன்வாயாலே கேட்டு இனியனும் பிதாவைப்போலே. [தென்னாவென்னும்] - ப்ரீதிக்குப் போக்குவீடாக ஆளத்திவையாநின்றான். "ஏதத்ஸாம காயந்நாஸ்தே" என்று பகவல்லாபத்திலே ப்ரீதிக்குப் போக்குவிட்டு சேஷபூதன் சொல்லக் கடவத்தை, "அவாக்யநாதர:" என்கிற தான் ப்ரீதிப்ரகர்ஷத்தாலே அந்தபூர்த்திகுலைந்து சொல்லுகிறானிறே [என்னம்மான்] - ஸுதவசநம் ரஸிக்குமாபோலே, ஸம்பந்தமிறே ரஸிக்கைக்கு அடி. [திருமாலிருஞ்சோலையானே] - இவரைக் கவிபாடுவித்த தேசம் திருமலையாய்த்து.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. அவன் தம்மோடே கலந்து தம் வாயாலே திருவாய்மொழி கேட்ட ப்ரீதியுள்ளடங்காமல் ஆநந்தித்து ஆளத்திவையாநின்றா னென்கிறார். 'நன்கென்னுடலம் கைவிடான்" என்னுமளவன்றிக்கே என்னுக்திமாத்ரத்திலே களியாநின்றானென்கிறாரென்றுமாம்.

நண்ணாவசுரர்நலிவெய்த நல்லவமரர்பொலிவெய்த எண்ணாதனகளெண்ணும் நன்முனிவரின்பம் தலைசிறப்பவாய்த்து திருவாய்மொழிதான் அவதரித்தது. ஸ்துத்யனுடைய அவதாரம்போலேயாய்த்து ஸ்துதியினுடைய அவதாரமும்; "பரித்ராணாய" "அகிலஜகத்பத்ம போதாய" என்னுமாபோலே. [நண்ணா இத்யாதி] - ப்ரதிகூலநிரஸநத்துக்கு வேறொரு கருவி தேடவும்வேண்டாதே, அநுகூலரக்ஷணத்துக்கும் வேறொன்று தேடவும் வேண்டாதே, அநந்யப்ரயோஜநராயிருப்பார்க்கு ஸ்வயம்ப்ரயோஜநமுமாயிருக்குமாய்த்து. [நண்ணாவசுரர் நலிவெய்த] - அவ்யபதேச்யனுக்கு அநந்தரத்திலவன், தமப்பன் செய்ததைக் கேட்டு "இவன் என்செய்தானானான்" என்று கர்வித்தான் - "ஒரு மதிளை வாங்குங்காட்டில் அத்தர்சாம் குலைந்ததோ, திருவாய்மொழியென்றும் ஸ்ரீராமாயணமென்றும் வலியன இரண்டு மஹாப்ரபந்தங்களுண்டாயிருக்க" என்றானாய்த்து; இப்படி உகவாதார் நெஞ்சுளுக்கும்படியான ப்ரபந்தமாய்த்து. *விபரீதஸ்ததாஸுர:* என்னக்கடவதிறே. பொருந்தாமையையுடைய அஸுரவர்க்கமானது மண்ணுண்ணும்படியாக. ஸம்பந்தமில்லையென்னவொண்ணாதே, "பொருந்தோம்" என்கையிறே யுள்ளது. [நல்லவமரர்பொலிவெய்த] - *விஷ்ணுபக்திபரோ தேவ:* என்னக்கடவதிறே. அநுகூலராயிருக்குமவர்கள் உண்ணாதே தடிக்க, இவர்களுக்கு நன்மையாவது-பகவத்பக்தராயிருக்கை. "தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்னக்கடவதிறே. [எண்ணாதன இத்யாதி] - புறம்பொருவர் எண்ணாதன சிலவற்றை யெண்ணுவார் சிலருண்டாய்த்து. "ஸர்வேச்வரன் ரக்ஷகன், அவனையொழிந்ததடங்கலும் ரக்ஷ்யம்" என்றிருக்கையன்றிக்கே, உபயவிபூதியுக்தனுக்கு இன்னம் சிலவிபூதிவேணுமென்றும், ஸர்வகுணஸம்பந்நனுக்கு இன்னம் சில குணங்கள் வேணுமென்றும் இப்புடைகளிலே எண்ணுவார் சிலருண்டாய்த்து; அவர்கள் [இன்பம் தலைசிறப்ப] - திருவாய்மொழியவதரித்தபின்பு "அவனுக்கு குணவிபூதிகள்போராது" என்றிருந்தஇழவுதீர்ந்து,

அத்தால்நிரதிசயாநந்திகளாக. [நன்முனிவர்] - அவனுடைய ஸம்ருத்தியை மநநம்பண்ணும் ஸ்வபாவராயிருக்கை. அன்றிக்கே, "திருவாய்மொழியை யொழிய வேறொரு ஸம்பத்து கொண்டார்" என்று இதுவே மநநம்பண்ணி உத்க்ருஷ்டராம்படியாகவும். [பண்ணார்பாடல்] பண்ணோடே சேர்ந்த பாடல். புஷ்பமானது பரிமளத்தோடே அலருமாபோலே, பண்ணும் இசையும் மீருந்திருக்குமாய்த்து. [இன்கவிகள்] - இசையும்பண்ணுமொழியவே தொக்குக் கழிந்த கனிபோலே கவிதானே இனிதாயிருக்குமாய்த்து. [யானாய்த் தன்னைத் தான்பாடி] - பிதாவானவன் புத்ரனுக்குப் பசுவை நீர்வார்த்துக் கொடுத்து அவன்பக்கலிலே தான் மீள நீரேற்றுப் பசுவைப் பெறுமாபோலே; ஸாதிவ வார்த்தையைக் கற்பித்து அவன்சொல்லக் கேட்டு இவன் இனியனுமாபோலே. தான் பாடினானாகில் ஸ்ரீகீதைபோலே ஆய்த்துப்போம். நம்பி திருவழுதிநாடுதாஸர், "அருள்கொண்டாடும்" என்கிறபாட்டிலே, ஸ்ரீகீதையைப்படித்தானொருவன் ஸத்யாஸதஸ்ஸிலேசென்றால் பலருமாக நாழியரிசியைக்கொடுத்து விச்வஸிக்கமாட்டாமையாலே 'புறத்திண்ணையிலேயிடு' என்பர்கள்; திருவாய்மொழிகற்றான் ஒருவிண்ணப்பம் செய்வான் சென்றால், ஸர்வேச்வரனகப்படப் புறப்பட்டெதிர்கொண்டு அகமொழித்துக் கொடுத்து அழுதுபடியுமெடுத்துவிட்டு ஸத்கரிப்பர்கள்" என்றாராம். "பண்டேபரமன் பணித்த" என்று இவரங்கீகரிக்கையாலே அந்த ஸ்ரீகீதைதானும் வீறுபெற்றதிறே. [தென்னாவென்னும்]-செருக்காலே "தென்னா, தென்னா" என்று ஆளத்தியையாகிற்குமாய்த்து; ஸம்ஸாரிசேதநனுக்கு பகவல்லாபமுண்டானால் *ஏதத்ஸாம காயந்நாஸ்தே* என்று ஸாமகாநம் பண்ணுமாபோலே; *அவாக்யநாதர:* என்கிறவன் தைர்யபங்கம்பிறந்து பாடாநிற்குமாய்த்து. [என்னம்மான்] - ஸௌதவசநம் இனிநாம்போது ப்ராப்தியுண்டாகவேணுமிறே; அதுக்கு அடியான ப்ராப்தியைச் சொல்லுகிறதாய்த்து. [திருமாலிருஞ்சோலையானே] - இவரைப்பாடுவித்தமுக்கோட்டை. "பாட்டினுள்ளே யென்னெஞ்சத்திருந்தமை - காட்டினாய் கண்ணபுரத்துறையம்மானே" என்று அவரைப்பாடுவித்தமுக்கோட்டையிறே அது. தாம்பாடினகவிகளினினிமையை யநுஸந்தித்தார், இவை தாமடியாகப் பிறந்தனவென்று சொல்லலாயிருந்ததில்லை, இதுக்கடியென்? என்றுபார்த்தார்? அவன் தன்னெஞ்சிலே புகுந்திருந்து பாடுவித்தானாயிருந்தது. "கண்ணபுரத்துறையம்மான்" என்று கவிபாடுவித்தமுக்கோட்டையைச் சொல்லுகிறார்.

திருமாலிருஞ்சோலையானேயாகிச் செழுமூவுலகும்* தன்
ஒருமாவயிற்றினுள்ளேவைத்து ஊழியூழிதலையளிக்கும்*
திருமாலென்னையாளுமால் சிவனும்பிரமனும்காணாது*
அருமாலெய்தியடிபரவ அருளையீந்தவம்மானே. (6)

ஒ.—ஆறும்பாட்டில், ச்ரிய:பதியானவன் திருமலையிலே நின்றருளி என்னையாளுகையிலே மிகவும் வ்யாமுக்தனானான் என்கிறார். [செழுமூவுலகு என்றுதொடங்கி] - கல்பந்தோறும் அழியமூன்றுலோகத்தையும் தன் திருவயிற்றிலே வைத்து உத்க்ருஷ்டமாக ரக்ஷிக்கும் ச்ரிய:பதி. [சிவனும்பிரமனும் என்றுமேலுக்கு] - சிவனும் பிரமனும் காணாதே நிரதிசயபக்தியுக்தராய்த் தன் திருவடிகளை ஆச்ரயிக்க, அவர்களுடைய அபேக்ஷிதங்களைக் கொடுத்த ஸர்வேச்வரன்.

இ.—ஆறும்பாட்டில், ச்ரிய:பதியானவன் வந்து திருமலையிலே நின்றருளி என்னையாளுகையிலே வ்யாமுக்தனானான் என்கிறார். [திருமாலிருஞ்சோலையானே யாகி - என்னையாளும் மால்] - திருமலையைத் தனக்கு வஸ்தவ்யபூமியாகக்கொண்டு என்னை அடிமைகொள்ளுகைக்காக என்பக்கல் வ்யாமோஹம் ஒரு வடிவுகொண்டாற்போலயிருக்கிறவன். [செழுமூவுலகும்] - கட்டளைப்பட்ட த்ரைலோக்யத்தையும் அத்விதீயமாய்ச் சிறிதானவயிற்றிலே வைத்து, கல்பந்தோறும் கல்பந்தோறும் தலையாக ரக்ஷிக்கும். ப்ரளயாபத்தில் ஜகத்துக்குத் தன்னையொழியச் செல்லாதாப்போலே, என்னையொழியத் தனக்குச் செல்லாதபடியாயிருக்கை. [திருமால்] - ச்ரிய:பதி. [என்னையாளும் மால்] - என்பக்கல் பிச்சு ஒருவடிவு

கொண்டாற்போலே யிருக்குமவன். ப்ரளயாபத்ஸகனும் ச்ரிய:பதியாயிருக்கிறவன் என்பக்கலிலே ஸாபேக்ஷனும் நின்றான். [சிவனும் இத்யாதி] - ப்ரஹ்மருத்ராள் காணப்பெருமையாலே நிரதிசயபக்தி யுக்தராய்த் திருவடிகளை அக்ரமமாகப் புகழ, அவர்களுடைய அபேக்ஷிதங்களைக் கொடுத்த ஸர்வேச்வரன்.

ஈடு.—ஆறும்பாட்டு. ஸ்ரீய:பதியானவன் திருமலையிலே நின்றருளி என்னை யாளுகையிலே வ்யாமுக்தனானானென்கிறார்.

[திருமாலிருஞ்சோலையானேயாகி - என்னையாளும்மால்] - திருமலை தனக்கு வஸ்தவ்ய பூமியாகக்கொண்டு நிற்கிறவன், என்னை யடிமைகொள்ளுகைக்காக என்பக்கல் வ்யாமோஹம் ஒரு வடிவுகொண்டாற்போலே யிருக்கிறவன். [செழுமூவுலகும்] - கட்டளைப்பட்ட த்ரைலோக்யத்தையும். [ஒரு இத்யாதி] - அத்விதீயமாய்ச் சிறிதான வயிற்றிலேவைத்து, கல்பந்தோறும் கல்பந்தோறும் தலையாக ரக்ஷிக்கும். ப்ரளயாபத்தில் ஜகத்துக்குத் தன்னையொழியச் செல்லாதாப்போலே என்னையொழியத் தனக்குச்செல்லாதானாயிருக்கை. [திருமால்] - ஸ்ரீய:பதி. [என்னையாளுமால்] - என்னையடிமை கொள்ளுகைக்காகப் பிச்சுத்தான் ஒருவடிவு கொண்டாற்போலே யிருக்குமவன். [சிவனும்பிரமனும்இத்யாதி] - ப்ரஹ்மருத்ராதிகள், காணப்பெருமையாலே நிரதிசயபக்தியுக்தராய்த் திருவடிகளை அடைவுகெட ஏத்த, அவர்களுக்கு மூகக்தோற்றுமேகாடக்கனின்று அருளைப் பண்ணிக்கொடுக்கும் ஸர்வேச்வரன், எனக்குக் கண்ணுக்லக்காம்படி திருமலையிலே வந்து நின்று என்னை யடிமை கொள்ளுகையிலே பெரும் பித்தனானான்.

அருளையீயென்னம்மானேயென்னும் முக்கணம்மானும்*
தெருள்கொள்பிரமனம்மானும் தேவர்கோனும்தேவரும்*
இருள்கள்கடியும்முனிவரும் ஏத்துமம்மான்திருமலை*
மருள்கள்கடியும்மணிமலை திருமாலிருஞ்சோலைமலையே. (7)

ஓ. ஏழாம்பாட்டில், நம்முடைய ஸம்ருத்திக்கு அடியான திருமலையை ஏத்துகிறார். என் பக்கலிலே க்ருபை பண்ணியருளவேணும் என்ஸ்வாமியே என்னும் ருத்ரனும், அவனிற் காட்டில் அறிவுடைய ப்ரஹ்மாவும், இந்த்ரனும், தேவர்களும், ஜகத்தில் அஜ்ஞாநாந்தகாரத்தைப் போக்கக்கடவ ருஷிகளும். [ஏத்தும் அம்மான் என்று மேலுக்கு] - ஏத்தும்படியையுடைய ஸர்வேச்வரனுடைய திருமலை, ஆத்மாவுக்கு பகவத் கைங்கர்ய விரோதிகளான அவித்யாதிகளெல்லாம் போக்கும் நிரதிசய புருஷார்த்தமான மலை - திருமாலிருஞ்சோலையே.

இ.—ஏழாம்பாட்டில், தம்முடைய ஸம்ருத்திக்கு அடியான திருமலையை ஏத்துகிறார். [அருளையீ இத்யாதி] - "என்ஸ்வாமீ, என்பக்கலிலே க்ருபை பண்ணியருள வேணும்: உடையவனை நீ பொகட்டால் வேறு புகலுண்டோ?" என்னுமாய்த்து. இப்படி சொல்லுகிறவன் ஆர்? என்னில், - ஸைடக்ஷேத்ரனும், ஈச்வராபிமானியான ருத்ரனும், அவனுக்கும் ஜ்ஞாநப்ரதனும் ஜநகனுமான ப்ரஹ்மாவும். [தேவர்கோனும்] தேவர்களுக்கு அத்யக்ஷனான இந்த்ரனும், தேவேந்த்ரன் என்று அவனுக்கு ஏற்றமான உத்கர்ஷத்தையுடைய தேவர்களும், அஜ்ஞாநாந்தகாரத்தை வாஸனையோடே போக்கும் ஸ்மர்த்தாக்களும், இவர்களெல்லாரும்கூட ஏத்தும் ஸர்வேச்வரனுடைய திருமலை. [மருள்கள் இத்யாதி] - கைங்கர்ய விரோதிகளான அவித்யாதிகளைப் போக்குமதுவாய், ஸ்வயம் புருஷார்த்தமான திருமலை. திருமலையையொழியவே ப்ராப்யமுண்டு என்றிருக்கும் நினைவைப் போக்குமிடம் என்றுமாம். அதுதான் ஏதென்ன?—திருமாலிருஞ்சோலை மலையே.

ஈடு.—ஏழாம்பாட்டு. தம்முடைய இஸ்ஸம்ருத்திக்கெல்லாம் அடி திருமலையானபின்பு, இத்தேசந்தானே நமக்கு ப்ராப்யமென்று திருமலையைக் கொண்டாடுகிறார்.

அருளையியென்பர்கள் - ப்ரஸாதத்தைப் பண்ணியரு ளென்பர்கள். [என்னம்மானே] - நீயருளாதொழிந்தால் புறம்பு எங்களுக்குப் புகலுண்டோ? ப்ராப்தனை நீ யருளவேண்டாவோ வென்பர்கள். இப்படி சொல்லுகிறவர்கள்தான் ஆரென்னில்,- [முக்கண் இத்யாதி] - லலாடநேத்ரனாய் ஈச்வராபிமானியான ருத்ரன், அவனுக்குங்கூட ஜ்ஞாநப்ரதனாய் ஜநகனாகையால் வந்த ஏற்றத்தையுடைய சதுர்முகன், தேவஜாதியை சனியும் புதனும் மெய்க்காட்டுக்கொள்ளுகிற இந்த்ரன், தங்களை யுடையவனை அவனுக்கேற்றமாம்படி யிருக்கிற தேவர்கள், அஜ்ஞாநாந்தகாரத்தை வாஸனையோடே போக்கியிருக்கும் ஸமர்த்தாக்களான ருஷிகள், இவர்களடங்கலும் ஒருமிடறுசெய்து எத்தும்படியாக ஸர்வேச்வரன் தான்விரும்பிவந்து மேல்விழுந்து படுகாடு கிடக்கும் தேசமாய்த்து. [மருள்கள்கடியும் மணிமலை]-ப்ராப்யவிரோதியானவற்றை அடையப் போக்கும் தேசமாய்த்து. அதாவது—திருமலையையொழிந்தொன்றை ப்ராப்யமென்றுபிறக்கும் புத்தியைத் தவிர்த்துத்தருமாய்த்து. இதெல்லாம் எதுதானென்னில்; மற்றுமுண்டோ? திருமாலிருஞ்சோலைமலையே.

திருமாலிருஞ்சோலைமலையே திருப்பாற்கடலேயென் தலையே*
திருமால்வைகுந்தமே தண்திருவேங்கடமேயெனதுடலே*
அருமாமாயத்தெனதுயிரே மனமேவாக்கேகருமமே*
ஒருமாநொடியும்பிரியான் என்னூழிமுதல்வனொருவனே. (8)

ஒ.—எட்டாம்பாட்டில், திருமலை தொடக்கமான கோயில்களெல்லாவற்றிலும் பண்ணும் அபிநிவேசத்தைத் தம்முடைய திருவுடம்பிலும் பண்ணுநின்றான் என்று அநுஸந்தித்து, அவனுடைய அபிநிவேசம் அவ்வளவுமன்றிக்கே யிருக்கையாலே அவைதன்னையே பரிகணித்து-'இவற்றை ஒரு க்ஷணமும் பிரிகிறிலன், என்பக்கலிலே அபிநிவிஷ்டனான ஸர்வேச்வரனுடையபடி யிருந்தபடியென்?' என்கிறார். அருமாமாயத்து எனதுயிரே என்றது - ''மம மாயா துரத்யயா'' என்னும்படியாலே கடக்க அரிதான ப்ரக்ருதியோடே மயங்கின என் ஆத்மா என்றவாறு.

இ.—எட்டாம்பாட்டில். 'திருமலை தொடக்கமான கோயில்கள் எல்லாவற்றிலும் பண்ணும் அபிநிவேசத்தை என் அவயவங்களிலே பண்ணி ஒருக்ஷணமும் பிரிகிறிலன்; அவன்படி யிருந்தபடியென்?' என்கிறார். [திருமாலிருஞ்சோலை மலையே] - தெற்கில் திருமலையையும், திருப்பாற்கடலையும், என் உத்தமாங்கத்தையுமொக்க விரும்பாநின்றான்; பரமபதத்தையும், வடக்கில் திருமலையையும், என் சரீரத்தையுமொக்க விரும்பாநின்றான். [திருமால் வைகுந்தம்] - ''ச்ரியாஸார்த்தம் ஜகத்பதி:'' என்கிறபடியே அம்மிதுநத்துக்குத் தகுதியான தேசம். இத்தேசங்களில் பண்ணுகிற விருப்பம் தம்திருமேனியில் பண்ணுகிற விருப்பத்துக்கு ஸத்ருசமல்லாமையாலே தம்முடைய அவயங்கள்தோறும் புக்கு அநுபவியாநின்றான். [அருமாமாயத்து எனதுயிரே] - கடக்கவரிதான ப்ரக்ருதியோடே மயங்கி அசித்கல்பமான என் ஆத்மாவிலே. அவதாரணங்களால் - ''இதுவேயோ இவன் அபிநிவேசித்திருப்பது'' என்று தோற்றும்படியிருக்கை. [ஒருமாநொடியும் பிரியான்] - ஒருக்ஷணத்தில் ஏகதேசமும் பிரிகிறிலன் [என்னூழி முதல்வன் ஒருவனே] - என்பக்கல் அபிநிவிஷ்டனாகைக்காகக் காலோபலக்ஷித ஸகல பதார்த்தங்களுக்கும் காரணபூதனான அத்விதீயன். ஸம்ஹார காலத்தில் ஸகல சேதநாசேதநங்களுக்கும் தன்னையொழியச் செல்லாதாப் போலேயாய்த்து, இவர்திருமேனியை ஒழியத் தனக்குச் செல்லாதே யிருக்கிறபடி. கார்ய காரணோபயாவஸ்த்த சிதசித்துக்களுடைய ஸத்தை தன் அதீநமாம்படி யிருக்கிறவன், தன்னுடைய ஸத்தை என்சரீராதீநமாம்படி யிராநின்றான்; இவனும் ஒருவனுமிருக்கிறானே!

ஈடு.—எட்டாம்பாட்டு. 'திருமலைதொடக்கமான கோயில்கள்எல்லாவற்றிலும் பண்ணும் அபிநிவேசத்தை என் அவயவங்களிலேபண்ணி ஒருக்ஷணமும் பிரிகிறிலன்; இவன்படி யிருந்தபடியென்!' என்கிறார்.

[திருமாலிருஞ்சோலைமலை இத்யாதி] - தெற்கில் திருமலையையும், திருப்பாற்கடலையும், இவருடைய உத்தமாங்கத்தையும் ஒக்கவிரும்பினான்; ஸ்ரீவைகுண்டத்தையும், வடக்கில் திருமலையையும், இவர் திருமேனியையும் ஒக்கவிரும்பாநின்றான். [திருமால்வைகுந்தம்] - *ச்ரியாஸார்த்தம் ஜகத்பதி:* என்கிறபடியே (அம்மிதுநத்துக்குத் தகுதியான தேசம்). ஆக இரண்டு திருமலைகளிலும் பரவ்யூஹங்களிலும் பண்ணும்விருப்பத்தையுடைய இவர் திருமேனி யொன்றிலும் பண்ணாநின்றானென்றபடி. [அரு இத்யாதி] - இவருடைய ஆத்மவஸ்துவிலும் மநோவாக்காயங்களிலும் ஒக்கவிரும்பாநின்றான். அவதாரணத்தால் - அதுதன்னிலும் க்ரமத்தாலன்றிக்கே க்ஷணகாலமும் இடைவிடாதே ஸௌபரியைப் போலே அநேகம் வடிவு கொண்டு நில்லாநின்றானாய்த்து. [அரு இத்யாதி] - ஆத்மவஸ்து என்று ஒருவ்யபதேசமாத்ர மாய், அநாதிகாலம் அசித்திலேகலசி அத்தாலே அசித்ஸமனாயிறேயிருக்கிறது. 'அரு' என்கையாலே - *மமமாயா துரத்யயா* என்கிறபடியே ஒருவரால் கடக்கவரிதாயிருந்துள்ள அசித்தோடே கலசிக்கிடக்கிற ஆத்மவஸ்துவிலும். [மனமேவாக்கேகருமமே] - கீழ், இதுதன்னை ஒன்றாக விரும்பினபடி சொன்னார்; இங்குத் தனித்தனியே எல்லாவற்றிலுமொக்க ஏககாலத்திலே விருப்பத்தைப்பண்ணினபடியைச் சொல்லுகிறார். [ஒருமாகொடியும்பிரியான்] - ஒரு க்ஷணத்தில் ஏகதேசமும் பிரிகிறிலன். ஒன்றில்நின்றும் ஒன்றில் கால்வாங்கிப்போய் அநுபவிக்கிறிலன். [என்னூழிமுதல்வனொருவனே] - என்னிடத்தில் அபிநிவிஷ்டனாகைக்காகக் காலோபலக்ஷித ஸகலபதார்த்தங்களுக்கும் காரணபூதனான அத்விதீயனானவன். ஸம்ஹாரகாலத்தில் ஸகல சேதநாசேதநங்களுக்கும் தன்னையொழியச் செல்லாதாப்போலேயாய்த்து, இவர் திருமேனியை யொழியத் தனக்குச் செல்லாதேயிருக்கிறபடி. கார்யகாரணோபயாவஸ்த்த சிதசித்துக்களுடைய ஸத்தை தன்அதீநமாம்படியிருக்கிறவன் தன்னுடையஸத்தை என் சரீராதீநமாம்படி யிராநின்றான். [என்னூழிமுதல்வனொருவனே!]-(என்பக்கலிலே யபிநிவிஷ்டனான ஸர்வேச்வரனுடையபடி யிருந்தபடி என்!) இச்சபலனையே பெரிய ஈச்வரனென்கிறது; இவனும் 'ஒருவனே! என்கிறார்.

ஊழிமுதல்வனொருவனேயென்னும் ஒருவனுலகெல்லாம்*
ஊழிதோறும்தன்னுள்ளே படைத்துக்காத்துக்கெடுத்துழலும்*
ஆழிவண்ணனென்னம்மான் அந்தண் திருமாலிருஞ்சோலை*
வாழிமனமேகைவிடேல் உடலுமுயிருமங்கவொட்டே. (9)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், நமக்கு இந்த ஸம்பத்தெல்லாம் திருமலையாலே வந்தது; ஆனபின்பு திருமலையைக் கைவிடாதே என்று தன்திருவுள்ளத்தைக் குறித்துச் சொல்லி, தம்மை ஸசரீரமாகத் திருநாட்டிலே கொடுபோகவேணு மென்றிருக்கிற எம்பெருமானுடைய அபிநிவேசத்தைக் கண்டு, இந்த ஹேயமான ப்ரக்ருதியை நீக்கி என்னைக் கொடுபோகவேணும் என்கிறார். [ஊழி என்றுதொடங்கி] - காலோபலக்ஷித ஸகல பதார்த்தத்துக்கும் காரணம் ஒருவனே என்று சொல்லப்படுகிற அத்விதீயனாய், கல்பந்தோறும் தன்னுடைய ஸங்கல்பத்தாலே ஸ்ருஷ்ட்யாதிகளைப்பண்ணி அதுவே போதுபோக்காவதும் செய்து கடல்போலே கம்பீரஸ்வபாவனான என் ஸ்வாமியுடைய அழகிய ச்ரமஹரமான திருமாலிருஞ்சோலையை, மநஸ்ஸே! கைவிடாதே கொள். 'வாழி' என்று - மநஸ்ஸை ச்லாகிக்கிறார். [உடலும் உயிரும் மங்கவொட்டே] - சரீரப்ராணநிரூபமான ப்ரக்ருதி ஸம்பந்த விநாசத்தை ஸம்வதித்தருளவேணும்.

இ.—ஒன்பதாம்பாட்டில், 'நமக்கு இந்த ஸம்பத்தெல்லாம் திருமலையாலே வந்ததாய்த்து: திருமலையைக் கைவிடாதே கொள்' என்று திருவுள்ளத்தை நோக்கிச் சொல்லி, தம்மை ஸசரீரமாகப் பரமபதத்திலே கொண்டுபோகவேணுமென்றிருக்கிறவனுடைய அபிநிவேசத்தைக் கண்டு, இந்த ஹேயமான ப்ரக்ருதியை நீக்கிக் கொண்டுபோகவேணு மென்கிறார். [ஊழி இத்யாதி] - காலோபலக்ஷித ஸகல

பதார்த்தங்களுக்கும் காரணபூதனானவன் ஒருவனே என்று ப்ரமாணங்கள் சொல்லப்படுகிற அத்விதீயன்: ''ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்''. ஸகல லோகங்களையும் கல்பந்தோறும் தன் ஸங்கல்பைகதேசத்திலே உண்டாக்கி, நாமரூபங்களைக் கொடுத்தபின்பு தன்கார்யம் தானே செய்து கொள்ளலாம் என்று அவ்வளவில் விடாதே அவற்றினுடைய ரக்ஷணத்தைப்பண்ணி, இவை அபிப்ராவ்ருத்தமானவாறே ஸம்ஹரித்து, இதுவே யாத்ரையாயிருக்கிற கம்பீர ஸ்வபாவனானவன் என்ஸ்வாமி. கடல்போலே ச்ரமஹரமான வடிவைக்காட்டி என்னை ஸம்ஸாரார்ணவத்தில் நின்றும் எடுத்தவன் என்றுமாம். தர்சநீயமாய் ச்ரமஹரமான திருமலையை. [வாழி] - நான்சொல்லுகிற கார்யம் உனக்கு நித்யமாய்ச் சென்றிடுக. நமக்கு இஸ்ஸம்பத்துக் கெல்லாம் அடி திருமலையானபின்பு அத்தைக் கைவிடாதேகொள் என்று திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்ய; அவனும் தன்திருவுள்ளத்தைக்குறித்து ''ஆழ்வார் திருமேனியைக் கைவிடாதேகொள்'' என்று அருளிச்செய்ய, - 'இந்நிர்ப்பந்தத்தைத் தவிர்ந்தருளவேணும்'' என்கிறார். [உடலும் உயிரும் மங்கவொட்டே] - சரீரப்ராணாதி ரூபமான ப்ரக்ருதி ஸம்பந்த விநாசத்தை ஸம்வதித்தருளவேணும்: திருமலைபோலே உத்தேச்யமாயிருப்ப தொன்றன்று, ஹேயமான சரீரமும் ப்ராணனும். 'மங்கவொட்டு' என்கையாலே, ஆழ்வார் இங்கே எழுந்தருளியிருந்த இருப்பு ப்ராரப்த கர்மத்தாலன்று, பகவதிச்சையாலே என்கிறது. ''நங்கு என்னுடலம் கைவிடான்'' என்றாரிறே.

௯௫.—ஒன்பதாம்பாட்டு. 'நமக்கு இந்த ஸம்பத்தெல்லாம் திருமலையாலே வந்த தாய்த்து; திருமலையைக் கைவிடாதே கொள்' என்று திருவுள்ளத்தைக்குறித்தருளிச் செய்கிறார்.

[ஊழிமுதல்வனொருவனே யென்னுமொருவன்] - காலோபலக்ஷிதஸகலபதார்த்தங்களுக்கும் காரணபூதனானவனொருவனுமே என்று *ஸதேவ* இத்யாதி ப்ரமாணங்களாலே சொல்லப்படுகிற ஒருவன். கார்யகாரமான இதனுடைய அழிந்தவன்று இவற்றைத் தன்மேலே ஏறட்டுக்கொண்டு நிற்கிறவன்கிடீர், இப்போது என்னுடம்பிலே வந்து தங்குகிறான். காரணாவஸ்த்தையில் சிதசித்துக்களுடைய ஸத்தை தன்னதீநமாம்படி யிருக்குமவன் ஸ்வஸத்தை என்னதீநமாம்படி யிராநின்றான். காரணாவஸ்த்தையில் ஸத்தையைநோக்கிவிட்டால் பின்னை யோதான் இவை தன்னைத்தான் நோக்கிக்கொள்ளுகிறது. [உலகெல்லாமித்யாதி] - நாமரூபங்களைக் கொடுத்துவிட்டால், பின்னைத்தான் தங்கள் கார்யம் தாங்கள் செய்கிறார்களோ? இத்தால் சொல்லிற்றாய்த்து என்னென்னில்; - எல்லா அவஸ்த்தையிலும் இவரையொழியத் தரிப்பானாயிருக்கிறிலன். ப்ரளயாத்யாபத்துக்களில் இவற்றுக்குத் தன்னையொழிய ஸ்த்திதி யில்லாதாப்போலே, தான் இவரையொழியில் தரிக்கமாட்டானாய் யிராநின்றான். [ஆழி வண்ணன்] - கம்பீரஸ்வபாவனென்னுதல்; கடல் போலே ச்ரமஹரமான வடிவைக்காட்டி என்னை ஸம்ஸாரப்ரளயத்தில் நின்றும் எடுத்தவனென்னுதல். [அந்தண் திருமாலிருஞ்சோலை]- அவனுக்குங்கூட தர்சநீயமாய் ச்ரமஹரமான தேசம். [வாழி மனமே கைவிடேல்] - நெஞ்சே! நாம் சொல்லுகிறஸம்ருத்தி யுனக்கு மாறாதிடுக. அவன் இப்படி நம்பக்கலிலே மேல்விழுந்து விரும்புகையாகிற ஸம்ருத்திக்கெல்லாம் ஹேது திருமலையாய்த்து; இத்தை ஒருகாலும் கைவிடகில்லையாதேவிடாயென்கிறார், தந்திருவுள்ளத்தைப் பார்த்து. அவனும் தன் திருவுள்ளத்தைக் குறித்து ''ஆழ்வாரைத்தந்தது அவருடைய திருமேனியாயிருக்கும், நீயும் அத்தை ஒருகாலும் விடாதேவிடாய்'' என்றான்; ''பிரானே, அங்ஙனொன்றுது, இத்தைத்தவிரவேணும்'' என்று நிர்ப்பந்திக்கிறார். [உடலுமுயிரும் மங்கவொட்டு] - சரீரமும் ப்ராணனும் மங்கும்படி இசையவேணும். இது அத்திருமலைபோலே உபாதேயமாயிருப்பதொன்றன்று, சால ஹேயமாயிருப்பதொன்று; இத்தை மங்க இசையவேணும். ''மங்கவொட்டு' என்கையாலே இதுக்கு மூன்புத்தை ஆழ்வாருடைய இருப்பு ப்ராரப்த சேஷத்தாலல்ல, பகவதபிப்ராயத்தாலே'' என்னுமிடம் தோற்றுகிறது. ஈச்வரன் பற்றிவிடேனென்றிருக்கையாலே யிருந்தாரென்கிறது; ''உடலம்கைவிடான்'' என்றாரிறே.

மங்கவொட்டுன்மாமாயை திருமாலிருஞ்சோலைமேய*
தங்கள்கோனேயானே நீயாகி யென்னையளித்தானே*
பொங்கைம்புலனும்பொறியைந்தும் கருமேந்திரியமைம்பூதம்*
இங்கிவ்வுயிரேய்பிரகிருதி மானாங்காரமனங்களே. (10)

ஒ.—பத்தாம்பாட்டில், தாம் அர்த்திக்கச் செய்தேயும் தம்முடையப்ரக்ருதியிலுண்டான ஸங்கத்தாலே எம்பெருமான் தம்வார்த்தையை ஆதரியாவிட்டவாறே, சதுர்விம்சதி தத்த்வாத்மிகையான ப்ரக்ருதியினுடைய ஹேயதையை அவனுக்கு உணர்த்தி, இத்தை விரும்பாதே போக்கியருளவேணும் என்கிறார். [மங்கவொட்டு உன்மாமாயை] - ஒருவராலும் தப்பவொண்ணாதபடி நீ வைத்த ப்ரக்ருதியை மங்க இசை. [திருமாலிருஞ்சோலை என்றுதொடங்கி] - திருமலையிலே வந்துநின்று எங்களை அடிமை கொண்டு ஒருவன் தனக்குப்பரியுமாபோலே என்திறத்தில் அநுக்ரஹம் பண்ணினவனே! [பொங்கைம் புலன் என்றுமேலுக்கு] - அநுபவித்தவர்கள் தங்களுக்கு உரியரன்றிக்கே விக்ருதராம்படியான ஐந்து விஷயங்களும், ஆத்மாவுக்கு நாசகமான ஜ்ஞாநேந்த்ரியங்களும், கர்மேந்த்ரியங்களும், ப்ருதிவ்யாதி பூதங்களும், இஸ்ஸம்ஸாரத்திலேயிருக்கிற இவ்வாத்மாவைத் தொற்றியிருக்கிற மூலப்ரக்ருதி, இதினுடைய விகாரமான மஹாந், அஹங்காரம், மநஸ்ஸு, இவையாகிற உன்னுடைய மாமாயையை மங்கவொட்டு என்று அந்வயம்.

இ.—பத்தாம்பாட்டில், இப்படி அர்த்திக்கச் செய்தேயும், தேஹத்தில் ஸங்கத்தாலே தம் வார்த்தையை ஆதரியாவிட்டவாறே, இதினுடைய ஹேயதையை அவனுக்கு உணர்த்தி, இத்தைப் போக்கியருளவேணும் என்கிறார். [உன்மாமாயை மங்கவொட்டு] - ஒருவராலும் தப்பவொண்ணாதபடி நீ ப்ந்தித்த ப்ரக்ருதியை மங்க இசை. "த்யாஜ்யம் என்றறிந்த பின்பு உம்முடைய சரீரத்தை நீரே உபேக்ஷிக்குமத்தனை யன்றோ, நம் இசைவென்?" என்ன, - ஸர்வசக்தியான நீ பிணைத்தபிணையை அசக்தனானநான் அவிழ்க்கவோ? "மமமாயா துரத்யயா" என்றிலையோ? [திருமாலிருஞ்சோலை இத்யாதி] - பரமபதம் கலவிருக்கையாயிருக்க அவ்விடத்தைவிட்டுத் திருமலையிலேவந்து முற்பாடனாய் நிற்கிறது நான்சொன்னபடி கார்யம் செய்வதாகவன்றோ? திருமலையிலே வந்துநின்று எனக்கு முறையை உணர்த்தினவன் என்றுமாம். [யானேநீயாகி என்னை யளித்தானே] - என் அபிஸந்தியை நீ யுடையையாய் என்னை ரக்ஷித்தவனே! நான் எனக்குப் பரியுமாபோலே என் திறத்தில் பரிவனாய் ரக்ஷித்தவனே! இப்படி நிர்ப்பந்தித்தவிடத்திலும் அவன் அநாதரித்திருக்க, இது த்யாஜ்யமென்னுமிடத்தை அறிவிக்கிறார். சேதநன் கர்மத்தாலே ப்ரக்ருத்யாத்ம விவேகம் பண்ணமாட்டாதாப்போலே இவர்பக்கல் வ்யாமோஹம் அவன் ப்ரக்ருத்யாத்மவிவேகம் பண்ணவொட்டுகிறதில்லை. [பொங்கைம் புலனும்] - சேதநனை விக்ருதனும்படி பண்ணுகிற சப்தாதிகள் ஐந்தும். [பொறியைந்தும்] - வலைநாற்றத்தைக் காட்டி அகப்படுத்துமா போலே சப்தாதிகளிலே மூட்டுகிற ச்ரோத்ராதிகள் ஐந்தும், கர்மேந்த்ரியங்கள் ஐந்தும், ப்ருதிவ்யாதிபூதங்கள் ஐந்தும், இஸ்ஸம்ஸாரத்திலேயிருக்கிற இவ்வாத்மாவைத் தொற்றியிருக்கிற மூலப்ரக்ருதியென்ன, மஹாந் அஹங்கார மநஸ்ஸுக்களென்ன, இவையாகிற உன்னுடைய மஹா மாயையை மங்கவொட்டு என்று அந்வயம்.

ஈடு.—பத்தாம்பாட்டு. இப்படி இவர் நிர்ப்பந்திக்கச் செய்தேயும் ஆனைக்குப் புகுவாரைப்போலே கேளாதிருந்தான்; அதுக்கடி - "சார்ந்துபூசுவார் பரணியையுடைத்தோ பூசுவது? இதென்சொன்னீராவீர்!" என்ன; திரியவும், மங்கவொட்டென்கிறார்.

[உன்மாமாயை - மங்கவொட்டு] - ஒருவராலும் தப்பவொண்ணாதபடி நீ பந்தித்த ப்ரக்ருதியை மங்கவிசை. "த்யாஜ்யமென்றறிந்தபின்பு உம்முடைய சரீரத்தை நீரே யுபேக்ஷிக்குமத்தனையன்றோ? நாம் இசையவேண்டுகிறதென்?" என்ன; ஸர்வசக்தியான நீ பிணைத்த பிணையை அசக்தனான நான் விடவோ? - "மமமாயா துரத்யயா" என்றிலையோ? [திருமாலிருஞ்சோலைமேயதங்கள்கோனே] - பரமபதம் கலவிருக்கையாயிருக்க அவ்விடத்தைவிட்டு நீ திருமலையிலேவந்து முற்பாடனாய்நிற்கிறது நான்சொன்னபடி கார்யம்செய்வதாகவன்றோ? நீ பிணைத்த

படி கார்யஞ்செய்யப்பார்த்தாயாகில் பின்னையவ்விருப்பிலே என்னையழைத்துக்கொள்ளாயோ? திருமலையிலேவந்துநின்று என்னுடைய சேஷத்வத்தையும் உன்னுடைய சேஷித்வத்தையும் எனக்கறிவித்தவனே! [யானேநீயாகியென்னையளித்தானே]-என் அபிஸந்தியை நீயுடையையாய் என்காரியம் செய்யக்கடவ நீ, இப்போது நான் இரக்கவிருக்கிறதென்? நான் அபேக்ஷியாதிருக்க இதுக்குமுன்பெல்லாம் நீயேயன்றோ என்னுடைய ரக்ஷணங்கள் பண்ணிப்போந்தாய். இப்படி சொல்லச் செய்தேயும், இத்தைத்தவிர்த்துக்கொடுக்க நினையாமையாலே பேசாதிருந்தான்; நான் நிர்ப்பந்திக்கச்செய்தேயும் கேளாதாரைப்போலே பேசாதேயிருக்கிறதென்? என்ன:—"நான்பேசாதிருக்கிறேனல்லேன்; நீர் தேஹமென்றுசொல்லுகிறஇதுதான் நமக்கு உபாதேய மாயிராநின்றது: ஆகையாலே ஹேயோபாதேயவிபாகம் பண்ணமாட்டுகிறிலோம்; அதிந்தநீர் தேஹமென்கிறதுதன்னை எனக்கு இன்னதென்றுசொல்லீர் நான்கழித்துத்தர"என்றான்; ஆகில் கேட்கலாகாதோவென்று சொல்லுகிறார்:— [பொங்கைம்புலன் இத்யாதி] - "உணர்வுமுயிரு முடம்பும் மற்றுலப்பிலனவும் பழுதேயா -, முணர்வைப்பெறவூர்ந்து" என்று அவன்தான் இவர்பக்கல் செய்தத்தை இப்போது அவனுக்கு இவர்தாம் தெரிவிக்கிறார். ஒருகர்மம்செய்தது செய்யமாட்டாமையில்லையிறே வ்யாமோஹம்; அதுபோலுமன்றிக்கே இது நிலைநிற்குமதிறே. சேதநரைத் தந்தாமுக்குஉரியரல்லாதபடி விக்ருதராம்படிபண்ண வல்ல சப்தாதிகள்ஐந்தும், வலுகாற்றத்தைக்காட்டிச் சிலைதார்த்தங்களைத் தப்பாதபடி யகப்படுத்துமாபோலே இச்சேதநனை அவ்விஷயங்களிலேகொடுபோய் மூட்டிமுடிக்கவற்றான ஜ்ஞாநேந்த்ரியங்கள், கர்மேந்த்ரியங்கள், ப்ருதிவ்யாதிகள், கார்யாவஸ்தமான சித்வஸ்துவைப்பற்றிக்கிடக்கிற ப்ரக்ருதி, மஹான், அஹங்காரம், மநஸ்ஸு ஆக இவையாகிற உன்னுடைய மாமாயையை மங்கவொட்டு காரணாவஸ்தமானதுதானே அவஸ்தாந்தராபந்நமாகையிறே கார்யமாகையாகிறது.

மானாங்காரமனங்கெட ஐவர்வன்கையர்மங்க*
தானாங்காரமாய்ப்புக்குத் தானேதானேயானானை*
தேனாங்காரப்பொழில்குருகூர்ச் சடகோபன்சொல்லாயிரத்துள்*
மானாங்காரத்திவைபத்தும் திருமாலிருஞ்சோலைமலைக்கே. (11)

ஒ.—நிகமத்தில், மஹதஹங்கார விஷயமான இத்திருவாய்மொழி திருமலையிலே சொல்லிற்று என்கிறார். [மானாங்காரம் என்றுதொடங்கி] - மஹாந் அஹங்கார மநஸ்ஸுக்கள் கெடும்படியும், பெரு மிடுக்கையுடைய ஐந்திந்த்ரியங்களும் மங்கும்படியாகவும், எனக்குத் தான் அபிமாநியாய்ப்புகுந்து ஆத்மாத்மீயங்களில் எனக்கு உண்டான அபிமாநத்தைத் தவிர்த்தவனை. [தேனாங்காரப்பொழில் என்று மேலுக்கு]-வண்டுகளினுடைய களிப்பையுடையபொழிலோடு கூடின திருநகரியையுடைய ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரம் திருவாய்மொழியிலும், மஹதஹங்காராதி ரூபமான ப்ரக்ருதி நிரஸநார்த்த மாகச் சொன்ன இத்திருவாய்மொழி; மிக்கிருந்துள்ள ஹர்ஷத்திலே பிறந்த இத்திருவாய்மொழி என்றுமாம்.

இ.—நிகமத்தில், மஹதஹங்கார விஷயமான இத்திருவாய்மொழி திருமலையிலே சொல்லிற்று என்கிறார். [மானாங்கார மனம்கெட] - மஹான், அஹங்காரம், மநஸ்ஸு என்கிற இவை கெடும்படியாக; இது சரீரத்துக்கும் உபலக்ஷம். 'ஐவர்வன்கையர் மங்க' என்கிறது - கர்மேந்த்ரியங்களுக்கும் சப்தாதி களுக்கும் உபலக்ஷணம். [வன்கையர்] - பெருமிடுக்கர். விரோதிபோகைக்கு அவன் செய்ததுஎன்? என்ன, தன் நிர்ப்பந்தத்தைத் தவிர்ந்தான் என்கை. [தானாங்காரமாய்ப் புக்கு] - எனக்கு அபிமாநியாய்ப் புகுந்து என்னுதல், பெரிய செருக்கையுடையனாய்க் கொண்டு புகுந்து என்னுதல். [தானே தானே யானானை] - ஆத்மாத்மீயங்களில் எனக்கு உண்டான அபிமாநத்தைத் தவிர்த்துத் தானே அபிமா நியானவனை. [தேனாங்காரப்பொழில் இத்யாதி] - வண்டுகளுடைய அபிமாநமேயான பொழிலையுடைய திருநகரியில் ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரந் திருவாய்மொழியிலும் வைத்துக்கொண்டு. [மானாங் காரத்து இவைபத்தும்] - மஹதஹங்காராதி ரூபமான ப்ரக்ருதி நிரஸநார்த்தமாகச் சொல்லப்பட்ட

இத்திருவாய்மொழி என்னுதல், பெரிய செருக்கோடே சொன்ன இப்பத்து என்னுதல். [திருமாலிருஞ்சோலைமலைக்கே] - திருமலையே உத்தேச்யமாகச் சொல்லிற்று; அழகரைச் சொன்னவிடம் ஆநுஷங்கிகம்.

ஸூ.—நிகமத்தில், மஹாதஹங்கார விஷயமான இத்திருவாய்மொழி திருமலையிலே சொல்லிற்றென்கிறார்.

[மானாங்காரமனங்கெட] - மஹான், அஹங்காரம், மநஸ்ஸு என்று சொல்லுகிற இவை கெடும்படியாக; இவை ப்ரக்ருதிக்கும் உபலக்ஷணம். [ஐவர்வன்கையர் மங்க] - கர்மேந்த்ரியங்களுக்கும் சப்தாதிகளுக்கும் உபலக்ஷணம். (வன்கையர் - பெருமிடுக்கர்) பின்னை அவன் இதுக்குச் சொல்லிற்றென்னென்னில்; - இதில் பண்ணுகிற நிர்ப்பந்தத்தைத் தவிருகிறோமென்னத் தீருமிறே. அவன் "செய்கிறோம்" என்று தலைதுலுக்கினால் பின்னைப் பெற்ற தாயிருக்கத் தட்டில்லையே. [தான் இத்யாதி] - தான் எனக்கபிமாநியாய்ப்புக்கென்னுதல், பெரியசெருக்கோடே புக்கென்னுதல். [தானே தானேயானானை] - ஆத்மாத்மீயங்களில் எனக்குண்டான அபிமாநத்தைத்தவிர்த்துத் தானே யபிமாநியானவனை. அன்றிக்கே, இத்தலையில் அர்த்தித்வத்தை யொழியத் தானே யர்த்தியுமாய், இதுக்கு அபிமாநியும் தானேயானவனென்னுதல். [தேனாங்காரமித்யாதி] - வண்டுகளினுடைய அபிமாநமேயான பொழிலையுடைய திருநகரிக்கு நிர்வாஹகரான ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரத்திலும், மஹதாதிருபமான ப்ரக்ருதிநிரஸநார்த்தமாகச் சொன்ன இப்பத்துமென்னுதல்; பெரிய செருக்கோடே சொன்ன இப்பத்துமென்னுதல். [திருமாலிருஞ்சோலைமலைக்கே] - திருமலை விஷயமாக வாய்த்துச் சொல்லிற்று; அழகரைச்சொன்னவிடமுண்டாகில் அதில் கல்பகதருவைச் சொன்னவோபாதி. திருமலையிலுள்ளதடைய உத்தேச்யமாகக் கடவதிறே; "எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனுமாவேனே" என்றும் சொன்னார்களிறே.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

எட்டாந்திருவாய்மொழி—திருமாலிருஞ்சோலை : ப்ரவேசம்

ஒ.—எட்டாந் திருவாய்மொழியில், "தன்னைப் பெறவேணுமென்னும் இச்சாலேசமுமின்றிக்கே தன்னைப் பெறுகைக்கு ஈடான உபாயமுமின்றிக்கே அதுக்கு மேலே அஸஹ்யாபசாரபஹுளனும் மிகவும் விஷயங்களையே உகந்திருக்கிற எனக்கு, பொய்ந்நின்றஞானந் தொடங்கி இவ்வளவும்வர மஹாஸம்ருத்தியைத்தந்து என்பக்கலிலே மிகவும் வ்யாமோஹத்தைப்பண்ணி இப்போது என்னை விஷயீகரிக்கைக்கும் பண்டு என்னைப்போகடுகைக்கும் காரணமென் ?" என்று, தம்மைத் திருநாட்டிலே கொடுபோகையிலேவிரைகிற எம்பெருமானை ஆழ்வார் கேட்க, அவனும் நிருத்தரனாயிருந்தவாறே "நிர்ஹேதுகமாக விஷயீகரித்தருளினான்" என்று அத்யவஸித்து, அதுக்கடியான நிஸ்ஸீமமான அவனுடைய க்ருபாதிகுணங்களை மிகவும் அநுஸந்தித்து அதிலே ஈடுபட்டு விஸ்மிதராய்க் களிக்கிறார்.

இ.—எட்டாந் திருவாய்மொழியில், தம்மைக்குறித்து ஈச்வரனுக்குண்டான பாரதந்த்ர்யத்தைச் சொன்னார், அருள்பெறுவாரடியாரில்; அவன்தானே மேல் விழுந்து தம்முடைய திருமேனியை விரும்பாநிற்க இத்தைத் தவிரவேணுமென்று அர்த்தித்தஇதுக்கு இசைகையாலே அந்தபாரதந்த்ர்யத்தை முடிய நடத்தினபடியைச் சொன்னார், செஞ்சொற்கவியில்; இதில், அஸஹ்யாபசார பஹுளராயிருக்கிற நம்மை

அவற்றைப்பொறுத்து அத்வேஷத்தைப் பிறப்பித்து, அதடியாக விசேஷகடாக்ஷத்தை நம்பக்கலிலேபண்ணி, "தன்னைப் பெறவேணும்" என்னும்இச்சையைப் பிறப்பித்து, "தன்னைப்பெறுகைக்கு உபாயமும் தானே" என்னும் புத்தியை நமக்குப் பிறப்பித்து, சப்தாதிவிஷயங்களில் ப்ரவணராய்த்திரிந்த நம்மை, "பலநீ காட்டிப் படுப்பாயோ?" என்னும்படிபண்ணி, பொய்நின்ற ஞானந்தொடங்கி இவ்வளவும் உண்டான மஹாஸம்ருத்தியைத்தந்து, இவ்வளவு புகுரநிறுத்தி, தம்பக்கலிலே மிகவும் வ்யாமோஹத்தைப்பண்ணி அவ்வருகும் கொண்டுபோவானாய் த்வரியாநிற்கிறபடியை அநுஸந்தித்து, "இதுக்கடியாயிருப்பதொன்று நம்பக்கலுண்டோ?" என்று ஆராய்ந்தவிடத்துத் தம்பக்கல் ஒன்றும் கண்டிலர்; தம்பக்கலிலேயுள்ள தொன்றைப் பேற்றுக்கு உறுப்பாக நினைக்குமவரல்லாமையாலே. "இனி இதுக்கடி ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனானவன்தன்னையே கேட்போம்" என்றுபார்த்து, "இன்று தேவர் இப்படி சிரஸாவஹிக்கைக்கும் அநாதிகாலம் இத்தைவிடுகைக்கும் அடியென்?" என்றுகேட்க, அவனும் நிருத்தரனாய்க் கவிழ்தலையிட்டுக் காலாலே தரையைக்கீறிநிற்க, "நிர்ஹேதுகமாக விஷயீகரித்தருளினான்" என்று அத்யவஸித்து, அவ்விஷயீகாரத்துக்கடியாக, நிஸ்ஸீமமாய் நிஸ்ஸங்க்யமான க்ருபாதி குணங்களை அநுஸந்தித்து, 'இதொரு குணவத்தையே!' என்று அதிலே ஈடுபட்டு விஸ்மிதராய்க் களிக்கிறார்.

ஈடு.—தம்மைக்குறித்து ஸர்வேச்வரனுக்கு உண்டான பாரதந்த்ர்யத்தைப் பேசினார், அருள்பெறுவாரடியாரிலே; அந்தப்பாரதந்த்ர்யந்தன்னை முடியநடத்தினபடியைச் சொன்னார், செஞ்சொற்கவியில்; "நீர்சொன்னபடியே செய்யக்கடவோம்" என்று தலைதுலுக்கினானிறே. இவர்தம்மைத் திருமேனியோடே கொடுபோவதாகத் தேங்கின தேக்கமிறே நடுவுள்ளது; அதொழியக் கொடுபோவதாக அற்றவன்றே பதறத்தொடங்கினான்; "செழும்பறவைதானேறித் திரிவான்" என்று - திருவடிதிருத்தோளிலே ஏறிவந்திறே இவரைவிஷயீகரித்தது; அத்திருவடி திருத்தோளிலேவந்து இவரைக்கொடுபோவதாகப் பார்த்தான். சிலரை ஆதிவாஹிகர்த்தாக்களை வரவிட்டுக்கொடுபோம்; சிலரைப் பெரியதிருவடியை வரக்காட்டிக் கொடுபோம்; திருவடி திருத்தோளிலேவந்து தானே கொடுபோமவரிறே இவர்; *அஹம்ஸ்மராமி மத்பக்தம் நயாமி* என்கிறபடியே. கள்வன்கொல்லிற்பிராட்டியை ஆளிட்டுக் கொடுபோமன்றிறே இவரையும் ஆளிட்டுக்கொடுபோமது! [காளிலம் இத்யாதி] - "ஸம்ஸாரமாகிற பாலைநிலத்தைக்கழித்துப் போந்தோம்: *நச புநராவர்த்ததே* என்கிறதேசத்திலே புகுந்தோம்" என்று தானேசொல்லித் தேற்றிக்கொண்டிறே போவது. ஆக, இப்படி தம்மை அவ்வருகேகொடுபோகையிலே பதறுகிறபடியை யநுஸந்தித்தார்; "இவன் இப்படி நம்பக்கல் பதறுகைக்கடியென்" என்று பார்த்தார்; தம்பக்கல் ஒன்றும்கண்டிலர். முதலிலே தம்பக்கலிலே அத்வேஷத்தையும் பிறப்பித்து, அதடியாக விசேஷகடாக்ஷத்தைப்பண்ணி, தம்பக்கலிலே இச்சையையும் பிறப்பித்து, 'தானேயுபாயம்' என்னும் புத்தியைப் பிறப்பித்து அஸஹ்யாபசாரபஹுளராயிருக்கிற தம்முடைய அபசாரங்களை யடையப்பொறுத்து, விஷயங்களிலே ப்ரவணராய்ப்போந்த தம்மை "பல நீ காட்டிப் படுப்பாயோ" என்று தாமே சொல்லும்படிபண்ணி, தன்னையல்லது செல்லாமையைப் பிறப்பித்து, தானேவந்து அவ்வருகே கொடு போவானாக த்வரிக்கிறபடியை யநுஸந்தித்து, "இன்று இப்படி நம்மையாதரிக்கிற இவன் அநாதிகாலம் நம்மைவிட்டு ஆறியிருந்தபடியெங்ஙனே? இன்று இப்படி யாதரிக்கைக்குத்தான் ஹேதுவென்?" என்றுபார்த்தார்; தம்பக்கல் ஒருஹேது கண்டிலர். இப்பேறு தாமடியாகவந்ததொன்றல்லாமையாலே தம்பக்கல் ஒருவாசிகண்டிலர்; முன்புத்தையிற் காட்டில் இப்போது தமக்கு ஓர் ஏற்றமுண்டாக நினைத்திருக்குமவரன்றே. முன்பேதொடங்கி நெடுங்காலம் இவரைப் பெறவேணுமென்றிருக்கிறவன் இவர்க்கு இப்போது ஒன்றைச்செய்தானாக நினைத்திரானே. "இனி ஸர்வஜ்ஞனானவனறிலும் இதுக்கொரு போக்குச்சொல்லுமாகில் அவனைக்கேட்போம்" என்றுபார்த்து, "இன்று இப்படி இத்தை சிரஸாவஹிக்கிற தேவர் முன்பு அநாதிகாலம் இத்தைக் கைவிட்டிருப்பானென்? இப்போது இத்தை யாதரிப்பானென்?" என்றுகேட்டார்; "உம்முடைய பக்கல் அத்வேஷமடியாகச்செய்தோம்" என்னமாட்டானே; தான் அறிய அதுவும் தன்னாலே வந்ததாகையாலும் அதுதான் பேற்றுக்கு சடான ஸாதநமாகப்போராமையாலும். இனி, ரக்ஷகனானவனுக்கு நெடுநாள் ரக்ஷ்யவர்க்கத்தைவிட்டிருந்த இதுக்குச் சொல்லலா

வதொன்றில்லையே, பிற்பாடனானதுக்கு லஜ்ஜிக்குமதுக்கு மேற்பட; ஆகையாலே சொல்லலாவதொரு மறுமாற்றங் காணாமையாலே கவிழ்ந்துநின்று காலாலே தரையைக்கீறினான். முதலிலே ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளைப்பண்ணித் தன்பக்கலிலே இச்சையைப் பிறப்பிக்கைக்கு வழியிட்டுவைத்தான்; அவ்வழியாலே இச்சையைப் பிறப்பித்தான்; தன்பக்கலிலே உபாய பாவத்தை எறட்டுக்கொண்டு பொய்கலின்றநானத்தொடங்கி இவ்வளவாகத் தன்பக்கலிலே வரகிறுத்தினான்; பரபக்தி தொடங்கிப் பரமபக்தி பர்யந்தமான தசாவிசேஷங்களைப் பிறப்பித்தான். "இதுதன்னை முன்பே செய்யாவிட்டதென்?" என்ன; "இதுக்குச்சொல்லலாவதொன்றில்லாமையாலே நிருத்தரனாய் நிற்கிறானித்தனை" என்றுபார்த்து இப்படி அவன் தம்பக்கல் பண்ணின விஷயீகாரத்தையும் அதுக்கடியான அவனுடைய க்ருபாதிகுணங்களையும் அநுஸந்தித்து, "இதொரு நிர்ஹேதுகவிஷயீகாரமிருக்கும்படியே!" என்று அதிலே ஆழங்காற்பட்டு விஸ்மிதராய் ஹ்ருஷ்டராய்க் களிக்கிறார்.

திருமாலிருஞ்சோலைமலை யென்றேனென்ன*
திருமால்வந்து என்னெஞ்சு நிறையப்புகுந்தான்*
குருமாமணியுந்துபுனல் பொன்னித்தென்பால்*
திருமால்சென்றுசேர்விடம் தென்திருப்பேரே. (1)

ஒ.—முதற்பாட்டில், யாத்ருச்சிகமாகத் திருமாலிருஞ்சோலைமலை என்றேன்; என்னுங்காட்டில் அத்யந்தநிரபேக்ஷனுமிருக்கிற தான் பிராட்டியோடே கூட வந்து என்னுள்ளே புகுந்தருளினான் என்கிறார். [குருமாமணி என்று மேலுக்கு] - பெருவிலையனாய் அழகியவான ரத்னங்களைக் கொடுவந்து தள்ளாநின்றுள்ள புனலையுடைய பொன்னியினுடைய தென்கரையிலே ச்ரிய:பதியான தான் சென்று சேரும் ச்லாக்யமான தேசம் தென்திருப்பேர்.

இ.—முதற்பாட்டில், யாத்ருச்சிகமாகத் திருமலையைச் சொல்லுங்காட்டில் நிரபேக்ஷனானதான் பிராட்டியோடே கூடவந்து என்னுள்ளே புகுந்தருளினான் என்கிறார். [திருமாலிருஞ்சோலைமலை என்றேன்] - சிலர் ஒருமலையைச் சொல்லுமிடத்தில் ஒருவிசேஷணத்தையிட்டுச் சொல்லவேணும், அம்மாத்ரம் சொன்னேனத்தனை என்கிறாரின்றார் இவர்; இவ்விசேஷணத்தையிட்டுச் சொல்லிற்றுத் தன்பக்கல் ஆதரத்தாலே என்கிறாநின்றான் அவன். [என்ன] - மாநஸஸஹகாரமில்லை, உக்திமாத்ரமே யென்றிருக்கிறார். ராவணன்தம்பிக்கு மித்ரபாவமே அமையும் என்றிருக்குமவன், இவர்க்கு உக்திக்கு அவ்வருகு ஒன்று வேணு மென்றிருக்குமோ? "சேஷத்வம் ஸ்வரூபமாகில், உபாயபாவம் நம்தலையிலே கிடந்ததாகில், அத்வேஷமுண்டாகில், நம்பேறாக விஷயீகரிக்கைக்கு உக்திக்கு அவ்வருகுவேண்டா" என்கிறாநின்றான் அவன். [திருமால்] அஹ்ருதயமாகச் சொன்னதுதன்னையும் ஸஹ்ருதயமாக்குவாரும் அருகே யுண்டு. [வந்து] - நம்மை அங்கே அழைத்துக் கார்யம்கொள்ளுகையன்றிக்கே நாம் இருந்தவிடத்தே வருவதே! ஸாபேக்ஷன் இருந்தவிடத்திலே பூர்ணன் வருவதே! ஸர்வர்க்கும் அபிகம்யனானவனுக்கு நான் அபிகம்யனுவதே! "ஸௌசப்யகச்சந்மஹாதேஜா: சபரீம்". [என்னெஞ்சம்] - உக்திக்கு அஸஹகாரியான என்னெஞ்சம். [நிறையப் புகுந்தான்] - விஷயாந்தரங்களுக்கு அவகாசமில்லாதபடி பாழ்தீரப் புகுந்தான். [குருமாமணி இத்யாதி] - பெருவிலையனாய் தர்சநீயமான ரத்நங்களைக் கொண்டுவந்து தள்ளாநின்றுள்ள புனலையுடைய பொன்னித்தென்கரையிலே ச்லாக்யமான தேசம் என்றபடி. ச்ரிய:பதிசேரும்படி ச்லாக்யமான தென்திருப்பேர்; இத்தேசத்தை வாஸஸ்தாநமாகவுடையவன், அஹ்ருதயமான என் உக்திமாத்ரத்தைக் கொண்டு என்னெஞ்சிலே விரும்பிப் புகுந்தான். கீழ் "திருமால்" என்றவிடம் புருஷகார பாவத்தைச் சொல்லிற்று; மேலில் "திருமால்" என்றவிடம், உத்தரார்த்தத்தில்லக்ஷ்மீஸம்பந்தத்தைச் சொல்லுகிறது.

ஈடு.—முதற்பாட்டு. யாத்ருச்சிகமாகத் திருமலையைச் சொல்லுங்காட்டில் நிரபேக்ஷனான தான் பிராட்டியோடே கூடவந்து என்னுள்ளே புகுந்தருளினான் என்கிறார்.

[திருமாலிருஞ்சோலை இத்யாதி] - முன்பு அநாதிகாலம் ஈச்வரனுக்குத் தம்பக்கல் பேரிட்டுக் கொள்ளலாவதின்றிக்கே யிருக்க இப்போது அவனுக்குப் பேரிட்டுக் கைக் கொள்ளுகைக்கு அடியானது இன்னதென்கிறார், ஒரோதேசங்களில் மலைகளைச் சொல்லா நின்றால் ஒரோ விசேஷணங்களையிட்டுச் சொல்லக்கடவதாயிருக்குமிறே; அப்படியே, திருமாலிருஞ்சோலைமலையென்றேன். [என்ன] - மகஸ்ஸஹகாரமுமில்லை கிடீர், உக்திமாத்ரமே என் பக்கலுள்ளது. "இவன் சேஷபூதனுயிருந்தானாகில், உபாயபாவம் நம்பக்கலிலேயா யிருந்ததாகில், இவருடையபேறு நம்பேறாயிருந்ததாகில், சேதநனைவாசிக்கு உக்திமாத்ரமுண்டாய்த்தாகில், இதுக்கவ்வருகு கொண்டு கார்யமென்?" என்றிருக்குமவனிறே. இதுதான் ஒருமலையிறே அவனுக்கு. உக்தியை இல்லையென்னவொண்ணாதே; இதுக்கடி யாராயுமவனல்லனே. ராவணன் தம்பிக்கு மித்ரபாவமே யமையுமென்னுமவன், இதுக்கவ்வருகொன்று வேணுமென்றிரானிறே. மலைகளினுடைய ஸாமாந்யம் கிடக்க, இவ்விசேஷத்தைச் சொல்லிற்று, இதிலுண்டான ஆதராதிசயமன்றோ என்றிராநின்றானாய்த்து அவன். ஆக, இவர்க்கு ஒன்றில்லையென்னவுமாய், அவனுக்கு இதொன்றுண்டென்னவுமாம்படி யிருக்கிறதிறே இதுதானே. [திருமால்] - அஹ்ருதயமாகச் சொன்னதனை ஸஹ்ருதயமாக்கிக்கொடுப்பாரும் அருகே யுண்டென்கிறார். [வந்து] - "அவன் வருவதே!" என்று இவர் விஸ்மயப்படாநிற்க, 'ப்ராணைவர்த்தித்தவன் தண்ணீரிருந்தவிடத்தே வருமத்தனையன்றோ!' என்றாய்த்து அவன்வார்த்தை. க்ருபணராயிருப்பார் ச்லாக்யரிருந்தவிடத்தே வருமித்தனையன்றோ என்றிராநின்றான். எல்லார்க்கும் அபிகம்யனானவனுக்கு நான் அபிகம்யனானேன்! *ஸோऽப்யகச் ச்சத்-சபரீம்* என்னுமாபோலே. [என்னெஞ்சம்] - அந்தவுக்திஸஹக்ருதமான என் நெஞ்சிலே. [நிறையப் புகுந்தான்] - விஷயாந்தரங்களுக்கு அவகாசமில்லாதபடி புகுந்தான்; அத்ரிபகவானாச்ரமத்திலே, 'நான் ராமன்: இவள் மைதிலி: இவன் லக்ஷ்மணன்' என்று நமஸ்கரித்து நின்றாப்போலே; அக்காட்டில் பாழுடையத் திரும்படி புக்காப்போலே என்னெஞ்சில் பாழ்நீரப் புகுந்தான். [குருவித்யாதி] - தான்விரும்பிச் சென்று சேரும்தேசம் அதுவாயிருக்கக்கிடீர் என்னெஞ்சிலேவந்து புகுந்ததென்கிறார். எல்லார்க்கும் ப்ராப்யனானவன்கிடீர் என்னை ப்ராப்யனாகக் கொள்ளுகிறான். பெருவிலையனாய் தர்சநீயமான ரத்நங்களைக் கொண்டுவந்து தள்ளாநின்றுள்ள புனலையுடைய பொன்னித் தென்கரையிலே. ச்லாக்யமான தேசமென்றபடி. *துக்தாப்திர் ஜநக:* இத்யாதிவத். [புனல்] - ச்ரமஹரமானதேசத்தை யுடையவன்கிடீர் இங்கேவந்து புகுருகிறான். [திருமால்சென்று சேர்விடம்] - பரமரஸிகனானவன், தானும் பிராட்டியுமாய் விரும்பிச் சென்று சேரும் தேசம் அதுவாயிருக்கச்செய்தே, அதுகிடக்க, திருமாலிருஞ்சோலைமலையென்றேன்; இந்த அஹ்ருதயமான உக்திமாத்ரத்தைக்கொண்டு என்னுடைய ஹ்ருதயத்திலே வந்து புகுந்தான். கீழில் "திருமால்" என்றவிடம், புருஷகாரபாவத்தைச் சொல்லிற்று; மேலில் "திருமால்" என்றவிடம், உத்தரார்த்தத்தில் லக்ஷ்மீஸம்பந்தத்தைச் சொல்லுகிறது.

பேரேயுறைகின்றபிரான் இன்றுவந்து*
பேரேனென்று என்நெஞ்சு நிறையப்புகுந்தான்*
காரேழ்கடலேழ் மலையேழுலகுண்டும்*
ஆராவயிற்றனை அடங்கப்பிடித்தேனே. (2)

ஒ.—இரண்டாம்பாட்டில், இதுக்குமுன்பு தான் ஸர்வேச்வரனாயிருந்துவைத்தே என்னோடே கலக்கப் பெறாமையாலே குறைவாளனாயிருந்தவன் நிர்ஹேதுகமாக என்னுடைய ஹ்ருதயத்திலேவந்து புகுந்து பூர்ணனானான் என்கிறார். [பேரே என்று தொடங்கி] - திருப்பேரைத் தனக்குக் கோயிலாகப் பெற்று அங்கே நிரந்தரவாஸம் பண்ணுகிற ஸர்வேச்வரன், இனி ஒருநாளும்போகேன் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய ஹ்ருதயம் பூர்ணமாம்படி இன்று வந்து புகுந்தான். [காரேழ்கடலேழ் என்று தொடங்கி] - புஷ்கலாதிமேகம் ஏழையும் ஸப்தஸமுத்ரங்களையும் ஸப்தகுலபர்வதங்களையும் திருவயிற்றிலேவைத்து, பின்னையும் குறைவாளனாயிருந்தவனுக்கு இனி ஒன்றும் தேடவேண்டாதபடி பரிபூர்ண பாத்ரமானேன்.

இ.—இரண்டாம்பாட்டில், தான் ஸர்வேச்வரனாய் வைத்து என்னோடு கலக்கப்பெறுமையாலே குறைவாளனானவன், இன்று நிர்ஹேதுகமாக என் ஹ்ருதயத்திலே புகுந்து பூர்ணனானான் என்கிறார். [பேரேயுறைகின்ற பிரான்] - திருப்பேரைத் தனக்குக் கோயிலாகப்பெற்று அங்கே நிரந்தரவாஸம் பண்ணுகிற ஸர்வேச்வரன். [பேரேனென்று என்னெஞ்சு நிறைய - இன்றுவந்து - புகுந்தான்] - தன்னை ஒருவர் கேட்டாரின்றிக்கே யிருக்கத் தானே "இனி ஒருநாளும் போகேன்" என்றுசொல்லி, பிராட்டி தன் பக்கல் சொல்லுமத்தைத் தான் என்பக்கலிலே சொல்லாநின்றான். [என்நெஞ்சு] - இவனுடைய அபிநிவேசத்தை ஆதரியாத நெஞ்சானது பூர்ணமாம்படி, முன்பு நினைவின்றியேயிருக்க இன்றுவந்து புகுந்தான். முன்பு நினைவுண்டாவது தன்பக்கல் முதலுண்டாகிலிறே. [காரேழ் இத்யாதி] - புஷ்கலாதி மேகம் ஏழும், ஸப்தஸமுத்ரங்களும், ஸப்தகுலபர்வதங்களுமான லோகத்தைத் திருவயிற்றிலேவைத்து, பின்னையும் ஒன்றும் செய்யாதானாயிருக்குமவனை. [அடங்கப் பிடித்தேனே] - இப்படி அபிநிவிஷ்டனாயிருக்கிறவனைப் பூர்ணனாக்கினேன். அதாகிறது - ப்ரளயாபத்தைப் நோக்கி ரக்ஷித்தாலும், ஸ்ருஷ்டி முதலாக மோக்ஷபர்யந்தமாக யத்நம் பண்ணவேண்டுகையாலே குறைவாளனாயிருக்கும்; ஒருதேச விசேஷத்திலே கொண்டுபோய்க் கார்யங்கொள்ளலாம்படி யிருக்கையாலே இப்போதிறே குறைவற்றது. இனி அவனுக்கு ஓர் அபேக்ஷையில்லாதபடி பரிபூர்ண பாத்ரமானேன் என்கிறார்.

ஈடு.—இரண்டாம்பாட்டு. தான் ஸர்வேச்வரனாய்வைத்து என்னோடு கலக்கப் பெறுமையாலே குறைவாளனானவன், இன்றுவந்து நிர்ஹேதுகமாக என் ஹ்ருதயத்திலே புகுந்து பூர்ணனானானென்கிறார்.

[பேரேயுறைகின்றபிரான்]-திருப்பேரிலேவந்து நித்யவாஸம்பண்ணுகிற ஸர்வேச்வரன். [இன்றுவந்து] - இது உண்டாமென்று நென்னேற்றுஅறிவது, நாம் ஒரு ஸாதநாநுஷ்டாநம் பண்ணிவைத்தோமாகிலிறே. [பேரேனென்று] - "பேரேன், பேரேன்" என்னாநின்றானாய்த்து, "நீபோவுதியோ, இருப்புதியோ?" என்று கேட்பாருமின்றிக்கேயிருக்கச்செய்தே; இங்குப் பிராட்டி தன்விஷயத்திற் சொல்லும் வார்த்தையைத் தான் என்விஷயத்திலே சொல்லாநின்றான். "நான் போகேன், போகேன்" என்று சூழ்த்துக்கொடாநின்றானாய்த்து, தன்னையதிசங்கை பண்ணுவாரு மின்றிக்கேயிருக்க; *த்ரிபிஸ்தைர் ப்ராத்ருபிச்சபே*. [என்னெஞ்சு] - "இவன் பேரிலென், இருக்கிலென்?" என்றிருக்கிற என்னெஞ்சு. [நிறையப்புகுந்தான்] - பூர்ணமாம்படி புகுந்தான். [கார் இத்யாதி] - புஷ்கலாவர்த்தகாதி மேகங்களேழும், கடலேழும், மலைகளேழுமான ஜகத்தையெல்லாம் திருவயிற்றிலேவைத்து, பின்னையும், தன்னை விச்வஸித்து உடன்கிடந்தவனை மடிதடவினவனைப்போலே "நாமென்செய்தோமானோம்" என்றிருக்குமவனை. ஸ்ருஷ்டிதொடக்கமாக மோக்ஷபர்யந்தமாக ரக்ஷ்யவர்க்கத்தினுடைய ஸர்வவித ரக்ஷணத்தையும்பண்ணி, பின்னையும் "ஒன்றும் செய்யப்பெற்றிலோம்" என்றிருக்குமவனை. [அடங்கப்பிடித்தேனே] - "நாமெல்லாம்செய்தோம்" என்று அவன் தெருட்டும்படி பண்ணிக்கொண்டேன். ப்ரளயத்திலகப்பட்ட ஜகத்தை யெடுக்கையாவது - பின்னையும் ஸம்ஸாரத்தைப் பூண்கட்டுகையிறே; பரமபதத்தளவும்செல்ல நடத்தப்பெறுமையாலே குறைபட்டிறேகிடப்பது; அவன் என்னை அவ்வளவும் கொண்டுபோம்படி நான் சமைகையாலே அவனுடைய அபிநிவேசம் தீர்ந்ததாய்த்து அவனுடைய பரிபூர்ணவிஷயீகாரத்துக்குப் பாத்ரபூதனானேனென்றபடி.

பிடித்தேன்பிறவிகெடுத்தேன் பிணிசாரேன்*
மடித்தேன்மனைவாழ்க்கையுள் நிற்பதோர்மாயையை*
கொடிக்கோபுரமாடங்கள்சூழ் திருப்பேரான்*
அடிச்சேர்வதெனக்கு எளிதாயினவாறே. (3)

ஓ.—மூன்றாம்பாட்டில், எம்பெருமான் நிர்ஹேதுகமாகத் தம்மோடேவந்து ஸம்ச்லேஷித்தபடியை அநுஸந்தித்து, இவன்திருவடிகள் எனக்கு இங்ஙனே எளிதாவதே என்கிறார். [பிடித்தேன்

என்றுதொடங்கி] - எம்பெருமான்திருவடிகளை ஒருநாளும் பிரியாதபடி பற்றினேன்; ஜந்மங்களைப் போக்கினேன்; ஜந்ம நிமித்தங்களான து:க்கங்களைச் சாரேன்; ஸம்ஸாரத்திலே நிற்கைக்கு உறுப்பான ப்ரக்ருதியை நிவர்த்திப்பித்தேன்.

இ.—மூன்றாம்பாட்டில், அவன் தம்மோடே நிர்ஹேதுகமாகவந்து ஸம்ச்லேஷித்தபடியை அநுஸந்தித்து, இவன்திருவடிகள் எனக்கு இங்ஙனே எளிதாவதே என்கிறார், [பிடித்தேன்] - "தலைமேல தாளிணைகள்" என்கிறபடியே அவன் திருவடிகளைக்கொண்டு வந்து என்தலையிலே வைக்க, அத்தை ஒருநாளும் பிரியாதபடி பற்றினேன்; ஜந்மத்தைப் போக்கினேன். ஜந்மஸம்பந்தத்தால்வந்த து:க்கங்களை அடையேன்; ஸம்ஸாரத்திலே நிற்கைக்கடியான மூலப்ரக்ருதியை நிவர்த்திப்பித்தேன். [மடித்தேன்] - மடிக்கை - திரியவிடுகை. [கொடி இத்யாதி] - கொடிகளையுடைத்தான கோபுரங்களாலும் மாடங்களாலும் சூழப்பட்ட திருப்பேரிலே நித்யவாஸம் பண்ணுகிறவனுடைய திருவடிகளைக் கிட்டுகை எனக்கு அநாயாஸமாவதே ! சாஸ்த்ரங்களில் சொல்லுகிற அருந்தேவைகளெல்லாம் கிடக்க, கிட்டலாவதொரு விரகு பெறுவதே ! ஸ்வயம்ப்ரபா பிலத்தில் புக்க முதலிகளைக் கண்ணைச் செம்பளிக்கச் சொல்லி அவள் கரையிலே ஏறவிட்டாற் போலேயும், ஸ்ரீமதுரையிலே உறங்கினவர்கள் ஸ்ரீமத் த்வாரகையிலே விழித்தாற் போலேயும், சிலரை ஆபந்நிவ்ருத்தி பூர்வகமாக ஸுகிகளாக்கும் போது அவர்கள்கண் செம்பளிக்க வேண்டுமாபோலே காணும்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. அவன் தம்மோடே நிர்ஹேதுகமாகவந்து ஸம்ச்லேஷித்தபடியை யநுஸந்தித்து, இவன் திருவடிகள் எனக்கு இங்ஙனே எளிதாவதே என்கிறார்.

[பிடித்தேன்] - "தலைமேலதாளிணைகள்" என்று அவன்றிருவடிகளைத் தலைமேலே கொண்டுவந்து வைக்கையாலே அவற்றை யுறக்கப்பிடித்துக்கொண்டேன். [பிறவிகெடுத்தேன்] - ஜந்மத்தை மறுவலிடாதபடி போக்கினேன். [கெடுத்தேன்] - (காணேனொருங்கிற்றாங் கண்டிலம்) எங்கேபோய்த்துக்கண்டிலேன். [பிணிசாரேன்] - ஜந்மம்புக்கவிடத்தே புகக்கடவ பிணியைக்கிட்டேன். [மடித்தேனித்யாதி] - ஸம்ஸாரத்திலே நிற்கைக்கடியான மாயைபுண்டு மூலப்ரக்ருதி, அத்தைத்திரியவிடுவித்தேன்; தொடருகிற பாம்பைத் திரியவிடுவிப்பாரைபோலே. எம்பெருமானார், உலாவியருளுகிறவர் முடியப்போகாதே நடுவேமீண்டருள, எம்பார் இதனை யொருச்சரித்து, "திருமாலிருஞ்சோலை யாகாதே திருவுள்ளத்திலோடுகிறது" என்ன; "ஆம், அப்படியே" என்றருளிச்செய்தார். [கொடி இத்யாதி] - கொடிகளையுடைத்தான கோபுரங்களையும் மாடங்களையுமுடைத்தான திருப்பேரிலே நிற்கிறவன் அடி சேருகையாகிறது எனக்கெளிதாயினவாறே. "அறுகம்புல்லையிட்டுக் கண்ணைப்புதைத்துக்கொள், சாணகச்சாற்றைக் குடி, தலையைக்கீழேநடு, காலைமேலேயெடு" என்று அருந்தேவைகளை சாஸ்த்ரம்சொல்லாநிற்க, எனக்கு இங்ஙனேயிருப்பதொரு மூலையடிவழி யுண்டாவதே ! [எனக்கெளிதாயினவாறே!] - விஷயங்களின் காற்கடையிலே துவண்டுபோந்தவர் அவன்திருவடிகளிலே கிட்டிக்கொடு நிற்கக்கண்டவித்தனை.

எளிதாயினவாறென்று என்கண்கள்களிப்ப*
களிதாகியசிந்தையனாய்க் களிக்கின்றேன்*
கிளிதாவியசோலைகள்சூழ் திருப்பேரான்*
தெளிதாகிய சேண்விசும்புதருவானே. (4)

ஒ.—நாலாம்பாட்டில், தமக்குத் திருநாட்டைக் கொடுப்பானாயிருக்கிற எம்பெருமானுடைய படியை அநுஸந்தித்து, "இங்ஙனே எளிதாவதே !" என்று என்னுடைய இந்த்ரியங்களோடேகூடக் களித்த மநஸ்ஸையுடையேனாய்க் களியாநின்றேன் என்கிறார். [கிளிதாவியசோலை என்று மேலுக்கு] செறிந்ததிருச்சோலையையுடைய திருப்பேரான், ரஜஸ்தமஸ்ஸுக்களின்றிக்கே சுத்தஸத்த்வமயமாகையாலே தெளிந்திருந்துள்ள ஸ்ரீவைகுண்டத்தைத்தரும்.

இ.—நாலாம் பாட்டில், பரமபதத்தைத் தருவானாயிருக்கிறவனுடைய நீர்மையை அநுஸந்தித்து, என் கரணங்களும் களிக்க நானும் களியாநின்றேன் என்கிறார். [எளிதாயினவாறென்று] - "ஸுதுர்லபமான விஷயம் இங்ஙனே எளிதாவதே!" என்று. [என்கண்கள்களிப்ப] - "காணக்கருதும் என் கண்ணே" என்று விடாய்த்த கண்கள் கண்டுகளிக்கும்படி [களிதாகிய சிந்தையனாய்] - களித்த மநஸ்ஸையுடையனாய். "நெடியானே என்று கிடக்கும் என்னெஞ்சம்" என்ற நெஞ்சும் களிக்கப்பெற்றது. [களிக்கின்றேன்] - "கூவியும் காணப்பெறேன்" என்ற நான் கண்டு களியாநின்றேன். முடியானேயில், தாமும் தம்முடைய கரணங்களும் விடாய்த்தபடி சொல்லிற்று; இங்கு தாமும் தம்முடைய கரணங்களும் களித்தபடி சொல்லுகிறது. [கிளிதாவிய இத்யாதி] - செறிந்த சோலையையுடைய திருப்பேரை நிருபகமாகவுடையவன். அக்காலத்திலேயுண்டாய்ப் பின்பு இல்லையாகக்கூடும், அத்தாலே சொல்லுதல்; பகவத்பரிக்ரஹமான இடத்துக்கு எல்லாநன்மையுமுண்டு என்னுமதினாலே சொல்லுதல். [தெளிதாகிய சேண்விசும்பு தருவானே] - சுத்தஸத்த்வமயமாகையாலே தெளிந்திருந்துள்ள பரமபதத்தைத் தந்தேவிடும். [சேண் விசும்பு] - ப்ரஹ்மலோகத்துக்கு அவ்வருகே உயர்ந்திருந்துள்ள ஆகாசம்.

ஈடு.—நாலாம்பாட்டு. தமக்குப் பரமபதத்தைத் தருவானாயிருக்கிறவனுடையநீர்மையையநுஸந்தித்து, என்கரணங்களும் களிக்க நானும் களியாநின்றேனென்கிறார்.

[எளிதாயினவாறு] -(அரியதெளிதாகும் இத்யாதி) - அரிதான பகவல்லாபமுமெளிதாகும் எங்கே கண்டோமென்றால்,- (கரியதுஇத்யாதி) - அவன்தானே அரைகுலையத் தலைகுலைய மடுவின்கரையிலேவந்து விழுவன்றோ ஆனைபெற்றது. [எளிதாயினவாறென்று இத்யாதி] - ஸுதுர்லபமான விஷயம் இங்ஙனே எளிதாவதே! என்று "காணக்கருதுமென்கண்ணே" என்று விடாய்த்த கண் களிக்கும்படி. [களிதாகியசிந்தையனாய்]-களித்த மநஸ்ஸையுடையனாய். "நெடியானேயென்று கிடக்கு"மென்னெஞ்சு களிக்கப்பெற்றது. [களிக்கின்றேன்]-"கூவியும் காணப்பெறேன்" என்ற நானும் களியாநின்றேன். கரணங்களும் தாமுமொக்க விடாய்த்தவர் கரணங்களும் தாமுமொக்கக் களிக்கப்பெற்றார். [கிளிதாவிய இத்யாதி] - நித்யவஸந்தமான சோலைகளாலே சூழப்பட்ட திருப்பேரான். [தெளிவுஇத்யாதி] - இருள்தருமாஞாலம் போலன்றிக்கே நாட்செல்ல நாட்செல்லத் தெளிவைப்பண்ணக்கடவதாய், புநராவ்ருத்தியின்றிக்கேயிருக்கிற சேண்விசும்புண்டு - ப்ரஹ்மாதிகள் குடியிருப்புக்கும் அவ்வருகான பரமபதம்: அத்தை எனக்குத் தருகையிலே துணிந்திருந்தான்.

வானேதருவான் எனக்காயென்னோடொட்டி*
ஊனேய்குரம்பை யிதனுள்புகுந்து* இன்று
தானேதடுமாற்றவினைகள் தவிர்த்தான்*
தேனேய்பொழில் தென்திருப்பேர்நகரானே. (5)

ஒ.—அஞ்சாம்பாட்டில், திருப்பேர்நகரான் எனக்குத் திருநாடுதரக்கடவனாக என்னோடே பூணித்து, தானே தடுமாற்ற வினைகள் தவிர்த்தான் என்கிறார். [ஊனேய்குரம்பையிதனுள் புகுந்து] மாம்ஸாதிமயமாய் ஹேயமான இச்சரீரத்தினுள்ளே நிர்ஹேதுகமாக வந்து புகுந்து [தடுமாற்ற வினைகள்] - ஜனப்பிறந்து தடுமாறப்பண்ணும் புண்யபாபரூபமான கர்மங்களை, தேனொன்று - வண்டாகவுமாம்.

இ.—அஞ்சாம்பாட்டில், திருப்பேர்நகரான் பரமபதத்தை எனக்குத் தருவானாக என்னோடே பூணித்து, தானே விரோதிகளைத் தவிர்த்தான் என்கிறார். [வானேதருவான் எனக்காய்] - எனக்கு வானேதருவானாய்; ஸம்ஸாரியான எனக்கு நித்யஸூரிகளிருப்பைத் தருவானாக. [என்னோடு ஒட்டி] - என்னோடே பூணித்து. நான் அர்த்தியாதிருக்கச் செய்தேயும் "அரவணைமராமம் வா" என்கிறபடியே என்னோடே ஸமயத்தைப் பண்ணி, மாம்ஸாதிமயமாய் ஹேயமான இச்சரீரத்தினுள்ளே தானேபுகுந்து;

நிர்ஹேதுகமாக வந்து புகுந்து. [இன்று] - நென்னேற்றொரு நினைவில்லை. [தானே இத்யாதி] - புகுந்தபின்புதான் அநுகூலித்தேனோ, தன்னைப் பிரிந்து தடுமாறுகைக்கடியான புண்யபாபரூபகர்மங்களைத் தானேதவிர்த்தான். [தேனேய் பொழில்] - மதுமிக்க பொழில். தேனென்று வண்டாகவுமாம். இவனுக்கு என்ன குறையுண்டாய் என்பக்கல் இங்ஙனே படுகிறான்.

ஈடு.— அஞ்சாம்பாட்டு. திருப்பேர்நகரான் பரமபதத்தை எனக்குத் தருவானாக என்னோடே பூணித்து, தானே விரோதிகளையும் போக்கினானென்கிறார்.

[வானே தருவானெனக்காய்] - எனக்கு வானே தருவானாய். இங்கேவைத்துக் காரியங் கொள்ளுமத்தையும் தவிர்த்தான்; "ப்ரஹ்மாதிகள்குடியிருப்பு இவர்க்குத்தரமல்ல" என்று அத்தையும் தவிர்த்தான்; ஸம்ஸாரியான எனக்கு நித்யஸூரிகளிருப்பைத் தருவானாக. [என்னோடொட்டி] - என்னோடேபூணித்து, நான் இச்சியாதிருக்க *அராவணைமராமம் வா* என்று என்னோடு ஸமயம்பண்ணி. "எம்மாவீட்டுத் திறமும்செப்பம்" என்ற என்னோடே உமக்கு எம்மாவீடே தரக்கடவேன் என்றொட்டி. [ஊனேயித்யாதி] - "இவ்வுடம்போடே உம்மைக்கொடுபோகவேணும்" என்று விளம்பித்தோமாகில், இத்தையொழியக் கொடுபோகப் பார்த்தபின்பு இனி ஆறியிருப்பனோ? என்றுநின்றான். [ஊனேயித்யாதி] - மாம்ஸப்ரசுரமாய் ஆத்மாவுக்கு ஆபாதகமாயிருக்கிற இத்தேஹத்திலே, மேலெழக் கலக்கையன்றிக்கே விடாயர் மடுவினுள்ளேபுகுமாபோலே புகுராநின்றான். "எனதுடலே அருமாமாயத்தெனதுயிரே மனமே வாக்கே கருமமே ஒருமாநொடியும்" பிரியாதே. [இன்று] - நேற்றொரு நினைவில்லை. [தானே] - அகர்மவச்யனை தானே. இவர் அநாதிகாலம் தேஹத்தை விரும்பி விடமாட்டாதே போந்தார்; இப்போது இவர்க்குத் தன்பக்கலிலே ருசிபிறந்தவாறே இத்தோடு தொற்றில்லாத தானே இதிலேவந்து புகுராநின்றான். [இதனுள்புகுந்து] - அவனைப்போலே முன்னடி தோற்றாதொழியவிறே இவர் அதில் தோஷதர்சனம்பண்ணாதொழிவது? [தானேயித்யாதி] - புகுருகிறபோது தானேயாய், பின்னைத்தான் நானும் அநுகூலிக்கப்பெற்றதோ? [தடுமாற்ற வித்யாதி] - தன்பக்கல்நின்றும் என்னைப்பிரித்துத் தடுமாறும்படி பண்ணவல்ல பாபங்களைப் போக்கினான். அவையாவன - "பொங்கைம்புலன்" இத்யாதி. [தேனேயித்யாதி] - மதுமிக்க பொழிலையுடைத்தான திருப்பேர்நகரை யுடையவன்கிடீர் என்னுடைய சரீரத்திலே புகுந்து க்ஷணகாலமும் விடமாட்டாதொழிகிறான்: என்ன குறையுண்டாயிப்படிப்பட்டான்?

திருப்பேர்நகரான் திருமாலிருஞ்சோலை*
பொருப்பேயுறைகின்றபிரான் இன்றுவந்து*
இருப்பேனென்று என்னெஞ்சுநிறையப்புகுந்தான்*
விருப்பேபெற்று அமுதமுண்டுகளித்தேனே. (6)

ஒ.— ஆறும்பாட்டில், தனக்கு வர்த்தித்தருளலாம் கோயில்கள் அநேக முண்டாயிருக்க, ஓரிட மில்லாதாரைப்போலே "இருப்பேன்" என்று ப்ரார்த்தித்துக் கொண்டு என்னுடைய ஹ்ருதயத்திலே நிர்ஹேதுகமாகப் புகுந்தான் என்று ப்ரீதராகிறார். [பொருப்பு] - மலை. [பிரான்] - உபகாரகன், [விருப்பேபெற்று அமுதமுண்டுகளித்தேன்] - அவனாலே பஹுமானம் பெற்று அவனுடைய கொண்டாட்டமாகிற அம்ருதபானத்தைப் பண்ணிக்களித்தேன். அவனுடைய குணாம்ருதத்தைப் பானம் பண்ணிக் களித்தேன் என்றுமாம்.

இ.— ஆறும்பாட்டு, தனக்கு இருப்பிடமான கோயில்கள் அநேகமுண்டாயிருக்க ஓரிடமுமில்லாதாரைப் போலே என்ஹ்ருதயத்திலே நிர்ஹேதுகமாக ப்ரார்த்தித்துக்கொண்டு புகுந்தான் என்று ப்ரீதராகிறார். [திருப்பேர் இத்யாதி] - திருவயோத்யையில் வாஸம்போலேயாய்த்துத் திருப்பேரில் இருப்பு; திருச்சித்ரகூடத்திலிருப்புப்போலே யாய்த்துத் திருமலையில் வாஸம். "அதிகம்புரவாஸாச்ச" என்றும்

"ஜஹௌஸதுஃக்கம் புரவிப்ரவாஸாத்" என்றும் "குபேரஇவ நந்தநே" என்றும் சொல்லக்கடவதிறே. [பொருப்பு] - மலை. [பிரான்] - உபகாரகன். [இன்று வந்து] - பூர்வக்ஷணத்தில் நினைவுமின்றியிலே யிருக்க வந்துகொடு நிற்கக்கண்டதித்தனை. [இருப்பேன் இத்யாதி] - "இஹவத்ஸ்யாமி ஸௌமித்ரே ஸார்த்தமேதேநபக்ஷிணா" என்கிறபடியே தன்பேருக ப்ரதிஜ்ஞைபண்ணி, "இருந்திடுவானுக்கு" என்றிராத என் நெஞ்சிலே குறைவறப் புகுந்தான். [விருப்பே பெற்று] - அவன் விருப்பத்தைப் பெற்று; அவனுலே பஹுமானம் பண்ணப்பெற்று. [அமுதமுண்டுகளித்தேனே] - அவனுடைய கொண்டாட்ட மாகிற அம்ருதபானத்தைப் பண்ணிக் களித்தேன் என்னுதல், அவனுடைய குணம்ருதபானத்தைப் பண்ணிக் களித்தேன் என்னுதல். "க்ஷிபாமி" என்று அவன்உபேக்ஷைக்கு இலக்காகாதே, அவன் பஹுமானத்துக்கு இலக்கானல் ப்ரீதி யுள்ளடங்காதிறே. நரகஹேதுவான விஷயாநுபவத்தால் வந்த களிப்பனவன்றியே, பகவதநுபவம்பண்ணப் பெற்ற செருக்காலே யுண்டான ப்ரீதியை ஆற்றவல்லமோ?

ஈடு.—ஆறாம்பாட்டு. தனக்கு இருப்பிடமான கோயில்கள் அநேகமுண்டாயிருக்க ஓரிடமில்லாதாரைப் போலே என் ஹ்ருதயத்திலே நிர்ஹேதுகமாக ப்ரார்த்தித்து வந்து புகுந்தானென்று ப்ரீதராகிறார்.

[திருமாலிருஞ் சோலைப் [திருப்பேர்நகரான்] - திருவயோத்யையைப்போலேயாய்த்து. பொருப்பேயுறைகின்றபிரான்]-*அதிகம்புரவாஸாச்ச* என்னுமாபோலே; *ஜஹௌஸதுஃக்கம்புரவிப்ரவாஸாத்*; திருச்சித்திரகூடத்திற்போலே யாய்த்து. *குபேரஇவ நந்தநே* - குறைவற்றவன் உத்யாநத்திலே வர்த்திக்குமாபோலேயாய்த்து. ஸர்வப்ரகாரத்தாலும் குறைவற்றவனுக்கிறே லீலாரஸத்தில் அந்வயமுள்ளது. [இன்றுவந்து] - இவ்வரவுக்கு நேற்றொரு நினைவின்றியே யிருக்க வந்துகொடுநிற்கக்கண்டதத்தனை. [இருப்பேனென்று] - "இருப்பேன், இருப்பேன்" என்றுநின்றுனைப்பது. *இஹவத்ஸ்யாமி ஸௌமித்ரே ஸார்த்தமேதேநபக்ஷிணா* *இஹைவஸததோகேகாஸ்த்வபா ஸார்த்தமகிந்திதே*. "ஐயர் கோற்கீழேவர்த்திக்க வேணுமென்று நினைத்திருந்தோம்; நடுவிலாய்ச்சிக்கு ப்ரியமில்லாமையாலே போந்தோம்; இனிமேலுள்ள நாள் இவர்சிறகின்கீழே வர்த்திக்கப் பாராநின்றோம்" என்றானிறே. [என்னெஞ்சுநிறையப் புகுந்தான்] - "இருந்திடுவானுக்கு" என்றிராத என்னெஞ்சிலே நிறையப்புகுந்தான். [விருப்பேபெற்று] - ஆஜ்ஞாநுவர்த்தநம்பண்ணுமையாலுண்டான த்வேஷகார்யமாகவன்றிக்கே; *தாநஹம் த்விஷத:* என்றிருப்பதும் ஓரிருப்புண்டிறே; அங்ஙனன்றிக்கே, அவனுடைய விருப்பத்தையுடையேனாய். [அமுதமுண்டு களித்தேனே] - விஷபோஜநத்தைப்பண்ணி நரகத்துக்குப் போகாநிற்க, நடுவே நின்று களிக்கையன்றிக்கே, அமுதமுண்டு களித்தேனே; (அவனுடைய கொண்டாட்டமாகிற அம்ருதபாநத்தைப் பண்ணிக் களித்தேன் என்னுதல்; அவனுடைய குணாம்ருத பாநத்தைப் பண்ணிக் களித்தேனென்னுதல்) க்ஷுத்ரவிஷயப்ரவணனாய் நரகத்துக்குக் க்ருஷியைப்பண்ணி வைத்துக் களிக்குமதிறே அது. அதாவது - அணிமென்குழலாரின்பக்கலவி யமுதுண்டார்" என்றபடி. [களித்தேனே] - "நாவலிட்டுழிதருகின்றோம்" என்று செருக்காலே களிக்கிற களிப்பேயிறேஇது. யமாதிகள் தலையிலே அடியிட்டுக் களிக்கப்பெற்றேன்.

உண்டுகளித்தேற்கு உம்பரென்குறை* மேலைத்
தொண்டுஉகளித்து அந்திதொழும்சொல்லுப்பெற்றேன்*
வண்டுகளிக்கும்பொழில்சூழ் திருப்பேரான்*
கண்டுகளிப்பக் கண்ணுள்நின்றகலானே. (7)

ஏ.—ஏழாம்பாட்டில், தமக்கு உண்டான கார்த்தார்த்த்யத்தை அருளிச்செய்கிறார். [உண்டென்று தொடங்கி] - மேலான தாஸ்யரஸம் பெருகினால் அதின்முடிவிலே ஆற்றாமை சொல்லும் "நம:" என்கிற சொல்லைச் சொல்லப்பெற்றேன்; வண்டுகளிக்கிற பொழில் சூழ்ந்த திருப்பேரான், நான் கண்டு க்ருதார்த்தனும்படி கண்ணுள் நின்று அகலுகிறிலன். இப்படி அவனை புஜித்துக் களிக்கப்பெற்ற எனக்கு இனி குறையுண்டோ?

இ.—ஏழாம்பாட்டில், தமக்கு உண்டான கார்த்தார்த்த்யத்தை அருளிச்செய்கிறார். [உண்டுகளித்தேற்கு] - ஜ்ஞாநாநுபவத்தாலே களிக்கப்பெற்ற எனக்கு; "இதுக்கு மேல் ஒன்றும் வேண்டா; இதுவே அமையும்" என்னும்படி ஜ்ஞாநாநுபவந்தானே இனிதாயிறே இருப்பது. [உம்பர் என்குறை] - மேல் என்னகுறையுண்டு? உம்பர் - மேல். [மேலைத் தொண்டு உகளித்து] - மேலான தாஸ்யரஸம் அதிசயித்து. "யோயோ தாதாகச் சதி" என்கிற ரஸத்தை அநுபவித்து. "ஸேவாச்சவ்ருத்தி:" என்கிற இதிறே கீழான தாஸ்யம். [அந்திதொழும் இத்யாதி] - முடிவிலே தொழும் சொல்லுப்பெற்றேன்; அநுபவப்ரீதி நிலைமண்டையிட்டால் அதின்மேலே "நம:" என்று புத்திபூர்வகமாகச் சொல்லுஞ்சொல்லைப் பெற்றேன்; "நமஇத்யேவ வாதிந:" இறே. அதாகிறது - ப்ரீதிவழிந்த சொல்லாலே திருவாய்மொழிபாடி அடிமை செய்யப்பெறுகை. [வண்டு இத்யாதி] - வண்டுகள் மதுபாநம்பண்ணிக் களிக்கிற பொழில் சூழ்ந்த திருப்பேரில் வர்த்திக்கிறவன். ஜ்ஞாநாதிகரோடு திர்யக்குக்களோடு வாசியறக் களிக்கும் தேசம். [கண்டு களிப்ப] - "மெய்கொள்ளக்காண விரும்பும் என் கண்கள்" என்று விடாய்த்த கண்கள் கண்டு களிக்கும்படியாக. [கண்ணுள் நின்று அகலானே] - நான் போகச்சொல்லிலும் கண்வட்டத்தில் நின்றும் போகிறிலன்; விஷய ப்ரவணரைப் போகச்சொன்னாலும் தூணைக்கட்டிக்கொண்டு போகாதாப்போலே. இப்படி அவனை அநுபவித்துக் களிக்கப்பெற்ற எனக்கு இனிமேல் ஒருகுறையுண்டோ?

ஈடு.—ஏழாம்பாட்டு. அவனுடைய ஆதரத்தாலே தமக்கு உண்டான கார்த்தார்த்த்யத்தை அருளிச்செய்கிறார்.

[உண்டுகளித்தேற்கு உம்பர் என்குறை] - இப்படியநுபவித்துக் களிக்கப்பெற்ற எனக்கு ஒரு குறையுண்டோ? அவனுடைய குணங்களையநுபவித்து மயர்வறமதிநலமருளப்பெற்ற எனக்கு மேல்வேண்டுவது ஒன்றுண்டோவென்கிறார். ஜ்ஞாநலாபமுண்டானபின்பு "அவ்வருகில் ப்ராப்திபெற்றிலோம்" என்று வருவதொருகுறையுண்டோ? உம்பரென்றது - மேலென்றபடி. [மேலைத்தொண்டுஇத்யாதி] - மேலான தாஸ்யரஸம் அதிசயித்து. *யோயோ தாதாகச் சதி* என்கிற ரஸத்தையநுபவித்து. *ஸேவா ச்வவ்ருத்தி:* என்றதுபோலன்றிறே ஸ்வரூபாநுரூபமானது. [தொண்டுஉகளித்து]-தொண்டாலே உகப்புத் தலைமண்டையிட்டு. அதினுடைய சரமதசையிலே *நமஇத்யேவ வாதிந:* என்று புத்திபூர்வகமாகச் சொல்லுவதொன்று உண்டு, அப்பாசுரத்தைச் சொல்லப்பெற்றேன். அதாவது - ப்ரீதிவழிந்த சொல்லாலே திருவாய்மொழிபாடி அடிமைசெய்யப்பெறுகை [வண்டு இத்யாதி] - வண்டுகள் மதுபாநம் பண்ணிக்களிக்கிற பொழிலாலே சூழப்பட்ட திருப்பேரிலே வர்த்திக்கிறவன். ஜ்ஞாநாதிகரோடு திர்யக்குக்களோடு வாசியறக் களிக்கும்தேசம். [கண்டுகளிப்ப] - "மெய்கொள்ளக்காண விரும்புமென்கண்கள்" என்று விடாய்த்த கண்கள் கண்டுகளிக்கும்படியாக. [கண்ணுள்நின்றகலானே] - நான் போகச்சொல்லிலும் கண்வட்டத்தில்நின்றும் அகலுகிறிலன்; விஷயப்ரவணர் போகச்சொன்னாலும் தூணைக்கட்டிக்கொண்டு போகாதாப்போலே. இப்படி அவனையநுபவித்துக் களிக்கப்பெற்ற எனக்கு மேலொருகுறையுண்டோ?

கண்ணுள்நின்றகலான் கருத்தின்கண்பெரியன்*
எண்ணில்நுண்பொருள் ஏழிசையின்சுவைதானே*
வண்ணநன்மணிமாடங்கள்சூழ் திருப்பேரான்*
திண்ணமென்மனத்துப் புகுந்தான்செறிந்தின்றே. (8)

ஒ.—எட்டாம்பாட்டில், வாங்மநஸங்களுக்கு நிலமன்றிக்கே நிரதிசயபோக்யனான திருப்பேர் நகரான் என் கண்ணுக்கு எப்போதும் விஷயமாய் ஒருநாளும் போகாதபடி ஸ்நேஹித்து ஹ்ருதயத்திலே புகுந்தான்; இன்னாம் என்னளவன்று என்திறத்தில் செய்தருள நினைத்தது என்கிறார்.

இ.—எட்டாம்பாட்டில், நிரதிசய போக்யனான திருப்பேர்நகரான் என்பக்கலிலே வ்யாமோஹத்தைப் பண்ணி ஒருநாளும் போகாதபடி என்நெஞ்சிலே வந்து புகுந்தானென்கிறார். [கண்ணுள்நின்று

அகலான்] - ஸதா தர்சநத்துக்கு விஷயமாகாநின்றான். ஸதா தர்சநத்துக்கு வேறு தனக்கு ஒருவிபூதியுண்டு என்றிருக்கிறிலன். [கருத்தின் கண் பெரியன்] - நம் விஷயத்தில் அவன் பாரிக்கிற பாரிப்பு நமக்கு மநோரத விஷயமன்று. நம்மைக் கொண்டுபோகையிலே பாரித்து அர்ச்சிராதிகணங்களை அழைப்பது, தான் அவர்களுக்கு முற்பாடனாவதாகாநின்றான். [எண்ணில் நுண்பொருள்] - தாம் தாமே எண்ண நினைப்பார்க்கு துர்க்ரஹமான வஸ்து. [ஏழிசையின் சுவைதானே] - எண்ணுமளிருக்க வொண்ணாத போக்யதையைச் சொல்லுகிறது. ஸப்தஸ்வரங்களிறே ப்ரதாநம். [வண்ணம் இத்யாதி] - தேசத்திலே போக்யதையும் மேன்மையும் இருக்கிறபடி. நாலுவர்ணமாய் மஹார்க்கமான ரத்நங்களாலே செய்யப்பட்ட மாடங்களாலே சூழப்பட்ட தேசம். [என் மனத்துப் புகுந்தான் செறிந்து இன்றே] - தன்னை ஆதரித்திருக்கிற என்னுடைய ஹ்ருதயத்திலே, தன் வ்யாமோஹமெல்லாம் தோன்றும்படி வந்துபுகுந்தான். [திண்ணம்] - "ஸர்வேச்வரன் ஒருஸம்ஸாரிஹ்ருதயத்திலே இப்படி மேல் விழக்கூடுமோ ?" என்று சங்கிக்கவேண்டா; இது த்ருடம்.

ஈடு.—எட்டாம்பாட்டு. நிரதிசயபோக்யபூதனான திருப்பேர்நகரான் என்பக்கலிலே வ்யாமோஹத்தைப்பண்ணி ஒருநாளும் போகாதபடி என்னெஞ்சிலேவந்து புகுந்தானென்கிறார்.

[கண்ணுள்நின்றகலான்] - (ஸதாதர்சநத்துக்கு விஷயமாகாநின்றான்) - ஸதாதர்சநத்துக்கு வேறு தனக்கொரு விபூதியுண்டென்றிருக்கிறிலன். [கருத்தின்கண்பெரியன்] - உபயவிபூதியோகத்தால்வரும் அங்யபரதையடையத் தீர்த்து, இவரையவ்வருகே கொண்டுபோகையிலும், ஆதிவாஹிகரை நியமிக்கையிலும், தான்முற்பாடனாய்க்கொண்டு போகையிலும் பாரியாநின்றான். நங்கார்யத்தில் அவன்த்வரிக்கிறபடி நம்மால் எண்ணி முடியுமளவல்ல; இயத்தாரஹிதன். இதுதான் *யஸ்யாமதம்* என்கிற பொதுவாலல்ல. நங்கார்யத்தில் இங்ஙனேயிருக்கும்; "என்மனத்துப்புகுந்தான்" என்கிறத்தோடு சேரவேணுமிறே, கருத்தின்கண் பெரியன் என்கிறவிதுவும். [எண்ணில்நுண்பொருள்] - அவன்தானே இப்படி மேல்விழில் விழுமித்தனை போக்கித் தாந்தாமேயறியப் பார்ப்பார்க்கு அறியப்போகாது. அறியவரியன் என்று கைவாங்கியிருக்கலாம் வஸ்துவன்று. [ஏழிசையின் சுவைதானே] - வருந்தியும் மேல்விழ வேண்டும் விஷயமாய்த்து. இது ரஸ்யதையிருந்தபடி. [வண்ணமித்யாதி] - இது மேன்மையிருந்தபடி. [என்மனத்து - செறிந்து - புகுந்தான்] - *அநந்யா ராகவேணாஹம்* என்கிறவிஷயத்திற்போலே பிரிக்கவொண்ணாதபடி புகுந்தான்; "என தாவியுள்கலந்த" என்னுமாபோலே. "ஸர்வாதிகனானவன் இப்படி நம்பக்கல் மேல்விழக்கூடுமோ?" என்று தாமும் அதிசங்கைபண்ணினார்; அதுக்கு வேறுபோக்கடி கண்டிலர். [திண்ணம்] - நிச்சிதம், இதில் கண்ணழிவில்லை.

> **இன்றென்னைப்பொருளாக்கித் தன்னையென்னுள்வைத்தான்***
> **அன்றென்னைப்புறம்போகப் புணர்த்ததுஎன்செய்வான்***
> **குன்றென்னத்திகழ்மாடங்கள்சூழ் திருப்பேரான்***
> **ஒன்றெனக்கருள்செய்ய உணர்த்தலுற்றேனே. (9)**

ஒ.—ஒன்பதாம்பாட்டில், இன்று எனக்குத் தன்னை அறிவித்து என்னோடே திருடஸம்ச்லேஷம் பண்ணினவனை, பண்டு என்னை உபேக்ஷிக்கைக்குக் காரணம்என்? என்று கேட்கவேண்டியிருந்தேன் என்கிறார். [குன்றென்னத்திகழ்மாடங்கள் என்று மேலுக்கு] - குன்றுபோலே விளங்காநின்றுள்ள மாடங்கள்சூழ்ந்த திருப்பேரான் ஒன்று எனக்குச் சொல்லவேணுமென்று உணர்த்தவேண்டியிருந்தேன்.

இ.—ஒன்பதாம்பாட்டில், "இன்று என்னை விஷயீகரிக்கைக்கும் முன்பு என்னை உபேக்ஷிக்கைக்கும் காரணம் என் ?" என்று கேட்கவேண்டியிருந்தேன் என்கிறார். அஸத்கல்பனான என்னை ஒரு வஸ்துவாக்கி; "பொருளல்லாத என்னைப் பொருளாக்கி" என்கிறபடியே. [தன்னை] - ஸத்துக்களுக்கு ஸ்ப்ருஹணீயனான தன்னை. [என்னுள் வைத்தான்] - என்னோடே கூட ஸம்ச்லேஷம் பண்ணினான்.

''இன்று'' என்கிறது-மயர்வற மதிநல மருளப்பெற்றதற்குப்பின்பு உண்டான காலத்தை; ''அன்று'' என்கிறது - அவ்விசேஷ கடாக்ஷத்துக்குமுன்பு உண்டான அநாதிகாலத்தை. [என்னை இத்யாதி] - பரதந்த்ரனான என்னைப் புறம்போகப் பண்ணிற்று என்செய்கைக்காக ? பாஹ்யனாகப் பண்ணுகையாகிறது உபேக்ஷிக்கை. புறம் போகவிட்டாலும் அவனே என்றிருக்கிறார். ஸ்வஸத்தை பராதீநமாயிருக்க, இவ்வஸ்துவுக்குப் போக்குவரவு ஆவதென் ? இரண்டுக்கும் காரணம் சொல்லவேணும். [குன்றென்ன இத்யாதி] - மலைகள்போலே விளங்கா நின்றுள்ள மாடங்களாலே சூழப்பட்ட திருப்பேரான். [ஒன்று எனக்கருள்செய்ய] - இன்று விஷயீகரிக்கைக்கு ஹேதுசொல்லவேணும்; முன்பு உபேக்ஷித்ததுக்கு ஹேது சொல்லவுமாம். [உணர்த்தலுற்றேன்] - அறிவிக்கவேண்டி யிராநின்றேன் ''இதுக்கு ஈச்வரன் இவர்க்குச் சொன்ன உத்தரம் எது ?'' என்று சீயர் பட்டரைக்கேட்க, ''இவர்தலையிலே ஒருபழி யேறிட்டு நெடுநாள் இழந்த நாம் சொல்லுவது என் ? என்று லஜ்ஜாவிஷ்டனாய் நின்றான்'' என்று அருளிச் செய்தார்.

௯.—ஒன்பதாம்பாட்டு. இன்று என்னை விஷயீகரிக்கைக்கும் முன்பு என்னை உபேக்ஷிக் கைக்கும் காரணமென்?'' என்று கேட்கவேண்டியிருந்தேனென்கிறார். அதவா, ஸர்வேச்வரன் தம்மைப் பரமபதத்திலே கொடுபோவதாக: விரைகிறபடியைக்கண்டு ''இன்று: என்னளவல் லாதபடி த்வரிக்கிறதேவர் இதுக்குமுன்பு நெடுநாள்விட்டு ஆறியிருந்தபடி யெங்ஙனே?'' என்று அவன் றன்னைக்கேட்கிறார். இன்றுஇப்படி விரைகிறமை மெய்யாகில் முன்புவிட்டுஆறியிருக்கக் கூடாதென்கிறார்; *ந த்வாமிஹஸ்த்தாம் ஜாநீதே* என்று நடுவே சிலர்சொல்லவேண்டும்படி யாய்த்து; எழுந்தருளியிருந்தவிடமறியாமையாலே ஆறியிருந்தாரித்தனைபோக்கி, அறிந்தால்ஒரு க்ஷணம்ஆறியிருப்பரோ? இதுதான் என்வார்த்தைகொண்டறியவேணுமோ? *கமலலோசநே* உம்முடைய கண்ணழகேயன்றோ இதில் ப்ரமாணம்? *ராம:* அவரைபறியாதொழிய வேணு மோ? *நஜீவேயம்க்ஷணமபி விநாதாமஸிதேக்ஷணாம்* என்றிறே யவரிருப்பது. *ராம:கமலலோசநே* அவரை யறியாமையுமில்லை; உம்மை நீர் கண்ணாடிப்புறத்திலும் கண்டறியாமையுமில்லை. *கமலலோசநே* அன்றிக்கே, ஆரெதிராகத்தான் இக்கண்சிவப்பும் சீற்றமுமெல்லாமென்னுதல். [இன்று என்னைப்பொருளாக்கி] - அஸத்கல்பனான என்னை இன்றுஒரு வஸ்துவாம்படி பண்ணி; ''பொருளல்லாதவென்னை'' என்றாரிறே. [தன்னை]-ஸத்துக்களுக்கும் ஸ்ப்ருஹணீயனான தன்னை. [என்னுள்வைத்தான்] - தன்னைப் பிறர்க்கு அவகாசமில்லாதபடி முற்றூட்டாக என்னுள்ளே கொடுவந்துவைத்தான். [அன்று] - அவன் விசேஷகடாக்ஷம் பெறுவதற்கு முன்புள்ளகாலை யெல்லாவற்றையும் சொல்லுகிறார். இன்றென்கிறது - மயர்வறமதிநலமருளப்பெற்றவதுக்குப் பின்புண்டான காலத்தை. [என்னைப்புறம்போகப் புணர்த்ததென்செய்வான்] - (பரதந்த்ரனான என்னைப் புறம்போகப்பண்ணிற்று என்செய்கைக்காக? பாஹ்யனாகப் பண்ணுகையாகிறது உபேக்ஷிக்கை.) ''இழந்தநாள்இழந்ததும் அவனாலே; பெற்றஇன்று பெற்றதும் அவனாலே'' என்றிருக்கிறார். பரதந்த்ரவஸ்து செல்லவிற்கவற்றோ? வரவிற்கவற்றோ? [குன்று இத்யாதி] - இப்படி மதிப்பனானவன். மலைகளைச் சேரவைத்தாற்போலே விளங்காநின்றுள்ள மாடங்கள் சூழ்ந்த திருப்பேரான். [ஒன்றெனக்கருள்செய்ய] - முன்பு கைவிட்டதுக்கு ஹேது சொல்லவு மாம்; இன்று என்னை விஷயீகரித்ததுக்கு ஹேது சொல்லவுமாம். [உணர்த்தலுற்றேனே] - இதுக்குஒரு மறுமாற்றம் அருளிச்செய்யவேணுமென்று திருவுள்ளத்திலே படும்படி விண்ணப் பஞ் செய்யவேண்டியிராநின்றேன். ''இதுநாம் சொல்லவேணுமோ? நீரே அறியீரோ? என்றான் ''அடியேன் அறியேன்; ஸர்வஜ்ஞரான தேவர் அருளிச்செய்யவேணும்'' என்றார். ''ஆனால்நாம் உம்முடைய நெஞ்சிலே புக்கிருக்கிறவிடத்தில் ஸம்வதித்திருந்தீர்:அத்தாலேகாணும்'' என்றான்; ''ஓம், அதுதானுண்டோ? யாதொட்டி என்னுளிருத்துவம் என்றிலன்'' என்றார்; ''அதில்லையாகி லும் புகுந்த பின்பு நம்மையாதரித்தீரே'' என்றான்; '''மருவித்தொழும் மனமே தந்தாய், என்று அதுவும் தேவர்செய்த வித்தனை'' என்றார்: ''ஓங்காணும்: அதில்லையாகிலும் நம்மோடேசிக்க விஷயாந்தரங்களையும் விரும்பாதே இருந்தீரே'' என்றான், '''என்னைத் தீமனங்கெடுத்தாய்' என்று அதுவும் தேவரேயன்றோ'' என்றார்; ''இவையொன்றுமில்லையாகிலும் நாம்தந்த மதி நலத்தை வளர்த்துக் கொடுபோந்தீரே'' என்றான். '''காதல்கடல்புரைய விளைவித்தகாரமர்

மேனி என்று அதுவும் தேவரீரேயன்றோ" என்றார்; இப்படி இவர் முடியத்தொடர்ந்தவாறே பெருங்கடல் மண்டினுரைப்போலே போக்கற்றான். "இதுக்கு ஈச்வரன்சொன்ன உத்தரமென்?" என்று சீயர் பட்டரைக்கேட்க, "இவர் தலையிலே ஒருபழியை ஏறட்டு நெடுநாளிழந்த நாம் சொல்லுவதென்?' என்று லஜ்ஜாவிஷ்டனாய்க் காலாலே தரையைக்கீறிநிற்குமித்தனைபோக்கி வேறு உத்தரமுண்டோ?" என்றருளிச்செய்தார். அதாவது "முன்பு ருசியில்லாமையாலே" என்ன மாட்டான்: இப்போது ஸாதநாநுஷ்டாநம் பண்ணுகையாலே" என்ன மாட்டான்! ஆனால், பின்னை ஈச்வரனுக்கு வைஷம்யநைர்க்ருண்யாதிகள்வருதல் ஸர்வமுக்திப்ரஸங்கம்வருதல் செய்யாதோ வென்னில்;- அதுசெய்யாது, அடியிலே அத்வேஷமும் இச்சையும் பிறக்கைக்குத் தான் க்ருஷிபண்ணி அது பக்வமாமளவும்பார்த்திருக்கிறவனாகையாலே. அவன் கேட்டதுக்கு ஒரு மறுமாற்றம் சொல்லக்காணாமையாலே "அறிந்தோம்; இதுக்கு ஹேது இங்ஙனேயாக வேணும்" என்று பார்த்தார்: தன்னுடையஸ்பர்சம்ப்ரதிகூலமாகைதவிர்ந்து விலக்காதவளவும் பார்த்திருந்தானாதல், தன்னையொழிந்தவற்றில் ஸாதநபுத்தி தவிருமளவும் பார்த்திருந்தானாத லாக வடுக்கும்" என்று பார்த்தார். ஆனால். இதுதன்னை அவன்உத்தரமாக அருளிச்செய்யாதொழிவானென்? என்னில்; "சைதந்யப்ரயுக்தமாய் வருகிற அத்வேஷத்தை ஸாதநமென்ன மாட்டானே: உபாயபாவம் தன் தலையிலேயாய்த்தே; நெடுநாள் இவர்தலையிலே பழியிட்டிழந்திருந்த நாம் எத்தைச் சொல்லுவது?" என்று பேசாதேயிருந்தான். *ஹ்ரீரேஷாஹி மமாதுலா* என்று பிற்பாட்டுக்கு லஜ்ஜித்துநிற்குமவனிறே; இவர்தாம் எடுத்துவைத்து வார்த்தைசொல்லும்படியாய்த்து அவன்நிலை. சைதந்யப்ரயுக்தமான ருசிதான் ஸ்வரூபாதிரேகியன்றிறே. உம்முடையப்ராப்யம் பெற்றீராகில் அதுவேயமையாதோ?" என்ன, அதுவே யமையுமென்கிறார்; தேங்காய்க்கு இளநீர்புக்கவழி ஆராய்ந்தன்றிறே விடாய்த்தவன் இளநீர்குடிப்பது?

உற்றேனுகந்துபணிசெய்து உனபாதம்
பெற்றேன்*ஈதே யின்னம்வேண்டுவதெந்தாய்*
கற்றார்மறைவாணர்கள்வாழ் திருப்பேரார்க்கு*
அற்றாரடியார்தமக்கு அல்லல்நில்லாவே. (10)

ஒ.—பத்தாம்பாட்டில், இவர் கேட்ட அதுக்கு ஒருஹேது காணாமையாலே நிருத்தரனாய் "உமக்கு மேல் செய்யவேண்டுவது சொல்லீர்?" என்று எம்பெருமான் அருளிச்செய்ய; உன்னைக்கிட்டி ப்ரீதிபூர்வகமாக அடிமை செய்துகொண்டு உன்திருவடிகளை அநுபவிக்கப்பெற்றேன். இதுவே இன்னம் வேண்டுவது என்று ஆழ்வார் விண்ணப்பஞ்செய்ய; அவனும் "அப்படியே செய்கிறோம்" என்ன, ப்ரீதராய், திருப்பேர்நகரான்திருவடிகளை ஆச்ரயித்தார்க்கு ஒருதுக்கம் இல்லையாகாதே என்கிறார். அற்றாரான அடியார்.

இ.—பத்தாம்பாட்டில், இவர் கேட்ட இதுக்கு ஒரு ஹேது காணாமையாலே நிருத்தரனாய், "உமக்கு மேல் செய்யவேண்டுவது என்?" என்ன; ப்ரீதிபூர்வகமாக அடிமைசெய்யப்பெற்றேன், இதுவே இன்னம் வேண்டுவதென்கிறார். 'அவன் தானே செய்தான் என்னுமன்று அவனுக்கு வைஷம்ய நைர்க்ருண்யமும் ஸர்வ முக்தியும் ப்ரஸங்கியாதோ?' என்னில்;—இத்தலையில் ருசியை அபேக்ஷித்துச் செய்கையாலே அவனுக்கு அவை தட்டாது. அது ஹேதுவென்று ஈச்வரனுக்குஉத்தரமானாலோ? என்னில்,—அது உபாயமாகமாட்டாது. ப்பலவ்யாப்தமானதிறே உபாயமாவது. இந்த ருசி அதிகாரிஸ்வரூபமாகையாலே தத்விசேஷணமாமித்தனை. உபாயம் ஸஹகாரிநிரபேக்ஷமாகையாலும் இந்தருசி உபாயமாகமாட்டாது. இது உபாயமல்லாமையாலே இவர்க்கு இல்லை என்னலாம்; ஸர்வமுக்தி ப்ரஸங்க பரிஹாரார்த்தமாக அவனுக்கு உண்டென்னவுமாம். [உற்றேன்] - கெடுமரக்கலம் கரைசேர்ந்தாற்போலே கிட்டிக்கொடுகின்றேன். ப்ரீதிப்ரேரிதனாய்க்கொண்டு திருவாய்மொழிபாடி உன் திருவடிகளை அநுபவிக்கப் பெற்றேன். உகந்து பணிசெய்கை - ஸாதகமாய், மேல் ஸாத்யமாகச் சொல்லுகிறதன்று;

இரண்டும் ஏககாலத்திலே யுள்ளதாகையாலே. [ஈதே இன்னம் வேண்டுவது] - இதுதானே மாறிமாறி யாவதாத்மபாவியாய்ச் செல்லுகையிறே. புநராவ்ருத்தியின்றிக்கே யொழிகையாவது - மீளாதொழிகை. விதிபோலிருக்கிறதன்றே. [எந்தாய்] - இவ்வநுபவம் ஸ்வரூபாநுரூபமென்கிறது. இத்தலைக்கு சேஷத்வமும் தேவர்க்கு சேஷித்வமுமிறே ஸ்வரூபம். இவர் அபேக்ஷித்தபடியே "செய்கிறோம்" என்ன, ப்ரீதராய் அருளிச்செய்கிறார்: [கற்றார்] - ஓர் ஆஸநத்தின்கீழேயிருந்து போக்கினவர்கள். [மறைவாணர்கள்வாழ்] - வ்யாஸபதம் செலுத்த ஸமர்த்தரானவர்கள் அநுபவித்து வர்த்திக்கிற தேசம். [திருப்பேராற்கு] - ப்ரீதிப்ரகர்ஷத்தாலே முகத்தை மாறி ஸ்வகதமாகச் சொல்லுகிறார் என்னுதல், திருப்பேரானுன உனக்கு என்னுதல், [அற்றாரடியார்] - திருப்பேர் நகரானுக்கு அற்றாரான அடியார் என்னுதல், அவனுக்கு அற்றவர்களுக்கு அடியார் என்னுதல். [அல்லல் நில்லாவே] - ஒரு து:க்கமில்லையாகாதே என்கிறார்.

ஈடு.—பத்தாம்பாட்டு. இவர் கேட்ட இதுக்கு ஒருஹேது காணமையாலே சிருத்தானாய், "உமக்கு மேல் செய்யவேண்டுவதென்?" என்ன, "ப்ரீதிபூர்வகமாக அடிமை செய்யப் பெற்றேன்: இதுவே யின்னம்வேண்டுவது" என்கிறார். "அவன்தானே செய்தான்" என்னுமன்று, அவனுக்கு வைஷம்யமும் நைர்க்ருண்யமும் ஸர்வமுக்தியும் ப்ரஸங்கியாதோவென்னில்; இத்தலையில் ருசியை யபேக்ஷித்துச்செய்கையாலே அவனுக்கு அவை தட்டாது. அதுஹேதுவென்று ஈச்வரனுக்கு உத்தரமானாலோவென்னில்; அது உபாயமாகமாட்டாது. ப்பலவ்யாப்தமானதிறே உபாயமாவது; இந்தருசி அதிகாரிஸ்வரூப மாகையாலே தத்விசேஷணமாயித்தனை; உபாயம் ஸஹகாரிநிரபேக்ஷமாகையாலும், இந்தருசி யுபாயமாகமாட்டது. இது உபாயமாகாமையாலே இவர்க்கில்லை என்னலாம், ஸர்வமுக்திப்ரஸங்க பரிஹாரார்த்தமாக அவனுக்கு உண்டென்னவுமாம்.

[உற்றேன்] - கெடுமரக்கலம் கரைசேர்ந்தாற்போலே கிட்டிக்கொடு நின்றேன். [உகந்து இத்யாதி] - ப்ரீதிப்ரேரிதனாய்க்கொண்டு திருவாய்மொழிபாடி உன்திருவடிகளை யநுபவிக்கப் பெற்றேன். உகந்துபணிசெய்கை - ஸாதநமாய், மேல் ஸாத்யமாகச்சொல்லுகிறதன்று; இரண்டும் ஏககாலத்திலேயுள்ளதாகையாலே. [ஈதேயின்னம் வேண்டுவது] - இதுதானே மாறிமாறி யாவதாத்மபாவியாய்ச் செல்லுகையிறே. புநராவ்ருத்தியின்றிக்கே யொழிகையாவது மீளாதொழிகை. அப்ராப்தமாயிருக்கிறதோவென்னில், [எந்தாய்] - இவ்வநுபவம் ஸ்வரூப ப்ராப்தமென்கிறது. இத்தலைக்கு சேஷத்வமும் தேவர்க்குசேஷித்வமுமிறே ஸ்வரூபம். இவர் அபேக்ஷித்தபோதே அவனும் "செய்கிறோம்" என்ன, ப்ரீதராய் அருளிச்செய்கிறார்: [கற்றார்] - ஓராஸநத்தின்கீழேயிருந்து போக்கினவர்கள். [மறைவாணர்கள்வாழ்] - வேதத்துக்கு வ்யாஸபதம் செலுத்தவல்லவர்கள் அநுபவித்து வர்த்திக்கிற தேசம். [திருப்பேராற்கு] - ப்ரீதிப்ரகர்ஷத்தாலே முகத்தைமாறி ஸ்வகதமாகச் சொல்லுகிறாரென்னுதல், திருப்பேரானுன உனக்கென்னுதல். [அற்றாரடியார்] - திருப்பேர்நகரானுக்கு அற்றாரான அடியாரென்னுதல், அவனுக்கு அற்றவர்களுக்கடியாரென்னுதல். [அல்லல்நில்லாவே] - ஒருது:க்கங்களும் இவர்கள் பக்கல் நில்லாது.

நில்லாவல்லல் நீள்வயல்சூழ்திருப்பேர்மேல்*
நல்லார்பலர்வாழ் குருகூர்ச்சடகோபன்*
சொல்லார்தமிழ் ஆயிரத்துள்ளிவைபத்தும்
வல்லார்* தொண்டராள்வது சூழ்பொன்விசும்பே. (11)

ஓ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி வல்லார் இட்ட வழக்காம், விலக்ஷணதேஜோரூபமான திருநாடு என்கிறார். [நீள்வயல் என்று தொடங்கி] -பெருத்த வயல்சூழ்ந்திருந்துள்ள திருப்பேர்மேலே, விலக்ஷணர் பலரும் தம்மை அநுபவித்து க்ருதார்த்தரான திருநகரியையுடைய ஆழ்வாருடைய சொல் சேர்ந்த தமிழான ஆயிரம் திருவாய்மொழியிலும்,

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி அப்யஸிக்க வல்லார் இட்ட வழக்கு பரமபதம் என்கிறார். [நில்லா அல்லல்] - து:க்கங்களானவை, "இது நமக்கு தேசமன்று" என்று தானே விட்டுப்போம். பெருத்த வயல் சூழ்ந்திருந்துள்ள திருப்பேர் மேலேயாய்த்துச் சொல்லிற்று. விலக்ஷணர் பலரும் தம்மை அநுபவித்து இனியராயிருக்கும் திருநகரியையுடையராயிருக்கும் ஆழ்வார் அருளிச்செய்தது. "நல்லார் நவில் குருகூர்" - "ஸர்வதாऽபிகதஸ் ஸத்பி:". - [சொல்லார் இத்யாதி] - சொல்சேர்ந்த தமிழான ஆயிரம் என்னுதல்: "பாட்டேகேயேச மதுரம்" என்கிறபடியே, இனிமைக்குச் சொல்லே அமைந்த தமிழான ஆயிரம் என்னுதல். [வல்லார் தொண்டர்] - இப்பத்தை அப்யஸிக்க வல்லார், "செஞ்சொற்கவிகள்" என்கிறபடியே வாசிகமான அடிமைசெய்யும் வைஷ்ணவர்கள். [ஆள்வது சூழ்பொன் விசும்பே] - நிரதிசய தேஜோரூபமான பரமபதத்தை யாய்த்து ஆளுவது; இத்திருவாய்மொழி அப்யஸித்தவர்கள் சென்றால் "ஆண்மின்கள் வானகம்" என்றுய்த்து, அங்குள்ளார் சொல்லுவது.

கூ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியை யப்யஸிக்கவல்லார் இட்டவழக்கு பரமபதமென்கிறார்.

[நில்லாவல்லல்] - து:க்கங்களானவை, "இது நமக்குதேசமன்று" என்று தானே விட்டுப்போம். [சீள்வயல் இத்யாதி] - பெருத்தவயல்சூழ்ந்திருந்துள்ள திருப்பேர்மேலேயாய்த்துச் சொல்லிற்று. [நல்லார் இத்யாதி] - விலக்ஷணர்பலரும் தம்மையநுபவித்து இனியராயிருக்கும் திருநகரியை யுடையராயிருக்கும் ஆழ்வார் அருளிச்செய்தது. "நல்லார்நவில் குருகூர்" *ஸர்வதாऽபிகதஸ் ஸத்பி:* [சொல்லார்இத்யாதி] - சொல்சேர்ந்த தமிழான ஆயிரமென்னுதல்; *பாட்டேகேயேச மதுரம்* என்கிறபடியே, இனிமைக்குச் சொல்லேயமைந்த தமிழான ஆயிரமென்னுதல். [இப்பத்தும்வல்லார்தொண்டர்] - இத்தையப்யஸிக்கவல்லார், "செஞ்சொற்கவிகள்" என்கிறபடியே வாசிகமான அடிமைசெய்யும் ஸ்ரீவைஷ்ணவர்கள். [ஆள்வது சூழ்பொன்விசும்பே] - நிரதிசயதேஜோரூபமான பரமபதத்தையாய்த்து ஆளுவது? இத்திருவாய்மொழி யப்யஸித்தவர்கள் சென்றால், "ஆண்மின்கள் வானகம்" என்றுய்த்து, அங்குள்ளார் சொல்லுவது.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஒன்பதாந் திருவாய்மொழி—சூழ்விசும்பு - ப்ரவேசம்

ஒ.—ஒன்பதாந் திருவாய்மொழியில், பரமயோகிகளுக்கு ஸம்பவிப்பதான பகவத்ஜ்ஞாநவைராக்ய பக்திப்ரகாரங்களை, இத்திருவாய்மொழியளவும் அநுபவித்து இனி இங்கிருந்தநுபவிப்பதொன்றுமில்லாமையாலே, 'திருநாடேறப் போகவேணும்" என்று மநோரதிக்கிற ஆழ்வாரை சரீரத்தோடே கொடுபோகவேணுமென்று விரைகிற எம்பெருமான் இவர்க்கு அங்குத்தைக்கீடாம்படி மிகவும் விடாய் பிறக்கைக்காகத் திருநாட்டுக்குப் போகைக்கீடாக வேதாந்தங்களில் ப்ரஸித்தமான அர்ச்சிராதிமார்க்கத்தையும், அங்குள்ளார்பண்ணும் ஸத்காரங்களையும் அவ்வழியேபோய்ப் புகக்கடவ திருநாட்டையும், அங்கே எம்பெருமான் அயர்வறுமமரர்கள் ஸேவிக்கப் பிராட்டிமாரோடே வீற்றிருந்தருளும்படியையும் பரமப்ராப்யரான அயர்வறுமமரர்கள்நடுவே தாம் ஆநந்த நிர்ப்பரராய் இருக்கும்படியையும் காட்டியருளக் கண்டு ப்ரீதராய் அத்தை அந்யாபதேசத்தாலே பேசியநுபவிக்கிறார்.

இ.—ஒன்பதாந் திருவாய்மொழியில், பரமயோகிகளுக்குப் பிறக்கக்கடவதான பரபக்தி இவர்க்குப் பிறந்து தத்ப்ரகாரங்களை இத்திருவாய்மொழியளவும்வர அநுபவித்து, இனியிங்கிருந்து அநுபவிப்ப

தொன்று மில்லாமையாலே, ''பரமபதத்திலே போகவேணும்'' என்று மநோரதிக்கிற இவரை, தம்மிற் காட்டில் சடக்கெனக் கொடுபோகவேணுமென்று விரைகிற ஈச்வரன், அங்குத்தை அநுபவத்துக்கீடாம்படி மிகவும் விடாய்பிறக்கைக்காக, தன்னுடைய ஸ்வரூப ரூபகுண விபூதிகளைக் கண்ணாலே கண்டாற்போலே விசதமாக ப்ரகாசிக்கும்படி பண்ணியருளினான். அதாகிறது - வேதாந்தங்களில் ப்ரஸித்தமான அர்ச்சிராதிமார்க்கத்தையும் சரீரவிச்லேஷஸமயத்தில்வரும் க்லேசமெல்லாம் ஆறும்படி தான்வந்து முகங்காட்டும் படியையும் மார்க்கஸ்த்தரான புருஷர்களுடைய ஸத்காரங்களையும் அம்மார்க்கத்தாலே போய்ப் புகக்கடவ பரமபதத்தையும், நித்யஸூரிகள் வந்து ஆதரிக்கும்படியையும், பிராட்டிமாரும் ஸ்ரீவைகுண்டநாதனும் எதிரேவந்து ஆதரிக்கும்படியையும், நித்யஸூரிகள் ஸேவிக்கப் பிராட்டிமாரோடே வீற்றிருந்தருளுகிற படியையும், பரமப்ராப்யரான நித்யஸூரிகள்நடுவே தாம் ஆநந்த நிர்ப்பரராயிருக்கும்படியையும் காட்டியருளக்கண்டு ப்ரீதராய், அத்தை அந்யாபதேசத்தாலே பேசி யநுபவிக்கிறார். தமக்குஅவன் பண்ணிக் கொடுத்த பேற்றை வைஷ்ணவர்களெல்லாரும் பெற்றார்களாகப் பேசுகிற இது, அந்யாபதேசமாவது: அதுதனக்கு ப்ரயோஜநம் - இங்குள்ளார் ''நமக்கு ஆழ்வார்பேறு தப்பாது'' என்றிருக்கைக்காக.

ஈடு.—பரமயோகிகளுக்குப் பிறக்கக்கடவதான பரபக்தி இவர்க்குப்பிறந்து, தத்ப்ரகாரங்களை இத்திருவாய்மொழியளவும்வர அநுபவித்து, இனி இங்கிருந்தநுபவிக்குமதொன்றில்லாமையாலே ''பரமபதத்தேறப்போகவேணும்'' என்று மநோரதிக்கிற இவரைத் தம்மிற் காட்டில் சடக்கெனக்கொடுபோகவேணும் என்று விரைகிற ஈச்வரன், அங்குத்தை யநுபவத்துக்கீடாம்படி மிகவும் விடாய்பிறக்கைக்காகத் தன்னுடைய ஸ்வரூப ரூபகுண விபூதிகளைக் கண்ணாலேகண்டாற்போலே விசதமாக ப்ரகாசிக்கும்படி பண்ணியருளினான். அதாவது - வேதாந்தங்களில் ப்ரஸித்தமான அர்ச்சிராதிமார்க்கத்தையும், சரீரவிச்லேஷ ஸமயத்தில்வரும் க்லேசமெல்லாம் ஆறும்படி தான்வந்து முகங்காட்டும்படியையும், மார்க்கஸ்த்தரான புருஷர்களுடைய ஸத்காரங்களையும், அம்மார்க்கத்தாலேபோய்ப் புகக்கடவ பரமபதத்தையும், நித்யஸூரிகள் வந்து ஆதரிக்கும்படியையும், பிராட்டிமாரும் ஸ்ரீவைகுண்டநாதனும் எதிரேவந்து ஆதரிக்கும்படியையும் நித்யஸூரிகள் ஸேவிக்கப் பிராட்டிமாரோடே வீற்றிருந்தருளுகிற படியையும், பரமப்ராப்யரான நித்யஸூரிகள்நடுவே தாம் ஆநந்தநிர்ப்பரராயிருக்கும்படியையும் காட்டியருளக் கண்டு ப்ரீதராய், அத்தை அந்யாபதேசத்தாலே பேசி யநுபவிக்கிறார். தமக்கு அவன் பண்ணிக்கொடுத்தபேற்றை வைஷ்ணவர்களெல்லாரும் பெற்றார்களாகப்பேசின இது- அந்யாபதேசமாவது: அதுதனக்கு ப்ரயோஜநம் - இங்குள்ளார் ''நமக்கும் ஆழ்வார்பேறு தப்பாது'' என்றிருக்கைக்காக.

சூழ்விசும்பணிமுகில் தூரியம்முழக்கின*
ஆழ்கடலலைதிரை கையெடுத்தாடின*
ஏழ்பொழிலும் வளமேந்தியவென்னப்பன்*
வாழ்புகழ்நாரணன்தமரைக் கண்டுகந்தே. (1)

ஒ.—முதற்பாட்டில், திருநாட்டுக்குப்போக உபக்ரமிக்கிற ஸ்ரீவைஷ்ணவர்களைக் கண்ட ப்ரீத்யதிசயத்தாலே ஸ்த்தாவரஜங்கமங்களுக்குப் பிறந்த விக்ருதியை அருளிச்செய்கிறார். [சூழ்விசும்பென்று தொடங்கி] - இடமுடைத்தான ஆகாசத்தில் அழகிய மேகங்கள் தூர்யகோஷத்தைப் பண்ணிற்றின; ஆழ்கடல் அலையாநின்றிருந்துள்ள திரையாகிற கையையெடுத்துக்கொண்டு ஆடிற்றின. [ஏழ்பொழிலும் வளமேந்திய] - ஸப்தத்வீபங்களும் புதுக்கணித்தின; உபஹாரங்களை தரித்தாரென்றுமாம். ;[என்னப்பனொன்று மேலுக்கு] - எனக்குப் பரமபந்துவாய் ஆச்ரிதரெல்லாம் உஜ்ஜீவிக்கும் புகழையுடைய நாராயணன்தமரைக் கண்டு உகந்து.

இ.—முதற்பாட்டில், பரமபதத்துக்குப் போகஉபக்ரமிக்கிற ஸ்ரீவைஷ்ணவர்களைக் கண்ட ப்ரீத்யதிசயத்தாலே ஸ்த்தாவரஜங்கமங்களுக்குண்டான விக்ருதியை அருளிச்செய்கிறார். [சூழ்விசும்பு] -

பூமியைச் சூழும்படி இடமுடைத்தான ஆகாசத்திலே. [அணிமுகில்] - ஆபரணமான முகிலென்னுதல், ஆகாசப்பரப்படங்கலும் அணியப்பட்ட முகில் என்னுதல்; அழகிய முகிலென்னுதல். [தூரியம் முழக்கின] - தூர்யகோஷத்தைப் பண்ணிற்றின. [அணிமுகில் தூரியம் முழக்கின] - ஒப்பித்துநின்று கொட்டுவாரைப்போலே; "மந்தம்ஜகர்ஜ்ஜுர் ஜலதா:" இவன்போக்குக்கடியான அவன்வரவிலே பிறந்த விக்ருதியிறே இது: இவன்தானே போகப்புக்கால் சொல்லவேண்டாவிறே. அவற்றுக்கு அபிமாநிகளான இந்த்ர வருண பர்ஜ்ஜந்யரைச் சொல்லிற்றாகவுமாம். [ஆழ்கடல்] - எல்லாவற்றையும் தன்னுள்ளே அடக்க வற்றான அளவுடைய கடல், தைர்யபங்கம் பிறந்து அலையாநின்றிருந்துள்ள திரையாகிற கையை யெடுத்துக்கொண்டு கூத்தாடிற்றின. [எழ்பொழிலும் வளமேந்திய] - ஸப்தத்வீபங்களும் புதுக்கணித்தன; உபஹாரங்களை தரித்தனவென்றுமாம். இதெல்லாம் ஆரைக்கண்டு என்னில், - [என்னப்பன்] - எனக்கு பரமபந்துவானவன். இவர்களோடு நிருபாதிக ஸம்பந்தம் அவனுக்குண்டானால் அவனோடு ஸம்பந்தமுள்ளவை யெல்லாவற்றுக்கும் ஆதரிக்கவேண்டியிருக்குமிறே; ராஜபுத்ரன் போகாநின்றால் ராஜஸம்பந்தமுடையார்க் கெல்லாம் அங்கீகரிக்கவேண்டுமாபோலே. [வாழ்புகழ் நாரணன்] - ஆச்ரிதரை வாழும்படி பண்ணவற்றான கல்யாணகுணங்களை யுடைய ஸர்வேச்வரன். அவன்தன்னைக் கண்டோவென்னில்; - [அவன்றமரைக்கண்டு] - அவன்கேட்கு மென்னும் ப்ரீதியாலேயோ வென்னில், - [உகந்தே] - ப்ரீதிப்ரேரிதராய்.

ஈடு.—முதற்பாட்டு. பரமபதத்துக்குப்போக உபக்ரமிக்கிற ஸ்ரீவைஷ்ணவர்களைக் கண்ட ப்ரீத்யதிசயத்தாலே ஸ்தாவரஜங்கமங்களுக்கு உண்டான விக்ருதியை யருளிச் செய்கிறார்.

[சூழ்விசும்பு] - பூமியைச்சூழும்படி இடமுடைத்தான ஆகாசத்திலே. [அணிமுகில்] - ஆபரணமான முகிலென்னுதல், ஆகாசப்பரப்படங்கலும் அணியப்பட்ட முகிலென்னுதல் [தூரியம் முழக்கின] - தூர்யகோஷத்தைப் பண்ணிற்றின. [சூழ்விசும்பு இத்யாதி]- காஹளப்ப ரொப்பித்துநின்று பெரிய மண்டபங்களிலேநின்று கொட்டுமாபோலே காணும், இவையிருக் கிறது; *மந்தம்ஜகர்ஜ்ஜுர் ஜலதா:*. இவன் போக்குக்கடியான அவன்வரவிலேபிறந்த விக்ருதியிறே இது; இவன்தான் போகப் புக்கால் சொல்லவேண்டாவிறே. அவற்றுக்கு அபிமாநிகளான இந்த்ரவருணபர்ஜ்ஜந்யர்களைச் சொல்லிற்றாகவுமாம் [ஆழ்கடல்இத்யாதி] - எல்லாவற்றையும் தன்னுள்ளே யடக்க வற்றான அளவுடைய கடல், தைர்யபங்கம்பிறந்து அலையாநின்றுள்ள திரையாகிற கையையெடுத்துக் கூத்தாடிற்றின. [எழ்பொழிலும்வளமேந்திய] - ஸப்தத்வீ பங்களும் புதுக்கணித்தன; உபஹாரங்களை தரித்தன வென்றுமாம். இதெல்லாம் ஆரைக் கண்டென்னில் - [என்னப்பன்] - எனக்குப் பரமபந்துவானவன். இவர்களோடு நிருபாதிக ஸம்பந்தம் அவனுக்கு உண்டானால் அவனோடுஸம்பந்தமுள்ளவையெல்லாவற்றுக்கும் ஆதரிக்கவேண்டியிருக்குமிறே; ராஜபுத்ரன் போகாநின்றால் ராஜஸம்பந்தமுடையார்க் கெல்லாம் அங்கீகரிக்கவேண்டுமாபோலே. [வாழ் புகழ்நாரணன்] - ஆச்ரிதர்வாழும்படி பண்ணவற்றான கல்யாணகுணங்களையுடைய ஸர்வேச்வரன். அவன் தன்னைக் கண்டோ வென்னில்,—[அவன்தமரைக்கண்டு] - அவன்கேட்கு மென்னும் ப்ரீதியாலேயோ வென்னில், [உகந்தே] - ப்ரீதிப்ரேரிதராய்.

நாரணன் தமரைக்கண்டுகந்து நன்னீர்முகில்*
பூரணபொற்குடம் பூரித்ததுஉயர்விண்ணில்*
நீரணிகடல்கள் நின்றார்த்தன* நெடுவரைத்
தோரணம்நிரைத்து எங்குந்தொழுதனருலகே. (2)

ஜீ.—இரண்டாம்பாட்டில், மேலுண்டான லோகங்கள் பண்ணின ஸத்காரங்களை அருளிச்செய் கிறார். [நாரணனென்று தொடங்கி] - அழகிய நீர்முகில்கள் நாரணன் தமரைக்கண்டு உகந்தன; அவை தானே பூர்ணகும்பங்களாயின. ஆகாசசரரான தேவர்களாலே ஆகாசமெல்லாம் பூர்ணகும்பம் வைக்

கப்பட்டதென்றுமாம். [நீரென்று தொடங்கி] - நீராலே அணியப்பட்ட கடல்கள் ஹர்ஷத்தாலே நிரந்தரமாக ஆர்த்தன; [லோகங்களிலுள்ளார் எங்கும் நெடுவரைபோலேயிருக்கும் தோரணங்களை நிரைத்துத் தொழுதார்கள்.

இ.—இரண்டாம்பாட்டில், மேலுண்டான லோகங்கள் பண்ணின ஸத்காரங்களை அருளிச்செய்கிறார். [நாரணன் தமர்இத்யாதி] - நிருபாதிக சேஷியானவனுடைய அடியாரைக் கண்டு நல்ல நீரையுடைத்தான மேகங்களானவை உகப்பாலே, உயர்ந்த ஆகாசத்திலே பூர்ண கும்பங்களாகச் சமைக்கப்பட்டன; முற்படக் கண்டுகந்தன; பின்பு அவைதானே பூர்ணகலசங்களாய்த்தின என்கை. ''ஒருகால் தூர்யகோஷத்தைப் பண்ணினோம்'' என்றிருக்கிறனவில்லை. ஆகாச சரரான தேவர்களாலே ஆகாசமெங்கும் பூர்ணகும்பம் வைக்கப்பட்டதென்றுமாம். [நீரணிகடல் இத்யாதி] - நீராலே அணியப்பட்ட கடல்கள் ''ஒருகாலடினோம்'' என்றிராதே, ஹர்ஷத்தாலே நிரந்தரமாக ஆர்த்தன. [நெடுவரை இத்யாதி] - அவ்வோலோகங்களிலுள்ளார் நெடியவரைபோலே யிருந்துள்ள தோரணங்களைநட்டுத் தாங்களும் தொழுதார்கள். 'உலகென்று' லோகத்திலுள்ளாரைச் சொல்லுகிறது; ''மஞ்சா:க்ரோசந்தி இதிவத்''. ''ச்சத்ரசாமரபாணிஸ்து'' என்கிறபடியே ஹர்ஷத்தாலே எல்லா அடிமைகளும் செய்யாநின்றார்கள்.

ஈடு.—இரண்டாம்பாட்டு. மேலுண்டான லோகங்கள் பண்ணின ஸத்காரங்களை அருளிச்செய்கிறார்.

[நாரணன் இத்யாதி] - நிருபாதிகசேஷியானவனுடையாரைக்கண்டு, நல்ல நீரையுடைத்தான மேகங்களானவை, உகப்பாலே, உயர்ந்த ஆகாசத்திலே பூர்ணகும்பங்களாகச் சமைக்கப்பட்டன. முற்படக் கண்டு உகந்தன, பின்பு அவைதானே பூர்ணகும்பங்களாய்த்தின என்கை. ''ஒருகால் தூர்யகோஷம் பண்ணினோமிறே'' என்றிருக்கிறனவில்லை. ஆகாசசரரான தேவர்களாலே ஆகாசமெல்லாம் பூர்ணகும்பம் வைக்கப்பட்டதென்றுமாம். [நீரித்யாதி] நீராலே யணியப்பட்ட கடல்கள், ''ஒருகாலடினோம்'' என்றிராதே, ஹர்ஷத்தாலே நிரந்தரமாக ஆர்த்துக்கொண்டன. [நெடுவரை இத்யாதி] - அவ்வோ லோகங்களிலுள்ளார், நெடியவரைபோலேயிருந்துள்ள தோரணங்களை நட்டுத் தாங்களும் தொழுதார்கள். உலகமென்பது உயர்ந்தோரையிறே. அங்குள்ளாரைச் சொன்னபடி. *ச்சத்ரசாமரபாணிஸ்து* என்கிறபடியே ஹர்ஷத்தாலே எல்லாவடிமைகளும் செய்யாநின்றார்கள்.

தொழுதனருலகர்கள் தூபநல்மலர்மழை
பொழிவனர்* பூமியன்றளந்தவன் தமர்முன்னே*
எழுமினென்றிருமருங்கிசைத்தனர் முனிவர்கள்*
வழியிதுவைகுந்தர்க்கென்று வந்தெதிரே. (3)

ஒ.—மூன்றாம்பாட்டில், ஆதிவாஹிக லோகங்களிலுள்ளார் திருநாட்டுக்கு நடக்கிற ஸ்ரீவைஷ்ணவர்கள் எதிரேவந்து புஷ்பவர்ஷாதிகளைப் பண்ணிக் கொண்டாடுகிறபடியை அருளிச்செய்கிறார். [பூமியன்றளந்தவன் தமர்] - திருவுலகளந்தருளினவன் குணத்திலே யகப்பட்டு அடிமைபுக்குத் திருநாட்டுக்குப் போகிற ஸ்ரீவைஷ்ணவர்கள். [எழுமினென்று மேலுக்கு] - ஸ்ரீவைகுண்டத்துக்குப் போவார்க்கு வழி இதுவென்று எதிரேவந்து இரண்டருகும் நின்று ''எழுந்தருளலாகாதோ?'' என்றார்கள். [முனிவர்கள்] - முனிவர்களென்றது வாங்நியமம் தவிர்ந்தமைக்கு ஸூசகம்.

இ.—மூன்றாம்பாட்டில், ஆதிவாஹிக லோகங்களிலுள்ளார் எதிரேவந்து புஷ்பவர்ஷாதிகளைப் பண்ணிக் கொண்டாடுகிறபடியை அருளிச்செய்கிறார். [தொழுதனருலகர்கள்] - ஆதிவாஹிக லோகங்களிலுள்ளார் ''கைபடைத்த ப்ரயோஜநம் பெற்றோம்'' என்று தொழுதார்கள். [தூபம் இத்யாதி] - தூபத்தையும் நல்ல மலர்மழையையும் ப்ரயோகித்துத் தொழாநின்றார்கள். [பூமியன்றளந்தவன்தமர்

முன்னே] - திருவுலகளந்தருளின ஸ்ரீவாமனன்செயலுக்குத் தோற்று அடிமைபுக்கவர்களென்றுய்த்து அவர்கள் ஆதரிக்கிறது. அவன் திருவுலகளந்தருளின நினைவை ஸப்ரயோஜனமாக்கின ரென்றுய்ந்து அவர்களாதரிக்கிறது. [எழுமினென்றிருமருங்கிசைத்தனர் முனிவர்கள்] - "இங்கே யெழுந்தருள வேணும்" என்று இரண்டருகும் நின்று சொன்னார்கள் முனிவர்கள். முனிவர்களென்கிறது - வாங்நியமம் தவிர்ந்தமைக்கு ஸூசகம். மௌநத்துக்கு விஷயம் புறம்பேயிறே என்றிருந்தார்கள். [வழியிது வைகுந்தர்க்கென்று வந்தெதிரே] - பரமபதத்துக்குப் போவார்க்கு வழியிதுவென்று எதிரே வந்து. தந்தாமுடைய எல்லையிலே வந்தால்ஆதரிக்கிறோ மென்றிருக்கையன்றியே எதிரே வந்தாதரித்தார்கள். [பூமியன்றளந்தவன்தமர் முன்னே] - தூபநன்மலர்மழை பொழிவனராய்க்கொண்டு - முனிவரான உலகர்கள் - தொழுதனர்; வைகுந்தர்க்கு வழியிது என்று எதிரேவந்து எழுமினென்று இருமருங் கிசைத்தனர்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. ஆதிவாஹிகலோகங்களிலுள்ளார் எதிரேவந்து புஷ்பவ்ருஷ்டியைப்பண்ணிக் கொண்டாடுகிறபடியை யருளிச்செய்கிறார்.

[தொழுதனருலகர்கள்] - ஆதிவாஹிகலோகங்களிலுள்ளார், "கைபடைத்த ப்ரயோஜநம் பெற்றோம்" என்று தொழுதார்கள். தூபத்தையும் நல்லமலர்மழையையும் ப்ரயோகித்துத் தொழாநின்றார்கள். [பூமியன்றளந்தவன் தமர்முன்னே] - ஸ்ரீவாமநனுடைய திருவுலகளந்தருளின செயலுக்குத் தோற்று அடிமைபுக்கவர்களென்றுய்த்து, அவர்கள் ஆதரிக்கிறது. 'மூவடிமண் கொண்டளந்த மன்னன்சரிதைக்கே மாலாகிப்பொன்பயந்தேன்' என்னுமவர்போல்வாருண்டே. அவன் திருவுலகளந்தருளினநினைவை ஸப்ரயோஜந மாக்கினவர்களென்றுய்த்து அவர்கள் ஆதரிக்கிறது. [எழுமினென்றிருமருங்கிசைத்தனர் முனிவர்கள்] - "இங்கேயெழுந்தருள வேணும்" என்று இரண்டருகும்நின்று சொன்னார்கள். முனிவர்களென்றது - வாங்நியமம் தவிர்ந்தமைக்கு ஸூசகம்; மௌநத்துக்குவிஷயம் புறம்பேயிறே என்றிருந்தார்கள். [வழியிது வைகுந்தர்க்கென்று வந்தெதிரே] - பரமபதத்துக்குப்போவார்க்கு வழியிதுவென்று எதிரே வந்துசொன்னார்கள். *ஜகத:சாச்வதே* என்று விவக்ஷிதரையைப் போகக்கடவதாயிடக்கிற வழி, இன்று இதுண்டாகிறதன்றே. "பாகவத விஷயத்தில் கிஞ்சித்கரித்து நம் ஸத்தையுண்டாகவேணும்" என்று எதிரே தந்தாமுடைய எல்லைகளைக்கடந்து வந்தாதரித்தார்கள். [வைகுந்தர்க்கு] - தேசாந்தரகதனான ராஜா ஸ்வதேசத்திலே புகுமாபோலே, அங்கு நின்றும் பிறிகதிர்ப்பட்டுப் போந்தாராயிருக்கிறபடி. பூமியன்றளந்தவன்தமர்முன்னே - தூபநன்மலர்மழைபொழிவனராய்க் கொண்டு - முனிவரான - உலகர்கள் - தொழுதனர்; வைகுந்தர்க்கு - வழியிது-என்று எதிரே-வந்து-எழுமின் என்றுஇருமருங்கு இசைத்தனர்.

எதிரெதிரிமையவர் இருப்பிடம்வகுத்தனர்*
கதிரவரவரவர் கைந்நிரைகாட்டினர்*
அதிர்குரல்முரசங்கள் அலைகடல்முழக்கொத்த*
மதுவிரிதுழாய்முடி மாதவன் தமர்க்கே. (4)

ஒ.—நாலாம்பாட்டில், மேலில் லோகங்களில் தேவாதிகள் ஸ்ரீவைஷ்ணவர்கள் போகிறவழிகளிலே தங்குகைக்குப் பார்த்தபார்த்த இடமெல்லாம் தோப்புக்கள் பண்ணியும், வாத்யாதிகோஷங்களைப்பண்ணியும் கொண்டாடுகிறபடியை யருளிச்செய்கிறார். [கதிரவரென்று தொடங்கி] - அர்ச்சிராதிகளான அவ்வவஆதிவாஹிக கணங்கள் 'பார்த்தருளீர்' பார்த்தருளீர் என்று கைகளை நிரையே காட்டினார்கள். [மதுவென்று தொடங்கி] - ச்ரிய:பதியினுடைய அழகிலே அகப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு, இவர்களை எதிர்கொள்ளுகைக்குப் பெரிய பிராட்டியாரோடே ஒப்பித்தருளுகிறபடி யென்றுமாம்.

இ.—நாலாம்பாட்டில், மேலில் லோகங்களில் தேவாதிகள் இவர்கள்போகிற வழிகளிலே தங்குகைக்குப் பார்த்த பார்த்தவிடமெல்லாம் தோப்புக்கள் பண்ணியும் வாத்யாதி கோஷங்களைப் பண்ணி

யும் கொண்டாடும்படியை அருளிச்செய்கிறார். [எதிரெதிர் இமையவர் இத்யாதி] - பார்த்த பார்த்தவிடமெங்கும், "இவர்கள் இங்கே தங்கிப்போவார்களோ, இங்கே தங்கிப்போவரர்களோ" என்னும் நசையாலே தேவர்கள் தோப்புக்கள் சமைத்தார்கள். இமையவரென்று ஸ்வபாவகதநமன்று; தோப்புக்கள் சமைக்கையிலுள்ள த்வரையாலே கண்விழித்திருக்கிறபடி. ப்ரயுத்தராயிருக்கிறபடியென்கை. [கதிரவரவரவர் இத்யாதி] - அர்ச்சிராதிகளாயுள்ள அவ்வோ ஆதிவாஹிக கணங்கள் "பார்த்தருளீர் பார்த்தருளீர்" என்று கைகளை நிரையேகாட்டினார்கள். [அதிர்குரல் இத்யாதி] - அதிராநின்றுள்ள குரலையுடைய முரசங்கள், கடல்கிளர்ந்து முழங்கினாப் போலே முழங்காநின்றன. அங்குத் தங்குகையிலுண்டான ஆதராதிசயந் தோற்ற வாத்யகோஷங்களைப் பண்ணினார்கள். [மதுவிரிதுழாய்முடி] - ச்ரிய:பதியுடைய ஒப்பனையழகிலே யகப்பட்டு அடிமைபுக்கவர்களுக் கென்னுதல்; இவர்களை எதிர்கொள்ளுகைக்குப் பிராட்டியோடே ஒப்பித்தருளுகிறபடியைச் சொல்லுதல்.

௯-ரு.—நாலாம்பாட்டு. மேலுள்ளலோகங்களில்தேவர்கள், இவர்கள் போகிற வழிகளிலே தங்குகைக்குத் தோப்புக்கள் சமைத்தும் வாத்யாதிகோஷங்களைப்பண்ணியும் கொண்டாடுகிறபடியை அருளிச் செய்கிறார்.

[எதிரெதிரித்யாதி] - பார்த்தபார்த்தவிடமெங்கும், "இவர்கள் இங்கே தங்கிப் போவர்களோ? இங்கே தங்கிப்போவர்களோ?" என்னும் நசையாலே, தேவர்கள் தோப்புச்சமைத்தார்கள். இமையவரென்று - ஸ்வபாவகதநமன்று; தோப்புச்சமைக்கையிலுண்டான த்வரையாலே கண்விழித்திருக்கிறபடி; இளையபெருமாள் அடிமைசெய்கைக்கு உறுப்பாக உறங்காதிருந்தாப்போலே. இவர்கள் அங்கே புக்குத்தங்குகிறார்களன்றிறே, தந்தாம் ஸ்வரூபலாபத்துக்குக்கிஞ்சித்கரிக்கிறபடியிறே; ராஜாக்களொருகால் கண்டுசிரித்து "அழகிது" என்று போகைக்காக மாநாவிசமைப்பாரைப் போலே. [கதிர் இத்யாதி] - ஆதித்யர்கள், நிலைவிளக்குப் போலே "இங்ஙனே யெழுந்தருள, இங்ஙனேயெழுந்தருள; பார்த்தருள, பார்த்தருள" என்று கைகளை நிரையே காட்டினார்கள், அர்ச்சிராதிகளான ஆதிவாஹிக கணங்களாகவுமாம். (கதிரவர் - தேஜோவிசிஷ்டர்.) [அதிர் இத்யாதி] - அங்கே கால்தாழ்வர்களென்று, அதுகேளாதபடி, அதிராநின்றுள்ள த்வநியையுடைய முரசங்கள், அலையையுடைத்தான கடல்போலே முழங்கிற்றின; அன்றியே. இங்கே தங்குகையிலுண்டான ஆதராதிசயந்தோற்ற வாத்யகோஷங்களைப் பண்ணினார்களென்றுமாம். [மதுவிரி இத்யாதி] - கொட்டோசையாலும், ஆள்களெதிரேசென்று சொல்லுகையாலும், சென்ற இவர்களுக்கு ஒப்பித்தபடியே கொடுக்கைக்காகப் பிராட்டியோடேகூட அழித்தழித்தொப்பிக்கிறபடி. [மாதவன்தமர்க்கே] - "பிராட்டிபுருஷகாரமாகப் பற்றினவர்கள் பிராட்டிமுன்னாக அடிமைசெய்கைக்கு வாராநின்றார்கள்" என்று ஒப்பிக்கிறபடி. ச்ரிய:பதியினுடைய ஒப்பனையழகிலே யகப்பட்டு அடிமைபுக்கவர்களுக் கென்னுதல். [எதிரெதிரித்யாதி] - இங்கு "வைஷ்ணவர்கள்" என்றதுவே ஹேதுவாகப் பங்கு பெறுதே திரியுண்ட வைஷ்ணவர்களை அங்குள்ளார் எதிர்கொண்டு இருப்பிடங்கள் கொடுக்கப்படுகிறபடி! மிளகாழ்வான் படைவீட்டிலே அகரத்துக்குச்செல்ல, "நீ ஆந்த்ராளிகன்; உனக்குப்பங்கில்லை" என்ன, "நன்மையில் குறையுண்டாய்ச் சொல்லுகிறீர்களோ, அன்றே" என்ன, "நன்மையில் குறையில்லை இதிறேஹேது" என்ன, "நம்நெஞ்சில் இல்லையாகிலும் இவர்கள் வைஷ்ணவர்களென்று கைவிடப்பெற்றோமிறே" என்று புடைவையை முடிந்து எறட்டுக் கூத்தாடினான்.

மாதவன் தமரென்று வாசலில்வானவர்*
போதுமினெமதிடம் புகுதுகவென்றலும்*
கீதங்கள்பாடினர் கின்னரர்கெருடர்கள்*
வேதநல்வாயவர் வேள்வியுள்மடுத்தே. (5)

ஓ.—அஞ்சாம்பாட்டில், ஆதிவாஹிக கர்த்தாக்களான வருணேந்த்ராதிகளும் மற்றுமுள்ளாரும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப்பண்ணும் ஸத்காரத்தை யருளிச்செய்கிறார். [வாசலில் வானவர்] - வழியில் தேவர்கள். [போதுமினென்று தொடங்கி] - வந்து எங்களதிகாரங்களைக் கொள்ளவேணு மென்று ப்ரார்த்திக்கிறவளவிலே கின்னரர்களும் கருடர்களும பாட்டுக்களைப்பாடினார்கள்; மேலில் லோகங்களில் வைதிகராய்க்கொண்டு ஸமாராதநம்பண்ணுமவர்கள் தங்களுடைய ஸமாராதனபலங்களை ஸ்ரீவைஷ்ணவர்கள்திருவடிகளிலே ஸமர்ப்பித்தார்கள்.

இ.—அஞ்சாம்பாட்டில், ஆதிவாஹிக கர்த்தாக்களான வருணேந்த்ராதிகளும் மற்றுமுள்ளாரும் இவர்களுக்குப்பண்ணும் ஸத்காரத்தை அருளிச்செய்கிறார். [மாதவன் தமரென்று] - "பிராட்டி புருஷகாரமாக ஆச்ரயித்த அந்த:புர பரிகரமன்றோ இவர்கள்" என்றுய்த்து அவர்கள் சொல்லுவது. [வாசலில் வானவர்] - வழியில் தேவர்கள். அவர்களாகிறார் - வருணேந்த்ரப்ரஜாபதிகள். [போதுமினெமதிடம் புகுதுகவென்றலும்] - "இங்ஙனேயெழுந்தருளவேணும், எங்கள் அதிகாரங்களைக் கைக்கொள்ளவேணும்" என்று ப்ரார்த்திக்கிறவளவிலே, கின்னரர்களும் கெருடர்களும் பாட்டுக்களைப் பாடினார்கள். மேலில் லோகங்களிலே வைதிகராய்க்கொண்டு ஸமாராதநம் பண்ணுமவர்கள், ஸமாராதநங்களை இவர்கள் திருவடிகளிலே ஸமர்ப்பித்தார்கள். நிரபேக்ஷராய்ப் போகிற இவர்களுக்குத் தந்தாமதிகாரங்களைக் கொடுப்பார் பாடுவார் யாகபலங்களைக் கொடுப்பார்களாகிறார்களிறே, தந்தாம்ஆதரத்தாலே. "ப்ரீத:கச்சிந்முநிஸ் தாப்யாம் ஸம்ஸ்த்தித:கலசம்ததௌ" என்று தந்தாமுக்குள்ளவற்றைக் கொடுக்கு மத்தனையிறே.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. ஆதிவாஹிக கர்த்தாக்களான வருணேந்த்ராதிகளும் மற்று முள்ளாரும் இவர்களுக்குப்பண்ணும் ஸத்காரங்களை யருளிச்செய்கிறார்.

[மாதவன்தமரென்று] - பிராட்டிபுருஷகாரமாக ஆச்ரயித்த அந்த:புரபரிகரமன்றோ வென்றுய்த்து அவர்கள் சொல்லுவது; ப்ரஹ்மசாரீ எம்பெருமானைப் பற்றினவர்களன்றிறே. [வாசலில்வானவர்] - வழியில் தேவர்கள், [வாசல்] - வழி. அவர்களாகிறார்!—வருணேந்த்ர ப்ரஜாபதிகள். [போதுமினெமதிடம்புகுதுகவென்றலும்] - "இங்ஙனே யெழுந்தருளவேணும்" எங்களதிகாரங்களைக் கைக்கொள்ளவேணும் என்று ப்ரார்த்திக்கிறவளவிலே. [கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்] கிந்நரர்களும் கருடர்களும் பாட்டுக்களைப்பாடினார்கள். கிந்நர தேசத்திலுள்ளாரும், கருடதேசத்திலுள்ளாரும் பாடினார்கள். [வேதநல் வாயவர்] - மேலில் லோகங்களில் வைதிகராய்க்கொண்டு ஸமாராதநம் பண்ணுமவர்கள், தங்கள் ஸமாராதநபலங்களை இவர்கள்திருவடிகளிலே ஸமர்ப்பித்தார்கள். நிரபேக்ஷராய்ப்போகிறவர்களுக்கு, தந்தாம் அதிகாரங்களைக்கொடுப்பார், பாடுவார், யாகபலங்களை ஸமர்ப்பிப்பாராகிறார்களிறே தந்தாம் ஆதரத்தாலே. *ப்ரீத:கச்சிந்முநிஸ் தாப்யாம் ஸ்ம்ஸ்த்தித: கலசம்ததௌ* என்று தந்தாமுக்குள்ள வற்றைக் கொடுக்குமத்தனையிறே.

வேள்வியுள்மடுத்தலும் விரைகமழ்நறும்புகை*
காளங்கள்வலம்புரி கலந்தெங்குமிசைத்தனர்*
ஆண்மின்கள்வானகம் ஆழியான்தமரென்று*
வாளொண்கண்மடந்தையர் வாழ்த்தினர்மகிழ்ந்தே. (6)

ஒ.—ஆறும்பாட்டில், ஸத்காரபூர்வகமாக தேவஸ்த்ரீகள் உகந்து ஸ்ரீவைஷ்ணவர்களை ஆசீர்வச நங்களைப் பண்ணினார்கள் என்கிறார். [வேள்வியுள் என்று தொடங்கி] - சிலர் தாங்கள்பண்ணின யாக பலங்களை ஸமர்ப்பிக்குமளவிலே வேறே சிலர் அகில்தொடக்கமான த்ரவ்யங்களைக்கொண்டு நல்லபுகை களை ப்ரவர்த்திப்பித்தார்கள். [கலந்தெங்குமிசைத்தனர்] - கலந்தெங்கும் த்வநித்தன.

ஜி.—ஆறாம்பாட்டில், ஸத்காரபூர்வகமாக தேவஸ்த்ரீகள் உகந்து இவர்களை ஆசீர்வசநங்களைப் பண்ணினார்களென்கிறார். [வேள்வியுள் மடுத்தலும்] - அவர்கள் தங்கள் யாகபலங்களை ஸமர்ப்பித்த வளவிலே வேறே சிலர் அகில்தொடக்கமான த்ரவ்யங்களைக்கொண்டு நல்லபுகைகளை ப்ரவர்த்திப்பித்தார்கள். [விரைகமழ் நறும்புகை] - பரிமளப்ரசுரமாகையாலே ஸ்ப்ருஹணீயமான புகை. [காளங்கள் இத்யாதி] - அவர்கள் கொடுக்கிறவற்றை இவர்கள் கைக்கொள்ளுகிறவளவிலே, வேறே சிலர் காளங்களையும் வலம்புரிகளையும் கலந்து த்வநிப்பித்தார்கள். [கலந்தெங்குமிசைத்தனர்] - மாறிமாறி எங்குமொக்க த்வநித்தன. [ஆழியான்தமர் - ஆண்மின்கள்வானகம்] - ஸர்வேச்வரனுக்கு சேஷபூதரான நீங்கள் இவ்விடத்தை யாளீகோளோ ? என்றுய்த்து ஸ்தோத்ரப்ரகாரம்: அவன்தானும் தன் விபூதியை "பக்தாநாம்" என்றன்றோவிருப்பது ? "ஆளக்குறையென்" என்பர்கள். [வாளொண்கண் இத்யாதி] - ஆதிவாஹிக கர்த்தாக்களுடைய மஹிஷிகள் வாழ்த்தினார்கள். ஒளியையுடைத்தாய் ஆகர்ஷகமான கண்களையுடையவர்கள், இது ஸ்வரூபகதநம் பண்ணுகிறதன்று; இவர்களைக் கண்டத்தாலே கண்களுக்கு உண்டான ஒளியையும் அழகையும் சொல்லுகிறது. [மகிழ்ந்தே] - பர்த்தாக்கள் அநுவர்த்திக்கையாலே விஹிதமென்று செய்கிறார்களன்று; ப்ரீதியாலே செய்கிறார்கள். இங்கு பகவத்ஸம்பந்தமே ஹேதுவாக ஸீசராலே பரிபூதனுப் போந்தவன், சரீரவியோக ஸமநந்தரத்திலே தங்களுக்கு அவ்வருகில்லாதார் கொண்டாடும்படியிறே இவன்பேறு.

ஈடு.—ஆறாம்பாட்டு. ஸத்காரபூர்வகமாக தேவஸ்த்ரீகளுகந்து இவர்களை ஆசீர்வசநங்களைப்பண்ணினார்களென்கிறார்.

[வேள்வியுள்மடுத்தலும்] - அவர்கள் தங்களுடைய யாகபலங்களை ஸமர்ப்பித்தவளவிலே வேறேசிலர், அகில்தொடக்கமான த்ரவ்யங்களைக் கொண்டு நல்லபுகைகளை ப்ரவர்த்திப்பித்தார்கள். [விரைகமழ் நறும்புகை] - பரிமளப்ரசுரமாகையாலே ஸ்ப்ருஹணீயமான புகை. [காளங்கள்இத்யாதி] - அவர்கள்கொடுக்கிறவற்றை இவர்கள் கைக்கொள்ளுகிறவளவிலே, வேறேசிலர்கள், காளங்களையும் வலம்புரிகளையும் கலந்து த்வநிப்பித்தார்கள். [கலந்தெங்குமிசைத்தனர்] - மாறிமாறி எங்குமொக்க த்வநித்தன. (த்வநிக்கும்போது த்வநிப்பிப்பாரும் வேணுமிறே.) [ஆழியான்தமர் - ஆண்மின்கள்வானகம்] - "ஸர்வேச்வரனுக்கு சேஷபூதரான நீங்கள் இவ்விடத்தை யாளீகோள்" என்றுய்த்து ஸ்தோத்ரம்பண்ணுவது. அவன் தானும் தன்விபூதியை *பக்தாநாம்* என்றன்றோவிருப்பது. "ஆளுகைக்குக்குறையென்?" என்பர்கள். [வாளொண்கண் இத்யாதி]-ஆதிவாஹிக கர்த்தாக்களுடைய மஹிஷிகள் வாழ்த்தினார்கள், தேசாந்தரம் போன ப்ரஜையைத் தாய்மார் குளிரப்பார்க்குமாபோலே, ஒளியையுடைத்தாய் அழகிய கண்களாலே குளிர நோக்கினபடி. [மகிழ்ந்தே] - பர்த்தாக்கள் அநுவர்த்திக்கையாலே விஹிதமென்று செய்கிறார்களன்று, ப்ரீதியாலே செய்கிறார்கள். இங்கு பகவத்ஸம்பந்தமே ஹேதுவாக ஸீசராலே பரிபூதனுப்போந்தவன், சரீரவியோகஸமநந்தரத்தில் தங்களுக்கு அவ்வருகில்லாதார் கொண்டாடும்படியிறே இவன்பேறு!

மடந்தையர்வாழ்த்தலும் மருதரும்வசுக்களும்*
தொடர்ந்தெங்கும் தோத்திரம்சொல்லினர்* தொடுகடல்
கிடந்தவெங்கேசவன் கிளரொளிமணிமுடி*
குடந்தையெங்கோவலன் குடியடியார்க்கே. (7)

ஜ.—ஏழாம்பாட்டில், மருத்கணமும் வஸுகணமும் தங்களெல்லைகளுக்கப்பாலும் செல்லவிட்டபேல்லாம் சென்று ஸ்ரீவைஷ்ணவர்களை ஸ்தோத்ரம்பண்ணினார்கள் என்கிறார். [தொடுகடல்கிடந்த வென்று மேலுக்கு] - ஆச்ரிதார்த்தமாக நிரதிசயஸௌந்தர்யயுக்தனுய்க் கொண்டு திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளி அங்குச் செல்லமாட்டாதவர்களுக்காகத் திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளின கோபாலனுடைய க்ரமாகதமான அடியார்க்கு.

இ.—ஏழாம்பாட்டில், மருத் கணமும் வஸு கணமும் தங்களெல்லைகளுக்கு அப்பாலும் தொடர்ந்து
சென்று இவர்களை ஸ்தோத்ரம்பண்ணினார்களென்கிறார். [மடந்தையர் வாழ்த்தலும்] - அந்த தேவ
ஸ்த்ரீகள் புகழ்ந்தவளவிலே. [மருதரும் இத்யாதி] - மருத்கணங்களும் வஸுகணங்களும். [தொடர்ந்
தெங்கும்] - தங்கள் எல்லைக்கப்பால் செல்லாயிடமெல்லாம் சென்று புகழ்ந்தார்கள். ஒரு நிமேஷ
மாத்ரத்திலே ஒருலோகத்தில்நின்றும் லோகாந்தரத்தேறப் போமவர்களாகையாலே தங்களெல்லைக்கு
உள்ளுப்புகழ்ந்தவளவால் பர்யாப்தி பிறவாமையாலே தொடர்ந்து புகழ்ந்தார்கள். அவர்கள் தாங்கள்
சடக்கெனப் போகிறதுக்கடியென்னென்னில்;—தாங்கள் "காண்பதெஞ்ஞான்றுகொலோ ?" என்றிருக்கு
மவர்களாகையாலும், "நஜீவேயம் க்ஷணமபி" என்றிருக்குமவன்கருத்து அறியுமவர்களாகையாலும்.
[தொடு கடல்கிடந்த] - பரமபதத்தைக்கலவிருக்கையாக உடையவன், அத்தைவிட்டு, ப்ரஹ்மாதிகளுக்கு
முகங்கொடுக்கைக்காகத் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினபடி. [தொடு கடல்] - தோண்டப்பட்ட
கடல். ஆழ்ந்தகடல். [எங்கேசவன் இத்யாதி] - ஆச்ரிதார்த்தமாக க்ருஷ்ணனுய்வந்து அவதரித்து
ரக்ஷித்தவன், அவதாரத்துக்குப் பிற்பாடர் இழவாதபடி திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிறவன்.
[எங்கோவலன்] - க்ருஷ்ணன் தானேவந்து திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளினு னென்கிறது.
அவன்போய்ப் பண்ணின க்ருஷியின்பலமன்றோ என்று கொண்டாடாநிற்பர்கள். [கிளரொளிமணிமுடி] -
மிக்கவொளியையுடைத்தாய் ஆதிராஜ்யஸூசகமான திருவபிஷேகம். பரவ்யூஹவிபவங்களினள
வன்றிக்கே திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிற நீர்மையிலே தோற்று ஸந்தானமாக எழுதிக்
கொடுத்தவர்களன்றோ இவர்கள் என்றுய்த்து அவர்கள் ஆதரிப்பது.

ஈடு.—ஏழாம்பாட்டு. மருத்கணங்களும் வஸுகணங்களும் தங்கள்எல்லைக்கு அப்
பாலும் தொடர்ந்து சென்று இவர்களை ஸ்தோத்ரம்பண்ணினார்களென்கிறார்.

[மடந்தையர்வாழ்த்தலும்இத்யாதி] - அத்தேவஸ்த்ரீகள் புகழ்ந்தவளவிலே, மருத் கணங்
களும் வசுகணங்களும். [தொடர்ந்தெங்கும்] - தங்கள் எல்லைக்கப்பால் செல்லலாமிடமெங்கும்,
சென்று. [தோத்திரஞ்சொல்லினர்] - புகழ்ந்தார்கள். ஒரு நிமேஷமாத்ரத்திலே ஒருலோகத்
தில்நின்றும் லோகாந்தரத்தேறப் போமவர்களாகையாலே, தங்கள் எல்லைக்குள்ளில் புகழ்ந்த
வளவால் பர்யாப்தி பிறவாமையாலே தொடர்ந்துபுகழ்ந்தார்கள். அவர்கள் தாங்கள் சடக்கெனப்
போகிறஇதுக்கு அடியென்? என்னில்—தாங்கள், "கண்ணன் விண்ணூர்தொழவே சரிகின்றது
சங்கம்" என்றும் "காண்பதெஞ்ஞான்றுகொலோ?" என்றும் "மாகவைகுந்தம்காண்பதற்
கென்மனமேக மெண்ணும்" என்றும் "உடன்கூடுவதென்றுகொலோ" என்றும்இருக்கை
யாலும், "நஜீவேயம் க்ஷணமபி" என்றுஇருக்குமவன்கருத்தறியு மவர்களாகையாலும். [தொடு
கடல்கிடந்த] - பரமபதத்தைக் கலவிருக்கையாகவுடையவன், அத்தைவிட்டு, ப்ரஹ்மாதிகளுக்கு
முகங்கொடுக்கைக்காகத் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினபடி. [தொடுகடல்] - தோண்
டப்பட்ட கடல்; ஆழ்ந்த கடல். [எங்கேசவன் இத்யாதி] - ஆச்ரிதார்த்தமாக க்ருஷ்ணனுய்வந்த
வதரித்து ரக்ஷித்தவன். அவதாரத்துக்குப் பிற்பாடர் இழவாதபடி (திருக்குடந்தையிலே கண்
வளர்ந்தருளுகிறவன்.) [எங்கோவலன்] - க்ருஷ்ணன் தானே வந்து திருக்குடந்தையிலே
கண்வளர்ந்தருளுகிறுனென்கிறது. மருதரும் வசுக்களும், அவன் போய்ப் பண்ணின
க்ருஷியின் பலமன்றோவென்று கொண்டாடாநிற்பர்கள். [கிளரொளிமணிமுடி] - மிக்க
வொளியையுடைத்தாய் ஆதிராஜ்யஸூசகமான திருவபிஷேகம். வ்யூஹ விபவங்களினள
வன்றிக்கே திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிற நீர்மையிலே தோற்று ஸந்தானமாக
எழுதிக்கொடுத்தவர்களன்றோ இவர்களென்றுய்த்து அவர்கள் ஆதரிப்பது.

குடியடியாரிவர் கோவிந்தன்றனக்கென்று*
முடியுடைவானவர் முறைமுறையெதிர்கொள்ள*
கொடியணிநெடுமதிள் கோபுரம்குறுகினர்*
வடிவுடைமாதவன் வைகுந்தம்புகவே. (8)

ஆ.—எட்டாம்பாட்டில், ப்ரக்ருதிமண்டலத்துக்கு அவ்வருகாகத் திருநாட்டில் எல்லைக்குப்புறம்பாக நித்யஸூரிகள் ஸ்ரீவைஷ்ணவர்களை எதிர்கொள்ளுகிறபடியை யருளிச்செய்கிறார். [குடியடியாரென்று தொடங்கி] - கோவிந்தன்தனக்குத் தகும் ஸந்தாநப்ரயுக்தமான அடியாரென்று சேஷத்வத்துக்குச்சூடின முடியையுடைய அபர்வறுமமரர்கள் பர்யாயமாக எதிர்கொள்ள. [கொடியணி நெடுமதிள் கோபுரங்குறுகினர்] - இவர்கள் வருகிறார்களென்று கொடிகளாலே அலங்கரிக்கப்படுவதுஞ்செய்து திருநாட்டுக்கெல்லையான மதிளையுடைய திருக்கோபுரத்தைக் குறுகினார்கள். தங்கள் வரவாலுண்டான ஹர்ஷத்தாலே புதுக்கணித்த திருமேனியையுடைய ச்ரிய:பதியதான ஸ்ரீவைகுண்டத்திலே புக்கிருக்கைக்காக.

இ.—எட்டாம்பாட்டில், ப்ரக்ருதிமண்டலத்துக்கு அவ்வருகே பரமபதத்துக்குப்புறம்பாக நித்யஸூரிகள் இவர்களை எதிர்கொள்ளுகிறபடியை அருளிச்செய்கிறார். [குடியடியார் இத்யாதி] - அவனுடைய ஸௌலப்யத்திலே தோற்று ஸபரிகரமாக எழுதிக்கொடுத்தவர்களென்றுய்த்து நித்யஸூரிகளாதரிப்பது. "குடந்தை யெங்கோவலன் குடியடியார்" என்றதுகீழ்; "குடியடியார்இவர் கோவிந்தன் தனக்கு" என்றது இங்கே. 'இவர்கள் விபவங்களிலே ஆச்ரயித்தவர்கள். இவர்கள் உகந்தருளின நிலங்களிலே ஆச்ரயித்தவர்கள்' என்றுய்த்து அங்குள்ளார் ச்லாகிப்பது. [முடியுடை வானவர்] - அவனோபாதியும் மதிப்பில் குறைவற்றவர்களாய்த்து இவர்களை ஆதரிப்பார். அபிஷேகம் அவனுக்கும் நித்யஸூரிகளுக்கும் ஒத்திருக்குமாகில் வாசி என்னென்னில்,—அவன் ரக்ஷணத்துக்கு முடிசூடியிருக்கும். இவர்கள் அடிமைக்கு முடிசூடியிருப்பார்கள். [முறைமுறை யெதிர்கொள்ள.] - பர்யாயமாக எதிர்கொள்ள "யத்ர பூர்வே ஸாத்யா:" என்றும், "அடியார்கள்குழாங்களை - உடன்கூடுவ தென்றுகொலோ" என்றும் சொல்லுகிறபடியே தங்களுக்கு உத்தேச்யரானவர்களுக்கு உத்தேச்யராகிறார்களிறே இவர்கள். [கொடியணியித்யாதி - இவர்கள் வருகிறார்களென்று கொடிகளாலே அலங்க்ருதமாய், ஒக்கத்தையுடைத்தாய், பரமபதத்துக்கெல்லையான திருமதிளில் திருக்கோபுரத்தைச் சென்று கிட்டினார்கள். [வடிவுடைமாதவன் வைகுந்தம் புகவே] தங்கள் வரவாலுண்டான ஹர்ஷத்தாலே புதுக்கணித்த வடிவையுடைய ச்ரிய:பதியதான பரமபதத்தே புகுகைக்காக. வந்துகிட்டினாரென்றவாறே தனக்கும் பிராட்டிக்கும் வடிவு இட்டு மாறினாப்போலேயாமென்கை.

ஈடு.—எட்டாம்பாட்டு. ப்ரக்ருதிமண்டலத்துக்கு அவ்வருகே பரமபதத்துக்குப் புறம்பாக நித்யஸூரிகள் இவர்களை எதிர்கொள்ளுகிறபடியை யருளிச்செய்கிறார்.

[குடியடியாரித்யாதி] - அவனுடைய ஸௌலப்யத்திலேதோற்று ஸபரிகரமாக எழுதிக் கொடுத்தவர்களென்றுய்த்து, நித்யஸூரிகள் ஆதரிப்பது. "குடந்தையெங்கோவலன் குடியடியார்" என்றது—கீழே. "குடியடியார் இவர் கோவிந்தன்தனக்கு" என்றது - இங்கே. "இவர்கள் விபவங்களிலே ஆச்ரயித்தவர்கள், இவர்கள் உகந்தருளின நிலங்களிலே ஆச்ரயித்தவர்கள்" என்றுய்த்து, அவர்கள் ச்லாகிப்பது. [முடியுடைவானவர்] - அவன்தன்னோபாதியும் மதிப்பிற் குறைவற்றவர்களாய்த்து, இவர்களை யாதரிப்பார். 'அபிஷேகம் அவனுக்கும் நித்யஸூரிகளுக்கும் ஒக்குமாகில் வாசியென்?' என்னில்,—அவன் ரக்ஷகத்வத்துக்கு முடிசூடியிருக்கும்; இவர்கள் அடிமைசெய்கைக்கு முடிசூடியிருப்பர்கள். [முறைமுறை யெதிர்கொள்ள] பர்யாயமாக எதிர்கொள்ள. *யத்ர பூர்வே ஸாத்யா:* என்றும் "அடியார்கள்குழாங்களை" என்றும் சொல்லுகிறபடியே - தங்களுக்கு உத்தேச்யரானவர்களுக்கு உத்தேச்யராகிறார்களிறே இவர்கள். [கொடியித்யாதி] - இவர்கள் வருகிறார்களென்று, கொடிகளாலே யலங்க்ருதமாய் ஒக்கத்தையுடைத்தாய்ப் பரமபதத்துக்கெல்லையான திருமதிளில் திருக்கோபுரத்தைச் சென்று கிட்டினார்கள். [வடிவுடைமாதவன்] - *யுவேவ வஸுதேவோZபூத்* என்று - கம்ஸவதத்துக்குப் பின்பு பிள்ளையைக்கண்ட ஸ்ரீவஸுதேவரையும் தேவகியாரையும் போலவும், பெருமாளைக் கண்ட சக்ரவர்த்தி *புநர்யுவேவ* என்று சொல்லப்பட்டாப் போலவும். [வடிவுடைமாதவன் வைகுந்தம்புகவே] - தங்கள் வரவால் உண்டான ஹர்ஷத்தாலே புதுக்கணித்தவடிவையுடைய ச்ரிய:பதியதான பரமபதத்திலே புகுகைக்காக. வந்துகிட்டினாரென்றவாறே, தனக்கும் பிராட்டிக்கும் வடிவு இட்டு மாறினாப்போலேயாமென்கை.

வைகுந்தம்புகுதலும் வாசலில்வானவர்*
வைகுந்தன்தமரெமர் எமதிடம்புகுதென்று*
வைகுந்தத்தமரரும் முனிவரும்வியந்தனர்*
வைகுந்தம்புகுவது மண்ணவர்விதியே. (9)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், ஸ்ரீவைகுண்டத்திலே சென்று திருவாசலில் முதலிகளாலே ஸம்மதரானவாறே அங்குத்தை நித்யஸூரிகள், ஸம்ஸாரிகளானவர்கள் ஸ்ரீவைகுண்டத்திலே வருவதே! இதென்ன புண்யபலம்! என்று விஸ்மயப்பட்டார்களென்கிறார். [வைகுந்தமென்று தொடங்கி] - ஸ்ரீவைகுண்டத்திலே புகுங்காட்டில் திருவாசலில் முதலிகள் வைகுந்தனுடையார் எங்களுடைய ஸ்வாமிகள் எங்கள்பதத்தைக் கைக்கொள்ளவேணுமென்று. [அமரரும் - முனிவரும்] கைங்கர்யதாரகரான அமரரும் அநுக்கும் க்ஷமரன்றிக்கே பகவத்குணங்களிலே ஈடுபட்டிருக்கும் ஸ்வபாவரான முனிவரும்.

இ.—ஒன்பதாம்பாட்டில், பரமபதத்திலேசென்று திருவாசலில் முதலிகளாலே ஸம்மதரானவளவிலே, அங்குள்ள நித்யஸூரிகள் "பரமபதத்திலேவந்த இது என்ன பாக்யபலம் !" என்று விஸ்மயப்பட்டார்களென்கிறார். [வைகுந்தம்புகுதலும்] - பரமபதத்தைச்சென்று கிட்டினவளவிலே திருவாசல் காக்கிற முதலிகள், "ஸ்ரீவைகுண்டநாதனுடையார் எங்களுக்கு ஸ்வாமிகள், எங்கள் பதத்தைக்கொள்ளவேணும்" என்ருய்த்து, அவர்கள் பாசுரம். "பயிலுந்திருவுடையார் யவரேலும்-எம்மையாளும் பரமர்" என்ற இவரைப்போலேயாய்த்து அங்குள்ளாருமிருப்பது. திருவாசல் முதலிகள், எதிரேவந்து ஸத்கரித்துக் கையைக்கொடுத்து, கொண்டுபுக்குத் தங்கள் கைப்புடைகளிலேயிருத்திப் பிரம்பையும் கொடுப்பர்களாய்த்து. சென்று புகுகிறவர்களுக்கும் கைங்கர்யமே உத்தேச்யம்; அங்கிருக்கிறவர்களுக்கும் கைங்கர்யமே யாத்ரை; ஆகையாலே இவர்கள் கொள்வதும் அவர்கள் கொடுப்பதும் அது. 'புகுது' என்றது - புகுதுக என்றபடி [வைகுந்தத்தமரரும் முனிவரும்] - இவர்களாலே ஸத்க்ருதரானவளவிலே நித்யஸூரிகள் விஸ்மயப்படுவர்கள். [அமரரும் முனிவரும்] - கைங்கர்யதாரகரானவர்கள் அமரர். அதுக்கு க்ஷமரன்றிக்கே ஸௌந்தர்ய சீலாதிகளிலே யீடுபடும் ஸ்வபாவரானவர்கள் - முனிவர்கள். "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" என்கிறபடியே அடிமையிலொன்றும் குறையநிற்கமாட்டாதாரும் குணாநுபவத்துக்குஅவ்வருகு கால்வாங்கமாட்டாதபடியா யிருப்பாருமாய்த்திருப்பது. [வியந்தனர்] - விஸ்மயப்பட்டார்கள். [வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே] - ஸம்ஸாரத்திலே சப்தாதி விஷயங்களிலே பழகிப்போந்தவர்கள் பரமபதத்திலேவந்து புகுந்து கைங்கர்யமே யாத்ரையாவதே ! இதொரு பாக்ய பலமிருந்தபடியே! என்ருய்த்து அவர்கள் கொண்டாடுவது.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. பரமபதத்திலேசென்று திருவாசலில் முதலிகளாலே ஸத்க்ருதராய், அங்குள்ளநித்யஸூரிகள் "பரமபதத்திலேவருவதே ! இதென்ன பாக்யபலம்!" என்று விஸ்மயப்பட்டார்களென்கிறார்.

[வைகுந்தம்புகுதலும்இத்யாதி] - பரமபதத்தைச்சென்றுகிட்டினவளவிலே திருவாசல் காக்கும் முதலிகள், "ஸ்ரீவைகுண்டநாதனுடையார் எங்களுடையஸ்வாமிகள், எங்கள் பதத்தைக் கைக்கொள்ளவேணும்" என்ருய்த்து, அவர்கள் பாசுரம். "பயிலுந்திருவுடையார் யவரேலும் - எம்மையாளும்பரமர்" என்ற இவரைப்போலேயாய்த்து, அங்குள்ளாரும் இருப்பது. திருவாசலில் முதலிகள், எதிரேவந்து ஸத்கரித்து, கையைக்கொடுத்து, கொண்டுபுக்குத் தங்கள்கைப்புடைகளிலேயிருத்தி, திருக்கையிலே பிரம்பையும் கொடுப்பர்களாய்த்து. சென்று புகுகிறவர்களுக்கும் கைங்கர்யமே உத்தேச்யம், அங்கிருக்கிறவர்களுக்கும் கைங்கர்யமே யாத்ரை யாகையாலே, இவர்கள் கொள்ளுவதும்அது; அவர்கள் கொடுப்பதும்அது. 'புகுது' என்றது - புகுதுகவென்றபடி. [வைகுந்தத்தமரரும்முனிவரும்] - ஸ்ரீபரதாழ்வானையும் இளையபெருமாளையும் போலே, குணநிஷ்டரும் கைங்கர்யநிஷ்டரும். [வியந்தனர்] - விஸ்மயப்

பட்டார்கள். [வைகுந்தம்புகுவது மண்ணவர்விதியே] - கடலில் நீர் ஸஹ்யத்திலேயேறக் கோத்தாற்போலே, ஸம்ஸாரிகள் பரமபதத்திலே புகுரும்படிக்கிடாக பாக்யத்தைப் பண்ணுவதே! என்று விஸ்மயப்பட்டார்கள்.

விதிவகைபுகுந்தனரென்று நல்வேதியர்*
பதியினில்பாங்கினில் பாதங்கள்கழுவினர்*
நிதியுநற்சுண்ணமும் நிறைகுடவிளக்கமும்*
மதிமுகமடந்தையர் ஏந்தினர்வந்தே. (10)

ஒ.—பத்தாம்பாட்டில், ஸம்ஸாரத்தில் நின்றும் ஸ்ரீவைகுண்டத்திலே சென்ற ஸ்ரீவைஷ்ணவர்களை அங்குள்ள அமரர்களுமமரர்கள் கொண்டாடும்படியை அருளிச்செய்கிறார். [விதிவகையென்று தொடங்கி] - தங்கள் பாக்யத்தாலன்றிக்கே நம்முடைய பாக்யத்தாலே ஸம்ஸாரிகளானவர்கள் இங்கே வந்து புகுரப்பெற்றோமென்று வேதத்தில் உபநிஷத்பாகங்களாலே ப்ரதிபாத்யரான நித்யஸூரிகள் தங்கள் கோயில்களிலே தங்கள் தாழ்ச்சிதோன்றும்படியிருந்து அவர்களுடைய ஸ்ரீபாதங்களை விளக்கிறார்கள். [நிதியும்நற்சுண்ணமுமென்று மேலுக்கு] - ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு நிதியான திருவடிநிலைகளையும் நற்சுண்ணத்தையும் நிறைகுடங்களையும் மங்களதீபங்களையும் ஏந்தி, நெடுங்காலம் ப்ரஜைகளைப்பிரிந்து கண்ட தாய்மாரைப்போலே ஹ்ருஷ்டமாய்ப் பூர்ண சந்த்ரனைப் போலேயிருக்கிற முகங்களையுடைய பகவத்பரிசாரிகைகள் வந்து எதிர்கொண்டார்கள்.

இ.—பத்தாம்பாட்டில், நித்யஸூரிகள் இவர்களைக் கொண்டாடும்படியை அருளிச்செய்கிறார். [விதிவகை புகுந்தனரென்று] - வைகுந்தம்புகுவது மண்ணவர்விதியே என்று இவர்கள் சொல்லுகிற விது வார்த்தையன்றென்று வேறே சிலர் 'இவர்கள் இங்கேவந்து புகுரப்பெற்றஇது நாம் பண்ணின பாக்யபலமன்றோ ?' என்பர்கள். விஷயங்கள் நடையாடுகிற ஸம்ஸாரத்திலே யிருந்துவைத்து அநந்ய ப்ரயோஜநராய் பகவத் குணாநுபவம் பண்ணப்பெற்ற மஹாபுருஷர்களாய் "விண்ணுளாரிலும் சீரியர்" என்கிறவர்கள் இங்கே வந்து புகுரப் பெற்றவிது நாம் பண்ணின பாக்ய மன்றோ என்பர்கள் "வைகுந்தம் புகுவது" என்றது அங்கு; இங்கு - 'புகுந்தனர்' என்கையாலே தங்கள் பாக்யத்தைக் காட்டுகிறது. [நல்வேதியர்] உபநிஷத் பாகத்தில் ப்ரதிபாத்யரானவர்கள் "யத்ரர்ஷய:,யத்ரபூர்வே" என்று ஓதப்படுகிறவர்கள். [பதியினில்] - எதிரேபுறப்பட்டு ஆதரித்துத்தங்கள் கோயில்களிலே கொண்டுபுக்கு. [பாங்கிசனில் பாதங்கள் கழுவினர்] - தங்கள் ஆஸநங்களிலே இவர்களை வைத்துத் தங்கள் தாழ்ச்சிதோற்றத் தரையிலேயிருந்து தங்கள் மஹிஷிகள் நீர்வார்க்க இவர்கள் ஸ்ரீபாதத்தை விளக்கினார்கள். [நிதியும்நற்சுண்ணமும் இத்யாதி] - அவ்வளவிலே பகவத்பரிசாரிகைகள் வந்து எதிரேற்பர்கள். வைஷ்ணவர்களுக்கு நிதியான திருவடிநிலைகளையும் திருச்சுண்ணப்ரஸாதத்தையும் நிறைகுடங்களையும் மங்களதீபங்களையும் ஏந்தி. [மதிமுகமடந்தையர்] - தேசாந்தரம்போன ப்ரஜைவந்து கிட்டினால் தாய்முகம் குளிர்ந்திருக்குமாபோலே ஹர்ஷத்தாலே பூர்ணசந்த்ரனைப்போலேயிருக்கிற முகங்களையுடையவர்கள் வந்து எதிர்கொண்டார்கள்.

ரூ.—பத்தாம்பாட்டு. நித்யஸூரிகள் இவர்களைக் கொண்டாடும்படியை யருளிச் செய்கிறார்.

[விதிவகைபுகுந்தனரென்று]- "வைகுந்தம்புகுவது மண்ணவர்விதியே" என்று இவர்கள் சொல்லுகிறது வார்த்தையன்றென்று, வேறே சிலர் "இவர்கள் இங்கே வந்து புகுரப்பெற்றது நாம் பண்ணின பாக்யபலமன்றோ?" என்பர்கள். விஷயங்கள் நடையாடுகிற ஸம்ஸாரத்திலே யிருந்துவைத்து அநந்யப்ரயோஜநராய், பகவத்குணாநுபவம் பண்ணப்பெற்ற மஹாபுருஷர்களாய், "விண்ணுளாரிலும்சீரியர்" என்கிற இவர்கள் இங்கேவந்து புகுரப்பெற்றது, நாம் பண்ணினபாக்யபலமன்றோ என்பர்கள். "வைகுந்தம் புகுவது" என்றதுஅங்கு; இங்கு 'புகுந்தனர்' என்கையாலே - தங்கள்பாக்யத்தைக் காட்டுகிறது. [நல்வேதியர் – *யத்ரர்ஷய:ப்ர

தமஜா யேபுராண:* *யத்ர பூர்வே ஸாத்யாஸ்ஸந்தி தேவா:* *தத்விப்ராஸோ விபந்யவோ ஜாக்ருவாம்ஸஸ் ஸமிந்ததே* என்று வேதங்களாலே ப்ரதிபாத்யரானவர்கள். [பதியினில்] - அநந்த வைநதேயாதி கள் தங்கள் திருமாளிகைகளிலே கொடுபுக்கு. [பாங்குஇத்யாதி] - "இவன் ஒருஸம்ஸாரிசேதநன்: நாம் அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தர்" என்று வாசிவையாதே, இவனை ஸம்ஸாரத்திலே [புயர வைத்து, அவர்களுக்குப் பாங்காகத் தாங்களிருந்து திருவடிகளை விளக்குவர்கள். [நிதியித்யாதி] - அவ்வளவிலே பகவத்பரிசாரிகைகள் வந்து எதிரேற்பர்கள். ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு நிதியான திருவடிநிலைகளையும், திருச்சுண்ணப்ரஸாதத்தையும், நிறைகுடங்களையும், மங்களதீபங்களையு மேந்தி. [மதிமுகமடந்தையர்] - தேசாந்தரம்போன ப்ரஜை வந்தால் தாய்முகம் குளிர்ந்திருக் குமாபோலே, ஹர்ஷத்தாலே, பூர்ணசந்த்ரனைப்போலேயிருக்கிற முகங்களையுடையவர்கள் வந்தெதிர்கொண்டார்கள்.

வந்தவரெதிர்கொள்ள மாமணிமண்டபத்து*
அந்தமில்பேரின்பத்து அடியரோடிருந்தமை*
கொந்தலர்பொழில் குருகூர்ச்சடகோபன்* சொல்
சந்தங்களாயிரத்து இவைவல்லார்முனிவரே. (11)

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி வல்லார் வைகுந்தத்துமுனிவரோடொப்பர் என்கிறார். [வந்தவரெதிர்கொள்ள] - பிராட்டியோடேகூட எம்பெருமான் தானும் வந்து எதிர்கொள்ள. அயர் வறுமமரர்கள் என்றுமாம். [மாமணி மண்டபத்தென்று தொடங்கி] - திருமாமணி மண்டபத்திலே பரமப்ராப்யரான அயர்வறுமமரர்கள்நடுவே ஆநந்த நிர்ப்பரராய்க்கொண்டு இருந்தமையை. [கொந்த லர் பொழிலென்று தொடங்கி] - மிகவும் பூத்தபொழிலோடு கூடின திருநகரியையுடைய ஆழ்வாருடைய உக்தியாய் ச்சந்தோரூபமான ஆயிரந் திருவாய்மொழியிலும்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லார் பரமபதத்தில் முனிவர்களோ டொப்பர் என்கிறார். [வந்தவரெதிர்கொள்ள] - பிராட்டியோடே எம்பெருமான் தான் வந்து எதிர் கொள்ள. அப்ராக்ருதரான அயர்வறுமமரர்க ளென்றுமாம். [மாமணி மண்டபத்து] - ஆநந்தமய மான திருமாமணி மண்டபத்திலே. [அந்தமில் பேரின்பத்து] - யாவதாத்மபாவியாய் நிரதிசயமான ஆநந்தத்தை யுடையராய்க்கொண்டு. ஆநந்த நிர்ப்பரராய்க்கொண்டு. ஸம்ஸாரத்தில் து:க்கத் துக்கு எல்லையுண்டாகிலாய்த்து, அஸ்ஸுகத்துக்கு அவதிசொல்லலாவது ? [அடியரோடிருந்தமை] - "அடியார்கள் குழாங்களை உடன்கூடுவ தென்று கொலோ" என்று ஆசைப்பட்டபடியே யிருந்தமையை. அவர்களும் தங்களுக்கு "போதயந்த:பரஸ்பரம்" பண்ணுகைக்குத் துணைதேடியிறே யிருப்பது ? நித்யவஸந்தமான சோலையையுடைத்தான திருநகரியையுடைய ஆழ்வார் அருளிச் செய்த. போக்கிலே ஒருப்பட்டவாறே திருநகரி தொடங்கிச் சோலைசெய்தாப்போலேயிருக்கை. [சந்தங்களாயிரத்து] ச்சந்தஸ்ஸுக்களை யுடைத்தான ஆயிரமென்னுதல். ச்சந்தோரூபமான ஆயிர மென்னுதல். [இவைவல்லார் முனிவரே] - இப்பத்தையும் அப்யஸிக்கவல்லார் அத்தேசத்திலே பகவத்குணாநுபவம்பண்ணி அதிலே லித்தராய் அதுக்கு அவ்வருகு கால்வாங்கமாட்டாதே யிருக்குமவர்களைப் போலேயாவர்.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழி அப்யஸித்தவர்கள் நித்யஸூரிகளோடு ஒப்பர் என்கிறார்.

[வந்தவரெதிர்கொள்ள] - பிராட்டியோடேகூட எம்பெருமான் தான் வந்தெதிர்கொள்ள. அப்ராக்ருதரான அயர்வறுமமரர்கள் என்னவுமாம். [மாமணிமண்டபத்து] - ஆநந்தமயமான திருமாமணிமண்டபத்திலே. [அந்தமில்பேரின்பத்து] - அநந்தக்லேசபாஜநத்துக்கு எதிர்த் தட்டிறே; ஸம்ஸாரத்தில் ஸுகமென்று ப்ரமிக்குமித்தனை, து:க்கமேயுள்ளது. பாண்டு ஒருவன்மேலே அம்பைவிட, "ஸம்ஸாரத்தில் ஆயிரங்கூற்றில் ஒருகூறாய்த்து ஸுகமுள்ளது;

அத்தனையும் புஜிக்கவொட்டிற்றிலையே" என்றுனிறே. [அடியரோடிருந்தமை] - "அடியார்கள் குழாங்களை உடன்கூடுவதென்றுகொலோ!" என்று ஆசைப்பட்டபடியே யிருந்தமை. [கொந்தலர் இத்யாதி] - நித்யவஸந்தமான சோலையையுடைத்தான திருநகரியையுடைய ஆழ்வார் அருளிச்செய்த, போக்கிலே ஒருப்பட்டவாறே திருநகரியேதொடங்கிப்போலேகாணும் சோலை செய்வது. [சந்தங்களாயிரத்து]-ச்சந்தஸ்ஸுக்களையுடைத்தான ஆயிரமென்னுதல், ச்சந்தோ ரூபமான ஆயிரமென்னுதல். [இவைவல்லார்முனிவரே] - இப்பத்தை யப்யஸிக்கவல்லார் அத்தேசத்திலே பகவதநுபவம்பண்ணி அதிலேவித்தராய் அதுக்கு அவ்வருகு கால்வாங்க மாட்டாதே யிருக்குமவர்களைப்போலே யாவர்கள்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

பத்தாம் பத்து—பத்தாந் திருவாய்மொழி—முனியே : ப்ரவேசம்

ஒ.—பத்தாந் திருவாய்மொழியில், திருநாட்டிலேபுக்கு அந்தமில்பேரின்பத்தடியரோடிருந்த ஆழ்வார் அவ்விருப்பு ஜ்ஞாநாநுஸந்தாநமாத்ரமாய் பாஹ்யஸம்ச்லேஷயோக்யமன்றிக்கே ப்ரக்ருதி பத்தரானமையை அறிந்து, மேருசிகரத்திலேயிருந்து நிர்து:க்கனாய் மிகவும் ஸுகியாநின்றுவைத்து து:க்கபஹுளமாய் துஸ்தரமாய் மிகவும் ஒரிடத்திலும் ஸ்த்திதியில்லாதபடி பேராழமான கடலின் நடுவே தள்ளுண்டவனைப்போலே அவஸந்நராய், அதுக்குமேலே தமக்கு அவன் பண்டுகைவந்தபடியையும் தன்னைப் பெறுகைக்கு உபாயம் தானேஅல்லதின்றிக்கே யிருந்தபடியையும் அவ்வளவன்றிக்கே எல்லார்க்கும் அவனல்லது வேறுரக்ஷகரின்றிக்கே யிருக்கிறஇருப்பையும் அநுஸந்தித்து, இப்படியே யிருக்கிறவனை அக்ஷணத்திலே பெறுமையாலே, பசியாலும் தாஹத்தாலும் தளர்ந்து தாயையும் காணப்பெறாத ஸ்தநந்தயப்ரஜை ஆர்த்தியின் மிகுதியாலே கூப்பிடுமாபோலே, நிர்க்ருணராயுள்ளுடைய ஹ்ருதயங்களுங்கூட இரங்கும்படி வளவேழுலகிற்படியையுடைய தாம் தம்முடைய ஆர்த்தியின்மிகுதியாலே தம்முடையஸ்வரூபம் அநுஸந்திக்கவும் க்ஷமரன்றிக்கே கலங்கி அவனுக்கு இட்டஅடிபேரவொண்ணாதபடி பெரியபிராட்டியார்திருவாணையிட்டு, காட்டுத்தீயிலே அகப்பட்டாரைப்போலே போக்கடியற்று மஹாக்லேசத்தோடே தூதப்ரேஷணத்தால் பிறவாயிலிட்டு நீட்டத் தவிர்ந்து, நம்மை ரக்ஷித்தல்லது எம்பெருமானுக்குத் திருநாட்டிலுங்கூட இருப்பரிதாம்படி பெருமிடறுசெய்து ஆர்த்தத்வநியோடே மிகவும் கூப்பிட்டு தரிக்க மாட்டாமை சரணம்புக, பரமதயாளுவான ஸர்வேச்வரன் பெரியபிராட்டியாரோடே கூடப் பெரியதிருவடிமேலே இவர் அபேக்ஷித்தாப்போலே தாஞனபடியே பரிபூர்ணமாக வந்து தோற்றியருளி இவருடையப்ரக்ருதிஸம்பந்தத்தை யறுத்து இவருடையவிடாயும் தன்னுடையவிடாயும் தீரும்படி ஸம்ச்லேஷித்துத் தம்முடைய அபேக்ஷிதங்களெல்லாம் செய்தருளினான் என்கிறார்.

இ.—பத்தாந் திருவாய்மொழியில், பரமபதத்திலேபுக்கு "அந்தமில்பேரின்பத்தடியரோடிருந்தமை" என்று கிரதிசயாநந்தயுக்தராய் அத்திரளிலேயிருந்த இருப்பு ஜ்ஞாநாநுஸந்தாநமாத்ரமாய் பாஹ்ய ஸம்ச்லேஷத்துக்கு யோக்யமன்றிக்கேயிருக்கிறவதுக்குமேலே, "இல்லைகண்டீர் இன்பம்" என்றும், "பிறப்பாம் பொல்லாஅருவினை மாயவன்சேற்றள்ளல் பொய்ந்நிலம்" என்றும், தாம் பிறர்க்கு உபதேசிக்கிற ஸம்ஸாரத்திலே ப்ரக்ருதிபத்தராயிருக்கிறபடியைக் கண்டு, மேருசிகரத்திலே நிர்து:க்கனாய் ஸுகோத்தரனாயிருக்கிறான் ஒருவன் து:க்கபஹுளமாய் துஸ்தரமாய்ப் பேராழமாய் ஒரிடத்திலும் ஸ்த்திதியின்றிக்கேயிருக்கும்படியான பாதாளத்திலே விழுந்துநோவுபடுமாபோலே அவஸந்நராய், அதுக்கு மேலே தமக்கு அவன் பண்டு கைவந்தபடியையும் தன்னைப்பெறுகைக்கு உபாயம் தானேயல்லதின்றிக்கே யிருக்கிறபடியையும், தன்தலையிலே ஸாதநத்தை ஏறட்டுக்கொண்டு அநுஷ்டிக்குமவனுக்கும் தன் கையார்த்

திருக்கவேண்டும்படி ஸர்வரக்ஷகனுயிருக்கிற இருப்பையும் அநுஸந்தித்து அக்ஷணத்திலே பெருமையாலே 'அப்படியேயிருக்கிறவன் நம்மை இங்ஙனே நோவுபடவிட்டுவைப்பதே?' என்று மிகவும் அவஸந்நராய், மாதாபிதாக்கள்ஸந்நிதி யுண்டாயிருக்கப் பசியாலும் தாஹத்தாலும் நோவுபடுகிற ஸ்தநந்தய ப்ரஜை ஆர்த்தியின்மிகுதியாலே கூப்பிடுமாபோலே, வளவேழுலகிற்படியையுடைய தாம் தம்ஸ்வரூபத்தை அநுஸந்திக்கவும் க்ஷமரன்றிக்கே தூதர்வாயிலேயிட்டு கேட்டுகையு மன்றிக்கே அவன் தன் எதிரேநின்று பிராட்டியாணையிட்டுத் தலக்கற்றுச்சொல்லும்படியான ஆற்றாமையோடே நிர்க்ருணருடைய ஹ்ருதயங்களுங்கூட இரங்கும்படியாகவும் அவனுக்குத் தம்மை ரக்ஷித்தல்லது பரமபதத்திலுங்கூட இருப்பரிதாம்படியாகவும் காட்டுத்தீயிலே யகப்பட்டாரைப்போலே ஆர்த்தத்வநியோடே பெருமிடறுசெய்து கூப்பிட்டு "சாகாம்ருகா ராவணஸாயகார்த்தா ஐக்முச்சரண்யம் சரணம்ஸ்ம ராமம்" என்கிறபடியே தரிக்கமாட்டாமையாலே அவன்திருவடிகளிலே சரணம்புக: பரமதயாளுவாகையாலே, "இவரை யிப்படி நோவுபடவிட்டு வைத்தோமாகாதே!" என்று இவரிலுங்காட்டில் தான் நொந்து பிராட்டியோடேகூடப் பெரிய திருவடிமேலே இவர் அபேக்ஷித்தபடியே பரிபூர்ணமாகவந்து தோன்றியருளி, இவருடைய ப்ரக்ருதி ஸம்பந்தந்தையு மறுத்து, "அடியார்கள்குழாங்களை உடன் கூடுவதென்று கொலோ?" என்று இவர் ஆசைப்பட்டபடியே அத்திரளிலே புகப்பெற்று "என்னவாவறச்சூழ்ந்தாயே" என்றும் "அவாவற்று வீடுபெற்ற" என்றும், இவர்தம் வாயாலே சொல்லும்படி இவர்விடாயும்தீர்ந்து இவர்க்கும் அவ்வருகான தன்விடாயும் தீரும்படி ஸம்ச்லேஷித்தருளினனென்கிறார்.

ஈடு.—பரமபதத்திலேபுக்கு "அந்தமில்பேரின்பத் தடியரோடிருந்தமை" என்று நிரதிசயாநந்தயுக்தராய் அத்திரளிலேயிருந்தவிருப்பு ஜ்ஞாநாநுஸந்தாநமாத்ரமாய் பாஹ்யஸம்ச்லேஷத்துக்கு யோக்யமன்றிக்கேயிருக்கிற இதுக்குமேலே, "இல்லைகண்டீரின்பம்" என்றும் "பிறப்பாம்பொல்லா அருவினை மாயவன்சேற்றள்ளல் பொய்ந்நிலம்" என்றும் தாம் பிறர்க்கு உபதேசிக்கிற ஸம்ஸாரத்திலே ப்ரக்ருதிபத்தராயிருக்கிறபடியைக் கண்டு, மேருசிகரத்திலே நிர்த்து:க்கனாய் ஸுகோத்தரனாயிருக்கிறவொருவன், து:க்கபஹுளமாய் அஸ்தாமாய்ப் பேராழமாய் ஓரிடத்திலும் ஸ்திதியின்றிக்கே யிருக்கும்படியான பாதாளத்திலேவிழுந்து நோவுபடுமாபோலே அவஸந்நராய், அதுக்குமேலே, தமக்கு அவன் பண்டு கைவந்தபடியையும் தன்னைப் பெறுகைக்கு உபாயம் தானேயல்லதின்றிக்கே யிருக்கிறபடியையும், தன் தலையிலே ஒரு ஸாதநத்தை ஏறட்டுக்கொண்டு அநுஷ்டிக்குமவனுக்கும் தன்னை பார்த்திருக்கவேண்டும்படி ஸர்வரக்ஷகனுயிருக்கிற இருப்பையும் அநுஸந்தித்து, அக்ஷணத்திலே பெருமையாலே "இப்படியிருக்கிறவன் நம்மை இங்ஙனே நோவுபடவிட்டுவைப்பதே!" என்று மிகவும் அவஸந்நராய், மாதாபிதாக்கள்ஸந்நிதி யுண்டாயிருக்கப் பசியாலும் தாஹத்தாலும் நோவுபடுகிற ஸ்தநந்தயப்ரஜை ஆர்த்தியின் மிகுதியாலே தாய்பேரைச் சொல்லிக் கூப்பிடுமாபோலே, வளவேழுலகிற்படியையுடைய தாம், தம் ஸ்வரூபத்தை யநுஸந்திக்க க்ஷமரன்றிக்கே தூதர் வாயிலிட்டு கேட்டுகையுமன்றிக்கே, அவன்தன் எதிரேநின்று பிராட்டியாணையிட்டுத் தலக்கற்றுச் சொல்லும்படியான ஆற்றாமையோடே நிர்க்ருணருடைய ஹ்ருதயங்களுங்கூட இரங்கும்படியாகவும், அவனுக்குத் தம்மை ரக்ஷித்தல்லது பரமபதத்திலும்இருப்பரிதாம்படியாகவும், காட்டுத்தீயிலே யகப்பட்டாரைப்போலே ஆர்த்தத்வநியோடே பெருமிடறுசெய்து கூப்பிட்டு "சாகாம்ருகா ராவணஸாயகார்த்தா ஜக்முச்சரண்யம் சரணம்ஸ்ம ராமம்" என்கிறபடியே தரிக்கமாட்டாமையாலே அவன்திருவடிகளிலே சரணம்புக; பரமதயாளுவாகையாலே "இவரை யிப்படியே நோவுபடவிட்டுவைத்தோமாகாதே!" என்று இவரிலுங்காட்டில் தான் நொந்து; பிராட்டியோடே கூடப் பெரியதிருவடிமேலே இவர் அபேக்ஷித்தபடியே பூர்ணமாக வந்து தோற்றி, இவருடைய ப்ரக்ருதிஸம்பந்தத்தையும் அறுத்து, "அடியார்கள் குழாங்களை - உடன் கூடுவதென்றுகொலோ" என்று இவர் ஆசைப்பட்டபடியே அத்திரளிலே புகப்பெற்று, "என்னவாவறச் சூழ்ந்தாயே" என்றும் "அவாவற்று வீடுபெற்ற" என்றும் இவர்தாமே சொல்லும்படி இவர்விடாயும்தீர்ந்து இவருக்கும் அவ்வருகான தன்விடாயும்தீரும்படி ஸம்ச்லேஷித்தருளினனென்கிறார். இப்ப்ரபந்தத்துக்கு ப்ரமேயமானவஸ்து - ஸர்வேச்வரன்;

இப்ப்ரபந்தம் - அவாவிலந்தாதி; மயர்வறமதிநலமருளப்பெற்றவர் - கவிபாடினர். இனி இவருடைய அவதாரந்தான் ஸர்வேச்வரனுடைய அவதாரத்தோபாதி ஸாதுக்களுடைய ஸுக்ருதபலம்.

முனியேநான்முகனே முக்கண்ணப்பா* என்பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கண்கருமாணிக்கமேயென்கள்வா*
தனியேனாருயிரே யென்தலைமிசையாய்வந்திட்டு*
இனிநான்போகலொட்டேன் ஒன்றும்மாயம்செய்யேலென்னையே. (1)

ஒ.—முதற்பாட்டில், நிர்ஹேதுகமாக உன்னுடைய ஸௌந்தர்யாதிகளைக்காட்டி எனக்குத் தன்னையொழியச் செல்லாதபடிபண்ணி என்னை துஸ்ஸஹமான ஸம்ஸாரத்திலே வைத்து நீ போய்ப் பண்டு போலே ஒரு குணாவிஷ்காரத்தைப் பண்ணிவிடவொண்ணாதென்கிறார். [முனியே] - "பஹுஸ்யாம்" என்று தொடங்கிச் சொல்லப்படுகிற மஹதஹங்காராதி பஞ்சபூதபர்யந்தமான ஜகத்ஸ்ருஷ்டியைப் பண்ணுவதாயுள்ள திவ்யஸங்கல்பத்தையுடையனாய் பகவச்சப்தவாச்யனாய் பரப்ரஹ்ம பரமாத்ம சப்தங்களாலே வேதாந்தங்களிற் சொல்லப்பட்ட ஸ்வரூபேணாவஸ்த்திதனாயிருந்துள்ள பரமபுருஷனே! என்றவாறு. [நான்முகனே] - சதுர்முகஸ்வரூபனாய் அவனுக்கு அந்தராத்மாவாய்க் கொண்டு திசைமுகன்கருவுள் வீற்றிருந்து சேதநரான புருஷர்கள் அசேதநமான ஸ்வசரீரத்தைக் கொண்டு தம் நினைவுக்குத் தக்கபடி கமநாகமநாதி சேஷ்டைகளைப் பண்ணுமாபோலே ஸ்வசரீர பூதனான சதுர்முகனைக் கொண்டு ஸ்வஸங்கல்பாநுகுணமான தேவதிர்யங்மநுஷ்ய ஸ்த்தாவரரூபமான சதுர்வித பூதஸ்ருஷ்டியையும் பண்ணியருளுதலால் சேதநரானவர்கள் தேவர்களென்றும் மனுஷ்யர் என்றும் ப்ராஹ்மணரென்றும் க்ஷத்ரியரென்றும் கோவென்றும் ஸ்வசரீரங்களைக் காட்டுகிறசப்தங்களாலே அவற்றில் வேறாயிருந்த தாங்களும் சொல்லப்பட்டாப்போலே ஸ்வசரீரபூதனான சதுர்முகனைக் காட்டக்கடவ சதுர்முக சப்தத்தாலே அவனில்வேறாய் அவனுக்கு அந்தராத்மாவாயிருந்த எம்பெருமானும் சொல்லப்படுகையாலே 'நான்முகனே' என்னும் சொல்லாலே எம்பெருமானை ஸம்போதிக்கிறது. [முக்கண்ணப்பா]-இப்படி ஜகத்ஸம்ஹாரம் பண்ணுகிற எம்பெருமானுக்குச் சரீரபூதனான த்ரிநேத்ரனுடைய பேரான சப்தத்தினாலே அவனுக்கு அந்தராத்மாவான எம்பெருமானை ஸம்போதிக்கிறது. [என்பொல்லாக் கனிவாய்த்தாமரைக்கண் கருமாணிக்கமே] - ஸ்ருஷ்டி ஸம்ஹார கர்த்தாக்களாய் ஆதிதேவர்களாயுள்ள ப்ரஹ்மருத்ரர்களுக்கு நடுவே தான் அடியவர்க்கெளியனாதலால் தான் அவர்களோடொத்த நாத்தனாய், இக்ஷ்வாகு வம்சரோடும் யதுவம்சரோடுமொத்த தாத்தனாய்க்கொண்டு திருவவதாரம் பண்ணினாப்போலே ஆச்ரிதஸுலபத்வார்த்தமாகஆதிதேவனாய் விஷ்ணுநாமாவாய் ஸ்வஸ்வரூபத்தினாலே திருவவதாரம் பண்ணினபடியாலே ஸம்போதிக்கிறது. த்ருஷ்டிதோஷ சாந்த்யர்த்தமாகவாதல் அவனுடைய அழகில் விஜாதீயதையாலேயாதல்'பொல்லா' என்கிறது. [என்கள்வா] - நான் அறியாமே இவ்வழகைக்காட்டி என்னைவஞ்சித்து என்னை அடிமை கொண்ட பிரானே! [தனியேனாருயிரே] - தன்னைக் காணப்பெறாத வ்யஸநத்தில் ஒரு துணையின்றியேயிருந்த எனக்கு ப்ராணஹேதுவாயிருந்துள்ள ப்ராணனாயுள்ளாயே! [என் தலைமிசையாய் என்று மேலுக்கு] - இப்படி ஸ்வரூபத்தினாலும் ஸமஸ்தஜகத்தினுடைய ஸ்ருஷ்ட்யாதி சேஷ்டைகளும் உன்னாலன்றி யொருத்தரும் தம்மால் செயலில்லை; என்பக்கலிலும் ஸ்வீகாரப்ரப்ருதி இவ்வளவும்வர உன்னாலல்லது என்னால் செய்யப்பட்டதொன்றுமில்லை. மேலுமென்னுற் செயலில்லை. இப்படி ஸமஸ்தவ்யாபாரமும் செய்கிற உனக்கு இனிமேல் பரிஹரிக்கை ஒருபரமன்று: ஆதலால் இப்படி என்தலைமிசையாய் வந்திட்டு. இனிநான் போகலொட்டேன், ஒன்றும்மாயம் செய்யேலென்னையே. இப்பாட்டில் பதயோஜநை ஆழ்வான்படி. 'என்தலைமிசையாய் வந்திட்டு' என்கிறது - எனக்குப் பூர்ணமாகவந்து தோற்றி. நிர்ஹேதுகமாக வந்துவைத்து என்றுமாம். [இனிநான் போகலொட்டேன்] - உன்னைக்காட்டின மாத்ரமன்றிக்கே, முக்தப்ராப்ய தேசத்தையுங் காட்டிலும் இனி விச்லேஷிக்கவொட்டேன். [ஒன்றும்மாயம் செய்யேலென்னையே] - பண்டுபோலே குணாவிஷ்காரங்களைப் பண்ணிப் பெற்றேனாகப்பண்ணி என்னை வஞ்சியாதொழியவேணும்.

இ.—முகற்பாட்டில், உன் ஸௌந்தர்யாதிகளைக் காட்டி உன்னைபொழியச் சொல்லாதபடி பண்ணி வைத்து, என்னை யினி துஸ்ஸஹமான ஸம்ஸாரத்திலே வைத்துப் பெற்றேனாகப் பண்டுபோலே ஒரு குணாவிஷ்காரத்தைப் பண்ணிவிடவொண்ணா தென்கிறார். [முனியே] - ''மஹாஸ்பாம்'' என்று மஹதாதி விசேஷாந்தமான ஜகத் ஸ்ருஷ்டியைப் பண்ணுவதான மானஸமான ஸங்கல்பத்தை யுடையவனா யிருந்துள்ள ஸர்வாதிகனே! காரண களேபர விதுரமாய் அசித்கல்பமாய் சோச்யதசாபந்நமாய் ''ஸதேவ'' என்று தன்னைச்சொல்லும்சொல்லாலே சொல்லும்படி ஸூக்ஷ்மாவஸ்தையை பஜித்துக்கிடக்கிறவன்று - ''ஸ ஏகாகீ நரமேத'' என்கிறபடியே இவற்றினுடைய நோவை அநுஸந்தித்திருக்கிற இருப்பைச் சொல்லுகிறதென்றுமாம். எனக்கு ருசியைப் பிறப்பிக்கைக்காக நாமரூபங்களை உன்பேறாகத்தந்து பண்ணின க்ருஷிபலித்து உன்னையல்லது செல்லாமையை உண்டாக்கிக்கொண்டு நீ கைவிடப்பார்த்தாயோ ? என்கை. [நான்முகனே] - அண்டஸ்ருஷ்டியளவும் தானேபண்ணி இவ்வருகுண்டான தேவாதி ஸ்ருஷ்டிகளைப் பண்ணுகைக்காக ப்ரஹ்மாவுக்கு அந்தர்யாமியாய்நின்று ஸ்ருஷ்டித்தவனே ! 'நான்முகனே' என்கிற இது விசேஷணமான சதுர்முகனளவிலே பர்யவஸிக்கிறதன்று: அவனுக்கு அந்தர்யாமியான அவனளவும் செல்லுகிறது, மனுஷ்ய சப்தம் தச்சரீரியளவும் செல்லுகிறாப்போலே. சேதனன் ஸ்வசரீரத்தைக்கொண்டு தன்நினைவாலே கமநாகமநாதி சேஷ்டிதங்களைப் பண்ணுமாபோலே ஸ்வசரீரபூதனான சதுர்முகனைக் கொண்டு ஸ்வஸங்கல்பத்தாலே தேவாதி சதுர்வித ஸ்ருஷ்டியைப் பண்ணுகிறான் ஸர்வேச்வரனே. ''ஸ்ருஷ்டிம் தத: கரிஷ்யாமி த்வாமாவிச்ய,'' ''தாதார்சித பங்க்தாமௌ'' ''திசைமுகன்கருவுள் வீற்றிருந்து''. [முக்கண்ணப்பா] - இப்படி ருத்ரசரீரியாய்க்கொண்டு ஜகதுபஸம்ஹாரம் பண்ணுமவனே! அதிப்ரவ்ருத்தனான ப்ரஜையை விலங்கிட்டுவைப்பாரைப்போலே ஸ்ருஷ்டியோபாதி ஸம்ஹாரமும் உபகாரமாகையாலே ''அப்பா'' என்கிறார். ''ஸம்ஸார ச்ரம கிந்நாநாம்'' இத்யாதி, ''ஸ்ருஷ்டிஸ்த்தித்யந்தகரணீம்'' இத்யாதி. [என்பொல்லா இத்யாதி] - இக்ஷ்வாகு வம்சயரோடும் யதுவம்சயரோடும் ஸஜாதீயனாய்க்கொண்டு அவதரித்தாப்போலே ப்ரஹ்மருத்ரர்கள் நடுவே விஷ்ணுநாமாவாய் வந்தவதரித்து ரக்ஷணத்தைப் பண்ணுகையாலே ஸம்போதிக்கிறது. அவ்வடிவிலே துவக்குண்டவராகையாலே 'என' என்கிறார். [பொல்லா] - அழகிதென்னில் காட்டாரழகோபாதியாமென்று விஜாதீயமென்றுதோற்றுகைக்காக வென்னுதல், த்ருஷ்டிதோஷ சாந்த்யர்த்தமாக என்னுதல். [கனிவாய்த்தாமரைக்கண் கருமாணிக்கமே] - இதுவுமொரு வ்யாவ்ருத்தியிருக்கிறபடி. முறுவலும் கண்ணுமாயிருப்பதொரு மாணிக்கமலைபோலேயாய்த்து வடிவிருப்பது. முறுவலைத் தப்பினாரையும் அகப்படுத்தவற்றான கண். [என்கள்வா] - நான் அறியாமே இவ்வழகைக்காட்டி, வஞ்சித்து என்னையடிமை கொண்டவனே ! உன்னதான ஆத்மவஸ்துவை அபஹரித்துக்கொண்டிருக்கிற என்னை விஷயீகரிப்பதே ! நான் அபஹரிக்கைக்கு அடி-கர்மம்! நீ அபஹரிக்கைக்கு அடி - வடிவழகு. உடையவனுடைமை பெற்றாலும் அபஹாரமென்னும்படியாய்த்து ஸ்வாதந்த்ர்யம் வயிரம்பற்றினபடி. ''நிர்ஹேதுகமாக உன்வடிவழகைக் காட்டி என்னை விஷயீகரித்தவனே !'' என்று ஆழ்வான்நிர்வாஹம். [தனியேன்] - ஸம்ஸாரிகளோடு பொருந்தாதே உத்தேச்யமான திரளில் புகப்பெறாமையாலே 'தனியேன்' என்கிறார். [ஆருயிரே] - எனக்கு குணங்களை ஆவிஷ்கரித்து குணாநுபவமேயாத்ரையாம்படிபண்ணி எனக்கு ப்ராணஹேதுவானவனே ! [என்தலைமிசையாய் வந்திட்டு] - என்தலையிலே திருவடிகளிருக்கும்படி நீட்டிவைத்து. நிர்ஹேதுகமாகப் பெரியதிருவடியின் முதுகிலேவந்து என்தலையிலே திருவடிகளை வைத்து. ''செழும்பறவைதானேறித்திரிவான தாளிணை யென்தலைமேலே'' என்றாரிறே. ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணுகிறவிடத்தில் உனக்கு ஜகத்தால்செய்யப்பட்டதொன் றில்லாதாப்போலே என்னை இவ்வளவு புகுரநிறுத்தின உனக்கு என்னால் செய்யப்பட்டதொன்றில்லை: இனிமேலுள்ளதும் உனக்கே பரமென்கை. [இனி] - ஸம்ஸாரத்தின தன்மையை அறிந்தவளவன்றிக்கே முக்தப்ராப்யதேசத்தையும் ஸாக்ஷாத்கரிப்பித்து உன்வைலக்ஷண்யத்தையும் அறிவித்தபின்பு. [நான்போகலொட்டேன்] - 'நானேயறிவேன்' என்று கைபறியாலே பறித்த அறிவன்றிக்கே நீயேகாட்டக் காணப்பெற்ற நான் விச்லேஷிக்கவொட்டேன். இவர்க்குப்போகவொட்டேன் என்று சொல்லலாகிறது-ஸர்வஜ்ஞன் அறியத் தமக்குஉண்டான த்வரையாலேயும், அபேக்ஷித்தவளவிலே கார்யஞ்செய்யப்பெறாத பிற்பாட்டுக்கு ''ஹ்ரீரேஷா ஹி மமாதுலா'' என்று லஜ்ஜிக்குமவனாகையாலுமிறே. [ஒன்றும் மாயஞ்செய்யேல்] - உன்னை அறிவதற்குமுன்பு த்யாஜ்யமான விஷயங்களைக்காட்டி அதுவேயமையு மெனைப்பண்ணினாய்: உன்னையறிந்தபின்பு குணங்களை ஆவிஷ்கரித்து அதுவே அமையுமெனப் பண்ணினாய். இனி, ஒருகுணாவிஷ்காரத்தாலே பெற்றேனாகப்பண்ணி என்னை வஞ்சியாதே

சோள். [என்னையே] - அங்ஙன்செய்யவேண்டுகிற தென்? என்ன,—'ஏஹி பச்ய சரீராணி'' என்கிறபடியே விரலூன்றின்று சேஷித்த உடம்பைக் காட்டுகிறார்.

௬௫.—மூதற்பாட்டு. நிர்ஹேதுகமாக உன்னுடைய ஸௌந்தர்யாதிகளைக் காட்டி எனக்கு உன்னையொழியச் செல்லாதபடிபண்ணி என்னை துஸ்ஸஹமான ஸம்ஸாரத்திலே வைத்து, நீ போய்ப் பண்டுபோலே ஒருகுணாவிஷ்காரத்தைப் பண்ணிவிட வொண்ணு தென்கிறார்.

[முனியே] - *ஸர்வம்க்கல்விதம் ப்ரஹ்ம தஜ்ஜலாநிதி* என்றும் *ஸ்ருஷ்டௌ ஸ்ருஜதிசாத்மாநம் விஷ்ணு: பால்யஞ்சபாதிச - உபஸம்ஹ்ரியதேசாந்தேஸம்ஹர்த்தாச ஸ்வயம்ப்ரபு:* என்றும் *ஸைவ ஸ்ருஜ்யஸ் ஸச ஸர்க்ககர்த்தா ஸைவ பாத்த்யத்திசபால்யதேச,ப்ரஹ்மாத்யவஸ்த்தாபிரசேஷமூர்த்திர்விஷ்ணுர் வரிஷ்டோ வரதோ வரேண்ய:* என்றும் *மமைவாம்சோ ஜீவலோகே* *அம்சோ நாநாவ்யபதேசாத்* என்றும் சொல்லுகிறபடியே சிதசித்விசிஷ்டனை தனக்கே ஸ்ருஷ்டிஸம்ஹாரங்களாகை யாலே,*ப்ருதி வ்யப்ஸு ப்ரலீயதே, ஆபஸ் தேஜஸிலீயந்தே, தேஜோ வாயௌலீயதே, வாயு ராகாசேலீயதே ஆகாச மிந்த்ரியேஷு இந்த்ரியாணி தந்மாத்ரேஷு தந்மா த்ராணி பூதாதௌலீயந்தே,பூதாதிர் மஹதிலீயதே, மஹா நவ்யக்தேலீயதே, அவ்யக்த மக்ஷரேலீயதே, அக்ஷரம் தமஸிலீயதே. தம: பரேதேவஏகீபவதி* என்று கொண்டு - தன்னோடு அவிபக்தமான இத்தை *பஹுஸ்யாம்* என்று ஸங்கல்பித்து விபக்த மாக்கித் தமச்சப்தவாச்யமாக்கி, அத்தை அக்ஷரமாக்கி, அக்ஷரத்தில்நின்றும் அவ்யக்தத்தை யுண்டாக்கி, அவ்யக்தத்தில்நின்றும் மஹானையுண்டாக்கி, மஹானில்நின்றும் அஹங்காரத்தை யுண்டாக்கி. அஹங்காரத்தில்நின்றும் பூததந்மாத்ரங்களை யுண்டாக்கி, அவற்றை பூதங்களாக மூற்றுவித்து அண்டஸ்ருஷ்டிபர்யந்தமான ஜகத்ஸ்ருஷ்டியைப் பண்ணுவதாயுள்ள திவ்யஸங் கல்பத்தையுடையனாய். பகவச்சப்தவாச்யனாய், பரப்ரஹ்ம பரமாத்மாதிசப்தங்களாலே வேதாந்தங்களிற்சொல்லப்பட்ட, ஸ்வரூபேணாவஸ்த்திதனாயிருந்த பரமபுருஷனென்றவாறு. [மூனியே] - *ஸதேகாகீ ந ரமேத* என்கிறபடியே-ஸகலபதார்த்தங்களும் தந்தாமுடைய நாமரூபங் களையிழந்து ப்ரஹ்மத்தினுடைய நாமமும் ரூபமுமேயாய் அசித்கல்பமாய்க்கிடந்தாப்போலே, ஸர்வேச்வரனைதானும், இவற்றைப்பிரிந்து அசித்கல்பனானபடியைச் சொல்லுகிறது. [முனியே] - *ததோ ராவணநீதாயாஸ்ஸீதாயாச் சத்ருகர்சந:-இயேஷ பதமந்வேஷ்டும் சாரணாசரிதேபதி*- என்று கடல்கொண்டவஸ்துவை நாடுகைக்குத் திருவடி இச்சித்தாப்போலேயன்றோ, உரு மாய்ந்த ப்ரஜைகளையுண்டாக்க நீ மநஸ்பண்ணிற்று? (*பஹுஸ்யாம்* என்றுமஹதாதி விசே ஷாந்தமான ஜகத்ஸ்ருஷ்டியைப்பண்ணுவதான மாநஸமான ஸங்கல்பத்தையுடையையாயிருக் துள்ள ஸர்வாதிகனே!) நான் இல்லாதவன்று நிர்ஹேதுகமாக என்னையுண்டாக்கின நீ, நான் உண்டாய் நோவுபடுகிற இன்று எனக்கு உதவவேண்டாவோ? [மூனியே] - ''அப்பே!'' என்பாரைப்போலே. அதாகிறது - கரணகளேபர விதுரமாய் இவை கிடந்தவன்று உண்டாக் கினாய்: ஆசைப்பட்ட எனக்கு இன்று உதவலாகாதோ? நீ நினைக்கு மன்றோ உதவலாவது? நான் நினைக்குமன்று உதவலாகாதோ? *சாகாம்ருகா ராணவஸாயகார்த்தா ஜக்முச்சரண்யம் சரணம்ஸ்ம ராமம்* என்றும் *ராக்ஷஸைஸர்வத்யமாநாநாம் வாநராணும் மஹாசமூ:, சரண்யம்சரணம்யாதா ராமம்தசர தாத்மஜம்* என்றும் சொல்லுகிறபடியே - உன்னையொழிய ஒருபுகலில்லாதார்க்கு உதவுமவ னன்றோ என்கிறார். [நான்முகனே] - *யோ ப்ரஹ்மாணம் விததாதிபூர்வம்* என்று ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்து, ஜீவத்வாரா அநுப்ரவேசித்து, சேதநரானபுருஷர்கள் அசேதநமான ஸ்வம்ஸ்வம் சரீரங்களைக்கொண்டு தந்தாம் நினைவுக்குத்தக்கபடி கமநாகமநாதிசேஷ்டிதங்களைப்பண்ணுமா போலே, ஸ்வசரீரபூதனான சதுர்முகனுக்கு அந்தர்யாமியாய், அவனைக் கொண்டு மற்றும் ஸங்கல்பாநுகுணமாக தேவதிர்யங்மநுஷ்யஸ்த்தாவரரூபமான ஜகத்ஸ்ருஷ்டியைப் பண்ணின படியைச் சொல்லுகிறது. இத்தால் - இவன் நினைத்தவன்று ஏதேனுங்கொண்டு கார்யங் கொள்ளலாமாகாதே என்கை. இருந்து படைக்கும் ஆஸநத்தோபாதிப்ரஹ்மா; அசேதநமான மஹதாதிகளைக் கொண்டு ஸ்ருஷ்டித்தத்தோடு சேதநனான ப்ரஹ்மாவைக் கொண்டு ஸ்ருஷ்டித்ததோடு வாசியில்லையிவனுக்கு: சேதநரென்றும் அசேதநங்களென்றும் தன்னில் தான் வாசியுண்டேயாகிலும், அவனைக் குறித்துப் பரதந்த்ரமாயிடத்தில் இரண்டு

பொக்கும். தேவ திர்யங் மநுஷ்யரென்றும் ப்ராஹ்மண க்ஷத்ரிய வைச்யரென்றும் ஸ்வசரீரங்களைக் காட்டும் சப்தங்களாலே அவற்றில் வேறாயிருந்துள்ள தாங்களும் சொல்லப்பட்டாப் போலே, இங்கும், *யஸ்யாத்மா சரீரம் - யஸ்யப்ருதிவீ சரீரம் என்றும் *ஜகத்ஸர்வம் சரீரந்தே* *தாநிஸர்வாணி தத்வபு:* *தத்ஸர்வம்வை ஹரேஸ்தநு:* என்றும் சொல்லுகிறபடியே-சரீரவாசி சப்தம் சரீரிபர்யந்தம் ஸ்வார்த்தாபிதாநம் பண்ணக்கடவதான ந்யாயத்தாலே, ஸ்வசரீரபூதனான சதுர்முகனைக் காட்டக்கடவ சதுர்முகசப்தத்தாலே - அவனில் வேறாய் அவனுக்கு ஆத்மாவாயிருந்த எம்பெருமான் சொல்லப்படுகையாலே, "நான்முகனே"* என்னும் சொல்லாலே எம்பெருமானை ஸம்போதிக்கிறது. [முக்கண்ணப்பா] - *யஸ்ய ப்ரஹ்மச க்ஷத்ரஞ்ச உபே பவத ஓதந:-*ம்ருத்யுர் யஸ்யோபஸேசநம்* என்றும் சொல்லுகிறபடியே ஸம்ஹாரங்களோடே கூட ஸம்ஹாரகர்ப்பணர்களைக் ஸம்ஹரிக்கிற ஸர்வேச்வரனுக்கு சரீரபூதனான த்ரிநேத்ரனுடையபேரான சப்தத்தாலே - அவனில் வேறாய் அவனுக்கு அந்தராத்மாவான எம்பெருமானை ஸம்போதிக்கிறது. [அப்பா] - உபகாரம்: ஸ்ருஷ்டியிலும் உபகாரமிறே ஸம்ஹாரம். நாலுநாள் கழித்து ஸ்ருஷ்டிக்கிலும் ஸத்தை கிடக்கும். சடக்கென ஸம்ஹரியாவிடில் ஸத்தையிழக்கவேண்டும்படி தீம்பிலே பாய்ந்து கைவளர்வது. எங்ஙனே? என்னில்,—தந்தாம் கையைக் கொண்டு கண்ணைக் கலக்கிக் கொள்வாரைப் போலே, ஸ்ருஷ்டித்த ஸ்ருஷ்டி பேற்றுக்கு உடலன்றியே தீம்புக்கு உடலானவாறே, சிறுப்ரஜைகளைக் கையிலும் காலிலும் விலங்கிட்டு ரக்ஷிக்கும் மாதாபிதாக்களைப்போலே, கரணகளேபரவிதுரமாக்கி ஸம்ஹரித்திட்டுவைக்கையும் உபகாரமாயிருக்கிறபடி: *ததா - ஸம்ஹாரக: என்கிறபடியே. *ஏகோஹவை நாராயண ஆஸீந்நப்ரஹ்மா - நேசாந: - நேமே த்யாவாப்ருதிவீ ந நக்ஷத்ராணி - நாபோ நாக்நிர் நஸோமோ நஸூர்ய: ॥ ஸ ஏகாகீ ந ரமேத-தஸ்ய த்யாநாந்தஸ்த்தஸ்யைகா கந்யாதசேந்த்ரியாணி* இத்யாரப்ய *அதபுநரேவ நாராயணஸ் ஸோந்யம் காமம் மநஸாத்யாயீத - தஸ்யத்யாநாந்தஸ்த்தஸ்யலலாடாத் ஸ்வேதோபதத் - தா இமா ஆப: - தத்ஹிரண்மய மண்டமபவத்-தத்ர ப்ரஹ்மாசதுர்முகோஜாயத ॥ அதபுநரேவ நாராயணஸ்ஸோந்யம் காமம்மநஸாத்யாயீத-தஸ்யத்யாநாந்தஸ்த்தஸ்ய லலாடாத் ஸ்வேதோபதத் - ஸ்வேதாத் புத்புதமபவத் - புத்புதாத் த்ர்யக்ஷ: சூலபாணி: புருஷோஜாயத* என்று சொல்லுகிற மஹோபநிஷத்வாக்யத்தை ப்ரதிபத்தி பண்ணுவிக்கிறது 'முனியே நான்முகனே முக்கண்ணப்பா' என்று. *ஸ்ருஷ்டிஸ்திதி யந்தகரணீம்* இத்யாதி. [என்பொல்லாக்கனிவாய்த்தாமரைக்கண் கருமாணிக்கமே] - ஸ்ருஷ்டிக்கும் ஸம்ஹாரத்துக்கும் நடுவு, பருந்து இருஞ்சிறைப்போலே இழந்துகொண்டு போகாகின்றேர ரக்ஷகரில்லாவிட்டால்; அதுக்காக, ஸ்ருஷ்டிஸம்ஹாரகர்த்தாக்களாய் ஆதிதேவர்களாயுள்ள ப்ரஹ்மருத்ரர்கள்நடுவே தான் இக்ஷ்வாகுவம்சயரோடும் யதுவம்சயரோடும் ஒத்ததாத்தனாய்க் கொண்டு திருவவதாரம் பண்ணினாப்போலே, ஆதிதேவனாய் விஷ்ணுநாமாவாய் ஸ்வஸ்வரூபத்தினாலே திருவவதாரப்பண்ணி ரக்ஷிக்கும்படியைச் சொல்லி ஸம்போதிக்கிறது. கண்ணாற்றச் செய்யவேண்டுவதொன்றாகையாலே ஸ்ருஷ்டிஸம்ஹாரங்களுக்கு ஆளிடும், ரக்ஷணமாகிறது தானே நண்ணளிபண்ணிச் செய்யவேண்டுவதொன்றாகையாலே வேறொளிடவொண்ணாது; ஆளிட்டாலும் வேறு சிலரால் ரக்ஷிக்கவொண்ணாது: *நஹிபாலநஸாமர்த்யம் ருதேஸர்வேச்வரம் ஹரிம்* என்றும் *ந ஸம்பதாம்ஸமாஹாரே விபதாம்விநிவர்த்தநே - ஸமர்த்தோத்ருச்யதே கச்சித் தம்விநா புருஷோத்தமம்* என்றும் சொல்லுகிறபடியே. [என் பொல்லா இத்யாதி] - "நான்முகனே, முக்கண்ணப்பா" என்கிற விடத்தில் கண்ணைச் செம்பளித்துக் கொண்டுபோய்விசேஷ்யத்திலே இளைப்பாறினார்; இங்கு, விசேஷணமே உத்தேச்யமானபடியைச் சொல்லுகிறது, 'என் பொல்லாக் கனிவாய்த்தாமரைக்கண் கருமாணிக்கமே' என்று. ஆழ்வார்கள்தாங்கள் திருமேனிக்கப்பால் போகவறியார்களிறே; இத்தை சுபாச்ரயமாகச் சொல்லாநிற்கச் செய்தே, இத்தைவிட்டு திவ்யாத்மஸ்வரூபத்தளவும் போவென்கிறது-இத்தை விடச்சொல்லுகிறதன்று, திவ்யாத்மஸ்வரூபத்தளவும் போவாரென்கையிலே தாத்பர்யம்; 'பொல்லா' - என்கிற இத்தை, 'கருமாணிக்கம்' என்றத்தோடே சேர்ப்பது. "பொல்லா - கருமாணிக்கம்" என்று கண்ணெச்சில் வாராமைக்குக் கரிபூசுகிறாராதல், அழகில் ஸஜாதீயமாயவேயாதல் 'பொல்லா' என்கிறது. [கனிவாய்] - *அவாக்யநாதர:* என்கிற தத்த்வம், அநுகூலரைக் கண்டு தைர்யபங்கம் பிறந்து ஸ்மிதம்பண்ணிச்சிரிக்கும்படியைச் சொல்லுகிறது: *ஸ்வகர்மாநலதப்தாநாம்

த்யாயிராம் கேதசாந்தயே* என்னும்படியே. [தாமரைக்கண்]-வினைப்புக்கு வித்திக்கும் மாதிரிகள், குறையும் தலைக்கட்டும் கண்ணைச் சொல்லுகிறது; *அவலோகநதாநேந பூயோமாம்பாலயாவ்யய* என்னும்படியே. [கருமாணிக்கமே] - ஸம்ஸாரத்தில்விடாய் தீர அணைக்கும் உடம்பைச் சொல்லுகிறது: *ஏஷ ஸர்வஸ்வபூதஸ்து* என்னும்படியே. தாமரை பூத்ததொரு மாணிக்கம் ஸ்மிதம்பண்ணிநிற்பாலேயாய்த்து வடிவு இருப்பது. [என்கள்வா] - என்னிசைவின்றிக்கே என்னை அபஹரித்தவனே! கர்மத்தாலே ஈச்வரனுடையதான ஆத்மாவை முன் தோற்றாதே நின்று அபஹரிக்கும் இவன்; வடிவைக்காட்டி இவனையபஹரிக்கும் அவன். ஸர்வேச்வரனுக்கும் தன்வஸ்துவைக் களவுகண்டுகொள்ள வேண்டும்படியிறே இவனுடைய எண்ணிலிருப்பது. ஸ்ரீஜநகராஜன்பெண்பிள்ளையை நீர்வார்ப்பித்துத் தனக்காக்கினைப் போலேயிறே ஆத்மாவைத் தனக்காக்கிக்கொள்ளுகையாவது. [தனியேனாருயிரே] - என்னிசைவின்றிக்கே என்னைவிஷயீகரித்தவனல்லோ, உன்சுவட்டையறிவித்துப் பிரித்தாலும் முடியாதபடி குணவிஷ்காரத்தாலே தரிப்பித்தவனே! [தனியேன்] - ஸம்ஸாரிகளோடு பொருந்தாமையும், ப்ராப்யதேசத்தில் புகப்பெறாமையும், பிராட்டி அசோகவனிகையில் ராக்ஷஸிகள் நடுவே யிருந்தாப்போலே காணும் இவர்க்கு ஸம்ஸாரிகள்நடுவேயிருக்கிற இருப்பு. [ஆருயிரே] - உன்னைப்பிரிந்து பொருந்தாதஸம்ஸாரத்திலேயிருந்த எனக்கு ப்ராணனாயிருப்பவனே! [என்தலைமிசையாய் வந்திட்டு] - செழும்பறவைதானேறித்திரிவான தாளிணை யென்தலைமேலே" "தலைமேல தாளிணைகள்" என்று சொல்லுகிறபடியே-பூர்ணமாக வந்து தோற்றி. நிர்ஹேதுகமாக வந்தென்றும். (ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணுமிடத்தில் உனக்கு ஜகத்தால் செய்யப்பட்டதொன்றில்லாதாப் போலே, என்னை யிவ்வளவாகப் புகுரநிறுத்தின உனக்கு என்னால் செய்யப்பட்டதொன்றில்லை. இனிமேலுள்ளதும் உனக்கே பரமென்கை.) [இனி] - உன்னைக்காட்டினமாத்ரமன்றியே, பரமபதத்தில் சுவட்டையும் அறிவித்த பின்பு. [நான்] - வழிச்சுவடறிந்த நான். [போகலொட்டேன்] - தம்முடைய செல்லாமையாலும் ப்ராப்தியாலும் தடுக்கவும் வளைக்கவும் உரியரானபடி; *சேஷ்யே புரஸ்தாச்சாலாயா யாவந்மே நப்ரஸீததி* என்னும்படி. [போகலொட்டேன்] - வரும்போது உன்ஸ்வாதந்த்ர்யத்தாலே வரலாமத்தனையல்லது, போம்போது உன்கார்யம்உன்னதோ? இவர்க்கு இப்படி சொல்லலாமிறது-ஸர்வஜ்ஞன் அறியத் தமக்குஉண்டான த்வரையாலேயும், அபேக்ஷித்தவளவிலே இவர்கார்யம் செய்யப்பெறாத பிற்பாடருக்கு *ஹ்ரீரேஷாஹி மமாதுலா* என்று லஜ்ஜிக்குமவனாகையாலுமிறே. [ஒன்றும்மாயஞ்செய்யேல்] - உன்னையறிவதுக்கு முன்பு த்யாஜ்யமான விஷயங்களைக் காட்டி அதிலே வைமையும் என்னைப்பண்ணினாய்; உன்னையறிந்தபின்பு, குணங்களையாவிஷ்கரித்து "உம்பரென்குறை" என்னவும் "அதே யின்னம்வேண்டுவதெந்தாய்" என்னவும் பண்ணினாய்; அப்படியே, இனி ஒரு குணவிஷ்காரத்தைப்பண்ணி (அவ்வழியாலே) நான்பெற்றேனாகப் பண்ணி என்னை வஞ்சியாதேகொள். அங்ஙன்வேண்டுவானென்? என்ன - [என்னையே] - *ஏஹி பச்ய சரீராணி* என்கிறபடியே-விரஹம் தின்று சேஷித்தஉடம்பைக் காட்டுகிறார்; அங்கு சரீரமாத்ரம் அவர்களுக்கு; இவர்க்கு ஸ்வரூபநாசமிறே.

மாயம்செய்யேலென்னை உன்திருமார்வத்துமாலைநங்கை*
வாசம்செய்பூங்குழலாள் திருவாணைநின்னாணைகண்டாய்*
நேசம்செய்துன்னோடென்னை உயிர்வேறின்றியொன்றாகவே*
கூசம்செய்யாதுகொண்டாய் என்னைக்கூவிக்கொள்ளாய்வந்தந்தோ. 2

ஒ.—இரண்டாம்பாட்டில், தம்முடைய அபேக்ஷிதத்தைச் செய்தல்லது நிற்கவொண்ணாதபடி எம்பெருமானுக்குப் பெரியபிராட்டியார்திருவாணையிடுகிறார். [உன்திருவென்று தொடங்கி] - விஷ்ணோ:ஸ்ரீ: என்னும்படியே உனக்கு ஸம்பத்தாய் உன்திருமார்வுக்கு அலங்காரமான மாலையாய் உன்னாலும் ச்லாகிக்கப்படுவாளாய் உன்திருமேனிக்குப் பரிமளத்தைப் பண்ணுநின்றுள்ள அழகிய திருக்குழலையுடைய பெரியபிராட்டியாருடைய ஆணைகிடாய். உனக்கு இட்டவடி பேராதே என்அபேக்ஷிதம்செய்து

முடிக்கவேண்டும்படியிட்ட ஆணை. போகவல்லையாகில் போய்க்காணென்று கருத்து. "மயாச ஸீதயா சைவ சப்தோஸி ரகுநந்தந" என்னும்படியாலே பெரியபிராட்டியாராணை உன்னுணைகிடாய் என்றுமாம். [நேசஞ்செய்து உன்னோடு என்னை என்றுமேலுக்கு] - இனி இத்திருவாய்மொழி குறையும், நீர் 'பெருவாணையிட்டீர்' என்று எம்பெருமான் அருளிச்செய்ய அல்லாமை யேத்துகிறார். பெரியபிராட்டியார் பக்கலிலும்பண்ணாத ஸ்நேஹத்தை என்பக்கலிலேபண்ணி என்பக்கலுள்ள அயோக்யதை பாராதே உன்னோடு ஆத்மபேதமில்லாதபடி என்னைப் பரிக்ரஹித்தாய்; ஆனபின்பு, ஐயோ! என்னை சடக்கென வந்து விஷயீகரியாய்!

இ.—இரண்டாம்பாட்டில், தம்முடைய அபேக்ஷிதத்தைச் செய்தல்லது நிற்கவொண்ணாதபடி அவனுக்குப் பிராட்டிஆணையிடுகிறார். [மாயம் செய்யேலென்னை] - 'பகவத் குணங்களே போது போக்காம்படி பண்ணின வித்தை க்ருத்ரிமமென்று நெஞ்சோடு சொல்லக்கூடுமோ ?' என்ன, - அங்ஙனல்ல; புத்திபூர்வகமாகச் சொல்லுகிறேன்; க்ஷணகாலமும் தன்னையல்லது செல்லாமையை விளைவிக்கைக்காகவாய்த்து குணாநுபவத்தோடே ஸம்ஸாரத்திலே இவரைவைத்தது. அச்செல்லாமை யுண்டானாலிது அநுவர்த்திக்குமிறே. இப்படியிவர் நிர்ப்பந்தித்தவிடத்திலும் உம்மை மாயம்செய்கிறிலோம் என்று 'மாசுச:' என்னுமவையாலே நங்கார்யம் செய்யப்பார்த்திலனாகாதே! என்று பார்த்து, செய்தல்லது நிற்கவொண்ணாதபடி பிராட்டியாணையிடுகிறார். [உன்திரு] - "விஷ்ணோச் ஸ்ரீ:" என்கிறபடியே உனக்கு ஸம்பத்தாயுள்ளவள். எனக்கு நீ ஸம்பத்தாயிருக்கிறப்போலேயன்றே, உனக்குஅவள் ஸம்பத்தாயிருக்கிறபடி. ரத்நத்துக்கு ஒளி சேஷமாயிருக்கச்செய்தே அத்தாலேயிறே பெருவிலைபெறுகிறது; இவளாலே அவனுக்குப் பெருமை சொல்லாநிற்கச்செய்தேயும் சேஷித்வம் குறையாதேயிறேயிருப்பது. [மார்வத்துமாலை] - தான்விரும்புகிற மார்வுக்கு மாலையானவள். உன் திருமார்வுக்கு அலங்காரமானவள் என்கை. [நங்கை] - அவாப்தஸமஸ்தகாமனான நீகுறைவாளரைப்போலே ச்லாகிக்கப்படுமவள்; ரூபகுணத்தாலும் சீலாதிகளாலும் பூர்ணையாயிருக்குமவள். [வாசம்செய் பூங்குழலாள்] - "ஸர்வகந்த:" என்கிறவிஷயத்தையும் பரிமளிதமாக்கா நின்றுள்ள குழலையுடையவள். [பூங்குழல்] - பூவையுடைத்தானகுழல்; அழகிய குழலென்றுமாம். [திருவாணை நின்னாணை] - திருவினுடைய ஆணைகிடாய். என கார்யம்செய்தல்லது இட்டவடி பேரவொண்ணாதபடியிட்டஆணை. போகவல்லையாகில் போய்க்காணென்று கருத்து. புறம்புள்ளார்க்கெல்லாம் இடுமாணை உன்னுடைய ஆணை. உனக்கிடுமாணை அவளாணை. அங்ஙனன்றியே. [நின்னாணை - திருவாணை] - என்று இருவரையும் ஒக்கச்சொல்லவுமாம். "மயாச ஸீதயாசைவ சப்தோஸி ரகுநந்தந" என்கிறபடியே. [நேசம்செய்து இத்யாதி] - "நீர் பெருவாணையிட்டீர்" என்று அவன அருளிச்செய்ய அல்லாமை ஏத்துகிறார், மேல் இத்திருவாய்மொழிகுறையும். ஆற்றாமையின மிகுதியைச் சொல்லிப் பரிஹரிக்கிறார். [நேசஞ்செய்து] - பிராட்டிபக்கல் பண்ணாதஸ்நேஹத்தை என்பக்கலிலேபண்ணி. "அகலகில்லேனிறையும்" என்று அவள் செல்லாமைகண்டிறே அவள்பக்கல் ப்ரேமத்தைப் பண்ணிற்று: உன் செல்லாமையன்றோ என்பக்கல் ப்ரேமம்பண்ணிற்று. [உன்னோடுஎன்னை] - என்னை நித்யஸம்ஸாரி என்றுதல், உன்னை நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனென்றுதல் பார்த்தோ மேல்விழுந்தது ? "இவன் அணுபரிமாணன், நியாம்யன்; நாம் விபு, நியாமகன்" என்று பார்த்தாயோ ? [உயிர்வேறின்றி ஒன்றாகவே] - ஆத்மபேதமில்லாதபடியன்றோ என்னைப் பரிக்ரஹித்தது ? "உன்னதுஎன்னதாவியும் என்னதுஉன்னதாவியும்" என்னும்படி என்னைப் பிரித்துக் காணவொண்ணாதபடியன்றோ நீ தலையாலே சுமந்தது. [கூசம்செய்யாது கொண்டாய்] - என்பக்கலுள்ள அயோக்யதையைப் பாராதே பரிக்ரஹித்தாய். முதலிலே என்பூர்வவ்ருத்தம் பாராதே மயர்வறமதிநலமருளினாய். பின்பு வளவேழுலகிலே "நான் அயோக்யன்" என்று அகலப்புக, என்வழியேவிடாதே உன்செல்லாமையைக் காட்டிச் சேர்த்துக்கொண்டாய். இப்படி செய்திலையாகில் நான இன்று க்லேசப்படாதே போகலாய்த்தே. [என்னைக்கூவிக் கொள்ளாய்வந்து] - ஆனபின்பு என்னை சடக்கெனவந்து அணுகப்பாராய். சாஸ்த்ரங்களால் அறிவிக்குமளவுபோராது. குணவிஷகாரமாத்ரம் போராது. உன்னை நான கிட்டி அநுபவிக்கும்படி பண்ணவேணும். [அந்தோ] - உன்னையொழியச் செல்லாமையைத் தானே விளைத்து, நானகூப்பிட வந்து முகங்காட்டாதொழிவதே !

ஈடு.—இரண்டாம்பாட்டு. தம்முடைய அபேக்ஷிதம் செய்தல்லது நிற்க வொண்ணாதபடி அவனுக்குத் திருவாணையிடுகிறார்.

[மாயஞ்செய்யேல்] - இம் "மாயஞ்செய்யேல்" என்னச் செய்தே இரியவும் சொல்லுமேறது என்னவாற்றுமைதான்! இப்படி இவர்நிர்ப்பந்திக்கவிடத்திலும், "உம்மை மாயஞ்செய்யோம்; *மாசுச:* என்னுமையாலே மாயஞ்செய்யேல் என்று அநுவர்த்திக்கிறது. [என்னை] - இத்தால் உன்னுடைய லீலாவிபூதி மூடியாது கிடாய். [மாயஞ்செய்யேல் என்னை] - *மாமேவ யேப்ரபத்யந்தே மாயாமேதாந் தரந்தி தே* என்கிற உன்வார்த்தையை விச்வஸித்து, "அலர்மேல்மங்கையுறைமார்பா - உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேன்" என்று சரணம்புக்க என்னை வஞ்சியாதே கொள்! இப்படி நிர்ப்பந்திக்கச் செய்தேயும் *மாசுச:* என்னுமையாலே அவனுக்கும் மறுக்க வொண்ணாதபடி பெரியபிராட்டியார்திருவாணை யிடுகிறார்:—[உன்திரு] - *விஷ்ணோச்ஸ்ரீ:* என்கிறபடியே நாட்டுக்கெல்லாம் ஸம்பத்து அவன்; அவன்தனக்கும் ஸம்பத்து இவள். அன்றிக்கே, 'விஷ்ணோ:' என்னவுமாம். திருவுக்குந் திருவாகிய *ச்ரிய:ச்ச்ரியம்* *த்வாம்ஹி ச்ரியச்ச்ரியமுதாஹுருதாரவாச:* என்னும்படியே. மற்றைப்பக்ஷத்தில், *ச்ரத்தயாதேவ:* *யஸ்ய ஸா ஜநகாத்மஜா - அப்ரமேயம்ஹி தத்தேஜ:* என்னும்படியே ஆதாரப்ரதானமாயிருத்தல், ஆதேயப்ரதானமாயிருத்தல்; ஆதேயத்துக்கு ஆதாரத்தையொழிய ஸ்திதியுமில்லை; நிருப்யத்துக்கு நிருபகத்தையொழிய ஸ்வரூபஸித்தியுமில்லை; ஒன்றையொன்றொழியில் ஸ்வரூபஸித்தியில்லை, "தன்னாகத் திருமங்கை தங்கியசீர்மார்வன்," *நஜீவேயம் க்ஷணமபி*. [மார்வத்துமாலை] - கேவலம் ஸம்பத்தியாயிருக்கைபன்றிக்கே திருமார்வுக்கு அலங்காரமுமாயிருக்கை. மார்வுக்கலங்காரம் அவள், அவளுக்கலங்காரம் மார்வு; *பத்தாநாம்*. [நங்கை] வடிவொழிய அல்லாத ஸ்வரூபகுணவிபூதிகளும் அவளாலே என்கை. ஜ்ஞாநைககாரதயா ஸாம்யம். (ஐச்வர்யாதிகுணங்களால் ஈச்வரனிலும்மிகையென்கை.) [நங்கை] - *பதிம்விச்வஸ்ய* என்கிறவனுக்கும் இவள் பூர்த்தியாலே பொறிபுறந்தடவவேண்டும்படி யிருக்கை. அல்லாதாரிற்காட்டில்வ்யாவ்ருத்தி யித்தனையுமிறே; ஸ்ரீமானுக்கு நிச்ஸ்ரீகர் ஸத்ருசரல்லரிறே. [வாசஞ்செய்பூங்குழலாள்] - நாற்றத்துக்கும் நாற்றம் கொடுக்கும் குழல். *ஸர்வகந்த:* என்னும் வஸ்துவுக்கும் பரிமளம் கொடுக்கும் குழல். *ஸர்வகந்த:* என்கிற ஏற்றம் இத்தலையாலே காணும் அவனுக்குவந்தது. ('பூங்குழல்' பூவையுடைத்தான குழலென்னுதல், அழகிய குழலென்னுதல்.) [திருவாணை நின்னாணை கண்டாய்] - (திருவினுடைய வாணை கிடாய். என்கார்யம் செய்தல்லது இட்ட அடி பேரவிடவொண்ணாதபடி உனக்கிட்ட ஆணை. போகவல்லையாகில் போய்க்காண் என்று கருத்து.) ஸர்வாதிகனுகையாலே அல்லாதார்க்கெல்லாம் உன்னுடைய ஆணை. உனக்கு மீறுகைக்குக் தார்ஆணை யிடுமித்தனையிறே.*மயாச ஸீதயாசைவ சப்தோ௨ஸிரகுநந்தந*என்னும்படியாலே-பெரியபிராட்டியார்ஆணை உன்னாணைகிடாய் என்னுமாம். "கீட்டவாணை உம்முடையஸ்வரூபத்தோடு விருத்தங்காணும். சேஷபூதரானல் நாம் செய்தபடி கண்டிருக்கவேணுங்காணும்" என்ன; அவிருத்தமென்கிறார் மேல் இத்திருவாய்மொழி குறையும். அதாவது - ஆற்றாமையின் மிகுதியைச்சொல்லிப் பரிஹரிக்கிறார். "உமக்குப் பாரதந்த்ர்யம் ஸ்வரூபமானல் சேஷி செய்தபடி கண்டிருக்குமத்தனைகாணும்" என்ன, — "சேஷபூதனுளனாய்க் கண்டிருக்கவேணுமே!" என்று தம்முடைய இல்லாமையை உபபாதிக்கிறது மேல் இத்திருவாய்மொழியடைய. பாரதந்த்ர்யம் ஸ்வரூபமானல் ப்ருதக்ஸ்திதியும் ப்ருதக்ப்ரதிபத்தியு முண்டாமோவென்கிறார்:-[நேசஞ்செய்து] - பெரியபிராட்டியார்பக்கலிலும் பண்ணாத ஸ்நேஹத்தை என்பக்கலிலேபண்ணி. நான் ஸ்நேஹிக்கவிருந்தாயோ, என்விடாய்க்கடி உன்விடாயன்றோ? "அகலகில்லேனிறையும்" என்று அவள்செல்லாமை கண்டிறே அவள்பக்கல் ப்ரேமத்தைப்பண்ணிற்று. [உன்னோடுஎன்னை] - உன்னையறிந்தாயோ, என்னையறிந்தாயோ? விழுமியவமரர் முனிவர்விழுங்கும் கன்னற்கனி நீ, அதுக்கு எதிர்த்தலை அடியேன்; "இவன் அணுபரிமாணன், வியாப்யன்; நாம் விபு, வியாபகன்" என்றுபார்த்தாயோ? [உயிர்வேறின்றி யொன்றாகவே] - ஆத்மபேதமில்லாதபடியன்றோ என்னைப் பரிக்ரஹித்தது. "உன்னதென்னதாவியும் என்னதுன்னதாவியும்" என்னும்படி என்னைப்பிரிந்துக் காணவொண்ணாதபடியன்றோ நீ தலையாலேகமந்தது. *பாஸ்கரேண ப்ரபாயதா* என்கிறவிதுவும் அவிசதமாகப் பண்ணினான். [கூசஞ்செய்யாது கொண்டாய்] - ஸர்வஜ்ஞனையும் வாசிவைத்துக் கலக்கவறிந்திலை. என்பக்கல் அயோக்யதைபாராதே பரிக்ரஹித்தாய். முதலிலே என் பூர்வவ்ருத்தம்

பாராதே மயர்வறமதிநலமருளினாய்; பின்பு, வளவேழுலகிலே "நான் அயோக்யன்" என்றகல, என்னை என் வழியிலேவிடாதே உன்செல்லாமையைக் காட்டிச் சேர்த்துக் கொண்டாய். இப்படி அன்று செய்திலையாகில் இன்று க்லேசப்படாதொழியலாய்த்தே. [என்னைக்கூவிக்கொள்ளாய்வந்து] - ஆனபின்பு, என்னை சண்டென வந்தணுகப்பாராய். சாஸ்த்ரங்களால் அறிவிக்குமளவுபோராது; குணாவிஷ்காரமாத்ரத்தாலே போராது; ஸாக்ஷாத்கரிக்குமளவு போராது; உன்னைக்கிட்டி யநுபவிக்கும்படி பண்ணவேணும். [அந்தோ] - தன்னையொழியச் செல்லாமையைத் தானே விளைத்து, கூப்பிட வந்துமுகங் காட்டாதொழிவதே!

கூவிக்கொள்ளாய்வந்தந்தோ என்பொல்லாக்கருமாணிக்கமே*
ஆவிக்கோர்பற்றுக்கொம்பு நின்னலாலறிகின்றிலேன் நான்*
மேவித்தொழும்பிரமன்சிவன் இந்திரனுதிக்கெல்லாம்*
நாவிக்கமலமுதற்கிழங்கே உம்பரந்ததுவே. (3)

ஒ.—மூன்றாம்பாட்டில், பெருமிடுக்கரான ப்ரஹ்மேசாநாதிகளுடைய ஸ்வரூபஸ்த்தித்யாதிகளுக்கெல்லாம் நிர்வாஹகனான நீ, உன்னாலல்லது உஜ்ஜீவிக்க விரகின்றிக்கேயிருக்கிற என்னை, ஐயோ! விஷயீகரித்தருளாய் என்கிறார். [என் என்று தொடங்கி] - அதிலோகமான அழகைக்காட்டி என்னை மிகவும் ஈடுபடுத்தினவனே! என்னாத்மாவுக்கு உஜ்ஜீவநஹேதுவாயிருப்பதொன்று உன்னையொழிய வேறு நான் அறிகிறிலேன். [மேவி என்று தொடங்கி] - அபிமாநரஹிதராய்க்கொண்டு தொழும் ப்ரஹ்மாதிகளுக்கெல்லாம் காரணமான திருநாபிகமலத்துக்குக் கிழங்கானவனே! [உம்பரந்ததுவே] - அயர்வறுமமரர்களுக்குப் பரமப்ராப்யமானவனே!

இ.—மூன்றாம்பாட்டில், ஸ்வதந்த்ரரான ப்ரஹ்மாதிகளுடைய ஸ்வரூபஸ்த்தித்யாதிகளையும் நிர்வஹிக்கிற நீ, உன்னாலல்லது செல்லாதஎன்னை விஷயீகரியாய் என்கிறார். [கூவிக்கொள்ளாய்] -கீழே, 'கூவிக்கொள்ளாய்' என்றவர், இங்கே, 'வந்து கூவிக்கொள்ளாய்' என்கிறார்; தாஹித்தவன் - 'தண்ணீர், தண்ணீர்' என்னுமாபோலே; ஆர்த்தியை மிக்குச் செல்லாநின்றாலும் பாசுரமிதுவல்லதின்றிக்கே யிருக்கிறபடி. கூவிக்கொள்ளுமளவுபோராது, வந்துகூவிக் கொள்ளவேணும். ஆர்த்தமை மிக்காலும் நான் வந்து கிட்டுகை முறையன்று, உனக்கு அவத்யமுங்காணென்கிறார். "சநைஸ்து ஸங்குலாம் க்ருத்வா". [அந்தோ] - உனக்கு நிறமன்றென்று நான் சொல்ல வேண்டுவதே! [என் பொல்லாக்கருமாணிக்கமே] - அதிலோகமான வடிவழகைக்காட்டி என்னை ஈடுபடுத்தினவனே! துளையாதமாணிக்கம். அநுபபுக்தமான மாணிக்கமென்னுதல்; நாட்டொப்பான அழகன்றியே விஸஜாதீயமாயிருக்கையாலே 'பொல்லா' என்கிறதென்னுதல்; த்ருஷ்டிதோஷபரிஹாரமாக என்னுதல். விலக்ஷண விஷயமானாலும் ஸ்வரூபத்தைப் பார்த்து ஆறியிருக்கவேண்டாவோ என்ன? - அது செய்யுமிடத்தில் நான் உன்னையொழிய உளனாக வேணுமே. என்னாத்மாவுக்கு உஜ்ஜீவநஹேதுவாயிருப்பதொன்று உன்னையொழிய வேறு நான் அறிகிறிலேன். [மேவித்தொழும் பிரமன் இத்யாதி] - "ஈச்வரோஹம்" என்றிருப்பார்க்கும் நிர்வாஹகனானவனல்லேயோ என்கிறார். ஆபத்து வந்தவாறே நிரபிமாநிகளாய்க்கொண்டு தொழும் ப்ரஹ்மாதிகளுக்கெல்லாம் காரணமான திருநாபீகமலத்துக்குக் கிழங்கானவனே! முதலான நாபிக்கமலக்கிழங்கே! [உம்பரந்ததுவே] - அவர்களுக்கு மேலான நித்யஸூரிகளுக்கும் அப்படிப்பட்ட ப்ராப்யவஸ்துவானவனே! 'அது' என்று ப்ரமாணப்ரஸித்தியைச் சொல்லுகிறது. மேலான மஹதாதிகளுக்கும் காரணபூதனென்று சொல்லிற்றாகவுமாம். நித்யஸூரிகளோடு, ப்ரஹ்மாதிகளோடு வாசியற ஸர்வநிர்வாஹகனாயிருக்கிற நீ என்னைவந்து கூவிக்கொள்ளாய். இப்பாட்டால் - கீழும் மேலும் சொல்லுகிற ஸாமாநாதிகரண்யத்துக்கு நிபந்தநம் கார்யகாரணபாவமென்னுமத்தை அருளிச் செய்தாராய்த்து. "ஸர்வம்கல்விதம் ப்ரஹ்ம".

௫௫.—மூன்றாம்பாட்டு. பெருமிடுக்கரான ப்ரஹ்மாதிகளுடைய ஸ்வரூபஸ்த்தித்யாதிகளுக்கெல்லாம் நிர்வாஹகனான நீ உன்னையல்லது ஜீவிக்க விரகின்றியேயிருக்கிற என்னை, ஐயோ! வந்து விஷயீகரித்தருளாயென்கிறார்.

[கூவிக்கொள்ளாய்]-கீழே "கூவிக்கொள்ளாய்" என்றவர், இங்கேயும் 'கூவிக்கொள்ளாய்' என்கிறார்காணும்: தாஹித்தவன் "தண்ணீர், தண்ணீர்" என்னுமாபோலே. ஆற்றாமைமிக்குச் செல்லாநின்றாலும்பாசுரம்இதுவல்லதின்றிக்கேயிருக்கிறபடி. கூவிக்கொள்ளுமளவும் போராது வந்துகூவிக்கொள்ளவேணும். ஆற்றாமைமிக்காலும் நான் வந்து கிட்டுகை முறைமையன்று: உனக்கு அவஶ்யமங்காணென்கிறார்: *சரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா*. எழுதுமென்னுமிதுமிகை யானவனுக்கு வருகை அஸஹ்யமென்னுமிடம் சொல்லவேண்டாவிறே. வருகை அவனுக்கே வ்யவஸ்த்திதமாயிருக்கிறபடி. [அந்தோ!] - உனக்கு ஸ்தீரமன்றென்று நான் சொல்லவேண்டுவதே! [என்பொல்லாக்கருமாணிக்கமே] - (அதிலோகமான வடிவழகைக்காட்டி என்னை அடுபடுத்தினவனே!) நீயழைத்தபோது கண்டிருக்கலாய்த்திறே நீ நீயன்றிக்கேயிருந்தாயாகில். க்ரமத்திலேயழைக்க நினைத்தாயாகில், அழகைக்காட்டி அநந்யார்ஹமாக்கிற்றென்? [என்பொல்லாக்கருமாணிக்கம்] - துளையாதமாணிக்கம். அநுபபுக்தமான ரத்நமென்னுதல்; நாட்டொப்பான அழகன்றிக்கே விஸஜாதீயமாயிருக்கையாலே பொல்லாதென்கிறதென்னுதல்; த்ருஷ்டிதோஷபரிஹார மென்னுதல். விலக்ஷணவிஷயமானாலும் ஸ்வரூபத்தைப்பார்த்து ஆறியிருக்க வேண்டாவோவென்னில், - அதுசெய்யுமிடத்தில் நான் உன்னையொழிய வுளனாக வேணுமே? [ஆவிக்கோர்பற்றுக்கொம்பு நின்னலாலறிகின்றிலேன் நான்] - உபக்நம் நியதமாயிருக்கிறபடி. கொடி, கொள்கொம்பையொழிய நிற்கவற்றோ! வேரையறுத்துப்பட ரென்றால் படருமோ? என்னுத்மாவுக்கு உஜ்ஜீவநஹேதுவாயிருப்பதொன்று உன்னையொழிய வேறு காண்கிறிலேன்: *ந ச ஸீதா த்வயா ஹீநா* என்கிறபடியே. ஆனால் பேற்றுக்கு உடலாக நீரும் சில செய்தாலோவென்ன - [மேவி இத்யாதி] - அல்லாத ப்ரஹ்மாதிகளோ தங்கள்கார்யம் தாங்கள் செய்துகொள்ளுகிறார்கள்! "ஆவிக்கோர்பற்றுக்கொம்பு" என்று சொல்லாதவர்களுக்கும் உதவுமவனே! ப்ரஹ்மாதிகள், "ஆவிக்கோர்பற்றுக்கொம்பு" என்று சொல்லவறியாமையாலே சொல்லார்கள்; நித்யஸூரிகள், அபிமாநம் புகுந்துபோகாமையாலும் இன்று சொல்லவேண்டாமையாலும் சொல்லார்கள். [மேவித்தொழும்] - அல்லாதபோது அந்யோந்யம் விருத்தராயிருப்பர்கள்; தங்களுக்கு ஒரு கார்யம் வந்தவாறே எல்லாரும் கூடித்தொழுவர்கள். அபிமாநரஹிதராய்த்தொழும் ப்ரஹ்மாதிகளுக்கெல்லாம் காரணமான திருநாபீகமலத்துக்குக் கிழங்கானவனே! (முதலானநாபிக்கமலக்கிழங்கே) [உம்பரந்தத்துவே] - அவர்களுக்குமேலான நித்யஸூரிகளுக்கும் அப்படிப்பட்ட ப்ராப்யவஸ்துவானவனே! 'அது' என்று ப்ரமாண ப்ரஸித்தியைச் சொல்லுகிறது. நித்யஸூரிகளோடு ப்ரஹ்மாதிகளோடு வாசியற நிர்வாஹகனாயிருக்கிற நீ என்னை வந்து கூவிக்கொள்ளாய். இப்பாட்டால்கீழும்மேலும் சொல்லுகிற ஸாமாநாதிகரண்யத்துக்கு நிபந்தநம், கார்யகாரணபாவ மென்னுமத்தை அருளிச்செய்தாராய்த்து; *ஸர்வம்க்கல்விதம் ப்ரஹ்ம*.

உம்பரந்தண்பாழேயோ அதனுள்மிசைநீயேயோ*
அம்பரநற்சோதி அதனுள்பிரமனரன் நீ*
உம்பரும்யாதவரும்படைத்த முனிவனவன் நீ*
எம்பரம்சாதிக்கலுற்று என்னைப்போரவிட்டிட்டாயே. (4)

௫௬.—நாலாம்பாட்டில், ஸகல நிர்வாஹகனான நீ, என்னுடைய நிர்வாஹம் நானே பண்ணிக்கொள்வேனாகப் பார்த்தருளினாயாகில், என்னைக் கைவிட்டாயேயல்லேயோ ? என்கிறார். [உம்பரந்தண்பாழேயோ] - மஹதாதி விகாரங்களுக்கும் காரணமாகையாலே ஸ்வகார்யங்களுக்கெல்லாம் மேலாய் ஸ்வகார்யங்களைப் பிறப்பிக்கைக்கீடான சக்தியோகத்தையுமுடைத்தாய் சேதநர்க்கு போகமோக்ஷாதி

புருஷார்த்தங்களை விளைத்துக்கொள்ளலாம் நிலமான மூலப்ரக்ருதிக்கு நிர்வாஹகனானவனே! [அதனுள் என்று தொடங்கி] - அதிலே பத்தமாய் நிற்கிற விலக்ஷணமான ஆத்மதத்வத்துக்கு நிர்வாஹகனும் ஆகாசாதிபூத பஞ்சகத்துக்கும் பாஞ்சபௌதிகமான அண்டத்துக்குள்ளே வர்த்தமானரான ப்ரஹ்மருத்ரர்களுக்கும் நிர்வாஹகனானவன் நீ. [உம்பருமென்று மேலுக்கு] - தேவர்களையும் மற்றுள்ளாரையும் படைத்த முனியாக ப்ரஸித்தனானவன் நீ. என்னையொருவனையும் நானே என்காரியம் செய்வேனாகப் பார்த்து உன்பக்கல்நின்றும் போரவிட்டு உபேக்ஷித்தாயே.

இ.—நாலாம்பாட்டில், ஸர்வநிர்வாஹகனான நீ, என்னுடைய நிர்வாஹம் நான் பண்ணிக் கொள்ளப் பார்த்தாயாகில், என்னைக் கைவிட்டாயல்லையோ? என்கிறார். [உம்பரந்தண்பாழேயோ] - மஹதாதி கார்யங்களுக்கெல்லாம் காரணமாகையாலே மேலாய்த் தன்னுடைய ஏகதேசத்தாலே கார்ய வர்க்கத்தைப் பிறப்பிக்கவற்றான சக்தியையுடைத்தாய் விசித்ர பரிணாமினியாய்ச் சேதநர்க்கு போக மோக்ஷத்தை இசைத்துக்கொள்ளலாம் நிலமாயிருந்துள்ள மூலப்ரக்ருதிக்கு நிர்வாஹகனாயிருந்துள்ளவனே! [உம்பர்] - மேல் [அந்தண்] - அழகியதுமாய் அநுகூலமுமாயிருக்கை. [பாழ்] - க்ருஷிக்கு யோக்யமாயிருக்கை [அதனுள்மிசை நீயேயோ] - அதிலேபத்தமாயிருக்கிற விலக்ஷணமான ஆத்மதத்த்வத்துக்கு நிர்வாஹகனானவனே! "ஜ்ஞாநஸ்வரூப மத்யந்தநிர்மலம் பரமார்த்தத: தமேவார்த்தஸ்வரூபேண ப்ராந்தி தர்சநத: ஸ்த்திதம்". ஸூக்ஷ்மசிதசித்வஸ்துசரீரி காரணமாகையாலே காரணவஸ்த்தையைச்சொல்லிற்று. இத்தால் விசேஷணப்ராதாந்யம் சொல்லும் ந்யாயவைசேஷிகபக்ஷமும், விசேஷணத்துக்கு அபாரமார்த்த்யம் சொல்லும் மாயாவாதிபக்ஷமும், ஆழ்வார்க்குப்பக்ஷமல்ல என்றதாய்த்து. [அம்பரம்] - ஆகாசம். [நற்சோதி] - தேஜ:பதார்த்தம். இவையிரண்டும் பஞ்சபூதங்களுக்கும் உபலக்ஷணம். [அதனுள்பிரமனரன் நீ] - அந்த பஞ்சபூதங்களாலே ஸ்ருஷ்டமான அண்டத்துக்குள்ளே வர்த்தமானரான ப்ரஹ்மருத்ரர்களுக்கும் நிர்வாஹகனானவன் நீ. [உம்பரும் யாதவரும் இத்யாதி] - மேலான தேவர்களையும் மநுஷ்யாதி ஸ்தாவராந்தமான ஸகலபதார்த்தங்களையும் ஸ்ருஷ்டித்த முனியாக ப்ரஸித்தனானவன் நீ. ஸகலபதார்த்தங்களையும் கர்மாநுகூலமாக ஸ்ருஷ்டிக்கைக்காக பூர்வகர்மங்களை அநுஸந்திக்குமவனிறே - முனியானவன். "ததைஸதேவ ஸங்மநோऽகுருத ஸ்யாமிதி". இத்தால் ஸ்தூலசிதசித்வஸ்துசரீரத்வத்தாலே கார்யஞ் சொல்லிற்றாய்த்து. கச்யபப்ரஜாபதியைச் சொல்லிற்றாகவுமாம். [எம்பரம்சாதிக்கலுற்றென்னைப் போரவிட்டிட்டாயே] - என் கார்யம் நீயேசெய்யக்கடவதாக ஏறிட்டுக்கொண்டு அத்தையுபேக்ஷித்து, அசேதநத்தைப் போகடுமாபோலே போகட்டாயென்னுதல்; ஸகலத்தையும் நிர்வஹிக்கிற நீ என்னை ஒருவனையும் நானே என்கார்யம் செய்வேனாகப்பார்த்து உன்பக்கலினின்றும் போரவிட்டு உபேக்ஷித்தாயென்னுதல். [என்னை] - உன்னை யொழியச் செல்லாத என்னை.

ஈடு.—நாலாம்பாட்டு. ஸர்வநிர்வாஹகனான நீ, என்கார்யம் நானே பண்ணிக்கொள்வேனாகப் பார்த்தருளினையாகில், என்னைக்கைவிட்டாயல்லையோ? என்கிறார்.

[உம்பரந்தண்பாழேயோ] - மஹதாதிகார்யங்களுக்கெல்லாம் காரணமாகையாலே மேலாய் தன்னுடைய ஏகதேசத்தாலே கார்யவர்க்கத்தைப் பிறப்பிக்கவற்றான சக்தியையுடைத்தாய் விசித்ரபரிணாமியாய்ச் சேதநர்க்கு போகமோக்ஷங்களை விளைத்துக்கொள்ளலாம் நிலமாயிருந்துள்ள மூலப்ரக்ருதிக்கு நிர்வாஹகனானவனே! [உம்பர்] - மேல் [அந்தண்] - அழகிதுமாய்க் குளிர்ந்திருக்கை. (ஸ்ருஷ்டிசத்தியாகிற அழகும் விசித்ரபரிணாமித்வமாகிற நன்மையுமுடைத்தாயிருக்கை) [பாழ்] க்ருஷிக்கு யோக்யமாயிருக்கை. காரணவஸ்த்தமாய் நின்று ஸ்வகார்யத்தாலே சேதநர்க்கு போகமோக்ஷங்களை விளைக்கவற்றென்னுமிடத்தைச் சொல்லுகிறது. [உம்பரந்தண்பாழேயோ] - சௌக்ல்யமென்று கொண்டு நிஷ்கர்ஷகசப்தத்தாலே தர்மத்தைப் பிரியச் சொல்லுமாபோலே பிரியச் சொல்லப் போகாது, பகவானுக்கு ப்ரகாரமானவற்றை யென்கிறது. 'உம்பரந்தண்பாழேயோ' என்கிறவித்தால் - சேதநர்க்கு ப்ரகாரமாய் அவ்வழியாலே ஈச்வரனுக்கு ப்ரகாரமாகையன்றிக்கே, "யஸ்யாத்மா சரீரம் - யஸ்ய ப்ருதிவீ சரீரம்" என்கிறபடியே சேதந வ்யதிரிக்தமான அசித்துக்கும் அவனையொழிய நிர்வாஹகரில்லையென்கை. "பாழேயோ" - என்கிறவித்தால் - சுத்தபேதம் கொள்ளுகிற மீமாம்ஸகரையும், ஸ்வரூபேண தாதாத்ம்யம் கொள்ளுகிற மாயாவாதிகளையும் அழிக்கிறது. [அதனுள்மிசை

நீயேயோ] - அதிலே பத்தமாய்நிற்கிற விலக்ஷணமான ஆத்மதத்த்வத்துக்கு நிர்வாஹகனானவனே! ஸூக்ஷ்மசிதசித்வஸ்துசரீரி காரணமாகையாலே காரணவஸ்த்தை சொல்லிற்று. இத்தால் - விசேஷணப்ராதாந்யம் சொல்லும் ந்யாய வைசேஷிகபக்ஷமும், விசேஷணத்துக்கு அபாரமார்த்யஞ் சொல்லும் மாயாவாதிபக்ஷமும் ஆழ்வார்க்குப் பக்ஷமல்லவென்றதாய்த்து. "நீயேயோ" - என்கிறவித்தால் - சேதநனை யொழிய அசேதநத்துக்கு ஸ்த்திதியில்லாதாப்போலே, ஈச்வரனையொழிய ஆத்மாவுக்கு ஸ்த்திதியில்லையென்கிறது. [அம்பரநற்சோதி] - அம்பரம் - ஆகாசம். நற்சோதி - விலக்ஷணதேஜஸ்ஸு. அல்லாதபூதங்களுக்கு உபலக்ஷணமிரண்டும்; *யதம்புவைஷ்ணவ:காய:* என்று ஜலத்தைச் சொல்ல, அல்லாதபூதங்களுக்கும் உபலக்ஷணமானாப்போலே. [அதனுள் பிரமன்அரன் நீ] - பஞ்சீக்ருதபூதங்களாலே ஸ்ருஷ்டமான அண்டாந்தர்வர்த்திகளான ப்ரஹ்மருத்ராதிகளும் நீயிட்டவழக்கென்கிறது. [உம்பரும்யாதவரும் படைத்த முனிவனவன்நீ] - தேவர்களையும் மற்றுள்ளாரையும் படைத்த முனியாகப்ரஸித்தனானவன் நீ. "பிரமனரன்நீ" என்ற ஸாமாநாதிகரண்யம் கார்யகாரணபாவநிபந்தநம்:- *ஸர்வம்க்கல்விதம் ப்ரஹ்ம தஜ்ஜலாநிதி* என்னுமாபோலே. ஸகலபதார்த்தங்களையும் கர்மாநுகுணமாக ஸ்ருஷ்டிக்கைக்காகப் பூர்வகர்மங்களை யநுஸந்திக்குமவனிறே முனியாகிறான்; *ததஸதேவ ஸங்மநோZகுருத ஸ்யாமிதி* இத்தால் - ஸ்த்தூலசிதசித்வஸ்து சரீரத்வத்தாலே கார்யத்வம் சொல்லிற்றாய்த்து. [எம்பரஞ்சாதிக்கலுற்றென்னைப்போரவிட்டிட்டாயே] - என்கார்யம் நீயே செய்வதாக ஏறிட்டுக்கொண்டு, அத்தையுபேக்ஷித்து, அசேதநத்தைப்போகடுமாபோலே போகட்டாயென்னுதல்; ஸகலத்தையும் நிர்வஹிக்கிற நீ, என்னையொருவனையும் நான்என் கார்யம் செய்வேனாகப்பார்த்து, உன்பக்கலினின்றும் போரவிட்டு உபேக்ஷித்தாயென்னுதல். [என்னை] உன்னையல்லது செல்லாதவென்னை. [போரவிட்டிட்டாயே] - அவன்பக்கலினின்றும் பிறிகதிர்ப்பட்டுப் போந்தாராயிருக்கிறபடி. குணம்நடையாடாத தேசத்திலே தள்ளினாயென்கிறார். ஜ்ஞாநவைசத்யத்தைப்பண்ணி ப்ராப்தியளவும் ப்ரவர்த்தியாதிருக்கிறவித்து, களவ்கமயந்திக்கு வழிகாட்டிவிட்டாப்போலே யிருக்கிறதுகாணும்!

போரவிட்டிட்டென்னை நீபுறம்போக்கலுற்றால்* பின்னையான்
ஆரைக்கொண்டெத்தையந்தோ எனதென்பதென்யானென்பதென்*
தீரவிரும்புண்டநீரதுபோல என்னாருயிரை
ஆரப்பருக* எனக்காராவமுதானாயே. (5)

ஒ.—அஞ்சாம்பாட்டில், நான் என்னுடைய யத்நத்தாலே உன்னைப் பெறுகிறேனாக நீ என்னைக் கைவிட்டிருக்கில், நானென்றும் என்னதென்றும் சிலவுளவோ? முடிந்தேனத்தனையிறே என்கிறார். [போரவிட்டிட்டென்னை நீ புறம்போக்கலுற்றால்] - ரக்ஷகனான நீ அநந்யகதியான என்னை உன்பக்கலினின்றும்போர நூக்கிப்போகட்டால் பின்னை நான் ஆரைக்கொண்டு என்ன புருஷார்த்தத்தை ஸாதிப்பது? என்ன ஸாதநத்தினாலே என்னுதே ஆரைக்கொண்டு என்கிறதென்னென்னில் - என்றும் புருஷார்த்தம் பெறுவது பரமசேதநனாயிருப்பானொருவனாலே என்றிருக்கையால். [தீரவிரும்புண்ட நீரென்னுமேலுக்கு] - அக்நிஸந்தப்தமான இரும்பு நீரை நிச்சேஷமாக புஜிக்குமாபோலே. [என்னாருயிரை] - சமையபுஜிக்கைக்காக எனக்கு உன்னுடைய நிரதிசயபோக்யதையைக்காட்டி என்னை அகப்படுத்தினாய். காய்ந்த இரும்பு அக்காய்ச்சல்தீர நீரைப் பருகுமாபோலே என்னுடைய ஸந்தாபமெல்லாம் தீரும்படி எனக்குப் பண்டு நிரதிசய போக்யமானவனே! என்றுமாம்.

இ.—அஞ்சாம்பாட்டில், ஸர்வரக்ஷகனான நீ உபேக்ஷித்தால் என்கார்யம் நான் செய்யவோ? பிறர்செய்யவோ? முடிந்தேனிறே என்கிறார். [போரவிட்டிட்டு] - உன்பக்கலினின்றும் அகற்றி உபேக்ஷித்து. [என்னை] - அநந்யகதியான என்னை. [நீ] - ஸ்ருஷ்டியேதொடங்கி இவ்வளவும்வர என்னைப் புகுர நிறுத்தின நீயென்னுதல்; ஸர்வரக்ஷகனான நீயென்னுதல். [புறம்போக்கலுற்றால்] - புறம்போக்குகையிலே அத்யவஸித்தால்; என்கார்யம் நான் செய்வேனாகப்பார்த்து என்னையுபேக்ஷித்தால்.

[பின்னை யாரைக்கொண்டெத்தை] - ஸர்வசக்தியானநீ அநாதரித்தபின்பு அசக்தனான நான் எந்த உபாயத்தைக்கொண்டு என்ன புருஷார்த்தத்தை ஸாதிப்பது ? ஆரைக்கொண்டென்கிறது - புருஷார்த்தம் பெறுவது ஒரு பரமசேதநனாலே, அசேதந க்ரியாகலாபாதிகளால் அன்றென்னுமிடம் தோற்றுகைக்காக. "க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்"*. [அந்தோ] - "மாமேகம் சரணம்வ்ரஜ" என்றஉனக்கு நான் உபதேசிக்க வேண்டுவதே! [எனதுஎன்பதென் யான்என்பதென்] - பேறு உம்மதானால் ஸாதநம் உம்முடைய தலையிலே ஆகவேண்டாவோ என்ன:—எனக்குப் பரிகரமாயிருப்பதொன்று உண்டென்பதோர் அர்த்தமுண்டோ ? ப்ருதக்ஸ்த்திதியோக்யமாயிருப்பதோர் அர்த்தமுண்டோ ? சரீரரக்ஷணம் சரீரியையொழியச் செய்வாருண்டோ ? [தீரவிரும்பு இத்யாதி] - அக்நிஸந்தப்தமான இரும்புண்ட நீரானது காற்றவொண்ணாதாப்போலே என் ஆத்மாவைச் சமையபுஜிக்கைக்காக எனக்கு உன்னுடைய நிரதிசய போக்யதையைக் காட்டி என்னை அகப்படுத்தினாய். முன்பு நீஉன்போக்யதையைக் காட்டிற்றும் உன்னை நான் பெறுகைக்கன்றி, என்னை அகப்படுத்தி உன்கார்யம் செய்தாயாய்த்தத்தனை யிறேயென்னுதல்; காய்ந்த இரும்பு அக்காய்ச்சல் தீரும்படி நீரைப்பருகுமாபோலே என்னுடைய விடாய்தீரும்படி உன்னை புஜிக்க எனக்குப் பண்டு நிரதிசய போக்யனானவனே! என்னுதல்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. ஸர்வரக்ஷகனான நீ உபேக்ஷித்தால், என்கார்யம் நான்செய்யவோ, பிறர்செய்யவோ? முடிந்தேனிறே என்கிறார்.

[போரவிட்டிட்டு] - உன்பக்கலினின்றும் பிரித்து உபேக்ஷித்து. [என்னை] - அநந்யகதியான என்னை. [நீ]-ஸ்ருஷ்டியேதொடங்கி இவ்வளவும்வரப் புகுரநிறுத்தின நீயென்னுதல், ஸர்வரக்ஷகனான நீ என்னுதல். [என்னை] - அஜ்ஞாநஅசக்திகளுக்கெல்லையான என்னை. [நீ] - ஜ்ஞாநசக்திகளால் பரிபூர்ணனான நீ. அக்கரையேறமாட்டாதானொருவனை யமுக்கிறாப்போலே யிருக்கிறது காணும். [என்னை நீ] - கண்ணும்காலுமின்றிக்கேயிருப்ப தொருத்தன், கண்ணும் காலுமுடையனாயிருப்பதொருத்தன்: ஆருக்கு ஆர்வழிகாட்டுவாரென்கிறது; *நைவகிஞ்சித்பரோக்ஷந்தே ப்ரத்யக்ஷோzஸி நகஸ்யசித்* என்னும்படியே. [நீ] - ஆள்பார்த்துழிதரும் நீ. எதிர்சூழல்புக்குத்திரியும் நீ. [புறம்போகலுற்றால்] - புறம்பே போக்குகையிலே அத்யவஸித்தால். என்கார்யம் நான் செய்வேனாகப்பார்த்து என்னை உபேக்ஷித்தால். [பின்னையான் ஆரைக்கொண்டெத்தை] - ஸர்வசக்தியான நீ அநாதரித்த பின்பு, அசக்தனான நான் எந்தவுபாயத்தைக் கொண்டு என்ன புருஷார்த்தத்தை ஸாதிப்பது ? ஆரைக்கொண்டென்கிறது - புருஷார்த்தம் பெறுவதுஒருசேதநனாலே, அசேதநக்ரியாகலாபாதிகளாலன்றென்னுமிடம் தோற்றுகைக்காக. [அந்தோ!] - *மாமேகம் சரணம்வ்ரஜ* என்றவுனக்கு நான் உபதேசிக்கவேண்டுவதே! [எனது என்பதென் யான் என்பதென்]-முடிந்தேனிறே என்கிறார். (நானேமுடிந்தேன், இனிக்கரணங்களும்போய்த்திறேயென்கிறார்). [தீர இத்யாதி] - அக்நிஸந்தப்தமான இரும்பு காய்ச்சல் தீர நீரை நிச்சேஷமாக புஜிக்குமாபோலே, என்னாத்மவஸ்துவைச் சமைய புஜிக்கைக்காக, எனக்கு உன்னுடைய நிரதிசயபோக்யதையைக்காட்டி என்னை யகப்படுத்தினாய். [என்னாருயிராப்பருக] - என்விடாய்தீரக் கலந்தாய் என்றிருந்தேன்; உன்விடாய்தீரவாயிருந்ததிறே. உனக்காகவாகவே யுன்னைக்காட்டிற்று. அன்றிக்கே, விபக்தி வ்யத்யயம்; என்னாருயிரானது உன்னையாரப்பருகவென்னவுமாம்; அப்போது, காய்ந்தவிருப்பு அக்காய்ச்சல்தீரும்படி நீரைப்பருகுமாபோலே, என்னாருயிரானது என்ஸந்தாபமெல்லாம் தீரும்படி யுன்னைபுஜிக்க எனக்குப் பண்டு நிரதிசயபோக்யனானவனே யென்றுமாம். வ்யாக்யாநாந்தரம்:— [எனதென்பதென்யானென்பதென்] - பேறுஉம்மதானால் ஸாதநமும் உம்முடையதலையிலே யாகவேண்டாவோ வென்ன.—எனக்குப்பரிகரமாயிருப்பதொன் றுண்டு என்பதோர் அர்த்தமுண்டோ? ப்ருதக்ஸ்த்திதியோக்யமாயிருப்பதொரு காருண்டோ? சரீரரக்ஷணம் சரீரியை யொழியச் செய்வாருண்டோ?

எனக்காராவமுதாய் எனதாவியையின்னுயிரை*
மனக்காராமைமன்னிஉண்டிட்டாய் இனியுண்டொழியாய்*
புனக்காயாநிறத்த புண்டரீகக்கண்செங்கனிவாய்*
உனக்கேற்கும்கோலமலர்ப்பாவைக்கன்பா என்னன்பேயோ. (6)

ஒ.—ஆரும்பாட்டில், பெரியபிராட்டியார்பக்கல் போலே என்பக்கல் அத்யபிநிவிஷ்டனும் என் ப்ரக்ருதியிலுங்கூட அத்யாதரத்தைப்பண்ணி என்னை புஜித்தநீ, என்னை உபேக்ஷியாதே சண்டென விஷயீகரித்தருளாய் என்கிறார். [எனக்கென்று தொடங்கி] - நிரதிசயபோக்யனும் ஹேயமான என்னுடைய ப்ரக்ருதியையும் விலக்ஷணமான ஆத்மாவையும் ஒக்க ஹ்ருதயத்துக்கு அமையாமை நிரந்தரமாக புஜித்தாய். இனி இத்தைவிடாதே விஷயீகரியாய். எம்பெருமான்கருத்தாலே 'இன்னுயிர்' என்றதாகவுமாம். [புனக்காயா நிறத்தவென்று மேலுக்கு] - நன்னிலத்திலே நின்ற காயாம்பூப்போலேயிருக்கிற திருநிறத்தையுடையையாய்ப் புண்டரீகம்போலேயிருக்கிற திருக்கண்களையும் சிவந்த திருப்பவளத்தையுமுடையையான உனக்கு ஸத்ருசமான அழகையுடைய பெரியபிராட்டியாருக்கு ஸ்நேஹியாய்வைத்து என்பக்கலிலே அபிநிவிஷ்டனானவனே !

இ.—ஆரும்பாட்டில், பிராட்டிபக்கல் பண்ணும் அபிநிவேசத்தை என்பக்கலிலே பண்ணி என்னை புஜித்த நீ, என்னை உபேக்ஷியாதே சடக்கென விஷயீகரித்தருளாய் என்கிறார். [எனக்கு ஆராவமுதாய்] - தேவஜாதியினுடைய உப்புச்சாறன்றிக்கே ஸதாஸேவ்யமுமாய் நித்யஸூரிகளெல்லாரும் கூட அநுபவிக்கும் உன்னை. ஸம்ஸாரியான எனக்குத் தந்தாய் [எனதாவியை] - என்னதென்னுமதுவே ஹேதுவாக, காமுகர் அபிமதவிஷயத்தில் அழுக்கை விரும்புமாபோலே என்னுடம்பை விரும்பினாய். [இன்னுயிரை] - அதுதன்னை நன்றென்று விரும்புகையாலே, அதிலும் தண்ணிதான ஆத்மாவை விரும்பினாய். 'இன்னுயிர்' என்று - செவ்வாய்க்கிழமையை மங்களவாரம் என்னுமாபோலே யென்னுதல்; அவன் தலையாலே சுமக்கிறபடியாலே சொல்லுதல். [மனக்காராமை] - மனஸ்ஸுக்குஆராமை. மனக்கு- மனஸ்ஸுக்கு. [மன்னிஉண்டிட்டாய்] - விரும்பி நிரந்தரமாக புஜித்தாய். [இனியுண்டொழியாய்] - நீ தொடங்கின கார்யத்தை நடுவே குறைகிடக்கவிடாதே விஷயீகரித்தேவிடாய். நீ ஆரம்பித்த கார்யத்திலே குறைகிடப்பதுண்டோ ? நீ இவ்வளவு புகுர நிறுத்துகைக்கு நான் ஸஹகரித்ததுண்டோ மேல் நானென்று செய்கைக்கு ? [புனக்காயா இத்யாதி] - முன்பு நீமேல்விழுந்தது உனக்கு ஒருகுறையுண்டாயோ ? ஸ்ரீயானவள் தான் மேல்விழும் வடிவை யுடையையாய்வைத்தன்றோ என்பக்கலிலே அபிநிவேசித்தது. நன்னிலத்தில் காயாப்போலேயாய்த்து வடிவிருப்பது. வாத்ஸல்யாம்ருதவர்ஷியாயாய்த்துக் கண்களிருப்பது. [செங்கனிவாய்] - சிவந்து கனிந்ததாய்த்து முறுவலிருப்பது. பிராட்டி விரும்பும் துறைகளிறேயிவை. இப்படிப்பட்ட உனக்கு ஸத்ருசமான அழகை உடையவளாய்ப் புஷ்பத்தில் பரிமளத்தை வகுத்தாற் போலேயிருக்கிற ஸௌகுமார்யத்தை யுடையவளாயிருக்கிற பிராட்டிக்கு ஸ்நிக்தனானவனே! பிராட்டியழகு நாவால் துகைக்கவொண்ணாமையாலே 'உனக்கேற்கும் கோலம்' என்கிறார். [என் அன்பேயோ] - அவளுக்கு அன்பையுடையவன் என்கிறார். இங்கு இரண்டாகப் பிரிக்கவொண்ணாதபடி இருந்தானென்கிறார். [உண்டிட்டாயினியுண்டொழியாய்] - முன்பு இப்படி தலையாலேசுமந்து வைத்து உபேக்ஷித்தால் பொறுக்கப்போமோ !

ஈடு.—ஆரும்பாட்டு. பெரியபிராட்டியார்பக்கல்போலே என்பக்கல் அத்யந்தாபிநிவிஷ்டனாய், என்ப்ரக்ருதியிலும் ஆத்மாவிலும் அத்யாதரத்தைப் பண்ணி புஜித்த நீ, என்னை உபேக்ஷியாதே சண்டென விஷயீகரித்தருளாயென்கிறார்.

[எனக்காராவமுதாய்] - தேவஜாதியினுடைய உப்புச்சாறுபோலன்றியே, (ஸதாஸேவ்யமாய்) நித்யஸூரிகளெல்லாருங்கூட அநுபவிக்கும் உன்னை ஸம்ஸாரியான எனக்குத்தந்தாய். [எனதாவியை] - என்னதென்னுமதுவே ஹேதுவாக, அபிமதவிஷயத்தில் அழுக்குகக்கும் காமுகனைப்போலே என்னுடம்பை விரும்பினாய். [இன்னுயிரை] - பகவதபிப்ராயத்தாலே

தவதவகாறுநிறபடி. அன்றிக்கே, செவ்வாய்க்கிழமையை மங்களவாரமென்னுமாபோலே, ப்ரக்ருதியோடே ஸம்பந்திக்கையாலே தண்ணிதென்று சொல்லுகிறாகவுமாம். [மனக்காரமைஇத்யாதி] - (மனக்கு) மநஸ்ஸுக்கு. [ஆராமை] - அமையாமை. [மன்னி புண்டிட்டாய்] - நிரந்தரமாக புஜித்தாய். [இனியுண்டொழியாய்] - நீ தொடங்கின கார்யத்தையும், நடுவே குறைகிடக்கவிடாதே, விஷயீகரித்துவிடாய். (நீ ஆரம்பித்தகார்யத்தில் குறை இடப்பதுண்டோ?) நீ இவ்வளவுபுகுர நிறுத்துகைக்கு நான் ஸஹகரித்ததுண்டோ? உன் கார்யத்துக்கு உன்னை வேண்டிக்கொள்ளவேணுமோ? இவருடைய அம்ருதத்துக்கு போக்த்ருத்வம் உண்டு காணும்!. [புனக்காயா இத்யாதி] - இவ்வாத்மாவையும் இதினுடைய சரீரத்தையும் விரும்புகை உனக்குச் சேருமோ? நீயுகந்தார்க்குச் சேருமோ? [புனக்காயாநிறத்த] தன்னிலத்தில் அலர்ந்த காயாப்பூபோலேயாய்த்து வடிவிருப்பது. [புண்டரீகக்கண்] - வாத்ஸல்ய[illegible]ருதவர்ஷியாயாய்த்துக் கண்களிருப்பது. [செங்கனிவாய்] - சிவந்து கனிந்தாய்த்து முறுவலிருப்பது. பிராட்டிவிரும்பும் அவயவங்களிறே இவை. [புனக்காயாவித்யாதி]- அக்காயாம்பூ தாமரைபூத்துக் கனியப்பழுத்தாற்போலேயாய்த்து, திருமேனியும் திருக்கண்ணும் திருப்பவளமுமிருப்பது. [உனக்கேற்கும்] - இவனோபாதி வாசா விமர்த்திக்கைக்கும் பொறாத ஸௌகுமார்யத்தையுடையவள். இப்படிப்பட்ட உனக்கு ஸத்ருசமான அழகையுடையளாய், புஷ்பத்தில் பரிமளத்தை வடித்து வகுத்தாற்போலேயிருக்கிற பிராட்டிக்கு ஸ்நேஹித்தவனே! உனக்கேற்கும் கோலமென்று - அவ்வழகை யிங்கே யநுவதிக்கிறார். வ்யபதேசம் பண்ணுகிறார். [கோலமலர்ப்பாவைக்கு அன்பா! என்னன்பேயோ!] - அவள்பக்கல் அன்பனென்று தோற்றநின்றது; தம்முடைய பக்கல் அன்பென்றும் அது உடையனென்றும், தெரிக்கப் போகிறதில்லை; ஜ்ஞாதாவை ஜ்ஞாநமென்னுமாபோலே. *தத்குணஸாரத்வாத் து தத்வ்யபதேச:*

கோலமலர்ப்பாவைக்கன்பாகிய என்னன்பேயோ*
நீலவரையிரண்டுபிறைகவ்வி நிமிர்ந்ததொப்ப*
கோலவராகமொன்றாய் நிலங்கோட்டிடைக்கொண்டவெந்தாய்*
நீலக்கடல்கடைந்தாய் உன்னைப்பெற்றினிப்போக்குவனோ. (7)

ஏ.—ஏழாம்பாட்டில். தான் பெரியபிராட்டியார்பரிக்ரஹமாகையாலே ப்ரளயார்ணவமக்நையான ஸ்ரீபூமிப்பிராட்டியை யெடுத்து அவளோடே ஸம்ச்லேஷித்தருளினாப்போலேயும், கடலைக்கடைந்து பெரிய பிராட்டியாரோடே ஸம்ச்லேஷித்தருளினாப்போலேயும் ஸம்ஸாரார்ணவமக்நனான என்னையெடுத்து என்னோடே ஸம்ச்லேஷித்தருளினாய்; என்பக்கலிலே அதிவ்யாமோஹத்தைப்பண்ணின உன்னைப்பெற்று வைத்து இனித்தப்பவிடுவேனோ? என்கிறார். [கோலமலர்ப்பாவைக்கு அன்பாகிய என்னன்பேயோ] - பெரிய பிராட்டியாருக்கு ஸ்நேஹியாகையாலே அவள் பரிக்ரஹமான என்பக்கலிலே ஸ்நேஹத்தைப்பண்ணினவனே! [நீலவரை யிரண்டுபிறைகவ்வி நிமிர்ந்ததொப்ப] - ஓர் அஞ்சனகிரி இரண்டு பிறையைக் கவ்விக்கொண்டு நிமிர்ந்தாற்போலே. நீலக்கடலென்று-கடைந்தருளுகிற எம்பெருமானுடைய திருநிறம் நிழலிட்டபடியைச் சொல்லுகிறது.

இ.—ஏழாம்பாட்டில். ப்ரளயார்ணவமக்நையான ஸ்ரீபூமிப்பிராட்டியை யெடுத்து அவளோடே கலந்தாப்போலேயும் கடலைக்கடைந்து பிராட்டியோடே ஸம்ச்லேஷித்தாப்போலேயும் பிராட்டிபரிக்ரஹமான என்னை ஸம்ஸாரார்ணவத்தினின்று மெடுத்து என்பக்கலிலே அதிவ்யாமோஹத்தைப் பண்ணின உன்னைப் பெற்றுவைத்து, இனித் தப்பவிடுவேனோ என்கிறார். [கோலமலர் இத்யாதி] - பிராட்டிபக்கல் ஸ்நேஹாதிசயத்தாலே அந்தஸ்நேஹமே ஹேதுவாக அவள்பரிக்ரஹமான என்பக்கலிலே அதிப்ரவணனானவனே! "சரமதசையிலே இவர் அருளிச்செய்த வார்த்தை ரஹஸ்யத்தின்படியாயிருந்தபடி கண்டதே!" என்று சீயரைக்குறித்து பட்டர் அருளிச்செய்தார். ப்ராதிகூல்யத்தைக் காக்கப்பண்ணினவர்கள்பக்கலிலும் நாலடிவரநின்றதுவே ஹேதுவாக ரக்ஷகனும் ஈச்வரன் என்னுமிடம், காக விபீஷணாதிகள்பக்கலிலே

கண்டதிறே; ''க்ருபயா பர்யபாலயத்'' என்றும், 'ந த்யஜேயம்' என்றும் அவ்வளவன்றிக்கே தனியிருப்பிலே தாஜ்ஞபார்த்ஸநாதிகளாலே நலிந்த ராக்ஷஸிகள்பக்கலிலே திருவடி எதிர்க்க, ''க:குப்யேத்'' ''கார்யம் கருணமார்யேண நகச்சிந்நாபராத்யதி'' என்னும் நீர்மையிறே பிராட்டிநீர்மை. [நீலவரையித்யாதி] - ''ததஸ்ஸ முத்க்ஷிப்ய - நீலஇவாசலோ மஹாந்'' ஓர் அஞ்ஜநகிரி இரண்டு பிறையைக்கவ்விக்கொண்டு நிமிர்ந்தாற்போலே. பிறையில் மறுவோபாதியாய்த்துத் திருவெயிற்றிற்கிடந்த பூமி. [கோலவராகம்] - மாசுடம்பில் நீர்வாராநின்ற நிலையிறே இவர்க்கு ஆலத்திவழிக்க விஷயமாய்த்து: ''பாசிதூர்த்துக்கிடந்த பார்மகட்கு'' என்கிறபடியே ப்ரணயினி அழுக்கோடேயிருக்கத் தாமானபடியே வருவராகில் ப்ரணயித்வத்துக்கு நமஸ்காரமாயித்தனையிறே. அவள் அழிவுக்கிட்ட வடிவைப்பற்றியிறே இவர் ஆலத்திவழிக்கிறது. [ஒன்றாய்] - வராஹஸஜாதீய மாத்ரமென்னுதல், த்ரைலோக்யத்தையும் கண்செறியிட்டாப்போலே விம்மவளர்ந்தபடியாலே அத்விதீயமென்னுதல். [கிலங்கோட்டிடைக் கொண்டஎந்தாய்] - ப்ரளயங்கொண்ட பூமியை அண்டபித்தியிலேபுக்குத் திருவெயிற்றிலே கொண்டு உத்தரித்தாப்போலே, ஸம்ஸாரார்ணவங்கொண்ட என்னை எடுத்தவனே! [நீலக்கடல் கடைந்தாய்] - பிராட்டியை லபிக்கைக்காகக் கடலைக்கடைந்தவனே! [நீலக்கடல்] - கடைகிறவனுடைய நிழலீட்டாலேயாதல்; ஸகலௌஷதிகளையும் பொகடுகையால்வந்த நிறவேறுபாடாதல்: நிறத்தாலே-நீலரத்நத்தைச்சொல்லிற்றாய் தத்ப்ரசுரமான ரத்நாகரமென்னுதல். [உன்னைப்பெற்று இனிப் போக்குவனோ?] ஸ்ரீபூமிப்பிராட்டியை லபிக்கைக்குப்பண்ணின வ்யாபாரத்தையும் பிராட்டியை லபிக்கைக்குப்பண்ணின வ்யாபாரத்தையும் என்னைப் பெறுகைக்காகப் பண்ணி என்னைக் கிட்டினபின்பு உன்னைப்போகவிடுவனோ? நீ க்ருஷிபண்ண, பலத்திலே அந்வயித்த நான் கைப்பட்ட ஸம்பத்தை விடக்ஷமனோ?

அடு.—ஏழாம்பாட்டு. நான் பெரியபிராட்டியார்பரிக்ரஹமாகையாலே ப்ரளயார்ணவமக்நையான ஸ்ரீபூமிப்பிராட்டியையெடுத்து அவளோடே ஸம்ச்லேஷித்தருளினாப்போலவும், கடலைக்கடைந்து பெரியபிராட்டியாரோடே ஸம்ச்லேஷித்தருளினாப்போலவும், ஸம்ஸாரார்ணவமக்நனான என்னை யெடுத்து என்னோடே ஸம்ச்லேஷித்தருளி என்பக்கலிலே அதிவ்யாமோஹத்தைப்பண்ணின உன்னைப் பெற்றுவைத்து இனித் தப்பவிடுவனோ? என்கிறார்.

[கோலமலர்ப்பாவைக்கன்பாகிய என் அன்பேயோ] - (பிராட்டிபக்கல் ஸ்நேஹாதிசயத்தாலே அந்த ஸ்நேஹமே ஹேதுவாக அவள்பரிக்ரஹமான என்பக்கலிலே அதிப்ரவணனானவனே) பட்டர் சரமதசையிலே யருளிச்செய்தவார்த்தை - (ரஹஸ்யத்தின் படியாயிருந்தபடி கண்டதே.) இப்பாட்டை நம்முடையார் த்வயத்தோடே யநுஸந்திப்பது - பெரியபிராட்டியார்க்குஸ்நேஹியாகையாலே அவள் பரிக்ரஹமான நமக்கு அன்பனும் என்று அநுஸந்திப்பது'' என்று (சீயரைக்குறித்தருளிச் செய்தார்) ''திருமாலென்னையாளுமால்'' என்னும்படியே தம்முடைய அன்புக்கடி சொல்லுகிறார். அந்தப்புரபரிகரமன்றோ, என்னன்புக்கு அடிபில்லையோ? [நீலவரையித்யாதி] - ஓர் அஞ்சநகிரி இரண்டுபிறையைக் கவ்வி நிமிர்ந்தாற்போலே, பிறையில் மறுவோபாதியாய்த்து திருவெயிற்றிற்கிடந்த பூமி. [கோலவராகம்]-மாசுடம்பில் நீர்வாராநின்ற நிலையிறே இவர்க்கு ஆலத்திவழிக்க விஷயமாய்த்து; ''பாசிதூர்த்துக்கிடந்தபார்மகள்'' என்கிறபடியே ப்ரணயினி அழுக்கோடேயிருக்கத் தாமானபடியே வருவராகில் ப்ரணயித்வத்துக்கு நமஸ்காரமாயித்தனையிறே. அவள் அழிவுக்கிட்ட வடிவுக்கிறே இவர் ஆலத்திவழிக்கிறது. [ஒன்றாய்] - வராஹஜாதீயமாத்ர மென்னுதல்; த்ரைலோக்யத்தையும் கண்செறியிட்டாப்போலே விம்மவளர்ந்தபடியாலே அத்விதீயமென்னுதல். [கிலங்கோட்டிடைக்கொண்டவெந்தாய்] - ப்ரளயங்கொண்டபூமியை அண்டபித்தியிலேபுக்குத் திருவெயிற்றிலே கொண்டு உதரித்தாப்போலே, ஸம்ஸாரார்ணவங்கொண்ட என்னை யெடுத்தவனே! [நீலக்கடல்கடைந்தாய்] - பிராட்டியை லபிக்கைக்காகக் கடலைக்கடைந்தவனே! [நீலக்கடல்] - கடைகிறவனுடைய நிழலீட்டாலேயாதல்; ஸகலௌஷதிகளையும் பொகடுகையால் வந்த நிறவேறுபாடாதல்; நிறத்தாலே - நீலரத்நத்தைச்சொல்லிற்றாய், தத்ப்ரசுரமான ரத்நாகரமென்னுதல். [உன்னைப்பெற்று இனிப்போக்குவனோ] ஸ்ரீபூமிப்பிராட்டியை லபிக்கைக்குப் பண்ணினவ்யாபாரத்தையும், பிராட்டியை லபிக்கைக்குப் பண்ணின வ்யாபாரத்தையும், என்னைப்பெறுகைக்

காகப்பண்ணி, என்னைக் கிட்டப்பெற்றபின்பு உன்னைப்போகவிடுவனோ? நீ க்ருஷிபண்ணின பலத்திலே யத்நயித்த நான் கைப்பட்ட ஸம்பத்தை விடக்கடவனோ?

பெற்றினிப்போக்குவனோ உன்னைஎன் தனிப்பேருயிரை*
உற்றவிருவினையாய் உயிராய்ப்பயனுமவையாய்*
முற்றவிம்மூவுலகும் பெருந்தூறாய்த்தூற்றில்புக்கு*
முற்றக்கரந்தொளிந்தாய் என்முதல்தனிவித்தேயோ. (8)

ஒ.—எட்டாம்பாட்டில், அத்யந்த துர்ஜ்ஞேயனான உன்னைப் பெற்றுவைத்து இனித்தப்பவிட உபாயமில்லை என்கிறார். [பெற்றுஇனி என்று தொடங்கி] - அத்யந்தவிலக்ஷணனாயிருந்து எனக்கு மிகவும் ஸத்தாதாரகனான உன்னைப் பெற்றுவைத்து இனித்தப்பவிடுவேனோ? [உற்ற என்று தொடங்கி] - ஆத்மாவைப்பற்றி விடாதேயிருக்கிற புண்யபாபரூப கர்மங்களையும் ஆத்மாத்தன்னையும் கர்மபலமானவற்றையும் இவையெல்லாமாகிற துர்ஜ்ஞேயஸ்வபாவமான த்ரைலோக்யமாகிற தூற்றை யுண்டாக்கி அந்த துர்ஜ்ஞேய ஸ்வபாவமான ஜகத்தினுள்ளேபுக்கு எங்கும் வ்யாபித்துத் தெரியாதபடி நின்றாய். [என்முதல் தனிவித்தேயோ] - எனக்கு முதலிலே இச்சையுமின்றிக்கேயிருக்க உன்பக்கலிலே ஔந்முக்யத்தைப் பிறப்பித்தவனே!

இ.—எட்டாம்பாட்டில், மிகவும் துர்ஜ்ஞேயனான உன்னைப் பெற்றுவைத்து இனிவிட உபாயமில்லை என்கிறார். [பெற்றுஇனிப் போக்குவனோ இத்யாதி] - ஓர் அச்சில்லாக்காசாய்ப் போய்த்தாகில் போகிறதென்றிருக்கிறேனோ? ஸமஸ்தகல்யாண குணாத்மகனாய் எனக்கு ஸத்தாஹேதுவான உன்னைப் பெற்றுவைத்து நான் விடுவேனோ? ஸர்வஜ்ஞனாய் ஸ்வதந்த்ரனாயிருக்கிறவனை விடுவேனோ என்கிறதுக்கு ஹேது—தன்னையொழிய ஜீவிக்கமாட்டாமை தோற்றவிருந்தால் அவன் கால்வாங்கமாட்டானென்னுமத்தாலே. இத்தலையில் நத்யஜேயமிருக்கிறபடி. [என்தனிப்பேருயிரை] - "உன்னை" என்றதினை வ்யாக்யானம்: உபமானரஹிதனாய், விபுவாய், எனக்கு தாரகனாயிருக்கிறவனை. சேதனனிற் காட்டில் வ்யாவ்ருத்தி சொல்லுகிறது. [உற்றவிருவினையாய்] - இவவாத்மாவோடு பிரிக்கவொண்ணாதபடி கலந்து, இருவகைப்பட்ட புண்யபாபங்களுக்கு நியாமகனாய். [உயிராய்] - அவற்றிலே சிறைப்பட்டுக் கிடக்கிற ஆத்மாவுக்கு நியாமகனாய். [பயனுமவையாய்] - அந்தப் புண்யபாபங்களுடைய பலங்களுக்கு நிர்வாஹகனாய். [முற்ற இம்மூவுலகும் இத்யாதி] - இவையெல்லாமாகிற த்ரைலோக்யமெனகிற தூற்றை உண்டாக்கி. பெருந்தூறென்கிறது - துர்ஜ்ஞேய ஸ்வபாவமுண்டாகையாலே. இந்தலோகத்தினுள்ளேபுக்கு எங்கும் வ்யாபித்து துர்ஜ்ஞேய ஸ்வபாவனாயிருந்தாய்! [என்முதல் தனி வித்தேயோ] - இப்படியிருந்துவைத்து உன்னை எனக்குப் பெறுகைக்கடியான அத்விதீயமான மூலஸுக்ருதத்துக்கு உத்பாதகனாய் உன்பக்கலிலே ஔன்முக்யத்தைப் பிறப்பித்தவனே! இப்படிப்பட்டிருக்கிற உன்னை ப்ரதமஸுக்ருதத்துக்கும் உத்பாதகனாய்க் கொண்டு வந்துதரப் பெற்ற நான் உன்னைப் போக்குவனோ"

ஈடு.—எட்டாம்பாட்டு. அத்யந்த துர்ஜ்ஞேயனான உன்னைப் பெற்றுவைத்து இனி விட உபாயமில்லையென்கிறார்.

[பெற்றினிப்போக்குவனோவுன்னை] - ஓர் அச்சில்லாக்காசாய்ப் போய்த்தாகில் போகிறதென்றிருக்கிறேனோ? அத்யந்தவ்லக்ஷணனாயிருந்த எனக்கு மிகவும் தாரகனான உன்னைப் பெற்றுவைத்து இனிவிடுவேனோ? [உன்னை] - உன்னை யேறியாயோ? [என் தனிப்பேருயிரை] - (உபமானரஹிதனாய், விபுவாய், எனக்குதாரகனாயிருக்கிறவனை). "'வரில்போகடேன், கெடில்தேடேன்" என்றிருக்கிற ஆத்மாவினளவோ? "உன்னை" என்கிறத்தை உபபாதிக்கிறது மேல். "உலகங்கட்கெல்லாமோருயிரேயோ" என்கிறபடியே-ஸர்வாத்மாவான உன்னை. "பெற்றினிப்போக்குவனோ" என்கிறது - இதரலாபங்களில் வ்யாவ்ருத்தி; "என் தனிப்பேருயிரை" என்கிறது - தம்மில் வ்யாவ்ருத்தி. [உற்ற இருவினையாய்] - உன்னை யொழிய வேறுசில கர்மங்களை ஸ்வதந்த்ரமாக நினைத்திருந்தேனாகிலன்றோ உன்னைவிடலாவது? ஆத்மாவைப்பற்றிவிடாதே கிடக்கிற புண்யபாபரூபகர்மங்களுக்கு நிர்வாஹகனாய். [உயிராய்] - அநுஷ்டாதாதான் உன்னை நீமன்றாகிலன்றோ உன்னைவிடலாவது? அநுஷ்டாதாவான ஆத்மாவுக்கு நிர்வாஹகனாய். [பயனுமவையாய்] - கர்மபலம் உன்னையொழிய ஸித்திக்குமென்றிருந்தேனாகிலன்றோ விடலாவது? அக்கர்ம

பலத்துக்கு நிர்வாஹகனாய். [மூற்றவிம் மூவுலகும் பெருந்தூறாய்] - (இவையெல்லாமாகிற த்ரை லோக்யமாகிற தூற்றைப்புண்டாக்கி) த்யாஜ்யமான ஸம்ஸாரந்தான் உன்னையொழிய வேறென்றும் நினைத்திருந்தேனுகிலன்றோ விடலாவது? பெருந்தூறென்கிறது - ஸம்ஸாரம் புக்கவிடமும் போந்தவிடமும் தெரியப்போகாதேயிருக்குமென்று. (அதாவது - துர்ஜ்ஞேயஸ்வ பாவமாயிருக்கை.) [தூறாய்] - ஸம்ஸாரத்தை உண்டாக்கி. [தூற்றில்புக்கு] - இதினுள்ளே புக்கு. [மூற்றக்கரந்து] - நீ வ்யாபியாததோரிடம் உண்டாகிலன்றோ விடலாவது? [ஒளித்தாய்] *யமாத்மாநவேத* என்கிறபடியே வ்யாப்யங்களறியாதபடி நின்றாய். கண்ணுக்குவிஷயமானுயா கில் பிழைப்பேனே? [என்முதல் தனிவித்தேயோ]-அல்லாதார்க்கு வெளியிடாதேயிருந்து எனக்கு வெளியிட்டவனே! [முதல் தனிவித்தேயோ] - நான் ஓராடிவரவின்றேனுகில் ஆறியிருக்கலாய்த் திறே. எனக்கு ப்ரதமஸுக்ருதமானவனே!

முதல்தனிவித்தேயோ முழுமூவுலகாதிக்கெல்லாம்*
முதல்தனியுன்னையுன்னை யெனைநாள்வந்துகூடுவன்நான்*
முதல்தனியங்குமிங்கும் முழுமுற்றுறுவாழ்பாழாய்*
முதல்தனிசூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த முடிவிலீயோ. (9)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், நான் ஜகத்சரீரனுயிருக்கிற இருப்பை உமக்குக்காட்டக் கண்டீராகில் வேறு அபேக்ஷிதமென்னென்னில்,—எனக்கு அத்தால் போராது; திருநாட்டிலே வ்யாவ்ருத்தமாகப் பரிபூர்ணனுயிருக்கிற இருப்பையும் காணவேணுமென்கிறார். [முதல்தனியென்று தொடங்கி] - மூவுலகு தொடக்கமானவற்றுக்கு ஒன்றொழியாமே எல்லாவற்றுக்கும் காரணமானவனே! ப்ரதாநனும் ஒப்பின்றிக்கே குணவிபூத்யாதிகளால் பரிபூர்ணனுன உன்னை, நான் என்று வந்துகூடுவேன்? [முதல் தனியென்று தொடங்கி] - மஹதாதி விகாரங்களுக்கு ஒப்பில்லாத காரணமாய்க் கார்யங்களெங்கும் முற்றும்வ்யாபித்துச் சேதநர்க்கு போகமோக்ஷங்களை விளைத்துக்கொள்ளுகைக்கிடான நிலமாயுள்ள ப்ரக்ருதி தத்த்வத்துக்கு ஆத்மாவாய், தனக்கொப்பின்றிக்கே நியாமகமாய், ப்ரக்ருதி ப்ராக்ருதங்களையடையப் பத்துத்திக்கும் வ்யாபித்து அபரிச்சேத்யமாயுள்ள ஆத்மதத்த்வத்துக்கு நிர்வாஹகனுனவனே!

இ.—ஒன்பதாம்பாட்டில், ஜகத்துக்கெல்லாம் சரீரியாயிருக்கிற இருப்பைக் காட்டியருளக் கண்டேன்: அத்தால்போராது; பரமபதத்திலே வ்யாவ்ருத்தமாக, பூர்ணனுயிருக்கிற இருப்பைக் காணவேணுமென்கிறார். [முதல்தனி இத்யாதி] - ஒன்றொழியாதபடி த்ரைலோக்யம் தொடக்கமானவற்றுக்கெல்லாம் த்ரிவிதகாரணமுமானவனே! [முதல்] - நிமித்தகாரணம். [தனி] - ஸஹகாரிகாரணம். [வித்து] - உபாதான காரணம். [முதல் தனியுன்னை] - இதுக்கெல்லாம் ப்ரதாநனுய் உபமானரஹிதனுயிருந்துள்ள உன்னை. [உன்னை] - ஜகத்காரணமாய் ப்ரதாநனுய் உபமானரஹிதனுயிருக்குமளவன்றியே, நித்யவிபூதியிலே அஸாதாரணவிக்ரஹயுக்தனுய் ஸமஸ்தகல்யாணகுணயுக்தனுய் நித்யஸூரிகள் அநுபவிக்கவிருக்கிற உன்னை. [எனைநாள் வந்துகூடுவன்] - என்றுவந்து கூடக்கடவேன்? அத்திரளில்நின்றும் பிறிகதிர்ப்பட்டுப் போந்தாரைப்போலே யிருக்கிறதாய்த்து இவர்க்கு யோக்யதையாலே - [முதல் தனியங்குமிங்கும் இத்யாதி] - ப்ரதாநமாய் உபமாநரஹிதமாய் அங்குமிங்குமான மஹதாதிகள் முழுதிலும். [முற்று] - எங்கும். [உறு] - உற்று. விகாரங்களுக்கெல்லாம் அத்விதீயமான காரணமாய் அவைதன்னை எங்கும் வ்யாபித்து. [வாழ்பாழாய்] - சேதநர்க்கு போகமோக்ஷங்களை விளைத்துக்கொள்ளுகைக்கிடான நிலமாயுள்ள ப்ரக்ருதிதத்த்வத்துக்கு ஆத்மாவாய். [முதல்தனி சூழ்ந்து இத்யாதி] - ப்ரக்ருதி ப்ராக்ருதங்களுக்கு நியாமகமாய் ப்ரதாநமாய் ஒப்பின்றிக்கே இவற்றையடையப் பத்துத்திக்கும் ஜ்ஞாநத்தாலே வ்யாபித்து நித்யமாயிருந்துள்ள ஆத்மவஸ்துவுக்கு நிர்வாஹகனுனவனே! [முதல் தனியங்குமிங்கும் முழுமுற்றுறு வாழ்பாழாய்] - முழுமூவுலகாதிக்கெல்லாம் முதல்தனிவித்தாய் - முதல்தனி சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த முடிவிலியாயிருக்கிற. [முதல்தனி உன்னை யுன்னையெனைநாள்வந்து கூடுவன்நான்] - கார்யகாரணோபயாவஸ்த்தமான சிதசித்துக்களுக்கு நிர்வாஹகனுயிருக்கிற இருப்பைக்காட்டி அநுபவிப்பித்த இவ்வளவு போராது. அஸாதாரண விக்ரஹயுக்தனுய் ஒருதேசவிசேஷத்திலேயிருக்கும் இருப்பை அநுபவிக்கவேணுமென்றதாய்த்து.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. "*தாநிஸர்வாணி தத்வபு:* *யஸ்யாத்மா சரீரம் - யஸ்யப்ருதிவீ சரீரம்* *தத்ஸர்வம்வை ஹரேஸ்தநு:* என்னும்படியே - எங்கும்வந்து முகங்காட்டலாம்படி ஜகத்சரீரனு

யிருக்கிற இருப்பைக் காட்டித்தந்தோமிறே" என்ன—அது உகந்தார்க்கும் உகவாதார்க்கும் பொதுவாயிருந்தது; ஆகாராந்தரமில்லையாகி லன்றோ "அதுவேயமையும்" என்று ஆறியிருக்கலாவது? இந்நாட்டிலே வ்யாவ்ருத்தமாகப் பரிபூர்ணமாயிருக்கிற இருப்பைக் காணவேணுமென்கிறார்.

[முதல்தனிவித்தேயோ முழுமூவுலகாதிக்கெல்லாம்] - ரக்ஷிக்கவென்றுபுக்கால் ரக்ஷ்ய வர்க்கம் ஸஹகரிக்கவேண்டாதவனே! மூவுலகு தொடக்கமான ஒன்றொழியாமல் எல்லாவற்றுக்கும் த்ரிவிதகாரணமுமானவனே. [முதல்] - நிமித்த காரணம். [தனி] - ஸஹகாரி காரணம். [வித்து] - உபாதாநகாரணம். [முதல்தனிஇத்யாதி] ப்ரதாநனாய், ஒப்பின்றிக்கே - குணவிபூத்யாதிகளால் பரிபூர்ணனாயிருந்த நீயான வுன்னை - என்று வந்து கூடுவன்? [எனைநாள் வந்து கூடுவன்] - அவன்கொடுத்த ஜ்ஞாநத்தாலே ஸ்வரூபத்தையுணர்ந்தார்க்கு, தன்னைப் பிராட்டிமாரோபாதியாகப் பேசலாயிருக்கிறபடி. [நான்] - பரமபதத்தில் கூவடநிந்தநான்: அஸாதாரண விக்ரஹமாசைப்பட்ட நான். [முதல் தனி யங்குமிங்கும் முழுமுற்றுறுவாழ் பாழாய்] - ப்ரதாநமாய், உபமாநரஹிதமாய், அங்குமிங்குமான மஹதாதிகள் முழுதிலும். [முற்று] - எங்கும். [உறு] - உற்று; எங்குமொக்க வ்யாபித்து. [வாழ்பாழாய்] - சேதநர்க்கு போகமோக்ஷங்களை விளைக்குமதாகை.

(ஒன்பதாம்பாட்டு) - இன்னம், *தாநிஸர்வாணி தத்வபு:* *யஸ்யாத்மா சரீரம்·யஸ்யப்ருதிவீ சரீரம்;* *தத்ஸர்வம்வை ஹரேஸ்தநு:* என்னும்படியே - எங்கும்வந்துமுகங்காட்டலாம்படி ஜகச்சரீரனாயிருக்கிறவிருப்பைக் காட்டித்தந்தோமிறே" என்ன; அது உகந்தார்க்கும் உகவாதார்க்கும் பொதுவாயிருந்தது; ஆகாராந்தரமில்லையாகிலன்றோ "அதுவேயமையும்" என்றாறியிருக்கலாவது? இந்நாட்டிலே வ்யாவ்ருத்தமாகப்பரிபூர்ணமாக இருக்கிற விருப்பையும் காணவேணுமென்கிறார்.

[முதல்தனிவித்தேயோ] - முதல் - நிமித்தகாரணம் - தனி - ஸஹகாரி காரணம். வித்து - உபாதாநகாரணம். [முழுமூவுலகாதிக்கெல்லாம்] - மூவுலகென்கையாலே - "க்ருதகம், அக்ருதகம், க்ருதகாக்ருதகம்" என்று மூன்று வகைப்பட்ட அண்டத்தைச் சொல்லுகிறது; முழுவென்கையாலே *அண்டாநாந்துஸஹஸ்ராணாம் ஸஹஸ்ராண்யயுதாநிச - ஈத்ருசாநாம்ததாதத்ர கோடிகோடி சதாநிச* என்று சொல்லப்பட்ட அஸங்க்யாதமான அண்டங்களைச் சொல்லுகிறது; ஆதிசப்தத்தாலே-இவ்வண்டங்களுக்குக் காரணமான ஆவரணங்களைச் சொல்லிற்று-ஆக, மூவுலகு தொடக்கமான ஒன்றொழியாமலெல்லாவற்றுக்கும் த்ரிவிதகாரணமுமானவனே! என்றபடி. [முதல் இத்யாதி] - ப்ரதாநனாய், ஒப்பின்றிக்கே - குணவிபூத்யாதிகளால் பரிபூர்ணனாய், ஜகச்சரீரியாயிருக்கிற உன்னை. ஆக, இவ்வளவும் - லீலாவிபூதிவிசிஷ்டனாயிருக்கிற விருப்பைச் சொல்லிற்று; மேல்-நித்யவிபூதியிலே ஸூரிபோக்யமாயிருக்கும் வடிவழகைக் கண்டநுபவிக்கவேணுமென்கிறார். [உன்னை] - நித்யவிபூதியோகத்தைச் சொல்லுகிறது. "உன்னை" என்ன, நித்யவிபூதியோகத்தைக்காட்டுமோவென்னில்,—காட்டும்; "ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்பக் - கண்டசதிர்" என்கிறபடியே - அவளையும் அவனையும் சொல்லவே த்ரிபாத்விபூதியுமடங்கிற்றிறே. [உன்னை] - "முடிச்சோதியா யுனதுமுகச்சோதி மலர்ந்ததுவோ" என்று விகல்பிக்கலாம்படியிருக்கிற திருவபிஷேகமும், "மாயன்குழல்" என்னும்படியான திருக்குழலும், "கோளிழைத்தாமரையும் கொடியும் பவளமும்வில்லும் - கோளிழைத்தண்முத்தமும் தளிரும் குளிர்வான்பிறையும் - கோளிழையாவுடைய கொழுஞ்சோதிவட்டங்கொல்" என்னும்படியான அழகிய திருமுகமும், நாச்சிமாருடைய ஹஸ்தாபரணங்களாலே முத்ரிதமாய் க்ரமுகதருணக்ரீவா கம்பு ப்ரதிமமான திருக்கழுத்தும், கற்பகக்காவன நற்பலதோள்களும், பெரிய பிராட்டியார்க்குக் கோயிற்கட்டணமாய் நித்யாநுபவம்பண்ணச்செய்தேயும் "அகலகில்லேன்" என்னும்படி அவளைப்பிச்சேற்றும்படி குருமாமணிப்பூண்குலாவித்திகழும் திருமார்வும், "உள்ளத்துள்நின்றுலாகின்றதே" என்கிறபடியே-நித்யமுக்தர் ஹ்ருதயங்களிலே அழகுசெண்டேறுகிற திருவுதரபந்தமும், ஸௌந்தர்யஸாகரமிட்டளப்பட்டுச்சுழித்தாற்போலேயிருக்கிற திருவுந்தியும், ஒருவிசேஷணமிடவொண்ணாதே "அல்குலும்" என்னும்படியிருக்கிற அல்குலும், சிற்றி

டையும், ஸந்த்யாராகரஞ்சிதமான ஆகாசம்போலே யிருக்கத் திருவரைபூத்தாற்போலேயிருக்கிற அந்திபோல்நிறத்தாடையும், ரம்பாஸ்தம்பாதிகம்பீரமான திருத்துடைகளும், தாமரைநாளம்போலேகண்டவிதங்களான திருக்கணைக்கால்களும். சங்க்ரதாங்ககல்பகத்வஜாரவிந்தாங்குச வஜ்ரலாஞ்சனமாய் நாய்ச்சிமாருங்கூடக்கூசித்தொடவேண்டும்படி மெல்லடியாய் "தேனேமலரும்" என்கிறபடியே நிரதிசயபோக்யங்களான திருவடிகளையும் உடையையாய், ஏழுலகும் தனிக்கோல்செல்ல வீற்றிருந்தருளுகிற உன்னை. [எனைநாள்வந்து கூடுவன்] - என்று வந்துகிட்டக்கடவேன்? மயர்வறமதிநலமருளப்பெற்றவராகையாலே பிராட்டிமாரோபாதியாகப் பேசவாயிருக்கிறபடி. [நான்] - அவ்வடிவைக்காண ஆசைப்பட்ட நான். [முதல்தனியங்குமிங்கும் முழுமுற்றுறுவாழ்பாழாய்] - ப்ரதானமாய், உபமாநரஹிதமாய், அங்குமிங்குமான மஹதாதிகள் முழுதிலும். [முற்று] - முற்றும். எங்குமென்றபடி. [உறு] - உற்று; வ்யாபித்து. [வாழ்பாழாய்] - சேதநர்க்கு போகமோக்ஷங்களை விளைத்துக்கொள்ளுகைக் கிடாகக் கருநிலமாயுள்ள ப்ரக்ருதிதத்த்வத்துக்கு ஆத்மாவாய். [முதல் இத்யாதி] - ப்ரக்ருதியைப்பற்றத் தான் ப்ரதானமாய் நியாமகமாய். [தனி] - உபமாநரஹிதமாய். [சூழ்ந்து] - ப்ரக்ருதி ப்ராக்ருதங்களடைய வ்யாபித்து. வ்யாபிக்குமிடத்தில், [அகன்றாழ்ந்துயர்ந்த] - ஜ்ஞாநத்தாலே பத்துத்திக்கும் வ்யாபித்த. [முடிவிலீயோ] - அபரிச்சேத்யமான ஆத்மதத்த்வத்துக்கு நிர்வாஹகனானவனே! [முடிவில்] - முடிவென்று - நாசமாய், ப்ரக்ருதிபோலே நச்வரமன்றிக்கே நித்யமான ஆத்மதத்த்வமென்றுமாம். முதல்தனி அங்குமிங்கும் முழுமுற்றுறுவாழ்பாழாய் - முழுமூவுலகாதிக்கெல்லாம் - முதல்தனிவித்தாய் - முதல்தனிசூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த முடிவிலியாயிருக்கிற - முதல்தனியுன்னைக்கண்டேன்; தேசவிசேஷத்திலே ஸமரிபோக்யனாயிருக்கிறவுன்னை எனைநாள்வந்து கூடுவன் நான்? காரணகார்யோபயாவஸ்த்தமான சிதசித்துக்களுக்கு நிர்வாஹகனாயிருக்கிற இருப்பைக்காட்டி யநுபவிப்பித்த இவ்வளவுபோராது; அஸாதாரணவிக்ரஹயுக்தனாய் ஒருதேசவிசேஷத்திலிருக்கு மிருப்பைக் கண்டு அநுபவிக்கவேணுமென்றதாய்த்து.

சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த முடிவில்பெரும்பாழேயோ*
சூழ்ந்ததனில்பெரிய பரநன்மலர்ச்சோதீயோ*
சூழ்ந்ததனில்பெரிய சுடர்ஞானவின்பமேயோ*
சூழ்ந்ததனில்பெரிய என்னவாவறச்சூழ்ந்தாயே. (10)

ஒ.—பத்தாம்பாட்டில், எம்பெருமானுக்கு இவர்அபேக்ஷிதம் செய்தல்லது நிற்கவொண்ணாதபடி பெரியபிராட்டியார்ஆணையிட்டுத் தடுத்துப் பெரிய ஆர்த்தியோடே கூப்பிட்ட இவர் ப்ரார்த்தித்தபடியே பரிபூர்ணனாய்க்கொண்டு வந்து ஸம்ச்லேஷித்தருளக்கண்டு அபரிச்சேத்யமான ப்ரக்ருதிதத்த்வத்திலும் ஆத்மதத்த்வத்திலும் உன்னுடைய ஸங்கல்பரூபஜ்ஞாநத்திலும் பெரிதான என்னுடைய விடாயெல்லாம்தீர வந்து என்னோடே கலந்தாய்; என்னுடைய மநோரதமும் ஒருபடி முடியப்பெற்றேன் என்கிறார். [சூழ்ந்தென்று தொடங்கி] - பத்துத்திக்குக்களிலும் வ்யாப்தமாய் அபரிச்சேத்யமாயிருக்கிற ப்ரக்ருதி தத்த்வத்துக்கு ஆத்மாவாய் நிற்கிறவனே! [சூழ்ந்தென்று தொடங்கி] - அத்தையுங்கூட வ்யாபித்து அதுக்கு நியாமகனான ஆத்மதத்த்வத்துக்கு ஆத்மாவானவனே! [சூழ்ந்தென்று தொடங்கி] - ப்ரக்ருதி புருஷதத்த்வங்களில் இரண்டையும் வ்யாபித்து அவற்றுக்கும் நிர்வாஹகமாய் ஸங்கல்பரூபமாய் ஸுகரூபமானஜ்ஞாநத்தையுடையவனே! சுடர்ஞானவின்பம் என்று - எம்பெருமானைச் சொல்லிற்றாகவுமாம். [சூழ்ந்தென்று தொடங்கி] - அதிலும் பெரிதான என்னுடையவிடாய் கெடும்படி வந்து ஸம்ச்லேஷித்தாயே.

இ.—பத்தாம்பாட்டில், இவர் இப்படி தம்மபேக்ஷிதம் செய்தல்லது நிற்கவொண்ணாதபடி பிராட்டியாணையிட்டுப் பெரியவார்த்தியோடேகூப்பிட்டு இவர்ப்ரார்த்தித்தபடியே பரிபூர்ணனாய்க்கொண்டு வந்து ஸம்ச்லேஷிக்கக்கண்டு, அபரிச்சேத்யமான என்னுடைய விடாய்தீரவந்து கலந்தாய்; என்னுடைய மநோரதமும் ஒருபடிமுடியப்பெற்றேனென்கிறார். [சூழ்ந்தகன்று இத்யாதி] - இப்போது ப்ரக்ருதிபுருஷாதிகளைச் சொல்லுகிறது, தம்முடைய அபிநிவேசம் பெரியவற்றிற்பெரியதென்று சொல்லுகைக்காக. அவற்றுக்கு

ஈச்வரனையொழிய ப்ருதக்ஸ்த்திதி யில்லாமையாலே அவ்வளவும் சொல்லுகிறது. [சூழ்ந்து இத்யாதி]- ஸ்வகார்யமான மஹதாதிகளைப் பத்துத்திக்கிலும் புக்கு எங்கும்வ்யாபிக்க, நித்யமாய், அபரிச்சேத்யமாய், சேதநர்க்குப் புருஷார்த்தந்தை விளைத்துக்கொள்ளலாம் நிலமான ப்ரக்ருதிதத்த்வத்துக்கு ஆத்மாவானவனே! [சூழ்ந்து இத்யாதி] - அத்தையும் வ்யாபித்து அதிற்காட்டிற் பெரிதாய், அதுக்கு நியந்தாவாகையாலே மேலாய், விகாராதிகளில்லாமையாலே விலக்ஷணமாய், விகஸ்வர தேஜோரூபமான ஆத்மவஸ்துவுக்கும் ஆத்மாவானவனே! [சூழ்ந்து இத்யாதி] - அவையிரண்டையும் வ்யாபித்து அவற்றுக்கு நிர்வாஹகமாய் ஸங்கல்பரூபமான ஜ்ஞாநத்தையுடையவனே யென்று ஸங்கல்பரூப ஜ்ஞாநத்தைச் சொல்லுதல்; 'சுடர் ஞானவின்பம்' என்று - பகவத்ஸ்வரூபத்தைச் சொல்லுதல். [சூழ்ந்து இத்யாதி] - தத்த்வத்ரயத்தையும் விளாக்குலைகொண்டு அதுகுளப்படியாம்படி பெரிதான என்னுடைய அபிநிவேசத்தை, அதிலும் பெரிய உன்னுடைய அபிநிவேசத்தைக்காட்டி வந்து ஸம்ச்லேஷித்தாயே, என்னுடைய கூப்பீடும் ஒருபடி போ வும்படி பண்ணுவதே! "அங்கேபரதமாரோப்ய முதித:பரிஷஸ்வஜே" என்று மீண்டுபுகுந்து ஸ்ரீபரதாழ்வானை மடியிலேவைத்து உச்சிமோந்து உகந்தாப்போலேயாய்த்து இவருடையவிடாயும்கெடும்படி வந்து கலந்தது.

௰.—பத்தாம்பாட்டு. எம்பெருமானுக்கு இவர் அபேக்ஷிதம் செய்தல்லது நிற்க வொண்ணாதபடி பெரியபிராட்டியாராணையிட்டுத் தடுத்துப் பெரிய ஆர்த்தியோடே கூப்பிட்டு இவர்ப்ரார்த்தித்தபடியே பரிபூர்ணனாய்க்கொண்டு வந்து ஸம்ச்லேஷித்தருளக்கண்டு, அபரிச்ச் சேத்யமான ப்ரக்ருதிதத்த்வத்திலும் ஆத்மதத்த்வத்திலும் உன்னுடைய ஸங்கல்பரூபஜ் ஞாநத்திலும்பெரிதான என்னுடையவிடாயெல்லாந்தீரவந்து என்னோடே கலந்தாய்; என் னுடைய மநோரதமும் ஒருபடி முடியப்பெற்றேனென்கிறார். இனிஇல்லை யென்னும்படி என்னைவிடாய்ப்பித்து அதுக்கு அவ்வருகானவிடாயை யுடையையாய்க்கொண்டு என்னோடே கலந்த உன்னுடைய விடாயும் ஒருபடிகெட்டதே என்கிறாரகவுமாம்; *அங்கே பரதமாரோப்ய முதித:பரிஷஸ்வஜே* என்னும்படியே.

[சூழ்ந்து இத்யாதி] - இப்போது ப்ரக்ருதிபுருஷர்களைச்சொல்லுகிறது, தம்முடைய அபிநி வேசம்பெரியவற்றிலும்பெரியது என்கைக்காக. அவற்றுக்கும் ஈச்வரனையொழிய ப்ருதக்ஸ்த்திதி யில்லாமையாலே அவ்வளவும்சொல்லுகிறது. ஸ்வகார்யமான மஹதாதிகளைப் பத்துத்திக் கிலும்புக்கு எங்குமொக்கவ்யாபித்து, நித்யமாய் அபரிச்சேத்யமாய் சேதநர்க்குப்புருஷார்த் தத்தைவிளைத்துக் கொள்ளலாம்நிலமான ப்ரக்ருதிதத்த்வத்துக்குஆத்மாவானவனே! [சூழ்ந்து இத்யாதி] - அத்தையும் வ்யாபித்து, அதிற்காட்டிற் பெரிதாய், அதுக்கு நியந்தாவாகையாலே மேலாய், விகாராதிகளில்லாமையாலே விலக்ஷணமாய், விகஸ்வர தேஜோரூபமான ஆத்மவஸ் துவுக்கும் ஆத்மாவானவனே! [சூழ்ந்து இத்யாதி] - அவையிரண்டையும் வ்யாபித்து, அவற்றுக்கு நிர்வாஹகமாய் ஸங்கல்பரூபமாய் ஸ்வரூபமான ஜ்ஞாநத்தை யுடையவனே! என்று ஸங்கல்பரூபஜ்ஞாநத்தைத் சொல்லுதல்; "சுடர்ஞானவின்பமே" என்று - ப்ரகாசரூ பனுமாய் ஸ்வரூபனுமானவனே என்று எம்பெருமானைச்சொல்லுதல், [சூழ்ந்து இத்யாதி] - தத்த்வத்ரயத்தையும் விளாக்குலை கொண்டு அவை குளப்படியாம்படி பெரிதான என்னுடைய அபிநிவேசத்தை, அதிலும்பெரிய உன் அபிநிவேசத்தைக்காட்டி வந்து ஸம்ச்லேஷித்தாயே! என்னுடைய கூப்பீடும் ஒருபடி போவும்படிபண்ணிற்றே! *அங்கே பரதமாரோப்ய முதித:பரிஷஸ் வஜே* என்று மீண்டுபுகுந்து ஸ்ரீபரதாழ்வானை மடியிலேவைத்து உச்சியைமோந்து உகந்தணைத்தாப்போலேயாய்த்து, இவருடைய விடாய்கெடும்படி கலந்தது.

அவாவறச்சூழ அரியை அயனையரனையலற்றி*
அவாவற்றுவிடுபெற்ற குருகூர்ச்சடகோபன்சொன்ன*
அவாவிலந்தாதிகளால் இவையாயிரமும்* முடிந்த
அவாவிலந்தாதியிப்பத்தறிந்தார் பிறந்தாருயர்ந்தே. (11)

ஒ.—நிகமத்தில், அகிலஹேயப்ரத்யநீக கல்யாணைகதாந ஜ்ஞாநாநந்தைகஸ்வரூபனும் உயர்வற வுயர்நலமுடையனும் அபரிமித திவ்யபூஷண பூஷிதனும் ஸர்வாயுதோபேதனும் லக்ஷ்மீபூமிநீளாநாயக னும் அஸ்த்ரசரோபயசங்கிகனான அநந்தவைநதேயாதிகளாலே அநவரத பரிசர்யமாண சரணநளினனும்

ஸ்ரீவைகுண்ட நிலயனான ஸர்வேச்வரனும் ஸ்வவிபூதிபூதரான ப்ரஹ்மருத்ரர்களுக்கு அந்தராத்மாவாய்த் தன்னைக் காணவேணுமென்று விடாய்த்து ஆச்ரயிக்குமவர்களுடைய விடாய்தீர ஸம்ச்லேஷிக்கும் ஸ்வபாவனான எம்பெருமானைக் காணவேணுமென்று கூப்பிட்டு, அவனைப்பெற்று நிர்து:க்கராய் நிரஸ்தஸமஸ்த ப்ரதிபந்தகரான ஆழ்வாருடைய பக்திபலாத்காரபூர்வகமாக பிறந்த ஆயிரந் திருவாய்மொழியிலும் வைத்துக்கொண்டு கீழ்ச்சொன்னவைபோலன்றிக்கே பெற்றல்லது தரிக்க முடியாதபடியான பரமபக்தியாலே பிறந்த அந்தாதியான இத்திருவாய்மொழி வல்லார் ஸம்ஸாரத்திலே பிறந்துவைத்தே அயர்வறுமமரர்களோ டொப்பர் என்கிறார். 'அயனை அரனை அவாவறச் சூழரியை' என்றுமாம். முதலிலே, "மயர்வற மதிநல மருளினன்" என்றார்; நடுவு பலவிடங்களிலும், அவனே அபாச்ரய மென்றார்; முடிவிலும், "இன்று என்னைப்பொருளாக்கி" என்றும் "என் தலைமிசையாய் வந்திட்டு" என்றும் - எம்பெருமானுடைய நிர்ஹேதுக விஷயீகாரத்தையே தமக்கு உபாயமாகப்பேசித் தலைக்கட்டினார்; இங்ஙனே யிருக்கிற நிர்ஹேதுக விஷயீகாரத்துக்கு அடியான ச்ரிய:பதித்வத்தை "மலர்கள்விரும்பும் நமரும்பெறலடிகள்" என்று முதலிலே தொடங்கி நடுவு பலவிடங்களிலும் ப்ரஸ்தாவித்துக் கொடுபோந்து, முடிவிலே "திருவாணை நின்னாணை" என்றும் "கோலமலர்ப்பாவைக்கு அன்பாகிய என்அன்பேயோ" என்றும் தலைக்கட்டினார்; ததியருடைய ப்ராப்யதையையும் முதலிலே "அயர்வறு மமரர்கள்" என்று தொடங்கி, நடுவு பலவிடங்களிலும் "அடியார்கள்குழாங்களை - உடன்கூடுவதென்றுகொலோ" என்றும், பயிலுஞ் சுடரொளி நெடுமாற்கடிமையகப்படப் பரக்கப்பேசிக் கொடுபோந்து, முடிவிலும் "அந்தமில்பேரின்பத் தடியரோடிருந்தமை" என்றும் தலைக்கட்டினார்; எம்பெருமானுக்கு ஸௌசீல்யமென்றுகொண்டு, "உரவிறேடியனைந்திருந்தேங்கிய வெளிவு-எத்திறம்' என்றுதொடங்கிப் பலவிடங்களிலும் பேசினார் ; இவனுக்கு அஸாதாரணமான திருநாமம் நாராயணனென்னுமிடம், "வண்புகழ் நாரணன்" என்று தொடங்கிப் பலவிடங்களிலும் பேசிக்கொடுபோந்து, "வாழ்புகழ்நாரணன்" என்று தலைக்கட்டினார்; ஆழ்வார் இப்படி ஆறி..........யால் இவ்வைந்து அர்த்தமுமே இப் ப்ரபந்தத்துக்கு ப்ரதாநார்த்தங்கள் என்று கருத்து.

நஞ்சீயர் திருவடிகளே சரணம்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியை அப்யஸித்தார் ஆழ்வாருடைய க்லேசமின்றியே ப்பலத்திலே அந்வயிப்பரென்கிறார். [அவாவறச் சூழரியை] - நித்யமான ஸ்வரூபத்தையும் ஸ்வாபாவிகமான கல்யாணகுணங்களையும் ஸௌந்தர்யாதி விசிஷ்டமான நித்யமங்கள விக்ரஹத்தையும் அபரிமித திவ்யபூஷணங்களையும் சங்கசக்ராதி திவ்யாயுதங்களையும் லக்ஷ்மீப்ரப்ருதிதிவ்யமஹிஷீ வர்க்கத்தையும் உடையனாய் அஸ்த்ராபேயசங்கிகளான நித்யஸூரிகளாலே பரிசர்யமாணமான திருவடித்தாமரைகளை யுடையனாயிருந் துள்ளவனை. [அயனை அரனை] - ஸ்வவிபூதிபூதரான ப்ரஹ்மருத்ரர்களுக்கு அந்தராத்மாவானவனை. அவாவறச் சூழ்கையாவது; தன்னைக் காணவேணுமென்று விடாய்த்த ஆச்ரிதருடைய விடாய்தீர ஸம்ச்லேஷிக்கை. இஸ்ஸாமாநாதிகரண்யத்தாலே - ப்ரஹ்மருத்ரர்கள்பக்கல் ஈச்வரத்வசங்கை அறுக்கிறார்: அவர்களுடைய ஸத்தாஸ்த்திதிப்ரவ்ருத்திநிவ்ருத்திகள் ஈச்வராதீநமாகையாலே அவர்களுக்குப் பாரதந்த்ர்யமே ஸ்வரூபம். நிர்வாஹகத்வம் கர்மத்தாலே வந்தது. இஸ்ஸாமாநாதிகரண்யத்தில் ஐக்யநயின்றியே எளியராயிருப்பார்க்கு நிர்வஹிப்பதும் சிலபுடைகளுண்டு. 'அயனை அரனை அவாவற்று அரியை அலற்றி வீடுபெற்ற' - என்னுதல்; 'அயனையரனை-அவாவறச்சூழரியை அலற்றி அவா அற்று வீடுபெற்ற' என்னுதல். 'அலற்றி அவாவற்று வீடுபெற்ற' - கூப்பிட்டு அவனைப்பெற்று நிரஸ்தஸமஸ்த ப்ரதிபந்தகராகையாலே நிர்த்து:க்கரான ஆழ்வார் அருளிச்செய்த. [அவாவிலந்தாதிகளால் இவையாயிரமும்] - பக்திபலாத்காரத்தாலே பிறந்த ஆயிரந்திருவாய்மொழியிலும். இவரைச் சொல்லுவித்த அபிநிவேசம்-ப்ரேரகனான மைத்ரேயனுடைய ஸ்த்தாநத்திலே நிற்கிறதாய்த்து. [முடிந்தவவாவிலந்தாதி யிப்பத்து]-பெற்றல்லது தரிக்கவொண்ணாதபடியான பரமபக்தியாலே பிறந்ததாய்த்து இத்திருவாய்மொழி. கீழடைய - பரபக்திபிறந்து சொல்லிற்று. பரமபக்திபிறந்து சொல்லிற்றாய்த்து இத்திருவாய்மொழி. [அறிந்தார் பிறந்தார் உயர்ந்தே] - இவற்றை அறிந்தவர்கள் ஸம்ஸாரத்திலே பிறந்துவைத்து நித்யஸூரிகளோடொப்பர்கள். முதல் திருவாய்மொழியில், நாராயண சப்தார்த்தத்தை அநுஸந்தித்துப் பிறர்க்கு உபதேசிக்கிற விடத்திலே "வண்புகழ் நாரணன்" என்று ப்ரயோகித்து", "அமைவுடைநாரணன்" என்றும் "செல்வநாரணன்" என்றும் "நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன்" என்றும் "திருநாரணன்" என்றும் "நாராயணன் நங்கள் பிரான்" என்றும் சொல்லிக்கொடு போந்து, "திண்ணம் நாரணமே" என்றும் "வாழ்புகழ் நாரணன்" என்றும் தலைக்கட்டுகையாலே, அவனுக்கு அஸாதாரணமான திருநாமம் இதுவே என்னுமிடம் தோற்றுகிறது. முதலிலே "மலர்மகள் விரும்பும்" என்றும் "திருவுடையடிகள்" என்றும் "கமலமலர்மேற்செய்யாள்" என்றும் "நமக்கும் பூவின்மிசை நங்கைக்கும் இன்பன்" என்றும் சொல்லிக்கொடுபோந்து, "திருவாணை நின்னாணை கண்டாய்" என்றும் "கோலமலர்ப்பாவைக்கு அன்பாகிய என் அன்பேயோ" என்றும் தலைக்கட்டுகையாலே - ஸ்ரீமானான நாராயணனே ப்ராப்யமும் ப்ராபகமும் என்று இவர்க்குப் பக்ஷமென்னுமிடம் தோற்றிற்று. இவ்வர்த்தம் உபநிஷத்ப்ரஸித்தமும்; அநந்யபரமான நாராயணாநுவாகத்திலே, நாராயண சப்தத்தாலே ஸர்வாதிகனைச் சொல்லி, ஹ்ரீச்சதே "லக்ஷ்மீச்ச பத்ந்யௌ" என்று உத்தரநாராயணத்தே சொல்லிற்று. முதலிலே, "மயர்வறமதி நல மருளினன்" என்றும் "எனதாவிதந்தொழிந்தேன் இனி

மீள்வதென்பதுண்டே" என்றும் சொல்லி, நாலுப்ரயோக மெடுத்து சரணம் புக்கு, தேவிமாராவாரிலே "தாள்களை எனக்கே தலைத்தலைச்சிறப்பத்தந்த" என்றும் சொல்லிக்கொடுபோந்து, "இன்று என்னைப் பொருளாக்கித் தன்னை என்னுள் வைத்தான் அன்று என்னைப்புறம்போகப் புணர்த்ததென்செய்வான்" என்றும் தலைக்கட்டுகையாலே - அம்மிதுநத்தைப் பெறுகைக்கு ஸாதநமும் அவனுடைய நிர்ஹேதுக க்ருபையென்னுமிடம் தோற்றிற்று; முதலிலே "அயர்வறுமமரர்களதிபதி" என்று தொடங்கி "அடியார்கள் குழாங்களை-உடன்கூடுவதென்றுகொலோ" என்று ப்ரார்த்தித்து, பயிலுஞ்சுடரொளி-நெடுமாற்கடிமையிலே ததீயசேஷத்வத்தைப் பரக்கச்சொல்லி, "அடியரோடிருந்தமை" என்று தலைக்கட்டுகையாலே - பகவத் சேஷத்வத்தினுடைய எல்லையாகிறது - ததீயசேஷத்வமென்னுமிடம் தோற்றிற்று. இவ்வர்த்தங்கள் இப் ப்ரபந்தத்துக்கு ப்ரதாநார்த்தமென்று கருத்து. பகவந்ந்யஸ்தபரரா யிருக்கும் அதிகாரிகளுக்குப் போதுபோக்கு - இப் ப்ரபந்தம்; "தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்றும் "கோட்டாரார் வானவர்கள்" என்றும் தாமே அருளிச்செய்தாரிறே.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

ஈடு.—நிகமத்தில், அகிலஹேயப்ரத்யநீக கல்யாணைகதாந ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூபனாய், உயர்வறவுயர்நலமுடையனாய், ஸௌந்தர்யாதிவிசிஷ்டமான நித்யமங்கள விக்ரஹயுக்தனாய், அபரிமிததிவ்யபூஷணபூஷிதனாய், ஸர்வாயுதோபேதனாய், லக்ஷ்மீபூமிநீளாநாயகனாய், அஸ்த்தாநே பயசங்கிகளான அநந்தவைநதேயாதிகளாலே அநவரதபரிசர்யமாண சரணநளிநனாய், ஸ்ரீவைகுண்டநிலயனாய், ஸர்வேச்வரனாய் ஸ்வவிபூதிபூதரான ப்ரஹ்மருத்ராதிகளுக்கும் அந்தராத்மாவாய், தன்னைக் காணவேணுமென்று விடாய்த்து ஆச்ரயிக்குமவர்களுடைய விடாய்தீர ஸம்ச்லேஷிக்கும் ஸ்வபாவனான எம்பெருமானைக் காணவேணுமென்று கூப்பிட்டு அவனைப்பெற்று நிர்துக்கராய் நிரஸ்தஸமஸ்தப்ரதிபந்தகரான ஆழ்வாருடையபக்திபலாத்கார பூர்வகமாகப்பிறந்தது ஆயிரந்திருவாய்மொழியும்; அவற்றில் வைத்துக்கொண்டு, கீழ்ச்சொன்னவை போலன்றிக்கே, பெற்றல்லது தரிக்கவொண்ணாதபடியான பரமபக்தியாலே பிறந்த அந்தாதியான இத்திருவாய்மொழிவல்லார், ஸம்ஸாரத்திலே பிறந்துவைத்தே அயர்வறுமமரர்களோடொப்பர் என்கிறார்:

[அவாவறச்சூழரியை] - ஸர்வாபேக்ஷிதப்ரதனை ஸர்வேச்வரனைத் தம்முடைய அபிநிவேசம்கெட வந்து கலந்தபடியாலே வேறொரு விசேஷணமிடாதே அதுதன்னையே சொல்லுகிறார். [அயனையரனை] - ஸ்வவிபூதிபூதரான ப்ரஹ்மருத்ரர்களுக்கு அந்தராத்மாவானவனை. அவாவறச்சூழ்கையாவது - தன்னைக் காணவேணுமென்று விடாய்த்த ஆச்ரிதருடைய விடாய் தீரஸம்ச்லேஷிக்கை. 'அயனை, அரனை' என்கிற இஸ்ஸாமாநாதிகரண்யத்தால் - ப்ரஹ்மருத்ரர்கள்பக்கல் ஈச்வரத்வசங்கையை யறுக்கிறார். அவர்களுடைய ஸத்தாஸ்திதி ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகள் ஈச்வராதீநமாகையாலே அவர்களுக்குப் பாரதந்த்ர்யமே ஸ்வரூபம்; நிர்வாஹகத்வம் கர்மாதீநமாய் வந்தவித்தனை. இஸ்ஸாமாநாதிகரண்யத்தில் ஜ்ஞாநமின்றியே எளியரா யிருப்பார்க்கு நிர்வஹிப்பதும் சில புடைகளுண்டு. 'அயனை யரனை - அவாவற்று - அரியை - அலற்றி - வீடு பெற்ற' என்னுதல். அயனையரனை - அவாவறச்சூழரியை அலற்றி, அவாவற்று வீடுபெற்ற என்னுதல். [அலற்றி அவாவற்று வீடுபெற்ற] - கூப்பிட்டு அவனைப்பெற்று நிரஸ்த ஸமஸ்தப்ரதிபந்தகராகையாலே நிர்த்து:க்கரான ஆழ்வார் அருளிச்செய்த. [அவாவிலந்தாதிகளால் இவையாயிரமும்] பக்திபலாத்காரத்தாலே பிறந்த ஆயிரந்திருவாய்மொழியிலும். இவருடைய ஸ்ரீமைத்ரேயபகவான் அவா. அவா உபாத்யாயராக நடத்த நடந்த ஆயிரம். ஆழ்வார்க்குப்பின்பு நூறாயிரம் கவிகள்பேரு முண்டாய்த்து; அவர்கள் கவிகளோடுகடலோசையோடு வாசியற்று அவற்றைவிட்டு இவற்றைப்பற்றித்துவளுகைக்கு அடி - இவருடைய பக்த்யபிநிவேசம்வழிந்து புறப்பட்டசொல்லாகையிறே. [முடிந்த அவாவிலந்தாதி இப்பத்து]- தரிக்கவொண்ணாதபடியான பரமபக்தியாலே பிறந்ததாய்த்து இத்திருவாய்மொழி. இவ்வவாவுக்கு உதவிற்றிலனாகில் ஈச்வரனுக்கும் சைதந்யமின்றிக்கேயொழியும். சூழ்விசும்பணிமுகிலுக்குக் கீழ், பரபக்தியாலேசென்றது; சூழ்விசும்பணிமுகில், பரஜ்ஞாநத்தாலே; இத் திருவாய்மொழி, பரமபக்தியாலே. பகவத்ப்ரஸாதம் பாதியும் தாங்கள் பாதியுமாகச் சொல்லுமவர்களுக்கு, சரீராவஸாநத்திலே இப்பரபக்த்யாதிகளுண்டாம்; இவர் அடியிலே மயர்வற மதிநலமருளப்பெறுகையாலே எழுந்தருளியிருக்கச்செய்தே யுண்டாய்த்தின. கர்மஜ்ஞாநாநுக்ருஹீதையான பக்தியினுடைய ஸ்த்தாநத்திலே ஸர்வேச்வரனுடைய அருள்நின்று, அது அடியாகப் பிறந்த பரபக்த்யாதிகளிறே இவரது. [அறிந்தார் பிறந்தாருயர்ந்தே] - இத்தையறிந்தவர்கள், ஸம்ஸாரத்திலே பிறந்துவைத்தே நித்யஸூரிகளோடொப்பர். [பிறந்தேயுயர்ந்தார்] - ஸர்வேச்வரனுடைய அவதாரத்தோபாதி இவர்களுடைய பிறப்பும்.

வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்.

மணவாள மாமுனிகள் அருளிச்செய்த

திருவாய்மொழி நூற்றந்தாதி

தாளடைந்தோர் தங்கட்குத் தானேவழித் துணையாம்*
காளமேகத்தைக் கதியாக்கி*—மீளுதலாம்
ஏதமிலாவிண்ணுலகில் ஏகவெண்ணும்மாறனென*
கேதமுள்ளதெல்லாம் கெடும். 91

கெடுமிடர்வைகுந்தத்தைக் கிட்டினாப்போல*
தடமுடையனந்தபுரந் தன்னில்—*படவரவில்
கண்டுயில்மாற்காட்செய்யக் காதலித்தான்மாறன்*உயர்
விண்டனிலுள்ளோர் வியப்பவே. 92

வேய்மருதோளிந்திரைகோன் மேவுகின்றதேசத்தை*
தான்மருவாத்தன்மையினால் * தன்னையின்னம்—பூமியிலே
வைக்குமெனச்சங்கித்து மால்தெளிவிக்கத்தெளிந்த*
தக்கபுகழ்மாற னெங்கள்சார்வு. 93

சார்வாகவேயடியில் தானுரைத்தபத்திதான்*
சீரார்பலத்துடனே சேர்ந்ததனை—* சோராமல்
கண்டுரைத்தமாறன் கழலிணையேநாடோறும்*
கண்டுகக்குமென்னுடையகண். 94

கண்ணனடியிணையில் காதலுறுவார்செயலை*
திண்ணமுறவே சுருங்கச்செப்பியே—* மண்ணவர்க்குத்
தானுபதேசிக்கை தலைக்கட்டினான்மாறன்*
ஆனபுகழ்சேர் தன்னருள். 95

அருளா லடியிலெடுத்தமாலன்பால்*
இருளார்ந்த தம்முடம்பையிச்சித்து—*இருவிசும்பில்
இத்துடன்கொண்டேக இசைவுபார்த்தேயிருந்த*
சுத்திசொல்லும் மாறன்செஞ்சொல். 96

செஞ்சொற்பரன் தனதுசீராரும்மேனிதனில்*
வஞ்சித்துச்செய்கின்ற வாஞ்சைதனின்*—விஞ்சுதலைக்
கண்டவனைக்காற்காட்டிக் கைவிடுவித்துக்கொண்ட*
திண்டிறல்மாறன் நந்திரு. 97

திருமால்தன்பால் விருப்பம்செய்கின்றநேர்கண்டு*
அருமாயத்தன் றகல்விப்பானென்—*பெருமால்தீ
இன்றென்பால்செய்வானென்னென்ன இடருற்றுநின்றான்*
துன்னுபுகழ்மாறனைத்தான் சூழ்ந்து. 98

சூழ்ந்துநின்றமால்விசும்பில் தொல்லைவழிகாட்ட*
ஆழ்ந்ததனை முற்றுமநுபவித்து—*வாழ்ந்தங்—
கடியருடனே யிருந்தவாற்றையுரைசெய்தான்*
முடிமகிழ்சேர் ஞானமுனி. 99

முனிமாறன்முன்புரைசெய் முற்றின்பம்நீங்கி*
தனியாகின்றுதளர்ந்து *—நனியாம்
பரமபத்தியால்நைந்து பங்கயத்தாள்கோனை*
ஒருமையுற்றுச் சேர்ந்தானுயர்ந்து. 100

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.